அந்த மஹாதேவர் ஒருக்கால் கெட்ட குணங்களின் இருப்பிடமாக இருக்கலாம். விஷ்ணுவானவர் ஸகல நல்ல குணத்திற்கும் இருப்பிடமாக இருக்கலாம். ஆனால், எனக்கோ சிவனார் மீதுதான் ப்ரீதி. யாருக்கு எதன்மீது மனம் லயிக்கிறதோ; அதில்தான் இன்பம் இருக்கிறது. (அது அவர்களுக்கு அழகாகவும் இருக்கிறது. அவகுணம் என்பதின் அர்த்தம் மூன்று குணங்களையும் ஒன்றாய்ப் பெற்றதுதான். அதாவது, குணங்களிலிருந்து வேறுபட்ட ஒரு பாவம் ஆகும்.) ஆகவே, நான் சிவனையே வரிக்கி றேன். அவரிடம் தான் என் கடமைகள், காரியங்கள் இருக்கின்றன.

ஜௌம் தும்ஹ மில்தேஹு ப்ரதம் முனீஸா |
ஸுன்திஉம் ஸிக் தும்ஹாரி தரி ஸீஸா || 839
அப் மைம் ஜன்மு சம்பு ஹித் ஹாரா |
கோ குண் தூஷன் கரை பிசாரா || 840

''ஹே முனிவர்களே!'' நீங்கள் முன்பே என்னைச் சந்தித்து இருந்தீர்களானால்; உங்களின் உபதேசத்தைச் சிரமேற்கொண்டு கேட்டிருப்பேன். ஆனால், நானோ கேவ லம் சிவனாருக்கென்றே இந்த ஜன்மத்தை ஒப்படைத்து விட் டேன். அப்படியிருக்கும்போது அவர் குணதோஷங் களைப்பற்றி யார் ஆலோசனை செய்வார்கள்?

ஜௌம் தும்ஹரே ஹட் ஹ்ருதயம் பிஸேஷீ |
ரஹி ந ஜாயி பினு கியேம் பரேஷீ || 841
தௌ கௌதுகியன்ஹ ஆலஸு நாஹீம் |
பர் கன்யா அநேக் ஜக் மாஹீம் || 842

உங்களுடைய மனத்தில் மிகவும் பிடிவாதம் இருக் கிறது. அதாவது; ஏதாவது ஒரு பெண்ணை நிச்சயதார்த் தம் இல்லாமலேயே ஒரு புருஷனுக்கு மணமுடிக்க அலைகிறீர்கள். உங்களைப்போன்ற தீவிர மனம் படைத்த ஆண்களுக்குச் சோம்பலே கிடையாது. அப்படி ஏதா வது பெண்களுக்கு வரன் தேடி முடிக்க நினைத்தால், அதற்கு நான் ஏன்? எத்தனையோ பெண்கள், வரன்கள் உலகில் பிறந்திருக்கிறார்கள். அங்குப் போகவும்!

ஜன்ம கோடி லகி ரகர் ஹமாரீ |
பர்வும் சம்பு ந த ரஹ்உம் குவாரீ || 843
தஜவும் ந நாரத் கர் உபதேஸூ |
ஆபு கஹஹிம் ஸத் பார் மஹேஸூ || 844

கோடி ஜன்மம் எடுத்தாலும், சம்புவையே மணப்ப தாக எமது தீர்மானம். இல்லையெனில்; கன்னியாகவே இருந்துவிட்டுப் போகிறேன். நாரதருடைய உபதேசத்தை நான் எப்போதும் மீற மாட்டேன். ஒருக்கால் சிவ னாரே வந்து இந்தத் திருமணத்தை நூறு தடவை வேண் டாமென்று சொன்னாலும்; (நூறு முறை நீங்கள் கூறி னாலும்) நான் என் தீர்மானமான மனத்தை மாற்றிக் கொள்ளவே மாட்டேன். நிச்சயம்'' என்று பார்வதி கூறினாள்.

மைம் பா பர்உம் கஹ்யி ஜகதம்பா ।
தும்ஹ க்ருஹ் கவன்ஹு பயஉ பிலம்பா ॥ 845
தேகி ப்ரேமு போலே முனி க்யானீ ।
ஜய ஜய ஜகதம்பிகே பவானீ ॥ 846

மேலும், பார்வதி முனிவர்களை நோக்கி; '' நான் உங்கள் கால்களைப் பற்றிக் கொள்கிறேன். ரொம்ப நேரமாகிவிட்டது. நாம் தர்க்கம் செய்ய இப்போது நேர மில்லை. நீங்கள் தயவுசெய்து தங்கள் தங்கள் இல்லம் ஏகிவிடுங்கள்'' என்றாள். அப்போது முனிவர்கள் ப்ர ஸன்னமடைந்து ''ஹே பார்வதி! ஜகன் மாதா! உன் னுடைய நிச்சயமான, த்ருடமான அன்பிற்கு மெச்சி னோம். ஸகலவித மங்களமும், வெற்றியும் உனக்கு உண்டாகட்டும், என்று வாழ்த்தினார்கள் முனிவர்கள்.

தும்ஹ மாயா பக்வான் சிவ ஸகல்
ஜகத் பிது மாது ।
நாயி சரண் சிர் முனி சலே புனி
புனி ஹர்ஷத் காது ॥ 847

''சிவனார் பகவான்; அவருடைய மாயை நீங்கள். ஜகத்திற்கெல்லாம் மாதா தாங்கள்; பிதா சிவனார் ஆவார். இவ்விதம் கூறிய ஏழு முனிவர்கள் பார்வதி யின் கால்களைத் தொட்டு வணங்கிவிட்டு, புளகாங் கிதம் அடைந்த உடலுடன் அங்கிருந்து சென்றார்கள்.

ஜாயி முனின்ஹ ஹிமவந்து படாயே ।
கரிம் பின்தீ கிர்ஜஹிம் க்ருஹ ல்யாயே ॥ 848
பஹுரி ஸப்தரிஷி சிவ பஹிம் ஜாயீ ।
கதா உமா கை ஸகல் ஸுனாயீ ॥ 849

அந்த ஏழு முனிவர்களும் சென்று ஹிமவானைப் பார்வதியிடம் அனுப்பினார்கள்; அவளை வீட்டிற்கு அழைத்து வரச் செய்தார்கள். அதே ஸப்த ருஷிகளும் சிவனாரிடம் சென்று பார்வதியின் ஜன்ம விருத்தாந்தத்தையும் கூறி, பார்வதிக்குத் தங்கள் மீது அளக்க முடியாத அன்பு இருக்கிறது என்பதையும் எடுத்துச் சொன்னார்கள்.

பயே மக்ன சிவ ஸுனத் ஸனேஹா |
ஹர்ஷி ஸப்தரிஷி கவ்னே கேஹா || 850
மனு திர் கரி தப் சம்பு ஸுஜானா |
லகே கரன் ரகுநாயக் த்யானா || 851

பார்வதியின் இந்த அற்புதமான ப்ரேமை நிறைந்த வரலாற்றைக் கேட்டதும்; சிவன் அகமகிழ்ந்தார். பின் ஏழு ருஷிகளும் தங்கள் தங்கள் இல்லம் ஆன ப்ரம்ம லோகம் ஏகினார்கள். அப்போது எல்லாமறிந்த சிவன் தனது மனத்தை த்ருடமாக நிறுத்திக் கொண்டு ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியை த்யானம் செய்ய ஆரம்பித்தார்.

தாரகு அஸுர் பயஉ தேஹி காலா |
புஜ ப்ரதாப பல் தேஜ பிஸாலா || 852
தேஹிம் ஸப் லோக் லோக்பதி ஜீதே |
பயே தேவ் ஸுக் ஸம்பதி ரீதே || 853

அதே ஸமயத்தில் தாரகன் என்ற அஸுரன் தோன்றினான். அவன் தன்னுடைய புஜ பலபராக்ரமத்தினால் உலகெங்கும் ஜொலித்து வந்தவன். எல்லா உலகங்களையும், லோக பாலகர்களையும் வெற்றிகொண்டான். தேவர்களின் ஸுகத்தையும், ஸம்பத்தையும் அபஹரித்துக் கொண்டவன். இவனால் தேவர்கள் கடும் துயரம் அடைந்தார்கள்.

அஜர் அமர் ஸோ ஜீதி ந ஜாயீ |
ஹாரே ஸுர் கரி பிபித் லராயீ || 854
தப் பிரஞ்சி ஸன் ஜாயி புகாரே |
தேகே பிதி ஸப் தேவ் துகாரே || 855

அவன் மூப்பில்லதவன்; மரணமில்லாதவன். ஆகவே; யாராலும் ஜயிக்க முடியாதவன். அவனுடன் தேவதைகள்

பலவகையில் கடும் யுத்தம் செய்து தோற்றுப் போனார்கள். அப்பொழுது அவர்கள் ப்ரம்மாவிடம் போய் முறை யிட்டார்கள். ப்ரம்மாவும் தேவர்களுக்கிருக்கும் துக்கத் தைக் கண்டு வருந்தினார்.

ஸப் ஸன் கஹா புஜாயி பிதி
தனுஜ் நிதன் தப் ஹோயி ।
சம்பு சுக்ர ஸம்பூத் ஸுத் ஏஹி
ஜீதயி ரன் ஸோயி ॥ 856

பிறகு ப்ரம்மன் தேவர்களிடம், ''இந்த அஸுரனுக்கு மரணம் ஸம்பவிக்க வேண்டுமானால்; சிவனாரின் வீர் யத்தினால் தோன்றும் ஒரு புத்ரனாலேயே இவனுக்கு அந்திமகாலம் வரும். அந்தச் சிவகுமாரன் இவனை யுத்தத்தில் ஜயிப்பான் என்று தெரிவித்தார்.

மோர் கஹா ஸுனி கர்ஹு உபாயீ ।
ஹோயிஹி ஈச்வர் கரிஹி ஸஹாயீ ॥ 857
ஸதீம் ஜோ தஜீ தச்ச மக் தேஹா ।
ஜன்மீ ஜாயி ஹிமாசல் கேஹா ॥ 858

என் வார்த்தையைக் கேட்டுப் பின் தகுந்தவாறு உபாயத்தைச் செய்யுங்கள். ஒருக்கால் ஈச்வரன் நமக்கு உதவ நினைத்தாரானால்; இக்காரியம் கைகூடும். ஸதி யானவள் தட்சயஜ்ஞத்தில், யாக குண்டத்தில் தன் சரீ ரத்தை த்யாகம் செய்தாள். அதே ஸதி தேவி இப்போது ஹிமாசலம் சென்று ஹிமவான் புத்ரியாக அவதரித் திருக்கிறாள்.

தேஹிம் தபு கீன்ஹ சம்பு பதி லாகீ ।
சிவ ஸமாதி பைடே ஸபு த்யாகீ ॥ 859
ஜதபி அஹயி அஸமஞ்ஜஸ் பாரீ ।
ததபி பாத் ஏக் ஸுன்ஹு ஹமாரீ ॥ 860

மேலும், எப்போது பார்வதியானவர் சிவனாரைப் பதியாக அடையவேண்டுமென்று தவத்தில் மூழ்கினாளோ; அன்றே சிவன் எல்லாம் துறந்து, நீண்ட ஸமாதி அடைந்து, யோகத்தில் ஆழ்ந்தார்; தபஸ் செய்ய அமர்ந்து விட்டார். அவருடைய ஸமாதியைக் கலைப்பது ஸந் தேஹமான விஷயம். பின்னும் ஸமாதி கலைந்தாலும்;

உடனே காமதேவன் பிழைப்பது கடினம்; இதுதான் கவலை. இருந்தாலும்; என் சொல்லைக் கேளுங்கள்.

பட்வஹு காமு ஜாயி சிவ பாஹீம் |
கரை சோபு சங்கர் மன் மாஹீம் || 861
தப் ஹம் ஜாயி சிவ்ஹி சிர் நாயீ |
கர்வாஉப் பிபாஹு பரிஆயீ || 862

நீங்கள் சென்று காமதேவனை இத்தருணம் சிவனாரிடம் அனுப்புங்கள். அவர் சென்று சிவனாரின் தபஸ்ஸைக் கலைக்கட்டும்; அவர் மனத்தில் காம விகாரத்தை, கலக்கத்தை உண்டாக்கட்டும்; அப்போது அவர் ஸமாதி நிலை கலைந்திடும். அத்தருணம் நாம் அங்குப் போய்ச் சிவனின் காலில் விழுந்து வணங்கி ஸமாதானப் படுத்தி, வலுக்கட்டாயமாகப் பார்வதியைச் சிவனாருக்கு மணமுடித்து வைத்து விடலாம்.

ஏஹி பிதி பலேஹிம் தேவஹித் ஹோயீ
மத் அதி நீக் கஹயி ஸபு கோயீ || 863
அஸ்துதி ஸுரன்ஹ கீன்ஹி அதி ஹேதூ
ப்ரகடேஉ பிஷமபான் ஜஷ கேதூ || 864

இதனால் தேவர்களுக்கு நன்மை; மங்களமுண்டாகும். இதைவிட வேறொரு வழியும் இல்லை. எல்லோரும் 'ஹாஹா'வென்று இந்த எண்ணம் நல்லெண்ணம் என்று புகழ்ந்தார்கள். பிறகு தேவர்களெல்லாரும் கூடிப்ரார்த்திக்கவே; பஞ்ச பாணனான, மீனக் கொடியனான காமதேவன் தோன்றினான். அவன் கையில் ஐந்து விஷம பாணங்கள் இருந்தன.

ஸுரன்ஹ கஹீ நிஜ பிபதி ஸப்
ஸுனி மன் கீன்ஹ பிசார் |
சம்பு பிரோத் ந குஸல் மோஹி
பிஹஸி கஹேவு அஸ் மார் || 865

தங்களுடைய விபத்துகள் யாவற்றையும் காமதேவனிடம் தேவர்கள் கூறினர். தேவதைகளின் ப்ரார்த்தனையைக் கேட்டு, அவர்கள் துன்பம் கேட்டு, காம தேவன் தனது மனத்தில் ஏதோ நினைத்தான். பிறகு புன்னகையுடன் சிவனை விரோதம் செய்து கொண்

டால்; எனக்கு நல்லதில்லை; (நிச்சயம் எனக்கு மரணம் கிட்டக்கூடும்; தாங்கள் தங்களின் பாதுகாப்பிற்காக என் மரணத்தை விரும்புகிறீர்கள். இல்லையா?)

ததபி கரப் மைம் காஜு தும்ஹாரா |
ச்ருதி கஹ் பரம தர்ம உபகாரா || 866
பர் ஹித் லாகி தஜயி ஜோ தேஹீ |
ஸந்தத் ஸந்த ப்ரஸம்ஸஹிம் தேஹீ || 867

இருப்பினும், நான் உங்களது வேலையைச் செய்து முடிக்கிறேன். ''பிறருக்காக உதவிட உழைப்பது பரம தர்மம்'' என்கிறது வேதம். பிறருடைய உதவிக்காக, நன்மைக்காக எவர் ஒருவர் தன்னுடைய சரீரத்தையே த்யாகம் செய்கிறாரோ; அப்படிப்பட்டவரது த்யாகத்தைப் பெரியோர் எப்பொழுதும் உயர்ந்ததாகக்கருதிப் புகழ்ந் திடுவார்கள். இது உலக தர்மம்.''

அஸ் கஹி சலேஉ ஸப்ஹி ஸிரு நாயீ |
ஸுமன் தனுஷ் கர் ஸஹித் ஸஹாயீ || 868
சலத் மார் அஸ் ஹ்ருதயம் பிசாரா |
சிவ் பிரோத் த்ருவ மான்னு ஹமாரா || 869

என இவ்விதமாகக் கூறிவிட்டு, எல்லாரையும் வணங்கிவிட்டு, கையில் புஷ்ப பாணத்துடன், வஸந் தன் முதலான தனது உதவியாளருடன் போனான். காமதேவன் தான் போகும்பொழுதே தன் மனத்தில் ''சிவனுடைய விரோத்தால் நமது மரணம் நிச்சயம்'' என்று எண்ணினான்.

தப் ஆபன் ப்ரபாஉ பிஸ்தாரா |
நிஜ பஸ் கீன்ஹ ஸகல் ஸம்ஸாரா || 870
கோபேஉ ஜப்ஹிம் பாரிசர்கேதூ |
சன் மஹும் மிடே ஸகல் ச்ருதி ஸேதூ || 871

''அப்போது காமதேவன் தனது ப்ரபாவத்தை எல்லா இடத்திலும் விஸ்தாரமாகப் பரப்பினான். உலகை யெல்லாம் தனது வசத்தில் கொண்டு வந்தான். மீனக் கொடியோனான காமதேவனுடைய கோபத்தினால் கண நேரத்தில் வேதசாஸ்த்ரங்களின் மரியாதை நிய மங்கள் எல்லாம் தவிடு பொடியாயின.

ப்ரஹ்மசர்ஜ் ப்ரத ஸஞ்ஜம் நாநா |
தீரஜ் தர்ம க்யான் பிக்யானா || 872
ஸதாசார் ஜப் ஜோக் பிராகா |
ஸபய் பிபேக் கடகு ஸபு பாகா || 873

ப்ரம்மசர்ய வ்ரதம், நியமம், பலவகை ஸம்யமம், (புலன் அடக்கம்) கொள்கை, பலவிதமான நன்மை தரக்கூடிய தைர்யம், தர்மம், ஜ்ஞானம் விஜ்ஞானம், நல்ல நடைமுறை, (ஆசார விசாரங்கள்,) ஜபம், யோகம், வைராக்யம் முதலிய விவேகத்தின் படைகள் எல்லாமே பயந்து ஓடி மறைந்தன.

பாகேவு பிபேகு ஸஹாய் ஸஹித ஸோ
ஸுபட் ஸஞ்ஜுக் மஹி முரே |
ஸத்க்ரந்த பர்வத் கந்தரன்ஹி மஹும்
ஜாயி தேஹி அவஸர் துரே || 874
ஹோனிஹார் கா கர்தார் கோ
ரக்வார் ஜக் கர்பரு பரா |
துயி மாத் கேஹி ரதிநாத் ஜேஹி
கஹும் கோபி கர்தனுஸருதரா || 875

விவேகமானது தனது ஸாமக்ரியைகளுடன் கூட ஓடி மறைந்தது. விவேகத்தின் எதிரி யுத்த பூமியில் புற முதுகிட்டது. அதே நேரம் ப்ரம்மசர்யம் முதலானவை ஸத்க்ரந்தமாகிற மலைக்குகைகளில் சென்று ஒளிந்தன. (அதாவது; இந்த ஜ்ஞானம், வைராக்யம், ஸம்யமம், நியமம், ஸதாசாரங்கள், முதலியன யாவும் நூல்களில் எழுதப்பட்டுள்ளனவே அன்றி; அவை நடைமுறை ஆசாரத்தில் வரவில்லை என்பது கருத்து) உலகம் முழுவதிலும் குழப்பம் ஏற்பட்டது. அப்போது, ''ஹே ப்ரம்மாவே! இப்பொழுது என்ன நடக்கப் போகிறதோ? எங்களை யார் காப்பாற்றுவார்? இங்கே இரண்டு தலையுள்ளவர் எவர் இருக்கிறார்? (புத்தியுள்ளவர்) யாருக்காகக் கோபம் கொண்டு ரதியின் பதியான காம தேவன் கையில் வில்லையும் - அம்பையும் எடுத்திருக் கிறான்?

ஜே ஸஜீவ் ஜக் அசர் சர்
நாரி புருஷ அஸ் நாம் |
தே நிஜ நிஜ மர்ஜாத் தஜி
பயே ஸகல் பஸ் காம் || 876

உலகில் அசையும் பொருள், அசையாப் பொருள்களாகிற ஆண்- பெண் அனைத்து ஜீவராசிகளும் தங்கள் தங்கள் மரியாதையை விட்டுக் காமதேவனுக்கு வசமாயின.

ஸப் கே ஹ்ருதயம் மதன் அபிலாஷா |
லதா நிஹாரி நவஹிம் தரு ஸாகா || 877
நதீம் உம்கி அம்புதி கஹும் தாயீம் |
ஸங்கம் கர்ஹிம் தலாவ் தலாயீம் || 878

எல்லோர் ஹிருதயத்திலும் ப்ரேமையின் - சேஷ்டை பலவிதமாகப் பெருகியது. கொடிகளைக் கண்ட மரத்தின் கிளைகள் தானாகவே துவண்டு வளைந்து கொடியைத் தழுவுகின்றன. நதிகள் வேகமாகப் பொங்கிப் பொங்கி ப்ரளயமாக ஓடி ஸமுத்ரத்தில் கலந்தன. குளம், குட்டைகள் மதம் ஏறி ஒன்றாகக் கலந்தன.

ஜஹம் அஸி தஸா ஜடன்ஹ கை பர்னீ |
கோ கஹி ஸகயி ஸசேதன் கர்னீ || 879
பசு பச்சீ நப் ஜல் தல்சாரீ |
பயே காமபஸ் ஸமய் பிஸாரீ || 880

ஜடப் பொருள்களான நதிகளின், மரங்களின் நிலையே இப்படியிருந்தால்; உயிருள்ளவைகளின் செயலைப் பற்றிக் கேட்க வேண்டுமா? வானிலும், நீரிலும், நிலத்திலும் ஸஞ்சரிக்கும் எல்லா ப்ராணிகளும் காலம், நேரத்தை மறந்து காம வசமாயின.

மதன் அந்த் ப்யாகுல் ஸப் லோகா |
நிஸிதினு நஹிம் அவலோக்ஹிம் கோகா || 881
தேவ தனுஜ நர் கின்னர் ப்யாலா |
ப்ரேத பிஸாச் பூத் பேதாலா || 882

காமதேவனின் தூண்டுதலால் மக்கள் காமாந்தகர்களாகிக் குழம்பி இருந்தார்கள். இச்சா பூர்த்தியென்ற நிலைக்கு இரவும்- பகலும் கூடப் பாராமல் தங்களை அடிமையாக்கிக் கொண்டார்கள். தேவர்கள், ராட்சதர்கள், மனுஷ்யர்கள், கின்னரர்கள், ஸர்ப்பங்கள், ப்ரேதங்கள், பிசாசுகள், பூதங்கள், வேதாளங்கள் --

இன்ஹ கை தஸா ந கஹேஉம் பகானீ |
ஸத்தா காம் கே சேரே ஜானீ || 883
ஸித்த பிரக்த மஹாமுனி ஜோகீ |
தேபி காமபஸ் பயே பியோகீ || 884

இவை அனைத்தும் காமனின் அடிமைகளாயின. இதை அறிந்துதான் நான் இவைகளின் நிலைகளைப் பற்றி வர்ணிக்கவில்லை. மேலும், ஸித்தர்கள், வைராக்யம் உள்ளவர்கள், பெரிய பெரிய யோகிகள், முனிவர்கள் கூடக் காம வசத்தால் யோகத்தை மறந்து, ஸ்த்ரீ விரஹமடைந்து அலைந்தார்கள்.

பயே காமபஸ் யோகீஸ் தாபஸ்
பாம்வரன்ஹி கீ கோ கஹை |
தேக்ஹிம் சராசர் நாரிமய் ஜே
ப்ரஹ்மமய் தேகத் ரஹே || 885
அபலா பிலோக்ஹிம் புருஷமய்
ஜகு புருஷ் ஸப் அபலாமயம் |
துயி தண்ட் பரி ப்ரஹ்மாண்ட பீதர்
காமக்ருத கௌதுக் அயம் || 886

யோகிகள், தபஸ்விகள் ஆகியவர்களே காமவசத்தில் ஈடுபட்டு விட்டார்கள் என்றால்; கீழ்த்தர, பாமர மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? வேதம், வேதாந்தம் படித்த சராசரமான இவ்வுலகத்தை ப்ரம்ம மயமாகக் கருதியவர்கள் கூட ஸ்த்தாவர ஜங்கமம் சூழ்ந்த எல்லா இடத்திலும் ஸ்த்ரீ ரூபத்தையே காணலாயினர்.

ஸ்த்ரீகளோ; உலகமெல்லாம் புருஷ ரூபத்தையே காணலாயினர். புருஷர்களோ; உலகெங்கும் ஸ்த்ரீ ரூபத்தையே காணலாயினர். இவ்விதமாகக் காமதேவனின் உல்லாஸமய. ஆட்சியால் இரண்டு வினாடி காலமே இந்த வேடிக்கை நிலைத்து இருந்தது.

தரீ ந காஹுஉம் தீர் ஸப்
கே மன் மனஸிஜ ஹரே |
ஜே ராகே ரகுபீர் தே உப்ரே
தேஹி கால் மஹும் || 887

ஒருவருக்கும் மனத்தில் தைரியம் இல்லை. எல்லோர் மனத்தையும் காமதேவனானவன் தன் வசத்தில் இழுத்துச் சென்றுவிட்டான். ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தி தன் கருணா கடாட்சத்தில் ஈடுபட வைத்திருந்தவர்கள் மட்டும் இந்தச் செய்கையிலிருந்து தப்பினார்கள். (ஜ்ஞானமும், செய்கையும் முதலிலேயே பறி போய்விட்டதினாலும் அவர்களுடைய உபாஸனை மட்டும் மிகுந்து இருந்தது. அவர்கள் மட்டும் பிழைத்தார்கள்.)

உபய கரீ அஸ் கௌதுக் பயஊ |
ஜௌ லகி காமு சம்பு பஹிம் கயஊ ||888
சிவ்ஹி பிலோகி ஸஸங்கேவு மாரூ |
பயஉ ஜதாதிதி ஸபு ஸம்ஸாரூ || **889**

இந்த உல்லாஸமெல்லாம் காமதேவன் சிவனிடம் செல்லும் வரைதான் இருந்தது. இரண்டு நாழிகை நேரந்தான் இந்த வேடிக்கை நடந்தது. சிவனாரைக் கண்டதும் காமதேவன் பயத்தினால் நடுங்கினான். அப்பொழுது உலகெங்கும் எல்லா ஜீவராசிகளும் ஸ்த்திரமாக நின்றுவிட்டன.

பயே துரத் ஸப் ஜீவ் ஸுகாரே |
ஜிமி மத் உதரி கயேம் மத்வாரே || **890**
ருத்ரஹி தேகி மதன் பய் மானா |
துராதர்ஷ துர்கம பக்வானா || **891**

உடனேயே உலக மக்களுக்கெல்லாம் மீண்டும் ஸுக நிலை உண்டாயின. மதம் கொண்டவர்களின் மத உணர்ச்சி அழிந்ததும்; ஸுகம் பெற்றனர். (அதாவது; சிவனாரைக் கண்டு நடுங்கிய காமதேவனின் மன உணர்ச்சியினால் உலகமே காமத்திலிருந்து விடுபட்டது) சிவனாரைத் தோல்வி அடையச் செய்வது மிகவும் கடினம். அதாவது; பூர்ண ஐச்வர்யம், தர்மம், கீர்த்தி, லட்சுமீ கடாட்சம், ஜ்ஞானம், வைராக்யம் என்கிற இந்த ஆறுவகைப் பாகங்களைக் கொண்ட ருத்ரனான மஹாபயங்கரம் உள்ள சிவனைக் கண்டதும்; காம தேவன் நடுங்கினான். (அவன் பெயர் 'பக்' என்பது. உத்பத்தி, நாசம், ப்ராணிகளின் பிறப்பு, இறப்பு, வித்யா அவித்யா, இவையெல்லாம் எவர் அறிந்திருக்கிறாரோ; அவரதான் 'பகவான்' என்ற பெயரைப்

பெற்றவர். பாபிகளை அவரவர் கர்மாக்களுக்குத் தகுந்த படி பிடித்துத் தண்டனைக் கொடுப்பதால் சிவனுக்கு 'ருத்ரர்' என்று பெயர் உண்டானது)

பிரத் லாஜ் கசு கரி நஹிம் ஜாயீ |
மர்னு டானி மன் ரசேஸி உபாயீ || 892
ப்ரகடேஸி துரத் ருசிர் ரிதுராஜா |
குஸுமித நவ தரு ராஜி பிராஜா || 893

எதுவும் செய்யாமல் திரும்பிச் செல்வதில் நாணம் ஏற்பட்டது. தான் கட்டாயம் மரணமடையப் போவ தைக் காமதேவன் அறிந்து ஓர் உபாயத்தில் ஈடுபட் டான். ஆயினும்; இதை ருது ராஜனான வஸந்தனுக்கு வெளிப்படுத்தினான். உடனே மனத்தைத் தேற்றிக் கொண்டான். திடீரென்று ஸுந்தரமான வஸந்தருது தோன்றியது. மரங்களில் புதிய புதிய இலைகளும், பூக் களும் தோன்றின. எல்லா இடங்களிலும் ஒரு விசேஷ மான அழகு தென்பட்டது.

பன் உபபன் பாபிகா தடாகா |
பரம ஸுபக் ஸப் திஸா பிபாகா || 894
ஜஹம் தஹம் ஜனு உம்கத் அனுராகா |
தேகி முயேஹும் மன் மனஸிஜ் ஜாகா || 895

காடுகள், பூங்காக்கள், நந்தவனங்கள், சிறுசிறு குளங்கள், தடாகங்கள், நதிகள், திசைகள் எல்லாமே நிர்மலமான, தூய்மையான ரூபத்துடன் அழகாகத் தென்பட்டன. எங்கு எங்கு பார்த்தாலும் ப்ரேமை ரஸம் பெருக்கெடுத்தோடுகிறது. அதையெல்லாம் கண்டு எனது மனத்தில் கூடக் காம இச்சை கிளர்ந்தெழுந்தது.

ஜாகயி மனோபவ் முயேஹும் மன்
பன் ஸுபக்தா ந பரை கஹீ |
சீதல் ஸுகந்த் ஸுமந்த மாருத்
மதன் அனல் ஸகா ஸஹீ || 896
பிக்ஸே ஸரன்ஹி பஹு கஞ்ஜ குஞ்ஜத்
புஞ்ஜ மஞ்ஜுள் மதுகரா |
கலஹம்ஸ பிக சுக் ஸரஸ் ரவ் கரி
கான் நாச்ஹிம் அப்சரா || 897

இறப்பவர் மனத்திலும் காமதேவன் விழிப்பூட்டினான். அந்த வனங்களின் அழகைச் சொல்லி முடியாது. குளிர்ந்த மணம் நிறைந்த இளம் தென்றல் மெதுவாக வீசிக் காமதேவனின் அக்னிக் கணைக்கு உதவி செய்தது. குளங்களிலோ; பலவிதமான வண்ணங்களில் தாமரைகள் பூத்துக் குலுங்கின. ப்ரகாசமான வண்டினங்கள் ரீங்காரம் செய்யத் தொடங்கின. அழகிய ஹம்ஸபட்சிகளும், குயில்களும், கிளிகளும், ரஸமான, மோஹம் நிறைந்த குரலைக் காட்டிப் பாடுகின்றன. அப்ஸரஸ்த்ரீகள் பாட்டுக்களைப் பாடியவாறு நடனம் ஆடலாயினர்.

ஸகல் கலா கரி கோடி பிதி
ஹாரேவு ஸேன் ஸமேத் |
சலீ ந அசல் ஸமாதி சிவ
கோபேவு ஹ்ருதயநிகேத் || **898**

இவ்விதம் காமதேவன் தனது ஸேனையுடன் கூடக் கோடிக் கணக்கான பலவிதமான கைவண்ணத்தைக் காட்டியும் ஏதும் பலிக்க வில்லை; அதனால் தோற்றான். சிவனாரின் நிஷ்ட்டை கலையவில்லையாதலால்; காமதேவன் மிகவும் கோபம் கொண்டு வெகுண்டு எழுந்தான்.

தேகி ரஸால் பிடப் பர் ஸாகா |
தேஹி பர் சடேஉ மதனு மன் மாகா || **899**
ஸுமன் சாப் நிஜ ஸர் ஸந்தானே |
அதி ரிஸ் தாகி ச்ரவன்லகி தானே || **900**

மாமரத்தின் ஸுந்தரமானதொரு கிளையின் மீது கோபத்துடன் ஏறினான் காமதேவன். புஷ்பத்தினால் ஆன வில்லில் ஐவகைக் கணைகளைக் காதுவரை இழுத்துக் கோபத்துடன் ஏவினான்.

சாடே பிஷம பிஸிக் உர் லாகே |
சூடி ஸமாதி சம்பு தப் ஜாகே || **901**
பயவு ஈஸ் மன் சோபு பிஸேஷீ |
நயன் உகாரி ஸகல் திஸி தேகீ || **902**

காமதேவன் கூரிய ஐவகைக் கணைகளை ஏவினான். அந்தக் கடினமான பஞ்சபாணங்கள் சிவனாரின் ஹிருதயத்தில் வந்து மோதின; அப்போது சிவனாரின் நிஷ்ட்டை கலைந்தது; சிவன் கண் திறந்தார்; அவரது உள்ளத்தில் மிகுந்த கலக்கம் உண்டாயிற்று, பிறகு நாலாபுறமும் நோக்கினார்.

ஸைரப் பல்லவ் மதனு பிலோகா |
பயவு கோபு கம்பேஉ த்ரைலோகா || 903
தப் சிவம் தீஸர் நயன் உகாரா |
சிதவத் காமு பயஉ ஜரி சாரா || 904

மாமரத்தின் இலைகளில் மறைந்திருந்த மன்மதனைப் பாத்ததும் அவருக்குக் கோபம் உண்டாயிற்று. அதைப் பார்த்து மூன்று உலகங்களும் நடு நடுங்கின. அப் போழ்து, சிவன் தனது மூன்றாவது கண்ணைத் திறந் தார். அதைக் கண்ட மன்மதன் உடனே எரிந்து பஸ்ம மானான். (இதுதான் குமார ஸம்பவத்தின் கருத்து நிறைந்த ஆரம்பப் பாடம்.

க்ரோதம் ப்ரபோ ஸம்ஹர ஸம்ஹரேதி
யாவத் கிரம்மே மருதாச் சரந்தி |
தாபத்ய வஹ்நிர்பவ நேத்ரஜன்மா
பஸ்மாவசேஷம் மதனம் சகார ||

சிவனாரின் த்ரிநயனத்தில் உண்டான அக்னிப் பெருக்கைக் கண்ட தேவர்கள் ஆகாயத்திலிருந்து; ஹே ப்ரபோ! போதும் போதும், தங்கள் கோபத்தை அடக் கிக் கொள்ள வேண்டும் என்று வேண்டினர். அந்த அக்னிதான் காமதேவனை எரித்துப் பஸ்மமாக்கியது.)

ஹாஹாகார் பயஉ ஜக் பாரீ |
டர்பே ஸுர் பயே அஸுர் ஸுகாரீ || 905
ஸமுஜி காமஸுகு ஸோச்ஹிம் போகீ |
பயே அகண்டக் ஸாதக் ஜோகீ || 906

உலகெங்கும் ஹாஹா என்ற கூச்சல் எழுந்தது; தேவர்கள் பயந்தார்கள்; அஸுரர்கள் ஆனந்தித்தார்கள். காமத்தின் ஸுகத்தையும்; ஸ்த்ரீகளின் போகத்தையும் எண்ணி ஸுகித்தான் போகி. விரைவில் தபஸ் செய்து

நமது நன்றிக் கடமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டு மென்று திட்டமிட்டுக் கொண்டான் யோகி.

ஜோகீ அகண்டக் பயே பதி கதி
ஸுனத் ரதி முருசித் பயீ |
ரோததி பததி பஹு பாந்தி கருணா
கர்தி சங்கர் பஹிம் கயீ || 907
அதி ப்ரேம் கரி பின்தீ பிபித் பிதி
ஜோரி கர் ஸன்முக்ரஹீ |
ப்ரபு ஆஸுதோஷ் க்ருபால் சிவ
அப்லா நிர்கி போலே ஸஹீ || 908

யோகியான சிவன் பயமில்லாமல் நிர்மல தோற்றத் தில் இருந்தார். (அதாவது யோகிகள் சிவனின் இச் செய்கையால் பயமில்லாமல் இருந்தார்கள்.)

பதியினுடைய இக்கதியைக் கேட்ட ரதிதேவி மூர்ச் சையடைந்தார். அழுது கொண்டும், கத்தி ஆரவாரப் படுத்திக் கொண்டும், கணவனின் ப்ரதாபத்தைக் கூறிக் கொண்டும், ரதியானவள் சிவனாரின் அருகில் வந்தாள்.

அனேக விதமான ப்ரார்த்தனைகளைச் செய்து கொண்டும், கைகளைக் கூப்பிக் கொண்டும் அவள் சிவனார் முன் நின்றாள். சீக்கிரம் ப்ரஸன்னமடையும் தன்மையுள்ள ஆசுதோஷரான சிவனார் உடனே அந்த அபலையை நோக்கித் தேறுதல் செய்து கூறினார்.

அப்தேம் ரதி தவ நாத் கர்
ஹோயிஹி நாமு அநங்கு |
பினுபபு ப்யாபிஹி ஸப்ஹி புனி
ஸுனு நிஜ் மிலன் ப்ரஸங்கு || 909

ஹே ரதி! இன்றிலிருந்து உன் கணவனின் பெயர் 'அனங்கனா' கட்டும் (அதாவது; சரீரம் இல்லாதவன்) சரீரமில்லாமலே அவன் எங்கும் வ்யாபித்து இருப்பான். இப்போது எம்மாதிரி ரூபத்தில் உன் கணவனோடு சந்திக்கலாம் என்பதைக் கேள்; என்றார்.

ஜப் ஜதுபம்ஸ க்ருஷ்ண அவதாரா |
ஹோயிஹி ஹரன் மஹா மஹிபாரா || 910

க்ருஷ்ண தனய ஹோயிஹி பதி தோரா |
பசனு அன்யதா ஹோயி ந மோரா || 911

பூமியினுடைய பாரத்தைக் குறைக்கப் பகவான் எப் போது க்ருஷ்ணனாக யது வம்சத்தில் தோன்றுகிறாரோ; அப்போது; அந்தக் க்ருஷ்ணனின் புத்ரன் ப்ரத்யும்ன னாக உன் கணவன் பிறப்பான். இது என் த்ருடமான வார்த்தை; வீண் போகாது.

ரதி கவ்னீ ஸுனி சங்கர் பானீ|
கதா அபர் அப் கஹஉம் பகானீ || 912
தேவன்ஹ ஸமாசார் ஸப் பாயே |
ப்ரஹ்மாதிக் பைகுண்ட ஸிதாயே || 913

ரதி சிவனாருடைய இவ் வார்த்தைகளைக் கேட்டுத் தன் இருப்பிடம் போய்விட்டாள். இப்போது மேலும், இன்னொரு கதையும் சொல்கிறேன் என்றதும்; ப்ரம் மாதி தேவதைகளும் சிவனாரின் இவ்வார்த்தைகளைக் கேட்டு நிம்மதியாக வைகுண்ட்டம் சென்றார்கள்.

ஸப் ஸுர் பிஷ்ணு பிரஞ்சி ஸமேதா |
கயே ஜஹாம் சிவ் க்ருபாநிகேதா || 914
ப்ருதக் ப்ருதக் தின்ஹ கீன்ஹி ப்ரஸம்ஸா |
பயே ப்ரஸன்ன சந்த்ர அவதம்ஸா || 915

பின் எல்லாத் தேவர்களும், விஷ்ணு, ப்ரம்மாவுடன் சிவனிருக்கும் இடம் சென்றார்கள். தனித்தனியே நின்று சிவனைப் புகழ்ந்து பாடினார்கள். சந்த்ரனைச் சிரஸில் அணி செய்து கொண்டிருக்கும் அந்தச் சிவ னார் தேவர்களின் ப்ரார்த்தனையால் ஸந்தோஷ மடைந்தார்;

போலே க்ருபாஸிந்து ப்ருஷகேதூ |
கஹஹு அமர் ஆயே கேஹி ஹேதூ || 916
கஹ் பிதி தும்ஹ ப்ரபு அந்தர்ஜாமீ |
ததபிபக்தி பஸ் பினவஉம் ஸ்வாமீ || 917

இச் சமயம் க்ருபாஸிந்துவான சிவன் - ''கூறுங்கள் தேவர்களே! எல்லாரும் எதற்காக வந்திருக்கிறீர்கள்? என்றார்.'' அதற்கு ப்ரம்மன் ''ஹே ஸ்வாமி! தாங்கள்

எல்லாம் அறிந்த அந்தர்யாமி. இருப்பினும்; பக்தியி னால் நாங்கள் யாவரும் தங்களை வேண்டி வணங்கு கிறோம்.''

ஸகல ஸுரன்ஹ கே ஹ்ருதயம் அஸ்
சங்கர் பரம உசாஹு |
நிஜ நயனன்ஹி தேகா சஹஹிம்
நாத தும்ஹார் பிபாஹு || 918

''ஹே ஸ்வாமி! எல்லாத் தேவர்களுக்கும் மனத்தில் உற்சாகம் உண்டாகியிருக்கிறது. தங்களது திருமணத் தைக் காண வேண்டுமென்ற பெரும் ஆவல் உண்டா கியுள்ளது.

யஹ் உத்ஸவ் தேகிய பரி லோசன் |
ஸோயி கசு கர்ஹு மதன் மத மோசன் || 919
காமு ஜாரி ரதி கஹும் பரு தீன்ஹா |
க்ருபா ஸிந்து யஹ் அதி பல் கீன்ஹா || 920

காமதேவனை அழித்து, அவன் மதத்தை ஒழித்த வரே! ''ப்ரபு! இந்த விவாஹ உத்ஸவத்தை நாங்களும் கண் குளிரக் காண்கிறோம். கருணைக் கடலே! காம தேவனை எரித்து, ரதிக்கு வரன் கொடுத்தீர்கள்; தங்கள் செய்கை மிகவும் நல்லது; ஆனந்திக்கக் கூடியது''

ஸாஸதி கரி புனி கர்ஹிம் பஸாவூ |
நாத ப்ரபுன்ஹ கர் ஸஹஜ் ஸுபாவூ || 921
பார்பதீம் தபு கீன்ஹ அபாரா |
கர்ஹு தாஸு அப் அங்கீகாரா || 922

ஹே நாதரே! பெரியவர்களின் குணமே இப்படித் தான்; முதலில் தண்டனை கொடுத்துவிட்டுப் பிறகு பக்தர்களுக்குக் க்ருபை செய்கிறார்கள். பார்வதி தேவி அபாரமான கரை காணாத பக்தியுடன் தபம் செய் திருக்கிறாள். அவளைத் தாங்கள் அங்கீகாரம் செய்து கொள்ள வேண்டும்.

ஸுனி பிதி பினய் ஸமுஜி ப்ரபு பானீ |
ஐஸேயி ஹோஉ கஹா ஸுகு மானீ || 923
தப் தேவன்ஹ துந்துபீம் பஜாயீம் |
பர்ஷி ஸுமன் ஜய ஜய ஸுர் ஸாயீம் || 924

ப்ரம்மனுடைய வசனங்களைக் கேட்டும், பகவான் ஸ்ரீ ராமச்சந்த்ரனுடைய வார்த்தைகளை நினைவில் கொண்டும், சிவபெருமான் மகிழ்ச்சியுடன் ''நீங்கள் நினைப்பது போலவே நடக்கட்டும்'' என்றார். எல்லாத் தேவர்களும் அப்போது துந்துபி, நகாரா முதலிய வாத்யங்களை முழக்கினார்கள். பின்பு பூக்களை வர்ஷித்தார்கள். பிறகு ''ஹே தேவர்களின் ஸ்வாமி! ஸகலவிதத்திலும் தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்!'' என்று வாழ்த்தினார்கள்.

அவஸரு ஜானி ஸப்தரிஷி ஆயே ।
துரத்ஹிம் பிதி கிரிபவன் படாயே ॥ 925
ப்ரதம கயே ஜஹம் ரஹீம் பவானீ ।
போலே மதுர் பசன் சல் ஸானீ ॥ 926

தக்க ஸந்தர்ப்பத்தை அறிந்து விஷயங்களைத் தெரிந்து கொண்டு ஸப்தரிஷிகள் வந்தனர். ப்ரம்மன் உடனே அவர்களை ஹிமவானிடம் அனுப்பினார். முதலில் ருஷிகள் பார்வதி இருக்குமிடம் சென்றனர். பிறகு பார்வதியிடம் கபடம் நிறைந்த; மகிழ்வூட்டும்படி இனிமை கலந்து வார்த்தையாடினார்கள்.

கஹா ஹமார் ந ஸுனேஹு தப்
நாரத் கேம் உபதேஸ் ।
அப் பா ஜுட் தும்ஹார் பன்
ஜாரேஉ காமு மஹேஸ் ॥ 927

ஹே பார்வதி! நீ எங்கள் வார்த்தையைக் கேட்காமல் நாரதர் உபதேசத்திலேயே திடமாக இருந்தாய். இப்போது கேள்! உன்னுடைய சிவனானவர் காமதேவனையே சாம்பலாக்கி விட்டார். அவன் இனிமேல் உன்மீது ஆசை கொண்டு உன் சபதத்தை நிறைவேற்றுவது எங்ஙனம்? என்றார்கள் முனிவர்கள்.

ஸுனி போலீம் முஸுகாயி பவானீ ।
உசித் கஹேஹு முனிபர் பிக்யானீ ॥ 928
தும்ஹரேம் ஜான் காமு அப் ஜாரா ।
அப் லகி சம்பு ரஹே ஸபிகாரா ॥ 929

முனிவர்கள் வார்த்தையைக் கேட்ட பார்வதி சிரித்துக் கொண்டே, ''ஹே அறிவுசான்ற முனிவர்களே!

நீங்கள் சரியாகத்தான் சொன்னீர்கள். சம்பு விகார மற்றவர்; அவர் மனத்தில் களங்கமே இல்லை; விகார மற்றவராக இருந்ததால்தான் அவர் காமனை எரித்தார்,

ஹம்ரேம் ஜான் ஸதா சிவ் ஜோகீ ।
அஜ் அநவத்ய அகாம் அபோகீ ॥ 930
ஜ்ஞளம் மைம் சிவ் ஸேயே அஸ் ஜானீ ।
ப்ரீதி ஸமேத் கர்ம மன் பானீ ॥ 931

எனக்குத் தெரிந்தவரை சிவனார் என்றுமே யோகி தான், ஜன்மமரணம் இல்லாதவர், தூஷணையே இல் லாதவர், காமமற்றவர், த்ரிபோகம்-ஸுகம் ஆகிய இந்த்ரிய இச்சைகளிலிருந்து விடுபட்டவர். அதனால் தான் நான் அவரை என் பதியாகத் தீர்மானித்துக் கொண்டேன், அவரை அடையவே நான் மனத்தாலும், பேச்சாலும், செய்கையாலும் அவருக்குப்பணி விடை செய்து வருகிறேன்.

தெள ஹமார் பன் ஸுன்ஹு முனீஸா ।
கரிஹஹிம் ஸத்ய க்ருபானிதி ஈஸா ॥ 932
தும்ஹ ஜோ கஹா ஹர் ஜாரேஉ மாரா ।
ஸோயி அதி பட் அபிபேகு தும்ஹாரா ॥ 933

''ஹே முனிவர்களே! என்னுடைய சபதம் எதுவாக இருந்தாலும்; நோக்கம் எதுவாக இருந்தாலும்; க்ருபா நிதியான சம்பு எனது உறுதியைத் தீர்த்து வைப்பார்; உண்மையாக்குவார். இது நிச்சயம் காமதேவனைச் சிவ பெருமான் எரித்துவிட்டார் என்று நீங்கள் கூறுவது அஜ்ஞானம் நிறைந்த வார்த்தையாக இருக்கிறது. (அதா வது, இப்படி அவர் செய்ததாலும் உலகிற்கு நன்மை இருக்கக் கூடும் என்கிறார்.)

தாத் அனல் கர் ஸஹஜ் ஸுபாவூ ।
ஹிம் தேஹி நிகட் ஜாயி நஹிம் காவூ ॥ 934
கயேம் ஸமீப் ஸோ அவஸி நஸாயீ ।
அஸி மன்மத் மஹேஸ் கீ நாயீ ॥ 935

ஹே மஹாத்மாக்களே! அக்னியினுடைய ஸ்வபாவம் என்ன தெரியுமா? அதன் அருகில் எந்தக் குளிர்ந்த ஸாதனங்களும் போக முடியாது என்பதுதான், அப்

படியே அது போனாலும் அழிந்து நாசமாகும். இதே மாதிரிதான் சிவன் நெருப்பு; அவர் அருகில் குளிர்ந்த ரூபமுள்ள மன்மதன் போயிருக்கிறான். அதனால், அவன் எரிந்து அழிந்து போனான். இது இயல்பே! என்றாள் மேலும் பார்வதி தேவி.

ஹியம் ஹர்ஷே முனி பசன் ஸுனி
தேகி ப்ரீதி பிஸ்வாஸ் |
சலே பவானிஹி நாயி ஸிர்
கயே ஹிமாசல் பாஸ் || 936

அந்த முனிவர்கள் பார்வதியின் திருடமான, ப்ரேமையுள்ள, நம்பிக்கையான வார்த்தைகளைக் கேட்டு மிகவும் ப்ரஸன்னமடைந்தார்கள். அவர்கள் பார்வதிக்குத் தலை வணங்கிவிட்டு, நேராக ஹிமவான் இருப்பிடம் ஏகினார்கள்.

ஸுப்ரஸங்குகிரி பதிஹி ஸுனாவா |
மதன் தஹன் ஸுனி அதி துகு பாவா || 937
பஹுரி கஹேஉ ரதி கர் பர்தானா |
முனி ஹிமவந்த் பஹுத் ஸுகு மானா || 938

அவர்கள் முதலில் ஹிமவானிடம் எல்லா விஷயங்களையும் சொன்னார்கள் - அவனும் அவைகளைக் கேட்டு அறிந்தான். காமனைப் பஸ்மமாக எரித்தது கேட்டு ஹிமவான் மிகவும் துக்கமடைந்தான். பின்னும் ரதிக்குச் சிவன் அளித்த வரனை எண்ணி நிம்மதியடைந்தான்.

ஹ்ருதயம் பிசாரி சம்பு ப்ரபுதாயீ |
ஸாதர் முனிபர் லியே போலாயீ || 939
ஸுதினு ஸுன்கது ஸுகரீ ஸோசாயீ |
பேகி பேதபிதி லகன் தராயீ || 940

சிவனாருடைய மஹிமையை மனத்தில் எண்ணிக் கொண்டே ஹிமவான் அந்தச் சிறந்த முனிவர்களை மரியாதையுடன் அழைத்து, அதிதி ஸத்காரம் செய்தான். நல்ல தினத்தில், நல்ல நட்சத்ரத்தில், நல்ல வேளையில்; வேத விதிப்படி லக்னம் அமைத்து எழுதித்தர வேண்டும் என்று முனிவர்களைக் கேட்டுக் கொண்டான்.

பத்ரீ ஸப்தரிஷின்ஹ ஸோயி தீன்ஹீ ।
கஹி பத் பினய் ஹிமாசல் கீன்ஹீ ॥ 941
ஜாயி பிதிஹி தின்ஹ தீன்ஹி ஸோபாதீ ।
பாசத் ப்ரீதி ந ஹ்ருதயம் ஸமாதீ ॥ 942

பிறகு ஹிமவான் லக்ன பத்திரிகையை ஏழு முனி வர்களிடம் கொடுத்தான். மேலும், அவர்கள் திருவடி களைப் பிடித்துக் கொண்டு, இதை எப்படியாவது ப்ரம்ம தேவனிடம் சேர்க்க வேண்டும் என வேண்டி னான். அவர்களும் ப்ரம்மனிடம் லக்ன பத்ரிகையைக் கொடுத்தார்கள்; ப்ரம்மனும் அதை வாங்கிப் படித் தான். அப்போது அவனுக்கு உண்டான ப்ரேமைக்கு நிகர் ஏதுமே இல்லை எனலாம்.

லக்ன பாசி அஜ் ஸப்ஹி ஸுனாயீ ।
ஹர்ஷே முனி ஸப் ஸுர் ஸமுதாயீ ॥ 943
ஸுமன் ப்ருஷ்டி நப் பாஜன் பாஜே ।
மங்கல் கலஸ் தஸ்ஹும் திஸி ஸாஜே ॥ 944

''லக்னம் அமைத்த இந்தச் செய்தியைக் கேட்டுப் படித்து, ப்ரம்மனானவர் இதை எல்லாரிடமும் கூறி னார். இதைக் கேட்ட எல்லாத் தேவர்களும், ருஷிகள், முனிகளும் ஆனந்தமடைந்தார்கள். வானிலிருந்து புஷ்ப மாரி பெய்தது. ஆகாயத்தில் பலவித வாத்யங்கள் முழங்கின. பத்துத் திசைகளிலும் மங்களக் கலசங்கள் அலங்கரிக்கப்பட்டன.

லகே ஸம்வாரன் ஸகல் ஸுர்
பாஹன் பிபித் பிமான் ।
ஹோஹிம் ஸகுன மங்கல் ஸுபத்
கர்ஹி அப்ஸரா கான் ॥ 945

எல்லாத் தேவதைகளும் விதவிதமான தங்கள் தங் கள் வாஹனங்களை; விமானங்களை அலங்காரமாக அழகுபடுத்தித் தயார் செய்யலானார்கள். எல்லா இடங்களிலும் ஸுந்தரமான, மங்களகரமான சகுனங்கள் ஏற்பட்டன. மங்கலக் கலசங்கள் ஏந்திய அப்ஸரஸுக்கள் பாடிக் களித்தார்கள்.

சிவஹி சம்புகன் கர்ஹிம் சிங்காரா |
ஜடா முகுட் அஹி மௌரு ஸம்வாரா || 946
குண்டல் கங்கன் பஹிரே ப்யாலா |
தன் பிபூதி பட் கேஹரி சாலா || 947

இங்குச் சிவனாருடைய சிவ கணங்கள் சிவனுக்கு அலங்காரம் செய்ய ஆரம்பித்தார்கள். ஜடைகளில் மகுடம் அமைத்தார்கள். அதன் மீது நாக ஸர்பங்களின் கிரீடம் வைத்தார்கள்; பாம்புகளைக் காதுகளில் குண்டலமாகவும், கங்கணமாகவும் அணிந்தார் சிவன். அவரது சரீரத்தில் விபூதி அழகூட்டியது. அவ்வுடலில் புலித் தோலினால் ஆன ஆடையை அணியச் செய்தார்கள். இப்படியாகச் சிவனை ஒரு வினோதமான ரூபத்தில் அலங்கரித்தார்கள்.

ஸஸி லலாட் ஸுந்தர் ஸிர் கங்கா |
நயன் தீனி உபபீத் புஜங்கா || 948
கரல் கண்ட் உர் நர் சிர் மாலா |
அஸிவ் பேஷ் சிவதாம் க்ருபாலா || 949

சிவன் தன் அழகு நெற்றியில் சந்த்ரனுடனும், அழகிய சிரசில் கங்கையுடனும், மூன்று கண்களுடன் பாம்புகளைப் பூணூலாகக் கொண்டும், மிக அற்புதமாகத் தோன்றினார். மேலும், கழுத்தில் நஞ்சும், மார்பில் மனிதத் தலைகளின் முண்டமாலையும், அணிந்து மிகப் பயங்கரமாக, அமங்கலமாக அவர் தோற்றமளித்தாலும்; அவர் அருளின் இருப்பிடம், மங்களமூண்டாக்கும், துயர் துடைக்கும் தெய்வம்.

கர் த்ரிசூல் அரு டமரு பிராஜா |
சலே பஸ்ஹம் சடி பாஜ்ஹிம் பாஜா || 950
தேகி சிவ்ஹி ஸுரத்ரிய முஸுகாஹீம் |
பர் லாயக் துல்ஹினி ஜக் நாஹீம் || 951

ஒரு கையில் திருசூலமும், மற்றொரு கையில் உடுக்கை போன்ற வாத்யமும் அழகாக அமைந்திருந்தன. பல வாத்திய கோஷங்கள் முழங்கச் சிவனார் காளை மீது ஏறிப் பவனி வரலானார். தேவஸ்த்ரீகள் சிவனாரின் இந்தக் கோலம் கண்டு சிரித்தார்கள். மேலும், இந்த வரனுக்குத் தகுந்தபடி பொருத்தமாக எந்த மணப்

பெண் உலகில் கிடைப்பாள்? எவளும் கிடைக்க மாட்டாள் என்றனர்.

பிஷ்ணு பிரஞ்சி ஆதி ஸுர்ப்ராதா |
சடி சடி பாஹன் சலே பராதா || 952
ஸுர் ஸமாஜ் ஸப் பாந்தி அனூபா |
நஹிம் பராத் தூல்ஹ் அனுரூபா || 953

விஷ்ணு முதல் ப்ரஹ்மாதி தேவர்கள் யாவரும் தங்கள் தங்கள் விமானம் ஏறித் திருமண ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் சென்றார்கள். தேவதைகளின் கூட்டம் எல்லா விதத்திலும் ச்ரேஷ்டமாக விளங்கியது. ஆனால், இந்த வரனுக்கு ஏற்றபடி மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலம் அமையவில்லை.

பிஷ்ணு கஹா அஸ் பிஹஸி தப்
போலி ஸகல் திஸிராஜ் |
பிலக் பிலக் ஹோயி சல்ஹு ஸப்
நிஜ்நிஜ் ஸஹித் ஸமாஜ் || 954

இப்போது விஷ்ணு பகவான், எல்லாத் தேவர் களையும் அழைத்துச் சிரித்துக் கொண்டே; ''ஹே தேவர்களே! எல்லோரும் தங்கள் தங்கள் பந்துக்களுட னும், ஸேனை பரிவாரங்களுடனும் போய்ச் சிவனாரின் இந்தத் திருமணத்தில் கலந்து கொள்ளுங்கள்'', என்றார்.

பர் அனுஹாரி பராத் ந பாயீ |
ஹம்ஸீ கரைஹஹு பர் புர் ஜாயீ || 955
பிஷ்ணு பசன் ஸுனிஸுர் முஸுகானே |
நிஜ் நிஜ் ஸேன் ஸஹித் பில்கானே || 956

''ஹே ஸஹோதரர்களே! வரனுக்குத் தகுந்த மாதிரி யான முறையில் நமது ஊர்வலம் இல்லை. பிற இடம் சென்று சிரிப்பிற்குப் பாத்திரமாகப் போகிறீர்களா? விஷ்ணு இம்மாதிரி கூறியதும்; ஸகல தேவதைகளும் சிரித்த வண்ணம் தங்கள் தங்கள் ஸேனைகளுடன் திரு மணம் காண ஏகினார்கள்.

மன்ஹீம் மன் மஹேசு முஸுகாஹீம் |
ஹரி கே பிங்க்ய பசன் நஹிம் ஜாஹீம் || 957

அதி ப்ரிய பசன் ஸுனத் ப்ரிய கேரே |
ப்ருங்கிஹி ப்ரேரி ஸகல் கன் டேரே || 958

இதைப் பார்த்து மனத்திற்குள் சிவன் மகிழ்வடைந் தார். ஹரியினுடைய வ்யங்க்யமான வார்த்தைகள் (மறை பொருளடங்கிய) அவர் நெஞ்சத்தை விட்டகல வில்லை. இப்படி மிகவும் அன்புடன் கூறிய விஷ்ணு வின் வார்த்தைகளையும் கேட்டுக் கொண்ட சிவனார் தன்னுடைய ப்ருங்கியை அனுப்பி உடனே தமது எல் லாப் பூதகணங்களையும் அங்கு வரவழைத்தார்.

சிவ அனுஸாஸன் ஸுனி ஸப் ஆயே |
ப்ரபு பத் ஜலஜ் ஸீஸ் தின்ஹ நாயே || 959
நானா பாஹன் நானா பேஷா |
பிஹ்ஸே சிவ் ஸமாஜ் நிஜ் தேகா || 960

சிவனாருடைய ஆஜ்ஞையைக் கேட்ட எல்லாப் பூத கணங்களும் அங்கு வந்து சேர்ந்தனர்; பிறகு தங்கள் ஸ்வாமியின் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். இப்படிப் பலவகை ரூபத்துடனும், பலவிதமான வாஹ னங்களுடனும் வந்து சேர்ந்த அந்தச் சிவ கணங்கள் அங்கு நிரம்பியிருப்பதைக் கண்ட சிவன் சிரித்து மகிழ்ந் தார்.

கோவு முகஹீன் பிபுல் முக் காஹு |
பினு பத கர் கோவு பஹு பத் பாஹு || 961
பிபுல் நயன் கோவு நயன் பிஹீனா |
ரிஷ்டபுஷ்ட கோவு அதி தன்கீனா || 962

முகம் இல்லாதவர் சிலர், பலமுகம் உள்ளவர் சிலர், கைகால்கள் இல்லாதவர் சிலர், பல கைகால்களைக் கொண்டவர் சிலர், பலகண்களைக் கொண்டவர்களும், ஒற்றைக் கண்ணை உடையவர்களும் சிலர், மிகப் பருமன் உள்ளவர்கள் சிலர், மிக ஒல்லியானவர் சிலர் என இப்படிப் பலவிதமாக அவர்கள் சிவனார் எதிரில் வந்து காட்சி தந்தார்கள்.

தன் கீன் கோவு அதி பீன் பாவன்
கோவு அபாவன் கதி தரேம் |
பூஷன் கராள் கபால் கர் ஸப்
ஸத்ய ஸோனித் தன் பரேம் || 963

கர் ஸ்வான் ஸுஅர் ஸ்ருகால் முககன் பேஷ்
அகனித் கோ கனை |
பஹு ஜினஸ் ப்ரேத் பிஸாச் ஜோகி ஜமாத்
பர்னத் நஹிம் பனை || **964**

சிலர் துர்ப்பலமானவர். சிலர் பலவான். சிலர் தூய்மையுள்ளவர், சிலர் தூய்மை அற்ற சரீர வேஷத்தைப் பெற்றிருந்தார்கள். மேலும், சிலர் பயங்கர ஆபரணங்கள் அணிந்திருந்தனர். சிலர் கைகளில் முண்டங்கள் இருந்தன. அவர்கள் உடம்பு ரத்தத்தினால் மெழுகப்பட்டு இருந்தது. கழுதை போலும், நாய்கள் போலும், பன்றி போலும், நரிபோலும், முகமுடைய வராயும் இப்படிப் பலவிதமான ரூபங்களுடனும் பலர் அங்கு வந்திருந்தார்கள். இதை யாரால் எண்ண முடியும்? இவை தவிர ப்ரேதங்கள், பிசாசுகள், யோகினிகள் இவர்களின் கூட்டம் வேறு கூடின. இவைகளை வர்ணிக்கவே முடியாது:

நாச்ஹிம் காவ்ஹிம் சீத் பரம
தரங்கீ பூத் ஸப் |
தேகத் அதி பிபரீத் போல்ஹிம்
பசன் பிசித்ர பிதி || **965**

ஆடிக் கொண்டும், பாடிக்கொண்டும் அலைபோல் பூதகணங்கள் எல்லோரும் அங்கு ஒன்றாகிறார்கள். அவர்கள் ரூபம்தான் பயங்கரமாக இருந்தனவே தவிர; அவர்கள் வார்த்தைகள் அதி விசித்ரமாகவும், ஜ்ஞானம் உள்ளதாகவும் தெரிந்தன.

ஜஸ் தூல்ஹு தஸி பனீ பராதா |
கௌதுக் பிபித் ஹோஹிம் மக் ஜாதா || **966**
இஹாம் ஹிமாசல் ரசேவு பிதானா |
அதி பிசித்ர நஹிம் ஜாயி பகானா || **967**

எப்படி மணமகன் இருந்தாரோ; அதே போல் அவர் கூட்டமும், ஊர்வலமும் வந்திருந்தது. வரும் வழியெல்லாம் பலவிதமான கேளிக்கைகளும், கூத்தும் நடந்தன. இங்கு ஹிமவானின் பெரிய கூடாரப் பந்தல் போடப்பட்டிருந்தது. அதை வர்ணனை செய்யவே முடியாது. அது அத்தனை அழகுடன் விளங்கியது.

ஸைல் ஸகல் ஜஹம் லகி ஜக் மாஹீம் |
லகு பிஸால் நஹிம் பர்னி ஸிராஹீம் || 968
பன் ஸாகர் ஸப் நதீம் தலாவா |
ஹிமகிரி ஸப் கஹுூம் நேவத் படாவா || 969

ஹிமகிரியானவன் உலகில் உள்ள பெரிதும், சிறிது மான மலைகள், சிகரங்கள், குளம், குட்டைகள், மேலும், காடு, ஸமுத்ரம் எல்லாவற்றிற்கும் அழைப்பு அனுப்பி இருந்தார்.

காமரூப் ஸுந்தர் தன் தாரீ |
ஸஹித் ஸமாஜ் ஸஹித் பர் நாரீ || 970
கயே ஸகல் துஹிநாசல் கேஹா |
காவ்ஹிம் மங்கல் ஸஹித் ஸ்நேஹா || 971

ஹிமவானின் அழைப்பின் படிப்பலரும் சமயத் திற்கு ஏற்றவாறு ரூபம் தரித்துக் கொண்டு, மிகவும் அழகாக மோஹன ரூபத்துடன் தங்கள் தங்கள் ஸ்த்ரீ களுடன், குடும்பத்துடன் கூட ஹிமவானின் வீடு வந்து, ப்ரேமையுடன் மங்கள கானம் செய்தார்கள்.

ப்ரதமஹி கிரி பஹுூ க்ருஹ் ஸம்வராயே |
ஜதாஜோகு தஹம் தஹம் ஸப் சாயே || 972
புர் ஸோபா அவலோகி ஸுஹாயீ |
லாகயி லகு பிரஞ்சி நிபுநாயீ || 973

அழைப்பிற்கு ஏற்று வந்திருக்கும் விருந்தாளிக்கு முன்னரே ஹிமவான் தன்னுடைய க்ருஹத்தை வெகு அழகாகச் சிங்காரித்து வைத்தார். யார் யாருக்கு எங்கு எங்குத் தங்க வேணுமோ; அம்மாதிரி ஏற்பாடு செய் தார். நகரத்தின் அழகைக் காணும்போது ப்ரம்மனின் படைப்பு இதற்கு எதிரே துச்சமாகச் சிறிதாகத் தெரிந்தது.

லகு லாக் பிதி கீ நிபுனதா
அவலோகி புர் ஸோபா ஸஹீ |
பன் பாக் கூப் தடாக் ஸரிதா
ஸுபக் ஸப் ஸக் கோ கஹீ || 974
மங்கல் பிபுல் தோரன் பதாகா
கேது க்ருஹ் க்ருஹ் ஸோஹஹீம் |
பனிதா புருஷ் ஸுந்தர் சதுர் சபி
தேகி முனி மன் மோஹஹீம் || 975

உண்மையிலேயே ப்ரம்மனின் சிருஷ்டியும் இந்நகருக்கு எதிரில் அல்பமாகத்தான் தெரிந்தது. அதாவது, ரொம்பவும் சிறியதாகத் தெரிந்தது. வனங்கள், உபவனங்கள், கிணறுகள், குளங்கள், நதிகள் இவைகள் அழகோடு மிளிர்ந்தன. இவைகளை வர்ணிக்கவே முடியாது. பலவிதமங்கள ஸூசகமான சித்ரவிசித்ர தோரணங்களையும், கொடிகளையும் மாட்டி வைத்து, மக்கள் தங்கள் வீடுகளை அலங்காரம் செய்திருந்தார்கள். அங்குள்ள ஸ்த்ரீ, புருஷர்களின் அழகை வர்ணிக்க இயலாது. இவர்களைக் கண்டு முனிவர்கள் கூட மோஹம் அடைந்து விட்டார்கள்.

ஜகதம்பா ஜஹம் அவதரீ ஸோ
புரு பர்னி கி ஜாயி |
ரித்தி ஸித்தி ஸம்பத்தி ஸுக்
நித் நூதன் அதிகாயி || 976

எங்கு ஜகன் மாதாவான பார்வதி அவதாரம் எடுத்திருக்கிறாளோ; அந்த இடத்தையும் வர்ணிக்க முடியுமா? அங்கு அந்த இடத்திற்கும் ஸௌபாக்யத்திற்கு ஒரு குறைவும் இருக்காது. தினம் தினம் அனேக செழிப்பான விளைவுகளும், செல்வங்களும் பெருகிக் கொண்டுதான் இருக்கும். இது உண்மை.

நகர் நிகட் பராத் ஸுனி ஆயீ |
புர் கர் பரு ஸோபா அதிகாயீ || 977
கரி பனாவ் ஸஜி பாஹன் நாநா |
சலே லேன் ஸாதர் அக்வானா || 978

நகரத்தின் கோடியில் ஊர்வலம் வர ஆரம்பித்ததுமே; நகரம் பூராவும் அல்லோல கல்லோலப் பட்டது; தனி அழகாக விளங்கியது. யாவரும் அலங்கரிக்கப்பட்ட வாஹனங்களில் அமர்ந்து மாப்பிள்ளையை எதிர் கொண்டழைக்கக் கிளம்பினார்கள். அதில்தான் எத்தனை மரியாதை; எத்தனை பய பக்தி.

ஹியம் ஹர்ஷே சுர் ஸேன் நிஹாரீ |
ஹரிஹி தேகி அதி பயே ஸுகாரீ || 979
சிவ ஸமாஜ் ஜப் தேகன் லாகே |
பிடரி சலே பாஹன் ஸப் பாகே || 980

தேவதைகளின் ஸேனைகளைக் கண்ட மக்கள் மனத்தில் பரமானந்தமடைந்தார்கள். பின்னும் ஸ்ரீமன் நாராயணனைக் கண்டதும் அவர்கள் மகிழ்ச்சி எல்லை கடந்தது. ஆனால், எப்போது சிவனாரின் பரிவாரங்களையும்,அவர்கள் ரூப லட்சணங்களையும் கண்டார்களோ; அப்போதே எல்லோருடைய வாஹனங்களும் பயத்தால் ஓடலாயின; சிதறின.

தரி தீரஜ் தஹம் ரஹே ஸயானே |
பாலக் ஸப் லை ஜீவ் பரானே || 981
கயேம் பவன் பூச்ஹிம் பிது மாதா |
கஹஹிம் பசன் பய் கம்பித் காதா || 982

எல்லாம் அறிந்த வயதான மக்கள் மட்டும் அங்கேயே தைர்யத்துடன் நின்றிருந்தனர். சிறுவர்கள் யாவரும் தப்பினோம், பிழைத்தோம் என்று அங்கும் இங்கும் சிதறி ஓடினார்கள். வீடு சென்றால் அங்குத் தாயார், தகப்பனார் கேள்விகள் கேட்டால்; இதைப்பற்றிச் சொல்லவும் பயந்து நடுங்கியவாறு கூறினார்கள்.

கஹிய காஹ் கஹி ஜாயி ந பாதா |
ஜம் கர் தார் கிதெளம் பரிஆதா || 983
பரு பெளராஹ் பஸஹம் அஸ்வாரா |
ப்யால் கபால் பிபூஷன் சாரா || 984

''ஐயோ!'' சொல்லவொணாத கோலம்! எப்படிச் சொல்லுவோம்? இது மாப்பிள்ளை ஊர்வலமா? அல்லது; யமதூதர்களின் பட்டாள வரிசையா?

பித்தன் மாப்பிள்ளை. எருது மீது உட்கார்ந்து ஊர்வலம் வந்தார். உடலெல்லாம் விபூதி. ஆபரணங்களாக ஸர்ப்பம், கபாலங்களைக் கழுத்தில் தரித்துக் கொண்டிருக்கிறார். இதுதான் மாப்பிள்ளைக் கோலம்! என்ன சொல்ல?

தன் சார் ப்யால் கபால் பூஷண்
நக்ன ஜடில் பயங்கரா |
ஸங்க் பூத் ப்ரேத் பிஸாச் ஜோகின்
பிகட் முக ரஜநீசரா || 985

ஜோ ஜிஅத் ரஹிஹி பராத் தேகத்
புன்ய பட் தேஹி கர் ஸஹீ |
தேகிஹி ஸோ உமா பிபாஹு கர் கர்
பாத் அஸிலரிகன்ஹ கஹீ || 986

மாப்பிள்ளையின் சரீரத்தின் பஸ்மம் பூசப்பட்டிருந்தது. ஸர்ப்பமும், மண்டையோடுகளும் அவரது ஆபரணங்கள். அவர் நிர்வாணமாக; ஜடாதாரியாக, பயங்கர உருவத்தோடிருந்தார். அவருடன் கூட அருகில் பெரிய பெரிய பயங்கரமான கோணலான முகம் கொண்ட பூத, பிசாச கணங்கள், யோகினிகள், ராட்சதர்கள் இருந்தனர். இவர்களை ஊர்வலத்தில் கண்டவர்கள் உயிருடன் இருந்தால்; அப்படி இருப்பவர்கள் பாக்கியம் செய்தவர்கள்தான். அவர்கள் பார்வதி கல்யாணத்தைப் பார்க்கலாம். இம்மாதிரிச் செய்தியை வீடு வீடாக அவரவர்கள் பிள்ளைமார்கள் கூறினார்கள்.

ஸமுஜி மஹேஸ் ஸமாஜ் ஸப் ஜனனி
ஜனக் முஸுகாஹிம் |
பால் புஜாயே பிபித் பிதி நிடர்
ஹோ டரு நாஹிம் || 987

சிவனாருடைய ஸமூஹத்தைப் பற்றி அறிந்த பெரியவர்கள் நகைத்தார்கள். பையன்களின் தாய்-தந்தையர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தகுந்தபடி புத்தி புகட்டினார்கள். அதாவது; அவரைப் பற்றிய பயத்தை விட்டுச் சென்று விடுங்கள். பயப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றார்கள்.

லை அகவான் பராத்ஹி ஆயே |
தியே ஸப்ஹி ஜன்வாஸ் ஸுஹாயே || 988
மைனாம் சுப் ஆர்தீ ஸம்வாரீ |
ஸங்க் ஸுமங்கல் காவ்ஹிம் நாரீ || 989

ஊர்வலத்தை எதிர் கொண்டழைக்கும் ஸமூஹம் ஜானுவாஸ ஊர்வலம் வந்ததும்; உடனே ஓடிவந்து பரபரப்பை உண்டாக்கின. மைனாவதி மங்கள ஆரத்தியைக் தயார் செய்தாள். அவளோடு கூட இருந்த எல்லா ஸுமங்கலி ஸ்த்ரீகளும் மங்களகீதம் பாட ஆரம்பித்தார்கள்.

கஞ்சன் தார் ஸோஹ் பர் பானீ |
பரிசன் சலீ ஹர்ஹி ஹர்ஷானீ || 990
பிகட் பேஷ் ருத்ரஹி ஜப் தேகா |
அபலன்ஹ உர் பய் பயஉ பிஸேஷா || 991

அழகிய கைகளில் தங்கத் தட்டுகள் விளங்கின. அந்தத் தங்கத் தாம்பாளங்களில் ஆரத்தி எடுக்கப் போன ராணி மைனாவும், மற்றவர்களும் அருகில் சென்று சிவனாருடைய பயங்கர வேஷத்தைக் கண்டதும் பயந்து திகைத்துப் போனார்கள்.

பாகி பவன் பைடீம் அதி த்ராஸா |
கயே மஹேஸு ஜஹாம் ஜன்வாஸா || 992
மைனா ஹ்ருதயம் பயஉ துகு பாரீ |
லீன்ஹீ போலி கிரீஸகுமாரீ || 993

பயத்தின் காரணமாகக் பல ஸ்த்ரீகள் அவர்கள் வீடுகளில் ஓடி ஒளிந்து விட்டார்கள். சிவன் பிள்ளை வீட்டார் தங்குமிடம் சென்றார். மைனாவின் ஹிருதயத்தில் தாங்கமுடியாத துக்கம் உண்டாயிற்று. அவள் தன் மகளை அருகில் அழைத்துவரச் செய்தாள்.

அதிக் ஸ்னேஹம் கோத் பைடாரீ |
ஸ்யாம் ஸரோஜ் நயன் பரே பாரீ || 994
ஜேஹிம் பிதிதும்ஹஹி ரூபு அஸ்தீன்ஹா |
தேஹிம் ஜட் பரு பாஉர் கஸ் கீன்ஹா || 995

மைனாவதி தன் அருமை மகளை மடியில் வைத்துக் கொண்டு அன்பு ததும்ப, ''மகளே! எந்த ப்ரம்மன் உனக்குச் சிறந்த பேரழகைக் கொடுத்தாரோ; அவனே உனக்குக் கணவனாக வரப்போகிறவரைப் பித்தனைப் போல் ஏன் படைத்திருக்கிறார்? என்று கூறும்போது அவள் நீலத்தாமரைக் கண்களில் கண்ணீர் ப்ரவாஹமெடுத்தது.

கஸ் கீன்ஹ பரு பௌராஹ் பிதி ஜேஹிம்
தும்ஹஹி ஸுந்தர்தா தயீ |
ஜோ பலு சஹிய ஸுரதருஹிம் ஸோ
பர்பஸ் பபூர்ஹிம் லாகயீ || 996

தும்ஹ ஸஹித் கிரி தேம் கிரெளம்
பாவக் ஜரெளம் ஜலனிதி மஹூம் பரெளம் |
கரு ஜாவு அபஜஸு ஹோவு ஜக்
ஜீவத் பிபாஹு ந ஹெளம் கரெளம் || 997

பித்தனைப் போல் வரனைப் படைத்த அந்த ப்ரம்மன் உன்னை ஏன் இத்தனை அழகுடன் ஸ்ருஷ்டித்தார்? கல்பவ்ருட்சத்தில் பழுத்துத் தொங்கவேண்டிய பழம், வீணாக முள்ளுடன் சேர்ந்த கருவேல மரத்தில் பழுத்துத் தொங்குகிறதே! மகளே! நான் உன்னையும் கூட அழைத்துச் சென்று இந்த மலையிலிருந்து விழுந்து சாகிறேன்;

அக்னியில் விழுந்து இறக்கிறேன்; ஸமுத்திரத்தில் தள்ளிக் குதிக்கிறேன். வீடு போகட்டும்; வாசல் போகட்டும்; உலகத்தார் எது வேண்டுமானாலும் இகழ்ந்து ஏசிப் பேசட்டும். ஜகத்தில் யார் எப்படிப் பேசினாலும் நாங்கள் சொல்வதைக் கேட்க மாட்டோம். ஆனால், நான் உயிருடன் உள்ளவரை உன்னை இந்தப் பித்தனுக்கு விவாஹம் செய்து தரமாட்டேன், என்று அழுதாள்.

பயீ பிகல் அப்லா ஸகல் துகித்
தேகி கிரிநாரி |
கரி பிலாபு ரோததி பததி ஸுதா
ஸ்நேஹு ஸம்பாரி || 998

இவ்வாறு மைனாவின் துக்கத்தைக் கண்ட மலைப் பெண்களும் கலங்கினார்கள்; அழுது துக்கித்தார்கள். மைனாவும் தன் புத்ரியின் பாசத்தால் தாங்கமுடியாது அழுது புலம்பினாள். மேலும் கூறினாள்;

நாரத் கர் மைம் காஹ் பிகாரா |
பவனு மோர் ஜின்ஹ பஸத் உஜாரா || 999
அஸ் உபதேஸு உம்ஹி ஜின்ஹ தீன்ஹா |
பௌரே பர்ஹி லாகி தபு கீன்ஹா || 1000

''நான் நாரதனுக்கு என்ன கெடுதலைச் செய்தேன்! எனக்கு ஏன் இப்படிப் பட்ட மாப்பிள்ளையைக் கொண்டு வந்தார்? நான் வசிக்கும் வீட்டையே இப்படி அழித்து

விட்டாரே! இம்மாதிரியான ஓர் உபதேசம் நாரதர் செய்தாரே; எதற்கு? இந்த மாதிரி பித்தனைப் போன்ற வரனுக்கு என் பெண்ணைக் கொடுக்கவா? இதற்காகவா என் பெண்ணைத் தபஸ் செய்யச் சொன்னார்?''

ஸாசே ஹூம் உன்ஹ கேம் மோஹ் ந மாயா |
உதாஸீன் தனு தாமு ந ஜாயா || 1001
பர் கர் காலக் லாஜ் ந பீரா |
பாஞ்ஜ் கி ஜான் ப்ரஸவ் கை பீரா || 1002

உண்மையில் நாரதருக்கு மோஹம் இல்லை; மாயை இல்லை; செல்வம் இல்லை; வீடு வாசல் இல்லை; ஸ்த்ரீ இல்லை; உடலைப் பற்றிய கவலையும் இல்லை; அவர் எல்லாவற்றிலும் உதாஸீனராகக இருப்பவர். அவருக்குப் பயமும் இல்லை; வெட்கமும் இல்லையோ! இதனால்தான் பிறர் வீடு புகுந்து அவர்கள் இன்பத்தையும், மரியாதையையும் கெடுக்கிறார்! நம் குலத்தின் மஹிமை இவருக்குத் தெரியுமா? மலடிக்கு பிள்ளைப் பேற்றின் வலி தெரியுமா? இப்படி மைனா துயர்தாளாது பிதற்றினாள்.

ஜனனிஹி பிகல் பிலோகி பவானீ |
போலீ ஜுத் பிபேக் ம்ருது பானீ || 1003
அஸ் பிசாரி ஸோச்ஹி மதி மாதா |
ஸோ ந டர்யி ஜோ ரசயி பிதாதா || 1004

பார்வதி தாயாரின் அதிக துக்கத்தையும், கலக்கத்தையும் கண்டு மிகவும் ஆழ்ந்த சிந்தனையுடன் ம்ருது வான குரலில், ''தாயே! புலம்பி வருந்த வேண்டாம். இம்மாதிரி நீ நினைத்துக் கொள். அதாவது; விதியான வன் எழுதிய கோட்டை யாரும் தள்ள முடியாது. ஆகவே, இதுபற்றி நீ மனச்சாந்தியுடன் இருப்பது நலம்''

கர்ம லிகா ஜெளம் பாஉர் நாஹூ |
தெள கத் தோஸு லகாயிய காஹூ || 1005
தும்ஹ ஸனமிட்ஹிம் கி பிதி பே அங்கா |
மாது ப்யர்த் ஜனி லேஹு கலங்கா || 1006

''என் கர்ம வினைப்படி பித்தனானவரை நான் கணவராக அடையவேண்டும் என்று எழுதியிருந்தால்;

அதற்காக யார்மீது குற்றம் சொல்ல முடியும்? தாயே! நீ கூறுவதால், அழுவதால் ப்ரம்மனின் தலைஎழுத்தை அழித்திட முடியுமா! வீணாக ஒருவரையும் பழி கூறிக் களங்கத்தை ஏற்க வேண்டாமம்மா!''

ஜனி லேஹு மாது கலங்கு கருணா
பரிஹர்ஹு அவஸர் நஹீம் |
துகு ஸுகு ஜோ லிகா லிலார் ஹம்ரேம்
ஜாப் ஜஹம் பாஉப்தஹீம் || **1007**
ஸுனி உமா பசன் பினீத் கோமல்
ஸகல் அப்லா ஸோச்ஹீம் |
பஹு பாந்தி பிதிஹி லகாயி தூஷண்
நயன் பாரி பிமோச்ஹீம் || **1008**

தாயே! வீணாகக் களங்கத்தை ஏற்காதே, அழுவதை நிறுத்து; வருத்தப்பட இது சமயம் இல்லை. எனக்கு ஸுகம்-துக்கம் யாவும் என் தலையில் எழுதியபடி நடக்கட்டும். எங்கே செல்லவேண்டுமோ; அங்கே போவேன்; இது நிச்சயம். பார்வதியின் இம்மாதிரியான நேர்மையான, ம்ருதுவான வார்த்தைகளைக் கேட்ட எல்லா ஸ்த்ரீகளும் அழுதுகொண்டே கண்களில் நீர் பெருக ப்ரம்மனைக் குறை கூறிக் கொண்டே யோசனையிலாழ்ந்தார்கள்.

தேஹி அவஸர் நாரத் ஸஹித் அரு
ருஷி ஸப்த ஸமேத் |
ஸமாசார் ஸுனி துஹினகிரி கவ்னே
துரத் நிகேத் || **1009**

இச்செய்தியைக் கேட்ட இதே ஸமயம் நாரதரையும், ஸப்தரிஷிகளையும் அழைத்துக் கொண்டு ஹிமவான் தனது க்ருஹம் வந்தடைந்தார்.

தப் நாரத் ஸப்ஹீ ஸமுஜாவா |
பூருப் கதாப்ரஸங்கு ஸுனாவா || **1010**
மயனா ஸத்ய ஸுன்ஹு மம பானீ |
ஜகதம்பா தவ ஸுதா பவானீ || **1011**

அப்போது நாரதர் பூர்வ ஜன்ம கதைகளைப் பற்றிக் கூறி எல்லாரையும் ஸமாதானம் செய்தார். மைனா

விடம் மேலும், ஹே மைனாவதி!. உண்மையைக் கேள்: உன் பெண் ஸாட்சாத் ஜகதம்பா, பவானி ஆவாள்! உண்மையில் அவளே சிவபெருமானின் மனைவியா வாள்; அவள்தான் பார்வதி.

அஜா அநாதி சக்தி அபினாசினி |
ஸதா சம்பு அர்தங்க் நிவாஸினி || *1012*
ஜக் ஸம்பவ் பாலன் லய் காரினி |
நிஜ இச்சா லீலா பபு தாரினி || *1013*

இந்தப் பார்வதி ஜன்மம் இல்லாதவள்; அனாதி சக்தி, அவிநாசினி (அழிவற்றவள்), பின்னும் எப் பொழுதும் சிவனுடைய பாதி அங்கத்தில் வஸிப்பவள். உலகத்தை உண்டாக்கவும், காக்கவும், அழிக்கவும் வல் லமை பெற்ற சக்தி அவள். தனது இச்சைப்படி விளை யாட்டாகவே உருவம் தாங்கி நிற்கிறாள்.
(மாயா விளையாட்டுச் சரீரம் பெற்று அவதரித்து இருக்கிறாள்).

ஜன்மீம் ப்ரதம தச்ச க்ருஹ ஜாயீ |
நாமு ஸதீ ஸுந்தர் தனு பாயீ || *1014*
தஹம்ஹுஂம் ஸதீ சங்கர்ஹி பிபாஹீம் |
கதா ப்ரஸித்த ஸகல் ஜக் மாஹீம் || *1015*

மேலும், கேளுங்கள்; என்னவென்றால்; முதல் ஜன் மத்தில் தட்சனின் மகளாக, அழகான பெண்ணாக 'ஸதீ' என்ற பெயரில் ஜன்மம் எடுத்தாள்; சிவனையே மணந்து கொண்டாள். இது உலகம் அறிந்த ப்ரஸித்த மான விஷயம்.

ஏக் பார் ஆவத் சிவ் ஸங்கா |
தேகேஉ ரகுகுல் கமல் பதங்கா || *1016*
பயவு மோஹு சிவ் கஹா ந கீன்ஹா |
ப்ரம் பஸ் பேஷு ஸீய கர் லீன்ஹா || *1017*

"ஒரு முறை சிவனாருடன் வெளியில் சென்று வந்து கொண்டிருக்கும் பொழுது வழியில் ரகுகுல திலகமான, தாமரைக்கு ஸூர்யன் போன்ற ஸ்ரீராமச் சந்த்ரனைப் பார்வதி கண்டாள். மோஹ வசத்தினால், அறியாத்தனத்தினால் சிவனின் வார்த்தையை அவ

மதித்து ஸீதா தேவியின் வேஷத்தைப் போட்டுக் கொண்டாள்,

ஸிய பேஷு ஸதீம் ஜோ கீன்ஹ
தேஹிம் அபராத் சங்கர் பரிஹரீம் ।
ஹர் பிரஹம் ஜாயி பஹோரி பிது
கேம் ஜக்ய ஜோகாநல் ஜரீம் ॥ 1018
அப் ஜன்மி தும்ஹரே பவன் நிஜ் பதி
லாகி தாருன் தபு கியா ।
அஸ் ஜானி ஸம்ஸய் தஜஹு கிரிஜா
ஸர்பதா சங்கர ப்ரியா ॥ 1019

ஸதி தேவி - ஸீதாதேவியின் உருக்கொண்டு வந்த குற்றத்தின் காரணத்தால்; சம்புவானவர் அந்த ஸதியை த்யாகம் செய்தார்; இதே அபராதத்தால் ஸதி வருந்தினாள், சிவனுடைய வியோகத்தினால் துக்கமடைந்த தேவி தட்சனின் யாகத்திற்குச் சென்று, யஜ்ஞ குண்டத்தில் வீழ்ந்து பஸ்மமானாள். அதே ஸதி தேவி பார்வதி தான் இன்று உன்னுடைய வீட்டில் ஜன்மம் எடுத்து இருக்கிறாள். கடினமான தபஸ்ஸைச் செய்து மீண்டும் சிவனை அடைகிறாள். அவளை யாரோவென்று எண்ணாமல் ஸந்தேஹத்தை விடு. பார்வதி என்றும், எப்போதுமே சங்கரரின் அன்புக்குப் பாத்திரமானவள்; அவர் மனைவிதான்; பாதி உடலாள் தான் பார்வதி'' என்றார்.

ஸுனி நாரத் கே பசன் தப்
ஸப் கர் மிடா பிஷாத் ।
சன் மஹும் ப்யாபேஉ ஸகல் புர
கர் கர் யஹ் ஸம்வாத் ॥ 1020

நாரதரின் வார்த்தைகளைக் கேட்ட யாவரும் தங்கள் துக்கத்தை விட்டொழித்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் ஊரெங்கும் பார்வதியின் ஜன்ம ரகஸ்யத்தின் கதை வெகுவாகப் பரவிவிட்டது. வீடு வீடாக யாவரும் இந்த விஷயத்தைப் பற்றித் தெரிந்து கொண்டார்கள். (அதாவது; பார்வதி சக்தியின் அவதாரம் என்று.)

தப் மயனா ஹிமவந்து அனந்தே ।
புனி புனி பார்பதீ பத பந்தே ॥ 1021

நாரி புருஷ சிசு ஜூபா ஸயானே |
நகர் லோக் ஸப் அதி ஹர்ஷானே || 1022

இவ்விஷயம் தெரிந்தவுடன் (அதாவது; தனது பெண் பார்வதி சக்தி என்று அறிந்தவுடன்) மைனாவதி, ஹிமவான் யாவரும் திரும்பத் திரும்பப் பார்வதியின் கால்களில் விழுந்து நமஸ்கரித்தார்கள். புருஷர்கள், ஸ்த்ரீகள், இளைஞர்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் நகர வாஸிகள் யாவரும் அதிக ஸந்தோஷமடைந்தார்கள்.

லகே ஹோன் புர மங்கல் கானா |
ஸஜே ஸப்ஹிம் ஹாடக் கட் நாநா || 1023
பாந்தி அநேக் பயீ ஜேவ்நாரா |
ஸூப சாஸ்த்ர ஜஸ் கசு ப்யவஹாரா || 1024

நகரத்தில் மங்கள வாத்யங்கள் முழங்கத் தொடங்கின. எல்லாரும் வகைவகையான தங்கக் கலசத்தை அலங்கரித்தனர். பாக சாஸ்த்ரத்தில் (சமையல் கலை) சொல்லப்பட்ட முறைப்படிப் பலவிதமான உணவுப் பண்டங்கள் தயாரிக்கப்பட்டன.

ஸோ ஜேவ்நார் கி ஜாயி பகானீ |
பஸ்ஹிம் பவன் ஜேஹிம் மாது பவானீ || 1025
ஸாதர் போலே ஸகல் பராதீ |
பிஷ்ணு பிரஞ்சி தேவ் ஸப் ஜாதீ || 1026

அதாவது; எந்தக் க்ருஹத்தில் தாயாரான பார்வதி பவானி அவதரித்து இருக்கிறாளோ; அங்கு சாப்பாட்டிற்கு என்ன குறை? ஹிமவான் எல்லாப் பிள்ளை வீட்டாரையும், அதாவது; விஷ்ணு, ப்ரம்மா முதல் ஸகல தேவர், கந்தர்வர்களையும் அழைதது ஏம்பந்தி விருந்திட்டு மரியாதை செய்தார்.

பிபிதி பாந்தி பைடீ ஜேவ்நாரா |
லாகே பருஸன் நிபுன் ஸுவாரா || 1027
நாரிப்ருந்த ஸுர் ஜேவந்த் ஜானீ |
லகீம் தேன் கானீம் ம்ருது பானீ || 1028

அதாவது; பந்தி பந்தியாக ஸம்பந்திகள் விருந்தில் உட்கார்ந்தார்கள். சிறந்த, திறமை, வாய்ந்த குறைவே

யில்லாத பரிசாரகர்கள் சாப்பாடுகளைப் பரிமாறினார்கள். தேவ ஸ்த்ரீகள் மெதுவான குரலில் திட்டிய படி கிண்டல் செய்யலாயினர்.

காரீம் மதுர் ஸ்வர் தேஹிம் ஸுந்தரி
பிங்க்ய பசன் ஸுநாவ்ஹீம் |
போஜனு கர்ஹிம் ஸுர் அதி பிலம்பு
பினோது ஸுனி ஸசு பாவ்ஹீம் || 1029

ஜேவந்த ஜோ பட்யோ அனந்து ஸோ
முக் கோடிஹுமம் ந பரை கஹ்யோ |
அச்வாம்யி தீன்ஹே பான் கவ்னே
பாஸ் ஜஹம் ஜாகோ ரஹ்யோ || 1030

இனிய குரலில் ஸுந்தரிகள் யாவரும் வேடிக்கையாகத் திட்டுவதும், பேசுவதும் அவர்களுடைய கேலி வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டும் தேவர்கள் உணவு உண்டுவெகு நேரமானது. இவர்கள் ஸ்த்ரீகளின் கேலியையும், கேளிக்கைகளையும் க்ண்டு வெகுவாக ரஸித்தார்கள். அவைபற்றிக் கோடிக்கணக்கான முகத்தாலும் எடுத்துச் சொல்ல முடியாது.

பின்னர் கை, வாய் கால்களைக் கழுவி வந்தபின் எல்லோருக்கும் தாம்பூலம் கொடுக்கப்பட்டது. பிறகு எல்லோரும் அவரவர் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றனர்.

பஹுரி முனின்ஹ ஹிமவந்த் கஹும்
லகன் ஸுனாயீ ஆயி |
ஸமய் பிலோகி பிவாஹ் கர்
பட்யே தேவ் போலாயி || 1031

பின்னர் முனிவர்கள் ஹிமவானிடம் வந்து லக்னத்திற்கு ஸமயம் வந்து விட்டதையும், விவாஹ சுப முஹுர்த்த நேரம் வந்ததையும் கூறித் தேவர்களையும் உடனே வரும்படி அழைத்தார்கள்.

போலி ஸகல் ஸுர் ஸாதர் லீன்ஹே |
ஸப்ஹி ஜதோசித் ஆஸன் தீன்ஹே || 1032
பேதீ பேத் பிதான் ஸம்வாரீ |
ஸுபக் ஸுமங்கல் காவ்ஹிம் நாரீ || 1033

எல்லாத் தேவதையையும் மரியாதையுடன் கூப்பிட் டார்கள். அவரவர்களுக்குத் தகுந்தபடி ஆஸனம் அளித் தார்கள். வேதத்தில் கூறியபடி மேடை அலங்காரத்தை அமைத்தார்கள். ஸ்த்ரீகள் மங்கல கானம் செய்யலா னார்கள்.

ஸிங்காஸனு அதி திவ்ய ஸுஹாவா |
ஜாயி ந பர்னி பிரஞ்சி பனாவா || 1034
பைடே சிவ் பிப்ரன்ஹ ஸிரு நாயீ |
ஹ்ருதயம் ஸுமிரி நிஜ ப்ரபு ரகுராயீ || 1035

ப்ரம்மனால் அதி அத்புதமாக வர்ணிக்க முடியாத அளவு அழகுடன் செய்யப்பட்ட மேடையிலிருந்த ஸிம் ஹாஸனத்தில் சிவனார் ப்ராமணர்களைத் தலைவணங்கி விட்டு அமர்ந்தார். அமரும்பொழுது மனத்தில் தனது ப்ரபுவான ஸ்ரீராமச்சந்த்ரனை நினைத்துக் கொண்டார்.

பஹுரி முனீஸன்ஹ உமா போலாயீம் |
கரி சிங்காரு ஸகீம் லை ஆயீம் || 1036
தேகத் ரூபு ஸகல் ஸுர் மோஹே |
பர்னை சபி அஸ் ஜக் கபி கோ ஹை || 1037

பிறகு முனிவர்கள் பார்வதியை அழைத்தார்கள். ஸகிகள் பார்வதியைச் சிங்காரித்து அழைத்து வந் தார்கள். பார்வதி தேவியின் ரூபத்தைக் கண்ட தேவர்கள் மோஹித்துப் போனார்கள். அவள் அழகை வருணிக்க உலகில் கவிகளும் உண்டா?

ஜகதம்பிகா ஜானி பவ பாமா |
ஸுரன்ஹ மன்ஹிம் மன் கீன்ஹ ப்ரனாமா ||
1038
ஸுந்தர்தா மர்ஜாத் பவானீ |
ஜாயி ந கோடிஹும் பதன் பகானீ || 1039

ஜகன்மாதாவான பார்வதியைச் சிவனாரின் பத்னி யென்பதாகத் தெரிந்து, எல்லாத் தேவர்களும் மனத் துள் வணங்கினார்கள். பார்வதியின் அழகுக்கு மதிப்புக் கொடுத்து வர்ணிக்கக் கோடிக்கணக்கான முகங்களும் போதாது என்கிறார்.

கோடிஹுூம் பதன் நஹிம் பனை பர்னத்
ஜக் ஜனனி ஸோபா மஹா |
ஸகுச்ஹிம் கஹத் ச்ருதி ஸேஷ் ஸாரத்
மந்தமதி துளஸீ கஹா || 1040
சபிகானி மாது பவானி கவ்னீம்
மத்ய மண்டப் சிவ் ஜஹாம் |
அவலோகி ஸக்ஹிம் ந ஸகுச் பதி
பத கமல் மனு மதுகரு தஹாம் || 1041

கோடிக்கணக்கான முகங்களினாலும் வர்ணிக்க முடியாது ஜகன் மாதாவின் சோபையை. அப்படிப் பட்ட சோபையை வேதம், ஆதிசேஷன், ஸரஸ்வதி போன்றவர்களே வர்ணிக்க முடியாது ஸங்கோசமடைந் தார்கள், அப்படிப்பட்ட சோபையை வருணிக்க மந்த புத்தியுள்ள துளஸீயான நான் வருணிக்கப் போகிறேன் என்றால்; நான் எந்தக் கணக்கில் சேர்ந்தவன்?

அழகின் பொக்கிஷமும், காந்திக் களஞ்சியமும் ஆன ஜகதாம்பா பவானி கல்யாண மண்டபத்தின் நடுவே சிவனார் இருக்குமிடம் சென்றாள். மிகுந்த நாணத்தி னால் அவர் பாதகமலங்களைக் கூடப் பார்க்க முடி யாதவளானாள். ஆனால், அவளது மனமாகிற வண்டு பாதகமலங்களையே சுற்றி வந்து சுவையை அனுபவித்தது.

முனி அனுஸாஸன் கணபதிஹி
பூஜேவு சம்பு பவானி |
கோவு ஸுனி ஸம்ஸய் கரை ஜனி
ஸுர் அநாதி ஜியம் ஜானி || 1042

முனிவர்களின் ஆஜ்ஞைப்படி சிவ-பார்வதி இரு வரும் கணபதியைப் பூஜை செய்தார்கள். கணபதியான வர் அனாதிகாலந் தொட்டு வாழ்பவர். எங்கும் எந்தக் காலமும் உலகின் எல்லாப் பொருள்களிலும் விளங்கு பவரான கணபதி ஆதி அந்தமில்லாதவர். (கணங்கள் என்றும் உள்ளன. அதன் பதியான கணபதி என்றும் வாழ்பவர். சிவனாரின் பிள்ளையாகப் பிறந்தது பின் னும் ஒரு ஸமயத்தில்தான். ஆகவே,இவர்தான் சிவ னாரின் புத்ரன் கணபதி என்பதிலும் ஐயமில்லை.) ஆதி தேவதையான கணபதி எப்போதும் வணங்கப் படுபவர். இதில் ஸந்தேஹம் கொள்ள வேண்டாம்.

ஜஸி பிபாஹ் கை பிதி ச்ருதி காயீ |
மஹாமுனின்ஹ ஸோ ஸப் கர்வாயீ || 1043
கஹி கிரீஸ் குஸ் கன்யா பானீ |
பவ்ஹி ஸமர்பீம் ஜானி பவானீ || 1044

திருமண முறைகளைப் பற்றி எவ்விதம் வேதங்களில் கூறப்பட்டிருக்கின்றனவோ; அதேபோல் முறைவழுவாது முனிவர்கள் விவாஹ காரியத்தைச் செய்தார்கள். ஹிமவான் கையில் தர்ப்பையையும், தனது கன்யாவின் கையையும் தனது கையால் பிடித்துச் சிவனாரிடம் பவானியை ஸமர்ப்பணம் செய்தார்.

(தொன்றுதொட்டு ஆதிகாலம் முதல் சிவனாரின் பத்தினி சாட்சாத் சக்தி, பவானி என்பதைத் தெரிந்து மன நிறைவுடன் தன் மகளைச் சிவனாரிடம் ஒப்படைத்தார்.)

பாணிக்ரஹன் ஜப் கீன்ஹ மஹேஸா |
ஹியம் ஹர்ஷே தப் ஸகல் ஸுரேஸா || 1045
பேதமந்த்ர முனிபர் உச்சர்ஹீம் |
ஜய ஜய ஜய சங்கர ஸுர் கர்ஹீம் || 1046

எப்போது சிவனார் பார்வதியின் கரங்களைப் பற்றினாரோ; அப்போது தேவர்கள் மிகவும் ஆனந்தமடைந்தார்கள். சிறந்த முனிவர்கள் வேத மந்த்ரங்களை உச்சரித்தார்கள். தேவர்கள் ''ஜயஜய ஜய சங்கரா'' என்று கூறி வாழ்த்தினார்கள்.

பாஜ்ஹிம் பாஜன் விவித் விதானா |
ஸுமன் வ்ருஷ்டி நப் பை பிதி நாநா || 1047
ஹர் கிரிஜா கர் பயஉ பிபாஹூ |
ஸகல் புவன் பரி ரஹா உசாஹூ || 1048

அநேக விதமான வாத்யங்கள் முழங்கின. தேவர்கள் ஆகாயத்திலிருந்து பலவண்ணப் பூமாரி பொழிந்தார்கள். அதாவது, சிவ/பார்வதியின் விவாஹம் நடந்து முடிந்தது என்பதை அறிந்து உற்சாகத்தினால் தேவர்கள் மட்டுமல்ல; உலகெங்கும் உள்ள மக்களும் பரமானந்தம் கொண்டு அகம் மகிழ்ந்தார்கள். அதாவது; (உலகெங்கும் உள்ள எல்லா ஜீவராசிகளும், மகிழ்வில் திளைத்தன.)

தாஸீம் தாஸ் துரக ரத் நாகா |
தேனு பஸன் மனி பஸ்து பிபாகா || 1049
அன்ன கனக பாஜன் பரி ஜானா |
தாயிஜ் தீன்ஹ ந ஜாயி பகானா || 1050

அதாவது; பணிமாதுகள், பணியாளர்கள், தேர், குதிரைகள், யானைகள், பசுக்கள், வஸ்த்ரங்கள், மணிகள் இப்படிப் பல்வகைப் பொருள்களையும், மேலும், அரிசி, தங்கப் பாத்ரங்கள் இவைகளை வண்டியில் நிரப்பியும், வரதட்சிணையாக ஹிமவான் கொடுத்தார். அவைகளைப் பற்றி நம்மால் வர்ணிக்கவே முடியாது.

தாயிஜ் தியோ பஹு பாந்தி பூனி
கர் ஜோரி ஹிமபூதர் கஹ்யோ |
கா தேஉம் பூரன்காம் சங்கர்
சரன் பங்கஜ் கஹி ரஹ்யோ || 1051
சிவம் க்ருபாஸாகர் ஸஸுர் கர்
ஸந்தோஷ ஸப் பாந்திஹிம் கியோ |
புனி கஹே பத பாதோஜ் மயநாம்
ப்ரேம பரிபூரண் ஹியோ || 1052

இவ்வாறு வரதட்சிணை பலவிதமாகக் கொடுத்தார் ஹிமவான். பின்பு சிவனாரிடம் சென்று கைகூப்பி ஹே! பூர்ண காம சிவனே! தங்களுக்கு நான் என்ன கொடுக்க முடியும்? என்று கூறி; அரது திருவடித் தாமரைகளைப் பிடித்துக் கொண்டார். க்ருபா ஸமுத்ர மான சிவனார் தம்மாமனாரைப் பார்த்துப் பலவிதத் திலும் ஸந்தோஷமுண்டாகும்படி அன்பாகவும், ஆறு தலாகவும் பேசினார்; தேற்றினார். பிறகு அன்பு நிறைந்த உள்ளத்தோடு மைனாவும் சிவனாரின் பாத கமலங்களைப் பிடித்துக் கொண்டு;

நாத உமா மம ப்ராண் ஸம்
க்ருஹகிங்கரீ கரேஹு |
சமேஹு ஸகல் அபராத் அப்
ஹோயி ப்ரஸன்ன பரு தேஹு || 1053

ஹே பெருமானே! உமா எங்கள் ப்ராணனை விடப் ப்ரியமானவள். எங்கள் வீட்டில் ஸகலமும் அவள்தான். தங்கள் வீட்டில் இவளை ஓர் அடிமை

யாக ஏற்றுக் கொள்ள வேண்டும்; நாம் என்ன அபராதம் செய்திருந்தாலும், அவைகளை மன்னித்தருள வேண்டும்; இப்போது தாங்கள் மகிழ்வோடு எனக்கு இந்த வரத்தை அளிக்க வேண்டும்'' என்று நாத்தழுக்கக் கூறினாள்.

பஹு பிதி சம்பு ஸாஸு ஸமுஜாயீ ।
கவ்னீ பவன் சரண் ஸிரு நாயீ ॥ 1054
ஜனனீம் உமா போலி தப் லீன்ஹீ ।
லை உசங்க ஸுந்தர் ஸிக் தீன்ஹீ ॥ 1055

பலவிதங்களிலும் தனது மாமிக்குச் சிவனார் ஆறுதல் அளித்துக் கூறினார். பிறகு மைனா சிவனாரின் கால்களைத் தொட்டு நமஸ்கரித்துவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டாள். பின்பு தன் மகளைக் கூப்பிட்டு மடியில் வைத்துக் கொண்டு பலவிதமான, அழகான புத்திமதிகளைக் (ஒவ்வொரு தாயாரும்) கூறுவது போலக் கூறினாள்:-

கரேஹு ஸதா சங்கர் பத பூஜா ।
நாரிதர்மு பதி தேவு ந தூஜா ॥ 1056
பசன் கஹத் பரே லோசன் பாரீ ।
பஹுரி லாயி உர் லீன்ஹி குமாரீ ॥ 1057

ஹே பார்வதி! ''ஸதா பொழுதும் சிவனாரின் (உன்பதியின்) பாதங்களைப் பூஜை செய். இதுதான் ஸ்த்ரீகளின் தர்மம். பெண்களுக்குப் பதிதான் தெய்வம். வேறு தெய்வம் ஒருவரும் இல்லை. (தர்மசாஸ்த்ரங்களில் எழுதியபடி ''பதிரேகா க்ருஹ ஸ்த்ரீணாம்,'') என இந்தவசனம்; கூறும்பொழுது தாயின் கண்களில் நீர் பெருகியது; மீண்டும் பெண்ணை இறுகத் தழுவினாள்.''

கத் பிதி ஸ்ருஜீம் நாரி ஜக் மாஹீம் ।
பராதீன் ஸப்னேஹு ம் ஸுகு நாஹீம் ॥ 1058
பை அதி ப்ரேம் பிகல் மஹ்தாரீ ।
தீரஜு கீன்ஹ குஸமய் பிசாரீ ॥ 1059

மேலும், தொடர்ந்து, விதாதா உலகில் பெண்களை ஏன் படைத்தார்? பிறருக்கு உட்பட்ட நிலையில் பெண் இருக்கும்போது கனவிலும் ஸுகத்தைப் பெறமுடியுமா? முடியாது.

என இவ்வாறு கூறிய மைனா ப்ரேமையின் காரண மாகக் கலங்கினாள். ஆனாலும், வருத்தத்தைக் காட்ட இது ஸமயமில்லை என்று ஸமயத்தின் பொறுப்பை உணர்ந்து, தைரியங் கொண்டு மனம் தேறினாள்.

புனிபுனி மிலதி பர்திகஹி சர்னா ।
பரம ப்ரேமு கசு ஜாயி ந பர்னா ॥ 1060
ஸப் நாரின்ஹ மிலி பேடி பவானீ ।
ஜ்ஹயி ஜனனி உர் புனி லப்டானீ ॥ 1061

மாதாவான மைனா திரும்பத் திரும்பப் பர்வத குமாரியின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு விழுகி றாள். அவளுக்கு மிகந்த ப்ரேமை இருந்ததை வருணிக் கவே முடியாது. பவானியோ, எல்லாப் பெண்களை யும் சந்தித்துப் பேசிய பின் தன் தாயின் மார்போடு ஒட்டிக் கொள்கிறாள்.

ஜனனிஹி பஹுரி மிலி சலீ உசித்
அஸீஸ் ஸப் காஹுஂம் தயீம் ।
பிரிபிரி பிலோகதி மாது தன் தப்
ஸகீம் லைசிவ் பஹிம் கயீம் ॥ 1062
ஜாசக் ஸகல் ஸந்தோஷி சங்கரு
உமா ஸஹித் பவன் சலே ।
ஸப் அமர் ஹர்ஷே ஸுமன் பர்ஷி
நிஸான் நப் பாஜே பலே ॥ 1063

மாதாவிடம் திரும்பத் திரும்ப உமை வந்து ஸந் தித்து விடைபெற்றுக் கொண்டாள். எல்லோரும் தகுந்த படி ஆசீர்வாதம் செய்தனர். அவள் திரும்பத்திரும்பத் தாயாரின் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த ஸமயம் தோழியர் வந்து சிவனாரிடம் பார்வதியைக் கூட்டிச் சென்றார்கள். அவர் இல்லத்திற்கு அப்பொழுது வந்திருந்த யாசகர்களுக்கெல்லாம் சிவபெருமான் வரம் கொடுத்து மகிழச் செய்து, பார்வதியை அழைத்துக் கொண்டு, தமது கைலாஸத்திற்குச் சென்றார். எல்லாத் தேவதைகளும் ஸந்தோஷமடைந்து புஷ்பமாரி பெய் தனர். ஆகாயத்தில் அழகிய நகாராக்கள் முழங்கத் தொடங்கின.

சலே ஸங்க் ஹிமவந்து தப் பஹுஞ்
சாவன் அதி ஹேது ।

பிபித் பாந்தி பரிதோஷு கரி
பிதா கீன்ஹ ப்ருஷகேது || **1064**

மிக்கப்ரேமையுடன் விடைபெற்றுக் கொள்ள ஹிம வான் தனது ஸகாக்களுடன் சிவனிடம் வந்திருந்தார். எருதுக் கொடியோன் ஹிமவானைப் பலவாறு புகழ்ந்து, மகிழ்விலாழ்த்தி, ஸமாதானம் செய்து, விடைகொடுத்து அனுப்பி வைத்தார்.

துரத் பவன் ஆயே கிரிராயீ |
ஸகல் ஸைல் ஸர் லியே புலாயீ || **1065**
ஆதர் தான் பினய் பஹுமானா |
ஸப்கர் பிதா கீன்ஹ ஹிமவானா || **1066**

பர்வதராஜன் ஹிமவான் உடனே வீடு வந்தடைந் தார். வந்தவுடன் எல்லாப் பர்வதங்கள், நதிகள், தடா கங்கள், குளங்கள் பலவற்றையும் அழைத்து; மரியாதை காட்டி, அவரவர்களுக்கு வேண்டுமளவு தானங்கள் வழங்கிக் கௌரவத்தோடு விடைகொடுத்து அனுப்பி னார்.

ஜப்ஹிம் சம்பு கைலாஸஹிம் ஆயே |
ஸுர்ஸப் நிஜ் நிஜ் லோக் ஸிதாயே || **1067**
ஜகத் மாது பிது சம்பு பவானீ |
தேஹிம் ஸிங்காரு ந கஹவும் பகானீ || **1068**

பார்வதி-பரமேச்வரன் கைலாயம் வந்து அடைந் தார்கள். அப்பொழுது எல்லாத் தேவதைகளும் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள். சிவனும்-பார்வதியும் உலகுக்கே தாய் தந்தையர். ஆகவே, அவர்களுடைய ச்ருங்காரத்தைப் பற்றி வர்ணிக்க முடியாத நிலையில் இருக்கிறேன் என்கிறார் துளஸீ இங்கே.

கர்ஹிம் பிபித் பிதி போக் பிலாஸா |
கனன்ஹ ஸமேத் பஸ்ஹிம் கைலாஸா || **1069**
ஹர் கிரிஜா பிஹார் நித் நயவூ |
ஏஹி பிதி பிபுல் கால சலிகயவூ || **1070**

சிவனும்-பார்வதியும் விதவிதமான கேளிக்கை களைச் செய்தவண்ணம், ஸுக போகத்தில் மூழ்கிய

வாறு கைலாஸத்தில் வசிக்கலானார். சிவ-பார்வதியார் ஒவ்வொரு நாளும் புதுப்புது விளையாட்டுக்களைச் செய்து கொண்டு மகிழ்ந்திருந்தார்கள். இவ்விதம் பல காலம் உருண்டோடியது.

தப் ஜன்மேஉ ஷட்பதன் குமாரா |
தாரகு அஸுரு ஸமர் ஜேஹிம் மாரா || 1071
ஆகம் நிகம் ப்ரஸித்த புரானா |
ஷண்முக ஜன்மு ஸகல் ஜக் ஜானா || 1072

அப்போது ஆறுமுகம் கொண்ட ஸ்வாமி கார்த்திகேயன் சிவபார்வதியின் புத்ரனாகப் பிறந்தார். அவர் பெரியவரானதும் தாரகாஸுரனை யுத்தம் செய்து அழித்தார். வேத, சாஸ்த்ர, புராணங்களில் எழுதியுள்ளபடி ஸ்வாமி கார்த்திகேயனின் அவதாரம் உலக ப்ரஸித்தமானது. அவனைப் பற்றி உலகமே அறியும்.

ஜகு ஜான் ஷண்முக ஜன்மு கர்மு
ப்ரதாபு புருஷார்து மஹா |
தேஹி ஹேது மைம் ப்ருஷகேது ஸுத்
கர் சரித் ஸஞ்சேப்ஹிம் கஹா || 1073
யஹ் உமா சம்பு பிபாஹு ஜே நர் நாரி
கஹஹிம் ஜே காவ்ஹீம் |
கல்யாண் காஜ் பிபாஹ் மங்கல் ஸர்பதா
ஸுகு பாவ்ஹீம் || 1074

ஸ்வாமி கார்த்திகேயனின் பிறப்பு, செயல், வீரம், சீரிய ஆண்மை நிலை இவைகளை உலகமே அறியும். ஆகவே, நான் எருதுக் கொடியோனான சிவனார் பிள்ளையின் சரித்ரத்தை சுருக்கமாகச் சொல்லிவிட்டேன். இந்தச் சிவ-பார்வதியின் திருமண வைபவத்தை எந்த ஸ்த்ரீ, புருஷர்கள் கூறுகிறார்களோ; அவர்கள் ச்ரேஷ்டமான விவாஹம் முதலிய மங்கல காரியங்களில் ஈடுபட்டுச் செய்து கொண்டு எப்பொழுதும் ஸுகம் பெறுவார்கள்.

சரித ஸிந்து கிரிஜா ரமண்
பேத் ந பாவ்ஹிம் பாரு |
பர்னை துளஸீதாஸு கிமி அதி
மதிமந்த் கம்வாரு|| 1075

கிரிஜா ரமணரும், பார்வதியின் பதியுமான மஹா தேவனைப் பற்றிய சரித்ரம் கரை காணமுடியாத ஸமுத்ரம் போன்றது. வேதங்களும் அதன் கரையைக் கண்டதில்லை. அப்படியிருக்க ஓர் ஏழை, மந்த புத்தி யுள்ள, க்ராமவாசியான, துளஸீதாஸனான நான் எப் படி வர்ணிக்க முடியும்?

சம்பு சரித் ஸுனி ஸரஸ் ஸுஹாவா|
பரத்வாஜ் முனி அதி ஸுகு பாவா|| 1076
பஹு லாலஸா கதா பர் பாடூ|
நயனன்ஹி நீரு ரோமாவலி டாடூ|| 1077

சிவனாரின் சரித்ரம் மிகவும் ரஸமுள்ளதாகவும், அழகுள்ளதாகவும் இருந்ததால்; அதைக் கேட்ட பரத் வாஜமுனி அதிக ஆனந்தமடைந்தார். கதையைக் கேட் பதில் இன்னும் அவருக்கு ஆர்வம் உண்டானது; கண் களில் கண்ணீர் பெருகியது; மயிர்கள் குத்திட்டு நின் றன.

ப்ரேமி பிபஸ் முக ஆவ் ந பானீ|
தஸா தேகி ஹர்ஷே முனி க்யானீ|| 1078
அஹோ தன்ய தவ ஜன்மு முனீஸா|
தும்ஹஹி ப்ராண ஸம ப்ரிய கௌரீஸா|| 1079

ப்ரேமையின் காரணமாக வாயிலிருந்து வார்த்தை களே வெளிப்படவில்லை. இவ்விதம் அவர் மெய்ம் மறந்து இருப்பதைக் கண்ட யாஜ்ஞவல்க்யர் ப்ர ஸன்னமடைந்தார். பிறகு ஹே முனிவரே! ஆஹாஹா! தங்கள் ஜன்மம் சாபல்யமடையட்டும். தங்களுக்குச் சிவ பெருமான் ப்ராணனை விட ப்ரியமானவர் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சிவபத கமல் ஜின்ஹஹிரதி நாஹீம்|
ராமஹி தே ஸப்னேஹுூம் ந ஸோஹாஹீம்|| 1080
பினு சல் பிஸ்வநாத் பத் நேஹூ|
ராம பக்த கர் லச்சன் ஏஹூ|| 1081

சிவனாரின் சரணகமலங்களில் எவருக்கு அன்பு இல்லையோ; அவர்கள் ஸ்ரீராமனைக் கனவிலும் கூட அடைய முடியாது. ஆகவே; விச்வநாதரான சிவனா

ரின் திருவடிகளில் ஒருவிதக் கபட மனமும் இல்லாமல் அத்யந்த ப்ரேமை வைப்பதுவே ஸ்ரீராம பக்தியின் லக்ஷணமாகும்.

சிவ ஸம் கோ ரகுபதி ப்ரததாரீ|
பினு அக் தஜீ ஸதீ அஸி நாரீ|| 1082
பனு கரி ரகுபதி பக்தி தேகாயீ|
கோ சிவ ஸம் ராம்ஹி ப்ரிய பாயீ|| 1083

சிவனைப் போல் ஸ்ரீராமச்சந்த்ரன் மீது இத்தனை பக்தி கொண்டவர்கள் யார்? ஒருவித அபராதமும் இல்லாமல் சிவனார் ஸதியையும் த்யாகம் செய்தார். (தட்ச யஜ்ஞத்தின் ஸம்பவம்) பின்னும் உறுதி செய்து ஸ்ரீராமனின் மீது அளவு கடந்த பக்தியையும் வெளிக் காட்டினார். ''ஹே ஸஹோதரர்களே! ஸ்ரீராமனுக்கும் சிவனைப் போல் ப்ரியமானவர் யார் இருக்க முடியும்?''

ப்ரதமஹிம் மைம் கஹா சிவ் சரித்
பூஜா மர்மு தும்ஹார்|
ஸுசி ஸேவக் தும்ஹ ராம் கே ரஹித்
ஸமஸ்த பிகார்|| 1084

நான் முதலில் சிவனாரின் சரித்ரம் கூறி உங்கள் ரஹஸ்ய நிலையைத் தெரிந்து கொண்டேன். இப்போது நீர் ஸ்ரீராமச்சந்த்ரனின் உண்மையான ஸேவகன் என் பதையும் எல்லாவகைத் தோஷமும் இல்லாதவர் என் பதையும் தெரிந்து கொண்டேன். ஏனெனில்; சிவ னாரின் சரித்ரம் போலவே ஸ்ரீரகுநாதனின் சரித்ரமும் களங்கமற்றது.

மைம் ஜானா தும்ஹார குண் ஸீலா |
கஹஉம் ஸுனஹு அப் ரகுபதி லீலா || 1085
ஸுனு முனி ஆஜு ஸமாகம் தோரேம்|
கஹி ந ஜாயி ஜஸ் ஸுகு மன் மோரேம்||1086

''நான் உம்முடைய குண விசேஷங்களை அறிந் தேன். இப்போது நான் ஸ்ரீராமச்சந்த்ரனின் லீலை களைக் கூறுகிறேன் கேளும், ஹே முனிவரே! உங்களது சந்திப்பினால் என் உள்ளத்தில் எத்தகைய ஆனந்த ஸுகம் கிடைத்திருக்கிறதென்பதை என்னால் சொல்ல வும் முடியாது.''

ராம சரித் அதி அமித் முனீஸா ।
கஹி ந ஸக்ஹிம் ஸத் கோடி அஹீஸா ॥ 1087
ததபி ஜதாச்ருத் கஹஉம் பகானீ
ஸுமிரி கிராபதி ப்ரபு தனுபானீ॥ 1088

ஹே முனீச்வரரே! ஸ்ரீராமச்சந்த்ரனின் சரித்ரம், கதை மிகவும் விஸ்தாரமானது; எல்லையற்றது; நூறு கோடி ஆதிசேஷனாலும் எடுத்துக் கூற முடியாதது. இந்த அளவுகடந்த கதையைக் கூறுவது கடினம். இருந்த போதிலும் நான் எப்படிக் கேட்டேனோ; அனுபவித் தேனோ; அதை மட்டும் அப்படியே; வாணியின் பதி யான ப்ரம்மனையும், வில்லேந்திய ப்ரபு ஸ்ரீராமச்சந்த ரனையும் நினைவில் இருத்திக் கூறுகிறேன், கேளும்.

ஸாரத் தாருநாரி ஸம் ஸ்வாமீ
ராமு ஸூத்ரதர் அந்தர்ஜாமீ ॥ 1089
ஜேஹி பர் க்ருபா கர்ஹிம் ஜனு ஜானீ ।
கபி உர் அஜிர் நசாவ்ஹிம் பானீ॥ 1090

ஸரஸ்வதி ஒரு மரப்பொம்மை மாதிரி, அதன் கயிறுகளைப் பிடித்துப் பொம்மலாட்டம் போல் ஸ்ரீரா மச்சந்த்ரன் ஆட்டி வைக்கிறார். அதாவது; எல்லாம் தெரிந்த அந்தர்யாமியான ரகுநாதன் ஸூத்ரதாரி. தனது பக்தன் என்று கண்டு கவியிடம் அருள் காட்டி, அந்தக் கவி ஹிருதயம் என்னும் நாடக மேடையில் ஸரஸ்வதி என்னும் அறிவுள்ள பொம்மையை விட்டு ஆட்டிப் படைக்கிறார். (அதாவது, ஸரஸ்வதி க்ருபை யும் சேர்ந்ததால் கவியான நான் வெகு விரைவாகக் காவியங்களை எழுதிப் படைக்கிறேன்.)

ப்ரணவவும் ஸோயி க்ருபால் ரகுநாதா।
பர்ணவும் பிஸத் தாஸு குண் காதா॥ 1091
பரம ரம்ய கிரிபரு கைலாஸூ।
ஸதா ஜஹாம் சிவ உமா நிவாஸூ ॥ 1092

அந்தத் தயாலு ராமச்சந்த்ரனை, அவரது உயர்ந்த பெருமையுள்ள குணங்களை, நான் வர்ணிக்கப் போகிறேன். ஆகவே, அந்த ப்ரபுவை தண்டம் ஸமர்ப்பித்து வணங்குகிறேன். சிவனும், பார்வதியும் ஸதாவாஸம் செய்யும் கைலாஸ பர்வதமும் மிகச்

சோபையுடன் விளங்குகிறது; அதையும் நான் வர்ணிக்கிறேன்.

ஸித்த தபோதன் ஜோகிஜன்
ஸுர கிந்நர் முனிப்ருந்த் |
பஸ்ஹிம் தஹாம் ஸுக்ருதீ ஸகல்
ஸேவ்ஹிம் சிவ ஸுககந்த் || 1093

ஸித்தர்களும், தபஸ்விகளும், யோகிகளும், தேவதைகளும், கின்னரர்களும், முனிவர்கள் ஸமூஹமும், இப்படி எல்லாரும் அந்த மலையில் வஸிக்கிறார்கள். புண்யாத்மாவானவரும், ஸுகத்தையும், ஆனந்தத்தையும் கொடுக்கவல்லவருமான சிவனுக்கு ஸேவை செய்து கொண்டு இருக்கிறார்கள்.

ஹரிஹர் பிமுக் தர்ம ரதி நாஹீம்|
தே நர் தஹம் ஸப்னேஹும் நஹிம் ஜாஹீம்|| 1094
தேஹி கிரி பர் பட் பிடப் பிஸாலா|
நித நூதன் ஸுந்தர ஸப் காலா|| 1095

பகவான் விஷ்ணு, சிவனாரிடம் பாராமுகமாக எவர் இருக்கிறார்களோ; எவர்களுக்குத் தர்ம சிந்தனையில்லையோ; அவர்கள் அந்த இடத்திற்குக் கனவில் கூடச் செல்ல முடியாது. அந்தப் பர்வதத்தின் மீது ஒரு பெரிய ஆலமரம் இருக்கிறது. அது ஆறு பருவங்களிலும், எப்போதும், எந்தக் காலத்திலும் நித்தியம் புதுமையுடன் அழகாக விளங்குகிறது.

த்ரிபித ஸமீர் ஸுஸீதலி சாயா|
சிவ பிச்ராம் பிடப் ச்ருதி காயா|| 1096
ஏக்பார் தேஹி தர் ப்ரபு கயஹு|
தரு பிலோகி உர் அதிஸுகு பயஹு || 1097

குளிர்ந்த காற்றும், மென்மையான காற்றும், ஸுகந்தமும் கொண்ட காற்றும் இப்படி மூன்று வகைக் காற்றுகளும், குளுமையான நிழலும் கொடுக்கவல்ல அந்த மரம்தான் சிவனாரின் இளைப்பாறும் இடம் என்பது வேதம் அறிந்த உண்மை. (இந்த ஆலமரத்தடியில்தான் சிவனார் எப்போதும் களைப்பாறுவார் என்பது புராணம்) ஒரு முறை சிவனார் அந்த மரத்தடியின்

கீழ் போய் அந்த மரத்தைப் பார்த்து வெகுவாக ஸந்தோஷமடைந்தார்.

நிஜ கர் டாஸி நாகரிபு சாலா|
பைடே ஸஹஜ்ஹிம் சம்பு க்ருபாலா|| *1098*
குந்த இந்து தர் கௌர் ஸரீரா|
புஜ ப்ரலம்ப பரிதன் முனிசீரா|| *1099*

தனது கையால் புலியின் தோலைக் கீழே விரித்துக் கொண்டு தயாளனான சிவனார் இயல்பாகவே அதன் மீது அமர்ந்தார். குருக்கத்தி மலர் போலவும், சந்த்ரனைப் போலவும், சுத்தமான சங்கைப் போலவும் அவர் உடல் நிறமிருந்தது. மிக நீண்ட கைகள், முனிவர்களைப் போல் மரஉரி ஆடைகளை அணிந்திருந்தார்.

தருன் அருன் அம்புஜ ஸம் சர்னா |
நக் துதி பக்த ஹ்ருதய தம் ஹர்னா|| *1100*
புஜக் பூதி பூஷன் த்ரிபுராரீ|
ஆனனு சரத் சந்த் சபி ஹாரீ|| *1101*

அன்றலர்ந்த சிவந்த கமலங்களைப் போல் சிவனாரின் திருவடிகள் காணப்பட்டன. நகத்தினுடைய ஒளி பக்தர்களின் ஹிருதயத்தின் இருட்டைப் போக்க வல்லதாயிற்று. விபூதி அணிந்திருந்தார்; ஸர்ப்பங்கள் அவரது ஆபரணமாக விளங்கின. சரத் காலத்தின் பூர்ண சந்த்ரனைத் தோற்கடிப்பது போல் த்ரிபுராஸுரனின் பகைவனான அவர் முகம் ஒளி பெற்று விளங்கியது.

ஜடா முகுட் ஸுரஸரித் ஸிர்
லோசன் நளின் பிஸால்|
நீலகண்ட் லாவண்யநிதி
ஸோஹ் பால்பிது பால்|| *1102*

தலையில் ஜடையினால் செய்யப்பட்ட க்ரீடமும், கங்கையும் விளங்கின. தாமரை போன்ற பெரிய பெரிய கண்கள். அவரது நீலகண்டம் அழகின் களஞ்சியம். அவர் தலையில் த்விதீயைப் பிறைச் சந்த்ரன் அதிக சோபையைக் கொடுக்கின்றது.

பைடே ஸோஹ் காமரிபு கைஸேம்।
தரேம் ஸரீரு ஸாந்தர்ஸு ஜைஸேம்॥ 1103
பார்பதீ பல் அவஸரு ஜானீ
கயீ சம்பு பஹிம் மாது பவானீ॥ 1104

காமதேவனின் எதிரியான சிவனார் சாந்தமே உருவாகக் கொண்டு தனிமையில் அமர்ந்திருக்கும் இந்நேரம் பார்த்து, இதுதான் நல்ல சமயம் என்று எண்ணிய ஜகதம்பாவான பார்வதி சிவனாரிடம் சென்றாள்.

ஜானி ப்ரியா ஆதரு அதி கீன்ஹா।
பாம பாக ஆஸனு ஹர் தீன்ஹா॥ 1105
பைடீம் சிவ ஸமீப் ஹர்ஷாயீ
பூரப் ஜன்ம கதா சித் ஆயீ॥ 1106

அன்பின் வழி உருவான தன் மனைவியை ப்ரியமுள்ளவள் என்று கருதி, அவளுக்கு மிகுந்த மரியாதை காட்டினார் சிவனார். தனது ஆஸனத்தின் இடது பக்கத்தில் இருத்திக் கொண்டார். (அதாவது; பார்வதிக்கும் ஓர் ஆஸனம் அளித்து அமரச் செய்தார்.) பார்வதியும் மகிழ்ந்து சிவன் அருகே அமர்ந்தாள். அப்போது பார்வதிக்குப் பூர்வ ஜன்மத்தின் கதை நினைப்பில் வந்தது.''

பதி ஹியம் ஹேது அதிக் அனுமானீ ।
பிஹஸி உமா போலீம் ப்ரிய பானீ॥ 1107
கதா ஜோ ஸகல் லோக் ஹிதகாரீ
ஸோயி பூசன் சஹ் சைலகுமாரீ॥ 1108

தனது ஸ்வாமிக்குத் தன்மீது அதிகக் காதலும், பற்றும் இருப்பதை அறிந்த பர்வதகுமாரி சிரித்துக் கொண்டே இன்பமான கொஞ்சும் மொழியில் கேட்கலானாள். எந்தக் கதையானது மக்களை உய்விக்க, இதமளிக்க உதவுகிறதோ; அக்கதையையே பார்வதி கேட்க விரும்பினாள்.

பிச்வநாத் மம நாத் புராரீ
த்ரிபுவன மஹிமா பிதித் தும்ஹாரீ ॥ 1109

சர் அரு அசர் நாக் நர் தேவா|
ஸகல் கர்ஹிம் பத பங்கஜ் ஸேவா|| 1110

ஹே ஜகத்பதி! என் ஸ்வாமி! த்ரிபுராஸுரனை வதைத்த பெருமானே! மூன்று உலகங்களிலும் தங்களுடைய மஹிமை பரவியிருக்கிறது. ஜங்கம, ஸ்தாவரங்களும், நாகர்களும், பூலோக வாஸிகளும், தேவதைகளும், எல்லாருமே தங்கள் திருவடிகளில் ஸேவை செய்கிறார்கள்.

ப்ரபு ஸமர்த் ஸர்பக்ய சிவ
ஸகல் கலா குண் தாம்|
ஜோக் க்யான் பைராக்ய நிதி
ப்ரணத் கல்பதரு நாம்|| 1111

ஹே ப்ரபு! தாங்கள் திறமைசாலி; ஸகல அர்த்தங்களையும் அறிந்தவர்; எல்லாருடைய உள்ளங்களையும் அறிந்த ஸர்வஜ்ஞர்; மங்களமானவர்; எல்லாக்கலைகளுக்கும், குணங்களுக்கும் இருப்பிடம்; யோகம், ஜ்ஞானம், வைராக்யம் இவைகளின் களஞ்சியம் போன்றவர். தங்கள் நாமத்தைக் கூறி ஜபம் செய்து தஞ்சமடைகிறவர்களுக்குத் தாங்கள் கல்பகவ்ருட்சம் போன்றவர்.

ஜெளம் மோ பர் ப்ரஸன்ன ஸுகராஸீ|
ஜானிய ஸத்ய மோஹி நிஜ தாஸீ|| 1112
தெள ப்ரபு ஹர்ஹு மோர் அக்யானா|
கஹி ரகுநாத் கதா பிதி நாநா|| 1113

ஹே ஸுகராஸி! ஸுகத்தை கொடுப்பவரே! என்னைத் தங்களின் உண்மையான தாஸி-அடிமை என்று நினையுங்கள். இப்படி ஓர் எண்ணம் இருப்பின் ஹே ஸ்வாமி! (ஸ்ரீராமச்சந்த்ரனின் அநேகவிதக் கதைகளைக் கேட்க வேண்டுமென்று அஜ்ஞானத்தினால் ஆதுரப்படும் என்மனத்தைத் தேற்றி வையுங்கள்) அதாவது; எனக்கு ஸ்ரீராமன் கதையைக் கூறி என் அஜ்ஞானத்தை விலக்குங்கள்.

ஜாஸு பவனு ஸுரதரு ஹோயீ|
ஸஹி கி தரித்ர ஜனித் துகு ஸோயீ|| 1114
ஸஸிபூஷன் அஸ் ஹ்ருதயம் பிசாரீ|
ஹர்ஹு நாத் மம மதி ப்ரம் பாரீ|| 1115

எவருடைய இல்லம் கல்பக வ்ருட்சத்தின் அடியை அடைந்திருக்கிறதோ; அங்கு தரித்ரம் என்னும் துக்கமும் உண்டாகுமா? ஸ்வாமி! சந்த்ரனை அலங்கரித்துக் கொண்டு இருப்பவரே! ஹிருதயத்தில் இம்மாதிரி எண்ணம் கொண்டு என்னுடைய இந்த மனப்ரமையை விலக்குங்கள்!

ப்ரபு ஜே முனி பரமார்தபாதீ|
கஹ்ஹிம் ராம கஹு ம் ப்ரஹ்ம அநாதீ|| 1116
ஸேஸ் ஸாரதா பேத் புராநா|
ஸகல் கர்ஹிம் ரகுபதி குண் கானா|| 1117

ஹே ப்ரபுவே! மோட்ச மார்க்கத்தை அறிந்து, எடுத்துக் கூறும் முனிவர் தாங்கள். ஸ்ரீராமச்சந்த்ரனை அநாதி ப்ரம்மம் என்கிறார்கள். ஆதிசேஷனும், ஸரஸ்வதியும், வேதங்களும், புராணங்களும், இவ்விதமே ஸ்ரீராமனின் குணத்தைப் பாடுவதைக் காணலாம்.

தும்ஹ புனி ராம ராம தின்ராதீ|
ஸாதர் ஜப்ஹு அனங்க ஆராதீ|| 1118
ராமு ஸோ அவத் ந்ருபதி ஸுத் ஸோயீ|
கோ அஜ் அகுண் அலக் கதி கோயீ|| 1119

காமனின் பகைவரே! தாங்களே பகலும்-இரவும் 'ராம்-ராம்' என்று ஜபம் செய்கிறீர்கள். அந்த ராமர் அயோத்தியின் அரச குமாரரா? இல்லையேல், பிறப் பற்ற, சிறந்த குணமுள்ள, புலனுக்கு விஷயமாகாத வேறொரு ஸ்ரீராமன் இருக்கின்றாரா?

ஜெளம் ந்ருப தனய் த ப்ரஹ்ம கிமி
நாரி பிரஹம் மதி போரி|
தேகி சரித் மஹிமா ஸுனத்
ப்ரமதி புத்தி அதி மோரி|| 1120

ராஜகுமாரனை-ப்ரம்மம் என்று எப்படிக் கூற முடியும்? அப்படியே ப்ரம்மம் என்றால்; அந்த ராமன் என்பவர் ஸ்த்ரீ விரஹத்தினால் பலவாறு வருந்திப் புத்தியை துக்கத்தில் ஆழ்த்திப் பித்தனாக எப்படி ஆக முடியும்? இப்படிப்பட்டவரைப் பற்றித் தாங்கள், சேஷன், சாரதா, வேதங்களும் கூறியபடி அவர் மஹி

மையை நான் கேட்கிறேன்? அந்த ராமனா இவர்? ஹே ஸ்வாமி! என் மனம் மிகவும் கலக்கமுற்று சுற்றிக் கொண்டே இருக்கிறது. ஆகவே, உண்மையை விளக்கி என் மனப் ப்ரமையைப் போக்குங்கள்.

ஜெளம் அநீஹ் ப்யாபக் பிபு கோவூ|
கஹஹு புஜாயி நாத் மோஹி ஸோவூ|| *1121*
அக்ய ஜானி ரிஸ் உர் ஜனி தர்ஹூ|
ஜேஹி பிதி மோஹ் மிடை ஸோயி கர்ஹூ|| *1122*

விருப்பற்ற, உலகம் எங்கும் வ்யாபித்து இருக்கிற, எள்ளினுள் எண்ணை போன்று, ஸகலமும் அறிந்த, ஒரு வ்யக்தி வேறு எவரேனும் இருந்தால்; அவர்தான் ப்ரம்மமா? அதை எனக்குக் கூறுங்கள் என்னை ஒரு மூடம் என்று எண்ணி கோபிக்காமல் என் மன மோஹம் தீரும்படியாகச் செய்யுங்கள்.

மைம் பன் தீகி ராம் ப்ரபுதாயீ |
அதிபய் பிகல் ந தும்ஹஹி ஸுனாயீ|| *1123*
ததபி மலின் மன் போது ந ஆவா|
ஸோ பலு பலீ பாந்தி ஹம் பாவா|| *1124*

சென்ற பிறப்பில் நான் வனத்தில் ஸ்ரீரகுநாதருடைய ப்ரபாவத்தைக் கண்டேன். மிகுந்த பயம் காரணமாக நான் தங்களிடம் அதைப்பற்றி ப்ரஸ்தாபிக்கவில்லை. ஆயினும் என்; அறிவீன மனத்திற்கு அது தெரியவில்லை. அதன் காரணமாகப் பலவிதமான பலன்களையும் அனுபவித்துவிட்டேன். (அதாவது, ஸ்ரீராமனை பரீட்சிக்க நினைத்துச் சிவனாரின் சாபத்திற்கு உள்ளானேன்.)

அஜ்ஹூம் கசு ஸம்ஸஉ மன் மோரேம் |
கர்ஹு க்ருபா பினவஉம் கர் ஜோரேம் || *1125*
ப்ரபு தப் மோஹி பஹு பாந்தி ப்ரபோதா|
நாத் ஸோ ஸமுஜி கர்ஹு ஜனி க்ரோதா|| *1126*

ஹே ப்ரபுவே! நான் கைகூப்பி வணங்குகிறேன். இப்பவும் என் மனத்தில் ஸந்தேஹம் இருக்கிறது. என்னிடம் கோபிக்காமல் அருள் கூர்ந்து மீண்டும் என் மன ஸந்தேஹத்தைத் தீர்க்க வேண்டும். முன்பே ஒரு முறை

எனது ஸந்தேஹத்தை தீர்த்தீர்கள. ஆனாலும், ஸந்தே ஹம் தீரவில்லை; மீண்டும் நான் கேட்கிறேனே என்று எண்ணிக் கோபிக்காதீர்கள்.

தப் கர் அஸ் பிமோஹ் அப் நாஹீம் |
ராமகதா பர் ருசி மன் மாஹீம் || 1127
கஹஹு புனீத் ராம குண் காதா |
புஜகராஜ் பூஷன் ஸுர்நாதா || 1128

''ஹே தேவதைகளின் ஸ்வாமியே! ஸர்ப்பராஜ னைப் பூஷணமாகக் கொண்டவரே! முன்போல் எனக்கு அஜ்ஞானம் இல்லை. ஆகவே, இப்பொழுது ஸ்ரீராம கதையைக் கேட்க ஆவல் உண்டாகிறது. தாங்கள் அந்த ஸ்ரீராமனின் பவித்ர குண விசேஷமான கதையைக் கூறுங்கள். நான் கேட்கிறேன்.

பந்தவும் பத் தரி தர்னி ஸிரு
பினய் கர்உம் கர் ஜோரி |
பர்னஹு ரகுபர் பிஸத் ஜஸு
ச்ருதி ஸித்தாந்த நிசோரி || 1129

பூமியின் மீது தலையைப் படும்படி வைத்துத் ''தங் களுடைய சரணங்களில் வணங்கிக் கை கூப்பி, மீண் டும் வேண்டுகிறேன். பிரபு! ஸ்ரீராமச்சந்த்ரனின் ஒளி யுள்ள, கீர்த்தி நிறைந்த கதையை வேதங்களில் கூறி உள்ளபடியே சாறாகப் பிழிந்து என்னிடம் வர்ணனை செய்து கூற வேண்டும்.

ஜதபி ஜோஷிதா நஹிம் அதிகாரீ |
தாஸீ மன் க்ரம் பசன் தும்ஹாரீ|| 1130
கூடவு தத்வ ந ஸாது துராவ்ஹீம்|
ஆரத் அதிகாரீ ஜஹம் பாவ்ஹிம் || 1131

நான் ஒரு பெண்ணாக இருப்பதால் அதைக் கேட்க அதிகாரம் இல்லை. இருந்தாலும்; மனம், வாக்கு, செயலால் நான் தங்கள் பத்னி, தாஸி. மஹாத் மாக்கள் தங்கள் செயல்களை அன்பானவரிடமும், துன்பமுற்றவரிடமும் என்றும் மறைப்பதில்லை. அவர் களைக் கடைத்தேற்ற வேண்டி எல்லாமே கூறுபவர்கள் ஆவர்...

அதி ஆர்தி பூச்வும் ஸுரராயா|
ரகுபதி கதா கஹஹு கரி தாயா|| 1132
ப்ரதம ஸோ காரண் கஹஹு பிசாரீ|
நிர்குண ப்ரஹ்ம ஸகுன் பபு தாரி || 1133

ஹே தேவர்களின் ஸ்வாமியே! ரொம்பவும் வ்யாகுலமடைந்து கெஞ்சி நான் இவ்விதம் கேட்கிறேன். ஆகவே, ஸ்ரீராமச்சந்த்ரனின் கதையை க்ருபையுடன் கூறுங்கள். எப்படி நிர்க்குண ப்ரம்மமானவர், ஸகுண ரூபம் கொண்டு மானிட சரீரம் பெற்றார்? என்பதைப் பற்றிக் கூறுங்கள் முதலில்.

புனிப்ரபு கஹஹு ராம அவதாரா|
பால சரித் புனி கஹஹு உதாரா|| 1134
கஹஹு ஜதா ஜான்கீ பிபாஹீம்|
ராஜ் தஜா ஸோ தூஷன் காஹீம்|| 1135

ஹே ஸ்வாமி! ஸ்ரீராமனின் அவதாரத்தைப் பற்றி முதலில் கூறுங்கள். பிறகு பெருமைவாய்ந்த ராமனின் பால லீலைகளைப் பற்றிக் கூறுங்கள். பின்னர் ஜானகி விவாஹம், பின்னர் ஸ்ரீராமச்சந்த்ரன் ராஜ்யத்தைத் துறந்து ஏன் வனம் ஏகினார்? என்ன தோஷத்தினால் அவர் அப்படிச் செய்தார் என்பதையெல்லாம் விவரமாகக் கூறுங்கள்!

பன் பஸி கீன்ஹே சரித் அபாரா|
கஹஹு நாத் ஜிமி ராவன் மாரா|| 1136
ராஜ் பைடி கீன்ஹீம் பஹு லீலா|
ஸகல் கஹஹு சங்கர் ஸுகஸீலா|| 1137

ஹே நாதா! மேலும், அவர் ''வனத்தில் வஸித்துக் கொண்டு அனேக லீலைகளைச் செய்தார். அது ஏன்! பிறகு எப்படி ராவணனை வதம் செய்தார்? பின் மீண்டும் ராஜபதவியில் அமர்ந்து பலவிதமான லீலைகளைச் செய்தார். ஏன்? ஹே சிவபெருமானே! சுகத்தின் இருப்பிடமே! க்ருபை செய்து அவர் அரசஸிம்ஹாஸனத்தில் அமர்ந்தாரா என்று எல்லாவற்றையும் எனக்குக் கூற வேண்டும்.

பஹுரி கஹஹு கருணாயதன்
கீன்ஹ ஜோ அசரஜ் ராம்|

ப்ரஜா ஸஹித் ரகுபம்ஸமனி
கிமி கவ்னே நிஜ தாம்|| 1138

இதற்கும் மேலே ஹே க்ருபாநிதி! ஸ்ரீராமச்சந்த்ரன் செய்த பலவித அத்புத சரித்ரங்களைக் கூறுங்கள். அந்த ரகுகுல சிரோமணி தன்னுடைய ப்ரஜைகளுடன் கூடத் தன் சொந்த உலகம் ஏகிவிட்டார் என்பது புராணம், அது எப்படி? இதனுடைய வர்ணனையை எனக்குக் கூறுங்கள்! இந்த விதமான சரித்ரங்கள் எப்படி உண்டாயின?

புனி ப்ரபு கஹஹு ஸோ தத்வ பகானீ|
ஜேஹிம் பிக்யான் மகன் முனி க்யானீ|| 1139
பக்தி க்யான் பிக்யான் பிராகா|
புனி ஸப் பர்னஹு ஸஹித் பிபாகா|| 1140

ஹே ப்ரபு! எந்த அனுபூதி நிலையில் முனிவர்களும், ஜ்ஞானிகளும் எப்பொழுதும் மெய்ம்மறந்து இருக்கிறார்களோ? அந்த விதமான உண்மையை எனக்குக் கூறுங்கள். பக்தி, ஜ்ஞானம், விஜ்ஞானம், வைராக்யம் இவைகளில் மோட்ச ஸம்பந்தமான விளக்கங்களை எனக்கு விளக்கிக் கூறவேண்டும். இந்த ஜ்ஞானத்தைப் பற்றி என்னிடம் தனித்தனியாக உள்ளது உள்ளபடி வர்ணிக்க வேண்டும்.

ஔர்வு ராம ரஹஸ்ய அனேகா|
கஹஹு நாத் அதி பிமல் பிபேகா|| 1141
ஜோ ப்ரபு மைம் பூசா நஹிம் ஹோயீ|
ஸோவு தயால் ராகஹு ஜனி கோயீ|| 1142

இதைத்தவிர; இன்னும் ரஹஸ்யக் கதைகள் ஸ்ரீராமனின் சரித்ரத்தில் அடங்கி இருக்கின்றன. ஹே ஸ்வாமி! தங்கள் அறிவு மிகவும் நிர்மலமானது. ஹேப்ரபோ! இக்கதைகளில் மிகவும் ச்லாக்யமானதும், உஜ்வல்யமானதும், அறிவைக் கொடுக்கக் கூடியதும், சில ஸம்பவங்களை என்னால் கேட்க முடியாததுமான கதைகளையும் தனித் தனியாகத் தாங்கள் வர்ணித்துக் கூற வேண்டும். தயவு செய்து ஒன்றையும் மறைக்காமல் என்னிடம் கூறவும்.

தும்ஹ த்ரிபுவன் குர் பேத் பகானா|
ஆன் ஜீவ பாம்வர் கா ஜானா|| 1143
ப்ரஸ்ன உமா கை ஸஹஜ் ஸுஹாயீ|
சல் பிஹீன் ஸுனி சிவ மன் பாயீ|| 1144

தாங்கள் மூன்று உலகிற்கும் குரு என்று வேதங்கள் கூறுகின்றன. மூட ஜீவராசிகள் இந்தத் தத்துவத்தை, ரஹஸ்யத்தை எப்படி அறிந்திருக்கும்? தங்கள் பெருமை மூடர்களுக்குஎப்படிப் புரியும்? இயற்கையிலேயே கள் ளங்கபடமற்ற ப்ரச்னைகளைக் கேட்கும் பார்வதியின் அழகான வார்த்தைகளைக் கேட்ட சிவனார் மனத் திற்கு மிகவும் நல்லதாகப்பட்டது.

ஹர் ஹியம் ராமசரித் ஸப் ஆயே|
ப்ரேம புலக் லோசன் ஜல் சாயே|| 1145
ஸ்ரீரகுநாத் ரூப் உர் ஆவா|
பரமானந்த அமித் ஸுக் பாவா|| 1146

சிவனாரின் மனத்தில் ஸ்ரீராமச்சந்த்ரனின் கதைகள் எல்லாம் தெளிவாகத் தெரிந்தன. அதிக ப்ரேமையின் காரணமாக அவர் உடல் புளங்காங்கிதம் அடைந்தது; கண்களில் கண்ணீர் துளிர்த்தது. ஸ்ரீராமச்சந்த்ரனின் உருவம் அவர் மனத்தில் அமைந்ததால்; அவர் பர மானந்த ஸுகமடைந்தார்.

மக்ன த்யான ரஸ் தண்ட ஜுக்
புனி மன் பாஹேர் கீன்ஹ|
ரகுபதி சரித் மஹேஸ் தப் ஹர்ஷித்
பர்னை லீன்ஹ|| 1147

இரண்டு நொடிகள் த்யான மகிழ்ச்சியில் மூழ்கி ஈடுபட்டார் சிவனார். தன் மனத்தை மீண்டும் நினை வில் கொண்டு வந்து நிறுத்தினார். பிறகு ஸந்தோஷ மடைந்து ஸ்ரீராமச்சந்த்ரனின் சரித்ர வர்ணனைகளில் ஈடுபடலானார்.

ஜுடேவு ஸத்ய ஜாஹி பினு ஜானேம்|
ஜிமி புஜங்க பினு ரஜு பஹிசானேம்|| 1148
ஜேஹி ஜானேம் ஜக் ஜாயி ஹேராயீ |
ஜாகேம் ஜதா ஸப்ன ப்ரம் ஜாயீ|| 1149

அஸத்துகளுக்கு இந்த உலகமே உண்மையாகத் தோன்றுகிறது. ஆனால், இது எல்லாமே பொய்யாகும் கனவுலகம் என்பதை அவர்கள் அறியவில்லை. அடையாளம் தெரியாமல் கயிற்றைப் பாம்பு என்று நினைக்கிறார்கள். அவரைத் தெரிந்து கொண்டால்; இந்த ஸத்யமல்லாத கனவு நிலை மாறுகிறது. அதை அறியக் கூட யோக்யதையற்ற ஜீவராசிகளும் உண்டு. அவரை அறிந்து கொண்டால் இந்த உலகத்தையே த்யாகம் செய்யக்கூடிய நிலை ஏற்படுமோ, அவரை இன்று இந்தப் பொய் உலகம் அறியவில்லை.

பந்தவும் பாலரூப் ஸோயி ராமூ ।
ஸப் ஸிதி ஸுலப் ஜபத் ஜிஸ்ஂ நாமூ ॥ 1150.
மங்கள பவன் அமங்கல் ஹாரீ ।
த்ரவவு ஸோ தஸரத் அஜிர் பிஹாரீ ॥ 1151

பாலவடிவம் அமைந்த அந்த ராமச்சந்த்ரனுக்கு நான் நமஸ்காரம் செய்கிறேன். அவருடைய நாமத்தை ஜபம் செய்த மாத்திரத்தில் எல்லாவிதமான கார்யங்களும் சுலபமாக நடைபெறுகின்றன. அமங்கலத்தை விரட்டிவிட்டு மங்களகரமான கார்யங்களை உண்டாக்குகிறவன் ஸ்ரீராமன், தசரதனின் கூடத்தில் விளையாடும் அத்தகைய குழந்தை ஸ்ரீராமன் என் மீது க்ருபை செய்யட்டும்.

கரி ப்ரனாம் ராம்ஹி த்ரிபுராரீ ।
ஹர்ஷி ஸுதா ஸம கிரா உசாரீ ॥ 1152
தன்ய தன்ய கிரிராஜகுமாரீ ।
தும்ஹ ஸமான் நஹிம் கோவு உபகாரீ ॥ 1153

இவ்விதமாகச் சிவனார், அதாவது த்ரிபுராரி, ஸ்ரீராமச்சந்த்ரனை வணங்கிவிட்டு, அம்ருதம் போன்ற இனிய வார்த்தைகளால் பார்வதியை நோக்கி; ஹே! கிரிராஜனின் குமாரி! பார்வதி! நீ கொடுத்து வைத்தவள்; புண்யசாலி; உனக்கு மங்களமுண்டாகட்டும். உன் போல் எனக்கு உபகாரி யார் இருக்கிறார்கள்? நான் மிகவும் மகிழ்ந்தேன்.

பூஞ்சேஹு ரகுபதி கதா ப்ரஸங்கா ।
ஸகல் லோக் ஜக பாவனி கங்கா ॥ 1154

தும்ஹ ரகுபீர் சரண் அனுராகீ |
கீன்ஹிஹு ப்ரஸ்ன ஜகத் ஹித் லாகீ || 1155

ஸ்ரீராமச்சந்த்ரனின் கதையானது ஸகல லோகங்களின் பாவங்களையும், கங்கையைப் போல் போக்கித் தூய்மையாக்கக் கூடியது; பரிசுத்தம் செய்யக்கூடியது. நீ ராமனுடைய திருவடிகளில் ப்ரேமை கொண்டவள். ஜகத்தின் நன்மைக்காக வேண்டியே இப்படிப்பட்ட கதையை நீ கேட்டாய் என்பதை நான் அறிவேன்.

ராம க்ருபா தேம் பார்பதி
ஸப்னேஹு ம் தவ மன் மாஹிம் |
ஸோக் மோஹ் ஸந்தேஹ் ப்ரம்
மம பிசார் கசு நாஹிம் || 1156

ஹே பார்வதி! நீ ஸ்ரீ ராமச்சந்த்ரனின் க்ருபையால் உன் மனத்தில் சிறிதளவுகூடச் சோகம், மோஹம், ஸந்தேஹம், ப்ரமை என்பதற்கே இடமில்லை. தன் கனவிலும் கூட உன் மனத்தில் கெட்ட எண்ணமோ, ப்ரமையோ இல்லை என்பதை நான் தெரிந்து கொண்டேன்.

ததபி அசங்கா கீன்ஹிஹு ஸோயீ |
கஹத் ஸுனத் ஸப் கர் ஹித் ஹோயீ || 1157
ஜின்ஹ ஹரிகதா ஸுனீ நஹிம் கானா |
ச்ரவண் ரந்த்ர அஹிபவன் ஸமானா || 1158

ஹே பார்வதி! நீ ஸங்கடமில்லாதவள். கொஞ்சமும் ஸந்தேஹ மில்லாத விஷயத்தில் ஸந்தேஹப்படுகிறாய் அல்லவா! இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கூறினாலும், கேட்டாலும் இதத்தை எல்லோருக்கும் அளிக்கும்; எவரொருவர் காதுகளினால் பகவானின் கதையை கேட்கவில்லையோ; அவர்களுடைய காதுகள் பாம்பு களின் இருப்பிடம் ஆன புற்று போன்று கொடுமையானது.

நயனன்ஹி ஸந்த் தரஸ் நஹிம் தேகா |
லோசன் மோர்பங்க் கர் லேகா || 1159
தே ஸிர் கடு தும்பரி ஸமதூலா |
ஜே ந நமத் ஹரிகுர் பத் மூலா || 1160

எவருடைய கண்கள், ஸாதுக்களான முனிவர் களைத் தரிசனம் செய்யவில்லையோ; அவர்களது கண் கள் மயில் இறகு போல் நகல் கண்களாகும். எவர் தலை பகவான், குரு இவர்களது பாதங்களில் வணங் கவில்லையோ; அவர்களுடைய தலை கசப்பான எட்டி மரம் போன்றது.

ஜின்ஹ ஹரி பக்தி ஹ்ருதயம் நஹிம் ஆனீ |
ஜீவத் ஸவ் ஸமான் தேயி ப்ரானீ || 1161
ஜோ நஹிம் கர்யி ராம் குண் கானா |
ஜீஹ் ஸோ தாதுர் ஜீஹ் ஸமானா || 1162

எவர் ஒருவர் மனத்தினால் ஈச்வரனை த்யானிக்க வில்லையோ; அதாவது; பக்தியுடன் நினைக்கவில் லையோ; அவர்கள் நடமாடும் சவத்திற்கு ஸமானம். எவர் நாக்கு, ஸ்ரீராமனுடைய குணங்களைப் பாட வில்லையோ; அவர்களுடைய நாக்கு, தவளையின் நாக் குப் போன்றது. (தவளையின் நாக்கு தடித்து இருப்ப தால் அது பேச்சு வராமல் தடுக்கும் காரணமாகும்)

குலிஸ் கடோர் நிடுர் ஸோயி சாதீ |
ஸுனி ஹரிசரித் ந ஜோ ஹர்ஷாதீ || 1163
கிரிஜா ஸுனஹு ராம் கை லீலா |
ஸுர் ஹித் தனுஜ் பிமோஹன் ஸீலா || 1164

எவர்களின் ஹிருதயம் பகவானின் சரித்ரத்தை, கதையைக் கேட்டு மகிழவில்லையோ; அவர்கள் மனம் வஜ்ரத்தைப் போன்று கெட்டியானது, கொடூரமானது. ஆகவே, ''ஹே பார்வதி! கேள்! அந்த ஸ்ரீராமனின் லீலையைக் கேள். இது எல்லாத் தேவதைகளுக்கும் நன்மை செய்வது; துஷ்டர்களின் ஹிருதயத்தில் தாபத்தை உண்டாக்குவது; அரக்கர்களை மோஹிக்கும்படிச் செய் வது.

ராமகதா ஸுர்தேனு ஸம ஸேவத்
ஸப் ஸுக் தானி |
ஸத்ஸமாஜ் ஸுரலோக் ஸப் கோ
ந ஸுனை அஸ் ஜானி || 1165

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் கதை காமதேனுவைப் போன் றது. இதற்கு ஸேவை செய்தால்; ஸகல விதமான

ஸுகங்களும் கொடுக்கும். பின்னும் ஸாதுக்களின் ஸபை தேவர்களின் உலகம் போன்றது. இப்படியாக அறிந்தும், தேவ லோகத்தில் வாழும் இந்தக் காமதேனுவைப் போன்ற இக்கதையை யார்தான் கேட்க மாட்டார்கள்? அதாவது; எல்லோருமே கேட்பார்களே!''

ராமகதா ஸுந்தர் கர் தாரீ |
ஸம்ஸய் பிஹக் உடாவ்நிஹாரீ || 1166
ராமகதா கலி பிடப் குடாரீ |
ஸாதர் ஸுனு கிரிராஜ் குமாரீ || 1167

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் கதை கைகளால் தட்டப்படும் அழகியதாளம். அது ஸந்தேஹமாகிற பறவைகளைப் பறந்து போகச் செய்கிறது. மேலும், ராமகதை கலியுகம் என்கிற மரத்தை வெட்டிவீழ்த்த வந்த கோடரி போன்றது. ஆகவே, ஹே மலையரசனின் மகளே! நீ இந்தக் கதையை ஆதரவோடு கேட்பாயாக.

ராம் நாம் குன் சரித் ஸுஹாயே |
ஜன்ம கர்ம அகணித் ச்ருதிகாயே || 1168
ஜதா அனந்த் ராம் பக்வானா |
ததா கதா கீர்த்தி குன் நானா || 1169

ஸ்ரீராமச்சந்த்ரனின் திருநாமம், குணம், சரித்ரம், பிறப்பு, செயல், இவைகள் எல்லாவற்றையும் கணக்கில்லாமல் வேத சாஸ்த்ரங்களில் பாடப்பட்டு இருக்கின்றன. பகவான் ஸ்ரீ ராமன் முடிவற்றவன். அவர் கதையும் அதேபோல் முடிவற்றது; எல்லையற்றது. அவருடைய கீர்த்தியும், குணமும் கூட ஏராளமானவையே.

ததபி ஜதா ச்ருத் ஜஸி மதி மோரீ |
கஹிஹஉம் தேகி ப்ரீதி அதி தோரீ || 1170
உமா ப்ரச்ன தவ ஸஹஜ் ஸுஹாயீ |
ஸுகத் ஸந்த்ஸம்மத் மோஹி பாயீ || 1171

ஆகவே, உனக்கு அதிக ஆவல் இருப்பதைக் கண்டு, ''வேத சாஸ்த்ரங்களில் எவ்விதம் எழுதப்பட்டு இருக்கிறதோ; அதேபோல்தான், நான் கேட்டபடியே, என் அறிவுக்கு ஏற்றவாறு, அனுஸரித்துக் கூறுகிறேன். என்

அன்பே! உன்னுடைய இந்தக் கேள்வி மிகவும் இயல்பானதே; அழகியதே. ஸுகத்தைக் கொடுப்பது; உயர்வானது; எல்லோரும் ஒப்புக் கொள்ளக்கூடியது; இது எனக்கு மிகவும் பிடித்து இருக்கிறது.''

ஏக் பாத் நஹிம் மோஹி ஸோஹானீ |
ஜதபி மோஹ் பஸ் கஹேஹு பவானீ || 1172
தும்ஹ ஜோ கஹா ராம் கோவு ஆனா |
ஜேஹி ச்ருதி காவ் தர்ஹிம் முனி த்யானா ||1173

ஆனால், என் ப்ரியே பார்வதி! நீ கேட்ட கேள்விகளில் ஒன்றுமட்டும் எனக்குப் பிடிக்கவில்லை. வேதங்களிலும், சாஸ்த்ரங்களிலும், முனிவர்களாலும் வர்ணிக்கப்பட்ட ஸ்ரீ ராமனா இவர்? என்று நீ கேட்டாயே! அது மட்டும் என் மனத்திற்கு வேதனையைக் கொடுத்தது. எப்படியும் நீ மோஹ வசத்தால்தான் அவ்வாறு கூறினாய் என்று கருதுகிறேன்.

கஹஹிம் ஸுனஹிம் அஸ் அதம் நர்
க்ரஸே ஜே மோஹ் பிஸாச் |
பாஷண்டீ ஹரி பத் பிமுக்
ஜானஹிம் ஜூட் ந ஸாச் || **1174**

என் அன்பே பவானி! அஜ்ஞானவசத்தினால் மோஹப் பிசாசின் பிடியில் அகப்பட்டுத் தவிக்கின்ற வர்களும், பாஷண்டிகளும், பகவானுடைய திருவடிகளில் பாராமுகமாக இருப்பவர்களும், உண்மை எது, பொய் எது என்று கூட அறியாதவர்களும் ஆன நீச மட்டரக மனிதர்கள்தான் இவ்வாறு சொல்வார்கள் - கேட்பார்கள்.

பகவானைப் பற்றி உண்மையில் ஒன்றும் தெரியாது.

அக்ய அகோபித் அந்த அபாகீ |
காயீ பிஷய முகுர் மன் லாகீ || **1175**
லம்பட் கபட குடில் பிஸேஷீ |
ஸப்னேஹும் ஸந்த்ஸபா நஹிம் தேகீ || 1176

எவர் ஒருவர் அஜ்ஞானியோ, சாஸ்த்ரங்களின் விவரமே அறியாத முட்டாளோ, குருடனோ, அதிர்ஷ்

டமற்றவனோ, எவனுக்கு மனமாகிய கண்ணாடியில் சபலம் என்றும், மோஹம் என்றும் சொல்லக்கூடிய அழுக்கு பிடித்திருக்கிறதோ; அவர்கள் காமிகள், கபட எண்ணமுடையவர்கள், மிகவும் துர்ப்பலமான கெட்ட குணமுடையவர்கள், இம்மாதிரியான மூடர்கள் ஸ்வப்னத்திலும் கூட மஹாத்மாக்களின் ஸபையைக் காண முடியாது.

கஹஹிம் தே பேத் அஸம்மத் பானீ |
ஜின்ஹ கேம் ஸுஜ் லாபு நஹிம் ஹானீ || 1177
முகுர் மலின் அரு நயன் பிஹீனா |
ராம ரூப் தேக்ஹிம் கிமி தீனா || 1178

அவர்கள் பாஷண்டிகள், பாபிகள் வேதத்திற்கு எதிராகப் பேசுபவர்கள், (அதாவது, மூர்த்தி பூஜை செய்யாதே என்றும், அவதாரம் என்பது ஒன்றும் இல்லை என்றும் சொல்லும் பாபிகளை நம்பாதே. அவர்களுக்குத் தங்களுடைய லாபம்-நஷ்டமே தெரியாது.) அவர்களுடைய மனம் என்னும் கண்ணாடி என்றும் அழுக்காகவே இருக்கிறது. அவர்கள் சாஸ்த்ர ரூபமான கண்கள் இல்லாதவர்கள். அவர்களுக்கு ராம ரூபத்தை எவ்விதம் பார்க்க முடியும்?

ஜின்ஹ கேம் அகுன் ந ஸகுன் பிபேகா |
ஜல்பஹிம் கல்பித் பசன் அனேகா || 1179
ஹரிமாயா பஸ் ஜகத் ப்ரமாஹீம் |
தின்ஹஹி கஹத் கசு அகடித் நாஹீம் || 1180

எவர்களுக்கு ஸத்யம், அஸத்யம், ஸகுணம், நிர்குணம் இவைப் பற்றிய அறிவு இல்லையோ; அவர்கள் தம்தம் கற்பனையில் வாயில்வந்தபடிப் பலவிதமாகக் கூறுவார்கள். பரமாத்மாவின் மாயையின் வசமாக இருப்பதால், உலகில் அவர்கள் பிறப்பு, இறப்பு என்னும் சக்கரத்தில் சுழல்கிறார்கள். அவர்களுக்குக் கூறுவது சரியல்ல.

பாதுல் பூத் பிபஸ் மத்வாரே |
தே நஹிம் போல்ஹிம் பசன் பிசாரே || 1181
ஜின்ஹ க்ருத் மஹாமோஹ் மத் பானா |
தின்ஹ கர் கஹா கரிய நஹிம் கானா || 1182

வாதரோகமுள்ளவர்களும், வாதஜ்வரம் உள்ளவர் களும், சித்தப்ரமை பிடித்தவர்களும், புத்தி ஹீனர் களும், பூதபிசாசு வசத்தில் சிக்கியவர்களும், யோசனை செய்து சரியான அர்த்தமுள்ள வார்த்தைகளைப் பேச மாட்டார்கள். பெரும்மோஹமாகிற கள்ளைக் குடித்த வர்கள். அப்படி மதம் பிடித்திருக்கும் அவர்களின் பேச்சை நாம் காது கொடுத்தும் கேட்டுக் கொள்ளக் கூடாது.

அஸ் நிஜ ஹ்ருதயம் பிசாரி
தஜு ஸம்ஸய் பஜு ராம் பத் |
ஸுனு கிரிராஜ் குமாரி ப்ரம
தம் ரபி கர் பசன் மம || 1183

ஆகவே, உன் மனத்தில் நன்கு ஆராய்ந்து பார்த்து அங்கு உள்ள எல்லா விகாரங்களையும், ஸந்தேஹங் களையும் விட்டுவிடு. ஸ்ரீராமச்சந்த்ரனின் சரண கம லங்களை வழிபடு. ஹே பார்வதி! உன்னுடைய ப்ரமை என்னும் அந்தகாரத்தை ஒழிக்க வந்த ஸூர்ய கிரணம் போல் ஒளியுள்ள என் வார்த்தைகளைக் கேட்பாயாக!

ஸகுன்ஹி அகுன்ஹி நஹிம் கசு பேதா | 1184
காவ்ஹிம் முனி புராண் புத பேதா ||
அகுன் அரூப் அலக் அஜ் ஜோயீ |
பக்த ப்ரேம் பஸ் ஸகுன் ஸோ ஹோயீ || 1185

ஸகுணம்-நிர்க்குணம் பற்றிய நிதர்சன வார்த்தை களில் ஒன்றும் வித்யாசமில்லை என்று முனிவர்கள், புராணங்கள், பண்டிதர்கள், வேதங்கள் யாவும் கூறு வதைக்காணலாம். எந்த ஸம்ஸாரியானவன் நிர்க் குணனாகவும், உருவம் இல்லாதவனாகவும், வெளிப் படை இல்லாதவனாகவும், பிறப்பு இல்லாதவனாக வும், ஈச்வரனாகக் கருதப்படுகிறவனாகவும் இருக்கி றானோ; அவனையே ப்ரேமை நிறைந்த பக்தர்களின் ஸகுண ரூபம் என்கிறார்கள்.

ஜோ குன ரஹித் ஸகுன் ஸோயி கைஸேம் |
ஜலு ஹிம உபல் பிலக் நஹிம் ஜைஸேம் || 1186
ஜாஸு நாம் ப்ரம் திமிர பதங்கா |
தேஹி கிமி கஹிய பிமோஹ் ப்ரஸங்கா || 1187

நிர்குணமுள்ளவன்-ஸகுணனாக எப்படி ஆக முடியும்? ஜலம்-பனிக்கட்டி இவை இரண்டிலும் வித்தியாஸம் இல்லை இரண்டுமே ஜலந்தான். அதேபோல் நிர்குணமும்-ஸகுணமும் ஒன்றே.அதே போல் ஸகுணத்திலிருந்து பிரிந்த நிர்குணம் இல்லை. ஆகவே, இரண்டுமே உண்மை ஸ்வரூபம் எனலாம். எவருடைய திரு நாமம் ப்ரமை என்னும் அந்தகாரத்தை ஒழிக்க வல்ல, அந்த ஸூர்யனுக்கு எதிரில் மோஹம் என்னும் வார்த்தைக்கு இடமே இல்லை.

ராம ஸச்சிதானந்த தினேஸா |
நஹிம் தஹம் மோஹ் நிஸா லவலேஸா || 1188
ஸஹஜ் ப்ரகாஸரூப் பக்வானா |
நஹிம் தஹம் புனி பிக்யான் பிஹானா || 1189

ஸ்ரீராமச்சந்த்ரன் ஸச்சிதானந்தரூபமான ஸூர்யன். அங்கு மோஹ ரூபி என்னும் ராத்ரிக்கு இடமே துளியும் இல்லை. பகவான் ஸஹஜமாகவே ஒளிமயமானவன், அவர் எதிரில் மோஹ ரூபி இரவும் இல்லை. விஜ்ஞான ரூபமான விடியற்காலையும் இல்லை. அதாவது; எப்போதும் அவர் ஒளி வீசிக் கொண்டு இருப்பதால் அவர் எதிரில் இரவு-பகல்-காலை என்ற காலங்களே இல்லை. பகவான் ஸ்ரீராமன் எப்போதுமே ஜ்ஞானஸ்வரூபன்.

ஹர்ஷ பிஷாத் க்யான் அக்யானா |
ஜீவ தர்ம அஹமிதி அபிமானா || 1190
ராம் ப்ரஹ்ம ப்யாபக் ஜக் ஜானா |
பரமானந்த பரேஸ் புரானா || 1191

ஸந்தோஷம், துக்கம், ஜ்ஞானம், அஜ்ஞானம், அஹங்காரம், அபிமானம், இவையெல்லாம் பிறப்பெடுத்தவர்களின் தர்மம் எனப்படும். ஈச்வரனான ஸ்ரீராமச்சந்த்ரனோ எங்கும், எல்லாமுமாக நிறைந்த பரப்ரஹ்மம். அவர் பரமானந்த ஸ்வரூபமானவர்; பராத்பரன்; ப்ரபு; அனாதிகாலந் தொட்டு விளங்கும் புராண புருஷர். இதை உலகமே அறியும்.

புருஷ ப்ரஸித்த ப்ரகாஸ் நிதி
ப்ரகட் பராவர் நாத் |

ரகுகுலமணி மம ஸ்வாமி ஸோயி
கஹி சிவம் நாயவு மாத் || **1192**

ப்ரஸித்தமான புகழ் பெற்ற; புராண புருஷர்; ஒளிக்களஞ்சியம்; எல்லாவடிவங்களிலும் வெளிப்படு பவர்; ஜீவனானவர்; மாயையானவர்; சேதன அசே தனங்களின் நாதனானவர்; ரகுகுலத்தின் மணிபோல் இருப்பவர்;. இவர்தான் நமது நாதன் ஸ்ரீராமன் என்று கூறிய சிவனார்; தலை வணங்கி ஸ்ரீராமனை த்யானித் தார்.

நிஜ ப்ரம் நஹிம் ஸமுஜஹி அக்யானீ |
ப்ரபு பர் மோஹ் தர்ஹிம் ஜட் ப்ரானீ || 1193
ஜதா ககன் கன் படல் நிஹாரீ |
ஜாம்பேஉ பானு கஹஹிம் குபிசாரீ || 1194

அஜ்ஞானியான மூட ஜனங்கள் தங்களுடைய ப்ர மையை அறியாமல் பகவானின் மீது குறை கூறுகிறார் கள். எப்படி ஆகாயத்தில் மண்டலமிட்ட மேகங்களைக் கண்டு, மேகங்கள் ஸூர்யனை மறைத்துவிட்டது என் கிறார்களோ அதே மாதிரிதான். ஆனால், ஸூர்யன் மறையவில்லை; என்றும் எப்போதும் ஸ்த்திரமாக இருக் கிறார். (அதே போல் ஸ்ரீராமன் என்னும் ஸூர்யன் என்றும் ப்ரகாசமானவர். அவர் எதிரில் இருட்டு மேகம் ஒன்றும் செய்ய முடியாது.)

சிதவ் ஜோ லோசன் அங்குலி லாயேம் |
ப்ரகட் ஜுகல் ஸஸி தேஹி கே பாயேம் ||1195
உமா ராம் பிஷயிக் அஸ் மோஹா |
நப தம் தூம் தூரி ஜிமி ஸோஹா || 1196

கண்களில் விரலைவிட்டுக் கொண்டு பார்ப்பவர் களுக்கு இரண்டு சந்த்ரன்கள் தென்படும். ஹே உமா! ஸ்ரீராமச்சந்த்ரனின் விஷயத்தில் இதேமாதிரி மயக்கத் தால் கற்பனை செய்து இருக்கிறதே அது வானில் இருளும், புகையும், தூசியும் மூடிக்கிடந்தால் எப்படி யிருக்குமோ; அப்படித்தான். உண்மையில் ஆகாசம் நிர்மலமானது; ஏதும் சூழப்படாதது; அதை அழுக் காக்கவும் முடியாது; தொடவும் முடியாது. அதே

போலப் பகவான் ஸ்ரீராமன் நித்யமானவர்; நிர்மல மானவர்; எதாலும் தீண்டமுடியாதவர்.

பிஷய கரன் ஸுர் ஜீவ் ஸமேதா |
ஸகல் ஏக் தேம் ஏக் ஸசேதா || 1197
ஸப் கர் பரம ப்ரகாஸக் ஜோயீ |
ராம அனாதி அவத்பதி ஸோயீ || 1198

விஷய இச்சைகள், இந்த்ரியங்கள்'' இந்த்ரியங்களுக்கு தேவதைகள், ஜீவன்கள் ஒன்றை ஒன்று நாடி உதவி யுடன் கூடி ஒரு சேதனனாக (உயிருள்ளதாக) இருக் கின்றன. (எப்படி விளக்ஙு விஷயம் என்றும், கண் களை இந்த்ரியங்கள் என்றும் கூறுகிறோம். அதே போல்; கண்களை நாடி விளக்கு சசேதமாக இருக் கிறது. கண்களோ ஸூர்யனை நாடி சசேதமாக இருக் கிறது. ஸூர்யனோ ஜீவன்களை நாடி சசேதமாக (உணர்வுடன்) இருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ப்ரகாசத்தை உண்டாக்குபவர் ப்ரஹ்மமான ராமன், அயோத்யாபுரியின் பதியானவர். அவருக்கு ஆதி, அந்தம் இல்லை எனலாம், அவர் அனாதி.

ஜகத் ப்ரகாஸ்ய ப்ரகாஸக் ராமூ |
மாயாதீஸ் க்யான் குன் தாமூ || 1199
ஜாஸு ஸத்யதா தேம் ஜட் மாயா |
பாஸ் ஸத்ய இவ மோஹ் ஸஹாயா || 1200

இந்த உலகம் ப்ரகாசம் உண்டாக்கிக் கொள்ளக் கூடியது. அந்த ப்ரகாசத்தைக் கொடுப்பவர் ஸ்ரீராமன் ஆவார். அவர்தான் மாயாபதி. ஜ்ஞானம் குணத்தின் இருப்பிடம். அவர் இருப்பதால்தான் மோஹத்தின் உதவிபெற்று ஜடமான அந்த மாயை உண்மை போல் விளங்குகிறது.

ரஜத் ஸீப் மஹூம் பாஸ் ஜிமி
ஜதா பானு கர பாரி |
ஜதபி ம்ருஷா திஹூம் கால் ஸோயி
ப்ரம ந ஸகயி கோவு டாரி || 1201

உண்மையில் கபடமான போலி வஸ்துக்கள் எப்படி மறைந்து போகின்றன என்பதுவே நம் ஸந்தேஹம்.

உதாரணமாகச் சிப்பி எப்படி வெள்ளிபோல் ப்ரகாசிக் கிறதோ; ஸூர்ய கிரணங்கள் எப்படித் தண்ணீர்போல் பிரதிபலிக்கிறதோ; அதுபோல் முக்காலங்களிலும் எல் லாமே பொய்தான் மித்யாரூபம் பெற்றிருந்தாலும் நாம் உண்மையாகவே நினைக்கிறோம். இந்த உண்மை நிலையை நாம் யாரும் மாற்ற முடியாது. அதை எண்ணி நாம் மெய்ம்மறந்து போகிறோம்.

ஏஹி பிதி ஜக் ஹரி ஆச்ரித ரஹ்யீ |
ஜதபி அஸத்ய தேத் துக் அஹ்யீ || 1202
ஜௌம் ஸப்னேம் சிர் காடை கோயீ |
பினு ஜாகேம் ந தூரி துக் ஹோயீ || 1203

இவ்விதமே இந்த உலகமானது பரமேச்வரனின் ஆதீனத்தில் இருக்கிறது. எப்படியாயினும் பலவிதமான துன்பங்களும், அஸத்யங்களும் இந்த உலகில் வ்யா பித்திருப்பது உண்மையே. இந்த ஜகமே பொய்யானது என்று இருக்கும்பொழுது, அதனால் கொடுக்கப்பட்ட இந்தத் துக்கம் எப்படி உண்மையாகும்? அதாவது; எல்லாமே பொய்தான் என்பது பொருள். யாராவது தலையைக் கனவில் வெட்டி விடுவார்களேயானால் நீ விழிப்படையாதிருந்தால்தானே அந்தத் தலைவெட் டின துக்கம், வலி உண்டாகும். (அது போல் எல்லாமே உலகத்தில் பொய் என்பதை நிரூபிக்க நீ எப்போதும் விழிப்பு நிலை பெற வேண்டும்; எல்லாமே இங்கு உண்மையாகத்தான் தெரிகிறது.)

ஜாஸு க்ருபாம் அஸ் ப்ரம மிடி ஜாயீ |
கிரிஜா ஸோயி க்ருபால் ரகுராயீ || 1204
ஆதி அந்த கோவு ஜாஸு ந பாவா |
மதி அனுமானி நிகம அஸ் காவா || 1205

ஹே பார்வதி! கிரிஜாகுமாரி! எவருடைய க்ருபை யால் ப்ரமை அழிந்து போகிறதோ; அவர்தான் தயாலு வான ஸ்ரீராமச்சந்த்ரன். அவருக்கு ஆதியும், அந்தமும் இல்லை என்பதை யாவரும் அறிந்ததுதான். புத்திக்கு அனுஸாரமாக வேதங்கள் அனுமானித்துப் பாடியிருக் கின்றன. (ஸ்ரீராமனின் கதையைப் பற்றி எப்படி நெருப்பில் புகையைக் கண்டதும் அங்கு, கட்டாயம் தீ இருக்கிறது என்பதை அறிகிறோர்மா; அதே மாதிரி

கார்யத்தைக் கண்டதும் காரணங்களின் அனுபவம் உண்டாகிறது. எப்படி என்றால்; இவரின் சரித்ரத்தை யும், செய்கையையும் கண்ட நாம் இவரைப் பரம புரு ஷர் என்றும்; எல்லா உலகையும் இயக்குபவர் இவரே தான் என்பதையும் அறியலாம்.)

பினு பத் சலயி ஸுனயி பினு கானா |
கர் பினு கர்ம கர்யி பிதி நாநா || 1206
ஆனன் ரஹித் ஸகல் ரஸ் போகீ |
பினு பானீ பக்தா பட் ஜோகீ || 1207

அந்தப்ரஹ்மம் கால்கள் இல்லாமல் நடப்பது, காதுகள் இன்றிக் கேட்பது, கைகள் இல்லாமலேயே பலவித வேலைகளைச் செய்வது, வாய், நாக்கு இல்லா மலேயே பலவித ரஸங்களைச் சுவைகளை அனுபவிப் பது, பேச்சுக் குரல் இல்லாமல் தக்க முறையில் நிறை யப் பேசுவது. (இவை ஸாத்யமா; ஆகவே, இவற்றை இயங்க வைப்பவரும் ஒருவர் உண்டல்லா?)

தன பினு பரஸ் நயன் பினு தேகா |
க்ரஹ்யி க்ரான் பினு பாஸ் அஸேஷா || 1208
அஸி ஸப் பாந்தி அலௌகிக் கர்னீ |
மஹிமா ஜாஸு ஜாயி நஹிம் பர்னீ || 1209

அது சரீரம் இன்றி எல்லோரையும், எதையும் தொடுவது, கண்கள் இல்லாமல் பார்ப்பது, மூக்கு இல்லாமலேயே எல்லாவற்றையும் நுகரும் சக்தி கொண் டது, இந்தப்ரம்மம் பற்றி ச்ருதியில் கூடக் கூறப்பட் டுள்ளது. (அதாவது; இம்மாதிரிப் பலவிதமாக இயங் கப்பட்டு வரும் இந்த இயற்கைச் சக்திக்கு மூல கார ணம் அந்தப் புராண புருஷர்தான்; அதைப்பற்றி நம் மால் வர்ணிக்க முடியாது. இத்தகைய மஹிமை வாய்ந் தவர் அவர். ''அபாணி பாதோ ஜவனோக்ருஹீத: பச்யத்ய சக்ஷு: ஸச்ருணோத்யகர்ண: | **(ச்ருதி)**

ஜேஹி இமி காவ்ஹிம் பேத் புத்
ஜாஹி தர்ஹிம் முனி த்யான் |
ஸோயி தசரத் ஸுத பக்த ஹித்
கோஸல்பதி பக்வான் || 1210

வேதங்களாலும், பண்டிதர்களாலும், பாடப்பட்டவர்; முனிவர்களால் த்யானம் செய்யப்பட்டவர். அதே புருஷர்தான் பக்தர்களின் துயர் தீர்க்கத் தசரதனின் புத்திரனாகவும், அயோத்யை தேசத்தின் ராஜாவாகவும் அவதரித்த பகவான் ஸ்ரீராமச்சந்த்ரன் ஆவார்.

காஸீம் மர்த் ஜந்து அவலோகீ ।
ஜாஸு நாம் பல் கர்வும் பிஸோகீ ॥ 1211
ஸோயி ப்ரபு மோர் சராசர் ஸ்வாமீ ।
ரகுபர் ஸப் உர் அந்தர்ஜாமீ ॥ 1212

ஹே பார்வதி! இந்த ஸ்ரீராமனின் பலத்தினால் காசியில் இறந்த ப்ராணியைக் கண்டு, ராம மந்த்ரம் சொல்லி, முக்தி அளிக்கச் செய்தேன். அதே என் ஸ்வாமிதான் ரகுகுல ச்ரேஷ்ட்டடர் ஸ்ரீராமச்சந்த்ரன், அசையும் பொருள், அசையாப் பொருள் எல்லாவற்றிற்கும் தலைவன்; எல்லோருடைய உள்ளத்தையும் அறியக் கூடிய அந்தர்யாமி.

பிபஸ்ஹும் ஜாஸு நாம் நர் கஹ்ஹீம் ।
ஜன்ம அனேக் ரசித் அக் தஹ்ஹீம் ॥ 1213
ஸாதர் ஸுமிரன் ஜே நர் கர்ஹீம் ।
பவ் பாரிதி கோபத் இவ தர்ஹீம் ॥ 1214

துன்பம் காரணமாக எவர்கள் ஸ்ரீராமச்சந்த்ரனின் திருநாமத்தைக் கூறுகிறார்களோ; அவர்களுக்கு ஜன்ம ஜன்மாந்தரத்துப் பாபங்கள் எரிந்து அகல்கின்றன. அதிலும் எந்த மனிதர் மரியாதையுடனும், ச்ரத்தையுடனும் ஸ்ரீராம நாமத்தை ஸ்மரணை செய்கிறார்களோ; அவர்கள் பசுக்களின் பாதங்களில் உள்ள பிளவு போல் ஸம்ஸார ஸாகரம் கடந்து விடுகிறார்கள். (அதாவது, எவ்விதக் கஷ்டமும் இல்லாமல் ஸம்ஸார ஸாகரத்தைப் பசுவின்கால் குளம்பிலுள்ள இடைவெளிப் பிளவு என்று எண்ணிக் கடக்க நமக்கு சக்தி உண்டாகிறது.)

ராம் ஸோ பரமாத்மா பவானீ ।
தஹம் ப்ரம் அதி அபிஹித் தவ் பானீ ॥ 1215
அஸ் ஸம்ஸய் ஆனத் உர் மாஹீம் ।
க்யான் பிராக் ஸகல் குன் ஜாஹீம் ॥ 1216

ஹே பவானி! அதே ராமன்தான் பரமாத்மா. இதைப்பற்றி நீ ஸந்தேஹம் கொள்வது; இப்படிச் சொல்வது அனுசிதமானது; அதாவது; யோக்யமானதும் இல்லை. இம்மாதிரி ஸந்தேஹத்தை மனத்தில் கொண்டு வந்தால் ஜ்ஞானம், வைராக்யம் முதலிய நற்குணங்கள் தானாகவே பறந்து போகும்,

ஸுனி சிவ் கே ப்ரம பஞ்ஜன் பச்னா |
மிடி கை ஸப் குதர்க் கை ரச்னா || 1217
பயி ரகுபதி பத் ப்ரீதி ப்ரதீதீ |
தாருண் அஸம்பாவ்னா பீதீ || 1218

சிவனாரின் ப்ரமையையும், குதர்க்கத்தையும் தூர விலக்கும் வார்த்தைகளைக் கேட்ட பார்வதி ப்ரஸன்ன மடைந்தாள். அவளது குதர்க்கப் பேச்சு விலகியது. ஸ்ரீராமச்சந்த்ரனின் சரணங்களில் ப்ரேமை வைத்தாள்; நம்பிக்கை வைத்தாள். இதுவரை நடந்த, நடக்கக்கூடாத நிகழ்ச்சிகள் யாவும் பொய்க் கற்பனை ஆயின. அதாவது; அவள் மனம் நிர்மலமானது; ஸந்தேஹங்கள் விலகின.

புனி புனி ப்ரபு பத கமல் கஹி
ஜோரி பங்கருஹ் பானி |
போலீம் கிரிஜா பசன் பர் மன்ஹுூம்
ப்ரேம் ரஸ் ஸானி || 1219

திரும்பத் திரும்பத் தன் ஸ்வாமியின் பாத கமலங்களை அணைத்துத் தாமரை மலர் போன்ற தன் கரங்களைக் கூப்பிப் பார்வதி அன்பு ததும்பும்படியான அளவிலே அழகான வார்த்தை கூறினாள்.

சசிகர் ஸம ஸுனி கிரா தும்ஹாரீ |
மிடா மோஹ் ஸர்தாதப் பாரீ || 1220
தும்ஹ் க்ருபால் ஸபு ஸம்ஸவு ஹுரேஹு |
ராம ஸ்வரூப் ஜானி மோஹி பரேஹு || 1221

சந்த்ர கிரணங்களைப் போன்ற தங்களுடைய வார்த்தைகள் கேட்டு என் மனத்திலுள்ள அஜ்ஞான மாகிற மோஹம் அழிந்து விட்டது. அதாவது; சரத் காலத்தின் வெய்யில் பட்டவுடன் எப்படிப் பனி மூட்

டம் விலகுகிறதோ; அதே போல் என் மனக்லேசம் பனி போல் மறைந்துவிட்டது.

ஹே க்ருபாலு! தாங்கள் என் மனக் குழப்பங்களை அகற்றி விட்டீர்கள். ஸ்ரீராமச்சந்த்ரனின் உண்மை ஸ்வரூபத்தை நான் கண்டு கொண்டேன்.

நாத் க்ருபாம் அப் கயவு பிஷாதா ।
ஸுகீ பயஉம் ப்ரபு சரண் ப்ரஸாதா ॥ 1222
அப் மோஹி ஆப்னி கிங்கரி ஜானீ ।
ஜதபி ஸஹஜ் ஜட் நாரி அயானீ ॥ 1223

ஹே நாதா! தங்கள் க்ருபையால் நான் என் கவலைகளை விட்டொழித்தேன். தங்கள் சரண கமலங்களை என்னுடைய ஸுகமான இருப்பிடம் என்றும் தெரிந்து கொண்டேன். தாங்கள் தற்சமயம் என்னை அடிமை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்கள் மனத்தில் தான் என்றும் இருப்பவள். ஒரு வேளை தாங்கள் என்னை மூர்க்க ஸ்த்ரீ என்றும், ஜ்ஞானம் இல்லாத வள் என்றும் நினைத்தாலும் பரவாயில்லை.

ப்ரதம ஜோ மைம் பூசா ஸோயி கஹஹு ।
ஜெளம் மோ பர் ப்ரஸன்ன ப்ரபு அஹஹு ॥ 1224
ராம ப்ரஹ்ம சின்மய் அபிநாஸீ ।
ஸர்ப் ரஹித் ஸப் உர் புர் பாஸீ ॥ 1225

ஹே ப்ரபுவே! என் மீது தாங்கள் அன்பு கொண்டிருந்தால்; தயவு செய்து நான் முதலில் கேட்ட கேள்விகளுக்குத் தக்க பதில் கூறுங்கள். ஸ்ரீராமச்சந்த்ரன் ப்ரம்ஹ்மம், ஜ்ஞான ஸ்வரூபன், அழிவற்றவன், எல்லாவற்றிலும் விலகியிருப்பவன், எல்லாமே அறிந்த எல்லோர் ஹிருதயமாகிய நகரில் வாஸம் செய்பவர் என்பதை நான் அறிந்து கொண்டேன். இது உண்மை தானா?

நாத் தரேவு நர்தனு கேஹி ஹேதூ ।
மோஹி ஸமுஜாயி கஹஹு ப்ருஷ கேதூ ॥ 1226
உமா பசன் ஸுனி பரம பினீதா ।
ராமகதா பர் ப்ரீதி புனீதா ॥ 1227

ஹே நாதா! அவர் (ஸ்ரீராமன்) ஏன் மனுஷ்யரூபம் எடுத்தார்? தர்மக் கொடியை வைத்திருக்கிற ஹே ப்ரபு! இதை எனக்கு நன்றாகக் கூறுங்கள். சிவனார் பார்வதியின் அடக்கமான வார்த்தைகளைக் கேட்டார். அக் கேள்வியில் ராஜ நீதி இருந்தது. ஸ்ரீராமச்சந்த்ரனின் கதையில் தேவிக்குள்ள ப்ரீதியும் தெரிந்தது.

ஹியம் ஹர்ஷே காமாரி
தப் சங்கர் ஸஹஜ் ஸுஜான் |
பஹு பிதி உமஹி ப்ரஸம்ஸி புனி
போலே க்ருபாநிதான் || 1228

அப்போது காமதேவனின் எதிரியான, உண்மையிலேயே மஹாமேதாவியான அந்தத் தயையின் ஸமுத்ரமான சங்கரர் மகிழ்ந்து, பார்வதி மீது அனுதாபம் கொண்டு அவளைப் பலவிதமாகப் புகழ்ந்து கொண்டு மேலும் கூறலானார்.

ஸுனு சுப் கதா பவானி ராமசரித
மானஸ் பிமல் |
கஹா புசுண்டி பகானி ஸுனா
பிஹக் நாயக் கருட் || 1229

ஹே பார்வதி! காகபுசுண்டி முனிவர் விஸ்தரித்து பட்சிகளின் அரசனான கருடனுக்குக் கூறினாரே; அதே மங்கலமயமான, நிர்மலமான ஸ்ரீராம சரித மானஸை நான் கூறுகிறேன்; கேட்பாயாக.

ஸோ ஸம்வாத் உதார் ஜேஹி பிதி
பா ஆகேம் கஹப் |
ஸுனஹு ராம் அவதார் சரித்
பரம ஸுந்தர் அனக் || 1230

இதே காகபுசுண்டி, கருடனுடைய வாத விவாதங்களை நான் பிறகு உத்தர காண்டத்தில் கூறி வர்ணனை செய்கிறேன். ஆனால்; இப்போது பாபம் அகற்றும் ஸ்ரீராமனின் அவதாரக் கதையைக் கேள்.

ஹரி குண் நாம் அபார் கதா
ரூப் அகனித் அமித் |

மைம் நிஜ மதி அனுஸார் கஹஉம்
உமா ஸாதர் ஸுனஹு || 1231

ஸ்ரீஹரியின் குணமும், நாமவிசேஷமும், அபார மானது; அதாவது கரையில்லாதது; கரை காணாதது. அவருடைய கதைகள், ரூபங்கள் எண்ணிலடங்காதவை. பின்னும் என் யுத்திக்கு ஏற்றவாறு சொல்கிறேன். ஹே பார்வதி! ஆதரவோடு இதைக் கேள்.

ஸுனு கிரிஜா ஹரிசரித் ஸுஹாயே |
பிபுல் பிஸத் நிகமாகம் காயே || 1232
ஹரி அவதார் ஹேது ஜேஹி ஹோயீ |
இதமித்தம் கஹி ஜாயி ந ஸோயீ || 1233

கேள் பார்வதி! பகவானுடைய ஸுந்தரமான, நிர் மலமான, விரிவான சரித்ரம் மிகவும் புகழ் வாய்ந்தது; வேத சாஸ்த்ர புராணங்களால் பாடப்பட்டது. ஏதோ ஒரு காரணத்தினால் ஹரி அவதாரம் எடுத்தார். எந்தக் காரணத்தினால் அவர் செய்தார்? ஏன் அப்படி செய்ய வில்லை என்பதெல்லாம் கூறுவது கடினம். அந்தக் காரணத்தை யாராலும் அறிய முடியாது.

ராம அதர்க்ய புத்தி மன் பானீ |
மத் ஹமார் அஸ் ஸுன்ஹி ஸயானீ || 1234
ததபி ஸந்த் முனி பேத் புரானா |
ஜஸ் கசு கஹஹிம் ஸ்வமதி அனுமானா || 1235

ஹே சிவானீ! ஸ்ரீராமச்சந்த்ரன் புத்தியாலும், மனத் தினாலும், வாக்கினாலும் தர்க்கம் செய்வதற்கு அப் பார்ப்பட்டவர். ஹே பார்வதி! நான் என் எண்ணப் படி அவர் கதையைக் கூறுகிறேன்; கேள். இருந்த போதிலும், முனிவர்கள், வேத புராண்ங்கள், தாங்கள் தங்கள் புத்திக்கு எட்டியபடி அவர் கதையை வர்ணித்து இருக்கிறார்கள். அவை பற்றி இப்போது விவாதம் செய்ய வேண்டாம்.

தஸ் மைம் ஸுமுகி ஸுனாவஉம் தோஹீ |
ஸுஜி பர்யி ஜஸ் காரண் மோஹீ || 1236
ஜப் ஜப் ஹோயி தர்ம கை ஹானீ |
பாட்ஹிம் அஸுர் அதம் அபிமானீ || 1237

''ஹே அழகான முகம் கொண்டவளே! நான் எவ் விதம் நினைக்கிறேனோ; அதே போல் ஸ்ரீராமசரித் ரம் கூறுகிறேன். எவ்வெப்போது தர்மத்திற்கு அழிவு ஏற்படுகிறதோ; அவ்வப்போது இறுமாப்பு கொண்ட நீசராட்சதர்கள் அதிகமாகத் தோன்றுகிறார்கள்.

கர்ஹிம் அனீதி ஜாயி நஹிம் பர்னீ |
ஸீதஹிம் பிப்ர தேனு ஸுர் தர்னீ || *1238*
தப் தப் ப்ரபு தரி பிபித் ஸரீரா |
ஹர்ஹிம் க்ருபாநிதி ஸஜ்ஜன் பீரா || *1239*

எப்போது அந்த அரக்கர்கள் வர்ணிக்க முடியாத அளவு அநீதியைச் செய்கிறார்களோ; மேலும், ப்ராம் மணர்கள், பசுக்கள், தேவர்கள், பூமி எல்லாருக்கும் தாள முடியாத துன்பத்தைத் தருகிறார்களோ; அப்போ தெல்லாம் பகவான் பல உருவங்கள் எடுத்துக் கொண்டு, துஷ்டர்களின் நாசத்திற்குக் காரணமாக இருந்து, சிஷ் டர்களைக் காப்பாற்றி, தர்மத்தினை ரக்ஷை செய் கிறார்.

அஸுர் மாரி தாப்ஹிம் ஸுரன்ஹ
ராக்ஹிம் நிஜ ச்ருதி ஸேது |
ஜக் பிஸ்தார்ஹிம் பிஸத் ஜஸ்
ராம ஜன்ம கர் ஹேது || *1240*

அந்த ராட்சதர்களை ஒழிக்கவும், தேவர்களைக் காத்து அவர்கள் நிலையை உயர்த்தவும், உயிர் மூச் சான வேதங்களின் மரியாதையைக் காப்பாற்றவும், ஸ்ரீராமனுடைய அவதாரம் என்பது ரொம்ப அவசிய மாயிற்று. உலகமெங்கெங்கும் கீர்த்தியுடன் விளங்கும் அவ தாரத்திற்காகவே ராம ஜன்மம் மிக்க அவசியமாகிவிட்டது.

ஸோயி ஜஸ் காயி பக்த பவ் தர்ஹீம் |
க்ருபாஸிந்து ஜன் ஹித் தனு தர்ஹீம் || *1241*
ராம ஜன்ம கே ஹேது அநேகா |
பரம பிசித்ர ஏக் தேம் ஏகா || *1242*

பகவானின் கீர்த்தியைப் பாடிப்பாடி பக்த ஜனங் கள் ஸம்ஸார ஸாகரத்தைக் கடக்கிறார்கள். க்ருபாஸாக ரரான பகவான் பக்தர்களின் நலனுக்கு வேண்டியே

சரீரத்தைத் தாங்கியுள்ளார். ஸ்ரீராமச்சந்த்ரனின் ஜன்மத்திற்கு அனேக காரணங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் மேன்மேலும் விசித்ரமானது.

ஜன்ம ஏக் துயி கஹஉம் பகானீ |
ஸாவதான் ஸுனு ஸுமதி பவானீ || **1243**
த்வாரபால் ஹரி கே ப்ரிய் தோஊ |
ஜய் அரு பிஜய் ஜான் ஸப் கோவூ || **1244**

ச்ரேஷ்ட புத்தியுடைய பவானி! அவருடைய ஓரிரு ஜன்மத்தைப் பற்றி நான் கூறுகிறேன். அக்கரையுடன் கேள். வைகுண்டத்தில் நாராயணனுடைய த்வார பாலகர்கள் 'ஜய, விஜய' என்னும் பெயருடன் இருவர் இருந்தார்கள். நாராயணனுக்கு ப்ரியமான இவர்களை யாவரும் அறிவர்.

பிப்ர ச்ராப தேம் தூனவு பாயீ |
தாமஸ் அஸுர் தேஹ் தின்ஹ பாயீ || **1245**
கனக கசிபு அரு ஹாடக்லோசன் |
ஜகத் பிதித் ஸுரபதி மத் மோசன் || **1246**

ஒரு சமயம் ஸனகாதி முனிவர்கள் பகவான் ஹரியைத் தரிசனம் செய்யக் கிளம்பினார்கள். அங்கு ஸஹோதர்களான இரு த்வார பாலகர்களும் கர்வத்தினாலும், அலட்சியத்தினாலும் அவர்களை உள்ளே விட மறுத்துவிட்டார்கள். நாம் முதலில் போய்ப் பகவானிடம் கேட்கிறோம்; பிறகு நீங்கள் உள்ளே போகலாம் என்றார்கள். இதனால் ரிஷிகள் கோபமடைந்து அர்களைச் சபித்தார்கள். அதாவது; ''நீங்கள் இருவரும் ராட்சதர்கள் ஆகக் கடவது.'' மூன்றாவது ஜன்மத்தில் உங்களுக்குச் சாப விமோசனம் உண்டாகும் என்றார்கள். இதே ப்ராம்மணர்களின் சாபத்தால் இவர்கள் ராட்சத சரீரம் பெற்றார்கள். ஒருவன் ஹிரண்ய கசிபுவாகவும், மற்றவன் ஹிரண்யாட்சனாகவும் பிறந்தார்கள். தோன்றியதும் இந்த்ரனை அழித்துப் பதவியைப் பறிக்கத் திட்டமிட்டார்கள் என்பதை உலகம் அறிந்ததுதான்.

பிஜயீ ஸமர் பீர பிக்யாதா |
தரி பராஹ் பபு ஏக் நிபாதா || **1247**

ஹோயி நர்ஹரி தூஸர் புனி மாரா |
ஜன ப்ரஹ்லாத் ஸுஜஸ் பிஸ்தாரா || 1248

அந்த அரக்கர்கள் ஸகல உலகமும் ஜயித்து வரும் ப்ரஸித்தி பெற்று இருந்தார்கள். யுத்தத்தில் மஹா வீரர்கள். இச்சமயம் பகவான் பூவுலகினை ரக்ஷை செய்ய வராஹ அவதாரம் எடுத்து ஹிரண்யனைக் கொன்றார்.

பின்னர் ந்ருஸிம்ஹ அவதாரம் எடுத்து, ஹிரண்ய கசிபுவைக் கொன்று, தனது பக்தன் ப்ரஹ்லாதனின் கீர்த்தியைப் பரவும் படிச் செய்தார். இது உலகப் ரஸித்தமான ஸம்பவம்.

பயே நிஸாசர் ஜாயி தேயி
மஹபீர் பல்வான் |
கும்பகர்ன ராவன் ஸுபட்
ஸுர் பிஜயீ ஜக் ஜான் || 1249

அவர்கள் மீண்டும் மறு ஜன்மத்திலும் அபாரச் சக்தி வாய்ந்த, மஹாபலம் பொருந்திய ராட்சதர்களாகி; ராவணனாகவும், கும்பகர்ணனாகவும் ஜன்மம் எடுத் தார்கள். அவர்கள் தேவதைகளை ஜயித்துத் தங்கள் ப்ரதாபத்தை நிலை நாட்டினார்கள். இது உலகம் அறிந்த உண்மை.

முகுத் ந பயே ஹதே பக்வானா |
தீநி ஜன்ம த்விஜ பசன் ப்ரவானா || 1250
ஏக் பார் தின்ஹ கே ஹித் லாகீ |
தரேவு ஸரீர் பக்த அனுராகீ || 1251

பகவான் — ஹிரண்யாட்சன்-ஹிரண்யகசிபு ஆகிய இவர்களை அழித்தாலும் இவர்களுக்கு முக்தி இன்னும் ஏற்படவில்லை. ஏனெனில்; மூன்றாவது ஜன்மத்தில் தான் முக்தி கிடைக்கும் என்பதால், மீண்டும் பிறப் பெடுத்தார்கள். இதுதான் முனிவர்கள் இட்ட சாபம். பக்தர்களின் அன்பரான பகவான் அந்தப் பக்தர்களது துயர் தீர்க்க இம்முறை ராமனாக அவதாரம் எடுத்தார்.

கஸ்யப அதிதி தஹாம் பிது மாதா |
தசரத் கௌஸல்யா பிக்யாதா || 1252

ஏக கல்ப ஏஹி பிதி அவதாரா |
சரித் பவித்ர கியே ஸம்ஸாரா || 1253

ஒரு சமயம் இவர்களின் தாயார், தந்தையாக இருந்த கச்யபரும்-அதிதியும் தசரதராகவும் கௌஸலை யாகவும் பூமியில் ப்ரஸித்தமடைந்தனர். ஒரு கல்ப வருஷம் பகவான் இதேமாதிரி இவர்களிடம் அவதரித்து, உலகில் பவித்ரமான, தனது சரித்ரத்தை, லீலைகளைப் பரவச் செய்தார். (இந்த அரக்கர்கள் இருவரும் மூன்றாவது பிறவி சிசுபாலன், தந்தவக்ரனுகவும் பிறந்து க்ருஷ்ணனுடைய கைகளால் முக்தியடைந்தார்கள்.

ஏக் கல்ப ஸுர் தேகி துகாரே |
ஸமர் ஜலந்தர் ஸன் ஸப் ஹாரே || 1254
ஸம்பு கீன்ஹ ஸங்க்ராம் அபாரா |
தனுஜ் மஹாபல் மர்யி ந மாரா || 1255

ஒரு கல்ப வருடம் தேவதைகள் ஜலந்தரன் என்பவனிடம் யுத்தம் செய்து தோல்வியடைந்தார்கள். இவர்களின் துன்பம் கண்டு சிவனாரும் இவனை எதிரத்தார்; ஆனால், ஒரு பயனும் இல்லை. அரக்கரின் அரக்கன் மறிக்கவில்லை.

பரம் ஸதீ அஸுராதிப நாரீ |
தேஹிம் பல் தாஹி ந ஜித்ஹிம் புராரீ || 1256

இந்த அரக்கனின் மனைவி பதிவ்ரதையாக இருந்தாள். அத்தகைய மஹிமை காரணமாக த்ரிபுராஸுரனையே கொன்ற சிவபிரான் இந்த அரக்கனை வெல்ல முடியவில்லை.

சல் கரி டாரேஉ தாஸு ப்ரத்
ப்ரபு ஸுர் காரஜ் கீன்ஹ |
ஜப் தேஹிம் ஜானேவு மர்ம தப்
ச்ராப் கோப் கரி தீன்ஹ || 1257

ப்ரபுவான ஸ்வாமி வஞ்சகமாக அவன் மனைவியின் வ்ரதத்தை முறியடித்து தேவதைகளுக்கு நன்மை செய்தார். அவள் இந்த ரஹஸ்யத்தை அறிந்தாள்.

பிறகு கோபங் கொண்டு பகவானுக்கே சாபங் கொடுத் தாள்.

(இந்தக் கதை ப்ரஸித்தம். அதாவது; ஒரு முறை பகவான் விஷ்ணு ஜலந்தரன் என்ற அரக்கனின் மனை வியின் கற்பைப் பரிசோதிக்கத் தன்னை ஒரு ஸாது போல் ஸ்ருஷ்டித்துக் கொண்டு ஜலந்தரனின் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டார். ஜலந்தரின் மனைவி இந்த ஸாதுவிடம் யுத்தம் நடக்கும் விஷயங்களையும், வர்ணனைகளையும் கேட்டாள். அதே ஸமயம் இவள் கணவனின் தலை, கால்கள், கைகள் துண்டம் துண்ட மாக வந்து மனைவியின் காலடியில் விழுந்தன. அப் போது அவள் புலம்பிக் கதறினாள். கணவனின் மர ணத்தைப் பார்த்து. அச்சமயம் பகவான் ஸாது, ''நீ தான் பதிவ்ரதையாயிற்றே. உனது ஸதி பலத்தினால் இந்த உடல்களை ஒன்று சேர்'' என்றார். அதே ம்ாதிரி ப்ருந்தா என்ற அந்தப் பெண் செய்தாள். உடனே அவள் கணவனின் உயிர் வந்து விட்டது. ப்ருந்தா ப்ரேமையுடன் கணவனின் கால்களைப் பிடித்தாள். அப்போது அவள் கற்பு நிலை அழிந்துவிட்டது. இந்த பலஹீன சமயம் பார்த்துச் சிவனார் ஜலந்தரனைக் கொன்றார். இந்த மாயை உடலான ஜலந்தரனின் உடல் உடனே மறைந்து போயிற்று. இந்த ரஹஸ்யத் தையும், இதற்குக் காரணமான ஹரியையும் ப்ருந்தா அறிந்தாள். அதனால் அவள் பகவானைப் பார்த்து ''நீரும் மனைவியின் வியோகத்தினால் அழுது புலம்பு வீர். உம் மனைவியை என் கணவன் ராவணனாக அவதரித்து அபஹரித்துப் போவார்.'' என்று கூறிச் சென்றாள்.)

தாஸு ச்ராப் ஹரி தீன்ஹ ப்ரமானா |
கௌதுகநிதி க்ருபால் பக்வானா || **1258**
தஹாம் ஜலந்தர் ராவன் பயவூ |
ரன் ஹதி ராம் பரம பத் தயவூ || **1259**

பகவான் அவளுடைய சாபத்தை நிஜமாக்கினார். அந்த ஹரி ஸந்தோஷத்தின் இருப்பிடம்; க்ருபா ஸமுத் ரம் அவர்.

ஆகவே; அந்த ஜலந்தரன் என்ற அரக்கன் மறு பிறவியில் ராவணனாகப் பிறந்தான். அவனை ஸ்ரீ

ராமச்சந்த்ர மூர்த்தி யுத்தகளத்தில் அழித்து அவனுக்குப் பரமபதம் கொடுத்தார்.

ஏக் ஜன்ம கர் காரண் ஏஹா |
ஜேஹி லகி ராம் தரீ நரதேஹா || 1260
ப்ரதி அவதார் கதா ப்ரபு கேரீ |
ஸுனு முனி பர்னீ கபின்ஹ கனேரீ || 1261

ஒரு ஜன்மத்தின் காரணம் எதுவென்றால் அரக்கர் களை அழிக்கப் பகவான் மானிடவடிவம் கொண்டார் என்பதுதான். அதேபோல் இப்போதும் மானிடரூபம் கொண்டிருக்கிறார். ''ஹே பரத்வாஜ முனிவரே! கேளுங்கள், ப்ரபுவின் ஒவ்வொரு அவதாரங்களின் கதையையும் கவிகள் பலவிதமாக வர்ணித்திருக்கிறார்கள்.

நாரத ச்ராப் தீன்ஹ ஏக்பாரா |
கல்ப ஏக் தேஹி லகி அவதாரா || 1262
கிரிஜா சகித் பயீம் ஸுனி பானீ |
நாரத் பிஷ்ணு பக்த புனி க்யானீ || 1263

ஒரு முறை நாரதரின் சாபத்தினாலேயே ஒரு கல் பத்தில் பகவான் அவதரிக்க வேண்டி வந்தது. இந்த வார்த்தையைக் கேட்டதும், பார்வதி சற்றுத் தடுமாறி னாள். பின்பு நாரதர் மஹாஜ்ஞானியாயிற்றே! அவர் விஷ்ணு பக்தர் ஆயிற்றே' (அவரா சாபம் கொடுத்தார் என்பது பொருள்)

காரன் கவன் ச்ராப் முனி தீன்ஹா |
கா அபராத் ரமாபதி கீன்ஹா || 1264
யஹ் ப்ரஸங்க் மோஹி கஹஹு புராரீ |
முனி மன் மோஹ் ஆசரஜ் பாரீ || 1265

''நாரத முனிவர் பகவான் விஷ்ணுவுக்கு ஏன் சாபம் கொடுத்தார்? லக்ஷ்மீ பதியான நாராயணன் அவ ருக்கு என்ன தீங்கு இழைத்தார்? ஹே சங்கர பக வானே! இந்தக் கதையை எனக்குக் கூறுங்கள். முனிவ ரான நாரதரின் மனத்தில் மோஹம் உண்டானதென் பது ஆச்சர்யப்படவேண்டிய விஷயம் என்றாள் பார்வதி.

போலே பிஹஸி மஹேஸ் தப்
க்யானீ மூட் ந கோயி |

ஜேஹி ஜஸ் ரகுபதி கர்ஹிம் ஜப்
ஸோ தஸ் தேஹி சன் ஹோயி || **1266**

பார்வதியின் வார்த்தைகளைக் கேட்ட மஹாதேவர் சிரித்துக் கொண்டே; ஹே பார்வதி! மூடர் எவரும் இல்லை; ஜ்ஞானியும் ஒருவரும் இல்லை. (அவர்களால் பகவானுக்கு எவ்வித ப்ரயோஜனமும் இல்லை என்பது பொருள்) ஸ்ரீரகுநாதர் எதை, எந்த நேரம், எப்படி செய்கிறாரோ; அதேபோல் அதேநேரம் சராசரங்கள் இயங்குகின்றன; அவ்வளவுதான்.

கஹஉம் ராம் குன் காத்
பரத்வாஜ் ஸாதர் ஸுனஹு |
பவ பஞ்ஜன் ரகுநாத் பஜு துளஸீ
தஜி மான் மத் || **1267**

யாஜ்ஞவல்க்யர் - ஹே பரத்வாஜரே! நான் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் அழகான குணமுள்ள கதையைக் கூறு கிறேன். நீர் ஆதரவுடன் கேளும் - என்றார். கர்வம்-அஹம்பாவம் எல்லாம் ஒழித்து ஸகலபாவங்களையும் தொலைக்கவல்ல ஸ்ரீரகுநாதனை பஜிப்பாயாக என் றார் துளஸீ.

ஹிமகிரி குஹா ஏக் அதி பாவனி |
பஹ் ஸமீப் ஸுர்ஸரீ ஸுஹாவனி || **1268**
ஆச்ரம் பரம புனீத் ஸுஹாவா |
தேகி தேவரிஷி மன் அதி பாவா || **1269**

ஹிமாலய பர்வதத்தில் ஒரு பெரிய தூய்மையான குஹை இருந்தது. அதன் அருகில் தூய, அழகிய கங்கை நதி பெருகிக் கொண்டிருந்தது. அங்கு மிகத்தூய்மை வாய்ந்த ஒரு ஸுந்தரமான ஆச்ரமம் இருந்ததைக் கண்ட நாரதருடைய மனத்தில் ஆனந்தம் உண்டானது. அந்த அழகு நிரம்பிய இடம் அவரை மோஹத்திற் குள்ளாக்கியது.

நிர்கி ஸைல ஸரி பிபின் பிபாகா |
பயவு ரமாபதி பத் அனுராகா || **1270**
ஸுமிரத் ஹரிஹி ச்ராப் கதி பாதீ |
ஸஹஜ் பிமல் மன் லாகி ஸமாதீ || **1271**

''பர்வதங்கள், நதிகள் அழகிய காடுகள் என இப் படிப் பல பிரிவுகளைக் கண்டதும்; நாரதருக்கு லக்ஷ்மீ காந்தனான நாராயணனின் திருவடிகளில் அன்பு துளிர்த்தது. (அதாவது; பகவான் மீது அவருக்கு ப்ரேமை உண்டாயிற்று.) அவரை நினைத்தமாத்திரத் திலேயே பகவானின் அருளால் அவர் தட்சனால் இடப்பட்ட சாபம் நீங்கப்பெற்று ஒரே இடத்தில் நிலை பெற்றவராகிவிட்டார். இதைக்கண்ட நாரதர் ஆச்சரி யம் அடைந்தார். தனது நடை நின்றுவிட்டதால் ஸந் தோஷம் அடைந்து ஸ்வபாவமாகவே நிர்மல மனத்து டன் தவம் செய்வதற்கு ஸமாதி நிலையில் ஈடுபடுத்திக் கொண்டார். (அதாவது; தட்சனுடைய சாபத்தால் நாரதர் எந்த இடத்திலும், எந்த உலகத்திலும், இரண்டு வினாடிக்கு மேல் தங்க மாட்டார் என்பது நியதி)

முனி கதி தேகி ஸுரேஸ் டேரானா ।
காம்ஹி போலி கீன்ஹ ஸன்மானா ॥ 1272
ஸஹித் ஸஹாய் ஜாஹு மம ஹேதூ ।
சலேவு ஹர்ஷி ஹியம் ஜலசர் கேதூ ॥ 1273

முனிவர் நாரதரின் இந்தத் தபோமய யோக நிஷ் டையைக் கண்ட இந்த்ரன் பயமடைந்தான். அவன் உடனே காமதேவனையழைத்து மரியாதை உபசாரங் களைச் செய்து; ''காமவேளே! என் நன்மைக்காக வேண்டி, உன் ஸகாக்களுடன் சேர்ந்து, நாரதரின் இந்த ஸமாதியை நீ கெடுக்க வேண்டும் போ'' என் றான். மீன் கொடி கொண்ட காமனும் அங்கிருந்து ஸந்தோஷத்துடன் புறப்பட்டான்.

ஸுநாசீர் மன் மஹும் அஸி த்ராஸா ।
சஹத் தேவரிஷி மம புர் வாஸா ॥ 1274
ஜே காமீ லோலுப் ஜக் மாஹீம் ।
குடில் காக் இவ ஸப்ஹி டேராஹீம் ॥ 1275

எங்காவது தனது அமராவதியைத் தேவரிஷியான நாரதர் அபஹரித்துக் கொண்டு விடுவாரோ என்று இந்த்ரனுடைய மனத்தில் பயமுண்டாகி விட்டது. உல கில் எவர் காமுகனாகவும், பேராசையும் கொண்டிருக் கிறாரோ; அவர்கள் கோணலான சிறுபுத்தி கொண்ட காக்கைக் கூட்டம் போன்றவர்கள். ஏனெனில்; எதற்

கும் இவர்கள் பயப்படுவார்கள் (இந்த்ரனையும் இந்தக் காகத்துடன் ஒப்பிடுகிறார்.)

ஸூக் ஹாட் லை பாக் ஸட் ஸ்வான்
நிரகி ம்ருகராஜ் |
சீனி லேயி ஜனி ஜான் ஜட் திமி
ஸுரபதிஹி ந லாஜ் || 1276

மூடமான நாய் ஒரு சிங்கத்தை எதிரில் கண்டதும் தன்னிடமுள்ள உலர்ந்த எலும்புத் துண்டத்தை எடுத்துக் கொண்டு ஓடும். ஏனெனில், சிங்கம் தனது எலும்புத் துண்டைத் தூக்கிப் போய்விடுமே என்று அதற்குப் பயம். அப்படி அது அற்பமாக நினைக்கிறது. அதே போல் இந்த்ரன், நாரதர் தன் ராஜ்யத்தை அபஹரித்துக் கொண்டு விடுவாரோ; என்று நாணம் சிறிதும் இன்றி இப்படி நினைக்கிறான்.

தேஹி ஆச்ரம்ஹிம் மதன் ஜப் கயவூ |
நிஜ மாயாம் பஸந்த் நிர்மயவூ || 1277
குஸுமித் பிபித் பிடப் பஹுரங்கா |
கூஜ்ஹிம் கோகில குஞ்ஜ்ஹிம் ப்ருங்கா || 1278

காமதேவன் ரிஷியின் ஆச்ரமம் சென்றதும், உடனே தன்னுடைய மாயையினால் அங்குள்ள சூழ்நிலையை மாற்றி வஸந்த ருதுவை உண்டாக்கினான். பற்பல வருட்சங்களில், பற்பல விதமான புஷ்பங்கள் மலர்ந்தன; அவைகளின் மீது பல விதமான பட்சிகள், குயில்கள் கூவத்தொடங்கின; வண்டுகள் ரீங்காரமிட்டன.

சலீ ஸுஹாவனி திரிபித் ப்யாரீ |
காம் க்ருசானு படாவ்நிஹாரீ || 1279
ரம்பாதிக் ஸுர்நாரி நவீனா |
ஸகல் அஸ்மஸர் கலா ப்ரவீனா || 1280

காமாக்னியை, அதாவது; காமத்தை எழுப்பும் மூன்று விதமான உணர்ச்சிகளை அங்குப் பரவவிட்டான். அப்போது குளிர்ந்த, மென்மையான, ஸுகந்தமான, இளம் காற்று ஸுகமாக வீசியது. ரம்பா முதலிய

இளம் தேவகன்னிகைகள் வந்திருந்தார்கள். அவர்கள் யாவரும் காமக்கலையில் வல்லவர்கள்.

கர்ஹிம் கான் பஹு தான் தரங்கா |
பஹுபிதி கிரீட்ஹிம் பானி பதங்கா || 1281
தேகி ஸஹாய் மதன் ஹர்ஷானா |
கீன்ஹேஸி புனி ப்ரபஞ்ச பிதி நாநா || 1282

அந்தப் பெண்கள் பலவிதமான ராக தாளங்களில் ஆலாபனை செய்து பாடலானார்கள். கையில் பந்தை எடுத்துக் கொண்டு விதவிதமாகப் பந்து வீசி விளையாடலானார்கள். காமவேள் இந்த உதவிகளைக் கண்டு மிகவும் மகிழ்ந்தான். மேலும், எல்லாப் பக்கங்களிலும் பலவிதமான தனது மாயாஜாலத்தைப் பரப்பினான்.

காம் கலா கசு முனிஹி ந ப்யாபீ |
நிஜ பயம் டரேவு மனோபவ் பாபீ || 1283
ஸீம் கி சாம்பி ஸக்யி கோவு தாஸூ |
பட் ரக்வார் ரமாபதி ஜாஸூ || 1284

ஆனால், காமதேவனின் எவ்விதமான கலை முயற்சியும் முனிவரிடம் பலிக்கவில்லை. அப்போது பாபியான காமதேவன் தன் செய்கையால் அழிவுருமோ என்று தானே பயந்தான். லக்ஷ்மீபதியான நாராயணன் ரட்சகராக இருக்கும்பொழுது அவருடைய மரியாதையை மீறி எவராவது அசைக்க முடியுமா?

ஸஹித் ஸஹாய் ஸபீத் அதி
மானி ஹாரி மன் மைன் |
கஹேசி ஜாயி முனி சரன் தப்
கஹி சுடி ஆரத் பைன் || 1285

அப்பொழுது மன்மதன் பயந்து, தனது ஸகாக்களுடன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, நாரத முனிவரிடம் வந்து வணங்கித் திருவடிகளைக் கரங்களால் பிடித்துக்கொண்டு, தீனக்குரலில் மன்னிப்பும் கேட்டான்.

பயவு ந நாரத் மன் கசு ரோஷா |
கஹி ப்ரிய பசன் காம் பரிதோஷா || 1286

நாயி சரன் ஸிரு ஆயஸு பாயீ ।
கயவு மதன் தப் ஸஹித் ஸஹாயீ ॥ 1287

நாரதருடைய மனத்தில் கொஞ்சமும் கோபம் உண்டாகவில்லை. அவர் ப்ரியமான வசனங்களினால் மன்மதனை ஸமாதானம் செய்தார். இதைக் கேட்ட மதனன் ஆறுதல் அடைந்து, வணங்கித் தனது கூட்டத்தாருடன் திரும்பிப் போனான்..

முனி ஸுஸீலதா ஆப்னி கர்னீ ।
ஸுர்பதி ஸபாம் ஜாயி ஸப் பர்னீ ॥ 1288
ஸுனி ஸப் கே மன் அசர்ஜு ஆவா ।
முனிஹி ப்ரசம்ஸி ஹரிஹி ஸிரு நாவா ॥ 1289

காமதேவன் தேவராஜனான இந்த்ரனின் ஸபையில் ப்ரவேசித்து; நாரத முனியின் அன்பு ததும்பும் ஆறுதலான வார்த்தைகளையும், தனது கெட்ட செயல்களையும், பிறகு அவரைப் பற்றிய புகழையும் கூறி விட்டு; ஸ்ரீ ஹரியின் பாதங்களை நமஸ்கரித்தான்.

தப் நாரத் கவ்னே சிவ் பாஹீம் ।
ஜிதா காம் அஹமிதி மன் மாஹீம் ॥ 1290
மார் சரித் சங்கர்ஹி ஸுநாயே ।
அதிப்ரிய ஜானி மஹேஸ் ஸிகாஏ ॥ 1291

அப்பொழுது நாரதர் சிவனார் அருகில் வந்தார். அவர் மனத்தில் பெருமிதம் நிறைந்திருந்தது. மனத்திற்குள் நாம் காமதேவனை ஜயித்து விட்டோம் என்று எண்ணினார். காமதேவனின் சரித்ரத்தைச் சிவனாரிடம் கூறினார். ஸ்ரீ மஹாதேவன் நாரதரைத் தனது அத்யந்த ப்ரியமான தோழர் என்று எண்ணி, அவரை அருகில் அழைத்து அவருக்குப் பலவிதமான சிட்சைகளை அளித்தார்.

பார் பார் பினவவும் முனி தோஹீ ।
ஜிமி யஹ் கதா ஸுநாயஹு மோஹீ ॥ 1292
திமி ஜனி ஹரிஹி ஸுநாவஹு கப்ஹுமம் ।
சலேஹும் ப்ரஸங்க துராஏஹு தப்ஹுமம் ॥ 1293

ஹே முனிவரே! நான் உம்மைப் பலமுறை வணங்குகிறேன். எந்தக் கதையைத் தாங்கள் எனக்குக் கூறினீரோ;

அதை எப்போதும் பகவான் ஹரியிடம் கூறாதீர்கள். வாத விவாதங்கள் ஏற்பட்டாலும் சரி, அந்தக் கதை யைத் தாங்கள் கூறக்கூடாது.

சம்பு தீன்ஹ உபதேஸ் ஹித்
நஹிம் நாரத்ஹி ஸோஹான் |
பரத்வாஜ் கௌதுக் ஸுநஹு
ஹரி இச்சா பல்வான் || **1294**

ஹே பரத்வாஜ முனிவரே! இந்த வேடிக்கையை என்னவென்று கேளும்! இந்தச் சிவனார் ஹிதமான உபதேசம் நாரதருக்குச் செய்தார். ஆனால், நாரதரின் மனத்திற்கு அது பிடிக்கவில்லை. ஹரியினுடைய இச்சை மிகவும் பலம் பொருந்தியது. யார் கூறினாலும், யார் நடந்தாலும், வருவன வந்தே தீரும்.

ராம் கீன்ஹ சாஹஹிம் ஸோயி ஹோயீ |
கரை அன்யதா அஸ் நஹிம் கோயீ || **1295**
சம்பு வசன் முனி மன் நஹிம் பாயே |
தப் பிரஞ்சி கே லோக் ஸிதாயே || **1296**

ஸ்ரீ ராமச்சந்த்ரன் எது செய்ய நினைக்கிறாரோ; அது நடந்தேதான் தீரும். அவருடைய இச்சைக்கு விரோதமாக எதுவுமே செயலாற்ற முடியாது. சிவ னாரின் வார்த்தைகள் நாரதருக்குப் பிடிக்கவில்லை. ஆகவே, அவர் அங்கிருந்து ப்ரம்ம லோகம் சென்றார்.

ஏக் பார் கரதல் பர் பீனா |
காவத் ஹரிகுன் கான் ப்ரபீனா || **1297**
சீரஸிந்து கவனே முனி நாதா |
ஜஹம் பஸ் ஸ்ரீனிவாஸ் ச்ருதிமாதா || **1298**

ஸங்கீத சாஸ்த்ர வித்பன்னரான முனி நாரதர் ஒரு முறை அழகிய வீணையைக் கைகளில் ஏந்தி, ஹரியின் குணங்களைப் பாடிக் கொண்டே, வேதங்களின் இருப் பிடம் ஆன ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண பகவான் வஸிக்கிற இடமான க்ஷீரஸாகரம் சென்றார்.

ஹர்ஷி மிலே உடி ரமாநிகேதா |
பைடே ஆஸன் ரிஷிஹி ஸமேதா || **1299**

போலே பிஹஸி சராசர் ராயா |
பஹுதே தினன் கீன்ஹி முனிதாயா || 1300

ரமாவின் இருப்பிடம் ஆன பகவான் விஷ்ணு நாரதரைக் கண்டதும் எழுந்து, ஆனந்தத்தால் அவரைத் தன் அருகில் ஆஸனத்தில் அமரச்செய்தார். பின்பு அந்தச் சராசரங்களின் ஸ்வாமி சிரித்துக் கொண்டே; நாரதரிடம்; 'ஹே முனிவரே' இன்று வெகுநாட்களுக்குப் பிறகு கருணைகாட்டி வந்ததன் காரணம் என்னவோ? என்றார் விஷ்ணு.

காம சரித் நாரத் ஸப் பாஷே |
ஜத்யபி ப்ரதம பர்ஜி சிவம் ராகே || 1301
அதி ப்ரசண்ட ரகுபதி கை மாயா |
ஜேஹி ந மோஹ் அஸ் கோ ஜக் ஜாயா || 1302

முன்பே சிவனார் காமசரித்ரத்தைப் பகவான் விஷ்ணுவிடம் கூறாதே என்று தடுத்துக் கூறியிருக்கிறார். அப்படியிருந்தும்; நாரதர் காமதேவனின் பூராக் கதையையும் ஸ்ரீ ஹரியிடம் கூறினார். ஸ்ரீ ரகுநாதனின் மாயை மிக வலுவானது; அற்புதமானது. ஜகத்தில் ஸ்ரீ ரகுநாதனை மோஹிக்காதவர் யார் பிறந்திருக்கமுடியும்?

ரூக் பதன் கரி பசன்
ம்ருது போலே ஸ்ரீ பகவான் |
தும்ஹரே ஸுமிரன் தேம் மிட்ஹிம்
மோஹ் மார் மத் மான் || 1303

பகவான் சற்று வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டு, ம்ருதுவான குரலில். ஹே முனி ராஜா! தாங்கள் நினைத்த மாத்திரத்தில் மோஹம், காமம், மதம், கர்வம் எல்லாமே அழிந்து விடுகின்றன. அப்படியிருக்க தங்களுக்கு சொல்ல என்ன இருக்கிறது?

ஸுனுமுனி! மோஹ் ஹோயி மன் தாகேம் |
க்யான் பிராக் ஹ்ருதய நஹிம் ஜாகேம் || 1304
ப்ரஹ்மசரஜ் ப்ரத் ரத் மதிதீரா |
தும்ஹஹி கி கர்யி மனோபவ் பீரா || 1305

ஹே முனிவரே! எவர்கள் ஹிருதயத்தில் ஜ்ஞான, வைராக்யம் இல்லையோ; மோஹம், அம்மாதிரி மக்

களுக்கு மனத்தில் ஏற்படுகிறது. ஆனால், தாங்களோ த்ருடமான ப்ரம்மசர்யத்தை ஏற்றுக் கொண்டு துணி வோடிருப்பவர். சரி, அப்படியிருக்கும்போது, தங் களைக் காமதேவன் துன்புறுத்த முடியுமா?

(என்ன தங்களுக்குக் காமதேவனின் காற்று அடித்து விட்டதா? காமவேள் துன்புறுத்துகிறானு? ஏன் கலங்கு கிறீர்கள்? என்றார்.)

நாரத் கஹேவு ஸஹித் அபிமானா |
க்ருபா தும்ஹாரி ஸகலம் பக்வானா || *1306*
கருணாநிதி மன் தீக் பிசாரீ |
உர் அங்குரேவு கர்வ் தரு பாரீ || *1307*

நாரதர் கர்வத்துடன். ஹே பகவானே! எல்லாமே தங்களுடைய கருணைதான் என்றார். கருணாநிதியான பகவான் மனத்தை நிலை நிறுத்தி நிதானமாக உரிய யோசனை செய்தார். அஹம்பாவம் என்னும் விருட் சத்தின் விதை இவர் மனத்தில் ஊன்றியிருக்கிறது. இதை எப்படியாவது அழிக்க வேண்டுமென்ற எண் ணம் கொண்டார் ப்ரபு.

பேகி ஸோ மைம் டாரிஹஉம் உகாரீ |
பன் ஹமார் ஸேவக் ஹிதகாரீ || *1308*
முனி கர் ஹித் மம கௌதுக் ஹோயீ |
அவஸி உபாய் கர்பி மைம் ஸோயீ || *1309*

இந்த நாரதரின் அஹம்பாவத்தை நாம் இப்போதே வேறுடன் அறுக்க வேண்டும். பக்தர்களின், என் தாஸர்களின் ஸுகம் என் ஸுகம்; உயிர். அவர்களைக் காப்பாற்ற வேண்டும். நான் நிச்சயம் இதற்கு ஒரு வழி செய்யப் போகிறேன். இதனால் என்னுடைய லீலைக் கும் வழி உண்டு. இந்த நாரத முனிவருக்கும் நலனும் கிடைக்கும். ஆகவே; இதை நாம் கட்டாயம் செய்ய வேண்டும் என்று கருதினார்... விஷ்ணு.

தப் நாரத் ஹரிபத் ஸிர் நாயீ |
சலே ஹ்ருதயம் அஹமிதி அதிகாயீ || *1310*

ஸ்ரீபதி நிஜ் மாயா தப் ப்ரேரீ |
ஸுநஹு கடின் கர்னீ தேஹி கேரீ || 1311

அப்பொழுது நாரதமுனி பகவானின் பாத கமலங்களில் தலை வணங்கி விட்டுப் போய் விட்டார். அவர் மனத்தில் மிக்க கர்வம் உண்டானது. அத்தருணம் பகவான் தன்னுடைய மாயையை அனுப்பினார். பின் என்ன கடினமான ஸம்பவம் நடந்தது என்பதைக் கேளும்!

பிர்சேஉ மக்மஹும் நகர் தேஹிம்
ஸத் ஜோஜன் பிஸ்தார் |
ஸ்ரீனிவாஸ் புர் தேம் அதிக் ரசனா
பிபித் ப்ரகார் || 1312

கடவுள் மாயை வழியில் ஒரு நகரத்தையுண்டாக்கினார். அதன் விஸ்தீர்ணம் நூறு யோஜனை தூரம் இருந்தது. அங்கு பற்பல விதப் பொருள்கள் இருந்தன. அங்கு பற்பலச் செயல்களும் வைகுண்டத்தை விட அழகு கொடுக்கும்படியாக அமைந்திருந்தன.

பஸ்ஹிம் நகர் ஸுந்தர் நர் நாரீ |
ஜனு பஹு மனஸிஜ் ரதி தனுதாரீ || 1313
தேஹிம் புர் பஸ்இ சீலநிதி ராஜா |
அகனித் ஹய் கய் ஸேன் ஸமாஜா || 1314

அந்நகரத்தில் ஸ்த்ரீ-புருஷர்கள்; காமதேவன், ரதி தேவியைப் போல் மிகவும் அழகாக இருந்தார்கள். அந்நகரத்தின் ராஜாவிற்குப் பெயர் சீலநிதி! அவனுக்குக் கணக்கிடலங்காத யானைகளும், குதிரைகளும் இருந்தன. ஸேனைகள் ஏகப்பட்டவை. அவர்கள் யாவரும் ஒருங்கே சேர்ந்த அந்நகரம் ஒரு வைகுண்டம் போலவே இருந்தது.

ஸத் ஸுரேஸ் பிபவ் பிலாஸா |
ரூப் தேஜ் பல் நீதி நிவாஸா || 1315
பிஸ்வ மோஹனீ தாஸு குமாரீ |
ஸ்ரீ பிமோஹ் ஜிஸு ரூபுநி ஹாரீ | 1316

அந்த அரசனுக்கு நூறு இந்த்ரனைச் சேர்த்தால் எத்தனை உண்டோ; அந்த அளவுக்கு ஐச்வரியம் இருந்

தது. இதைத் தவிர ரூபம், தேஜஸ், பலம், நீதி எல்லாமே அங்கு வாஸம் செய்தன. அவனுடைய பெண்ணின் பெயர் விச்வமோஹினி. (உலகத்தை மோஹத்தில் அழ்த்துபவள்) அவள் அழகைக் கண்டு லக்ஷ்மீ தேவியே அவள் மீது காதல் கொள்வாள்; அப் படிப்பட்ட அழகு!

ஸோஇ ஹரிமாயா ஸப் குன் கானீ |
ஸோபா தாஸு கி ஜாயி பகானீ || 1317
கர்இ ஸ்வயம்பர் ஸோ ந்ருபபாலா |
ஆயே தஹம் அகனித் மஹிபாலா || 1318

எல்லாமே குணத்தின் சிகரமான நாராயணனின் வைகுண்டம் போலவே தெரிந்தது. எல்லாம் பக வானின் மாயைதான். அதை வர்ணிக்கவே முடியாது. அந்த ராஜா தன் பெண்ணிற்கு ஸ்வயம்வரம் நடத்த விரும்பினார். அதன் காரணமாக அப்பட்டணத்திற்குப் பல ஊர் ராஜா, மஹாராஜாக்கள் வந்திருந்தார்கள்.

முனி கௌதுகீ நகர் தேஹிம் கயவூ |
புர்பாஸின்ஹ ஸப் பூசத் பயவூ || 1319
ஸுனி ஸப் சரித் பூப க்ருஹம் ஆயே |
கரி பூஜா ந்ருப் முனி பைடாயே || 1320

குதூஹலமடைந்த நாரத முனிவர் அந்த நகரத்திற்கு வந்தார். அவ்வூர் நகரவாஸிகளிடம் எல்லா வ்ருத்தாந்த மும் கேட்டார். இப்படி அவர்களிடம் எல்லாச் சரித் ரங்களையும் கேட்ட பின் நாரத முனிவர் அரண்மனை வந்தார். ராஜா அவருக்குப் பூஜை செய்து உள்ளே அழைத்து வந்தார்; ஆஸனம் தந்து அமரவைத்தார்.

ஆனி தேகாயீ நாரத்ஹி பூபதி
ராஜ்குமாரி |
கஹஹு நாத் குன் தோஷ் ஸப்
ஏஹி கே ஹ்ருதயம் பிசாரி || 1321

மேலும், ராஜா தனது பெண்ணை அழைத்து வந்து நாரதருக்குக் காட்டி; ஹே ஸ்வாமின்! இந்தப் பெண்ணி னுடைய குண தோஷங்களை ஆராய்ந்து கூற வேண்டும் என்றான்.

தேகி ரூப் முனி பிர்தி பிஸாரீ |
படீ பார் லகி ரஹே நிஹாரீ || 1322
லச்சன் தாஸு பிலோகி புலானே |
ஹ்ருதயம் ஹர்ஷ நஹிம் ப்ரகட் பகானே || 1323

இந்தப் பெண்ணினுடைய அழகைக் கண்டதும்; நாரதர் தன் வைராக்யத்தை மறந்தார். வெகு நேரம் வரை அவள் பக்கம் பார்த்துக் கொண்டே இருந்தார். அவளது, லக்ஷணத்தைக் கண்ட மோஹத்தினால் மனத்தில் ஸந்தோஷமடைந்து தன்னையே மறந்தார். ஒன்றுமே அவள் லக்ஷணத்தைப் பற்றிக் கூற முடியாமல் நின்றார்.

ஜோ ஏஹி பர்யி அமர் ஸோயி ஹோயீ |
ஸமர் பூமி தேஹி ஜீத் ந கோயீ || 1324
ஸேவ்ஹிம் ஸகல் சராசர் தாஹீ |
பர்யி சீலநிதி கன்யா ஜாஹீ || 1325

இவளை யார் மணக்கிறானோ அவன் வாழ்வே அமரத்தன்மையாகிவிடும். போர்களத்தில் அவரை வெல்லவே முடியாது. இந்த சீல நிதியின் பெண் யாரை மணப்பாளோ; அவன் அண்டசராசரங்களையும் தனது ஆதீனத்தில் கொண்டவனாக இருப்பான். அவனை உலகனைத்தும் வணங்கி ஸேவை செய்யும் (அதாவது; இவளுடைய அழகானது புத்தியைப் பேதலிக்கச் செய்து விடும். நாரதர்-வரனாக வருபவன் மதி மயங்கி வேறு விதமாக மாறி விடுவான் என்று அவள் லக்ஷணத்தைப் பற்றி எண்ணியபடி உள்ளுக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்.)

லச்சன் ஸப் பிசாரி உர் ராகே |
கசுக் பனாயி பூப் ஸன் பாஷே || 1326
ஸுதா ஸுலச்சன் கஹி ந்ருப் பாஹீம் |
நாரத் சலே ஸோச் மன் மாஹீம் || 1327

நாரதர் கலக்கமுள்ள மனத்துடன் அப்பெண்ணின் அழகை எண்ணிப்பார்த்துத் தன் மனத்தில் இருத்திக் கொண்டு; வெளிப்படையாக ராஜாவிடம் ஏதோ அவள் அழகைப் பற்றிச் சொல்லிவிட்டுப் போய் விட்டார். ஆனால், அவர் மனத்தில் விகாரமேற்பட்டு விட்டது.

கரௌம் ஜாயி ஸோயி ஜதன் பிசாரீ |
ஜேஹி ப்ரகார் மோஹி பரை குமாரீ || 1328
ஜப் தப் கசு ந ஹோயி தேஹி காலா |
ஹே பிதி மிலயி கவன் பிதி பாலா || 1329

நான் சென்றதும் நன்கு ஆலோசனை செய்து அதன்படி ஒரு வழி செய்வேன் என்று நாரதர் தனக்குள் எண்ணிக் கொண்டார். நான் இது விஷயமாகத் தீவிரமாக இருக்கப் போகிறேன். எப்படியாவது அந்தப் பெண் என்னையே மணக்க வேண்டும். இந்த ஸமயம் அவஸரமாக எந்த ஜபமும், தபமும் செய்ய முடியது. ஹே ப்ரம்மனே! இந்தப் பெண் எனக்கு எப்படிக் கிடைப்பாள்? கூறுவாயாக? (பெண்ணின் த்யானம் வந்தவுடன் அவருடைய ஜப தபங்களின் மஹிமை குறைந்தது)

ஏஹி அவஸர் சாஹிய பரம
சோபா ரூப் பிஸால் |
ஜோ பிலோகி ரீஜை கும்வரி
தப் மேலை ஜய்மால் || 1330

இச்சமயம் எனக்கு மிகவும் அழகு தேவை; நான் சோபையுடன் விளங்க வேண்டும். அதைப் பார்த்து அந்த ராஜகுமாரி ஸந்தோஷமடைய வேண்டும். பிறகு என் கழுத்தில் ஜயமாலையை அணிவிக்க வேண்டும்.

ஹரிஸன் மாகௌம் ஸுந்தர்தாயீ |
ஹோயிஹி ஜாத் கஹ்ரு அதி பாயீ || 1331
மோரேம் ஹித் ஹரி ஸம நஹிம் கோவூ |
ஏஹி அவஸர் ஸஹாய் ஸோயி ஹோவூ || 1332

சரி இப்போது ஒரு கார்யம் செய்வோம். அதாவது; பகவானிடத்தில் நான் அழகைப் பெற வேண்டும். ஆனால் ஏ ஸஹோதரா! அதற்குள் அவரிடம் போகவே வெகு நேரமாகி விடுமே! ஆனால், என் பகவானைத் தவிர யாரும் எனக்கு நன்மை செய்பவர் இல்லை. ஆகவே, இத்தருணம் அவரே வந்து எனக்குக் கருணை புரியட்டும் என்று விரும்பினார்.

பஹு பதி பிநய் கீன்ஹி தேஹி காலா |
ப்ரகடேவு ப்ரபு கௌதுகீ க்ருபாலா || 1333

ப்ரபு பிலோகி முனி நயன் ஜூடானே |
ஹோயிஹி காஜூ ஹியேம் ஹர்ஷானே ||1334

அச்சமயம் நாரதர் பகவானிடம் பலவாறு வேண்டி நின்றார். அவரது வேண்டுகோளைக் கேட்டு லீலை களில் சிறந்த அருளாள ப்ரபு பகவான் (தன்னையும் மாற்றிக் கொண்டு ப்ரத்யட்சமானார். ஏனெனில்; அது ராஜஸபை. ஸ்வயம்வர மண்டபம். ஆகவே, குதூ ஹலத்துடன் ப்ரபு அங்கு வந்தார்.)

அங்கு ஒரு அவதாரம் போலவே வந்தார். பக வானைக் கண்ட நாரதரின் கண்கள் ஈரமானது; மனம் ப்ரஸன்னமடைந்தது. தனக்குள் மகிழ்ந்து இப்போது என் கார்யம் கட்டாயம் ஸித்தியடையும் படிச் செய்து கொள்ள வேண்டும்.

அதி ஆர்தி கஹி கதா ஸுநாயீ |
கர்ஹூ க்ருபா கரி ஹோஹூ ஸஹாயீ || 1335
ஆபன் ரூப் தேஹூ ப்ரபு மோஹீ |
ஆன் பாந்தி நஹிம் பாவெளம் ஒஹீ || 1336

மன வ்யாகுலத்துடன் நாரதர் பகவான் ஹரியிடம் எல்லாக் கதைகளையும் கூறினார்; வேண்டினார். ஹே ப்ரபு! எனக்கு உதவுங்கள். ஹே ஸ்வாமி! தங்களுடைய ரூபத்தை எனக்குக் கொடுங்கள். தங்களைத் தவிர வேறு யாரிடமும் நான் இந்த ரூபத்தை அடைய முடி யாது. எப்படியாவது அந்த ராஜகுமாரியை அடைய வேண்டும்.

ஜேஹி பிதி நாத் ஹோயி ஹித் மோரா |
கர்ஹூ ஸோ பேகி தாஸ் மைம் தோரா ||1337
நிஜ மாயா பல் தேகி பிஸாலா |
ஹியம் ஹம்ஸி போலே தீன தயாலா || 1338

ஹே நாதனே! நேரம் கடத்தாதீர்கள். எவ்விதத்தில் எனக்கு நன்மை உண்டாகுமோ; அம்மாதிரிச் செய்யுங் கள்; நான் தங்கள் அடிமை என்றார்.

தன்னுடைய மாயையின் பரந்த வலிமையைக் கண்டு, நாரதரின் நிலை குறித்து, தீனதயாளுவான

பகவான் மனத்துள் சிரித்துக் கொண்டே கூறினார்.

ஜேஹி பிதி ஹோயிஹி பரம ஹித்
நாரத் ஸுநஹு தும்ஹார் |
ஸோயி ஹம் கரப் ந ஆன் கசு
பசன் ந ம்ருஷா ஹமார் || *1339*

ஹே நாரதரே! தங்களுக்கு எவ்விதத்தில் நன்மை யுண்டாகுமோ; அக்காரியம் நாம் செய்வோம் (அதா வது, கர்வத்தினால் மாயையில் சிக்கி இருக்கும் நாரதர் விடுதலை பெற வழி செய்வோம் என்கிறார்) நம்மு டைய வசனம் எப்போதும்பொய்யாகாது; நினைவில் வையுங்கள் என்றார்.

குபத் மாக் ருஜ் ப்யாகுல் ரோகீ |
பைத் ந தேயி ஸுனஹு முனி ஜோகீ || *1340*
ஏஹி பிதி ஹித் தும்ஹார் மைம் டயவூ |
கஹி அஸ் அந்தர்ஹித் ப்ரபு பயவூ || *1341*

ஹே யோகியான முனிவரே! கேளும்; எப்போது ஒருவர் வியாதியாகப் படுத்திருக்கும் பொழுது இஷ்டப் படி அபத்யப் பண்டங்ஙளைக் கேட்கிறார்களோ; அப் போது வைத்யர் அவைகளைத் தருவதில்லை. ஏனெ னில்; அந்த அபத்ய ஆஹாரத்தினால் ரோகியின் உயி ருக்கே ஆபத்தாகலாம். அதனால் மறுக்கிறார். அதே போல் நரன் தங்களுடைய மதமும், மோஹமும், அஹம்பாவமும் அழிய வேண்டியே, நல்லது செய்யவே இம்மாதிரி மாயையை ஏவினோம் என்று கூறிப் பக வான் விஷ்ணு அந்தர்த்தானம் ஆகிவிட்டார்.

மாயா பிபஸ் பயே முனி மூடா |
ஸமுஜீ நஹிம் ஹரி கிரா நிகூடா || *1342*
கவ்னே துரத் தஹாம் ரிஷிராயீ |
ஜஹாம் ஸ்வயம்பர் பூமி பனாயீ || *1343*

பகவானின் மாயையின் வசியம் காரணமாக நார தர் இத்தனை அஜ்ஞானி ஆகி விட்டதால்; அவருக்கு ஹரியின் ரஹஸ்ய வார்த்தைகள் எதுவுமே காதில் கேட்கவில்லை. ருஷிராஜரான நாரதர் உடனே, எங்கு ஸ்வயம்வரம் நடக்கிறதோ; அந்த இடத்துக்குச் சென்றார்.

நிஜ நிஜ் ஆஸன் பைடே ராஜா |
பஹு பநாவ் கரி ஸஹித் ஸமாஜா || 1344
முனி மன் ஹர்ஷ் ரூப் அதி மோரேம் |
மோஹி தஜி ஆன்ஹி பரிஹி ந போரேம் || 1345

எல்லா அரசர்களும், நன்கு அலங்கரித்துக் கொண்டு உரிமையுடன் தங்கள் தங்கள் ஆஸனங்களில் பக்தியு டன் அமர்ந்திருந்தார்கள். நாரதர் மனத்தில் பெரும் ஆனந்தம் உண்டனது. என் வடிவம் மிக அழகானது. ஆகவே, இந்தக் கன்னி என்னை விட்டு யாருக்கு மண மாலை அணிவிக்கப் போகிறாள்? மறந்தும் கூட என்னை விட்டு வேறு ஒருவனுக்கும் மாலையிடாள் என்று தீர் மானத்துடன் உட்கார்ந்தார்.

முனி ஹித் காரன் க்ருபா நிதானா |
தீன்ஹ குரூப் ந ஜாயி பகானா || 1346
ஸோ சரித்ர லகி காஹூம் ந பாவா |
நாரத் ஜானி ஸப்ஹிம் ஸிர் நாவா || 1347

பகவான் க்ருபாநிதி ஹரியானவர் நாரத முனியின் நன்மைக்காகவே, அறுவருக்கத் தக்க குரூபத்தை உடனே அளித்தார். ஏனெனில்; இந்த விஷயம் எவருமே அறிய மாட்டார். எல்லோரும் நாரதர் என்பதாக அறிந்து தலை வணங்கினார்கள்.

(நாரதருக்கு மூன்று வித ரூபங்கள் உண்டாயின.

1. நாரதருக்கு-தனக்குத்தானே பகவான் நராயணனின் அழகிய ரூபம் தென்பட்டது.
2. ராஜாக்கள் அவரை நாரதர் ரூபத்தில் பார்த்து வணங்கினார்கள்.
3. ராஜகன்னிக்குக் கிழட்டுக் குரங்கு போல் தோற்ற மளித்தார். இவை எல்லாம் பகவானின் செயல்.)

ரஹே தஹாம் துயி ருத்ர கன் தே
ஜான்ஹிம் ஸப் பேவு |
பிப்ரபேஷ் தேகத் பிர்ஹிம்
பரம கௌதுகீ தேவு || 1348

அங்குக் கல்யாண மண்டபத்தில் இரண்டு சிவ கணங்கள் ப்ராம் மண ரூபம் தரித்து ரஹஸ்யம் எல்லா

வற்றையும் கூற்றியவண்ணம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் மிகவும் அக்கரையுடனும், ச்ரத்தையுடனும் நாரதரின் போக்கைக் கவனித்து வந்தார்கள். (என்றிலிருந்து நாரதர் மஹாதேவனின் பேச்சைச் செவி கொடுக்காமல் மோஹ மாயையில் ஈடுபட்டு நிலை கலங்கி இருக்கிறாரோ, அன்றிலிருந்து தனது பூதகணங்கள் இருவரையும் நாரதரின் அருகில் இருந்து கவனிக்க ஏற்பாடு செய்து வைத்திருந்தார்.)

ஜேஹிம் ஸமாஜ் பைடே முனி ஜாயீ |
ஹ்ருதயம் ரூப் அஹமிதி அதிகாயீ || 1349
தஹம் பைடே மஹேஸ் கன் தோவூ |
பிப்ரபேஷ் கதி லக்யி ந கோவூ || 1350

நாரதர் தன் மனத்தில் தான் மிகவும் நல்ல அழகு என்று கர்வம் கொண்டு அங்கு அழகானவர் இருக்கும் இடம் என்று எண்ணி அமர்ந்தார். ஆனால், அங்கு இரு சிவ கணங்கள் அமர்ந்திருந்தார்கள். ப்ராஹ்மண வேஷத்தில் இருந்ததால், அவர்களுடைய இந்தத் தந்த்ரத்தை எவரும் அறிய முடியவில்லை.

கர்ஹிம் கூடி நாரத்ஹி ஸுனாயீ |
நீகி தீன்ஹி ஹரி ஸுந்தர்தாயீ || 1351
ரீஜிஹி ராஜ்கும்வரி சபி தேகீ |
இன்ஹஹி பரிஹி ஹரி ஜானி பிஸேஷீ || 1352

பகவான்-நாரதருக்கு அழகான உருவம் கொடுத்து ஏமாற்றியும் இருந்தார். இது நாரதருக்குத் தெரியவில்லை. தனக்குத்தானே அழகிய ரூபமும், மற்ற வருக்கு ஸாதாரண நாரத ரூபமும், ராஜகன்னிகை பார்க்கும் பொழுது கிழட்டுக் குரங்காகவும் மாறச் செய்தார். இந்த ரூபத்தைக் கண்டு ராஜகுமாரி எரிந்து விழுவாள். ஒரு சரித்ர ராஜகுமாரி நாரதரின் அழகிய ரூபத்தைக் கண்டு வரனாக ஹரியாக நினைத்து மாலை யிடலாம். அல்லது, நாரதரின் குரூரமான குரங்கு ரூபத்தைக் கண்டு அருவறுப்படையலாம். இவ்விதம் பகவான் எண்ணினார்.

முனிஹி மோஹ் மன் ஹாத் பராயேம் |
ஹம்ஸஹிம் சம்பு கன் அதிஸசு பாயேம் || 1353

யதபி லூநஹிம் முனி அட்படி பானீ |
ஸமுஜி ந பர்யி புத்தி ப்ரம் ஸானீ || *1354*

நாரத முனிவரின் மனம் பிறர் (மாயையின்) கையில் மாறியதால்; அவர் மோஹத்தில் மூழ்கி இருந்தார். ஏதேதோ அர்த்தமில்லாமல் உளருகிறார்; பேசுகிறார்; தனக்குத்தானே என்ன செய்ய வேண்டுமென்றே அவருக்குப் புரியவில்லை. இதைக் கண்டு சிவ கணங்கள் சமயம் பார்த்துச் சிரித்து மகிழ்ந்தார்கள்.

காஹூம் ந லகா ஸோ சரித் பிஸேஷா |
ஸோ ஸரூப் ந்ருபகன்யாம் தேகா || *1355*
மர்கட பதன் பயங்கர் தேஹீ |
தேகத் ஹ்ருதயம் குரோத் பா தேஹீ || *1356*

இந்தப் பரம ரகஸ்யம் அறிந்தவர் யாருமில்லை. ஏனெனில்; வெளியாருக்கு நாரதர் நாரதராகவே தோற்றமளித்தார். ஆனால், எப்போது இந்த முனி வரை ராஜ கன்னி பார்த்தாளோ; அப்போது அவள் மிகவும் அருவறுப்படைந்தாள். அந்தப் பயங்கரக் குரங்கு முகமும், பயங்கரத் தேஹமும் கொண்ட ரூபத்தைக் கண்டு அந்தப் பெண் மிகவும் கோபமடைந்தாள்.

ஸகீம் ஸங்க் லை கும்வரி தப்
சலி ஜனு ராஜ்மரால் |
தேகத் பிரயி மஹீப் ஸப் கர்
ஸரோஜ் ஜயமால் || *1357*

ராஜகுமாரி தனது தோழியர்களுடன் ராஜ ஹம்ஸம் போல் நடை நடந்து, தனது தாமரைக் கைகளில் ஜயமாலையை எடுத்துக்கொண்டு, ஸபையில் வந்தாள். எல்லா மன்னர்களையும் ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே வந்தாள்.

ஜேஹி திஸி பைடே நாரத் பூலீ |
ஸோ திஸி தேஹிம் ந பிலோகீ பூலீ || *1358*
புனி புனி முனி உகஸஹி அகுலாஹீம் |
தேகி தஸா ஹர் கன் முஸ்காஹீம் || *1359*

தான் அழகு என்ற கர்வத்துடன் எங்கு நாரதர் ஸந்தோஷத்துடன் அமர்ந்திருந்தாரோ; அந்தப் பக்கம்

மறதியாகக் கூட ராஜகன்னிகை பார்க்கவேயில்லை. முனிவர் திரும்பத் திரும்பக் குழப்பமடைந்து, துள்ளிக் கொண்டு இருந்தார். இந்த நிலைமையைக் கண்ட சிவ கணங்கள் சிரித்துப் புன்னகை செய்தார்கள்.

தரி ந்ருபதனு தஹம் கயவு க்ருபாலா |
கும்வரி ஹர்ஷி மேலேவு ஜயமாலா || 1360
துல்ஹினி லைகே லச்சி நிவாஸா |
ந்ருப ஸமாஜ் ஸப் பயவு நிராஸா || 1361

அருளாளன் பகவான் ஹரியானவர் அச்சமயம் ராஜாவின் வேஷம் தரித்து அங்கு வந்தார். அவரைக் கண்ட ராஜகன்னி தனது கைகளில் இருந்த வரமாலை யைப் பகவான் கழுத்தில் அணிவித்தாள். லக்ஷ்மி நிவா ஸியான, வைகுண்ட்ட நாதனான பகவான் ஹரி மணப் பெண்ணை அழைத்துக் கொண்டு எல்லோரும் பார்த் துக் கொண்டிருக்கும் பொழுதே போய் விட்டார். எல் லோரும் ஸ்தம்பித்து விட்டார்கள்; எல்லா ராஜாக் களும் நிராசையடைந்தார்கள்.

முனி அதி பிகல் மோஹம் மதி நாடீ |
மணி கிரி கயீ கூடி ஜனு கான்டீ || 1362
தப் ஹர் கன் போலே முஸ்காயீ |
நிஜ முக் முகுர் பிலோகஹு ஜாயீ || 1363

நாரதர் மிகவும் குழப்பமடைந்தார்; அவர் அறிவு கெட்டிருந்தது. ஏனெனில்; அவர் மனம் மோஹ மாயையில் மூழ்கியிருந்தது. அரசகுமாரி சென்றதைப் பார்த்துக் கலவரமடைந்தார். நூலிலிருந்து சிதறி விழுந்த மணிபோல் ஆனது அர் மனம். அப்போது சிவ கணங் கள் நாரதரிடம் வந்து ஹே நாரதா! ''உன் முகத்தைக் கண்ணாடியில் பார்'' என்று சொல்லி நகைத்தார்கள்.

அஸ் கஹி தோவு பாகே பயம் பாரீ |
பதன் தீக் முனி பாரி நிஹாரீ || 1364
பேஷு பிலோகி க்ரோத் அதி பாடா |
தின்ஹஹி ஸராப் தீன்ஹ அதி காடா || 1365

இம்மாதிரிக் கூறிவிட்டு இரு சிவ கணங்களும் பயந்து ஓடி விட்டார்கள். நாரதர் உடனே தனது ரூபத்

தைத் தண்ணீரில் பார்த்தார். தனது ரூபத்தைக் கண்டு கோபமும், அருவறுப்பும் அடைந்து அவர்களைக் கடுமையாகச் சபித்தார்.

ஹோஹு நிசாசர் ஜாயி
தும்ஹ கபடீ பாபீ தோவு |
ஹம்ஸேஹு ஹம்ஹி ஸோ லேஹு பல்
பஹுரி ஹம்ஸேஹு முனி கோவு || 1366

நீங்கள் இருவரும் கபடமான பாபியாகப் போகக் கடவீர்கள். அதாவது; ராட்சதர்களாக ஆவீர்கள். இம்மாதிரி என் சாபத்தால் மற்றவர்கள் இனிமேல் எந்த முனிவர்களைக் கண்டும் கேலி செய்யக் கூடாது. ஆகவே; என் சாபம் பலிக்கட்டும் என்றார்.

புனி ஜலதீக் ரூப் நிஜ பாவா |
ததபி ஹ்ருதயம் ஸந்தோஷ் ந ஆவா || 1367
பர்கத் அதர் கோப் மன் மாஹீம் |
ஸபதி சலே கமலாபதி பாஹீம் || 1368

மறுபடி தண்ணீரில் தனது பழைய ஸ்வய ரூபத்தைக் கண்டும், நாரதர் ஸந்தோஷமடையவில்லை. மனத்தில் பெரும் கோபம் உண்டாகி, உதடு துடித்துக் கொண்டிருந்தது. சீக்கிரமாகப் பகவான் கமலாபதியிடம் சென்றார்.

தேஹவும் ச்ராப் கி மரிஹவும் ஜாயீ |
ஜகத் மோரி உபஹாஸ் கராயீ || 1369
பீச்ஹிம் பந்த் மிலே தநுஜாரீ |
ஸங்க் ரமா ஸோயி ராஜகுமாரீ || 1370

நான் சாபம் கொடுப்பேன், அல்லது உயிரை விடுவேன். என்னை உலகெங்கும் சிரிக்கும்படிச் செய்து விட்டார் ஹரி என்று எண்ணியபடியே இம்மாதிரி வெகு ஆத்திரத்துடன் நாரதர் விஷ்ணு லோகம் செல்லும்பொழுது; வழியில் பகவான் ஹரி தோன்றினார்; அவருடன் லக்ஷ்மியும் இருந்தாள்; அதே ராஜ கன்னியும் இருந்தாள். பகவான் எதற்கு நாரதர் சீற்றத்திற்கு முன்னால் வந்தார் என்றால், நாரதர் சாபத்தைச் சிரமேற்கொண்டு ராமாவதாரம் எடுக்க ஸாத்யமாக இருக்க

வேண்டும் என்பதற்காக எதிரில் வந்தார். நாரதரின் சாபத்தை ஏற்றுக் கொண்டார்.

போலே மதுர் பசன் ஸுர்ஸாயீ |
முனி கஹம் சலே பிகல் கீ நாயீ || 1371
ஸுநத் பசன் உபஜா அதி க்ரோதா |
மாயா பஸ் ந ரஹா மன்போதா || 1372

தேவதைகளின் ஸ்வாமியான ஹரி மருதுவான இனிய வார்த்தைகளால் நாரதரைப் பார்த்து, ஹே முனிவரே! மனவ்யாகுலமடைந்து எங்கே போகிறீர்? இந்த ஹரியின் வசனம் கேட்ட நாரதரின் மனம் கொதித்தது; அதிகக் கோபம் கொண்டார். மாயையின் காரணமாக ஸ்வயபுத்தி இல்லாமல் இருந்தார்.

பர் ஸம்பதா ஸகஹு நஹிம் தேகீ |
தும்ஹரேம் இரிஷா கபட் பிஸேஷீ || 1373
மதத் ஸிந்து ருத்ரஹி பௌராயஹு |
ஸுரன்ஹ ப்ரேரி பிஷ்பான் கராயஹு || 1374

பின்னர் நாரதர் ''நீர் பிறரின் ஸுகம் காணப் பொறுக்க மாட்டீர். (பிறரின் தனம்-ஸௌபாக்யம் இவைகளை நீர் காண மாட்டீர்.) உமக்குப் பொறாமையும், வஞ்சமும் நிறைய உண்டு. ஸமுத்ரம் கடையும் பொழுது ஸமுத்ரத்தில் முதலில் விஷம் வந்ததும்; நீர் சிவனுக்கு அதை அளித்தீர். தேவதைகளை அனுப்பி அவரை விஷம் அருந்தச் செய்தீர்.

அஸுர் ஸுரா பிஷ் சங்கர் ஹி
ஆபு ரமா மணி சாரு |
ஸ்வார்த் ஸாதக் குடில் தும்ஹ
ஸதா கபட் ப்யவஹாரு || 1375

ஸமுத்ரத்திலிருந்து எடுத்த மதுபானத்தை அஸுரர்களுக்கும், விஷத்தைச் சங்கரனுக்கும் கொடுத்தீர். லக்ஷ்மியையும், கௌஸ்துபமணியையும் நீர் எடுத்துக் கொண்டீர். எப்பொழுதுமே நீர் சுயநலக்காரராக இருக்கிறீர். உம் செயல்களிலும் கபடம் நிறைந்திருக்கிறது''

பரம் ஸ்வதந்த்ர ந ஸீர் பர் கோயீ |
பாவயி மன்ஹி கர்ஹு தும்ஹ ஸோயீ || 1376
பலேஹி மந்த மந்தேஹி பல் கர்ஹு |
பிஸ்மய ஹர்ஷ ந ஹியம் கசு தர்ஹு || 1377

நீர் எல்லாவற்றிலும் ஸ்வதந்த்ரமுடையவர். உம் தலையில் ஏதுமில்லை. உமக்கு எது தோன்றியதோ அதை நீர் செய்கிறீர். உம் மனத்தில் எது சரி என்று பட்டதைச் செய்ய உமக்கு உரிமை இருக்கிறது. நல்ல தைக் கெட்டதாகவும், கெட்டதை நல்லதாகவும் நீரே செய்கிறீர். ஆச்சர்யமும், ஸந்தோஷமும் என்றுமே உம் மனத்தில் கொஞ்சமும் இல்லை. வெறும் நிர்மல சிந் தையுடன் இருக்கிறீர்.

டஹ்கி டஹ்கி பரிசேஹு ஸப் காஹு |
அதி அஸங்க் மன் ஸதா உசாஹு || 1378
கர்ம சுபாசுப் தும்ஹஹி ந பாதா |
அப் லகி தும்ஹஹி ந காஹும் ஸாதா || 1379

சிறிது சிறிதாக நீர் எல்லோரையும் ஏமாற்றி இருக் கிறீர். உமக்கு மனத்தில் பயமேயில்லை. அதனால்தான் எப்போதும் உற்சாகத்துடன் இருக்கிறீர். நல்லது-கெட் டது என்கிற செயல்கள் உமக்குத் தீங்கிழைப்பதில்லை. இதுவரை உம்மை எவருமே சரி என்றது இல்லை.

பலே பவன் அப் பாயன் தீன்ஹா |
பாவ் ஹுகே பல் ஆபன் கீன்ஹா || 1380
பஞ்சேஹு மோஹி ஜவ்னி தரி தேஹா |
ஸோயி தனு தர்ஹு ச்ராப் மம யேஹா || 1381

தற்காலம் நீர் நல்ல இருப்பிடத்தில் இருக்கிறீர். இல்லையெனில்; நீர் மிகவும் சிரமப்பட நேரும். உம்முடைய கர்ம வினைகளை, பயனை நீர் அனுபவித் துத்தான் தீர வேண்டும். நீர் எந்த உருவம் எடுத்து என்னை ஏமாற்றினீரோ; அதே உருவம் நீர் எடுக்கக் கடவீர். இதுவே என் சாபம். (அதாவது; ராஜாவின் அழகான நிற உருவம் கொண்டு ஹரி மானிடனாகப் பிறக்கக் கடவது என்கிறார் நாரதர்)

கபி ஆக்ருதி தும்ஹ கீன்ஹி ஹமாரீ |
கரிஹஹிம் கீஸ் ஸஹாய் தும்ஹாரீ || 1382

மம அப்கார் கீன்ஹ தும்ஹ பாரீ |
நாரி பிரஹம் தும்ஹ ஹோப் துகாரீ || 1383

நீர் குரங்கினுடைய உருவத்தை எனக்கு அளித்தீர். உமக்குக் குரங்குகளால் தான் உதவி கிடைக்கும். நீர் என்னை மிகவும் துக்கத்திற்குள்ளாக்கினீர். இதே போல நீரும் உம்முடைய ஸ்த்ரீயைப் பிரிந்து விரஹ தாபத்தினால் துடிதுடித்துப் போவீர். துக்கம் உம்மைத் தாங்க முடியாமல் வருந்த வைக்கும்.

ச்ராப் ஸீஸ் தரி ஹர்ஷி ஹியம்
ப்ரபு பஹு பின்தீ கீன்ஹி |
நிஜ் மாயா கை ப்ரபல்தா கர்ஷி
க்ருபாநிதி லீன்ஹி || 1384

நாரதர் கொடுத்த சாபத்தைச் சிரமேற்கொண்டு ப்ரபுவான ஹரி மனத்தில் மகிழ்ச்சி அடைந்தார். தேவர்களின் நன்மைக்காகவும், நாரதரின் நன்மைக்காக வும் இம்மாதிரி லீலைகள் செய்தார். இதை நாரதர் அறியவில்லை. க்ருபாஸிந்துவான ஹரி அதே சமயம் தன்னால் அமைக்கப்பட்டிருந்த மாயையை விலகச் செய்தார்.

ஜப் ஹரி மாயா தூரி நிவாரீ |
நஹிம் தஹம் ரமா ந ராஜ்குமாரீ || 1385
தப் முனிஅதி ஸபீத் ஹரி சர்ணா |
கஹே பாஹி ப்ரணதார்தி ஹர்ணா || 1386

பகவானானவர் எப்போது தமது மாயையைத் தானா கவே இழுத்துக் கொண்டாரோ; அப்போது அங்கு லக்ஷ்மியும் இல்லை; ராஜகுமாரியும் இல்லை. அப் போது நாரதர் மிகவும் பயந்து போய் ஹரியின் திரு வடிகளைப் பிடித்துக் கொண்டு ஹே ப்ரபு! தஞ்சமாக வந்த தீனர்களின் துக்கத்தைப் போக்குபவரே! என்னை ரட்சியுங்கள் என்று கதறினார்.

ம்ருஷா ஹோவு மம ச்ராப் க்ருபாலா |
மம இச்சா கஹ் தீன்தயாலா || 1387
மைம் துர்பசன் கஹே பஹுதேரே |
கஹ் முனி பாப் மிடிஹிம் கிமி மேரே || 1388

ஹே தயாளுவே! என்னுடைய சாபம் பொய்யாகட்டும். நான் பலவிதமான அவதூறு வார்த்தைகளால் தங்களைத் திட்டி இருக்கிறேன். என் இந்தப் பாபம் எப்போது அழியும்? எப்படி அழியும்? என்றதும்; அதற்குப் பகவான் ''நாரதரே என் இஷ்டம் இதுதான். (தங்கள் சாபத்தினால் தான் நான் அவதாரம் எடுக்க முடியும். ஆகவே, நடந்த ஸம்பவமெல்லாம் நானாகவே என் இஷ்டப்படி அமைத்ததுதான் என்றார்.)

ஜபஹு ஜாயி ஸங்கர் ஸத் நாமா |
ஹோயிஹி ஹ்ருதயம் தூரத் பிச்ராமா || 1389
கோவு நஹிம் ஸிவ ஸமான் ப்ரிய மோரேம் |
அஸி பர்தீதி தஜ்ஹு ஜனி போரேம் || 1390

அப்பொழுது பகவான்;- நாரதரைப் பார்த்து; நீர் சென்று சிவனாரின் நூறு நாமாக்களை ஜபம் செய்வீராக. இதனால் உமக்கு, உமது உள்ளத்துக்கு உடனடியாகச் சாந்தி கிடைக்கும். சிவனைப் போல் ப்ரிய மானவர் எனக்கு வேறு ஒருவரும் இல்லை. இந்த நம் பிக்கையை மறந்தும் விட்டுவிட வேண்டாம். (இதனால் சிவனார் நாமங்களை ஜபிக்கச் சொன்னார் என்றால்; நாரதர் சிவனாரின் உபதேசங்களைக் கேட்கவில்லை. அதனால்தான் என்பது பொருள்.)

ஜேஹி பர் க்ருபா ந கர்ஹிம் புராரீ |
ஸோ ந பாவ் முனி பக்தி ஹமாரீ || 1391
அஸ் உர் தரி மஹி பிசர்ஹு ஜாயீ |.
அப் ந தும்ஹஹி மாயா நிஅராயீ || 1392

ஹே நாரதமுனிவரே! த்ரிபுரம் எரித்தபுராரியான சிவபிரான் யார் மீது கருணை காட்டவில்லையோ; அவர் எனது பக்தியைப் பெற முடியாது என்பதாக மனத்தில் இத்தகைய முடிவைச் செய்து கொண்டு நீர் பூமியைச் சுற்றி வாருங்கள். அப்பொழுது எனது மாயை உமது அருகிலேயே வரவே வராது.

பஹு பிதி முனிஹி ப்ரபோதி ப்ரபு
தப் பயே அந்தர்தான் |
ஸத்யலோக் நாரத் சலே கர்த
ராம குன கான் || 1393

பகவான் இவ்வாறு பலவகையில் முனிவருக்கு அறி வுறுத்தி அப்பொழுதே மறைந்து விட்டார். நாரத முனிவரும் ஸ்ரீராமபிரானின் குணங்களைத் துதித்துக் கொண்டே ஸத்யலோகமான ப்ரம்மலோகம் சென்றார்.

ஹர் கன் முனிஹி ஜாத் பத் தேகீ |
பிகத் மோஹ் மன் ஹர்ஷ் பிஸேஷீ || 1394
அதி ஸபீத் நாரத பஹிம் ஆயே |
கஹி பத் ஆர்த் பசன் ஸுநாயே || 1395

சிவகணங்கள் வழியில் மாயை இல்லாத, மனத்தில் மகிழ்வுள்ள நாரதரைக் கண்டார்கள். இதையறிந்ததும் சிவ கணங்கள் இருவரும் பயபக்தியுடன் நாரதரிடம் வந்து அவர் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு துக்கத் துடன் கூறினார்கள்:

ஹர் கன் ஹம் ந பிப்ர முனிராயா |
பட் அபராத் கீன்ஹ பல் பாயா || 1396
ச்தாப் அனுக்ரஹ கர்ஹு க்ருபாலா |
போலே நாரத் தீனதயாலா || 1397

ஹே முனி ராஜரே! நாங்கள் ப்ராஹ்மணர்கள் இல்லை; சிவனாரின் தூதர்கள். நாங்கள் செய்த பெரும் அபராதத்திற்குப் பலனை அடைந்தோம். ஹே க்ருபா கரா! நாங்கள் தீனர்கள்; எங்கள் மீது அனுக்ரஹம் செய்து, இந்தச் சாபத்தைப் போக்குவீராக! என்றனர். அப்போது இருவர்மீதும் தயவு கொண்டு நாரதர்

நிஸிசர் ஜாய் ஹோஹு தும்ஹ தோவு |
பைபவ் பிபுல் தேஜ் பல் ஹோவு || 1398
புஜபல் பிஸ்வ ஜிதப் தும்ஹ ஜஹிஆ |
தரிஹஹிம் பிஷ்ணு மனுஜ் தனு தஹிஆ || 1399

நீங்கள் இருவரும் ராட்சதர்கள் ஆவீர்கள். உங்களிடம் ப்ரமாதமான அளவில் ஐச்வர்யம், ஒளி, பலம், இருக்கும். நீங்கள் உங்கள் புஜபலத்தினால் உலகை ஜயிப்பீர்கள். அப்போது விஷ்ணு பகவான் மானிட வடிவம் எடுப்பார்.

ஸமர் மரண் ஹரி ஹாத் தும்ஹாரா |
ஹோயிஹஹு முகுத் ந புனி ஸம்ஸாரா || 1400
சலே ஜுகல் முனிபத் ஸிர் நாயீ |
பயே நிஸாசர் கால்ஹி பாயீ || 1401

நேரம் வர வர இருவரும் நாரதரின் சரணங்களைப் பற்றிக் கொண்டு தலை வணங்கினார்கள். அப்போது நாரதர், ''நீங்கள் இருவரும் யுத்தத்தில் பகவானின் கைகளாலேயே மரணம் அடைவீர்கள்; பின்பு முக்தி கிடைக்கும். அதன் பின் மீண்டும் ஸம்ஸார வாழ்க்கை கிட்டாது; பிறவி கிடைக்காது'' என்று கூறிச் சென்றார். சிவகணங்கள் காலம் வந்தவுடன் ராட்சதர்களாக மாறினார்கள்.

ஏக் கல்ப ஏஹி ஹேது ப்ரபு
லீன்ஹ மனுஜ அவதார் |
ஸுர் ரஞ்ஜன் ஸஜ்ஜன் ஸுகத்
ஹரி பஞ்ஜன் புபிபார் || 1402

பிறகு; தேவதைகளின் துயர் நீக்கவும்; பக்தர்களின் ஸுகத்தைக் காக்கவும்; பூமியின் பாரத்தை ஒழிக்கவும்; உலகில் ஒரு கல்ப வருடம் கடந்து பகவான் ஹரி அவதாரம் எடுத்தார்.

ஏஹி பிதி ஜன்ம கர்ம ஹரி கேரே |
ஸுந்தர் ஸுகத் பிசித்ர கனேரே || 1403
கல்ப கல்ப ப்ரதி ப்ரபு அவதர்ஹீம் |
சாரு சரித் நானாபிதி கர்ஹீம் || 1404

இதே மாதிரி பகவான் ஹரி அனேகம் அழகிய ஸுந்தர ஸுகத்தைக் கொடுக்கக் கூடிய ஆச்சர்யமான பிறவிகளை எடுத்தார்; செயல்களைச் செய்தார் என்பதில் ஸந்தேஹமில்லை. யுகம் யுகமாக ப்ரபு அவதாரம் எடுத்துக் கொண்டே இருந்தார்; அழகிய லீலைகளைச் செய்தார்.

தப் தப் கதா முனீஸன்ஹ காயீ |
பரம புனீத் ப்ரபந்த பனாயீ || 1405
பிபித ப்ரஸங்க அனூப் பகானே |
கர்ஹிம் ந ஸுனி ஆசரஜு ஸயானே || 1406

அவருடைய அந்தந்தத் தருணத்துக் கதைகளை, முனி வர்கள் அந்தந்த ஸமயத்திற்கேற்ப அழகாகப் பாடினார் கள். இணையற்ற விதவிதமான நிகழ்ச்சிகளை வர்ணித் திருக்கிறார்கள். அந்த இணையேயில்லாத பல கதை களைப் பெரியவர்கள் தாங்களாகவே இயற்றிப் பாடு வதில் ஒன்றும் அதிசயிக்கத் தக்கபடி இல்லை. வித்வான் கள் கேட்டும், அறிந்தும், ஆச்சர்யமடைந்தது இல்லை. (ஏனெனில்; அறிவுள்ள பெரிய பிராஜ்ஞர்களுக்குப் பகவான் ஒருவரேதான். அவரைப் பற்றி எல்லாம் தெரியும். பல கதைகளை எடுத்துச் சொன்னாலும் ஆதிமூலம் அவர்தான் என்பதை அறிஞர்கள் அறிவார்கள்)

ஹரி அனந்த் ஹரிகதா அனந்தா |
கஹஹிம் ஸுனஹிம் பஹுபிதி ஸப் ஸந்தா ||1407
ராமசந்த்ர கே சரித் ஸுஹாயே |
கல்ப கோடி லகி ஜாஹிம் ந காயே || 1408

பகவான் முடிவற்றவர்; அதேபோல் அவர் கதை களும் முடிவில்லாதவை. எல்லா ரிஷிமுனிவர்களும் இக்கதைகளை அநேக விதமாகக் கேட்கிறார்கள்; கூறு கிறார்கள். ஆனால், ஸ்ரீ ராமச்சந்த்ரனின் கதையைக் கோடி கல்பங்களிலும் யாரும் பாடவே முடியாது. ஏனெனில்; முடிவற்ற கதை அது.

யஹ் ப்ரஸங்க் மைம் கஹா பவானீ |
ஹரி மாயாம் மோஹஹிம் முனி க்யானீ ||1409
ப்ரபு கௌதுகீ ப்ரணத் ஹிதகாரீ |
ஸேவத் ஸுலப் ஸகல் துக் ஹாரீ || 1410

மேலும், சிவபெருமான்; ஹே பார்வதி! நான் உனக்கு இந்நிகழ்ச்சியைத் தெரிவிக்கவே இக்கதையைக் கூறுகிறேன். அதாவது; பகவானுடைய மாயையில் பெரிய பெரிய ஜ்ஞானிகளும், மோஹமடைந்து தன்னை மறந்து விடுகிறார்கள். பகவான் தீனர்களிடமும், நம் பியவர்களிடமும், சரணடைந்தவர்களிடமும் தயை கொண்டவர். எவரேனும் அவருக்கு உண்மையுடன் ஸேவை செய்தால்; அவர்களுக்கு ஸுலபமாகக் கருணை புரிகிறார்; அவர்களுடைய துக்கத்தையும் துடைக்கிறார்.

ஸுர் நர் முனி கோஉ நாஹிம்
ஜேஹி ந மோஹ் மாயா ப்ரபல் |
அஸ் பிசாரி மன் மாஹிம்
பஜிய மஹாமாயா பதிஹி || 1411

தேவதைகள், மனிதர்கள், முனிவர்கள், இம்மாதிரி யாவருமே பகவானுடைய மோஹமாயையில் சிக்கித் தவித்தார்கள் என்பது தெரிந்த கதை. இம்மாதிரி ஆலோசித்து, மனத்தில் கொண்டு அந்த மாயாபதி யான பகவானைப் பஜனை செய்வாயாக.

அபர் ஹேது ஸுனு சைலகுமாரீ |
கஹவும் பிசித்ர கதா பிஸ்தாரீ || 1412
ஜேஹி காரன் அஜ் அகுண் அரூபா |
ப்ரஹ்ம பயவு கோஸல்புர் பூபா || 1413

ஹே பார்வதி! அவர் அவதாரம் எடுத்தற்குரிய மற்ற காரணத்தையும் கேள்; விஸ்தாரமாக அவ்விசித் ரக் கதையைக் கூறுகிறேன்; எந்தக் காரணத்தினால் ஜன்மம் இல்லாதவரும், நிர்குணமானவரும், உருவமே இல்லாதவருமான பரப்ரஹ்மம், கோஸலபுரியின் அரசரானாரோ;

ஜோ ப்ரபு பிபின் பிரத் தும்ஹ தேகா |
பந்து ஸமேத் தரேம் முனிபேஷா || 1414
ஜாஸு சரித் அவலோகி பவானீ |
ஸதீ ஸரீர் ரஹிஹு பௌரானீ || 1415

லக்ஷ்மணரோடு கூடிய அந்த ப்ரபுவான ஸ்ரீராமச் சந்த்ரனை நீ கானகத்தில் அலையக் கண்டாய், மேலும், தம்பியுடன் கூட அவரை முனிவர் வேஷத்தில் பார்த் தாய், ஹே பார்வதி! அவர் சரித்ரத்தைக் கேட்ட மாத்திரத்தில்; அவருடைய அந்தக் கதையைப் பார்த்து ஸதியான நீயும் முட்டாள்தனமாக நடந்து கொண் டாய்.

அஜ்ஹும் ந சாயா மிட்தி தும்ஹாரீ |
தாஸு சரித் ஸுனு ப்ரம ருஜ் ஹாரீ || 1416
லீலா கீன்ஹி ஜோ தேஹிம் அவதாரா |
ஸோ ஸப் கஹிஹவும் மதி அனுஸாரா || 1417

ஆனால், இன்னமும் நீ செய்த முட்டாள்தனமான அந்த மாயை நிழல் உன்னை விட்டு அகலவில்லை. ஆகவே, ப்ரமை நோயைப் போக்கும் அவரது சரித்ரத்தைக் கேட்பாயாக. அந்த அவதாரத்தில் என்ன என்ன லீலைகளைச் செய்தாரோ; அவைகளை என் புத்திக்கு எட்டியபடிக் கூறுகிறேன்.

பரத்வாஜ் ஸுனி சங்கர் பானீ |
ஸகுசி ஸப்ரேம் உமா முஸுகானீ || 1418
லகே பஹுரி பர்னை ப்ருஷகேதூ |
ஸோ அவதார் பயவு ஜேஹி ஹேதூ || 1419

ஹே பரத்வாஜரே! சிவனாரின் இந்த வார்த்தைகளைக் கேட்டு உமையானவள் நாணத்துடனும், ப்ரேமையுடனும் சிரித்துக் கொண்டாள். பிறகு இந்த ஸ்ரீராம அவதாரம் எதனால் ஏற்பட்டது? என்று வ்ருஷபக் கொடியோனான சிவபெருமான் வர்ணிக்கலானார் என்றார் யாக்ஜ்ஞவல்க்யர்.

ஸோ மைம் தும்ஹ ஸன் கஹஉம் ஸபு
ஸுனு முனீஸ் மன் லாயி |
ராம கதா கலிமல் ஹர்னி
மங்கல் கர்னி ஸுஹாயி || 1420

மேலும், தொடர்ந்து யாஜ்ஞவல்க்யர்; ஹே பரத்வாஜமுனிவரே! நான் உங்களிடம் எல்லாமே கூறுகிறேன். மனம் வைத்து நன்றாகக் கேளுங்கள். ஸ்ரீராமனுடைய கதையானது கலியுகத்தின் பாபங்களை விலக்கவும், சோபையுள்ள மங்களத்தை உண்டாக்கவும் அமைந்தது; மிகவும் அழகுள்ளது.

ஸ்வாயம்பூ மனு அரு ஸத்ரூபா |
ஜின்ஹ தேம் பை நர ஸ்ருஷ்டி அனூபா || 1421
தம்பதி தர்ம ஆசரன் நீகா |
அஜ்ஹும் காவ் ச்ருதி ஜின் கை லீகா || 1422

மேலும், ஸ்வாயம்புவ மனுவும், அவர் மனைவி சதரூபா என்பவரும் மனுஷ்ய ஸ்ருஷ்டி தத்வத்தின் கர்த்தாக்கள். கணவன் மனைவியான இவர்களுக்குள்ளிருக்கும் நடத்தையும், கர்மமும், நியமமும் வெகுவாகப்

புகழக்கூடியவை. வேதங்களே இன்னும் இவர்களைப் பற்றி மரியாதையுடன் கூறுகின்றன.

நிருப் உத்தானபாத் ஸுத் தாஸூ |
த்ருவ் ஹரி பக்த பயஉ ஸுத ஜாஸூ || 1423
லகு ஸுத் நாம் ப்ரிய ப்ரத் தாஹீ |
பேத புரான் ப்ரஸம்ஸஹிம் ஜாஹீ || 1424

அவர்களது பிள்ளையின் பெயர் உத்தானபாதன். அவனுக்கு ஹரி பக்தியில் ச்ரேஷ்டனான த்ருவன் என்ற மகன் பிறந்தான். ஸ்வயம்புவமனுவின் சின்னப் பிள்ளையின் பெயர் ப்ரிய வ்ரதன். இவனைப் பற்றிய வரலாறு, கீர்த்தி வேத புராணங்களில் இருக்கிறது.

தேவஹூதி புனி தாஸூ குமாரீ |
ஜோ முனி கர்தம் கை ப்ரிய நாரீ || 1425
ஆதிதேவ் ப்ரபு தீன்தயாலா |
ஜடர் தரேவு ஜேஹிம் கபில் க்ருபாலா || 1426

ஸ்வாயம்புவ மனுவின் பெண்ணின் பெயர் தேவ ஹூதி. இவள் கர்தமருஷியின் அன்பு மனைவியானாள். ஆதி தேவனான, தீனதயாளுவான பகவான் இவளு டைய கர்பத்தின் மூலமே கபிலதேவன் என்ற பெயரில் பிறப்பை எடுத்தார்.

ஸாங்க்ய சாஸ்த்ர ஜின்ஹ ப்ரகட் பகானா |
தத்வ பிசார் நிபுண் பக்வானா || 1427
தேஹிம் மனு ராஜ் கீன்ஹ பஹூ காலா |
ப்ரபு ஆயஸூ ஸப் பிதி ப்ரதிபாலா || 1428

தத்வங்களை ஆராய்வதில் தலைசிறந்த இந்தப் பகவான் கபில தேவன் ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ப்ர ஸித்தி பெற்ற ரூபத்தில் செய்தார். (தத்துவ விஷயங் களை அற்புதமாக எழுதினார்) இப்படி இருக்கும் பொழுது ராஜா ஸ்வாயம்புவ மனுவானவர் வெகு காலம் வரை பகவானின் ஆஜ்ஞைப்படி ராஜ்யம் நடத்தினார். அவர் தர்ம நிஷ்ட்டைகளைச் சரி வரச் செய்து வந்தார்.

ஹோயி ந பிஷய் பிராக்
பவன் பஸத் பா சௌத்பன் |
ஹ்ருதயம் பஹுத் துக் லாக்
ஜன்ம கயவு ஹரி பக்தி பினு || 1429

விஷய போகங்களினால் வைராக்யம் உண்டாகாது. ஆகவே; இல்லத்தில் இருந்து இருந்தே எனது நான் காவது தர்மம் ஆன கிழப்பருவம் வந்து விட்டதே என்று ஸ்வாயம்புவ மனுவானவர் எண்ணினார். அவர் மனத்தில் பெரிதும் துக்கம் உண்டானது. இதுவரை பகவானிடம் பக்தி செய்யாமலேயே ஜன்மத்தைக் கழித்து விட்டேனே என்று வருந்தினார்.

பர்பஸ் ராஜ் ஸுதஹி தப் தீன்ஹா |
நாரி ஸமேத் கவன் பன் கீன்ஹா || 1430
தீர்த் பர் நைமிஷ் பிக்யாதா |
அதி புனீத் ஸாதக் ஸித்தி தாதா || 1431

இவ்வாறு எண்ணிய மனு வலுக்கட்டாயமாக ராஜ்ய பரிபாலனத்தைத் தன் மகனுக்கு அளித்து விட்டு, ராணியுடன் கூட வனமேகினான். ஸித்திகளை யும், புண்யத்தையும் கொடுக்க வல்ல புண்ய தீர்த்தங் களில் பெயர் பெற்றது நைமி சாரண்யம்.

பஸ்ஹிம் தஹாம் முனி ஸித்த ஸமாஜா |
தஹம் ஹியம் ஹர்ஷி சலேவு மனுராஜா ||1432
பந்த் ஜாத் ஸோஹஹிம் மதி தீரா |
க்யான் பக்தி ஜனு தரேம் ஸரீரா || 1433

அந்த நைமிசாரண்ய ஸ்தலத்தில் முனிவர்களின், ஸித்தர், யோகிகளின் ஸமூஹம் வஸித்து வந்தது. ராஜா மனு ஆனந்தத்துடன் அங்குச் சென்றார். தீரனும், புத்திசாலியுமான மனு தன் மனைவியுடன் வழியில் செல்லும்போது; ஜ்ஞானமும், வைராக்யமும், பக்தியும் எல்லாமே சேர்ந்து உருவெடுத்து வந்த சரீரம் கொண்ட வர்கள் போல் தோன்றினார்கள்.

பஹுஞ்சே ஜாயி தேனுமதி தீரா |
ஹர்ஷி நஹாநே நிர்மல் நீரா || 1434
ஆயே மிலன் ஸித்த முனி க்யானீ |
தர்ம துரந்தர் ந்ருப ருஷி ஜானீ || 1435

நடந்தவண்ணம் அவர்கள் கோமதி நதிக்கரையைச் சென்று அடைந்தார்கள். மகிழ்வான சித்தத்துடன் நதியில் இறங்கி ஸ்நானம் செய்தார்கள். ராணியையும், மனுவையும் ராஜர்ஷி தர்மாத்மா என்று எண்ணி, முனிவர்களும், ஸித்தர்களும் அவரைப் பார்க்க அங்கு வந்தார்கள்.

ஜஹம் ஜஹம் தீர்த் ரஹே ஸுஹாயே |
முனின்ஹ ஸகல் ஸாதர் கர்வாயே || *1436*
க்ருச ஸரீர் முனிபட் பரிதானா |
ஸத் ஸமாஜ் நித் ஸுனஹிம் புரானா || *1437*

எங்கு எங்கு அழகிய தீர்த்த ஸ்தலங்கள் இருக்கின்றனவோ; அங்கெல்லாம் முனிவர்கள் மரியாதையுடன் ராஜாவை அழைத்துச் சென்று தரிசிக்க வைத்தார்கள். ராஜாவின் சரீரம் நாளடைவில் துர்பலமடைந்தது. முனிவனைப் போன்ற மரவுரி உடைகளை அணிந்து, ரிஷிமுனிவர்களின் மத்தியில் அமர்ந்து தினம் தினம் புராணங்களைக் கேட்க ஆரம்பித்தனர்.

த்வாதஸ் அச்சர மந்த்ர புனி
ஜப்ஹிம் ஸஹித் அனுராக் |
பாஸுதேவ பத பங்கருஹ்
தம்பதி மன் அதிலாக் || *1438*

பகவான் வாஸுதேவனின் சரண கமலங்களை மனத்தில் இருத்திக் கொண்டு அந்த மனுவும், அவரது மனைவியும் பன்னிரெண்டு அக்ஷரம் கொண்ட ''ஓம் நமோ பகவதே வாஸுதேவாய'' என்று ப்ரேமையுடன் ஜபிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

கர்ஹிம் அஹார் சாக் பல் கந்தா |
ஸுமிர்ஹிம் ப்ரஹ்ம ஸச்சிதானந்தா || *1439*
புனி ஹரி ஹேது கரன் தப் லாகே |
பாரி அதார் மூல் பல் த்யாகே || *1440*

கீரை வகைகள், பழங்கள், கிழங்குகள் முதலியவைகளை ஆஹாரமாகக் கொண்டு, ஸதா சச்சிதானந்த ப்ரம்மத்தை த்யானித்து வணங்கினார்கள். பின்பு பகவானை, ஸ்ரீஹரியை அடையத் தவமிருந்தார்கள். பிறகு

வெறும் ஜலத்தை மட்டும் குடித்துக் கொண்டிருந் தார்கள்; கிழங்குகளையும், பழங்களையும் விட்டுவிட் டார்கள்.

உர் அபிலாஷ் நிரந்தர் ஹோயீ ।
தேகிய நயன் பரம ப்ரபு ஸோயீ ॥ 1441
அகுண் அகண்ட் அனந்த் அநாதீ ।
ஜேஹி சிந்த்ஹிம் பரமார்த்தபாதீ ॥ 1442

பரம புருஷனான பகவானின் தரிசனத்தைக் கண் ணால் கண்டு கொண்டே இருக்க வேண்டும். நிர் குணமானவரும், அகண்டமானவரும், முடிவே இல் லாதவரும், அனாதியானவரும், மோட்சத்தை நாடு வோருக்கு, ப்ரம்மஜ்ஞானிகளுக்கு, தத்வஜ்ஞானிகளுக்கு இன்பமான தரிசனம் கொடுக்க வல்லவருமான பக வானை அடைவதே தங்கள் முதற்கடமை என்ற எண் ணம், இதே ஆசை அவர்கள் ஹிருதயத்தில் எந்நேரமும் நிறைந்து இருந்தது.

நேதி நேதி ஜேஹி வேத் நிரூபா ।
நிஜானந்த நிருபாதி அநூபா ॥ 1443
சம்பு பிரஞ்சி பிஷ்ணு பக்வானா ।
உபஜஹிம் ஜாஸு அம்ஸ தே நாநா ॥ 1444

வேதங்கள் பகவான் 'இல்லை இல்லை' என்ற படியே அவரை ஸத்யஸ்வரூபனாக நிரூபணம் செய் கின்றன; அப்படிப்பட்ட அவர் ஆனந்தமயமானவர், பதவியற்றவர், உபமான மற்றவர், இந்த பரப்ரம்மத் தின் அம்சத்திலிருந்துதான் சிவன், ப்ரம்மன், விஷ்ணு போன்றவர்கள் தோன்றினார்கள்.

ஐஸேவு ப்ரபு ஸேவக் பஸ் அஹயீ ।
பக்த ஹேது லீலாதனு கஹயீ ॥ 1445
ஜெளம் யஹ் பசன் ஸத்ய ச்ருதி பாஷா ।
தெள ஹமார் பூஜிஹி அபிலாஷா ॥ 1446

இத்தகைய சிறந்த மஹான் பக்தர்களுக்காக ஸேவ கனாக இருக்கிறார்; தெய்வீக சரீரத்தை தரித்துக் கொண்டிருக்கிறார். நமது விருப்பங்கள் கட்டாயம் நிறைவேறும். வேதங்களில் கூட இவ்வார்த்தைகள் பொய்க்காது என்று கூறப்பட்டிருக்கிறது.

ஏஹி பிதி பீதே பர்ஷ்
ஷட் ஸஹஸ் பாரி ஆஹார் |
ஸம்பத் ஸப்த ஸஹஸ்ர புனி
ரஹே ஸமீர் அதார் || 1447

இவ்விதம் மனு தம்பதிகள் ஆறு ஆயிரம் ஆண்டுகள் ஜலத்தையே ஆஹாரமாகக் கொண்டு ஜீவித்தார்கள். பின்னர் ஏழு ஆயிரம் ஆண்டுகள் காற்றையே உட் கொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

பரஸ் ஸஹஸ் தஸ் த்யாகேவு ஸோவூ |
டாடே ரஹே ஏக் பத் தோவு || 1448
பிதி ஹரி ஹர் தப் தேகி அபாரா |
மனு ஸமீப் ஆயே பஹு பாரா || 1449

பத்தாயிரம் ஆண்டுகள் காற்றையும் உண்ணாது த்யாகம் செய்து விட்டு, இருவரும் ஒற்றைக் காலால் தவம் இருந்தார்கள். ப்ரம்மனும், விஷ்ணுவும், சிவனும், இவர்களுடைய கரை காணமுடியாத தபஸைக் கண்டு மனுவின் அருகில் வந்தார்கள்.

மாகஹு பர் பஹுபாந்தி லோபாயே |
பரம தீர் நஹிம் சல்ஹிம் சலாயே || 1450
அஸ்திமாத்ர ஹோயி ரஹே சரீரா |
ததபி மனாக் மன்ஹிம் நஹிம் பீரா || 1451

தேவர்கள் மூவரும் மனு தம்பதியிடம் சென்று; நீங்கள் எந்த வரம் வேண்டுமானாலும் கேளுங்கள், என்று பலவிதமாக ஆசை காட்டி வற்புறுத்தினார்கள். ஆனால், தைர்யசாலிகளான அந்தத் தம்பதிகள் தங்கள் நிலையை விட்டு மாறவில்லை. அவர்களது சரீரம் வெறும் எலும்பினால் மூடப்பட்டிருந்தது என்றாலும், அந்தத் தைரியசாலிகள் கொஞ்சமும் பயப்படாமல் தங்கள் எண்ணத்திலேயே ஸ்த்திரமாக இருந்தார்கள். அவர்கள் மனத்தில் கொஞ்சமும் எவ்வித வருத்தமும் இல்லை.

ப்ரபு ஸர்பக்ய தாஸ் நிஜ ஜானீ |
கதி அநன்ய தாபஸ் நிருப ரானீ || 1452

மாகு மாகு பரு பை நப் பானீ ।
பரம கபீர் க்ருபாம்ருத் ஸானீ ॥ **1453**

ஸர்வஜ்ஞரான ஈச்வரன் தபஸ்விகளான ராஜா-ராணியைத் தன்னை அண்டி வந்த பக்தர்கள், தாஸர்கள் என்று தெரிந்து கொண்டார். அப்பொழுது ஆகாயத்திலிருந்து அசரீரி வாக்கு கம்பீரமான குரலில் ''ஹே மனு! வரத்தைக் கேள்.'' என்பதாக வெளிப்பட்டது.

ம்ருதக் ஜிஆவனி கிரா ஸுஹாயீ ।
ச்ரவண் ரந்த்ர ஹோயி உர் ஜப் ஆயீ ॥ **1454**
ஹ்ருஷ்ட புஷ்ட தன் பயே ஸுஹாயே ।
மான்ஹும் அப்ஹிம் பவன் தே ஆயே ॥ **1455**

இறந்தவரைப் பிழைப்பிக்கும் இந்த ஆகாச வாணியானது எப்போது இவர்களின் காதுகள் வழியாகப் புகுந்து ஹிருதயத்தில் இடம் பெற்றதோ; அதே ஸமயம் எலும்பும் தோலுமாக இருந்த மனு தம்பதிகளின் சரீரம் கொழுத்து உருண்ட அழகான சக்தி பெற்றுப் புதுமையுடன் விளங்கலானது. இப்போதுதான் வீட்டிலிருந்து தபஸ்ஸிற்காகக் காடு வந்த மாதிரி அத்தனை புத்தொளியுடன் இருந்தது.

ச்ரவன் ஸுதா ஸம பசன் ஸுனி
புலக் ப்ரபுல்லித காத் ।
போலே மனு கரி தண்டவத்
ப்ரேம ந ஹ்ருதயம் ஸமாத் ॥ **1456**

காதுகளினால் அம்ருதவாணிளைக் கேட்டவுடன் அவர்களின் உடல் புளங்காங்கிதம் அடைந்தது. ஹிருதயத்தில் எல்லை கடந்த அன்பை வெளியிட்டுக் கொண்டு, தண்டம் போல் நமஸ்காரம் செய்து மனுவானவர் கூறினார்.

ஸுனு ஸேவக் ஸுர்தரு ஸுர்தேனூ ।
பிதி ஹரி ஹர் பந்தித் பத் ரேனூ ॥ **1457**
ஸேவத் ஸுலப் ஸகல் ஸுகதாயக் ।
ப்ரனத் பால் ஸசராசர் நாயக் ॥ **1458**

ஹே ப்ரபுவே! ஹே! தாஸர்களுக்கு இஷ்டப்படி பலனைக் கொடுக்கக் கூடிய கல்பக வ்ருக்ஷமே! ஹே! காமதேனு! கேளுங்கள்; தங்களுடைய சரண கமலங்களின் தூளிகளை எந்நேரமும் ப்ரஹ்மனும், விஷ்ணுவும், சங்கரனும் வணங்குகிறார்கள். ஸேவை செய்வதில் எளியவன் நீர்தான். தஞ்சம் என்று வந்த தீனர்களைக் காக்கும் சராசர ஸ்வாமியும், ஸுகத்தை கொடுப்பவரும் தாங்கள்தான்!

ஜெளம் அனாத் ஹித் ஹம் பர் நேஹு |
தெள ப்ரஸன்ன ஹோயி யஹ் பர் தேஹு || 1459
ஜோ ஸரூப் பஸ் சிவ் மன் மாஹீம் |
ஜேஹி காரண் முனி ஜதன் கராஹீம் || 1460

அனாதைகளுக்கு இதம் அளிக்கக்கூடியவரே! எங்களிடம் அன்பு தங்களுக்கு இருந்தால், மகிழ்வுடைய மனத்துடன் இந்த வரம் கொடுங்கள்.

எந்த ஸ்வரூபமானது சங்கரனின் மனத்தில் குடி கொண்டுள்ளதோ; எதை அடைய முனிவர்கள் பெரும் முயற்சி செய்கிறார்களோ; அந்த வரத்தை எனக்கு அளியுங்கள்.

ஜோ புசுண்டி மன் மானஸ் ஹம்ஸா |
ஸகுன் அகுன் ஜேஹி நிகம் ப்ரஸம்ஸா || 1461
தேக்ஹிம் ஹம் ஸோ ரூப் பரி லோசன் |
க்ருபா கர்ஹு ப்ரணதார்தி மோசன் || 1462

எவர் காகபுசுண்டி முனிவரின் மனமாகிற மான ஸரோவரில் விளையாடும் ஹம்ஸ பட்சியோ, எவரை வேதங்கள் ஸகுணம், நிர்குணம் என்பதாகப் புகழ்கின்றனவோ; அம்மாதிரியான அதே தங்களுடைய ரூபத்தை நாங்கள் எங்கள் கண்களினால் பார்க்க விரும்புகிறோம். தஞ்சமடைந்தவர்களின் துன்பத்தைப் போக்க வல்ல ப்ரணதார்த்தியே! க்ருபை செய்யுங்கள் என்றார்.

தம்பதி பசன் பரம ப்ரிய லாகே |
ம்ருதுல பிநீத் ப்ரேம ரஸ் பாகே || 1463
பக்த பசல் ப்ரபு க்ருபாநிதானா |
பிஸ்வபாஸ் ப்ரகடே பக்வானா || 1464

ராஜா-ராணி ஆகிய இரண்டு பேருடைய அடக்க மான வார்த்தைகள் பகவானுக்கு ரொம்பவும் ப்ரிய மாகப்பட்டது. (ஏனென்றால்; அத்தனை விஷயத்து டனும், அத்தனை ம்ருதுவான அன்புடனும் கலந்த அவர்கள் வார்த்தை ப்ரேம ரஸத்தில் ஊறியதாக இருந்தது) பக்தர்களின் மீது க்ருபை செய்யக் கூடிய பகவானின் குழந்தை மீது அன்பு கொலண்ட பசுவைப் போல், எந்தப் பரம்பொருளின் மீது உலகமே வ்யாபித் திருக்கிறதோ; அப்படிப்பட்ட அவர் மனு தம்பதிகளின் முன்னால் தோன்றினார்.

நீல ஸரோருஹ நீல மணி
நீல நீரதர் ச்யாம் |
லாஜ்ஹிம் தன் ஸோபா நிரகி
கோடி கோடி ஸத் காம் || **1465**

நீலக் கமலம், நீலமணி, நீல நீருண்ட மேகம் போல் அவருடைய கரிய சரீரத்தின் அழகைக் கண்டு கோடிக் கணக்கான மன்மதன் நாண வேண்டும். இப்படி ஒரு ரூபத்துடன் பகவான் தோன்றினார்.

ஸாரத் மயங்க் பதன் சபி ஸீம்வா |
சாரு கபோல் சிபுக் தர் க்ரீவா || **1466**
அதர் அருண் ரத் ஸுந்தர் நாஸா |
பிது கர் நிகர் பிநிந்தக் ஹாஸா || **1467**

சரத்ருதுவின் முழுச் சந்த்ரனைப் போன்று அவரு டைய ரூபமும், முகமும் இருந்தன. அழகிய கன்னம், முகவாய், சங்கைப் போல் மூன்று ரேகைகள் உள்ள அழகிய கழுத்து, சிகப்பான உதடுகள், அழகிய பற்கள், அழகிய மூக்கு நுனி. சிரித்தால் சந்த்ர கிரணங்களே லஜ்ஜை அடையும்; இத்தகைய பேரழகு கொண்டவர்.

நவ அம்புஜ் அம்பக் சபி நீகீ |
சிதவனி லலித் பாம்வதீ ஜீகீ || **1468**
ப்ருகுடி மனோஜ் சாப் சபி ஹாரீ |
திலக் லலாட் படல் துதிகாரீ || **1469**

புதிய நீலக் கமலங்களைப் போல் அவர் கண்கள் இருந்தன. அவரது பார்வை மனத்தைக் கொள்ளை

கொண்டது. வளைந்த புருவங்கள் காமதேவனின் வில்லின் காந்தியைத் தோற்கடிப்பது போல் இருந்தன. நெற்றியில் ஒளியுள்ள திலகம் மேகத்தின் நடுவில் தோன்றும் மின்னலைப் போல் ப்ரகாசித்தது.

குண்டல் மகர் முகுட் சிர் ப்ராஜா |
குடில் கேஸ் ஜனு மதுப் ஸமாஜா || 1470
உர் ஸ்ரீபத்ஸ் ருசிர் பன்மாலா |
பதிக் ஹார் பூஷண் மணிஜாலா || 1471

மீன் போன்ற குண்டலங்கள் காதுகளிலும், தலையில் மகுடமும் விளங்கின. தலையில் உள்ள சுருண்ட, கருத்த மயிர் கற்றைகள், வண்டுகளின் கூட்டம் போலவும் தோன்றின. மார்பில் ஸ்ரீவத்ஸ சின்னமும், கழுத்தில் ப்ரகாசமுள்ள வனமாலையும், வைரம்; வைடூர்ய மணி பதித்த நகைகளும் அணிந்து கொண்டு காட்சியளித்த அவரின் ரூபம் அதி அற்புதமாக இருந்தது.

கேஹரி கந்தர் சாரு ஜனேவு |
பாஹு பிபூஷண் ஸுந்தர் தேவு || 1472
கரி கர் ஸரிஸ் ஸுபக் புஜதண்டா |
கடி நிஷங்க் கர் ஸர் கோதண்டா || 1473

சிம்மத்தின் தோள்களைப் போல் உயர்ந்த தோள்களில் அழகான பூணூல் இருந்தது. கைகளில் அழகிய கங்கணங்களை அணிந்திருந்தார். யானையின் துதிக்கை போன்ற நீண்ட அழகிய இரண்டு புஜங்கள், இடுப்பில் அம்பராத் தூணியும், கையில் பாணமும், தனுஸும் மிகுந்த ஒளியூட்டித் திகழ்ந்தன.

தடித் பினந்தக் பீத்
உதர் ரேக் பர் தீனி |
நாபி மனோஹர் லேதி ஜனு
ஜமுன் பம்வர் சபி சீனி || 1474

அவருடைய தங்கம் போன்ற பீதாம்பர ஒளியைக் கண்டு மின்னலே நாணுகிறது. வயிற்றில் அழகிய மூன்று கோடுகள் இருந்தன. யமுனை நதியின் சுழலில் உள்ள ஆழம் அவர் நாபிக்குழியின் அழகிற்கு ஈடாகாது.

பத் ராஜீவ் பர்ணி நஹிம் ஜாஹீம் |
முனி மன் மதுப் பஸ்ஹிம் ஜேன்ஹ மாஹீம் || 1475
பாம பாக் சோபதி அனுகூலா |
ஆதி சக்தி சபி நிதி ஜக்மூலா || 1476

முனிவர்களின் மனம் ஆகிற வண்டுகள் மொய்க்கும் அவரது சரண கமலங்களின் அழகை வர்ணிக்க இயலாது. அந்தப்பகவானின் இடது பக்கத்தில் எப்போதும் அனுகூலம் செய்யும் அழகின், இருப்பிடமான, உலகிற்கே மூலகாரணமான; ஆதி சக்தியான, ஜானகிதேவி இருக்கிறாள்.

ஜாஸு அம்ஸ் உபஜஹிம் குண்கானீ |
அகணித் லச்சி உமா ப்ரஹ்மானீ || 1477
ப்ருகுடி பிலாஸ் ஜாஸு ஜக் ஹோயீ |
ராம் பாம் திசி ஸீதா ஸோயீ || 1478

மேலும், எவருடைய அம்சத்தினால் எண்ணற்ற குணத்தில் சிறந்த லக்ஷ்மி, பார்வதி, ப்ரஹ்மாணீ (ஸரஸ்வதி) போன்ற அநேக சக்திகள் உண்டாயினரோ; எவருடைய புருவத்தை அசைத்த மாத்ரத்தில் உலகமே உற்பத்தியாகிறதோ; அப்படிப்பட்ட சக்தி வடிவான ஸீதா தேவியே ஸ்ரீராமபிரானின் இடப் பாகத்தில் சோபையளித்துக் கொண்டிருந்தார்.

சபி ஸமுத்ர ஹரிரூப பிலோகீ |
ஏக்டக் ரஹே நயன் படரோகீ || 1479
சிதவ்ஹிம் ஸாதர் ரூப் அனூபா |
த்ருப்தி ந மானஹிம் மனு ஸத்ரூபா || 1480

பிறகு ஒளிக்கடலான பகவான் ஸ்ரீஹரியின் உருவத்தைக் கண்ட மனுவும்-சதரூபாவும், இருவரும் இமையையும் கொட்டாமல் ஒரு பார்வையுடன் அயர்ந்து நின்று விட்டார்கள். அந்த இணையற்ற அவரது ரூபத்தை ஆதரவுடன் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ராஜா மனுவிற்கும், சதரூபாவிற்கும் வெகுநேரம் பார்த்தும் த்ருப்தியளிக்கவில்லை. இன்னும் இன்னும் என்று ஏங்கி நின்றார்கள்.

ஹர்ஷ் பிபஸ் தன் தசா புலானீ |
பரே தண்ட் இவ கஹி பத் பானீ || 1481
சிர் பர்ஸே ப்ரபு நிஜ கர் கஞ்ஜா |
துரத் உடாயே கருணா புஞ்ஜா || 1482

மேலும், ப்ரஸன்ன மடைந்த தம்பதிகள் தங்கள் சரீர நிலையை, நினைவை மறந்தார்கள். கைகளால் பகவானின் சரணங்களைப் பிடித்துக் கொண்டு, (எட்டு அங்கங்களும் தரையில்படும்படி) ஸாஷ்டங்க நமஸ் காரம் செய்தார்கள். ப்ரபு ஹரியானவர் தன் தாமரைக் கைகளால் அவர்களின் தலையைத் தொட்டு, அவர் களுக்கு க்ருபை செய்த உடனே எழுந்தார்கள்.

போலே க்ருபாநிதான் புனி
அதி ப்ரஸன்ன மோஹி ஜானி |
மாகஹு பர் ஜோயி பாவ்
மன் மஹாதானி அனுமானி || 1483

மேலும், அருளாளனான பகவான், நான் தங் களுடைய பக்தியில் மிகவும் மகிழ்ந்தேன். நாம் வரம் கொடுக்கக் கூடியவர் என்பதை மனத்தில் எண்ணிப் பார்த்து உங்கள் மனத்தில் என்ன இச்சைகள் இருக்கின் றனவோ; அவைகளைத் தயங்காமல் கூறிப் பெறுங்கள் என்றார்.

ஸுனி ப்ரபு பசன் ஜோரி ஜுக் பானீ |
தரி தீரஜு போலீ ம்ருது பானீ || 1484
நாத் தேகி பத கமல் தும்ஹாரே |
அப் பூரே ஸப் காம் ஹமாரே || 1485

பகவானுடைய வசனத்தைக் கேட்ட மனுராஜா தம் பதியர்; மனத்தில் தைரியம் கொண்டு, கைகளைக் கூப் பியவாறே ம்ருதுவான குரலில்; ''ஹே ஸ்வாமி! தங்கள் சரண கமலங்களை நோக்கின மாத்ரத்தில் எமது காரியங்கள் எல்லாமே நிறைவேறி விட்டன போல் தோன்றுகிறது.''

ஏக் லாலஸா படி உர் மாஹீம் |
ஸுகம் அகம் கஹி ஜாதி ஸோ நாஹீம் || 1486

தும்ஹஹி தேத் அதி ஸுகம் கோஸாயீம் |
அகம் லாக் மோஹி நிஜ் க்ருபனாயீம் || 1487

ஆயினும், என் மனத்தில் பெரிதும் ஓர் ஆசையிருக் கிறது. அது நிறைவேறுவது சுலபமானதுதான். ஆனா லும் அதை அடைவது கடினம். அதன் காரணமாகக் கூற முடியவில்லை. ஹே ஸ்வாமி! அதை நிறைவேற்றி வைப்பது என்பது உமக்கு வெகு சுலபம். ஆனால்; என்னுடைய கஞ்சத்தனம் காரணமாக அது ஸாத்ய மாகுமா என்று நான் யோசிக்கிறேன்.

ஜதா தரித்ர பிபுத் தரு பாயீ |
பஹு ஸம்பதி மாகத் ஸகுசாயீ || 1488
தாஸு ப்ரபாவு ஜான் நஹிம் ஸோயீ |
ததா ஹ்ருதயம் மம ஸம்ஸய் ஹோயீ || 1489

மேலும், தரித்ரன் ஒருவன் கல்ப வ்ருக்ஷத்தின் அடியில் போய் நின்றும்; ஏராளமான தனம் கேட்க வெட்கப்படுகிறான். ஏனெனில்; தரித்ரன் அவன்; அவனுக்கு ஒரு சிறு அளவே போதுமானது. அந்த வ்ருக்ஷத்தின் மஹிமை அவனுக்குத் தெரியாது; ஆகவே, யோஜனையில் ஆழ்கிறான். அதே போல் நான் இப் பொழுது என் மன ஸந்தேஹத்துடன் தங்களைக் கண்டதும் ஒன்றும் புரியாமல் நிற்கிறேன்.

ஸோ தும்ஹ ஜானஹு அந்தர்ஜாமீ |
புர்வஹு மோர் மனோரத் ஸ்வாமீ || 1490
ஸகுச் பிஹாயி மாகு ந்ருப் மோஹீ |
மோரேம் நஹிம் அதேய் கசு தோஹீ || 1491

ஹே ஸ்வாமி! தாங்கள் அந்தர்யாமி, உள்ளேயே இருப்பவர். தாங்கள் எல்லாம் அறிந்தவர். எங்களு டைய மனோ அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யுங்கள். என்றார் மனு. பகவான் உடனே; ஹே ராஜன்! எது வேண்டுமானாலும் கொஞ்சமும் யோசிக்காமல், ஸங் கோசப்படாமல் கேளும். உமக்குக் கொடுக்க முடியாதது ஒன்றும் இல்லை என்றார்.

''தானி சிரோமணி க்ருபாநிதி
நாத் கஹவும் ஸதிபாவு |

சாஹவும் தும்ஹஹி ஸமான் ஸுத்
ப்ரபு ஸன் கவன் துராவு || **1492**

பிறகு அரசன்; மேலும், '' வாரி வழங்குபவர்களுக் கெல்லாம் சிரோமணியே! அருளாளனே! ஹே நாதனே! நான் மனத்தில் உள்ள உண்மையான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நாம் தங்களிடம் நல்லது எதையும் மறைக்க விரும்பவில்லை. ஆம், எமக்குத் தங்களைப் போன்ற புத்ரன் தான் வேண்டும். கட் டாயம் இந்த வரம் கொடுக்க வேண்டும்'' என்றார் மனு.

தேகி ப்ரீதி ஸுனி பசன் அமோலே |
ஏவமஸ்து கருணாநிதி போலே || **1493**
ஆபு ஸரிஸ் கோஜெளம் கஹும் ஜாயீ |
நிருப் தவ் தநய் ஹோப் மைம் ஆயீ || **1494**

ராஜாவின் அபாரமான ப்ரீதியைக் கண்டு, அவரது விலைமதிப்பற்ற வார்த்தைகளைக் கேட்டு, பகவான்-தயாஸாகரர்; ''நீர் கேட்டபடியே நடக்கட்டும், என் னைப் போன்ற புத்ரனை நான் எங்குப் போய்த் தேடு வேன்? ஹே ராஜனே! உம்முடைய பிள்ளையாக நானே ஆகிறேன் கவலைப்படாதீர்'' என்றார்.

சதரூப்ஹி பிலோகி கர் ஜோரேம் |
தேவி மாகு பரு ஜோ ருசி தோரேம் || **1495**
ஜோ பரு நாத் சதுர் நிருப் மாகா |
ஸோயி க்ருபால் மோஹி அதி ப்ரிய லாகா ||1496

கை கூப்பி நிற்கும் ராணி சதரூபாவை நோக்கிப் பகவான்; ''ஹே தேவி! உன்னுடைய மனத்தில் என்ன இருக்கிறதோ; அதன்படி வரத்தைக் கேள்.'' என்றார். அதற்குச் சதரூபா; ''பகவானே! ஹே நாதனே! எந்த வரத்தைப் பராக்ரமசாலியான என் கணவர் கேட் டாரோ; அதில்தான் எனக்கும் இச்சையுண்டு. அதுவே எனக்கு ஆனந்தம் அளிக்கக்கூடியது'' என்றாள்.

ப்ரபு பரந்து ஸுடி ஹோதி டிடாயீ |
ஜதபி பக்த ஹித் தும்ஹஹி ஸோஹாயீ ||1497

தும்ஹ ப்ரஹ்மாதி ஜனக் ஜக் ஸ்வாமீ |
ப்ரஹ்ம ஸகல் உர் அந்தர்ஜாமீ || **1498**

ஹே ப்ரபு! எப்படியும் நாம் கேட்பது தங்களுக்கு அதிகப்ரஸங்கித்தனமாக இருக்கலாம். பக்தர்களுக்கு நனமையைச் செய்பவரல்லவா தாங்கள். ஆகவே, நாங்கள் கேட்பது தவறாக இருந்தாலும் தங்களுக்கு நேர்மையாகவும் தோன்றலாம். தாங்கள் ப்ரம்மாதி தேவர்களின் தந்தை.

உலகின் ஸ்வாமி! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஸாட்சாத் ப்ரம்மம். ஜகத்தில் எதையும் அறியும் அந்தர்யாமி தாங்கள் .

அஸ் ஸமுஜத் மன் ஸம்ஸய் ஹோயீ |
கஹா ஜோ ப்ரபு ப்ரவான் புனி ஸோயீ ||1499
ஜே நிஜ பக்த நாத் தவ அஹஹீம் |
ஜோ ஸுக் பாவ்ஹிம் ஜோ கதி லஹஹீம் ||1500

இம்மாதிரித் தங்களைத் தரிசித்து, காதுகளினால் இவ்வார்த்தைகளைக் கேட்ட என் மனம் ஸந்தேஹமடைகிறது. நம்பவே முடியவில்லை; பின்னும் தங்களுடைய வார்த்தையே ப்ரமாணம்; ஹே நாதனே! தங்களை நிரந்தரமாக ப்ரீதியுடன் பக்தி செய்யும் பக்தர்களுக்கு எவ்வித ஸுகமளிப்பீர்களோ; நிலையை அளிப்பீர்களோ; சிறந்த அதே ஸுகத்தை எனக்குக் கொடுங்கள்.

ஸோயி ஸுக் ஸோயி கதி ஸோயி பக்தி
ஸோயி நிஜ சரண் ஸ்நேஹு |
ஸோயி பிபேக் ஸோயி ரஹ்னி
ப்ரபு ஹம்ஹி க்ருபா கரி தேஹு || **1501**

ஹேப்ரபுவே! அதே ஸுகம், அதே நிலை, அதே பக்தி, அதே தங்கள் திருவடிகளில் ப்ரேமை, அதே அறிவு, அதே இருப்பிடம் யாவற்றையும் க்ருபை செய்து எங்களுக்குக் கொடுங்கள் என்றாள் சதரூபா.

ஸுனி ம்ருது கூட் ருசிர் பர் ரசனா |
க்ருபாஸிந்து போலே ம்ருது பசனா || **1502**

ஜோ கசு ருசி தும்ஹரே மன்மாஹீம் |
மைம் ஸோ தீன்ஹ ஸப் ஸம்சய் நாஹீம் ||1503

ராணி சதரூபையின் அழகான பொருள் பொதிந்த, மனங்கவரும், சிறந்த வார்த்தைகளைக் கேட்ட பகவான் க்ருபா ஸிந்து, மீண்டும் அழகிய வசனங்களால், தேவி! என்னென்ன எண்ணங்கள் உன் மனத்தில் இருக்கின்றனவோ; அவை எல்லாமே நடந்தேறும். நாம் உன் இச்சைப்படியே கொடுத்தோம். இதில் ஸந்தேஹம் இல்லை.

மாது பிபேக் அலௌகிக் தோரேம் |
கப்ஹூம் ந மிடிஹி அனுக்ரஹ் மோரேம் || 1504
பந்தி சரண் மனு கஹேவு பஹோரீ |
அபர் ஏக் பின்தீ ப்ரபு மோரீ || 1505

ஹே தாயே! உன்னுடைய இந்த உத்தமமான ஞானம் என்னுடைய அனுக்ரஹத்தினால் எப்போதும் அழியாது. பின்னர் ராஜா மனுவானவர் பகவானின் திருவடிகளை வணங்கி, மேலும், ஹே ப்ரபு! என்னுடைய சிறிய ப்ரார்த்தனை ஒன்று உண்டு;

ஸுத பிஷயிக் தவ பத்ரதி ஹோவூ |
மோஹி பட் மூட் கஹை கின் கோவூ || 1506
மணி பினு பனி ஜிமி ஜல் பினு மீனா |
மம ஜீவன் திமி தும்ஹஹி அதீனா || 1507

பிள்ளையிடம் தந்தைக்கு எப்படி ப்ரியம் இருக்குமோ; அதேபோல் தங்களது திருவடிகளில் எனக்கு ப்ரியம் இருக்க வேண்டும். உலகில் என்னை எல்லாரும் மடையன் என்று சொல்லட்டும். எப்படி மணியில்லாத ஸர்ப்பமும், ஜலம் இல்லாத மீனும் வாழ முடியாதோ; அதுபோலவே எனக்கு அதிகக் கவலை எதனால் என்றால்; என்னுடைய வாழ்வெல்லாம் உமது ஆதீனத்தில் இருக்க வேண்டும் என்பதுதான். நீரில்லாமல் என்னால் ஒருநாளும் வாழ முடியாது; என்றார்.

அஸ் பரு மாகி சரண் கஹி ரஹேவூ |
ஏவமஸ்து கருணாநிதி கஹேவூ || 1508

அப் தும்ஹ மம அனுசாஸன் மானீ |
பஸ்ஹு ஜாயி ஸுரபதி ரஜ்தானீ || **1509**

இருவரும் இம்மாதிரி வரன்களைக் கேட்டுப் பக வானின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டார்கள். அப்போது பகவான்; ''நீங்கள் கேட்டபடியே எல்லாம் நடக்கும். இப்பொழுது நான் ஆணை இட்டபடி இரு வரும் இந்த்ரலோகம் போய்ச்சேருங்கள், அங்கு வஸிக்க ஏற்பாடு செய்யுங்கள்.

தஹம் கரி போக் பிஸால் தாத்
கயேம் ககு கால் புனி |
ஹோஇஹஹு அவத் புவால் தப்
மைம் ஹோப் தும்ஹார் ஸுத் || **1510**

மேலும், அப்பா! இந்த்ர லோகத்தில் சிறிது காலம் போக விலாஸத்துடன் இருங்கள். சிறிது காலம் சென்றதும், தாங்கள் அயோத்யாவின் ராஜாவாக ஆவீர்கள். நான் அப்போது தங்களது புத்ரனாக அவ தரிப்பேன்

இச்சாமய நர்பேஷ் ஸம்வாரேம் |
ஹோஇஹஉம் ப்ரகட் நிகேத் தும்ஹாரேம் || **1511**
அம்ஸன்ஹ ஸஹித் தேஹ் தரி தாதா |
கரிஹஉம் சரித் பக்த ஸுகதாதா || **1512**

என் இஷ்ட ப்ரகாரம் மனுஷ்ய வேஷம் எடுத்து உனது வீட்டிற்கு வருவேன். குறிப்பிட்ட காலம்வரை இந்த அம்ச சரீரத்துடன் பக்தர்களின் ஸுகத்தைக் காக்க ஒரு சரித்ரம் படைப்பேன். (எந்த அம்சம் கொண்டு அவதரிக்கிறேனோ; அந்த அம்சத்தினால் பூமியை அளக்க முடியும்; அஸுரர்களை அழிக்க முடி யும்; அந்த அம்சத்தினால் உலகை ரட்சிக்க முடியும்; அதே அம்சம் கொண்டு அவதாரம் எடுப்பேன்.)

ஜே ஸுனி ஸாதர் நர் பட் பாகீ |
பவ தரிஹஹிம் மமதா மத் த்யாகீ || **1513**
ஆதிசக்தி ஜேஹிம் ஜக் உபஜாயா |
ஸோவு அவதரிஹி மோரி யஹ் மாயா || **1514**

அந்தச் சரித்ரத்தைக் கேட்டுப் பாக்யவானான மனுஷ்யர்கள் தங்களுடைய அஹங்காரத்தையும், மோஹத்தையும் ஒழித்து உலக பந்தத்திலிருந்து விடுபடப் போகிறார்கள். எனது அம்சங் கொண்ட ஆதி சக்தி என்னும் எனது மாயையே, உலகை உண்டாக்கினவளே! அவதாரம் எடுப்பாள்.

புர்உப் மைம் அபிலாஷ் தும்ஹாரா |
ஸத்ய ஸத்ய பன் ஸத்ய ஹமாரா || **1515**
புனி புனி அஸ் கஹி க்ருபானிதானா |
அந்தர்தான் பயே பக்வானா || **1516**

ஹே ராஜாவே! நான் தங்களுடைய இச்சைகளைப் பூர்த்தி செய்வேன். எனது ப்ரதிஜ்ஞை ஸத்யமானது; ஸத்யமானது; ஸத்யமானது; பொய்யல்ல. திரும்பத் திரும்ப இவ்வார்த்தைகளைச் சொல்லி விட்டுப் பகவான் மறைவாக ஆகிவிட்டார்.

தம்பதி உர்தரி பக்த க்ருபாலா |
தேஹிம் ஆச்ரம நிவஸே கசு காலா || **1517**
ஸமய் பாயி தனு தஜி அனயாஸா |
ஜாயி கீன்ஹ அமராவதி பாஸா || **1518**

தம்பதிகள் இருவரும் பக்தருக்கு அருளிய பகவானை மனத்தில் த்யானித்துக் கொண்டு அதே ஆச்ரமத்தில் சிறிது காலம் தங்கி இருந்தார்கள். ஸமயம் வந்த பொழுது இயல்பாகவே மனித சரீரத்தை விட்டு ஸ்வர்க்கலோகம் சென்று வஸிக்க ஆரம்பித்தார்கள்.

யஹ் இதிஹாஸ புனீத் அதி
உமஹி கஹீ வ்ருஷ கேது |
பரத்வாஜ் ஸுனு அபர் புனி
ராம ஜன்ம கர் ஹேது || **1519**

ஹே பரத்வாஜரே! இந்தப் பவித்ரக் கதையை வ்ருஷ கேதுவான சிவனார் பார்வதியிடம் கூறினார். இப்பொழுது ஸ்ரீராமன் அவதாரம் எடுத்தற்குரிய மற்றொரு காரணத்தைக் கேளும்! என்று தொடங்கினார் யாஜ்ஞவல்க்யர்.

ஸுனு முனி கதா புனீத் புரானீ |
ஜோ கிரிஜா ப்ரதி சம்பு பகானீ || 1520
பிச்வ பிதித் ஏக் கைகய தேஸூ |
ஸத்யகேது தஹ்ம் பஸயி நரேஸூ || 1521

மேலும், ஹே பரத்வாஜ முனிவரே! மற்றொரு புனிதமான, பழைய வரலாறு நிறைந்த கதை உண்டு; அதைச் சிவனார் பார்வதிக்குக் கூறினார். அதையும் கேளும்; முன்னொரு காலத்தில் உலகப்ரஸித்தமான (கேகய) காஷ்மீர தேசத்தில் ஸத்யகேது என்ற ராஜா ராஜ்யபரிபாலனம் செய்து வந்தார். (அப்போதே உல கில் காஷ்மீர தேசம் ப்ரஸித்தம்)

தர்ம துரந்தர் நீதி நிதானா |
தேஜ் ப்ரதாப் சீல பல்வானா || 1522
தேஹி கேம் பயே ஜுகல் ஸுத் பீரா |
ஸப் குண் தாம் மஹா ரணதீரா || 1523

தர்மத்தை ரட்சிப்பவனும், நீதிமானும், ஒளி மிகுந்த வனும், ப்ரதாபமுள்ளவனும், ஒழுங்கும், மிகுந்த பல வானும் ஆக அவன் விளங்கி வந்தார். அந்த ஸத்ய கேதுவிற்கு இரண்டு புத்ரர்கள் இருந்தார்கள். அவர் களும் பரம வீரர்கள். எல்லாவித நற்குணங்களும் கொண்டவர்கள். யுத்தத்தில் ஜயிக்கும் தீரர்கள்.

ராஜீ தனீ ஜோ ஜேட் ஸுத் ஆஹீ |
நாம் ப்ரதாப் பானு அஸ் தாஹீ || 1524
அபர் ஸுத்ஹி அரிமர்தன் நாமா |
புஜபல் அதுல் அசல் ஸங்க்ராமா || 1525

அரசுக்குரிய வாரிஸாகப் பெரிய பிள்ளை இருந் தான். அவன் பெயர் ப்ரதாப பானு என்பது. இன் னொரு பிள்ளையின் பெயர் அரிமர்தன். அவன் புஜ பலத்தில் ப்ரக்யாதி பெற்றவன். யுத்தத்தில் யாருமே அவனை ஜயிக்க முடியாது. மலைபோல் உறுதியாக இருக்கக்கூடியவன்.

பாயிஹி பாயிஹி பரம ஸமீதீ |
ஸகல் தோஷ் சல் பர்ஜித் ப்ரீதீ || 1526

ஜேடே ஸுத்ஹி ராஜ் ந்ருப தீன்ஹா |
ஹரி ஹித் ஆபு கவன் பன் கீன்ஹா || **1527**

இரு ஸஹோதரர்களிடமும் ஒற்றுமை இருந்தது. எவ்விதத் தோஷமும் இல்லாத, வஞ்சனை இல்லாத, உண்மை அன்பு இருவரிடமும் குடிகொண்டு இருந்தது. மன்னன் தனது மூத்த மகனுக்கு ராஜ்யத்தை அளித்து விட்டுப் பகவானைத் த்யானிக்க வனம் ஏகி விட்டார்.

ஜப் ப்ரதாப் ரபி பயவு ந்ருப
பிரீ தோஹாயீ தேஸ் |
ப்ரஜா பால் அதி பேதபிதி
கத்ஹூம் நஹீம் அக் லேஸ் || **1528**

ப்ரதாப பானு அரசனானதும், தேசத்தில் எங்குமே அவனுக்கு வரவேற்பு இருந்தது. அவன் வேதத்தில் விதித்தபடி ராஜ்யம் ஆண்டான். அவனது அரசில் பாபத்திற்குக் கொஞ்சமும் இடம் இல்லை.

ந்ருப ஹிதகாரக் ஸசிவ் ஸயானா |
நாம் தர்மருசி சுக்ர ஸமானா || **1529**
ஸசிவ் ஸயான் பந்து பல்பீரா |
ஆபு ப்ரதாப புஞ்ஜ ரணதீரா || **1530**

மன்னனின் நன்மையைக் கோருபவன் மந்த்ரி. அவன் பெயர் தர்மருசி! சுக்ரனைப் போல் புத்தி மான். ஒன்று மந்த்ரி மஹாகெட்டிக்காரன்; இரண்டா வது ஸஹோதரன் வீரன்; மஹாபலசாலி. மூன்றாவது அரசனே ப்ரதாபமுள்ள யுத்த வீரன்!

ஸேன ஸங்க் சதுரங்க அபாரா |
அமித ஸுபட் ஸப் ஸமர் ஜுஜாரா || **1531**
ஸேன பிலோகி ராவு ஹர்ஷானா |
அரு பாஜே கஹ்கஹே நிசானா || **1532**

தரைப்படை வீரர்கள், தேர்ப்படை வீரர்கள், குதிரை வீரர்கள், யானைப் படை வீரர்கள், இந்த நான்கு வித ஸேனைகள் அவனிடம் இருந்தன. பல சண்டைகளில் ஜயித்த போர் வீரர்கள் அனேகம்பேர்

இருந்தார்கள். இம்மாதிரி ஸேனைகளைக் கண்ட அரசர் மகிழ்ந்து முரசை முழங்கச் செய்தார்.

பிஜய ஹேது கட்கயீ பநாயீ |
ஸுதின் ஸாதி நிருப் சலேவு பஜாயீ || 1533
ஜஹம் தஹம் பரீம் அனேக் லராயீம் |
ஜீதே ஸகல் பூப் பரிஆயீம் || 1534

ராஜாவானவர் தனது திக்விஜயத்திற்கென்று ஸேனைகளை அலங்காரமாக ஏற்பாடு செய்து கொண்டு, ஒரு நல்ல முஹூர்த்தத்தில் முரசை முழங்கச் செய்தார். அங்கும் இங்குமாகப் பல சண்டைகள் நடந்தன. ராஜாவானவர் மிக்க பலத்துடன், பராக்ரமத்துடன் அந்த யுத்தங்களில் வெற்றிவாகை சூடினார்.

ஸப்த தீப் புஜபல் பஸ் கீன்ஹே |
லை லை தண்ட சாடி நிருப தீன்ஹே || 1535
ஸகல் அவனி மண்டல் தேஹி காலா |
ஏக் ப்ரதாப்பானு மஹிபாலா || 1536

பலபராக்ரமத்தால் ஏழு த்வீபங்களையும் தனது புஜங்களுக்குள் அடிமையாக்கிக் கொண்டார். அந்த அரசர்களுக்குத் தண்டனை தந்து, அவர்களையும் விட்டு விட்டார். அச்சமயம் பரந்த இந்தப் பூ மண்டலத்தில் ஒரே ஒரு சக்ரவர்த்தியாக ப்ரதாப பானு இருந்தார்.

ஸ்வபஸ் பிச்வ கரி பாஹுபல்
நிஜ புர் கீன்ஹ ப்ரபேஸு |
அர்த தர்ம காமாதி ஸுக்
ஸேவயி ஸமயம் நரேஸு || 1537

தன்னுடைய புஜபலத்தினால் உலகை ஜயித்து, ப்ரதாப பானு தன் நகரத்தில் ப்ரவேசம் செய்தார். அர்த்தம், தர்மம், காமம் ஆகிய ஸுகங்களுக்குத் தகுந்த வாறு தொண்டு செய்து வந்தார் அம்மன்னர்.

பூப் ப்ரதாப் பானு பல் பாயீ |
காமதேனு பை பூமி ஸுஹாயீ || 1538
ஸப் துக் பர்ஜித் ப்ரஜா ஸுகாரீ |
தர்மசீல் ஸுந்தர் நர் நாரீ || 1539

ப்ரதாப பானு ராஜாவின் பலம் பெற்ற இந்தப்பூமி ஸுந்தரமான, மனம் விரும்பியவற்றை அளிக்கவல்ல காமதேனு போல் விளங்கியது. எந்த வஸ்துவை யார் விரும்பினாலும் அது கிடைக்கும் சிறப்பு அங்கு இருந்தது. மேலும்; அன்னம் முதலியவைகளுக்குக் குறைவே இல்லை. எவ்விதத் துக்கமுமின்றி ப்ரஜைகள் ஸுகமாக இருந்தார்கள். பெண்களும், ஆண்களும் தர்ம சிந்தனையுடனும், ஒழுக்கத்துடனும் இருந்தார்கள்.

ஸசிவ தர்மருசி ஹரி பத் ப்ரீதீ |
ந்ருப ஹித் ஹேது ஸிகவ் நித் நீதீ || **1540**
குர ஸுர ஸந்த பிதர் மஹிதேவா |
கரயி ஸதா ந்ருப ஸப் கை ஸேவா || **1541**

மன்னனின் மந்த்ரி தர்மருசி, பகவானிடம் மிகுந்த பக்தி கொண்டவர். மன்னனுக்கு ஹிதமான ராஜ நீதிகளை நன்கு கற்றுக் கொடுத்து வந்தார், குரு, தேவதைகள், ஸாதுக்கள், பித்ருக்கள், ப்ராம்மணர்கள் இவர்களுக்கு மன்னர் எப்பொழுதும் ஸேவை செய்து கொண்டிருந்தார்.

பூப் தர்ம ஜே பேத் பகானே |
ஸகல் கர்யி ஸாதர் ஸுக் மானே || **1542**
தின் ப்ரதி தேயி பிபித் பிதி தானா |
ஸுனயி சாஸ்த்ர பர் பேத் புரானா || **1543**

எந்த விதம் வேதங்களில் அரசர்க்குரிய தர்மம் எழுதப்பட்டு இருக்கிறதோ; அதே போல் ராஜா ப்ரீதியுடனும், மரியாதையுடனும் தன் ஸுகமாக எண்ணி ஸகல காரியங்களும் செய்ய வேண்டுமென்ற நியதி ஏற்படுத்திக் காத்து வந்தார். தினம் தினம் பலவித மான தான, தர்மம் செய்தார். சிறந்த சாஸ்த்ரம், வேதம், புராணம் இவைகளைக் கேட்டு வந்தார்.

நாநா பாபீ கூப் தடாகா |
ஸுமன் பாடிகா ஸுந்தர் பாகா || **1544**
பிப்ரபவன் ஸுர்பவன் ஸுஹாயே |
ஸப் தீர்தன்ஹ பிசித்ர பனாயே || **1545**

அனேக விதமான நடைவாபிகளும், கிணறுகளும், குளங்களும், அழகிய பூங்காக்களும், சிறு தோட்டங்

களும், ப்ராம்மணர்களுக்கு இல்லங்களும், தேவதை களுக்குக் கோவில்களும் ஆகிய எல்லாமே எல்லாப் புண்யஸ்தலங்களிலும் நிறுவப்பட்டன.

ஜஹம் லகி கஹே புரான் ச்ருதி
ஏக் ஏக் ஸப் ஜாக் |
பார் ஸஹஸ்ர ஸஹஸ்ர ந்ருப
கியே ஸஹித் அனுராக் || **1546**

எவ்வளவு வகை யஜ்ஞங்கள் வேத புராணங்களில் சொல்லப் பட்டுள்ளனவோ; அவ்வளவு யஜ்ஞங்களை யும் ஒவ்வொன்றாக அன்புடன் ஆயிரமாயிரம் தடவை அரசர் செய்தார்.

ஹ்ருதயம் ந கசு பல் அனுஸந்தானா |
பூப் பிபேகீ பரம ஸுஜானா || **1547**
கர்யி ஜே தர்ம கர்ம மன் பானீ |
பாஸுதேவ் அர்பித் ந்ருப க்யானீ || **1548**

மன்னவன் மனத்தில் எதையுமே விரும்பவில்லை. ஏனெனில்; ராஜாவிற்குக் குறையேதும் இல்லை. மன்னர் அத்யந்த ஜ்ஞானியாகவும், புத்திசாலியாகவும் இருந்தார். அந்த அறிவுள்ள மன்னர்; செயல், மனம், வாக்கு இவைகளால் செய்யப்படும் எவ்வகைத் தர்ம காரியங்களையும் தமது கடவுளுக்கே சொந்தம் என்று பகவானான வாஸுதேவனுக்கே அர்ப்பணம் செய்து வந்தார்.

சடி பர் பாஜி பார் ஏக் ராஜா |
ம்ருகயா கர் ஸப் ஸாஜி ஸமாஜா || **1549**
பிந்த்யாசல் கபீர் பன் கயவு |
ம்ருக புனீத் பஹு மாரத் பயவு || **1550**

ஒரு முறை அந்த அரசர் வேட்டைப்பொருள்களை யும் எடுத்துக்கொண்டு, ஓர் அழகிய குதிரையில் வேட் டைக்குப் போகும் நோக்கத்துடன் வெளியே கிளம் பினார். விந்த்ய மலைச் சாரலில் அடர்ந்த காட்டுக் குள் சென்றார்; அவர் அங்குப் பலவிதமான சிறந்த மான்களை வேட்டையாடினார்.

பிரத் பிபின் ந்ருப தீக் பராஹூ |
ஜனு பன் துரேவு ஸஸிஹி க்ரஸி ராஹூ ||1551
பட் பிது நஹிம் ஸமாத் முக் மாஹீம் |
மன்ஹூம் க்ரோத் பஸ் உகிலத் நாஹீம் ||1552

காட்டில் அலைந்து கொண்டிருக்கும் போது அரசர் காட்டுக் பன்றியைக் கண்டார். அதனுடைய பற்கள்:- சந்த்ரனை விழுங்கிய ராஹு காட்டில் வந்து ஒளிந்து கொண்டது போலவும், அந்தச் சந்த்ரன் பெரிதாக இருப்பதால் வாயால் விழுங்க முடியாமலும், கோபவ சத்தால் வெளியே துப்ப முடியாம்லும் தவிப்பது போல் தென்பட்டன.

கோல் கரால் தசன் சபி காயீ |
தனு பிஸால் பீவர் அதிகாயீ || 1553
குருகுராத் ஹய ஆரௌ பாயேம் |
சகித் பிலோகத் கான் உடாயேம் || 1554

அந்தப் பன்றியின் பயங்கரமான பற்களின் காந்தி இவ்விதமிருந்தது. அந்தப் பன்றியின் உடலோ கறுப் பாக, பருமனாக, பெரிதாக இருந்தது. குதிரையின் குளம்படிச் சத்தம் கேட்ட பன்றி உறுமியது; தனது காதுகளை உயரத் தூக்கிக் கொண்டு விழிப்புடன் உஷாராக நின்றது.

நீல் மஹீதர் சிகர் ஸம
தேகி பிஸால் பராஹு |
சபரி சலேவு ஹய ஸுடுகி ந்ருப
ஹாங்கி ந ஹோயி நிபாஹு || 1555

கரிய மலைச் சிகரம்போல் தோற்றமளிக்கும் அந்தப் பன்றியைக் கண்ட மன்னர் குதிரையைத் தட்டிச் சவுக் கினால் ஆரவாரம் செய்து, பன்றியை அடித்து விரட்டி, வேகமாகச் சென்றார். ''நீ இனி என்னிடமிருந்து தப்ப முடியாது'' என்று ஆரவாரித்தார்.

ஆவத் தேகி அதிக ரவ பாஜீ |
சலேவு பராஹ் மருத் கதி பாஜீ || 1556
துரத் கீன்ஹ ந்ருப ஸர் ஸந்தானா |
மஹி மிலி கயவு பிலோகத் பாநா || 1557

தன்பக்கமாகப் பயங்கரமான சப்தமிட்டுக் கொண்டு வரும் குதிரையைக் கண்ட அந்தப் பன்றியானது காற்றைப் போல் வெகு வேகமாக ஓடியது. அரசர் உடனே வில்லில் அம்பு பூட்டினார். பாணத்தைக் கண்டதும் பன்றி பூமிக்குள் ஓடி மறைந்தது.

தகி தகி தீர் மஹீச் சலாவா |
கரி சல் ஸுஅர் ஸரீர் பசாவா || 1558
ப்ரகடத் துரத் ஜாயி ம்ருக் பாகா |
ரிஸ் பஸ் பூப் சலேவு ஸங்க் லாகா || 1559

மன்னர் சட்சட்டென்று அம்பு விட்டுக் கொண்டே இருந்தார். ஆனால், கபடமாகப் பன்றி தன்னைக் காப்பாற்றிக் கொண்டு மறைந்து திரிந்தது. எதிரில் வருவதும், மறைவதுமாகப் பன்றி பலவித்தை காட்டிய தால், மன்னனும் கோபத்துடன் அந்த ம்ருகத்தின் பின் னாலேயே ஓடினார்.

கயவு தூரி கன் கஹன் பராஹு |
ஜஹம் நாஹின் கஜ் பாஜி நிபாஹு || 1560
அதி அகேல் பன் பிபுல் கலேஸு |
ததபி ந ம்ருக மக் தஜயி நரேஸு || 1561

எளிதில் குதிரையும், யானையும் போக முடியாத வாறிருக்கும் அத்தகைய காட்டிற்குள் பார்த்துக் கொண் டிருக்கும்பொழுதே அந்தப் பன்றி வெகு தூரம் போய் விட்டது. அங்கு ராஜாவோ தனியாகி விட்டார்; ஸேனைகளைப் பிரிந்து வெகு தூரம் வந்து விட்டார். மேலும், வனத்தில் மிகவும் கஷ்டமும் உண்டானது. பின்னும் அரசர் பன்றி சென்ற வழியிலேயே சென் றார்.

கோல் பிலோகி பூப் பட் தீரா |
பாகி பைட் கிரிகுஹாம் கபீரா || 1562
அகம் தேகி ந்ருப் அதி பசிதாயீ |
பிரேவு மஹாபன் பரேவு புலாயீ || 1563

விடாமல் துரத்திவரும் அரசனின் தைர்யத்தைக் கண்ட பன்றி ஓடிப்போய் ஓர் ஆழமான மலைக்குகைக் குள் மறைந்து கொண்டது. அதில் சென்று பன்றியைப்

பிடிப்பது கடினமான காரியம் என்று எண்ணிய மன்னவன் வேறு வழியில்லாமல் திரும்ப நேர்ந்தது. அப் பயங்கரக் காட்டில் வந்த வழி தவறி விட்டார்; மிகவும் வருந்தினார். என்ன செய்வது?

கேத் கின்ன சுத்தித் த்ருஷித்
ராஜா பாஜி ஸமேத் |
கோஜத் ப்யாகுல் ஸரித் ஸர்
ஜல் பினு பயவு அசேத் || **1564**

எவ்வளவு முயற்சித்தும் மன்னர் களைத்துப் போனார், குதிரையுடன் தானும் பசி தாகத்தினால் கலங்கினார். இப்படிப் பசியும் தாகமும் அவரை வாட்டவே பயந்து போய் ஒரு தடாகத்தைத் தேடினார்; அங்கு ஜலமே கிடைக்காமல் மூர்ச்சையடைந்தார்.

பிரத் பிபின் ஆச்ரம் ஏக் தேகா |
தஹம் பஸ் ந்ருபதி கபட் முனிபேஷா || **1565**
ஜாஸு தேஸ் ந்ருப லீன்ஹ சடாயீ |
ஸமர் ஸேன் தஜி கயவு பராயீ || **1566**

காட்டில் அலைந்து அலைந்து திரிந்த அரசர் அங்கு ஓர் ஆச்ரமத்தைப் பார்த்தார். அங்கு வஞ்சமாக முனிவனைப் போல் வேஷம் அணிந்த ஓர் அரசர் வாழ்ந்து வந்தார். அவருடைய ராஜ்யத்தை ப்ரதாப பானு கைப் பற்றியிருந்தார். யுத்தத்தில் தோற்று ஸேனைகளை அப்படியே விட்டு விட்டு ஓடிப்போனவர்.

ஸமய் ப்ரதாப்பானு கர் ஜானீ |
ஆபன் அதி அஸமய் அனுமானீ || **1567**
கயவு ந க்ருஹ மன் பஹுத் க்லானீ |
மிலா ந ராஜஹி ந்ருப அபிமானீ || **1568**

ப்ரதாபபானுவுக்கு நல்ல காலம். நமக்குக் கெட்ட காலம் என்று எண்ணி மிக வருந்தினார் அந்த அரசர். ப்ரதாப பானுவின் எதிரில் வரவிரும்பாமல் ஓடி வந்தார். ப்ரதாப பானுவின் வெற்றி அவருக்குத் தோல்வியானது. ஆகையால்; அவர் நாணத்தினால் வீடு செல்லவே இல்லை. அப்போதே கானகம் ஓடி வந்து ஓர் ஆச்ரமத்தில் தனியாக வாழ்ந்து வரலானார்.

மன்னர் ப்ரதாப பானுவையும் கர்வத்தினால் சந்திக்கவே இல்லை.

நிஸ் உர் மாரி ரங்க் ஜிமி ராஜா |
பிபின் பஸயி தாபஸ் கேம் ஸாஜா || 1569
தாஸு ஸமீப் கவன் ந்ருப் கீன்ஹா |
யஹ் ப்ரதாப் ரபி தேஹிம் தப் சீன்ஹா || 1570

தரித்ரனைப் போல் மனத்திலேயே கோபத்தை நசுக்கி விட்டு அந்த அரசர் கானகத்தில் தபஸ்வியைப் போல் வஸிக்க ஆரம்பித்தார். அப்படிப்பட்டவர் அருகே மன்னர் ப்ரதாப பானு வரும்பொழுது, அந்தக் கபட தபஸ்வி அவனே ப்ரதாபபானு என்பதை அறிந்து கொண்டார்.

ராவு த்ருஷித் நஹிம் ஸோ பஹிசானா |
தேகி ஸுபேஷ் மஹாமுனி ஜானா || 1571
உதரி துரக் தேம் கீன்ஹ ப்ரணாமா |
பரம சதுர் ந கஹேவு நிஜ நாமா || 1572

அரசர் மிகவும் தாஹத்துடன் இருந்தார். அதனால் அவர் அந்தப் போலி முனிவரை யாரென்று அறிய வில்லை. அவருடைய உத்தம வேஷத்தைக் கண்டு அவரை மா முனிவர் என்று எண்ணினார். ஆகவே, குதிரையிலிருந்து இறங்கி அவரை வணங்கினார். ஆயினும்; மிகத் திறமைசாலியானதால் அரசர் தன் பெயரையே கூறவில்லை.

பூபதி த்ருஷித் பிலோகி தேஹிம்
ஸர்பரு தீன்ஹ தேகாயி |
மஜ்ஜன் பான் ஸமேத் ஹய
கீன்ஹ ந்ருபதி ஹர்ஷாயீ || 1573

மன்னர் மிகவும் பசி தாஹத்துடன் இருப்பதால் அந்த முனிவர் ப்ரதாப பானுவிற்கு ஒரு தடாகத்தைக் காட்டினார். மன்னர் மிக ஸந்தோஷத்துடன் குதிரையுடன் அங்குப்போய் குதிரையையும் குளிக்க வைத்துத் தானும் குளித்து, நீரையும் பருகினார்.

கை ச்ரம் ஸகல் ஸுகீ ந்ருப பயவூ |
நிஜ ஆச்ரம் தாபஸ் லை கயவூ || 1574

ஆஸன் தீன்ஹ அஸ்த ரபி ஜானீ |
புனி தாபஸ் போலேவு ம்ருது பானீ || 1575

மன்னர் சிரம பரிஹாரம் செய்து கொண்டார்; களைப்புத்தீர்ந்தார். அப்போது அந்தக் கபட முனிவர் தன்னுடைய ஆச்ரமத்திற்கு அவனை அழைத்து வந்தார். ஸூர்யாஸ்தமனம் ஆகும் நேரமறிந்து ராஜாவிற்கு ஆஸனம் கொடுத்து, ம்ருதுவாகப் பேச ஆரம்பித்தார்.

கோ தும்ஹ கஸ் பன் பிரஹூ அகேலேம் |
ஸுந்தர் ஜுபா ஜீவ் பர்ஹேலேம் || 1576
சக்ரபர்தி கே லச்சன் தோரேம் |
தேகத் தயா லாகி அதி மோரேம் || 1577

"தாங்கள் யார் கூற முடியுமா? தனியாக வனத்தில் ஏன் அலைகிறீர்கள்? அழகிய வாலிபப் பருவத்தில் ஸுகபோகம் அனுபவிப்பதை விட்டு இப்படி அலைவதன் காரணம் யாதோ? ஆனால், தங்களிடத்தில் உள்ள லக்ஷணங்களைக் கண்டால் ஒரு சக்ரவர்த்தி போல் இருக்கிறது. உங்களைப் பார்த்தால் எனக்கு ரொம்பவும் பரிதாபமாக இருக்கிறது" என்றார் அந்த முனிவர்.

நாம் ப்ரதாப் பானு அவநீஸா |
தாஸு ஸசிவ் மைம் ஸுநஹு முனீஸா || 1578
பிரத் அஹேரேம் பரேவும் புலாயீ |
படேம் பாக் தேகேவும் பத் ஆயீ || 1579

கேளும், முனிவரே! ப்ரதாப பானு என்னும் அரசர் ஒருவர் இருக்கிறார். அவருடைய மந்த்ரி நான். வேட்டையாடியாடி என்னுடைய வழியை மறந்து விட்டேன். என் ஸௌபாக்யம் தங்களைச் சந்திக்கும் பாக்யம் கிடைத்தது. தங்கள் சரணம் இப்போது வந்தடைந்தேன்" என்றார் மன்னர். (மன்னர் அங்கு வேண்டுமென்றே தன் பெயரை மறைத்து மந்த்ரி என்று கூறினார் என்பதை அறியவும்)

ஹம் கஹம் துர்லப் தரஸ் தும்ஹாரா |
ஜானத் ஹெளம் கசு பல் ஹோநிஹாரா || 1580

கஹ் முனி தாத் பயவு அந்தியாரா |
ஜோஜன் ஸத்தரி நகரு தும்ஹாரா || 1581

''எங்களுக்கு தங்கள் தரிசனம் துர்லபமானது. இதனால் நான் நன்மை செய்தவன் என்றே எண்ணுகிறேன்'' என்றார். அதற்கு முனிவர்; ''ஹே நண்பரே! இப்போது இருண்டு விட்டது. தங்கள் நகரம் இங்கிருந்து இருநூற்று எழுபது மைல்கள் தொலைவில் இருக்கிறது; அங்குப் போவது என்பது துர்லபம் என்றார்.

நிஸா கோர் கம்பீர் பன்
பந்த் ந ஸுனஹு ஸுஜான் |
பஸஹு ஆஜு அஸ் ஜானி தும்ஹ
ஜாஏஹு ஹோத் பிஹான் || 1582

எல்லாமறிந்தவரே! ராத்ரி மிகவும் கோரமாக இருக்கிறது. அடர்ந்த காடு; மிகவும் பயங்கரப் புதர்; வழியே தெரியாது. ஆகவே, இதை மனத்தில் கொண்டு தாங்கள் இங்கு இருக்க வேண்டும். காலை விடிந்த பின் செல்லலாம் என்றார்.

துளஸீ ஜஸி பவ்தவ்யதா
தைஸீ மிலயி ஸஹாயி |
ஆபுனு ஆவயி தாஹி பஹிம்
தாஹி தஹாம் லை ஜாயி || 1583

நாம் விதிப்படி எந்த எதிர்காலத்துடன் போகா விட்டாலும், அதுவே நம்மிடம் வருகிறது. அதன் உதவியும் நமக்குக் கிடைக்கிறது என்கிறார் துளஸீ.

பலேஹிம் நாத் ஆயஸு தரி ஸீஸா |
பாந்தி துரக தரு பைட் மஹீஸா || 1584
ந்ருப பஹு பாந்தி ப்ரஸம்ஸேவு தாஹீ |
சரண் பந்தி நிஜ பாக்ய ஸராஹீ || 1585

ஹே நாதா! ''மிகவும் நல்லது'' என்று வணக்கத்துடன் கூறிய மன்னர் ப்ரதாப பானு அவரது ஆணையை ஏற்று, குதிரையை மரத்தில் கட்டி விட்டு, முனிவரிடம் வந்து உட்கார்ந்தார். பின்பு பலவிதமாக முனிவரைப்

புகழ்ந்தார். அவர் திருவடிகளில் மீண்டும் வணங்கித் தனது பாக்யத்தைப் புகழ்ந்து கொண்டார்.

புனி போலேவு ம்ருது கிரா ஸுஹாயீ |
ஜானி பிதா ப்ரபு கர்வும் டிடாயீ || 1586
மோஹி முனீஸ் ஸுத் ஸேவக் ஜானீ |
நாத் நாம் நிஜ கஹஹு பகானீ || 1587

பிறகு மன்னவன் அழகாகவும் ம்ருதுவாகவும் முனி வரை நோக்கி; ஹே ப்ரபு! என்னுடைய பிதாவைப் போல் தங்களை எண்ணிக் கேட்கிறேன். ஹே முனி வரே! என்னைத் தங்கள் பிள்ளை, பணியாள் என்று பாவித்துத் தங்களுடைய பெயர், இருப்பிடம் ஆகிய வைகளை விரிவாகக் கூறுங்கள் என்றார்.

தேஹி ந ஜான் ந்ருப ந்ருபஹி ஸோ ஜானா |
பூப் ஸுஹ்ருத் ஸோ கபட் ஸயானா || 1588
பைரீ புனி சத்ரீ புனி ராஜா |
சல் பல் கீன்ஹ சஹயி நிஜ காஜா || 1589

முனிவர் யாரென்று அரசர் அறியவில்லை. ஆனால்; முனிவருக்கு அரசர் யாரென்று அடையாளம் தெரியும். அரசரோ வெகுளியானவர்; தூய மனம் உள்ளவர். முனிவரோ கபடம் செய்வதில் கைதேர்ந்தவர். (ராஜா தோழமைக்குத் தகுந்தவர். ஆனால், அவரோ நட்பிற் குத் தோஷம் உண்டாகச் செய்பவர். ஆகவே, அவர் இதை மனத்தில் கொண்டு ராஜாவிற்கு எதிராக ஏதோ கொடுமை செய்ய ஆரம்பித்தார்). ஒரு பக்கம் அரசர் அவருக்கு எதிரி. பின்னும் க்ஷத்ரியன், மேலும், அரசர் வேறு. ஆகவே, அம்முனிவர் கபடத்தனமாகத் தன் காரி யங்களைச் செய்ய விரும்பினார்.

ஸமுஜி ராஜ் ஸுக் துகித் அராதீ |
அவாம் அனல் இவ ஸுலகயி சாதீ || 1590
ஸரல் பசன் ந்ருப் கே ஸுனி கானா |
பயர் ஸம்பாரி ஹ்ருதயம் ஹர்ஷானா || 1591

அந்தச் சத்ருவான முனிவர் ராஜ்ய ஸுகத்தை நினைத்து வருந்தினார். தூளை அடுப்பில் எரியும் நெருப் பைப்போல் பொறாமையால் அவர் நெஞ்சம் உள்ளுக்குள்

ளேயே எரிந்தது. மன்னனின் வஞ்சமற்ற வார்த்தை களைக் காதாரக் கேட்டு, தனது பகைமையை எண்ணி, மனத்துள் ஸந்தோஷமடைந்தார்.

கபட் போரி பானீ ம்ருதுல்
போலேவு ஜுகுதி ஸமேத் |
நாம் ஹமார் பிகாரி அப்
நிர்த்தன் ரஹித் நிகேத் || **1592**

அம்முனிவர் மனத்தில் கபடம் வைத்துக் கொண்டு யுக்தியாக ம்ருதுவான குரலில்; ஸ்வாமீ! என்னுடைய பெயரையா கேட்கிறீர்கள்? நான் ஒரு பிச்சைக்காரன்; தனமே இல்லாத பரம ஏழை; எனக்கு வீடு வாசல் கிடையாது. (இப்போது என்ன சொல்ல முடியும்? முன்பு எனக்கு எல்லாமே இருந்தது என்றால், யாரே னும் நம்புவார்களா?)

கஹ் ந்ருப ஜே பிக்யான் நிதானா |
தும்ஹ ஸாரிகே கலித் அபிமானா || **1593**
ஸதா ரஹஹிம் அப்நபௌ துராயேம் |
ஸப் பிதி குஸல் குபேஷ் பனாயேம் || **1594**

நண்ப! எவர் சிறப்பான அறிவும் உள்ளவரோ; எவருக்குத் ''தான்'' என்ற கர்வம் சிறிதும் இல்லையோ; அவர்கள் தாங்களாகவே மறைமுகமாக இருக்கிறார்கள். எல்லாவித ஸுக ப்ராப்தி விதிப்படி இருந்தும்; கெட்ட வேஷத்தில் மறைந்து இருப்பதே நல்லது என்று கருதுகிறார்கள் - என்றார் மன்னர். (அதாவது ஸாது வேஷத்தில் மரியாதை இருக்கும், வீழ்ச்சியும் ஏற்பட லாம்.)

தேஹி தேம் கஹஹிம் ஸந்த ச்ருதி டேரேம் |
பரம அகிஞ்சன் ப்ரிய ஹரி கேரேம் ||** **1595**
தும்ஹ ஸம அதன் பிகாரி அகேஹா |
ஹோத் பிரஞ்சி சிவஹி ஸந்தேஹா || **1596**

இதே காரணத்தினால்தான் வேதங்களும், முனி வர்களும் கூறுவது என்னவென்றால்; கர்வமும், க்ரோ தமும் இல்லாத ஏழை பகவானுக்கு ப்ரியமாகிறான். பகவானும் அவனை அன்புடன் ஆதரிக்கிறார். ஆனால்;

தங்களைப் போன்ற பணமற்ற பிச்சைக்காரரையும், வீடு வாசல் இல்லாதவரையும் கண்டு ப்ரம்மனுக்கும், சிவனுக்கும் ஸந்தேஹம் உண்டாகும். (ஆகவே, தாங்கள் உண்மையான ஸாதுவா? பிச்சைக்காரரா?)

ஜோஸி ஸோஸி தவ சரண் நமாமீ |
மோ பர் க்ருபா கரிய அப் ஸ்வாமீ || *1597*
ஸஹஜ் ப்ரீதி பூபதி கை தேகீ |
ஆபு பிஷய் பிஸ்வாஸ் பிஸேஷீ || *1598*

எது என்னிடம் உள்ளதோ அவை எல்லாம் இருக்கட்டும். எப்படியும் தங்களது சரணங்களில் வணக்கத்தை ஸமர்ப்பிக்கிறேன். ஹே ஸ்வாமீ! இப்பொழுது என் மீது க்ருபை செய்யுங்கள், என்றார் மன்னவன். அக்கபடமான முனிவர் தன்மீது இயல்பாகவே ராஜாவின் அன்பு உள்ளம் இருப்பதையும், தன்னிடம் மனம் நெகிழ்வதையும், நம்பிக்கை இருப்பதையும் கண்டு இது தான் தக்க ஸமயம் என்று எண்ணி,

ஸப் ப்ரகார் ராஜஹி அப்நாயீ |
போலேவு அதிக் ஸ்னேஹ் ஜனாயீ || *1599*
ஸுனு ஸதிபாவு கஹவும் மஹிபாலா |
இஹாம் பஸத் பீதே பஹுகாலா || *1600*

எல்லாவிதத்திலும் ராஜாவைத் தன் வசமாக்கிக் கொண்டு, அந்த வஞ்சகன் மேலும், ஸ்னேஹத்துடன் இருப்பதாகக் காட்டியபடி; கேளுங்கள் அரசே! இதே மாதிரி நிலையில் கஷ்டத்துடன் என்னுடைய பல காலம், பல நாட்கள் இங்கேயே வீணானது என்பதை உண்மையாகக் கூறுகிறேன்.

அப் லகி மோஹி ந மிலேவு கோவு
மைம் ந ஜநாவவும் காஹு |
லோகமான்யதா அனல் ஸம கர்
தப கானன் தாஹு || *1601*

இதுவரை எனக்கு எவருமே கிடைக்கவில்லை; சந்திக்கவுமில்லை. ஆகவே, என் மனத்தின் ஆவலை எங்கும் கூறவில்லை. உலகில் செல்வத்தை நிலைநாட்டுவது நெருப்பிற்கு ஸமமானது. அது தவவடிவமான காட்டையே பஸ்மமாக்குகிறது என்றார்.

துளஸீ தேகி ஸுபேஷு பூல்ஹிம்
மூட் ந சதுர் நர் |
ஸுந்தர் கேகிஹி பேகு பசன் ஸுதா
ஸம அஸன் அஹி || 1602

எனவே, ''துளஸீதாஸர்; நல்ல அழகான வேஷத்தைக் கண்டு மூட மனிதர் மட்டுமல்ல, ஸாமர்த்யமான மனிதரும் ஏமாந்து போகிறார்கள். அவர்கள் மயிலை ஒத்தவர்கள். எப்படியென்றால்; மயில் பார்ப்பதற்கு அழகாகவும், அதன் குரல் அம்ருதம் போலவும் உள்ளது. ஆனால், அது ஸர்ப்பத்தை சாப்பிடுவது களங்கமாக இருக்கிறதல்லவா? என்கிறார்.

தாதேம் குபுத் ரஹவும் ஜக் மாஹீம் |
ஹரி தஜி கிமபி ப்ரயோஜன் நாஹீம் || 1603
ப்ரபு ஜானத் ஸப் பின்ஹிம் ஜநாயேம் |
கஹஹு கவனி ஸிதி லோக் ரிஜாயேம் || 1604

இதே காரணமாக உலகில் நான் மறைந்தே வாழ்கிறேன். ஏனென்றால்; பகவானைத்தவிர வேறு யாராலும் ஒன்றும் எனக்கு ப்ரயோஜனமில்லை. பகவான் மக்கள் குறைகளை எல்லாம் அறிந்தவர். அதைவிட்டு இந்த உலக இச்சையில் மூழ்கினால்; என்ன ஸுகம் கிடைக்கப் போகிறது? நீங்களே சொல்லுங்கள்?

தும்ஹ் சுசி ஸுமதி பரம ப்ரிய மோரேம் |
ப்ரீதி ப்ரதீதி மோஹி பர் தோரேம் || 1605
அப் ஜெளம் தாத துராவவும் தோஹீ |
தாருன் தோஷ் கடயி அதி மோஹீ || 1606

மேலும், நீர் பவித்ரமானவர், புத்திமான், எனக்கும் ப்ரியம் உள்ளவர். உமக்கும் என்னிடம் ப்ரியமும், நம்பிக்கையும் இருக்கிறது. ஆகவே, அப்பனே! இப்போது நான் உன்னிடமிருந்து ஒன்றும் மறைக்கப் போவதில்லை. அப்படி மறைத்தால்; எனக்குத்தான் பயங்கரமான தோஷம் உண்டாகும்''

ஜிமி ஜிமி தாபஸு கதயி உதாஸா |
திமி திமி ந்ருபஹி உபஜ் பிஸ்வாஸா || 1607

தேகா ஸ்வபஸ் கர்ம மன் பானீ |
தப் போலா தாபஸ் பகத்யானீ || 1608

எவ்விதமெல்லாம் வருத்தப்பட்டு வார்த்தைகளை அந்த முனிவர் சொன்னாரோ; அதைக் கேட்டதும் ராஜா மிகவும் தளர்ந்து போனார். அதாவது; முழுதும் அவர் கூறுவதை நம்பி விட்டார். ராஜா முற்றிலும் தன் வசமானதைக் கண்ட முனிவர், கரையில் காத்திருக்கும் கொக்கைப் போல் ஸமயம் பார்த்துக் கொண்டு இருந் தார், மேலும், சொல்லலானார்.

நாம் ஹமார் ஏக் தனு பாயீ |
ஸுனி ந்ருப போலேவு புனி ஸிரு நாயீ || 1609
கஹஹு நாம் கர் அர்த பகானீ |
மோஹி ஸேவக் அதி ஆபன் ஜானீ || 1610

ஸஹோதரா! என் பெயர் 'ஏகதனு' என்பது. இதைக் கேட்ட அரசர் மீண்டும் சரணங்களைத் தொட்டு நமஸ்கரித்து, நமக்கு ப்ரியமான ஸேவகன் என்றறிந்து, ஸ்வாமி! இந்த ஏகதனு என்ற பெயரின் அர்த்தம் என்ன என்று விளக்கவேண்டும் என்று வினவினார்.

ஆதி ஸ்ருஷ்டி உபஜீ ஜப்ஹிம்
தப் உத்பதி பை மோரி |
நாம் ஏக்தனு ஹேது தேஹி
தேஹ் ந தரீ பஹோரி || 1611

அக்கபட முனிவர் தொடர்ந்து: எப்பொழுது உல கில் ஆதி ஸ்ருஷ்டிக்கு அவதாரம் உண்டானதோ, அதே ஸமயம் நானும் உண்டானேன். அப்பொழுதிலிருந்து இந்தச் சரீரத்திற்குப் பிறகு மற்றொரு சரீரத்தை எடுக் கவே இல்லை. ஆகவே, எனக்கு, ஏகதனு என்ற பெயர் உண்டானது என்றார்.

ஜனி ஆசரஜ கர்ஹு மன் மாஹீம் |
ஸுத் தப தேம் துர்லப் கசு நாஹீம் || 1612
தப் பல் தேம் ஜக் ஸ்ருஜயி பிதாதா |
தப் பல் பிஷ்ணு பயே பரித்ராதா || 1613

ஹே மகனே! மனத்தில் ஆச்சர்யம் கொள்ளாதீர். தவத்தினால் ஆகாத காரியம் எதுவும் இல்லை. தவத்

தின் மஹிமையால் ப்ரம்மா உலகை ஸ்ருஷ்டித்தார். தவத்தின் பலத்தினால் விஷ்ணு உலகை ரட்சிக்கிறார். ஆகவே;...

தப் பல் சம்பு கர்ஹிம் ஸம்காரா |
தப் தேம் அகம் ந கசு ஸம்ஸாரா || 1614
பயவு ந்ருபஹி ஸுனி அதி அனுராகா |
கதா புராதன் கஹை ஸோ லாகா || 1615

தவ பலத்தினால் சிவன் ஸம்ஹாரம் செய்கிறார். உலகில் தவ பலத்தினால் கிடைக்காதது ஒன்றுமில்லை என்றார். ராஜாவிற்கு இதைக் கேட்டவுடன் மிகவும் அதிகமாக அன்பு முனிவர் மேல் உண்டானது. இதைக் கண்ட முனிவர் பின்னும் பழைய கதைகளைக் கூற ஆரம்பித்தார்.

கர்ம தர்ம இதிஹாஸ் அனேகா |
கர்யி நிரூபன் பிரதி பிபேகா || 1616
உத்பவ் பாலன் ப்ரலய கஹானீ |
கஹேஸி அமித் ஆசரஜ் பகானீ || 1617

பலவிதமான கர்மம், தர்மம், சரித்ரங்கள் இவை களைக் கூறி, வைராக்யம், ஜ்ஞானம் இவைகளை வர் ணிக்க ஆரம்பித்தார். மேலும், உலகின் உற்பத்தி, காத் தல், அழித்தல், (ப்ரளயம்) போன்ற பற்பல வியத்தகு கதைகளைக் கூறினார் முனிவர்.

ஸுனி மஹீப் தாபஸ் பஸ் பயவு |
ஆபன் நாம் கஹன் தப் லயவு || 1618
கஹ் தாபஸ் ந்ருப ஜானவும் தோஹீ |
கீன்ஹேஹு கபட் லாக் பல் மோஹீ || 1619

இவையெல்லாம் கேட்டபின் ராஜா தன் வசம் இழந்து முனிவர் வசமானார். அப்போது தன் பெய ரைக் கூறலானார். பின்னர், முனிவர்; ஹே அரசே!

நான் உம்மை அறிவேன். உம்மை இம்மாதிரி நீர் பல விதமாக ஏமாற்றியதில் எனக்கு நல்லதாயிற்று என்றார்.

ஸுனு மஹீஸ் அஸி நீதி,
ஜஹம் தஹாம் நாம் நகஹஹீம் ந்ருப |
மோஹி தோஹி பர் அதி ப்ரீதி
ஸோயி சதுரதா பிசாரி தப் || 1620

''கேளும் அரசே! இதுதான் நீதி. அரசைச் சார்ந்தவர்கள் தங்கள் பெயரைக் கூறுவதில்லை. (நீங்களும் உங்கள் அசல் பெயரை என்னிடம் கூறவே இல்லை.) உம்முடைய ஸாமார்த்யம் கண்டு எனக்கு இன்னும் உம்மிடம் ப்ரீதி உண்டானது என்றான் முனிவன்.

நாம் தும்ஹார் பிரதாப் தினேஸா |
ஸத்ய கேது தவ பிதா நரேஸா || 1621
குருப்ரஸாத் ஸப் ஜானிய ராஜா |
கஹிய ந ஆபன் ஜானி அகாஜா || 1622

ஹே ராஜன்! உம்முடைய பெயர் ப்ரதாப பானு. உம் தகப்பனாரின் பெயர் ஸத்ய கேது. குருவினுடைய அனுக்ரஹத்தினால் நான் எல்லாம் தெரிந்து கொண்டேன். ஆனால், நீர் நமக்குக் கேடு வரும் என்று கருதி, சொல்லவில்லை.

தேகி தாத் தவ ஸஹஜ் ஸுதாயீ |
ப்ரீதி ப்ரதீதி நீதி நிபுணாயீ || 1623
உபஜி பரீமமதோ மன் மோரேம் |
கஹவும் கதா நிஜ் பூசே தோரேம் || 1624

அப்பா! உம்முடைய இயல்பான நேர்மையையும், ப்ரியமான அடக்க ஒடுக்கத்தையும் நம்பிக்கையையும், நீதித் திறமையையும் கண்டு நாம் மிகவும் மகிழ்ந்தோம். திறமை வாய்ந்த ஸாமார்த்யமான உமது வார்த்தை எனக்கு இன்னமும் அன்பை உண்டாக்குகிறது. ஆகவே,

என் மனம் தடங்கலில்லாத உற்சாகத்தையும், அன்பை யும் கொடுப்பதால் நான் பின்னும் தாங்கள் கேட்டபடி என்கதையையும் கூறுகிறேன்; கேளுங்கள்.

அப் ப்ரஸன்ன மைம் ஸம்ஸய் நாஹீம் |
மாகு ஜோ பூப் பாவ் மன்மாஹீம் || 1625
ஸுனி ஸுவசன் பூபதி ஹர்ஷானா |
கஹி பத் விநய கீன்ஹி பிதி நாநா || 1626

''அரசே! இப்பொழுது என் மனத்தில் ஸ்ந்தேஹமே இல்லை. உன் மனத்தில் எது தோன்றுகிறதோ; அதைக் கேள்; நான் கொடுக்கிறேன்'' என்றார் முனிவர். இந்த இன்ப வார்த்தைகளைக் கேட்ட அரசர், மெய்ம்மறந்து முனிவருடைய இரண்டு கரங்களையும் பற்றிக் கொண்டு, பல விதமாக ப்ரார்த்தனை செய்தார்.

க்ருபா ஸிந்து முனி தர்சன் தோரேம் |
சாரி பதார்த கரதல் மோரேம் || 1627
ப்ரபு ஹி ததாபி ப்ரஸன்ன பிலோகீ |
மாகி அகம் வர் ஹோவும் அஸோகீ || 1628

''ஹே! க்ருபா ஸிந்து! அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்குவகைப் பதார்த்தங்களும் என் கைப் பிடியில் வந்து விட்டன. மேலும், தங்களது மகிழ்வைக் கண்டு, எனக்கு ஏற்ப வரங்களைக் கேட்டு, மனிதாபி மானத்துக்கு விரோதமில்லாமல்; துயரம் இல்லாமல் உலகில் இருக்க விரும்புகிறேன்.

ஜரா மரண் துக் ரஹித் தனு
ஸமர் ஜிதை ஜநி கோவு |
ஏக் சத்ர ரிபுஹீன் மஹி
ராஜ கல்ப ஸத் ஹோவு || 1629

என் சரீரத்திற்கு வயோதிகம், மரணம், துக்கம் இவைகள் இல்லாமல் இருக்க வேண்டும். ஒருவரும்

யுத்தத்தில் என்னை ஜயிக்கக்கூடாது. இந்தப் பூமியில் பகைவரில்லாமல் ஏக சக்ராதி பதியாக நூறு கல்ப வருடம் என் ராஜ்யம் நடக்க வேண்டும். இவ்விதம் மன்னர் அந்த முனிவரிடம் வரம் கேட்டார்.

கஹ் தாபஸ் ந்ருப ஜஸேயி ஹோவூ |
காரன் ஏக் கடின் ஸுனு ஸோவூ || 1630
காலவு துஅ பத் நாஇஹி ஸீஸா |
ஏக் பிப்ரகுல் சாடி மஹீஸா || 1631

ஹே அரசே! ''நீர் கேட்டபடியே நடக்கும். ஆயினும்; ஒரு காரியம் கடினமாகத் தென்படுகிறது. அதையும் கேளும். ஹே ராஜன், ப்ராம்மண குலம் ஒன்றைத் தவிர; காலதேவன் கூட உம்மிடம் தலை வணங்குவான்.''

தப்பல் பிப்ர ஸதா பரிஆரா |
தின்ஹகே கோப் ந கோவு ரக்வாரா || 1632
ஜளம் பிப்ரன்ஹ பஸ் கர்ஹு நரேஸா |
தெள துவ பஸ் பிதி பிஷ்னு மஹேஸா || 1633

ப்ராம்மணர் தபோபலத்தில் சிறந்தவர். அவருடைய கோபத்திலிருந்து காத்துக்கொள்ள யாராலும் முடியாது. ஹே ராஜன்! அந்த ப்ராம்மணர்களை நீர் வசப்படுத்திக் கொள்ளவும். அப்போது ப்ரம்மா, விஷ்ணு சிவன் மூவரும் வசமாக ஆகி விடுவார்கள்.

சல் ந ப்ரஹ்ம குல் ஸன் பரி ஆயீ |
ஸத்ய கஹவும் தோவு புஜா உடாயீ || 1634
பிப்ர ச்ராப் பினு ஸுனு மஹிபாலா |
தோர் நாஸ் நஹிம் கவ்னேஹும் காலா || 1635

''ப்ராம்மண குலத்தாரிடம் பலப்பரீட்சை செல்லாது. நான் என் இரு கைகளையும் உயர்த்தி ஸத்யமான வார்த்தை கூறுகிறேன். கேளும் மன்னா! ப்ராம்மண சாபத்தைத் தவிர்த்து, வேறு எந்தச் சக்தியினாலும், உமக்கு அழிவு கிடையாது என்றார்.

ஹர்ஷேவு ராவு பசன் ஸுனி தாஸூ |
நாத் ந ஹோயி மோர் அப் நாஸூ || 1636
தவ ப்ராஸாத் ப்ரபு க்ருபா நிதானா |
மோ கஹும் ஸர்வ கால் கல்யானா || 1637

மன்னரும் அவர் வார்த்தையைக் கேட்டு மிகவும் மகிழ்ந்தார். ஹே ப்ரபு! ஹே க்ருபா நிதி! எனக்கு இனி ஒரு வித அழிவும் இல்லை. தங்களுடைய க்ருபையால் நான் என்றும் மங்களகரமாக விளங்குவேன் என்றார்.

ஏவமஸ்து கஹி கபட முனி
போலா குடில் பஹோரி |
மிலப் ஹமார் புலாவ் நிஜ
கஹஹு த ஹம்ஹி ந கோரி || 1638

அரசே! நீங்கள் கூறியபடியே எல்லாம் நடக்கட்டும். என்று கூறி, அந்தக் கபட முனி மீண்டும் வஞ்சகத்துடன்; நீங்கள் வழி தடுமாறிக் கானகம் வந்தது, என்னைச் சந்தித்தது, இம்மாதிரி நிகழ்ச்சிகளை யாரிடமும் கூற வேண்டாம். அப்படி நீங்கள் கூறினால்; அது எனது குற்றமாகாது.

தாதேம் மைம் தோஹி பர்ஜவும் ராஜா |
கஹேம் கதா தவ பரம அகாஜா || 1639
சடேம் ச்ரவன் யஹ் பரத் கஹானீ |
நாஸ் தும்ஹார் ஸத்ய மம பானீ || 1640

கேளும், அரசே! இந்த நிகழ்ச்சியை, விஷயத்தை நீங்கள் யாரிடமேனும் கூறினால்; உமக்குப் பயங்கர ஆபத்து ஏற்படும் என்பதால்தான் தடுக்கிறேன். உம் காரியங்கள் நிறைவேறாது. நம்மைத் தவிர வேறு ஒருவர் காதுகளில் இந்த விவரங்கள் தெரிந்து விட்டால்; உமக்கு அழிவு நிச்சயம். எனது வார்த்தை உண்மை என்பதை அறியவும்.

யஹ் ப்ரகடேம் அதவா த்விஜச்ராபா |
நாஸ் தோர் ஸுனு பானு ப்ரதாபா || 1641

ஆன் உபாயம் நிதன் தவ நாஹீம் |
ஜௌம் ஹரி ஹர் கோபஹிம் மன மாஹீம் ||1642

ஹே ப்ரதாப பானுவே! மேலும், நான் கூறுவதைக் கேளும். இவ்விஷயத்தை வெளிப்படுத்தினால், கேவலம் ஒரு ப்ராம்மண சாபத்தினால்தான் உமக்கு அழிவு நிச்சயம். வேறு எந்த வித உபாயத்தினாலும் உமக்கு மரணம் இல்லை. சிவனும், விஷ்ணுவும், கோபம் கொண்டாலும் கூட உமக்கு அழிவு இல்லை என்றார் முனிவர்.

ஸத்ய நாத் பத் கஹி ந்ருப பாஷா |
த்விஜ குர் கோப் கஹஹூ கோ ராகா || 1643
ராகஇ குர் ஜௌம் கோப் பிதாதா |
குர் பிரோத் நஹி கோவு ஜக் த்ராதா || 1644

உடனே முனிவரின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு, ஸ்வாமி! உண்மைதான் ப்ராம்மணரிடமும், குருவிடமும் கோபம் கொண்டு விட்டால்; நம்மைக் காப்பவர் யார்? ப்ராம்மணர், குரு இவர்களின் கோபத்திலிருந்து தப்ப முடியாது என்பது எனக்குத் தெரியும். ப்ரம்மன் கோபம் கொண்டால்; நமது குரு நம்மை ரட்சிப்பார். ஆனால்; குருவையே விரோதித்துக் கொண்டால்; அவர்களை உலகில் எவரும் காக்க மாட்டார்.

ஜௌம் ந சலப் ஹம் கஹே தும்ஹாரேம் |
ஹோவு நாஸ் நஹிம் ஸோச் ஹமாரேம் ||1645
ஏக்ஹிம் டர் டர்பத் மன் மோரா |
ப்ரபு மஹிதேவ் ச்ராப் அதி கோரா || 1646

ஆகவே, "ஹே முனிவரே! நான் தங்களுடைய வார்த்தைப்படி கேட்கவில்லை; நடக்கவில்லையென்றால்; அதனால் எனக்கு அழிவு உண்டாவது என்றாலும் பரவாயில்லை; கவலையில்லை. ஆனால், இந்த ப்ராம்மண சாபம் ஒன்றுதான் எனக்கு மிகவும் பயங்கரமாகத் தோன்றுகிறது.

ஹோஹிம் பிப்ர பஸ் கவன் பிதி
கஹஹூ க்ருபா கரி ஸோவு |

தும்ஹ தஜி தீனதயால் நிஜ
ஹிதூ ந தேகவும் கோவு || **1647**

அந்தப் ப்ராம்மணர்களை எவ்விதமாக வசப் படுத்த முடியும்? அதையும் பற்றித் தாங்கள் எனக்குத் தயை செய்து கூற வேண்டும். எளியோர்க்கு அருளு பவரே! தங்களைத் தவிர்த்து வேறொருவர் எனக்கு இதைச் செய்வார் என்று எதிர்பார்க்கவில்லை என் றார்.

ஸுனு ந்ருப பிபித் ஜதன் ஜக் மாஹீம் |
கஷ்ட ஸாத்ய புனி ஹோஹிம் கி நாஹீம் || 1648
அஹஇ ஏக் அதி ஸுகம் உபாயீ |
தஹாம் பரந்து ஏக் கடினாயீ || **1649**

அதற்கு அந்த முனிவர் - ஹே மன்னா! அதற்கு உலகில் பல வழிகள் உண்டு. ஆனால், அவை கஷ்ட மானவை. மிகக் கடுமையாக நிறைவேற்றப்பட வேண்டி யவை. அவ்வாறு முயற்சித்தும் ஸித்தியானாலும் ஆகும், ஆகாமலும் போகும். அது வெற்றி தரும் என்று நிச் சயம் சொல்ல முடியாது. இருந்தாலும் ஸுலபமாக ஒரு வழி உண்டு. அதுவும் சற்றுச் செய்வது கடினந்தான்.

மம ஆதீன் ஜுகுதி ந்ருப ஸோயீ |
மோர் ஜாப் தவ நகர் ந ஹோயீ || **1650**
ஆஜு லகேம் அரு ஜப் தேம் பயவூம் |
காஹூ கே க்ருஹ் க்ராம் ந கயவூம் || **1651**

அரசனே! அத்தகைய யுக்தி என்கையில் இருக்கிறது. ஆனால்; எனக்குத் தெரிந்து உனது நகரில் செல்ல முடியாது. நான் பிறந்ததிலிருந்து யாருடைய வீட்டிற் கும் சென்றதில்லை; க்ராமத்திற்கும் சென்றதில்லை.

ஜௌம் ந ஜாவும் தவ ஹோயி அகாஜூ |
பனா ஆயி அஸமஞ்ஜஸ் ஆஜூ || **1652**
ஸுனி மஹீஸ் போலேவு ம்ருது பானீ |
நாத் நிகம அஸி நீதி பகானீ || **1653**

நான் செல்லவில்லையானால் உனது காரியம் கெட்டுவிடும். இன்று இதில் ஒரு சிக்கல் ஏற்படுகிறது,

என்று முனிவர் கூறியதைக் கேட்டு மன்னர்; அழகான குரலில் - நாதனே! வேதங்களில் இத்தகைய நீதி சொல்லப்பட்டிருக்கிறதே!

படே ஸ்நேஹ் லகுன்ஹ பர் கர்ஹீம் |
கிரி நிஜ ஸிர்னி ஸதா த்ருண் தர்ஹீம் || 1654
ஜலதி அகாத் மௌலி பஹ் பேனூ |
ஸந்ததத் தரனி தரத் ஸிர் ரேனூ || 1655

அதாவது; பெரியவர்கள் எப்போதும் சிறியவர்களை அன்புடன் பேணுகிறார்கள். பர்வதங்கள் தங்கள் தலை மீது எப்போதும் புல்பூண்டு, இவைகளைத் தாங்குகின்றன.

ஸமுத்ரம் இத்தனை ஆழமாக இருக்கிறது. ஆயினும், தன் தலை மீது நுரைகளைத் தாங்கிக் கொண்டு ஸந்தோஷமடைகிறது. அதே போலப் பூமியானது தன் சிரத்தின் மீது எப்போதும் குப்பைகளையும், தூசிகளையும் வைத்துக் கொண்டு இருக்கிறது. இதுவே உலக நியதி.

அஸ் கஹி கஹே நரேஸ் பத்
ஸ்வாமீ ஹோஹூ க்ருபால் |
மோஹி லாகி துக் ஸஹிய ப்ரபு
ஸஜ்ஜன் தீனதயால் || 1656

இம்மாதிரி கூறிய அரசன், உடனே கீழே விழுந்து முனிவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு; ''ஹே ஸ்வாமி! இப்பொழுது என் மீது க்ருபை செய்யுங்கள். என் கஷ்டத்தை ஸஹித்துக் கொள்ளுங்கள். ஏனெனில்; நீங்கள் ஒரு மஹாத்மா! தீனர்களிடம் அன்பு கொள்பவர்'' என்றார் மன்னன்.

ஜானி ந்ருபஹி ஆபன் ஆதீனா |
போலா தாபஸ் கபட் ப்ரபீனா || 1657
ஸத்ய கஹவும் பூபதி ஸுனு தோஹீ |
ஜக் நாஹின் துர்லப் கசு மோஹீ || 1658

மன்னவன் முழுவதும் தன் வசமானதைக் கண்ட அந்த முனிவன் பின்னும்; கேளும் அரசனே! இந்த

உலகில் எனக்கு ஒரு பொருளும் அடைய முடியா தென்பது இல்லை. எல்லாம் பெற்றவன் நான்; உண் மையைத்தான் சொல்கிறேன்.

அவஸி காஜ் மைம் கரிஹவும் தோரா |
மன் தன் பசன் பக்த தைம் மோரா || 1659
ஜோக் ஜுகுதி தப் மந்த்ர ப்ரபாவூ |
பலயி தப்ஹிம் ஜப் கரிய துராவூ || 1660

ராஜனே! நான் உமது காரியத்தை நிச்சயம் செய் வேன். ஏனெனில்; மனம், மொழி, மெய்களால் நீர் எனக்குப் பக்தனாகி விட்டீர். யோகம், யுக்தி, தபம், மந்த்ரம் இவைகளை மறைத்து வைத்தால்தான் மஹிமை உண்டாகும், பலனையும் கொடுத்திடும். அதே போல்; நீர் ஸகல விதத்திலும் நிறைவு பெற்றவர் என்றான்.

ஜௌம் நரேஸ் மைம் கரளம் ரஸோயீ |
தும்ஹ பருஸஹு மோஹி ஜான் ந கோயீ ||1661
அன்ன ஸோ ஜோயி ஜோயி போஜன் கர்யீ |
ஸோயி ஸோயி தவ ஆயஸு அனுஸர்யீ ||1662

ஹே மன்னா! நான் பலவித உணவுகளைச் சமைக்கிறேன். இதை நீர் யாவருக்கும் பரிமாறு. ஆனால், என்னை யாருமே அறியக்கூடாது. இந்த அன்னத்தை எவர் எவர் உண்ணுகிறார்களோ; அவர்கள் யாவருமே, உன் வசத்தில் ஆகி விடு வார்கள்; உன் ஆணையைச் செய்வார்கள்.

புனி தின்ஹ கே கஹ் ஜேம்வயி ஜோவூ |
தவ பஸ் ஹோயி பூப் ஸுனு ஸோவூ || 1663
ஜாயி உபாய் ரசஹு நிருப ஏஹு |
ஸம்பத் பரி ஸங்கல்ப் கரேஹு || 1664

இது மட்டுமில்லை, மன்னா! கேளும், பின்னும் யார் யார் உன்னிடம் அந்த அன்னம் சாப்பிடுகிறார் களோ; அவர்களும் உம் அடிமையாகி விடுவார்கள். நீர் போய் நான் கூறியதைச் செய்வீராக. இம்மாதிரி மனத்தில் வருஷம் முழுதும் உணவு பரிமாறுவதாகச் ஸங்கல்பம் எடுத்துக் கொள்ளும்.

நித நூதன் த்விஜ் ஸஹஸ் ஸத்
பரேஹு ஸஹித் பரிவார் |
மைம் தும்ஹரே ஸங்கல்ப லகி
தின்ஹிம் கர்பி ஜேவ்நார் || **1665**

தினம் தினம் ஒரு லக்ஷம் ப்ராம்மணர்களை குடும்ப ஸஹிதம் அழைக்க வேண்டும்; அவர்களுக்கு விருந்து கொடுக்கவும் வேண்டும். நான் உம் ஸங்கல்பப்படி ஒரு வருஷம் வரை தினமும் உணவைச் செய்து கொடுத்து அனுப்புகிறேன்.

ஏஹி பிதி பூப் கஷ்ட அதி தோரேம் |
ஹோயிஹஹிம் ஸகல் பிப்ர பஸ் தோரேம் ||1666
கரிஹஹிம் பிப்ர ஹோம மக ஸேவா |
தேஹிம் ப்ரஸங்க் ஸஹஜேஹிம் பஸ் தேவா ||1667

ஹே ராஜன்! இம்மாதிரிச் சிறிய கஷ்டத்தினால் உமக்கு எல்லா ப்ராம்மணர்களும் வசமாகி விடுவார் கள். ப்ராம்மணர்கள், ஹோமம், யஜ்ஞும், முதலிய பூஜைகள், ஸேவைகள் செய்வதால் தேவதைகள் கூட இயல்பாகவே வசம் ஆகிறார்கள். (அதாவது; எல்லாத் தேவதைகளும் ப்ராம்மணர்களின் அடிமைகளாக இருக் கிறார்கள்).

அவுர் ஏக் தோஹி கஹவும் லகாவூ |
மைம் ஏஹிம் பேஷ் ந ஆவுப் காவூ || **1668**
தும்ஹரே உபரோஹித் கஹும் ராயா |
ஹரி ஆனப் மைம் கரி நிஜ் மாயா || **1669**

நான் உம்மிடம் அடையாளம் ஒன்று கூறுகிறேன். அரசனே! நான் இதே வேஷத்தில் வர மாட்டேன். ஹே ராஜனே! உம்முடைய ராஜ புரோஹிதரையும் எனது மாயா சக்தியால் அழைத்துக் கொண்டு வந்து விடுவேன்.

தப்பல் தேஹி கரி ஆபு ஸமாஹா |
ரகிஹவும் இஹாம் பர்ஷ் பர்வானா || **1670**
மைம் தரி தாஸு பேஷு ஸுனு ராஜா |
ஸப் பிதி தோர் ஸம்வாரப் காஜா || **1671**

என்னுடைய தபோபலத்தினால் புரோஹிதரை இங்குக் கொண்டு வந்து ஓராண்டுக் காலம் வைத்திருப் பேன். கேளும், மன்னா! நான் அவரைப் போல் வேடம் பூண்டு உன்னுடைய கார்யங்களைக் கவனிப் பேன்; நிறைவேற்றுவேன்.

கை நிஸி பஹூத் ஸயன் அப் கீஜே |
மோஹி தோஹி பூப் பேண்ட் தின் தீஜே || 1672
மைம் தப்பல் தோஹி துரக் ஸமேதா |
பஹூஞ்சைஹவும் ஸோவத்ஹி நிகேதா || 1673

இப்பொழுது இரவு நேரம் ஆகிவிட்டது; அரசனே! உறங்குங்கள். நான் உம்மை மூன்றாவது நாள் சந்திப் பேன். என்னுடைய தபோபலத்தினால் உம்மைக் குதி ரையுடன் உம்வீடு சேர்த்து விடுகிறேன். கவலைப்பட வேண்டாம்.

மைம் ஆவுப் ஸோயி பேஷ் தரி
பஹிசானேஹூ தப் மோஹி |
ஜப் ஏகாந்த் போலாயி ஸப்
கதா ஸுனாவெளம் தோஹி || 1674

நான் ஒரு புரோஹிதனைப் போல் வேஷம் தரித்து வருவேன். அப்பொழுது நீங்கள் என்னை யார் என்று கண்டு கொள்ள வேண்டும். அப்பொழுது நான் தனி மையில் உங்களிடம் நிறையக் கதைகள் சொல்வேன் என்றார் முனிவர்.

ஸயன் கீன்ஹ நிருப ஆயஸு மானீ |
ஆஸன் ஜாயி பைட் சல்க்யானீ || 1675
ச்ரமித் பூப் நித்ரா அதி ஆயீ |
ஸோ கிமி ஸோவ் ஸோச் அதிகாயீ || 1676

முனிவரின் கட்டளைச் சொல்படி அரசன் அங்கே படுத்துக் களைப்படைந்ததால்; அயர்ந்து நித்ரையில் ஆழ்ந்து விட்டான். ஆனால், இந்தக் கபட முனிவரோ தூங்காமல் ஓர் ஆஸனத்தில் வந்து அமர்ந்தார். அவர் மனத்தில் பலவிதமான எண்ணங்கள் உண்டாயின. ஆகவே, அவர் எப்படித் தூங்குவார்? அரசனை எப் படி எப்படி ஆட்டி வைக்கலாம் என்ற எண்ணத்தி னால் நிம்மதியற்று இருந்தார் முனிவர்.

காலகேது நிசிசர் தஹம் ஆவா |
ஜேஹிம் ஸூகர் ஹோயி ந்ருபஹி புலாவா || 1677
பரம மித்ர தாபஸ் ந்ருப கேரா |
ஜானயி ஸோ அதி கபட் கனேரா || 1678

அச்சமயம் இந்தக் கபட (முனிவரின்) அரசனின் சிறந்த நண்பனான காலகேது என்ற ராட்சதன் அங்கு வந்தான். அவன்தான் பன்றி வேடம் கொண்டு ப்ரதாப பானு அரசனைக் காட்டிற்குள் அழைத்து வந்தான். அவன் பலவிதமான மந்த்ர தந்த்ரங்கள், சூழ்ச்சி எல் லாம் அறிந்தவன். ஆகவே, இந்தக் கபட முனிவனின் அழைப்பின் பேரில் அங்கு வந்தான்.

தேஹிகே ஸத் ஸுத் அரு தஸ் பாயீ |
கல் அதி அஜய் தேவ் துக்தாயீ || 1679
ப்ரதமஹிம் பூப் ஸமர் ஸப் மாரே |
பிப்ர ஸந்த் ஸுர் தேகி துகாரே || 1680

அவனுடைய நூறு பிள்ளைகளும், பத்து ஸஹோதர் களும், பரம துஷ்டர்களாக இருந்தார்கள். இவர்களை யாராலும் ஜயிக்க முடியாதபடி இருந்தார்கள். இவர் களால் ப்ராம்மணர்களும், ஸாது, தேவர்களும் அதிகம் துன்பமடைந்து வந்தார்கள். ராஜா ப்ரதாப பானு முதலிலேயே இவர்களை யுத்தத்தில் கொன்று விட்டார்.

தேஹி கல் பாசில் பயரு ஸம்பாரா |
தாபஸ் ந்ருப மிலி மந்த்ர பிசாரா || 1681
ஜேஹிம் ரிபு சய ஸோயி ரசேன்ஹி உபாவு |
பாவீ பஸ் ந ஜான் கசு ராவு || 1682

அந்தத் துஷ்டன் பழைய விரோதத்தை மனத்தில் கொண்டு கபடி அரசனுடன் சேர்ந்து சதியாலோசனை செய்ய வந்தான். தமது எதிரியை எவ்விதம் அழிக்க லாம் என்று இருவரும் திட்டமிட்டார்கள். வரப் போகும் காலத்தை ப்ரதாப பானு சிறிதும் அறிந்திட முடியாது.

ரிபு தேஜஸீ அகேல் அபி
லகு கரி கனிய ந தாஹு |
அஜஹுூம் தேத் துக் ரபி ஸஸிஹி
ஸிர் அவஸேஷித் ராஹு || 1683

பராக்ரம சாலியான பகைவன் தனியாக இருந்த போதிலும் அவனைச் சிறிதாக எண்ணிவிடக் கூடாது. ராகுவிற்குத் தலை மட்டும்தான் இருக்கிறது. ஆயினும், ஸூர்ய-சந்த்ரனுக்குப் பரம துக்கம் அளிக்கிறான். அம் மாதிரி இந்த அரசன் தனியாக இருந்தாலும் இவனை நம்பக்கூடாது; நமது எதிரி இவன்; பயங்கரமானவன்; இம்மாதிரி இருவரும் எண்ணினார்கள்.

தாபஸ் ந்ருப நிஜ ஸக்ஹி நிஹாரீ |
ஹர்ஷி மிலேவு உடி பயவு ஸுகாரீ || 1684
மித்ரஹி கஹி ஸப் கதா ஸுநாயீ |
ஜாதுதான் போலா ஸுக் பாயீ || 1685

முனிவனான அரசன் தனது பரம நண்பனைக் கண்டவுடன் மிகவும் ஸந்தோஷமடைந்து அவனைக் கட்டி ஆலிங்கனம் செய்து கொண்டார். அந்த நண் பனுக்குப் பின்னும் ராஜா ப்ரதாப பானு பற்றிய எல் லாக் கதைகளையும் கூறினார். இதைக் கேட்ட கால கேது ராட்சதன் பரம த்ருப்தி அடைந்து;

அப் ஸாதேவும் ரிபு ஸுநஹு நரேஸா |
ஜௌம் தும்ஹ கீன்ஹ மோர் உபதேஸா || 1686
பரிஹரி ஸோச் ரஹஹு தும்ஹ ஸோயீ |
பிநு ஔஷத் பியாதி பிதி கோயீ || 1687

ஹேராஜன்! என் வார்த்தையைக் கேளும்: நீர் நான் சொல்லியபடியே கார்யத்தைச் செய்திருக்கிறீர்கள். இப்பொழுது அந்தச் சத்ருவை நான் கட்டாயம் வசப் படுத்துவேன். நீர் உம் கவலையை விட்டுத் தூங்கப் போகலாம். மருந்து இல்லாமலேயே கூட வியாதியை விதியானது குணமாக்கி விடும்.

குல ஸமேத் ரிபு மூல் பஹாயீ |
சௌதேம் திவஸ் மிலப் மைம் ஆயீ || 1688
தாபஸ் ந்ருபஹி பஹுத் பரிதோஷீ |
சலா மஹாகபடி அதிரோஷீ || 1689

சத்ரு குலத்தை வேறோடு நாசம் செய்து விட்டு நான்காம் நாள் நான் வந்து உம்மைப் பார்க்கிறேன் என்று சொல்லி அந்த மஹாமாயாவியான, சினமுற்ற

அரக்கன் காலகேது முனிவனிடம் விடைபெற்றான். (பல விதமாக அவனுக்கு வணக்கங்கள் கூறி அங்கிருந்து புறப்பட்டான்)

பானு ப்ரதாப்ஹி பாஜி ஸமேதா |
பஹுஞ்சாஏஸி சன் மாஜ் நிகேதா || 1690
ந்ருபஹி நாரி பஹிம் ஸயன் கராயீ |
ஹய கருஹம் பாந்தேஸி பாஜி பநாயீ || 1691

ப்ராதாப் பானு அரசனை அவன் குதிரையுடன் கூட அவர் வீட்டிற்குக் கணநேரத்தில் எடுத்துப் போய்ச் சேர்த்து விட்டான். பின்னர் ராஜாவை அவர் மனைவி அருகில் படுக்கையில் தூங்கவைத்து விட்டு, குதிரையை அதன் லாயத்தில் நன்கு கட்டி விட்டுப் போய் விட்டான்.

ராஜா கே உபரோஹித்ஹி
ஹரி லை கயவு பஹோரி |
லை ராகேஸி கிரி கோஹ் மஹும்
மாயாம் கரி மதி போரி || 1692

அந்த அரக்கன் அங்கிருந்து ராஜ புரோஹிதரைத் தனது மாயாசக்தியினால் அபஹரித்துப் போனான்; அவனது புத்தியைத் தடுமாற வைத்து, ஒரு மலைக் குகையினுள் அப்புரோஹிதரை ஒளித்து வைத்தான்.

ஆபு பிரசி உபரோஹித் ரூபா |
பரேவு ஜாயி தேஹி ஸேஜ் அனூபா || 1693
ஜாகேவு ந்ருப அன்பயேம் பிஹானா |
தேகி பவன் அதி அசரஜ மானா || 1694

பிறகு அதே ராஜ புரோஹிதர்போல் உருவத்தைத் தான் மாற்றிக் கொண்டு அவர் படுக்கையில் படுத்திருந்தான். ராஜா ப்ரதாப பானு விடியற்காலை ஆவதற்குள் முன்னதாகவே எழுந்து விட்டார். தன் அரண்மனையில் இருப்பதைக் கண்டு அகமகிழ்ந்தார்; அவருக்கு ஒரே ஆச்சர்யமாக இருந்தது.

முனி மஹிமா மன் மஹும் அனுமானீ |
உடேவு கம்வஹி ஜேஹிம் ஜான் ந ரானீ || 1695

கானன் கயவு பாஜி சடி தேஹீம் |
புர் நர் நாரி ந ஜானேவு கேஹீம் || **1696**

முனிவரின் மஹிமையை மனத்தில் எண்ணி மகிழ்ந்து ராஜா ப்ரதாப பானு ராணிக்குத் தெரியாமல் மெது வாக எழுந்தார். மீண்டும் குதிரையில் ஏறி வனத்திற் குச் சென்றார். இதை அவர் மனைவியும் அறிய வில்லை. நகரத்தில் வஸிக்கும் ஆண்-பெண்கள் யாவ ரும் அறியாதபடடி இக்காரியம் செய்தார்.

கயேம் ஜாம் ஜுக் பூபதி ஆவா |
கர் கர் உத்ஸவ் பாஜ் பதாவா || **1697**
உபரோஹித் ஹி தேக் ஜப் ராஜா |
சகித் பிலோக் ஸுமிரி ஸோயி காஜா || **1698**

பிற்பகலில் அரசன் ப்ரதாப பானு அரண்மனை வந்தார். வீடுதோறும் மக்கள் மங்கள வாத்தியத்துடன் ஸந்தோஷமாக விழாக் கொண்டாடினார்கள். அப் போது அரசன் தனது புரோஹிதரைக் கண்டு ஆச்சர் யத்துடன் அவரைப் பார்க்கலானார். முன்பே சொல் லப்பட்ட காரியங்கள் அவர் நினைவிற்கு வந்தது.

ஜுக் ஸம நருபஹி கயே தின் தீனீ |
கபடீ முனி பத் ரஹ் மதி லீனீ || **1699**
ஸமய் ஜானி உபரோஹித் ஆவா |
நருபஹி மதே ஸப் கஹி ஸமுஜாவா || **1700**

அரசனுக்கு மூன்று தினங்கள் மூன்று யுகமாகத் தோன்றின. பொய்யான முனிவரின் திருவடிகளி லேயே அவர் மனம் லயித்து இருந்தது. இந்தச் சம யத்தை அனுகூலமாகக் கொண்ட புரோஹிதன் வேஷத் தில் உள்ள கபட அரக்கன் வந்தான். அரசரிடம் செய்து கொண்ட ரஹஸ்ய யோஜனைப்படி மன்னனைத் தனி யாக ஓர் இடம் அழைத்துப் போய் என்னவெல்லாமோ போதனை செய்தான்.

நருப ஹர்ஷேவு பஹிசானி குரு
ப்ரம பஸ் ரஹா ந சேத் |
பரே துரத் ஸத் ஸஹஸ் பர்
பிப்ர குடும்ப ஸமேத் || **1701**

ராஜா ப்ரதாப பானு ரொம்பவும் ஆனந்தமடைந் தார். தனது குருவை இந்த ரூபத்தில் கண்டதும் அவர் கூறியதெல்லாம் அவருக்கு நினைவுக்கு வந்தது. புரோ ஹிதராக இருப்பவர் வஞ்சக முனிவரா? காலகேது ராட்சதனா? என்பதைக் கண்டு கொள்ள முடியாதபடி மதி மயங்கி அவனுடன் ஐக்கியமானார். அவர் கூறிய படியே ஒரு லட்சம் ப்ராம்மணர்களைக் குடும்ப ஸஹி தம் விருந்துக்கு அழைத்தார்.

உபரோஹித் ஜேவ்நார் பநாயீ |
சரஸ் சாரி பிதி ஜஸி ச்ருதி காயீ || 1702
மாயாமய தேஹிம் கீன்ஹி ரஸோயீ |
ப்யஞ்ஜன் பஹு கனி ஸகஇ ந கோயீ || 1703

புரோஹிதன் திட்டம் வகுத்தான். ஆறு வித ரஸங் களுடன், நான்குவகை உணவுகளை வேத சாஸ்த்ரங் களில் கூறியபடி (ஒரு துவர்ப்பு, ஒரு காரம், ஒரு புளிப்பு, ஓர் இனிப்பு, ஓர் உவர்ப்பு, ஓர் உப்பு, இம் மாதிரி ஆறு விதமான த்ரவ பதார்த்தங்களும், நான்கு விதமான பக்ஷ்ய பதார்த்தங்களும், ஆக இப்படி) மாயை யினால் செய்வித்தான். அவைகளை எவரும் எண்ணிக் கையில் கூற முடியாது.

பிபித் ம்ருகன்ஹ கர் ஆமிஷ் ராந்தா |
தேஹி மஹும் பிப்ர மாம்ஸு கல் ஸாந்தா ||
1704
போஜன் கஹும் ஸப் பிப்ர போலாயே |
பத் பகாரி ஸாதர் பைடாயே || 1705

அந்தத் துஷ்டன் ம்ருகங்களின், ப்ராம்மணர்களின் மாம்ஸத்தையும் பலவிதமாகச் செய்து அதை முறைப் படி அன்னத்தில் கலந்து விட்டான். எல்லா ப்ராம் மணர்களையும் அழைத்துக் கால்களைக் கழுவி, மரி யாதையுடன் ஆஸனத்தில் அமர வைத்தான்.

பருஸன் ஜப்ஹிம் லாக் மஹிபாலா |
பை அகாஸ் பானீ தேஹி காலா || 1706
பிப்ரப்ருந்த உடி உடி க்ருஹ ஜாஹு |
ஹை படி ஹானி அன்ன ஜனி காஹு ||1707

எப்போது ராஜா யாவருக்கும் அன்னம் பரிமாறப் போனாரோ; அப்போது அசரீரி வாக்கொன்று ஆகாயத்தில் தோன்றியது. அதாவது; ''ஹே ப்ராம்மணர்களே! எழுந்து உடனே வீடு செல்லுங்கள். பெரிய அனர்த்தம் நடக்கிறது. இந்தச் சாப்பாட்டைச் சாப்பிடாதீர்கள்'' இந்த உணவில் மிகுந்த கெடுதல் இருக்கிறது.

பயவு ரஸோயீ பூஸுர் மாம்ஸு |
ஸப் த்விஜ் உடே மானி பிஸ்வாஸு || 1708
பூப் பிகல் மதி மோஹம் புலானீ |
பாவீ பஸ் ந ஆவ் முக் பானீ || 1709

இந்த விருந்துச் சாப்பாட்டில் ப்ராம்மணர்களின் மாம்ஸம் இருக்கிறது; உடனே எழுந்திருங்கள்;'' என்ற அசரீரியைக் கேட்டதும், எல்லா ப்ராம்மணர்களும் எழுந்து நின்று விட்டனர். ராஜா ப்ராதாப பானுவின் துக்கத்திற்கு அளவேயில்லை. ஆனால், அவர் அறிவு, மயக்கத்தில் மறந்திருந்தது. மேலும், நடைபெறப் போகும் காலத்தின் போக்கினால் வாய் பேச முடியாமல் ப்ரமை பிடித்தாற்போல் அப்படியே மௌனமாக இருந்து விட்டார். அவர் வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வெளி வரவில்லை.

போலே பிப்ர ஸகோப் தப்
நஹிம் கசு கீன்ஹ பிசார் |
ஜாயி நிஸாசர் ஹோஹு ந்ருப
மூட் ஸஹித் பரிவார் || 1710

ப்ராம்மணர்கள் உடனே கோபம் கொண்டார்கள். அவர்கள் முன் பின் யோசிக்கவில்லை. ப்ரதாப பானு ராஜாவை நோக்கி; ''ஹே மூர்க்க ராஜாவே! நீ குடும்பத்துடன் ராட்சதனாகக் கடவது''

சத்ர பந்து தைம் பிப்ர போலாயீ |
காலை பியே ஸஹித் ஸமுதாயீ || 1711
ஈச்வர் ராகா தர்ம ஹமாரா |
ஜைஹஸி தைம் ஸமேத் பரிவாரா || 1712

''ஹே நீச க்ஷத்ரிய ராஜனே! நீ குடும்பத்தோடு கூட ப்ராம்மணர்களை அழைத்து அவர்களைக் கெடுக்க

விரும்பினாய். ஆனால், தக்க ஸமயம் பார்த்து எங்களையும், எங்கள் தர்மத்தையும் கடவுள் காப்பாற்றினார். ஆகவே, நீ குடும்பத் துடன் நாசமாகிவிடுவாயாக!

ஸம்பத் மத்ய நாஸ் தவ ஹோவூ |
ஜலதாதா ந ரஹிஹி குல் கோவூ || 1713
ந்ருப ஸுனி ச்ராப் பிகல் அதி த்ராஸா |
பை பஹோரி பர் கிரா அகாஸா || 1714

ஓராண்டுக்குள் உனக்கு அழிவு ஏற்படும். தண்ணீர் கொடுக்கக்கூட உன் குலத்தில் யாருமே இருக்க மாட்டார்கள்'' என்றார்கள். இந்த மஹாபயங்கரமான சாபத்தைக் கேட்ட அரசன் ப்ரதாப பானு மிகவும் வருந்தித் துடித்தார். அதிகக் கலக்கமடைந்து துன்புற்றார். அப்போது, மீண்டும் ஆகாயத்திலிருந்து ஓர் அழகிய குரல் உண்டானது.

பிப்ரஹு ச்ராப் பிசாரி ந தீன்ஹா |
நஹிம் அபராத் பூப் கசு கீன்ஹா || 1715
சகித் பிப்ர ஸப் ஸுனி நப் பானீ |
பூப் கயவு ஜஹம் போஜன் கானீ || 1716

''ஹே ப்ராம்மணர்களே! நீங்கள் சிறிதும் யோசனை செய்து சாபம் கொடுக்கவில்லை. ராஜா ஓர் அபராதமும் செய்யவில்லை.'' இம்மாதிரி வந்த ஆகாசவாணியைக் கேட்டு எல்லா ப்ராம்மணர்களும் திகைத்தார்கள்; நடுங்கினர். உடனே ராஜா தானே சமையலறைக்குச் சென்று பார்த்தார். ஆனால், அங்குக் கண்டது என்ன?

தஹம் ந அஸன் நஹிம் பிப்ர ஸுவாரா |
பிரேவு ராவு மன் ஸோச் அபாரா || 1717
ஸப் ப்ரஸங்க் மஹிஸுரன்ஹ ஸுநாயீ |
த்ரஸித் பரேவு அவனீம் அகுலாயீ || 1718

அங்குப் பார்த்தபோது; அங்குச் சமையல் செய்தது ப்ராம்மண சமையற்காரர் இல்லை; உணவு அங்கே இல்லை; போஜன சாலையும் காலியாக இருந்தது. ராஜா மனத்தில் பலவித யோஜனைகளுடன் திரும்பி வந்தார். ப்ராம்மணர்களுக்குப் பூராவிவரமும் எடுத்

துக் கூறினார். பிறகு கலக்கமும், பயமும் கொண்டு துக்கத்துடன் பூமியில் விழுந்தார்.

பூபதி பாவீ மிடயி நஹிம்
ஜதபி ந தூஷன் தோர் |
கியேம் அன்யதா ஹோயி நஹிம்
பிப்ர ச்ராப் அதி கோர் || 1719

அப்பொழுது - ''ஹே ராஜனே! உனது குற்றம் இல்லாவிட்டாலும்; நடப்பது நடந்தே தீரும். ப்ராப்தம் என்பது மிகவும் பலம் கொண்டது. இந்த ப்ராம்மண சாபம் மிகவும் கடுமையானது. உன்னிடம் ஒரு தோஷ மும் இல்லைதான். என்ன செய்வது? ஆயினும்; நீ அனுபவிக்கத்தான் வேண்டும்'' என்றார்கள்.

ஜோ கரி கபட சலை ஜக்காஹூ |
தேயிஹி ஈஸ் அதமகதி வாஹூ || 1720
பிப்ரவசன் ஸுனி ந்ருப அகுலானா |
உடி புனி பினய் கீன்ஹ பிதி நாநா || 1721

''எவர் ஒருவர் நயவஞ்சகமாக ஒருவரை ஏமாற்றி லாபமடைய நினைக்கிறாரோ; அவர்களுக்கு ஈச் வரனே அதோகதியைக் கட்டாயம் அளிப்பார். இவ் வாறு கூறிய ப்ராம்மணர்களின் வார்த்தையைக் கேட்ட ராஜா ப்ரதாப பானு மிகவும் வருந்தினார். அவர்கள் கரங்களைப் பிடித்துக் கொண்டு பல விதமாக வந் தனை செய்து வேண்டினார்.

புனி புனி பத்கஹி கஹேவு புவாலா |
சாப் அனுக்ரஹ் கஹஹு க்ருபாலா || 1722
ஜப் தும் ஹோப் நிஸாசர் ஜாயீ |
ப்ரஹ்ம பம்ஸ தாபஸ் தனு பாயீ || 1723

ப்ராம்மணர்களைப் பிடித்துக் கொண்டு, அவர்கள் கால்களில் வீழ்ந்து ராஜா பிதற்றினார். ''ஹே க்ரு பாலு! தயவு செய்து கூறுங்கள், என்னுடைய இந்தச் சாப விமோசனம் எப்போது உண்டாகும்?'' என்றதும், அப்போது ப்ராம்மணர்கள்; ''எப்போது நீ ராட்சத னாகப் பிறக்கிறாயோ; அப்போது ப்ராம்மண வம்சத் திலும் சரீரம் பெற்றுப் பிறப்பாய்.''

அஜர் அமர் அதுலித் ப்ரபுதாயீ |
ஜக் விக்யாத் வீர் தோவு பாயீ || 1724
ஹோயிஹி ஜப்ஹிம் பராபவ் சாரீ |
தப் தும் ஸேவுப் தேவ் புராரீ || 1725

நீங்கள் உமது ஸஹோதரர் இருவரும் வயோதிகம், மரணம் இல்லாமல் மிகவும் கீர்த்தி வாய்ந்து உலகில் ப்ரஸித்தியடைவீர்கள். உங்களின் வல்லமை தாங்க முடியாது எப்போது நான்கு இடங்களிலும் உங்களுக்குத் திரஸ்காரம், அவமதிப்பு உண்டாகிறதோ; அப்போது த்ரிபுராரியான சிவனைக் குறித்துத் தவம் செய்வாயாக. அவரைப் பூஜிப்பாயானால், உனக்கு அருள் கிட்டும்.

சிவ ப்ரஸாத் வர் பாயி பஹோரீ |
ஹோயிஹை ஜக் ஸப் ப்ரபுதா தோரீ || 1726
மிலஹிம் தோஹி ஜப் ஸனத் குமாரா |
தப் தும் ஸமுஜப் ச்ராப் ஹமாரா || 1727

சிவனாருடைய க்ருபையால் வரம் பெற்று நீ உலகமெங்கும் மஹாகீர்த்திமானாகி விடுவாய். எப்போது உன் எதிரில் ஸனத் குமாரர்களின் ஸந்திப்பு கிடைக்கிறதோ; அப்போது எங்கள் சாபத்தின் நினைவு வரும் உனக்கு, ஸனத் குமாரர்களுக்கோ எல்லாம் தெரியும்.

தும் பூசப் நிஸ்தார் நிஜ
ஸாதர் ஸுனஹு நரேஸ் |
ஸப் பரிவார் உதார் தவ
ஹுயிஹை முனி உபதேஸ் || 1728

நீ முனிவரிடம் உன் சாப விமோசனத்தைப் பற்றி விஸ்தாரமாகக் கேட்கும்பொழுது; உன் பரிவாரத்துடன் நீ விளக்கிக் கேட்கும் பொழுது உனக்கு உத்தாரம் உண்டாகும். உன் பரிவாரங்களுக்கும் மோக்ஷம் கிடைக்கும்.''

அஸ் கஹி ஸப் மஹிதேவ ஸிதாயே |
ஸமாசார் புரலோகன்ஹ பாயே || 1729
ஸோசஹிம் தூஷன் தைவஹி தேஹீம் |
பிரசத் ஹம்ஸ காக் கிய ஜேஹீம் || 1730

என்று இம்மாதிரி கூறிவிட்டு ப்ராம்மணர்கள் போய் விட்டார்கள். அவ்வூர் நகரவாசிகள் யாவருக்கும் விஷயம் தெரிய வந்தது. அவர்கள் கவலை கொள்ள லாயினர். மேலும், ஸ்ருஷ்டி கர்த்தாவான ப்ரம்மனைத் தூஷித்தார்கள். ஏனெனில்; தங்களது ப்ரியமான ராஜா ப்ரதாப பானுவிற்கு இவ்விதமான கொடுமை நிகழ்ந்ததை அவர்களால் ஸஹிக்க முடியாமல் போய் விட்டது, பின்னும் ஹம்ஸப் பட்சி செய்யப் போகக் காகம் ஆகி விட்டதே ராஜாவின் கதை! தேவதையாகச் செய்யவேண்டிய புண்யாத்மாவான ராஜாவை ராட்சத னாக்கி விட்டாரே! என்று வருந்தினர்.

உபரோஹித்ஹி பவன் பஹுஞ்சாயீ |
அஸுர் தாபஸ்ஹி கப்ரி ஜனாயீ || *1731*
தேஹிம் கல் ஜஹம் தஹம் பத்ர படாயே |
ஸஜி ஸஜி ஸேன் பூப் ஸப் தாயே || *1732*

அந்த அரக்கன் குகையில் மறைத்து வைத்திருந்த அந்த ராஜ புரோஹிதரை மீண்டும் வீடு கொண்டு வந்து சேர்த்தான். பின் தனது குருவான துஷ்ட முனி வனிடம் விவரங்களைக் கூறினான். பிறகு எல்லா அர சர்களையும் ஸேனை ஸஹிதமாக வரும்படிக் கடிதம் அனுப்பினான். ஆகவே, அதனால் ஸேனைகளைத் தயார் செய்து கொண்டு எல்லாப் பகை ராஜாக்களும் அங்கு விரைந்து வந்து சேர்ந்தார்கள்.

கேரேன்ஹி நகர் நிஸாண் பஜாயீ |
பிபித் பாந்தி நித ஹோயி லராயீ || *1733*
ஜுஜே ஸகல் ஸுபட் கரி கர்னீ |
பந்து ஸமேத் பரேவு ந்ருப தர்னீ || *1734*

வாத்ய கோஷங்களுடன் எல்லா அரசர்களும் தங்கள் தங்கள் ஸேனைகளுடன் நகரத்தைச் சூழ்ந்து கொண் டார்கள். நித்யம் பல பல விதமானயுத்தம் நடந்தது. ப்ரதாபபானுவின் யுத்த வீரர்களும் தங்களால் முடிந்த அளவு யுத்தத்தில் ஈடுபட்டு இறந்தார்கள். இந்தத் தாக் குதலினால் ராஜா ப்ராதாப பானுவும் தனது ஸஹோ தரனுடன் பூமியில் வீழ்ந்தார்.

ஸத்ய கேது குல் கோவு நஹிம் பாஞ்சா |
பிப்ர ச்ராப் கிமி ஹோயி அஸாஞ்சா || *1735*

ரிபு ஜிதி ஸப் ந்ருப நகர் பஸாயீ |
நிஜ புர் கவ்னே ஜய ஜஸு பாயீ || 1736

ஸத்ய கேதுவின் குலத்தில் யாருமே மிஞ்சவில்லை. ப்ராம்மண சாபம் எப்படிப் பொய்யாகும்? சத்ருக்களை ஜயித்து, தங்கள் தங்கள் இஷ்டப்படி மற்ற அரசர்கள் நகரத்தை நிர்மாணித்துக் கொண்டு மன நிம்மதியுடன் வெற்றியும், புகழும் பெற்று ஊர் திரும்பினார்கள்; தங்கள் இல்லம் சென்றார்கள்.

பரத்வாஜ் ஸுனு ஜாஹி ஜப்
ஹோயி பிதாதா பாம் |
தூரி மேரு ஸம ஜனக் ஜம்
தாஹி ப்யால ஸம தாம் || 1737

ஹே பாரத்வாஜரே! கேளுங்கள்; எப்போது நமது விதியானது யாருக்கு விபரீதமாக ஆகிறதோ, அப் போது அவனுக்குத் தூசி கூட மேரு பர்வதமாகிறது. பாரமாகித் தந்தையே யமனைப் போல் தோன்றுவான். ஸாதாரணக் கயிறு பாம்பைப் போல் சீறிக் கடிக்கும். (இம்மாதிரி இந்த விதமான நிகழ்ச்சிகள் நடந்ததற்குக் காரணம் வஞ்சக அரசன் கபடி முனியினாலும், வேஷம் பூண்ட அரக்கனாலும் உண்டானது)

கால் பாயி முனி ஸுனு ஸோயி ராஜா |
பயவு நிஸாசர் லஹித் ஸமாஜா || 1738
தஸ் ஸிர் தாஹி பீஸ் புஜதண்டா |
ராவன் நாம் பீர் பரிபண்டா || 1739

ஹே முனிவரே! கேளும்; இதே அரசன் தனது குலத்துடன் ராவணன் என்ற ராட்சதனானான். பத்துத் தலைகளும், இருபது தோள்களும் கொண்டவனானான். மிகுந்த பராக்ரமசாலியாக இருந்தான்.

(ஒரு சமயம் விச்ரவஸ் என்பவர் தனது தபத்தி னால் தனது ஸ்த்ரீயிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர் மனைவி பேச்சு வாக்கில், மஹாராஜா! தாங்கள் இத்தனை காலமும் தவத்திலேயே நாட்களைக் கழித் தீர்கள். இதற்கு இடையில் எனக்குப் பத்து புத்ரர்கள் உண்டாகியிருக்கலாம். ஆனால், ஒன்றுமில்லை என்றாள்.

இதைக்கேட்ட ராஜா விச்ரவஸ்; பெண்ணே! கவலைப்படாதே, உனக்குப் பத்துப் புத்ரர்களுக்கு ஸமானமாக ஒரே பிள்ளையைக் கொடுக்கிறேன். அவன் பத்துப் பிள்ளையினுடைய பலமும் ஒருங்கே பொருந்தி இருப்பான் என்றார். ஸ்த்ரீயும் அங்கீகரித்தாள். இதன் காரணமாக அவளுடைய கர்ப்பத்தில் ராவணன் தோன்றினான்.)

பூப் அனுஜ் அரிமர்தன் நாமா |
பயவு ஸோ கும்பகர்ண பலதாமா || **1740**
ஸசிவ ஜோ ரஸா தர்மருசி ஜாஸூ |
பயவு பிமாத்ர பந்து லகு தாஸூ || **1741**

ராஜாவின் சிறிய ஸஹோதரன் அரிமர்தன் என்னும் பெயருடையவன். அவன் மஹாபலசாலியான கும்பகர்ணனாகத் தோன்றினான். ராவணனுடைய மந்த்ரி அவன் பெயர் தர்மருசி. அவன் ராவணனின் மாற்றாந்தாய் மூலம் தோன்றினான். அவன் ராவணனின் இளைய ஸஹோதரன் ஆனான்.

நாம் பிபீஷன் ஜேஹி ஜக் ஜானா |
பிஷ்னு பக்த பிக்யான் நிதானா || **1742**
ரஹே ஜே ஸுத் ஸேவக் ந்ருப கேரே |
பயே நிஸாசர் கோர் கனேரே || **1743**

அந்த மாற்றாந்தாயின் பிள்ளைதான் விபீஷணன் என்னும் பெயர் கொண்டவன். அவன் பெரும் விஷ்ணு பக்தன்; மஹாஜ்ஞானி; வித்வான். மற்றும் அரசனின் (ஸத்யகேதுவின்) அரண்மனை ஸேவகர்களும், ராஜாவின் மற்றபுத்ரர்களும் கோரமான, பயங்கரமான ராட்சதர்கள் ஆனார்கள்.

காமரூப் கல் ஜினஸ் அனேகா |
குடில் பயங்கர் பிகத் பிபேகா || **1744**
க்ருபா ரஹித் ஹிம்ஸக் ஸப் பாபீ |
பர்னி ந ஜாஹிம் பிஸ்வ பரிதாபீ || **1745**

அந்த அரக்கர்கள் தங்கள் இஷ்டப்படி ரூபத்தை மாற்றிக் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். அதாவது, துஷ்டர்களாகவும், கோணலாகவும், பயங்கர

மாகவும், ஜ்ஞானசூன்யர்களாகவும் இருந்தார்கள். இப் படிப்பட்ட இவர்கள் பலவித ரூபம் கொண்டு எல்லோ ரையும் துன்புறுத்தினார்கள்.

இவர்கள் ஹிருதயத்தில் பரிதாபம், தயவு சிறிதும் இருக்கவில்லை. எந்நேரமும் கொலை, கொள்ளையில் ஈடுபட்டார்கள். மகாபாபிகளாகவும் உலகிற்குத் துன் பம் அளிப்பவர்களாகவும் இருந்தார்கள். இவர்களு டைய அநியாயம், அக்கிரமம் இவைகளை வர்ணனை செய்ய இயலாது.

உபஜே ஜதபி புலஸ்த்யகுல்
பாவன் அமல் அனூப் |
ததபி மஹீஸுர் ச்ராப் பஸ்
பயே ஸகல் அகரூப் || **1746**

எப்படியிருந்தாலும்; எந்தக் குலம் மிகப் பரிசுத்த மானதோ, பாபமற்றதோ, அழகுடன் விளங்குவதோ, அந்த மாதிரியான புலஸ்த்ய முனிவரின் குலத்தில் பிறந்தும், ப்ராம்மண சாபத்தினால் ப்ராம்மண சரீரம் பெற்றும் அவர்கள் பாவ ரூபமாக இருந்தார்கள்.

கீன்ஹ பிபித் தப் தீனிஹும் பாயீ |
பரம உக்ர நஹிம் பர்னி ஸோ ஜாயீ || **1747**
கயவு நிகட் தப் தேகி பிதாதா |
மாகஹு பர் ப்ரஸன்ன மைம் தாதா || **1748**

(ஒரு முறை ராவணன் தனது தந்தை விச்ரவஸ் அரு கில் அமர்ந்திருந்தான். அப்போது குபேரன் அவரிடம் வந்தான். குபேரனைக் கண்ட ராவணனின் தந்தை அவ னுக்கு மிக்க மரியாதை செய்தார். பிதாவானவர் ராவ ணாதி ஸமூஹத்திற்கு எப்போதுமே மரியாதை இம் மாதிரி செய்தது இல்லை.

இதைக் கண்ட ராவணன், ஸுமாலி, தைத்ய கன்யா கைகஸி யாவரும் பொறாமை கொண்டு தன் தாயாரி டம் கேட்டார்கள். தாயே! விமானத்தில் ஏறி வந்தாரே, அவருக்குத் தந்தை அத்தனை மரியாதை செய்தாரே அவர் யார்? என்றார்கள். அதற்குத் தாய் : ''இவன் தான் உங்களுடைய ஸஹோதரன், குபேரன் என்பவன்.

தபஸ் செய்து அவன் பெரிய தேவதையாகி விட்டான். நீங்கள் வீண் பிறவி எடுத்தீர்கள். உங்கள் ஜன்மமே தண்டம். வீணாகச் சோம்பேறியாகி வீட்டில் உறங்கிக் கிடக்கிறீர்கள் என்றாள்.)

பிறகு ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் மூவ ரும் தவம் செய்யக் கிளம்பினார்கள். வித விதமாகக் கோரமான, பிடிவாதமான தவம், யாகங்கள் செய் தார்கள்; அதை வர்ணிக்க முடியாது.

அவர்களது உக்ரமான தவத்தைக் கண்ட ப்ரம்மன் அவர்களுடைய அருகே சென்று, ''உங்கள் தவத்தைக் கண்டு, மகிழ்ந்தேன். அப்பா! உங்களுக்கு என்ன வரம் வேண்டும்? கேளுங்கள்'' என்றார்.

கரி பின்தீ பத் கஹி தஸ ஸீஸா |
போலேவு பசன் ஸுநஹு ஜகதீஸா || **1749**
ஹம் காஹூ கே மர்ஹிம் ந மாரேம் |
பானர் மனுஜ் ஜாதி துயி பாரேம் || **1750**

ப்ரம்மனின் கால்களைப் பிடித்துக் கொண்டு வின யத்துடன் ராவணன்; ''ஹே ஜகதீசா! கேளுங்கள்! குரங்கும், மனிதனும், தவிர்த்து யார் எதிர்த்தாலும் எங்களுக்கு அழிவு ஏற்படக்கூடாது. இத்தகைய வரத் தைக் கொடுங்கள் என்றான். (நிர்பலமான மானிட ஜாதியிடமும், பலஹீனமான குரங்கு ஜாதியிடமும் எனக்குப்பயமே இல்லை. அவர்கள் எதிர்ப்பார்களே என்று நான் தவம் செய்யவில்லை)

ஏவமஸ்து தும்ஹ பட் தப் கீன்ஹா |
மைம் ப்ரஹ்மாம் மிலி தேஹி பர் தீன்ஹா ||**1751**
புனி ப்ரபு கும்பகர்ன பஹிம் கயவூ |
தேஹி பிலோகி மன் பிஸ்மய பயவூ || **1752**

நீ கேட்டபடியே நடக்கும் இராவணா! உன்னுடைய தபத்திற்கு மெச்சித் தரிசனமும் கொடுத்தோம்; வரமும் கொடுக்கிறோம் என்றனர் சிவனும் ப்ரம்மனும். பிறகு ப்ரம்மன் கும்பகர்ணனிடம் சென்று அவனை ஆச்சர் யத்தோடு பார்க்கலானார்.

ஜெளம் ஏஹி கல் நித் கர்ப அஹாரூ |
ஹோஇஹி ஸப் உஜாரி ஸம்ஸாரூ || 1753
ஸாரத் ப்ரேரி தாஸு மதி பேரீ |
மாகேஸி நீந்த் மாஸ் ஷட் கேரீ || 1754

இந்தத் துஷ்ட கும்பகர்ணன் தினமும் சாப்பிட ஆரம்பித்தால்; உலகமே தாளாது என்று எண்ணினார். அப்படிச் சாப்பிடுபவன் அவன். ஒரு நாள் மட்டும் தூங்கி மற்ற நாள்களில் விழித்திருக்க வேண்டும் என்ற வரத்தைக் கேட்க விரும்பினான்.

இதை எண்ணியே இம்மாதிரி வரன் கொடுத்தால் உலகம் அழிந்து விடும் என்பதைக் கண்ட ப்ரம்மன் ஸரஸ்வதியை அழைத்துக் கும்பகர்ணன் அறிவைமாற்றி, வார்த்தையை மாற்றிப் பேசும்படி செய்யச் சொன்னார்.

அதே போல் ஸரஸ்வதி அவன் நாக்கில் நுழைந்த தும்; கும்பகர்ணன் ப்ரம்மனிடம், "எனக்கு ஆறுமாத காலம் தூக்கமும், ஒரு நாள் விழிப்பும் வேண்டும்" என்று கேட்கும்படிச் செய்து விட்டான். அதன்படியே கும்பகர்ணன் ஆறு மாதம் உறக்கமும், ஒரு நாள் மட்டுமே விழிப்பும் என்று வரம் கேட்டு விட்டான். ப்ரம்மன் ஸந்தோஷத்துடன் வரத்தைக் கொடுத்துச் சென்றார். (மேலும், ப்ரம்மன் "ஹே கும்பகர்ணா! இந்த நித்ரை தினத்தில் யாரேனும், உன்னைத் தட்டி எழுப்பினால், அதுதான் உனக்கு சாவு மணி என்பதை மட்டும் அறிந்து கொள்" என்றார்.)

கயே பிபீஷன் பாஸ் புனி
கஹேவு புத்ர பர் மாகு |
தேஹிம் மாகேவு பகவந்த பத
கமல் அமல் அனுராகு || 1755

பிறகு ப்ரம்மன் விபீஷணன் அருகே போய்; பிள்ளாய்! என்ன வரம் வேண்டும்? கேள்; என்றார். அதைக் கேட்ட விபீஷணன், "ஸ்வாமி! எனக்கு என்றும் பகவானின் சரண கமலங்களிலேயே அன்பும், த்யானமும் இருக்கும்படி வரம் கொடுங்கள்" என்றான்.

தின்ஹஹி தேயி பர் ப்ரம்ஹ ஸிதாயே |
ஹர்ஷித் தே அப்னே க்ருஹ் ஆயே || 1756

மய தனுஜா மந்தோதரி நாமா |
பரம ஸுந்தரீ நாரி லலாமா || 1757

மூவருக்கும் வரமளித்து ப்ரம்மன் சென்று விட்டார். மூவரும் மிக ஸந்தோஷத்துடன் அரண்மனைக்குத் திரும்பி வந்தார்கள். மயனுடைய புத்ரி மந்தோதரி என்று பெயருடையவள் இருந்தாள். அவள் அழகில் சிறந்தவள்; ஸ்த்ரீகளில் சிரோமணியாக விளங்கினாள். (மெல்லிய இடை உடையவள்; ஆகவே; அவளுக்கு 'மந்தோதரி' என்று பெயர் வந்தது)

ஸோயி மயம் தீன்ஹி ராவன்ஹி ஆனீ |
ஹோயிஹி ஜாதுதான் பதி ஜானீ || 1758
ஹர்ஷித் பயவு நாரி பலி பாயீ |
புனி தோவு பந்து பிஆஹேஸி ஜாயீ || 1759

ராட்சதர்களின் ராஜாவாக ராவணன் ஆவான் என்பதை அறிந்தான். அதனால், தேவதச்சன் மயன் தனது மகளை ராவணனுக்குக் கொடுத்தான். ராவணன் அவளைத் தனது பட்ட மஹிஷியாக ஆக்கிக் கொண்டான். ராவணன் தனது அழகிய மனைவியை அடைந்து ஆனந்தமடைந்தான். மற்ற இரு ஸஹோதரர்களுக்கும் தானே விவாஹம் செய்து வைத்தான்.

வைரோசன்கீ தேவதீ
வஜ்ரஜ்வால் ஜேஹி நாம் |
கும்பகர்ணகா தாஸு ஸங்க
கியோ ப்யாஹ் ஸுகதாம் || 1760

வைரோசனி என்பவனுடைய தேவதீ வஜ்ரஜ்வாலா என்னும் பெண்ணுடன் கும்பகர்ணனுக்கு விவாஹம் செய்து வைத்தான்.

ஸைலூஷஹி கந்தர்வகீ
ஸரமா ஸுதா ஸயான் |
ப்யாஹ் பிபீஷன் கோ கியோ
தாகே ஸங்க் ஸுகமான் || 1761

ஸைலூஷன் என்னும் கந்தர்வனின் புத்ரி ஸரமா என்பவளை மகிழ்வுடன் விபீஷணன் மணந்து கொண்டான்.

கிரி த்ரிகூட் ஏக் ஸிந்து மஜாரீ |
பிதி நிர்மித் துர்கம அதிபாரீ || 1762
ஸோயி மய தானவ் பஹுரிஸம்வாரா |
கனக் ரசித் மணிபவன் அபாரா || 1763

ப்ரம்மனால் செய்யப்பட்ட சிற்ப வேலைப்பாடு மிகுந்த, மாயை நிறைந்ததொரு பெரிய கோட்டை த்ரிகூடம் என்னும் மலையில், ஸமுத்ரத்தின் நடுவில் செய்யப்பட்டு இருந்தது. இந்த மலை அருகில் யாருமே செல்ல முடியாது.

இந்த மலைக்கூடத்தை மயன் மீண்டும் அழகு செய் தான். மணியினால் இழைத்துக் கட்டப்பட்ட பலவித மான தங்கமயமான மாளிகைகள் எண்ணற்று இருந் தன.

போகாவதி ஜஸி அஹிகுல் பாஸா |
அமராவதி ஜஸி ஸக்ர நிவாஸா || 1764
தின்ஹ தேம் அதிக் ரம்ய அதி பங்கா |
ஜக் பிக்யாத் நாம் தேஹி லங்கா || 1765

பாதாள உலகில் எப்படி நாக ஸர்ப்பங்கள் வாழும் போகாவதி என்ற நகரம் சிறந்ததோ; எப்படி இந்த்ரன் வாழும் அமராவதி நகரம் சிறந்ததோ; அதை விடவும் அதி அற்புதமாக உலகப் ப்ரஸித்தியடையும்படி, அதிக மனமோஹம் உண்டாகும்படி ஒரு கோட்டை நகரத் தை ஸ்ருஷ்டித்தான். அதன் பெயர்தான் லங்கை.

காயீம் ஸிந்து கபீர் அதி
சாரிஹுூம் திஸி பிரி ஆவ் |
கனக கோட் மணி கசித் த்ருட
பர்னி ந ஜாயி பநாவ் || 1766

அந்த நகரத்தின் நாற்புறமும் மிகவும் ஆழமான ஸமுத்ரம் சூழ்ந்திருந்தது. அந்தக் கோட்டையைச் சுற்றி வலுவான கோட்டைச் சுவர்கள் மணியினால் அழகு செய்யப்பட்டு இருந்தன. அந்த நகரத்தின் கைவேலைப் பாட்டின் அழகை வர்ணனை செய்யவே முடியாது.

ஹரி ப்ரேரித் ஜேஹிம் கல்ப ஜோயி
ஜாதுதான் பதி ஹோயி |

ஸுர் ப்ரதாபீ அதுல பல்
தல் ஸமேத் பஸ் ஸோயி || 1767

பகவானின் தூண்டுதலால் இந்த யுகத்தில் யார் ராட்சதர்களின் அரசனாக உள்ளானோ; அவன் வீர பராக்கிரமத்தில் சிறந்தவன்; இணையற்ற வலுவுள்ள வன்; அவன்தான் தனது ஸேனை ஸஹிதமாகத் தனது பரிவாரம் ஸஹிதமாக அந்த நகரத்தில் வாஸம் செய் கிறான். (என்று அந்த த்ரிகூட பர்வதத்தின் வாசற்படி யில் முன்னமே எழுதியிருந்தது).

ரஹே தஹாம் நிஸிசர் பட் பாரே |
தே ஸப் ஸுரன்ஹ ஸமர் ஸங்காரே || 1768
அப் தஹம் ரஹஹிம் ஸக்ர கே ப்ரேரே |
ரச்சக் கோடி ஜச்சபதி கேரே || 1769

முதலில் அந்நகரத்தில் வஸித்து வந்த போரிடும் அரக்கர் கூட்டத்தைத் தேவர்கள் யுத்தத்தில் அழித்து விட்டிருந்தார்கள். அதன் பின் இப்பொழுது இந்த்ர னின் ஏவுதலால் குபேரனுடைய ஒரு கோடி யக்ஷர்கள் வஸித்து வந்தனர்.

தஸமுக கத்ஹுஂ கபரி அஸி பாயீ |
ஸேன ஸாஜி கட் கேரேஸி ஜாயீ || 1770
தேகி பிகட பட் படி கட்காயீ |
ஜச்ச ஜீவ் லை கயே பராயீ || 1771

தசமுகனான ராவணன் இந்த நகரத்தின் பெருமை யைக் கேட்டதும்; தனது ஸேனையுடன் அந்நகரத்தை முற்றுகையிட்டான். அவன் பயங்கரமான யுத்தவீரன். அவனது பெரிய பயங்கரமான ஸேனைகளையும், யுத்த வீரர்களையும் கண்டு யக்ஷர்கள் உயிரைப் பிடித்துக் கொண்டு, பயந்து ஓடி விட்டனர்.

பிரி ஸப் நகர் தஸானன் தேகா |
கயவு ஸோச் ஸுக் பயவு பிஸேஷா || 1772
ஸுந்தர் ஸஹஜ் அகம் அனுமானீ |
கீன்ஹி தஹாம் ராவன் ரஜ்தானீ || 1773

அந்த அழகிய நகரம் முழுவதையும் சுற்றிப் பார்த்தான் தசமுகன்; மிகவும் ஸந்தோஷமடைந்தான்; அவன் கவலைகள் விட்டொழிந்தன. சத்ருக்கள் அடைய முடியாத, இயற்கையாகவே அழகிய பட்டணம் என்று கருதிய அவன், அந்நகரத்தையே தனது ராஜதானியாக உறுதியாக ஆக்கிக் கொண்டான்.

ஜேஹி ஜஸ் ஜோக் பான்டி க்ருஹ் தீன்ஹே |
ஸுகீ ஸகல ரஜனீசர் கீன்ஹே || **1774**
ஏக் பார் குபேர் பர் தாவா |
புஷ்பக் ஜான் ஜீதி லை ஆவா || **1775**

எவருக்கு எவ்விதம் தகுதியோ அம்மாதிரியே வீடுகளைப் பகிர்ந்தளித்துத் தனது ராஜ்யத்தில் உள்ள எல்லா அரக்கர்களையும் ஸுகமாக வாழவைத்தான். எல்லோரும் ஸுகமடைந்தார்கள். பூர்வ ஜன்ம பாபத்தின் காரணமாக ஒருமுறை குபேரனையும் இவன் ஹிம்சை பீடித்தது. குபேரனின் புஷ்பக விமானத்தை யுத்தம் செய்து ஜயித்து அபஹரித்தான் ராவணன்.

கௌதுக்ஹீம் கைலாஸ் புனி
லீன்ஹேஸி ஜாயி உடாயி |
மன்ஹும் தௌலி நிஜ பாஹுபல்
சலா பஹுத் ஸுக் பாயி || **1776**

ஒரு ஸமயம் ராவணன் விளையாட்டாகக் கைலாஸ பர்வதத்தைக் கைகளால் எடுத்துவிட்டான். இப்படிக் கைலாஸத்தைத் தன் கைகளால் எடுத்துத் தன் புஜ பலத்தைப் பரீட்சை செய்து அதில் மிகவும் ஸுகம் கொண்டு அங்கிருந்து சென்றான்.

(ராவணனுடைய முதல் பெயர் தசகண்டன். ஒரு முறை விளையாட்டாகக் கைலாஸ பர்வதத்தைக் கைகளினால் எடுத்து விட்டான். பார்வதி நடுங்கிப் போய்ச் சிவனாரிடம் சென்று அமர்ந்தாள். பார்வதியின் பயத்தையும் துயரத்தையும் கண்ட சிவனார் பர்வதத்தைத் தன் கால்களினால் அமிழ்த்தினார். அப்போது ராவணனின் கைகள் நசுங்கி அழ ஆரம்பித்தான். அவனது குரலைக் கேட்டு உலகமே நடுங்கியது. இப்படிப்பட்ட ப்ரலாபம் செய்ததனால் அவனுக்கு

'ராவணன்' என்று மறு பெயர் உண்டாயிற்று. பல விதமாக அவன் அழுது கொண்டு சிவனாரை வணங்கினான். அப்போதுதான் அவர் அவன் கைகளை விடுவித்தார்.)

ஸுக ஸம்பதி ஸுத ஸேன் ஸஹாயீ |
ஜய ப்ரதாப பல் புத்தி படாயீ || 1777
நித நூதன் ஸப் பாடத் ஜாயீ |
ஜிமி ப்ரதிலாப் லோப் அதிகாயீ || 1778

எப்படி ஸுகம், ஸம்பத்து, புத்ரர்கள், ஸேனைகள், உதவியாளர், வெற்றி, கீர்த்தி, ப்ரதாபம், பலம், புத்தி, பெருமை எல்லாம் நாளும் புதியனவாக ஒருங்கே மேலும் மேலும் கிடைத்தனவோ; அதேபோல் நித்யம் ஒவ்வொன்றிலும் பேராசை அதிகரித்து வந்தது.

அதிபல் கும்பகரன் அஸ ப்ராதா |
ஜேஹி கஹும் நஹிம் ப்ரதிபட் ஜக் ஜாதா || 1779
கர்யி பான் ஸோவயி ஷட் மாஸா |
ஜாகத் ஹோயி திஹும் புர் த்ராஸா || 1780

அதிபலசாலியான கும்பகர்ணன் ஸஹோதரன் ஆனான். அவனுடைய பராக்ரமத்திற்கும், வீரத்திற்கும் எதிரில் போரிட உலகில் யாருமே பிறக்கவில்லை. அவன்-ஸோமரஸம் குடித்து விட்டு ஆறு மாத காலம் தூங்குவான். அவன் விழித்துக் கொண்டால்; மூன்று உலகங்களும் பயத்தினால் நடுங்கும்.

ஜௌளம் தின் ப்ரதி அஹார் கர் ஸோயீ |
பிஸ்வ பேகி ஸப் சௌபட் ஹோயீ || 1781
ஸமர் தீர் நஹிம் ஜாயி பகானா |
தேஹி ஸம அமித் பீர் பல்வானா || 1782

இந்தக் கும்பகர்ணன் தினம் சாப்பிட ஆரம்பித்தானேயானால்; அப்பொழுது உலகமே காலியாகி விடும். இதே போல் யுத்தம் செய்ய ஆரம்பித்தால்; அவனை ஜயிக்க யாராலும் முடியாது; அதை வர்ணிக்கவும் முடியாது. அவனைப் போலப் பலவான்கள், வீரர்கள் எண்ணற்றவர்கள் லங்கையில் இருந்தார்கள்.

பாரித நாத் ஜேட் ஸுத தாஸூ |
பட் மஹும் ப்ரதம லீக் ஜக் ஜாஸூ || 1783
ஜேஹி ந ஹோயி ரண ஸன்முக கோயீ |
ஸுர்புர் நிதஹிம் பராவன் ஹோயீ || 1784

ராவணனுடைய முதல் பெரிய குமாரன் மேக நாதன். உலகில் வீரமாகப் போர் புரிவதில் அவன் முதல்வன். அவன் எதிரில் யுத்தத்தில் யாருமே நிற்க முடியாது. தேவலோகத்திலும் ஒருவரும் இல்லை. தேவர்கள் எல்லாரும்கூட இவனைக் கண்டால் பயந்து ஓடி மறைவார்கள். (ஒரு ராஜ்யத்தை அபஹரித்த பின் மற்றொரு ராஜ்யத்தை ஜயிக்கப் போகிறவன். இத னால் இவன் பெயர் பராவனா என்று உண்டானது).

குமுக் அகம்பன் குலிஸரத்
தூமகேது அதிகாய் |
ஏக் ஏக் ஜக் ஜீதி ஸக்
ஐஸே ஸுபட் நிகாய் || 1785

துர்முகன், அகம்பனன், வஜ்ரதந்தன், தூம கேது, அதிகாயன் போன்ற மஹாபலசாலிகளான பல யுத்த வீரர்கள் ராவணனிடம் இருந்தார்கள். அவர்கள் ஒவ் வொருவரும் தன்னந் தனியாகவே பூரா உலகையும் ஜயிக்கும் வல்லமை படைத்தவர்கள்.

காம ரூப் ஜானஹிம் ஸப் மாயா |
ஸப்னேஹும் ஜின்ஹ கேம் தர்ம ந தாயா || 1786
தசமுக் பைட் ஸபாம் ஏக் பாரா |
தேகி அமித் ஆபன் பரிவாரா || 1787

எல்லா அரக்கர்களும் நினைத்த மாத்ரத்தில் விருப் பம்போல் பலவித ரூபங்கள் எடுக்கக்கூடிய மாயாவி களாக இருந்தார்கள். ஸ்வப்னத்தில்கூட அவர்கள் ஹிருதயத்தில் தயவு தாட்சிண்யம் இருக்கவில்லை. ராவணன் ஒரு முறை ஸபையில் அமர்ந்து தனது எண் ணிலடங்காத அரக்கர் குலத்தை, குடும்பத்தைப் பார் வையிட்டான்.

ஸுத ஸமூஹ் ஜன பரிஜன் நாதீ |
கனை கோ பார் நிஸாசர் ஜாதீ || 1788

ஸேன் பிலோகி ஸஹஜ் அபிமானீ |
போலா பசன் க்ரோத் மத் ஸானீ || 1789

புத்ரர்கள், பேரன்கள், பேத்திகள் மற்றும் நாத்திகள், அத்தைகள், பணியாளர்கள், குடும்பத்தார் மிக மிக ஏராளமாக இருந்தார்கள். இத்தகைய ராட்சத ஜாதியரை யாரால்தான் எண்ண முடியும்! இப்படித் தனது பெரிய குடும்பத்தைக் கண்டு ராவணன் மகிழ்ந்தான். பின்னர் தனது ஸபையில் யுத்த வீரர்களைக் கண்டு, ஸைன்யங்களைக் கண்டு கோபத்தினால் செருக்கடைந்து சீறினான்.

ஸுனஹு ஸகல ரஜனீசர் ஜூதா |
ஹமரே பைரீ பிபுத பரூதா || 1790
தே ஸன்முக் நஹிம் கர்ஹிம் லராயீ |
தேகி ஸபல் ரிபு ஜாஹிம் பராயீ || 1791

"ஸம்பூர்ணமான அரக்கர் கூட்டங்களே! கேளுங்கள்; நமது பரம சத்ரு தேவர்கள் கூட்டம். ஆகவே, அவர்கள் எதிரில் வந்து சண்டை செய்ய மாட்டார்கள்; வலுவுமிக்க சத்ருக்களைக் கண்டு ஓடுபவர்கள்.

தேன்ஹ கர் மரன் ஏக் பிதி ஹோயீ |
கஹவும் புஜாயி ஸுநஹு அப் ஸோயீ || 1792
த்விஜபோஜன் மக் ஹோம் ஸராதா |
ஸப் கை ஜாயி கர்ஹு தும்ஹ பாதா || 1793

பின்னும் நான் அறிந்து கூறவதைக் கேளுங்கள்! தேவர்கள் மரணமற்றவர்கள். அவர்களின் உயிரை நாம் பறிக்க முடியாது. ஆகவே, அவர்கள் செய்யும் ப்ராம்மண போஜனம், யஜ்ஞம், ஹோமம், ச்ராத்தம் இவைகளைச் செய்ய விடாமல் நீங்கள் அவர்களுக்குத் தொந்தரவு தர வேண்டும்; அவர்களை அழிக்க இது ஒன்றுதான் வழியாகும்.

கூஜூதா கூீண் பலஹீன் ஸுர்
ஸஹஜேஹிம் மிலிஹஹிம் ஆயி |
தப் மாரிஹவும் கி சாடிஹவும்
பலீ பாந்தி அப்நாயி || 1794

சாப்பாடு தண்ணீர் இல்லாமல் பயங்கரமான பசி, தாஹத்துடனும், க்ஷீணமான உடல் தளர்ச்சியாலும் தேவர்கள் என்னிடம் நாடி வருவார்கள். அப்பொழுது அவர்களை முடிந்த மட்டும் கொல்வேன்; அல்லது, எனக்கு அடிமையாகச் செய்து விட்டு விடுவேன்'' என்றான்.

மேகநாத் கஹூம் புனி ஹங்கராவா |
தீன்ஹீ ஸிக் பலு பயரு படாவா || 1795
ஜே ஸுர் ஸமர் தீர் பல்வானா |
ஜின்ஹ கேம் லரிபே கர் அபிமானா || 1796

பிறகு ராவணன் தன் மகன் மேகநாதனை அழைத்து, அவனிடம் விரோதிகளான தேவர்களை அழிக்கும் படியாகப் பலவித வித்தைகளைப் போதித்தான்; தூண்டினான். ''அருந்தவப்புதல்வ! எந்தத் தேவதைகள் போர் செய்யத் துணிவுள்ளவர்களோ; பலசாலிகளோ; போரிடச் செருக்கு உள்ளவரோ; அவர்களை எதிர்த்துப் போரிடுவாயாக என்றான். (இதயத்தில் எப்போதுமே தேவர்களைத் துன்புறுத்தி ஜயிக்க வேண்டுமென்ற எண்ணம் குடி கொண்டிருந்தது. அப்படிப்பட்ட மேகநாதனை அழைத்துப் புத்திமதி கூறினான்).

தின்ஹஹி ஜீதி ரண் ஆனேஸு பாந்தீ |
உடி ஸுத பிது அனுஸாஸன் காந்தீ || 1797
ஏஹி பிதி ஸப்ஹீ அக்யா தீன்ஹீ |
ஆபுனு சலேவு கதா கர் லீன்ஹீ || 1798

அவர்கள் எல்லாரையும் போரில் ஜயித்துக் கட்டி இழுத்து வரவேண்டும்'' என இம்மாதிரிக் கூறியதும் புதல்வன் மேகநாதன் தன் தந்தையின் கட்டளையை அப்படியே என ஏற்றுக்கொண்டான். இப்படியாக எல்லாருக்கும் ஆணை பிறப்பித்து ராவணன் கையில் கதையை எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

சலத் தஸானன் டோல்தி அவனீ |
கர்ஜத் கர்ப ச்ரவஹிம் ஸுர் ரவனீ || 1799
ராவன் ஆவத் ஸுனேவு ஸகோஹா |
தேவன்ஹ தகே மேரு கிரி கோஹா || 1800

ராவணன் நடந்ததால் பூமி அதிரத் தொடங்கியது. ராவணனுடைய கர்ஜனையைக் கேட்டதுமே தேவஸ்த்ரீ களின் கர்ப்பம் கலையத் தொடங்கியது. ராவணன் மிகுந்த கோபத்துடன் வருகிறான் என்பதைக் கண்ட தேவர்கள் பயந்து போய் ஸுமேரு பர்வதத்திலுள்ள குகைக்குள் ஓடி ஒளிந்தனர்.

திக் பாலன்ஹ லோக் ஸுஹாயே ।
ஸுனே ஸகல் தஸானன் பாயே ॥ 1801
புனி புனி ஸிங்கநாத் கரி பாரீ ।
தேயி தேவன்ஹ காரி பசாரீ ॥ 1802

திக்பாலகர்களின் அழகிய எல்லா உலகங்களையும் ராவணன் வறளச் செய்துவிட்டான். அவன் அடிக்கடி மிகக் கடு ரமான ஸிம்ஹ கர்ஜனை செய்து, தேவர் களைச் சண்டைக்கழைத்து, வசைமாறி பொழிந்தான்.

ரன் மத மத்த பிர்யி ஜக் தாவா ।
ப்ரதிபட கோஜத் கத்ஹும் ந பாவா ॥ 1803
ரபி ஸஸி பவன் பருன் தன்தாரீ ।
அகினி கால் ஜம ஸப் அதிகாரீ ॥ 1804

போரில் மதவெறி கொண்டவனாகி அவன் தனக்கு நிகரான போராளியைத் தேடிய வண்ணம் உலகம் முழுவதும் அலைந்து திரிந்தான். ஆனால், அவன் எண்ணியதுபோல் அத்தகைய போராளி எங்கும், எவ ரும் கிடைக்கவில்லை. ஸூர்யன், சந்த்ரன், வாயு, வருணன், குபேரன், அக்னி, காலன், எமன் முதலான எல்லாத் திக்பாலர்களையும், அதிகாரிகளையும்,

கின்னர ஸித்த மனுஜ ஸுர நாகா ।
ஹடி ஸப்ஹீ கே பந்தஹிம் லாகா ॥ 1805
ப்ரஹ்ம ஸ்ருஷ்டி ஜஹம் லகி தனுதாரீ ।
தஸமுக பஸ்பர்தீ நர் நாரீ ॥ 1806

மேலும், கின்னரர், ஸித்தர்கள், மனிதர்கள், தேவர் கள், நாகர்கள் இம்மாதிரி இவர்கள் எல்லோர் பின்னா லும் அடம் பிடித்துக் கொண்டு பின்னால் ஓடி ஓடி அவர்களை எதிர்த்தான். ஒருவரையும் அவன் நிம்மதி யாக இருக்க விடவில்லை.

ப்ரம்மாவின் ஸ்ருஷ்டியில் சரீரம் பெற்ற ஸ்த்ரீ, புருஷர்கள் எல்லோரையும் ராவணன் தனது ஆதிக்கத்தில் உட்படுத்திக் கொண்டான்.

ஆயஸு கர்ஹிம் ஸகல பயபீதா |
நவ்ஹிம் ஆயி நித சரண் பிநீதா || 1807

பயத்தினால் யாவரும் அவனுக்கு அடிமையாகி, அவன் ஆணைப்படிச் செய்யலாயினர். தினமும் யாவரும் ராவணன் கால்களில் விநயமாக விழுந்து, காலைத் தொட்டு வணங்கினர்.

புஜபல் பிஸ்வ பஸ்ய கரி ராகேஸி
கோவு ந ஸுதந்த்ர |
மண்டலீக் மனி ராவன் ராஜ்
கர்யி நிஜ மந்த்ர || 1808

அதாவது; தன்னுடைய 'புஜபலபராக்ரமத்தினால் உலகம் முழுவதையும் ராவணன் தனதாக்கிக் கொண்டான். யாரையுமே ஸ்வதந்த்ரமாக இருக்க விடவில்லை. ராஜாக்களின் சிரோமணியாக இருந்து, 'ஸார்வ பௌம ஸம்ராட்' என்ற பெயருடன் ராவணன் தனது இச்சை ப்ரகாரம் ராஜ்யத்தை ஆண்டான்.

தேவ ஜக்ச கந்தர்வ நர கின்னர
நாக குமாரி |
ஜீதி பரீம் நிஜ பாஹுபல் பஹு
ஸுந்தர் பர் நாரி || 1809

தேவர்கள், யக்ஷர்கள், கந்தவர்கள் மனுஷ்யர்கள், கின்னரர், நாகர்களின் கன்னிகைகளையும், மற்றும் அனேக அழகிய ஸுந்தரிகளையும், உத்தம ஜாதி ஸ்த்ரீகளையும், எல்லோரையும் தனது புஜ பல பராக்ரமத்தினால் ஜயித்து மணந்து கொண்டான்.

இந்த்ரஜீத் ஸன் ஜோ கசு கஹேவு |
ஸோ ஸப் ஜனு பஹிலேஹிம் கரி ரஹேவு || 1810
ப்ரதமஹிம் ஜின்ஹ கஹும் ஆயஸு தீன்ஹா |
தின்ஹகர் சரித ஸுனஹு ஜோ கீன்ஹா || 1811

மேகநாதனிடம் ராவணன் என்ன சொல்ல நினைத் தானோ, அதை முன்பே அவன் தயாராகச் செய்து வைத்திருந்தான். அதாவது; ராவணன் மேகநாதனிடம் முன்னமேயே ஆஜ்ஞையைப் பரிபாலனம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருந்தான். அவன் அதன் படிச் சில செயல்களைச் செய்தான். அவைகளையும் கேளுங்கள்;

தேகத் பீமரூப் ஸப் பாபீ |
நிஸிசர் நிகர் தேவ் பரிதாபீ || 1812
கர்ஹிம் உபத்ரவ் அஸுர் நிகாயா |
நாநா ரூப் தர்ஹிம் கரி மாயா || 1813

எல்லா அரக்கர்களும் பெரிய பெரிய உருவத்துடன் பார்க்கவே பயமாக இருந்தார்கள். எல்லோரும் பாபி கள்; தேவர்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கவே இவர் கள் பிறந்தவர்கள். அந்த அஸுரர்களின் கூட்டம் துக்கத்தைக் கொடுத்தது. மேலும், மாயையினால் பல விதமான ரூபங்களைத் தாங்கித் தேவர்களைத் துன் புறுத்தினார்கள்.

ஜஹி பிதி ஹோயி தர்ம நிர்மூலா |
ஸோ ஸப் கர்ஹிம் பேத் ப்ரதிகூலா || 1814
ஜஹிம் ஜஹிம் தேஸ் தேனு த்விஜ பாவ்ஹிம் |
நகர் காவும் புர் ஆகி லகாவ்ஹிம் || 1815

தர்மத்தின் ரட்சை தீர்ந்ததும், தர்மத்தின் வேர் அறுந்ததும், அவர்கள் அனைவரும் அநியாயங்களைப் பலவிதமாக, வேதத்திற்கு விரோதமாக, எதிராகச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். எந்தெந்த இடத்தில் பசுக்களும், ப்ராம்மணர்களும் கிடைத்தார்களோ; அங் குள்ள அவர்களது க்ராம நகரங்களையும் நெருப்பில் எரித்தார்கள்.

சுப ஆசரன் கத்ஹும் நஹிம் ஹோயீ |
தேவ பிப்ர குரு மான் ந கோயீ || 1816
நஹி ஹரி பக்தி ஜக்ய தப க்யானா |
ஸப்நேஹும் ஸுநிஅ ந பேத் புரானா || 1817

இந்த அரக்கர்களின் பயத்தால் எங்குமே சுப காரியங்கள் நடக்கவில்லை. அதாவது; ப்ராம்மண போஜனம், யஜ்ஞும், ச்ராத்தம் இவைகளை நடத்துவதே இல்லை. தேவதை, ப்ராம்மணன், குரு இவர்களை ஒருவரும் லட்சியம் பண்ணுவதே இல்லை. எங்குமே ஹரி பக்தி இல்லை; எங்கும் யஜ்ஞும், தபம், ஜ்ஞானம் இருக்கவில்லை. வேத- புராணங்களும் நமது கனவில் கூடக் கேட்பது அரிதாகி விட்டது.

ஜப ஜோக் பிராகா தப மக பாகா
ச்ரவண் ஸுனயி தஸஸீஸா |
ஆபுனு உடி தாவயி ரஹை ந
பாவயி தரி ஸப் காலயி கீஸா || 1818
அஸ் ப்ரஷ்ட அசாரா பா ஸம்ஸாரா
தர்ம ஸுனிஅ நஹிம் கானா |
தேஹி பஹுபிதி த்ராஸயி தேஸ் நிகாஸயி
ஜோ கஹ் பேத புரானா || 1819

ஜபம், யோகம், வைராக்யம், தபம், யஜ்ஞும் இவைகளில் தேவதைகளுக்கு அர்ப்பணிக்கப்படும் ஹவிர்ப்பாகங்களைப் பற்றி எங்கெங்கு கேள்விப்படுகிறானோ; அங்கெல்லாம் ராவணன் தான் ஓடிப்போய் அங்குள்ள அனைவரையும் இருக்கவிடுவதில்லை; அடையாளம் தெரியாமல் அழித்து வந்தான். உலகில் அனாசாரம் பரவியிருந்தது. தர்மத்தைக் காதால் கூடக் கேட்கமுடிய வில்லை. எங்கெங்கு வேதபாடங்கள் ஓதப்பட்டனவோ; புராணங்கள் சொல்லப்பட்டனவோ; அங்கெல்லாம் போய் ஓதுபவர்களைப் பலவிதமாகத் தொந்தரவு செய்து பயமுறுத்தினான்; தேசத்திலிருந்து வெளியேற்றினான்.

பர்னி ந ஜாயி அனீதி கோர்
நிஸாசர் ஜோ கர்ஹிம் |
ஹிம்ஸா பர் அதி ப்ரீதி தின்ஹ கே
பாபஹி கவ்னி மிதி || 1820

ராட்சதர்கள் தாங்க முடியாத கொடுமைகளை இழைத்து வந்தார்கள். அதை வர்ணிக்க முடியாது. மேலும், ஹிம்சை செய்வதிலேயே அவர்களுக்கு இச்சை இருக்கும்பொழுது, பாபத்திற்கு மேலும் என்ன அவசியம்?

பாடே கல் பஹு சோர் ஜுவாரா |
ஜே லம்பட் பர்தன் பர்தாரா || 1821
மானஹிம் மாது பிதா நஹிம் தேவா |
ஸாதுன்ஹ ஸன் கர்வாவஹிம் ஸேவா || 1822

பிறருடைய சொத்துக்கள் மீதும், பிறருடைய ஸ்த்ரீ களிடமும் மனம் செலுத்துபவர்களும், துஷ்டர்களும், திருடர்களும், சூதாட்டம் ஆடுபவர்களும் நிறையப் பெருகி விட்டார்கள். மாதா, பிதா, தேவதைகளைப் போற்றுபவரும், ஸாதுக்களைப் பணிபவர்களும் ஒரு வரும் இல்லை. மாறாக இந்தத் துஷ்டர்களுக்குப் பயந்து பெரியவர்கள் ஸேவை செய்தார்கள்.

ஜின்ஹ கே யஹ் ஆசரன் பவானீ |
தே ஜானேஹு நிஸிசர் ஸப் ப்ரானீ || 1823
அதிசய் தேகி தர்ம கை க்லானீ |
பரம ஸபீத் தரா அகுலானீ || 1824

ஸ்ரீ சிவனார் ''ஹே பார்வதி! எவருக்கு இம்மாதிரி மனப் போக்கு, ஸ்வபாவம், நடத்தை இருக்கிறதோ; அவர்களை நீ ராட்சதன் என்றே தெரிந்துகொள். இம் மாதிரி ராவணனால் தர்மத்தின் சக்தி அழிந்து, எல்லா ப்ராணிகளும் பயத்துடன் ஒடுங்கி அடங்கி வாழ்வதைப் பார்த்த பூமி மிகவும் பயந்து அதிக வ்யாகுலமடைந்தது.

கிரி ஸரி ஸிந்து பார் நஹிம் மோஹீ |
ஜஸ் மோஹி கருஅ ஏக் பரத்ரோஹீ || 1825
ஸகல் தர்ம தேக்யி பிபரீதா |
கஹி ந ஸக்யி ராவன் பய பீதா || 1826

பர்வதங்கள், நதிகள், ஸமுத்ரங்கள்ஆகியவைகளின் பாரம் எனக்கு ஒரு பெரிய பாரமாகத் தோன்றவில்லை. ஆனால், பிறருக்குத் துன்பம் இழைக்கும் அக்ரமக் காரனே எனக்கு மிகவும் பாரமாக இருக்கிறான் என்ப தாகப் பூமி நினைக்கலாயிற்று. அதுவே எல்லாத் தர்மங் களின் விபரீதப் போக்கையும் கவனித்து வருத்தம் கொண்டது. ஆனால்; ராவணின் போக்கால் மிகவும் பயந்து மெலிந்தது; ஆனால், ஏதும் சொல்லவில்லை.

தேனு ரூப் தரி ஹ்ருதயம் பிசாரீ |
கஹி தஹாம் ஜஹம் ஸுர முனி ஜாரீ || 1827

நிஜ ஸந்தாப் ஸுநாயேஸி ரோயீ |
காஹூ தேம் கசு காஜ் நஹோயீ || 1828

முடிவில் பூமி மனத்தில் யோசனை செய்து தன்னை ஒரு பசுவாக மாற்றிக் கொண்டு; தேவர்களும், முனி வர்களும் ஒளிந்து வாழ்ந்த இடத்திற்குச் சென்றது. அங்குத் தன்னுடைய சோகக் கதையைச் சொல்லி சொல்லி அழுதது. ஆயினும்; ஒரு விதமான உதவியும் யாராலும் அதற்குக் கிடைக்கவில்லை.

ஸுர் முனி கந்தர்பா மிலி கரி
ஸர்பா கே பிரஞ்சி கே லோகா |
ஸங்க கோதனு தாரீ பூமி பிசாரீ
பரம பிகல் பய ஸோகா || 1829
ப்ரஹ்மாம் ஸப் ஜானா மன் அனுமானா
மோர் கூ ந பஸாயீ |
ஜா கரி தைம் தாஸீ ஸோ அபினாஸீ
ஹம்ரேவு தோர் ஸஹாயீ || 1830

எல்லாத் தேவதைகளும், முனிவர்களும், கந்தர்வர் களும் சேர்ந்து ப்ரம்மாவிடமான ஸத்யலோகம் போகத் தீர்மானித்தார்கள். சோகத்தாலும், பயத்தினாலும் மிரண்டு போன பூமியும் பசுவின் ரூபம் கொண்டு கூடப் போயிற்று.

ப்ரம்மா எல்லாம் அறிந்தார். அவர் தன் மனத்திற் குள் நம்வசத்தில் ஏதும் நடவாது என்று நினைத்துக் கொண்டார். ஆகவே பூமியைப் பார்த்து, ''ஹே பூமி தேவியே! நீ எவருக்கு அடிமையோ, எவர் அழிவற்ற வரோ, அவரையே சரணடைந்து விடு; அவரால்தான் நம் இருவருக்கும் உதவி கிட்டும்'' என்றார்.

தர்னி தர்ஹி மன் தீர் கஹ் பிரஞ்சி
ஹரிபத் ஸுமிரு |
ஜானத் ஜன் கீ பீர் ப்ரபு
பஞ்ஜிஹி தாருன் பிபதி || 1831

ப்ரம்மா;

ஹே பூமிதேவியே! மனத்தில் தைரியத்தை வருவித் துக் கொண்டு, ஸ்ரீ ஹரிஸ்மரணை செய். ப்ரபுவான வர் தனது அடிமைகளின் துயரத்தை அறிவார். அவர் உன் கடினமான ஆபத்தைத் தூர விலகும்படிச் செய்வார்.

பைடே ஸுர் ஸப் கர்ஹிம் பிசாரா |
கஹம் பாயிஅ ப்ரபு கரிஅ புகாரா || 1832
புர் பைகுண்ட் ஜான் கஹ் கோயீ |
கோவு கஹ் பயநிதி பஸ் ப்ரபு ஸோயீ || 1833

இத்தருணம் நாம் ப்ரபுவை எங்கு ஸந்தித்தாலும் நமது துன்பங்களை முறையிடலாம் என்று எல்லாத் தேவர்களும் ஒன்று கூடி ஆலோசனை செய்தார்கள். சிலர் பகவான் வைகுண்ட்டத்தில் இருக்கிறார்; அங்குச் செல்லலாம் என்றனர். சிலர் ஹரி க்ஷீர ஸமுத்ரத்தில் நிம்மதியாக வாழ்ந்து வருகிறார். அங்குச் செல்லலாம் என்றனர்.

ஜாகே ஹ்ருதயம் பக்தி ஜஸி ப்ரீதீ |
ப்ரபு தஹம் ப்ரகட் ஸதா தேஹிம் ரீதீ || 1834
தேஹி ஸமாஜ் கிரிஜா மைம் ரஹேவும் |
அவஸர் பாயி பசன் ஏக் கஹேவும் || 1835

யாருடைய ஹிருதயத்தில் நிர்மலமான பகவத் பக்தி யும், ப்ரீதியும் இருக்கின்றனவோ; அங்கு ப்ரபு எப்படி யும் ஏதோ ஒரு விதத்தில் தோன்றி விடுவார். ஹே பார்வதி! கேள்; அந்தத் தேவர் ஸமூஹத்தில் நானும் இருந்தேன். தகுந்த நேரம் பார்த்து நானும் ஒரு வார்த்தை சொல்லி வைத்தேன்.

ஹரி ப்யாபக் ஸர்பத்ர ஸமானா |
ப்ரேம் தேம் ப்ரகட் ஹோஹிம் மைம் ஜானா || 1836
தேஸ் கால் திஸி பிதிஸிஹு மாஹீம் |
கஹஹு ஸோ கஹாம் ஜஹாம் ப்ரபு நாஹீம் || 1837

எனக்கு நன்றாகத் தெரியும். என்னவென்றால்; ப்ரபுவானவர் எல்லா இடங்களிலும் வ்யாபித்து இருக் கிறார். யார் யார் அவரை ப்ரேமையுடன் பூஜிக்கிறார் களோ; நினைக்கிறார்களோ; அங்கு அவர் கட்டாயம் காட்சி அளிப்பார்.

உலகத்தில் தேசம், காலம், திசைகள், திசைமாற்றங் கள் எங்கு வேண்டுமானாலும் கூறுங்கள். அவர் நிரம்பியிராத இடம் ஒன்றும் உண்டா?

அக் ஜக்மய ஸப் ரஹித் பிராகீ |
ப்ரேம் தேம் ப்ரபு ப்ரகட்யி ஜிமி ஆகீ || 1838
மோர் பசன் ஸப் கே மன் மானா |
ஸாது ஸாது கரி ப்ரஹ்ம பகானா || 1839

அந்த ப்ரபு சராசரங்கள் எங்கிலும் வ்யாபித்து இருப்பவர்; இருந்தும், இல்லாமலும் இருப்பவர். எதிலும் பற்றுதலில்லாதவர்; அடிக்கடி எங்கு ப்ரேமையும், பக்தியும் வெளியாகின்றனவோ; அங்கு நெருப்பைப் போல் தானாகவே தோன்றுவார். எப்படி அக்னி எல்லா இடமும் வ்யாபித்து இருந்தும், யஜ்ஞகுண்டம் மந்த்ரம் முதலிய இடங்களில் தனியாகத் தோன்றுகிறதோ; அம்மாதிரிப் பகவான் ஹரி கட்டாயம் அவ்வப்போது தோன்றி நமது கலக்கத்தைப் போக்குவார். என் வார்த்தை எல்லோருக்கும் ப்ரியமானதுதான் என, இவ்விதம் நானும் என் யோசனையைத் தேவர்களிடம் கூறினேன்.

அப்பொழுது ப்ரம்மா; 'நல்லது நல்லது' என்று குதூஹலத்துடன் என்னை வாழ்த்தினார்.

ஸுனி பிரஞ்சி மன் ஹர்ஷ தன்
புலகி நயன் பஹ் நீர் |
அஸ்துதி கர்த் ஜோரி கர்
ஸாவதான் மதிதீர் || 1840

என்னுடைய வார்த்தைகளைக் கேட்ட ப்ரம்மா மிகவும் ஆனந்தம் கொண்டார். அவர் உடல் புளகாங்கிதம் அடைந்தது, மேலும், அவர் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. அப்பொழுது அவர் கை கூப்பி வணக்கத்துடன் ஸ்துதி செய்ய ஆரம்பித்தார்.

ஜய ஜய ஸுரநாயக ஜன ஸுகதாயக்
ப்ரனத பால் பகவந்தா |
கோ த்விஜ ஹிதகாரீ ஜய அஸுராரீ
ஸிந்துஸுதா ப்ரிய கந்தா || 1841
பாலன ஸுர் தர்னீ அத்புத கர்னீ
மர்ம ந ஜானயி கோயீ |
ஜோ ஸஹஜ க்ருபாலா தீனதயாலா
கரவு அனுக்ரஹ ஸோயீ || 1842

ஹே தேவதைகளின் ஸ்வாமியே! ஸேவகர்களுக்கு ஸுகம் கொடுப்பவரே! தஞ்சமென்று வந்தவருக்கு ஆதரவு அளிப்பவரே! ஹே பகவானே! உங்களுக்கு மங்களமுண்டாகட்டும்! மங்களம் உண்டாகட்டும்!! பசுக்களுக்கும், ப்ராம்மணர்களுக்கும் நன்மை செய்பவரே! அஸுரர்களை அழிப்பவரே! கடலின் கன்னியான ஸ்ரீ லக்ஷ்மீ தேவியின் மணாளனே! தங்களுக்கு மங்களமுண்டாகட்டும்! பூமியையும், தேவர்களையும் காப்பவரே! உங்களுடைய லீலைகள் அற்புதம், அதன் ரஹஸ்யங்களை எவரும் அறிய முடியாது. இப்படி இயல்பாகவே அருள் செய்யக் கூடியவரும், எளியோர்க்கு இரங்குபவரும் ஆன தாங்களே எங்களுக்கும் தயைபுரிய வேண்டுகிறேன்.

ஜயஜய அபிநாஸீ ஸப் கட பாஸீ
ப்யாபக் பரமானந்தா |
அபிகத கோதீதம் சரித புனீதம்
மாயா ரஹித முகுந்தா || 1843
ஜேஹி லாகி பிராகீ அதி அனுராகீ
பிகத மோஹ முனிப்ருந்தா |
நிஸி பாஸர் த்யாவஹிம் குன கன
காவ்ஹிம் ஜயதி ஸச்சிதானந்தா || 1844

அழிவற்றவரே! எல்லோர் ஹிருதயத்திலும் வாஸம் செய்பவரே! எங்கும் நிறைந்திருப்பவரே!, பரமானந்த ஸ்வரூபரே! அறிய முடியாதவரே! இந்த்ரியங்களைக் கடந்தவரே! தூய சரித்ரரே! மாயை எல்லாவற்றையும் நீக்கி மோக்ஷம் அருளுபவரே! (முகுந்தரே;) தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்! ஜயமுண்டாகட்டும்! இந்த லோகம், பரலோகம், இவைகளில் எல்லாவிதமான இச்சைகளையும் தவிர்த்து, விரக்திபெற்ற-அவ்வாறே மோஹத்தை அடியோடு ஒழித்த ஜ்ஞானிகளான முனிவர் கூட்டம் கூடத் தங்களைக் கண்டு அன்புகாட்டி, இரவும்-பகலும் த்யானம் செய்யப்படுபவரே! மேலும், அவர்கள் ஸதா தங்களைப் பூஜிக்கும்படியாகப் பாடும்படியான குணாதிசயங்களைக் கொண்டவரே! அத்தகைய ஸச்சிதானந்த ஸ்வரூபியான தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்!

ஜேஹிம் ஸ்ருஷ்டி உபாயீ த்ரிபித்
பனாயீ ஸங்க் ஸஹாய் ந தூஜா |

ஸோ கர்வு அகாரீ சிந்த ஹமாரீ
ஜானிஅ பக்தி ந பூஜா || 1845
ஜோ பவ பய் பஞ்ஜன் முனி மன் ரஞ்ஜன்
கஞ்ஜன் பிபதி பரூதா |
மன் பச க்ரம பானீ சாடி ஸயானீ
ஸரன் ஸகல ஸுரஜூதா || 1846

எவர் ஸ்ருஷ்டியிலேயே தனியாக நிற்பவரோ; அதாவது, அவரே முக்குணரூபமான ப்ரம்மனாகவும், விஷ்ணுவாகவும், சிவனாகவும் எக்காரணமும் இல்லாமல் - தானே ஸ்ருஷ்டியின் காரணமாக அவதரித்து இருக்கிறாரோ; எவர் மூன்று வித ஸ்ருஷ்டிகளை உற்பத்தி செய்தாரோ அப்படிப்பட்ட பாபத்தை நாசம் செய்யக்கூடிய பகவான் நமது நினைவில் நிற்கட்டும். நமக்குப் பக்தி தெரியாது; பூஜை செய்யத் தெரியாது. அவர் உலகத்தில் ஜனனமரண பயத்தைப் போக்க வல்லவர். முனிவர்களின் மனத்தில் ஆனந்தம் கொடுக்கக் கூடியவர். விபத்துக்களை நாசம் செய்பவர். நாம் எல்லாத் தேவதைகளுடனும் மனம், மொழி, செயல்களால் அவரைச் சரணமடையவே வந்திருக்கிறோம்.

ஸாரத் ச்ருதி ஸேஷா ரிஷய அஸேஷா
ஜா கஹூம் கோவு நஹிம் ஜானா |
ஜேஹி தீன் பிஆரே பேத் புகாரே
த்ரவவு ஸோ ஸ்ரீபக்வானா || 1847
பவ பாரிதி மந்தர் ஸப் பிதி
ஸுந்தர் குன்மந்திர ஸுக புஞ்ஜா |
முனி ஸித்த ஸகலஸுர பரம பயாதுர்
நமத நாத பத கஞ்சா || 1848

ஸரஸ்வதி, வேதம், சேஷம், ருஷிகணங்கள் யாவரும் இவருடைய பெருமையை அறிந்திருக்க மாட்டார்கள். இவருக்கு எளியவரின் மீது அபாரப் ப்ரேமை. அதே பகவான் நம் மீது தயவு செய்யட்டும் என்று இம்மாதிரி வேதமே கூறுகிறது. ஹே! ஸம்ஸாரமாகிற கடலினைக் கடையவல்ல மந்தரமலை போன்றவரே! எல்லாவிதத்திலும் அழகிய, குணங்களின் இருப்பிடமான, ஸுகக்களஞ்சியமான நாதனே! தங்களுடைய சரண கமலங்களில் முனிவர்கள், ஸித்தர்கள், தேவர்கள் யாவருமே பீதியடைந்து மிகவும் கலங்கியவாறு தங்களை நமஸ்கரிக்கிறார்கள்.

ஜானி ஸபய ஸுர பூமி ஸுனி
பசன் ஸமேத் ஸ்நேஹ் |
சுகன கிரா கம்பீர் பயி ஹரனி
ஸோக் ஸந்தேஹ் || 1849

தேவதைகளின், பூமிதேவியின் பயங்கர ஓலத்தை யும், அவர்களின் அன்பு கலந்த, பக்தியுடன் போற்றும் வார்த்தையையும் கேட்டுச் சோகத்தையும், ஸந்தேஹத் தையும் தீர்க்கவல்ல ஓர் அசரீரி ஆகாயத்தில் கம்பீர மாகக் கேட்டது.

ஜானி டர்பஹு முனி ஸித்த ஸுரேஸா |
தும்ஹஹி லாகி தரிஹவும் நர் பேஸா || 1850
அம்ஸந்ஹ ஸஹித் மனுஜ் அவதாரா |
லேஹவும் தின்கர் பம்ஸ உதாரா || 1851

''ஹே முனிவர்களே! ஸித்தர்களே! தேவதைகளே! ஸ்வாமிகளே! பயப்படாதீர்கள்! உங்களுக்காகவே நான் மானிடனாக உருவம் தரித்து, மேலும், ஸூர்ய வம்சத் தில் எல்லா அம்சங்களுடன் கூடிய அவதாரம் எடுக்கப் போகிறேன்.

கஸ்யப அதிதி மஹாதப் கீன்ஹா |
தின்ஹ கஹும் மைம் பூரப் பர்தீன்ஹா || 1852
தே தஸரத் கௌஸல்யா ரூபா |
கோஸலபுரீம் ப்ரகட் நர்பூபா || 1853

கச்யபரும், அதிதியும், பெரிய தபம் செய்திருந்தார் கள். அவர்களுக்கு நான் முன்பே வரன் கொடுத்திருக் கிறேன். அவர்களே தசரதராகவும், கௌஸல்யாவாக வும், மனிதர்களின் ராஜாவாக ஆகி அயோத்யா புரியில் பிறந்து வாழ்ந்து வருகிறார்கள்.

தின்ஹ கேம் க்ருஹ அவதரிஹவும் ஜாயீ |
ரகுகுல திலக் ஸோ சாரிவு பாயீ || 1854
நாரத பசன் ஸத்ய ஸப் கரிஹவும் |
பரம ஸக்தி ஸமேத் அவதரிஹவும் || 1855

அவர்களுடைய இல்லத்தில் நான்கு ஸஹோதரர் களாக ச்ரேஷ்ட்டமான ரகுகுலத்தில் நான் அவதரிப்

பேன். நாரதருடைய எல்லா வசனங்களையும் நான் ஸத்தியமாக்குவேன். பின்னும் என்னுடைய பராசக்தி யுடன் அவதரிப்பேன்.

ஹரிஹவும் ஸகல பூமி கருஆயீ |
நிர்பய ஹோஹு தேவ் ஸமுதாயீ || 1856
ககன் ப்ரஹ்மபானீ ஸுனி கானா |
துரத் பிரே ஸுர ஹ்ருதய் ஜுடானா || 1857

''நான் ப்ருதிவியின் பாரங்களைப் போக்குவேன்! ஹே தேவர்கணங்களே! நீங்கள் கொஞ்சமும் பயமின்றிப் போங்கள்.'' ஆகாயத்தில் இம்மாதிரிப் பகவானின் அசரீரி வார்த்தைகளைக் கேட்ட தேவர்கள் மிகவும் மகிழ்ந்து திரும்பினார்கள். அவர்கள் மனம் குளிர்ந்திருந்தது.

தப் ப்ரஹ்மாம் தர்னிஹி ஸமுஜாவா |
அபய் பயீ பரோஸ் ஜியம் ஆவா || 1858

அப்பொழுது ப்ரம்மதேவன் தரணியை நோக்கித் தெரிவித்தார்; பூமிதேவியும் அகமகிழ்ந்தாள்; பயம் விலகியது. அவள் மனத்தில் பகவான் காப்பார் என்ற நம்பிக்கையும் உண்டானது.

நிஜ லோக்ஹி பிரஞ்சி கே
தேவன்ஹ இஹயி ஸிகாயி |
பானர் தனு தரி தரி மஹி ஹரி
பத் ஸேவஹு ஜாயி || 1859

பிறகு ப்ரம்மன் தேவதைகளைப் பார்த்து; ''நீங்கள் எல்லோரும் வானர ரூபம் எடுத்துப் பூமியில் பிறப்பெடுங்கள். பகவான் ஸ்ரீராமச்சந்த்ரனின் பாதகமலங்களில் ஸேவை செய்து வாருங்கள். நல்லது நடக்கும்'', என்று கூறிப் போய் விட்டார்.

கயே தேவ ஸப் நிஜ நிஜ தாமா |
பூமி ஸஹித் மன் கஹும் பிச்ராமா || 1860
ஜோ கசு ஆயஸு ப்ரஹ்மாம் தீன்ஹா |
ஹர்ஷே தேவ பிளம்ப ந கீன்ஹா || 1861

எல்லாத் தேவர்களும் தங்கள்தங்கள் இருப்பிடம் ஏகினார்கள். பூமிதேவியோடு யாவரும் பரம த்ருப்தி யடைந்தார்கள். எல்லோருக்கும் சாந்தி கிடைத்தது. ப்ரம்மன் என்ன கூறி விட்டுச் சென்றாரோ; அதை ஸந்தோஷமாகச் சிரமேற்கொண்டு செய்யத் தயாராகி விட்டனர். இதில் நேரம் கடத்தவில்லை. (அதாவது வானர அவதாரம் எடுக்கும்படி ப்ரம்மன் கூறியதை ஆமோதித்தார்கள்.)

பனசர் தேஹ் தரீ சிதி மாஹீம் ।
அதுலித் பல் ப்ரதாப் தின்ஹ பாஹீம் ॥ 1862
கிரி தரு நக் ஆயுத ஸப் பீரா ।
ஹரி மார்க் சிதவ்ஹிம் மதிதீரா ॥ 1863

பூமியில் அவர்கள் வானரர்களாகப் பிறந்தார்கள். அவர்களிடம் அபாரமான சக்தியும், பலமும் இருந்தன. எல்லோருமே சூர வீரர்களாக, பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். மலைகளும், மரங்களும், நகங்களுமே அவர்களுடைய ஆயுதங்களாக இருந்தன. துணிவான புத்தியுள்ள அந்த வானரர்கள் பகவான் அவதாரம் செய்யும் தினத்தை எதிர்நோக்கி முன்பே காத்திருந்தார்கள்.

கிரி கானன் ஜஹம் தஹம் பரி பூரீ ।
ரஹே நிஜ நிஜ அனீக் குசிஸூரீ ॥ 1864
யஹ் ஸப் ருசிர் சரித் மைம் பாஷா ।
அப் ஸோ ஸுநஹு ஜோ பீச்ஹிம் ராகா ॥ 1865

அந்த வானரர்கள் மலைகளிலும், காடுகளிலும் அங்கங்கே தங்களது இருப்பிடத்தை ஸ்தாபித்துக் கொண்டு நிரம்பி விட்டார்கள். இந்தக் கதைகள் மிக வும் அழகானது. ஆனால், இப்பொழுது நான் பாதி யில் விட்ட கதையைக் கேள்.

அவத்புரீம் ரகுகுலமனி ராஜூ ।
பேத பிதித் தேஹி தஸரத் நாஜூ ॥ 1866
தர்ம துரந்தர் குணநிதி க்யானீ ।
ஹ்ருதயம் பக்தி மதி காரங்கபாணீ ॥ 1867

அயோத்யாவில் ரகுகுல சிரோமணியான தசரதர் என்னும் ராஜா இருந்தார். அவர் பெயர் வேதங்களால்

ப்ரபலமாக்கப்பட்டது. அவர் தர்ம நிஷ்ட்டையில் சிறந்தவர்; குணத்தின் பொக்கிஷம்; மஹாஜ்ஞானியாக இருந்தார். அவர் ஹிருதயத்தில் எந்நேரமும் சாரங்க பாணியான பகவானின் பக்தியும் நினைவுமே இருந்தது. அவரது சொந்த அறிவுகூட ஸ்ரீ பகவான் மீதே இருந்தது.

கௌஸல்யாதி நாரி ப்ரிய
ஸப் ஆசரன் புனீத் |
பதி அனுகூல் ப்ரேம் த்ருட
ஹரி பத் கமல் பினீத் || 1868

அவருக்குக் கௌஸல்யா போன்ற ப்ரிய ராணிகளும் இருந்தார்கள். எல்லாரும் மஹா பதிவ்ரதைகள்; தூய நடத்தை உடையவர்கள்; அடக்கமானவர்கள் பதியினுடைய மனம் கோணாமல் நடப்பவர்கள். பின்னும் அவர்களுக்கு ஹரியின் சரணார விந்தங்களில் அபாரப் ப்ரேமை இருந்தது.

ஏக் பார் பூபதி மன் மாஹீம் |
பை க்லானி மோரேம் ஸுத நாஹீம் || 1869
குர் க்ருஹ கயவு துரத் மஹிபாலா |
சரன் லாகி கரி பினய பிஸாலா || 1870

ஒருமுறை ராஜா தசரதர் யோசித்தார்; தமக்குப் புத்ரப் பேறே இல்லை என்று வருந்தினார். உடனே தமது குருவிடம் சென்று மன வருத்தத்தைக் கூறினார். குருவின் கால்களில் வீழ்ந்து வணங்கிப் பலவிதமாக வேண்டினார்.

நிஜ துக் ஸுக ஸப் குர்ஹி ஸுநாயவு |
கஹி பஸிஷ்ட பஹுபிதி ஸமுஜாயவு || 1871
தர்ஹு தீர் ஹோயிஹஹிம் ஸுத சாரீ |
த்ரிபுவன் பிதித் பக்த பய ஹாரீ || 1872

ராஜா தன்னுடைய ஸகல துக்கங்களையும் குரு விடம் கூறினார். குரு வஸிஷ்டர் அவரைத் தேற்றிப் பலவிதமாக ஸமாதானம் செய்தார். மன்னனே! தைர்யத்தைக் கை விடாதே. உனக்கு நான்கு புத்ரர்கள் உண்டாவார்கள். அவர்கள் மூன்று உலகங்களிலும்

ப்ரஸித்தமானவர்களாகவும், பக்தர்களின் துயரத்தை யும், பயத்தையும் தீர்ப்பவர்களாகவும் இருப்பார்கள்.

ஸ்ருங்கீ ரிஷிஹி பஸிஷ்ட போலாவா |
புத்ரகாம் ஸுப ஜக்ய கராவா || 1873
பக்தி ஸஹித் முனி ஆஹுதி தீன்ஹேம் |
ப்ரகடே அகினி சரு கர் லீன்ஹேம் || 1874

வஸிஷ்டர்; ரிஷ்ய ச்ருங்கி ரிஷியைக் அழைத்தார். அவர் மூலம் சுபமான புத்ர காமேஷ்டி யாகம் செய்ய வைத்தார். முனிவரின் பக்தி ச்ரத்தையான ஆஹுதிச் சேர்க்கையில் அக்னி தேவன் நேராகத் தோன்றிக் கையில் ஹவிஸ் பாத்ரமேந்தி வந்தான். (அதாவது, பாயஸம் நிறைந்த பாத்ரத்தை ஏந்தி வந்தான்)

ஜோ பஸிஷ்ட கசு ஹ்ருதயம் பிசாரா |
ஸகல காஜு பா ஸித்த தும்ஹாரா || 1875
யஹ் ஹபி பாண்டி தேஹு ந்ருப ஜாயீ |
ஜதா ஜோக் ஜேஹி பாக் பநாயீ || 1876

பின்பு தசரதரை நோக்கி ஹவிஸ் பாத்ரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஹே ராஜனே! வஸிஷ் டருடைய மனத்தில் எந்த எண்ணம், கவலை உம்மால் தெரிவிக்கப்பட்டதோ; அந்த உம்முடைய எல்லாக் கார் யமும் ஸித்தியடையும்; கவலைப்படாதீர். நீர் போய் இந்தப் பாயஸத்தை உம் இஷ்டப்படி உம் ராணி களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கவும் என்றார்.

தப் அத்ருஸ்ய பயே பாவக்
ஸகல ஸப்ஹி ஸமுஜாயி |
பரமானந்த மக்ன ந்ருப
ஹர்ஷ ந ஹ்ருதயம் ஸமாயி || 1877

அதன் பிறகு அக்னிதேவன் எல்லோர் எதிரிலும் ஸபையில் இம்மாதிரிக் கூறிவிட்டு மறைந்தான். அப் பொழுது ராஜா தசரதர் பரமானந்தமடைந்தார். அவ ருடைய ஹிருதயத்தின் ஆனந்தம் சொல்லில் அடங் காதது.

தப் ஹிம் ராயம் ப்ரிய நாரி போலாயீம் |
கௌஸல்யாதி தஹாம் சலி ஆயீம் || 1878

அர்த பாக் கௌஸல்யஹி தீன்ஹா |
உபய பாக் ஆதே கர் கீன்ஹா || 1879

மேலும், அதே தருணம் ராஜா தனது ப்ரிய பத்னி களை அழைத்தார். கௌஸல்யை முதலிய ராணிகளும் அங்கு வந்தார்கள். ராஜா பாயஸத்தில் அரைப்பாகம் கௌஸல்யாவிற்குக் கொடுத்தார். மற்ற அரைப் பாகத்தை இரண்டாகச் செய்தார்.

கைகேயீ கஹம் ந்ருப ஸோ தயவூ |
ரஹ்யோ ஸோ உபய பாக் புனி பயவூ || 1880
கௌஸல்யா கைகேயீ ஹாத் தரி |
தீன்ஹ ஸுமித்ரஹி மன் ப்ரஸன்ன கரி ||1881

அவைகளில் ஒரு பாகத்தை ராஜா கைகேயிக்குக் கொடுத்தார். மிகுதியைப் பின்னும் இரண்டு பாகம் செய்து அதைக் கைகேயி, கௌஸல்யாவிடம் கொடுத்து, (அதாவது; அவர்களது அனுமதியுடன்) மன ஸந் தோஷத்துடன் மிகுதியை ஸுமித்ராவிடம் கொடுத்தார்.

ஏஹி பிதி கர்பஸஹித் ஸப் நாரீ |
பயீம் ஹ்ருதயம் ஹர்ஷித் ஸுக பாரீ || 1882
ஜா தின் தேம் ஹரி கர்பஹிம் ஆயே |
ஸகல லோக் ஸுக ஸம்பதி சாயே || 1883

இவ்விதம் எல்லா ஸ்த்ரீகளும் கர்ப்பவதியானார் கள். அவர்கள் தங்களுக்குள், ஆனந்தமும், நிம்மதியும், நிறைவும் பெற்றார்கள். எந்தத் தினம் ஸ்ரீ ஹரியானவர் (அவதாரமாக) கர்ப்பவாஸத்தில் புகுந்தாரோ; அன்று முதல் உலகெங்கும் இன்பமும் ஸுகமும், ஸம்பத்துக் களும் நிறைந்தன.

மந்திர் மஹம் ஸப் ராஜஹிம் ரானீம் |
ஸோபா ஸீல் தேஜ் கீ கானீம் || 1884
ஸுக ஜூத் கசுக் கால் சலி கயவூ |
ஜேஹிம் ப்ரபு ப்ரகட் ஸோ அவஸர் பயவூ ||1885

சோபை, சீலம், ப்ரகாசம், நிறைந்த பொக்கிஷம் போன்ற ராணிகள் ராஜமஹாலில் ஸோபையைக் கொடுத்து வந்தார்கள். இம்மாதிரி ஸுகமாகச் சில காலம் சென்றது. ஸ்ரீ ஹரி உலகில் தோன்றும் தினமும் மெல்ல மெல்ல வந்தது.

ஜோக் லகன் க்ரஹ பார் திதி
ஸகல பயே அனுகூல் |
சர் அரு அசர் ஹர்ஷஜுத்
ராம் ஜன்ம ஸுகமூல் || 1886

யோகம், லக்னம், க்ரஹம், வாரம், திதியும் சேர்த்து அனுகூலமான நேரம் வந்து விட்டது. உயிருள்ளவை, உயிரற்றவை எல்லாமே மெய்ம்மறந்து ஆனந்தத்தில் மூழ்கின. ஏனெனில்; ப்ரபு ஸ்ரீ ராமனின் ஜன்மத் தினால் எல்லாவிதமான ஸுகங்களும் கிடைக்கப் போகின்றன.

நௌமீ திதி மது மாஸ புனீதா |
ஸுக்ல பச்ச அபிஜித் ஹரிப்ரீதா || 1887
மத்ய திவஸ் அதி ஸீத ந காமா |
பாவன் கால லோக பிச்ராமா || 1888

பவித்ரமான சித்ரை மாஸம், நவமி திதி, ஸுக்ல பக்ஷம், பகவானுக்குப் ப்ரியமான அபிஜித் முஹூர்த்த நேரம், நடுப்பகலில் குளிருமில்லை, வெயிலுமில்லை; எல்லோருக்கும் நிம்மதியைக் கொடுக்கும் நேரம் அது. இம்மாதிரி நிம்மதியான நேரத்தில்;

ஸீதல் மந்த ஸுரபி பஹ் பாவூ |
ஹர்ஷித் ஸுர ஸந்தன் மன் சாவூ || 1889
பன குஸுமித் கிரிகன் மனிஆரா |
ஸ்ரவஹிம் ஸகல் ஸரிதா அம்ருததாரா || 1890

எங்கும் மந்தமான குளிர்ந்த, மணமுள்ள காற்று வீசிக் கொண்டிருந்தது. தேவதைகள் ஸந்தோஷ மடைந்து, புளகாங்கிதமடைந்தார்கள். ஸாது முனிவர் களின் மனத்தில் பெரும் ஆவல், நம்பிக்கை நிரம் பியது. வனங்கள் புஷ்பித்துக் குலுங்கின. பர்வதங் களின் சிகரக் கூட்டங்கள் மணிகளால் ஒளி பெற்று ப்ரகாசித்தன. எல்லா நதிகளிலும் அம்ருத தாரை போல் நீர் பெருகியது. (இவையெல்லாம் ஸ்ரீராம ஜனனத்தினால் ஏற்பட்டவை)

ஸோ அவஸர் பிரஞ்சி ஜப் ஜானா |
சலே ஸகல் ஸுர ஸாஜி பிமானா || 1891

ககன் பிமல் ஸங்குல ஸுர ஜூதா |
காவ்ஹிம் குன கந்தர்ப பரூதா || *1892*

ப்ரம்மா; பகவான் அவதரிக்கும் நேரத்தை அறிந்து கொண்டு ஸகல தேவதைகளுக்கும் கூறினதும், அவர்கள் விமானத்தை அலங்கரித்துக் கொண்டு கிளம்பினார்கள். நிர்மலமான ஆகாயம் தேவதைகளின் கூட்டத்தினால் நிரம்பியது. கந்தர்வர்கள் பகவானின் குணங்களைப் பற்றி இசை பாடினார்கள்.

பர்ஷஹிம் ஸுமன் ஸுஅஞ்ஜுலி ஸாஜீ |
கஹ்கஹி ககன துந்துபீ பாஜீ || *1893*
அஸ்துதி கர்ஹிம் நாக முனி தேவா |
பஹுபிதி லாவ்ஹிம் நிஜ நிஜ ஸேவா || *1894*

மேலும், அவர்கள் தங்களது ஸுந்தர அஞ்சலிகளில் புஷ்பங்களை எடுத்து வந்து மழைபோல் பொழிய வைத்தார்கள். ஆகாயத்தில் பெரும் சப்தத்துடன் பேரி கைகள் முழங்கின. நாகர்கள், முனிவர்கள், தேவதைகள் யாவரும் ஸ்துதி பாடினார்கள். தங்கள் தங்கள் விருப்பப்படிப் பலவிதமான வெகுமானங்களை எடுத்து வந்தார்கள்.

ஸுர ஸமூஹ் பின்தீ கரி
பஹுஞ்சே நிஜ நிஜ தாம் |
ஜக்நிவாஸ் ப்ரபு ப்ரகடே
அகில லோக பிச்ராம் || *1895*

தேவதைகளின் கூட்டங்கள் வந்தனம் செய்து தங்கள் தங்கள் உலகம் சென்று விட்டார்கள். எல்லா உலகங்களிலும் எல்லோரும் சாந்தியுடன் சென்றபின்; அமைதியான நேரத்தில் உலகிற்கு ஸுகம் கொடுக்கும் ப்ரபு உலகத்திற்கு ஆதாரமாகக் கர்ப்பவாஸத்திலிருந்து வெளிப்பட்டார்.

பயே ப்ரகட் க்ருபாலா தீனதயாலா
கௌஸல்யா ஹிதகாரீ |
ஹர்ஷித் மஹ்தாரீ முனி மன் ஹாரீ
அத்புத் ரூப் பிசாரீ || *1896*
லோசன் அபிராமா தனு கனஸ்யாமா

நிஜ ஆயுத புஜ சாரீ |
பூஷன் பனமாலா நயன் பிஸாலா
ஸோபாஸிந்து கராரீ || 1897

எளியவரும் தயை செய்பவரும், கௌஸல்யாவின் நன்மைக்குக் காரணமானவரும் ஆன அருளாள ப்ரபு பூமியில் அவதரித்தார். முனிவர்களின் மனத்தையும் மோஹிக்கச் செய்யும் அவரது அற்புதமான ரூபத்தைக் கண்ட தாயார் ஸந்தோஷத்தினால் பூரித்துப்போனாள். ப்ரபு கண்களுக்கு ஆனந்தமளிப்பவராக இருந்தார். மேகத்தைப் போல் கறுப்பாக இருந்தது அவரது திவ்ய சரீரம். அவர் நான்கு புஜங்களிலும் தனது முக்கியமான ஆயுதங்களைத் தாங்கி இருந்தார். திவ்யமான ஆபரணங்களோடு வனமாலையையும் அணிந்திருந்தார். பெரிய விசாலமான கண்கள். இவ்விதம் அழகின் பொக்கிஷமான, சோபையின் ஸமுத்ரமான, ராட்சதர்களை அழிப்பவருமான பகவான் ஸ்ரீராமன் அவதரித்தார்.

கஹ் துயி கர் ஜோரீ அஸ்துதி தோரீ
கேஹி பிதி கரௌம் அனந்தா |
மாயா குன் க்யானாதீத் அமானா
பேத புரான பனந்தா || 1898
கருணா ஸுக் ஸாகர் ஸப் குன் ஆகர்
ஜேஹி காவ்ஹிம் ச்ருதி ஸந்தா |
ஸோ மம ஹித் லாகீ ஜன அனுராகீ
பயவு ப்ரகட் ஸ்ரீகந்தா || 1899

இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு தாயான கௌஸல்யா; ஹே அனந்தனே! நான் எவ்விதம் உன்னைத் துதி செய்வேன்? வேதங்களும், புராணங்களும் உன்னை மாயா ரூபன் என்றும், குணங்கள், ஜ்ஞானத்திற்கும் அப்பாற்பட்டவன் என்றும், அளவு இல்லாதவன் என்றும் கூறுகின்றன. ச்ருதிகளும், ஸாதுக்களும் உன்னை ஸுகத்தின் ஸாகரமென்றும், குணங்களின் இல்லம் என்றும் கானம் செய்கிறார்கள். அதே பக்த ரட்சகனான, லக்ஷ்மீபதியான நீ பகவான் ரூபத்தில் இருக்கிறாய். என் மங்களத்திற்காக நீ ஜன்மம் எடுத்திருக்கிறாய். ஆகவே, நான் வணங்குகிறேன்.

ப்ரம்மாண்ட நிகாயா நிர்மித் மாயா
ரோம் ரோம் ப்ரதி பேத் கஹை |
மம உர் ஸோ பாஸீ யஹ் உபஹாஸீ
ஸுனத் தீர் மதிதிர் ந ரஹை || 1900
உபஜா ஜப் க்யானா ப்ரபு முஸுகானா
சரித் பஹுத் பிதி கீன்ஹ சஹை |
கஹி கதா ஸுஹாயீ மாது புஜாயீ
ஜேஹி ப்ரகார் ஸுத ப்ரேம் லஹை || 1901

உம்முடைய ஒவ்வொரு ரோமத்திலும் அனேக ப்ரம் மாண்டங்கள் உண்டாகி இருக்கின்றன என்று வேதம் கூறும். நீயோ என் கர்ப்பத்தில் இருந்தாய். இம்மாதிரி ஸம்பவத்தைக் கூறினால் வெளியே எல்லோரும் சிரிப் பார்கள். இந்த ஸம்பவத்தைப் புத்திமான்களும், ஜ்ஞானிகளும் கேட்டால் ஆச்சர்யப்படுவார்கள். அவர் களது புத்தியும் பேதலித்துவிடும். (அதாவது; ஒரு ஸாதாரண ஸ்த்ரீயின் கர்ப்பத்தில்பகவான் பிறந்தாரா? என்பது ஆச்சர்யப்படும் விஷயம்) ஆகவே; கௌஸல்யா மனம் கலங்கிப் பின்னும் ப்ரபுவிடம் கூறுகிறாள்.

இச்சமயம் பகவான் அவள் கவலையைப் போக்கி அவளுக்குப் பக்தி ஜ்ஞனத்தை உண்டாக்குகிறார். பின்பு சிரித்துக் கொண்டே; அவளுக்கு அழகான பூர்வஜன்மத்திய அழகிய கதைகளைக் கூறுகிறார். இந்தக் கதையினால் கௌஸல்யாவிற்குப் புத்ரபாசம் உண்டாயிற்று. புத்ர வாத்ஸல்யத்துடன் பகவானை நோக்கினாள்.

மாதா புனி போலீ ஸோ மதி டோலீ
தஜஹு தாத் யஹ் ரூபா |
கீஜை ஸிஸுலீலா அதிப்ரியஸீலா
யஹ் ஸுக் பரம அனூபா || 1902
ஸுனி பசன் ஸுஜானா ரோதன் டானா
ஹோயி பாலக் ஸுரபூபா |
யஹ் சரித் ஜே காவ்ஹிம் ஹரிபத்
பாவ்ஹிம் தே ந பர்ஹிம் பவகூபா || 1903

தாயினுடைய பேதலித்த புத்தி மீண்டும் சுய உணர்வு பெற்றது. ''ஹே குழந்தாய்! பரமனே! இந்த உன் ரூபத்தை விட்டு விட்டு அழகான, ப்ரியமான பால

ரூபம் கொண்டு லீலைகள் செய்திடப்பா எனக்கு இதில் பரமஸுகமும், உபமானமில்லாத இன்பமும் கிடைக்கும் என்றாள். தாயாரின் இந்த வேண்டுகோளுக் கிணங்கித் தேவதைகளின் ஸ்வாமி, யாதுமறிந்த பகவான், பச்சைப் பாலகன் போல் ரூபம் கொண்டு அழ ஆரம்பித்தார். ஆகவே, இந்தச் சரித்ரத்தை யார் படித்துப் பாடுகிறார்களோ; அவர்கள் ஸ்ரீ ஹரியின் பாதம் அடைவார்கள். பின்பு ஸம்ஸாரம் என்னும் இந்தப் பாபக் கிணற்றில் விழ மாட்டார்கள் என்கிறார் துளஸீ தாஸர்.

பிப்ர தேனு ஸுர ஸந்த ஹித
லீன்ஹ மானுஜ் அவதார் |
நிஜ இச்சா நிர்மித தனு
மாயா குன் கோ பார் || **1904**

ப்ராம்மணன், பசு, தேவதைகள், ஸாதுக்கள் இவர்களுக்காக வேண்டிப் பகவான் மனுஷ்ய அவதாரம் எடுத்தார். அந்தப் பகவான் எப்படிப்பட்டவர் என்றால், அறியாமை, அழுக்கு, மாயை உள்ளவராகவும் ஸத்வம் ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் உள்ளவராகவும், இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டவராகவும், திவ்ய ரூபம் தன் விருப்பப்படிச் செய்து கொள்பவராகவும், ஒருவிதக் கர்ம பந்தமும் இல்லாதவராகவும், முக்குணத் தன்மையுள்ள பௌதிகப் பொருள்களுக்கு அப்பாற் பட்டவராகவும் அவர் இருந்தார்.

ஸுனி சிசு ருதன் பரம ப்ரிய பானீ |
ஸம்ப்ரம சலி ஆயீம் ஸப் ரானீ || **1905**
ஹர்ஷித் ஜஹம் தஹம் தாயீம் தாஸீ |
ஆனந்த மக்ன ஸகல் புர்பாஸீ || **1906**

குழந்தை அழுகிற இன்பமான நாதம் கேட்டு எல்லா ராணிகளும் ஆதுரத்துடனும், இச்சையுடனும் ஓடோடி வந்தார்கள். தாதிகள் ஸந்தோஷம் தாங்காமல் இங்கும்-அங்கும் ஓடினார்கள். ஊரிலுள்ள எல்லோரும் மிகவும் ஆனந்தப் பட்டார்கள்.

தஸரத் புத்ரஜன்ம ஸுனி கானா |
மானஹும் ப்ரஹ்மானந்த ஸமானா || **1907**

ப்ரம்மாண்ட நிகாயா நிர்மித் மாயா
ரோம் ரோம் ப்ரதி பேத் கஹை |
மம உர் ஸோ பாஸீ யஹ் உபஹாஸீ
ஸுனத் தீர் மதிதிர் ந ரஹை || 1900
உபஜா ஜப் க்யானா ப்ரபு முஸுகானா
சரித் பஹுத் பிதி கீன்ஹ சஹை |
கஹி கதா ஸுஹாயீ மாது புஜாயீ
ஜேஹி ப்ரகார் ஸுத ப்ரேம் லஹை || 1901

உம்முடைய ஒவ்வொரு ரோமத்திலும் அனேக ப்ரம் மாண்டங்கள் உண்டாகி இருக்கின்றன என்று வேதம் கூறும். நீயோ என் கர்ப்பத்தில் இருந்தாய். இம்மாதிரி ஸம்பவத்தைக் கூறினால் வெளியே எல்லோரும் சிரிப் பார்கள். இந்த ஸம்பவத்தைப் புத்திமான்களும், ஜ்ஞானிகளும் கேட்டால் ஆச்சர்யப்படுவார்கள். அவர் களது புத்தியும் பேதலித்துவிடும். (அதாவது; ஒரு ஸாதாரண ஸ்த்ரீயின் கர்ப்பத்தில்பகவான் பிறந்தாரா? என்பது ஆச்சர்யப்படும் விஷயம்) ஆகவே; கௌஸல்யா மனம் கலங்கிப் பின்னும் ப்ரபுவிடம் கூறுகிறாள்.

இச்சமயம் பகவான் அவள் கவலையைப் போக்கி அவளுக்குப் பக்தி ஜ்ஞனத்தை உண்டாக்குகிறார். பின்பு சிரித்துக் கொண்டே; அவளுக்கு அழகான பூர்வஜன்மத்திய அழகிய கதைகளைக் கூறுகிறார். இந்தக் கதையினால் கௌஸல்யாவிற்குப் புத்ரபாசம் உண்டாயிற்று. புத்ர வாத்ஸல்யத்துடன் பகவானை நோக்கினாள்.

மாதா புனி போலீ ஸோ மதி டோலீ
தஜஹு தாத் யஹ் ரூபா |
கீஜை ஸிஸுலீலா அதிப்ரியஸீலா
யஹ் ஸுக் பரம அனூபா || 1902
ஸுனி பசன் ஸுஜானா ரோதன் டானா
ஹோயி பாலக் ஸுரபூபா |
யஹ் சரித் ஜே காவ்ஹிம் ஹரிபத்
பாவ்ஹிம் தே ந பர்ஹிம் பவகூபா || 1903

தாயினுடைய பேதலித்த புத்தி மீண்டும் சுய உணர்வு பெற்றது. ''ஹே குழந்தாய்! பரமனே! இந்த உன் ரூபத்தை விட்டு விட்டு அழகான, ப்ரியமான பால

ரூபம் கொண்டு லீலைகள் செய்திடப்பா எனக்கு இதில் பரமஸுகமும், உபமானமில்லாத இன்பமும் கிடைக்கும் என்றாள். தாயாரின் இந்த வேண்டுகோளுக் கிணங்கித் தேவதைகளின் ஸ்வாமி, யாதுமறிந்த பகவான், பச்சைப் பாலகன் போல் ரூபம் கொண்டு அழ ஆரம்பித்தார். ஆகவே, இந்தச் சரித்ரத்தை யார் படித்துப் பாடுகிறார்களோ; அவர்கள் ஸ்ரீ ஹரியின் பாதம் அடைவார்கள். பின்பு ஸம்ஸாரம் என்னும் இந்தப் பாபக் கிணற்றில் விழ மாட்டார்கள் என்கிறார் துளஸீ தாஸர்.

பிப்ர தேனு ஸுர ஸந்த ஹித
லீன்ஹ மானுஜ் அவதார் |
நிஜ இச்சா நிர்மித தனு
மாயா குன் கோ பார் || 1904

ப்ராம்மணன், பசு, தேவதைகள், ஸாதுக்கள் இவர்களுக்காக வேண்டிப் பகவான் மனுஷ்ய அவதாரம் எடுத்தார். அந்தப் பகவான் எப்படிப்பட்டவர் என்றால், அறியாமை, அழுக்கு, மாயை உள்ளவராகவும் ஸத்வம் ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் உள்ளவராகவும், இந்த்ரியங்களுக்கு அப்பாற்பட்டவராகவும், திவ்ய ரூபம் தன் விருப்பப்படிச் செய்து கொள்பவராகவும், ஒருவிதக் கர்ம பந்தமும் இல்லாதவராகவும், முக்குணத் தன்மையுள்ள பௌதிகப் பொருள்களுக்கு அப்பாற் பட்டவராகவும் அவர் இருந்தார்.

ஸுனி சிசு ருதன் பரம ப்ரிய பானீ |
ஸம்ப்ரம சலி ஆயீம் ஸப் ரானீ || 1905
ஹர்ஷித் ஜஹம் தஹம் தாயீம் தாஸீ |
ஆனந்த மக்ன ஸகல் புர்பாஸீ || 1906

குழந்தை அழுகிற இன்பமான நாதம் கேட்டு எல்லா ராணிகளும் ஆதுரத்துடனும், இச்சையுடனும் ஓடோடி வந்தார்கள். தாதிகள் ஸந்தோஷம் தாங்காமல் இங்கும்-அங்கும் ஓடினார்கள். ஊரிலுள்ள எல்லோரும் மிகவும் ஆனந்தப் பட்டார்கள்.

தஸரத் புத்ரஜன்ம ஸுனி கானா |
மானஹும் ப்ரஹ்மானந்த ஸமானா || 1907

பரம ப்ரேம மன் புலக் ஸரீரா |
சாஹத் உடன் கர்த் மதி தீரா || 1908

தசரதர் புத்ரன் பிறந்ததைக் கேட்டதும் ப்ரம்மானந்தத்தில் மூழ்கினார். மனத்தில் அதிசயமான ப்ரேமை உண்டாயிற்று; சாரீரம் புளகாங்கிதம் அடைந்தது. ப்ரேமையும், ஆனந்தமும் ஒன்றுகூடியதும், பேச நா எழவில்லை. தனது சரீர நிலையைச் சமாளித்துக் கொண்டு எழுந்திருக்க விரும்பினார்.

ஜாகர் நாம் ஸுனத் ஸுப் ஹோயீ |
மோரேம் க்ருஹ ஆவா ப்ரபு ஸோயீ || 1909
பரமானந்த பூரி மன் ராஜா |
கஹா போலாயி பஜாவ்ஹு பாஜா || 1910

எவருடைய திரு நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் மங்களம் உண்டாகிறதோ; அதே ப்ரபுவானவர் நம் வீட்டிற்கு வந்திருக்கிறார் என்பதை எண்ணி ராஜா பரமானந்தமடைந்தார். அவர் வாத்யக்காரர்களை அழைத்துவரச் செய்து மேளதாள வாத்யம் முழங்கும் படி உத்தரவிட்டார்.

குர் பஸிஷ்ட கஹம் கயவு ஹங்காரா |
ஆயே த்விஜன் ஸஹித் ந்ருபத்வாரா || 1911
அனுபம பாலக் தேகேன்ஹி ஜாயீ |
ரூப ராஸி குன் கஹி ந ஸிராயீ || 1912

குருவான வஸிஷ்டருக்குச் சொல்லி அனுப்பிய வுடன்; அவர் ப்ராம்மணர்களுடன் கூட அரண் மனைக்கு வந்தார். அங்குப்போய் அற்புதமானவரும் இணையற்றவரும் அழகின் பொக்கிஷமானவரும், சொல்லி முடியாத குணங்களைக் கொண்டவருமான பாலகனைப் பார்த்தார்.

நந்தீமுக் ஸராத் கரி
ஜாதகர்ம ஸப் கீன்ஹ |
ஹாடக் தேனு பஸன் மனி ந்ருப
பிப்ரன்ஹ கஹம் தீன்ஹ || 1913

மேலும், ராஜா தசரதர், நாந்தீ முக ச்ராத்தம் செய்தபின்பு ஜாதகர்ம ஸம்ஸ்காரம் முதலியவை செய்து, ப்ராம்மணர்களுக்குத் தங்கம், வஸ்த்ரம், பசுக்கள், மணிகள் முதலியவைகளை வெகுமானமாகக் கொடுத்தார்.

த்வஜ பதாக் தோரன் புர் சாவா |
கஹி ந ஜாயி ஜேஹி பாந்தி பநாவா || 1914
ஸுமன் ப்ருஷ்டி அகாஸ் தேம் ஹோயீ |
ப்ரஹ்மானந்த மக்ன ஸப் லோயீ || 1915

கொடிகள், தோரணங்களினால் நகரங்கள் அலங்கரிக்கப்பட்டு விளங்கின. அந்த அலங்காரங்களை வர்ணிக்க இயலாது. ஆகாயத்திலிருந்து புஷ்ப மாரி பொழிந்தது. யாவரும் ப்ரம்மானந்தத்தில் திளைத்திருந்தார்கள்.

ப்ருந்த ப்ருந்த மிலி சலீம் லோகாயீம் |
ஸஹஜ் ஸிங்கார் கிஏம் உடி தாயீம் || 1916
கனக் கலஸ் மங்கல் பரி தாரா |
காவத் பைட்ஹிம் பூப் துஆரா || 1917

ஸ்த்ரீகள் கூட்டம் கூட்டமாகப் சேர்ந்து பார்க்க ஓடோடியும் வந்தார்கள். இயல்பான ச்ருங்காரத்துடன் எழுந்து ஓடி வந்தார்கள். தங்கக் கலசம் ஏந்தித் தட்டுகளில் மங்கள த்ரவ்யங்களை நிரப்பிக் கொண்டு, பாடியவண்ணம், அரண்மனை வாயிலுள் நுழைந்தார்கள்.

கரி ஆரதி நேவ்சாவரி கர்ஹீம் |
பார் பார் லிஸு சர்னன்ஹி பர்ஹீம் || 1918
மாகத் ஸூத பந்திகன் காயக் |
பாவன குன காவ்ஹிம் ரகுநாயக் || 1919

அவர்கள் குழந்தைக்கு ஆரத்தி எடுத்துத் திரும்பத் திரும்பத் த்ருஷ்டி கழிக்கிறார்கள். திரும்பத் திரும்பக் குழந்தைகளின் கால்களில் வீழ்ந்து வணங்குகிறார்கள். மாகதர்கள், ஸூதர்கள், பந்தீஜனங்கள், ஸங்கீதக்காரர்கள் யாவரும் ரகுகுலத்து ஸ்வாமியின் பவித்ர குணங்களை வர்ணனை செய்து பாடுகிறார்கள்.

ஸர்பஸ் தான் தீன்ஹ ஸப் காஹூ |
ஜேஹிம் பாவா ராகா நஹிம் தாஹூ || 1920
ம்ருகமத் சந்தன் குங்கும கீசா |
மசீ ஸகல பீதின்ஹ பிச் பீசா || 1921

ராஜா யாவருக்கும் தன்னால் இயன்ற அளவு தானம் கொடுத்தார். யார் யார் ஸன்மானம் பெற்றார் களோ; அவர்கள் மீண்டும் மீண்டும் வந்து பெற்றுக் கொண்டார்கள்.

ஒவ்வொரு நகரத்தின் தெருக்களிலும், சந்துகளி லும், சந்தனமும், கஸ்தூரியும் குங்குமப் பூவும் மணத்தை நிரப்பிக் கொண்டு சேறு போல் காட்சியளித்தது. (அதாவது; பெருகி வழிந்தது)

க்ருஹ க்ருஹ பாஜ் பதாவ்
ஸுப ப்ரகடே ஸுஷ்மா கந்த |
ஹர்ஷவந்த் ஸப் ஜஹம் தஹம்
நகர் நாரி நர் ப்ருந்த || 1922

ப்ரகாசத்தின் வடிவான பகவான் சுபதினத்தில் ஜன்மம் எடுத்திருக்கிறார் என்பதால் வீடுதோறும் மங்கள வாத்யங்கள் முழங்கத் தொடங்கின. நகரத் தில் உள்ள ஸ்த்ரீகளும் - புருஷர்களும் ஆனந்தத்தில் திளைத்திருந்தார்கள்.

கைகய ஸுதா ஸுமித்ரா தோவூ |
ஸுந்தர ஸுத ஜன்மத் பைம் ஓவூ || 1923
வஹ் ஸுக ஸம்பதி ஸமய் ஸமாஜா |
கஹி ந ஸகயி ஸாரத் அஹிராஜா || 1924

கைகேயியும், ஸுமித்ராதேவியும் அழகிய புத்ரர் களைப் பெற்று எடுத்தார்கள். இந்த ஸுகமும், ஸௌக் யமும், ஐச்வரியமும், நேரமும், தேச நிலைமையும் பற்றிய வர்ணனையை அந்த வித்யா தேவியான ஸரஸ் வதியினாலும், ஸர்ப்ப அரசனான சேஷனாலும் கூட வர்ணிக்க முடியாமல் இருந்தது.

அவதபுரீ ஸோஹஇ ஏஹி பாந்தீ |
ப்ரபுஹி மிலன் ஆயீ ஜனு ராதீ || 1925

தேகி பானு ஜனு மன் ஸகுசானீ |
ததபி பனீ ஸந்த்யா அனுமானீ || 1926

அயோத்யை இத்தனை அழகுடன் விளங்கியது. ராத்ரியே ப்ரபுவை ஸந்திக்கப் பகலில் வந்து விட்டதோ; இந்த ஸூர்யனைக் கண்டதும் ராத்ரியே நாணமுற்றதோ என்னும்படி இருந்தது. மேலும், அதுவே மனத்தில் தீவிரமாக எண்ணி மாலைப்பொழுது போல் ஆகிவிட்டதோ. (அதாவது; ப்ரபுவின் எதிரில் இரவே ப்ரகாசமாகி விட்டது என்கிறார் துளஸீ)

அகர் தூப் பஹூ ஜனு அந்தியாரீ |
உட்யி அபீர் மன்ஹூம் அருநாரீ || 1927
மந்திர் மனி ஸமூஹ் ஜனு தாரா |
நிருப க்ருஹ கலஸ் ஸோ இந்து உதாரா || 1928

வாஸனை த்ரவ்யங்களால் செய்யப்பட்ட அகரு ஊதுவத்தி தூபங்களின் புகை எங்கும் மண்டிக் கிடக் கிறது. அது; மாலை நேரத்தின் மங்கிய இருட்டைப் போலத் தோன்றியது. அபிரகத் தூளின் புகை, மங்கிய மாலையின் சிவப்பு நிறம் போலவும் தோன்றியது. (ஸூர்யன் மறையும் தருவாயில் ஆகாயத்தில் தோன் றும் நிறம்போல் தோன்றியது எங்கும்)

மேலும், ராஜ மாளிகையில் சிங்காரிக்கப்பட்ட உயர்ந்த மணிகள்; இரவில் பளபளக்கத் தோன்றும் தாரகைகள் போல் மின்னின. அரண்மனையின் மேலுள்ள கலசம் சிறந்த சந்த்ரனைப்போல் விளங்கியது.

பவன் பேத துனி அதி ம்ருது பானீ |
ஜனு கக முகர் ஸமயம் ஜனு ஸானீ || 1929
கௌதுக் தேகி பதங்க புலானா |
ஏக் மாஸ் தேயிம் ஜாத் ந ஜானா || 1930

ராஜாவின் அரண்மனையில் அழகான குரலில் வேதங்கள் ஓதப்பட்டன. அவை ஒரே ஸமயத்தில் ஒன்று சேர்ந்து கூக்குரலிடும் பட்சி இனங்களின் ஒலி களைப்போல் இருந்தன. இந்தக் குதூஹலமான காட்சி யைக் கண்ட ஸூர்யனும் தனது நடையை மறந்து விட் டான். (அதாவது; மெதுவாக ப்ரகாசம் கொடுத்தான்) இவ்விதமே ஒருமாத காலமும் ஓடிவிட்டது.

மாஸ் திவஸ் கர் திவஸ் பா
மர்ம ந ஜானயி கோயி |
ரத் ஸமேத் ரபி தாகேவு
நிஸா கவன் பிதி ஹோயி || 1931

அதாவது; ஒரு மாதம் ஆனது தெரியாமல் ஒரு நாள் போல் தோன்றியது. ஏனெனில், ஸூர்யன் தனது ரத ஸமேதனாக அங்கேயேதான் நின்றுவிட்டான்! அப்போது இரவு-பகல்-தினம் எப்படி உண்டாகும்? (அதாவது; ஸூர்ய பகவான் ராமனைக் கண்டதும் தன்னை மறந்து விட்டான் என்பது அர்த்தம்)

யஹ் ரஹஸ்ய காஹூம் நஹிம் ஜானா |
தினமணி சலே கர்த குன்கானா || 1932
தேகி மஹோத்ஸவ் ஸூர முனி நாகா |
சலே பவன் பர்நத் நிஜ பாகா || 1933

தினமணியான ஸூர்யன் அப்படியே நின்று விட்டான், என்ற ரஹஸ்யம் யாருக்கும் தெரியாது. தெளிவடைந்த ஸூர்யன் பிறகு பகவானைப்பற்றிப் பாடி ப்ரார்த்தனை செய்து கொண்டே அங்கிருந்து சென்றான். அயோத்யையின் இந்தக் கோலாஹல வைபவத்தைக் கண்ட தேவர்களும், முனிவர்களும், நாகர்களும் தங்களுடைய ஸௌபாக்யத்தை எண்ணிப் புகழ்ந்த வாறே தங்கள் தங்கள் இல்லம் சென்றனர்.

ஔர்வு ஏக் கஹவும் நிஜ சோரீ |
ஸுனு கிரிஜா அதி த்ருட் மதி தோரீ || 1934
காகபுசுண்டி ஸங்க ஹம் தோவு |
மனுஜரூப் ஜானயி நஹிம் கோவு || 1935

ஹே பார்வதி! உனக்கு எப்பொழுதுமே ஸ்ரீராமனின் பாதங்களில் அபாரப்ரேமை, நம்பிக்கை உண்டு. ஆகவே, நானும் ஒரு ரஹஸ்யமான விஷயத்தைக் கூறுகிறேன் கேள். காகபுசுண்டியும், நானும் அங்கு அயோத்யாவில் மானிட ரூபத்தில் இங்கும் அங்கும் அலைந்து கொண்டு இருந்தோம். எங்களை அங்கு யாருமே கண்டு கொள்ள முடியவில்லை.

பரமானந்த ப்ரேம் ஸுக் பூலே |
பீதின்ஹ பிரஹிம் மக்ன மன் பூலே || 1936

யஹ் சுப சரித் ஜான் பை ஸோயீ |
க்ருபா ராம் கை ஜாபர் ஹோயீ || 1937

பரமானந்தம், ப்ரேமை, ஸுகம் எல்லாம் ஒன்று சேரவே மெய்ம்மறந்த நாங்கள் ஒவ்வொரு ஸந்துகளிலும் சுற்றி வந்து கொண்டிருந்தோம். இந்தச் சுபமான கதையை யார் அறிய முடியும்? என்றால்; எவருக்கு ஸ்ரீராமன் மீது பக்தி இருக்கிறதோ; எவருக்கு ஸ்ரீராமனின் க்ருபை இருக்கிறதோ; அவரால்தான் முடியும்.

தேஹி அவஸர் ஜோ ஜேஹி பிதி ஆவா |
தீன்ஹ பூப் ஜோ ஜேஹி மன் பாவா || 1938
கஜ் ரத் துரக ஹேம கோ ஹீரா |
தீன்ஹே ந்ருப நாநாபிதி சீரா || 1939

இம்மாதிரியான ஸந்தோஷ ஸமயத்தில் ராஜா தசரதன் தக்காருக்குத் தக்கபடி வெகுமதிகள் வழங்கியபடி இருந்தார். யாருக்கு எது எது பிடித்ததோ; அம்மாதிரி கொடுத்தார். சிலருக்கு யானை, சிலருக்கு ரதங்கள், சிலருக்குக் குதிரைகள், சிலருக்குத் தங்கங்கள், சிலருக்குப் பசுக்கள், சிலருக்கு வைரங்கள், சிலருக்கு வகை வகையான ஆடை அணிகள் இவ்விதம் பலவிதமான பரிசுகளை அளித்தார்.

மன் ஸந்தோஷே ஸபன்ஹி கே
ஜஹம் தஹம் தேஹிம் அஸீஸ் |
ஸகல் தனய் சிர ஜீவஹுஂ
துளஸீதாஸ் கே ஈஸ் || 1940

ராஜா தசரதர் எல்லோர் மனத்தையும் மகிழச் செய்தார். ஆகவே, யாவரும் குழந்தைகளுக்கு ஆசீர்வாதம் அளித்துப் போனார்கள். துளஸீதாஸரின் ஸ்வாமியான நான்கு ராஜபுத்திரர்களும் சிரஞ் ஜீவியாக இருக்க வேண்டும்.

கசுக் திவஸ் பீதே ஏஹி பாந்தீ |
ஜாத் ந ஜானிஅ தின் அரு ராதீ || 1941
நாமகரன் கர் அவஸரு ஜானீ |
பூப் போலி படஏ முனி க்யானீ || 1942

சில காலம், சில தினங்கள் இப்படியே கழிந்தன. பகல் எது, இரவு எது என்றே தெரியாமல் மக்கள் மதிமயங்கி இருந்தார்கள். அச்சமயம் நாமகரணம் செய்ய நினைத்த ராஜா தசரதர் ஜ்ஞானியும், முனிவருமான வஸிஷ்டருக்குச் சொல்லியனுப்பினார்.

கரி பூஜா பூபதி அஸ பாஷா ।
தரிஅ நாம் ஜோ முனி குனி ராகா ॥ 1943
இன்ஹ கே நாம் அனேக் அனூபா ।
மைம் நிருப கஹப் ஸ்வமதி அனுரூபா ॥ 1944

முனிவரைப் பூஜை செய்தபின் தசரதர்; ஹே முனிவரே! தாங்கள் தங்கள் மனத்தில் என்ன என்ன பெயரை வைக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ; அதேபோல் வைத்திடுங்கள் என்றார். ஆனால், குரு வஸிஷ்டர்: ''ராஜன்! இவனுக்கு அனேகவிதமான இணையற்ற நாமங்கள் இருக்கின்றன. ஆயினும், நான் என் புத்திக்கு எட்டியபடி கூறுகிறேன், கேளும்'' என்றார்.

ஜோ ஆனந்த ஸிந்து ஸுக ராஸீ ।
ஸீகர் தேம் த்ரைலோக் ஸுபாஸீ ॥ 1945
ஸோ ஸுக்தாம் ராம் அஸ் நாமா ।
அகில லோக தாயக் பிச்ராமா ॥ 1946

இவன் ஆனந்த ஸமுத்ரம். ஸுகத்தின் ராசி. இவனுடைய ஒரு பார்வையில் மூன்று உலகங்களும் ஸுகமடைகின்றன. ஆகவே; தங்களுடைய மூத்த புத்ரனின் பெயர் ராமன்! அவன்தான் ஸுகத்தின் இருப்பிடம். எல்லா உலகிற்கும் அவனே சாந்தியைக் கொடுக்க வல்லவன்.

பிஸ்வ பரன் போஷன் கர் ஜோயீ ।
தாகர் நாம் பரத் அஸ் ஹோயீ ॥ 1947
ஜாகே ஸுமிரன் தேம் ரிபு நாஸா ।
நாம் சத்ருஹன் பேத் ப்ரகாஸா ॥ 1948

எவன் உலகத்தை ரட்சித்துக் காத்தருளும் நோக்கம் கொண்டவனோ; அப்படிப்பட்ட அவனே தங்களுடைய இரண்டாம் புதல்வன். பெயர் 'பரதன்' என்று கூறுவோம். எவன் பெயரை நினைத்த மாத்ரத்திலேயே

எதிரிகள் மரிப்பார்களோ; வேதங்களில் ப்ரஸித்தமான அப்படிப்பட்டவனின் பெயர் 'சத்ருக்னன்' எனலாம்.

லச்சன் தாம் ராம ப்ரிய
ஸகல் ஜகத் ஆதார் |
குரு பஸிஷ்ட தேஹி ராகா
லசிமன் நாம் உதார் || *1949*

சுப லக்ஷணங்கள் கூடியவனும், ஸ்ரீராமனுக்குப் ப்ரியமானவனும், உலகிற்கே ஆதாரம் போன்றவனு மான பிள்ளைக்கு குரு வஸிஷ்டர் 'லக்ஷ்மணன்' என்று சிறப்பாகப் பெயர் வைத்தார்.

தரே நாம் குர் ஹ்ருதயம் பிசாரீ |
பேத தத்வ நிருப தவ ஸுத சாரீ || *1950*
முனி தன் ஜன் ஸர்பஸ் சிவ ப்ரானா |
பால கேலி ரஸ் தேஹிம் ஸுக் மானா || *1951*

குருவான வஸிஷ்டர் மனத்தில் நன்கு ஆலோசனை செய்து நான்கு குழந்தைகளுக்கும் இவ்விதம் பெயர் சூட்டினார். பிறகு ராஜாவை நோக்கி, ஹே அரசே! உம்முடைய இந்த நான்கு புதல்வர்களும் வேதத்தின் தத்வார்த்தமான பகவானாவர். இவர்கள் முனிவர் களின் செல்வம், ஆவர்; பக்தர்களுக்கு ஸகலமும் ஆவர். சிவனாரின் உயிர்க்கு உயிரானவர்கள். ஆனால் இவர்கள் மானுடப் பிறவி எடுத்துக் குழந்தைகளாகி உங்கள் இல்லத்தில் பால லீலை செய்வார்கள் என்றார்.

பாரேஹி தே நிஜ ஹித பதி ஜானீ |
லசிமன் ராம் சரன் ரதி மானீ || *1952*
பரத சத்ருஹன் தூனவு பாயீ |
ப்ரபு ஸேவக் ஜஸி ப்ரீதி படாயீ || *1953*

குழந்தைப் பருவத்திலிருந்தே ஸ்ரீராமனைத் தன் னுடைய நலனை விரும்புபவன் என்று எண்ணி லக்ஷ் மணன் அவர் சரணங்களில் ப்ரீதி வைத்தான். பரதன், சத்ருக்னன் இருவரும் ஸ்ரீராமனிடம் ஸ்வாமி, ஸேவ கன் என்ற பாவத்துடன் ப்ரியம் வைத்தார்கள். (ஓர் ஆசார்யனிடம் கொள்ளும் பக்தி போல் சிறந்த பக்தி வைத்தார்கள்)

ஸ்யாம் கௌர் ஸுந்தர் தோவு ஜோரீ |
நிரக்ஹிம் சபி ஜனனீம் த்ருன தோரீ || 1954
சாரிஉ ஸீல் ரூப் குன தாமா |
ததபி அதிக் ஸுக்ஸாகர் ராமா || 1955

கரிய வர்ணமும், வெளுத்த நிறமும் உள்ள இரண்டு ஜோடிகளின் சோபையையும் கண்ட தாய்மார்கள் தர்ப்பையை ஒடித்துப் போட்டுத் திருஷ்டி கழித்தார் கள். இப்படியே இந்த நான்கு ஸஹோதரர்களும் சீலமும், ரூபமும், குணமும் உள்ளவர்கள். இவர்களில் மிகச் சிறந்தவனாக ஸுக ஸாகரமான ஸ்ரீராமன் விளங்கினான்.

ஹ்ருதயம் அனுக்ரஹ இந்து ப்ரகாஸா |
ஸுசத் கிரன் மனோஹர் ஹாஸா || 1956
கப்ஹும் உசங்க் கப்ஹும் பர் பல்னா |
மாது துலார்இ கஹி ப்ரிய லல்னா || 1957

அந்தக் குழந்தைகளின் ஹிருதயத்தில் க்ருபா ரூப மான சந்த்ரனின் ப்ரகாசம் நிறைந்திருக்கிறது. அவர் களின் மனத்தை மயக்கும் புன்னகை அந்தச் சந்த்ரனின் கிரணங்களைப் போல் ஒளி வீசுகிறது.

சில ஸமயம் இடுப்பில் வைத்துக் கொண்டும், சில ஸமயம் தொட்டிலில் இட்டும் தாயார்கள் (என் அரு மைக் குழந்தைகளா!) என்று சீராட்டித் தாலாட்டு கிறார்கள்.

ப்யாபக் ப்ரஹ்ம நிரஞ்ஜன்
நிர்குன பிகத் பிநோத் |
ஸோ அஜ ப்ரேம பக்தி பஸ்
கௌஸல்யா கேம் கோத் || 1958

ஸர்வ வ்யாபகமானவரும், மாயை அற்றவரும், நிர்குணமானவரும், விநோதமற்றவரும், பிறப்பற்ற வரும், ப்ரம்மமுமானவரே ப்ரேமையினாலும், பக்தி யினாலும் கட்டுண்டு தாயார் கௌஸல்யாவின் மடி யில் விளையாடிக் கொண்டிருக்கிறார்.

காம கோடி சபி ஸ்யாம ஸரீரா |
நீல கஞ்ஜ பாரித கம்பீரா || 1959
அருன சரன் பங்கஜ் நக ஜோதீ |
கமல தலன்ஹி பைடே ஜனு மோதீ || 1960

நீலக் கமலம் போன்ற நிறமுள்ளவரும், நீரினால் சூழப்பட்ட மேகத்தைப் போல் நிறமுள்ளவருமான ஸ்ரீ ராமன் கோடிக்கணக்கான மன்மதனின் ஸௌந்தர் யத்தைப் பெற்றிருந்தார்.

செக்கச் சிவந்த பாதங்களில் உள்ள வெண்மை யான ஜோதி தரும் நகங்கள் செங்கமலத்தின் மீது முத்துக்கள் பதித்தது போல் தோற்றமளித்தன.

ரேக குலிஸ் த்வஜ அங்குஸ் ஸோஹே
நூபுர் துனி ஸுனி முனி மன் மோஹே || 1961
கடி கின்கினீ உதர் த்ரய ரேகா |
நாபி கபீர் ஜான் ஜேஹிம் தேகா || 1962

பாதங்களின் அடியில் வஜ்ரம், கொடி மற்றும் அங்குசத்தின் சின்னங்கள் சோபையைக் கொடுக்கின் றன. கால்களின் சலங்கை ஒலி கேட்டதும், முனிவர் களது மனத்தையும் மோஹிக்க வைக்கிறது. இடுப்பில் அரைஞாண் கட்டியிருக்கிறது. வயிற்றில் மூன்று கோடு கள் இருக்கின்றன. தொப்புளின் ஆழத்தைப் பார்த் தவர்கள்தான் அறிய முடியும்.

புஜ பிஸால் பூஷன் ஜுத் பூரீ |
ஹியம் ஹரி நக் அதி ஸோபா ரூரீ || 1963
உர் மனிஹார் பதிக் கீ ஸோபா |
பிப்ர சரன் தேகத் மன் லோபா || 1964

பலவிதமான ஆபரணங்களைக் கொண்டு விளங் கும் புஜங்கள், அழகாகவும், விசாலமாகவும் இருக் கின்றன. மார்பில் புலி நகத்தினால் செய்யப்பட்ட ஆபரணங்களின் அழகே அழகு. இதுதவிர மார்பில் ரத்தினங்கள் இழைத்த முக்தா மணியினாலான மாலை கள் சோபையைக் கொடுக்கின்றன.

ப்ராம்மண ப்ருகுவின் காலின் சின்னம் நமது மனத்தை எப்படிக் கவருகிறதோ; அதேபோல் இருந்தது. இதுவே ஸ்ரீராம ஸௌந்தர்யம்.

கம்பு கண்ட அதி சிபுக் ஸுஹாயீ |
ஆனன் அமித மதன் சபி சாயீ || 1965
துயி துயி தலன் அதர் அருநாரே |
நாஸா திலக் கோ பர்னை பாரே || 1966

மேலும், சங்கைப் போன்ற அழகிய கழுத்தில் மேலும் கீழுமாக மூன்று கோடுகள் அழகைப் பன்மடங் காக்குகின்றன. முகவாயின் அழகோ என்னத்தைச் சொல்ல! எண்ணிலடங்காத காமதேவனின் அழகு முகத்தில் தென்படுகிறது. இரண்டு சின்னச் சின்ன பற்கள் தெரிகின்றன. சிவந்த சிறு உதடுகள். மூக்கும், நெற்றித் திலகமும் ஆஹா! யாரால் வர்ணிக்க முடியும்?

ஸுந்தர் ச்ரவண் ஸுசாரு கபோலா |
அதி ப்ரிய மதுர் தோதரே போலா || 1967
சிக்கன் கச் குஞ்சித கபுவாரே |
பஹு ப்ரகார் ரசி மாது லம்வாரே || 1968

மேலும், அழகிய காதுகள், மிக அழகிய கன்னங் கள், மதுரமான மழலைச் சொற்கள், மிகவும் இன்ப மாக இருக்கின்றன. பிறந்த பொழுதிலிருந்தே இருந்து வந்த வழு வழுப்பான கேசராசிகளும், சுருண்ட தலை மயிரும் காண்பதரிது. தாயார் குழந்தையின் தலை மயிரைப் பலவிதமாகச் சிங்காரித்தாள்.

பீத ஜகுலியா தனு பஹிராயீ |
ஜானு பானி பிசர்னி மோஹி பாயீ || 1969
ரூப ஸக்ஹி நஹிம் கஹி ச்ருதி ஸேஷா |
ஸோ ஜானயி ஸப்நேஹும் ஜேஹிம் தேகா || 1970

சரீரத்தில் மஞ்சள் நிற அங்கி அணிந்திருந்தார். அவர் முழங்காலிட்டுக் கைகளை ஊன்றித் தவழ்ந்து வரும் அழகை என்னென்று கூறுவது? அது ரொம்பவும் மனம் கவர்வதாக இருந்தது. அவருடைய ரூபத்தின் வர்ணனையை வேதங்களினாலும், ஆதிசேஷனாலும் கூடச் செய்ய முடியாது. எவரேனும் ஸ்வப்னத்தில் பார்த்திருந்தால் இந்த ரூபத்தை வர்ணிக்க முடியும். இல்லையேல் யாருக்கும் இந்த ரூபம் கிடைக்காது.

ஸுக ஸந்தோஹ் மோஹ்பர்
க்யான் கிரா கோதீத் |
தம்பதி பரம ப்ரேம் பஸ்
கர் ஸிஸுசரித் புனீத் || 1971

ஸுகத்தின் இருப்பிடம், மோஹத்திற்கும் அப்பாற் பட்ட அறிவு, வாக்கு போன்ற இந்த்ரியங்களையும் கடந்த பகவான் இங்கு தசரத-கௌஸல்யாவின் அத்யந்த ப்ரேமையின் வசமாகிப் பாலகனாக இருந்து தூய பால லீலைகளைச் செய்கிறார்!

ஏஹி பிதி ராம் ஜகத் பிது மாதா |
கோஸல்புர் பாஸின்ஹ ஸுகதாதா || 1972
ஜின்ஹ ரகுநாத் சரன் ரதி மானீ |
தின்ஹகீ யஹ் கதி ப்ரகட் பவானீ || 1973

இம்மாதிரி ஸம்பூர்ண ஜகத்திற்கும் மாதா-பிதா போன்ற பகவான் ஸ்ரீ ராமச்சந்த்ரன் அயோத்யாவில் உள்ள ஊர்வாஸிகளுக்கு ஸுகத்தைக் கொடுக்கிறார். ராமனிடம் சரணாகதி அடைந்தவர்களிடம் ப்ரியம் காட்டினார். ஹே பவானீ! பகவான் அவர்களுக்கு ஆனந்தம் கொடுக்க வேண்டிப் பால லீலைகளைச் செய்து காட்டுகிறார்.

ரகுபதி பிமுக் ஜதன் கர் கோரீ |
கவன் ஸகயி பவ பந்தன் சோரீ || 1974
ஜீவ் சராசர் பஸ் கை ராகே |
ஸோ மாயா ப்ரபு ஸோம் பய பாகே || 1975

ஸ்ரீ ரகுநாதனைப் பகைத்துக் கொண்ட எந்த மானி டனும் வாழ முடியாது. அவன் கோடி யத்தனம் செய் தாலும் அவனுடைய ஸம்ஸார பந்தங்கள் விடுபடாது. அந்தப் பகவான் ஸ்ரீ ராமன், சராசர ஜீவன்களைத் தன் வசமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மாயா சக்தி களுமே ப்ரபுவிடம் பயப்படுகின்றன எனலாம்.

ப்ருகுடி பிலாஸ் நசாவயி தாஹீ |
அஸ் ப்ரபு சாடி பஜிஅ கஹு காஹீ || 1976
மன் க்ரம பசன் சாடி சதுராயீ |
பஜத் க்ருபா கரிஹஹிம் ரகுராயீ || 1977

பகவான் மாயையைத் தன் புருவங்களின் குறிப்பு களால் ஆட்டி வைக்கிறார். சொல்லு! இத்தகைய ப்ரபுவைத் தவிர வேறு யாருக்கு நாம் பஜனையும், கீர்த்தனையும் செய்ய முடியும்? மனம், வாக்கு, செயல், இவைகளினால் நாம் கெட்டிக்காரன் என்பதை விட்டுப் பஜனை செய்தால், ஸ்ரீ ரகுநாதன் அவசியம் ரக்ஷணை செய்வான்.

ஏஹி பிதி ஸிஸு பிநோத் ப்ரபு கீன்ஹா |
ஸகல நகர பாஸின்ஹ ஸுக் தீன்ஹா || 1978
லை உசங்க் கப்ஹுங்க் ஹலராவை |
கப்ஹும் பால்நே காலி ஜுலாவை || 1979

இவ்விதமாக ப்ரபு ஸ்ரீ ராமச்சந்த்ரன் பால க்ரீடை செய்து கொண்டு எல்லா நகர மக்களுக்கும் இன்பத்தை அளித்து வந்தார். மாதா கௌஸல்யா சில ஸமயம் தன் மடியில் எடுத்து வைத்து அசைத்துக் கொஞ்சுகிறாள். சில ஸமயம் குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுகிறாள்.

ப்ரேம மக்ன கௌஸல்யா நிஸி
தின் ஜாத் ந ஜான் |
ஸுத ஸனேஹ் பஸ் மாதா பால
சரித் கர் கான் || 1980

இரவு எது பகல் எது என்று தெரியாமல் குழந்தை யின் அன்பிலும், பாசத்திலும் திளைத்தாள் தாயார் கௌஸல்யா. (நாட்கள் எப்படிக் கழிந்தது என்பது கூட அறியாமல் ராமப்ரேமையில் மதி மயங்கிக் கிடந் தாள்.) குழந்தையின் பால சரித்ரத்தைப் பாடிக் கொண்டு பரவசத்தில் ஆழ்ந்தாள்.

ஏக் பார் ஜனனீம் அன்ஹவாஏ |
கரி ஸிங்கார் பல்னாம் பளடாயே || 1981
நிஜ குல் இஷ்ட தேவ் பக்வானா |
பூஜா ஹேது கீன்ஹ அஸ்நாநா || 1982

ஒருமுறை தாயானவள் குழந்தை ராமனை ஸ்நானம் செய்வித்து, அலங்காரமும் செய்து தொட்டிலில் விட் டாள். பிறகு தனது இஷ்ட தேவதையான பகவானைப் பூஜை செய்ய ஸ்னானம் செய்து விட்டுக் கிளம்பினாள்.

கரி பூஜா நைபேத்ய சடாவா ।
ஆபு கயீ ஜஹம் பாக் பநாவா ॥ 1983
பஹுரி மாது தஹ்வாம் சலி ஆயீ ।
போஜன் கர்த் தேக் ஸுத ஜாயீ ॥ 1984

பூஜை செய்து, நைவேத்யம் செய்து, தானே உணவுப் பொருள்கள் தயாரித்திருந்த சமயலறைக்குச் சென்று திரும்பி வந்து பார்த்த பொழுது பகவானுக்கு நைவேத்யம் செய்ய வைத்திருந்த அன்னம் முதலியவைகளைக் குழந்தை ராமன் உட்கார்ந்து சாப்பிடுவதைக் கண்டாள்.

கை ஜனனீ சிசு பஹிம் பயபீதா ।
தேகா பால் தஹாம் புனி ஸுதா ॥ 1985
பஹுரி ஆயி தேகா ஸுத ஸோயீ ।
ஹ்ருதயம் கம்ப மன் தீர் ந ஹோயீ ॥ 1986

குழந்தை தொட்டிலில் தானே தூங்கிக் கொண்டிருந்தான். யார் கொண்டு வந்து அவனை இங்குப் பூஜை அறையில் விட்டிருக்கக் கூடும்? என்று யோசித்த தாயார் கௌஸல்யை பயந்து நடுங்கி, மீண்டும் தொட்டில் அருகே வந்து பார்த்தாள். அங்குக் குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டாள். மறுபடி பூஜை அறையில் வந்து பார்த்தபோது குழந்தை சாப்பிடுவதைக் கண்டதும் நடுநடுங்கிப் போனாள். மனத்தில் தைர்யம் வரவில்லை.

இஹாம் உஹாம் துயி பாலக் தேகா ।
மதிப்ரம மோர் கி ஆன் பிஸேஷா ॥ 1987
தேகி ராம் ஜனனீ அகுலானீ ।
ப்ரபு ஹம்ஸி தீன்ஹ மதுர் முஸுகானீ ॥ 1988

இது என்ன அற்புதம்? என்று தாயார் எண்ணலானாள். இங்கும் ஒரு குழந்தை, அங்கும் ஒரு குழந்தையைப் பார்க்கிறேனே! இந்த இரண்டு ரூபமும் ராமன் தானே! இல்லை, இது ஒருவேளை புத்தி ப்ரமையோ? இதற்கு விசேஷ காரணம் உண்டா? ஏன் இப்படி? என்று வ்யாகுலமடைந்தாள். அப்போது ஸ்ரீ ராமச் சந்த்ரன் தாயார் கலக்கமடைந்திருப்பதைக் கண்டு மதுரமாகப் புன்னகை செய்து மகிழ்ந்தார்.

தேக் ராவா மாதஹி நிஜ
அத்புத ரூப அகண்ட் |
ரோம் ரோம் ப்ரதி லாகே
கோடி கோடி ப்ரஹ்மண்ட் || 1989

பின்பு ராமன் தாயாருக்குத் தன்னுடைய பரந்த அற்புதமான ரூபத்தைக் காட்டினார். அவருடைய ஒவ் வொரு ரோமத்திலும் கோடிக்கணக்கான ப்ரஹ்மாண் டங்கள் தென்படுவன போல் தோன்றியது.

அகனித் ரபி ஸஸி சிவ சதுரானன் |
பஹு கிரி ஸரித் ஸிந்து மஹி கானன் || 1990
கால கர்ம குன் க்யான் ஸுபாவு |
ஸோவு தேகா ஜோ ஸுநா ந காவு || 1991

எண்ணிலடங்காத ஸூர்ய, சந்த்ரர்களும், சிவன், ப்ரம்மன், பலவிதமான மலைகள், நதிகள், ஸமுத்ரம், பூமி, காடு, நேரம், குணம், ஜ்ஞானம், பண்பு எல்லா வற்றையுமே கண்டாள். பின்னர் காதால் இதுவரை கேட்டிராத பல பதார்த்தங்களையும் கண்டாள்.

தேகீ மாயா ஸப் பிதி காடீ |
அதி ஸபீத் ஜோரேம் கர் டாடீ || 1992
தேகா ஜீவ் நசாவ்யி ஜாஹீ |
தேகீ பக்தி ஜோ சோர்யி தாஹீ || 1993

இம்மாதிரி வலுவு உள்ள மாயையின் சக்தியைப் பார்த்தாள். அந்த மாயையானது பயத்துடன் கைகளைக் கட்டிக் கொண்டு பகவான் எதிரில் நின்றது. ஜீவனை மாயை ஆட்டி வைக்கிறது. பின்பு பக்தியை நோக்கி னாள்; அகப்பட்டு அல்லல்படும் ஜீவன்களைப் பக்தி யானது மாயையிலிருந்து விடுவிக்கிறது.

தன் புலகித் முக் பசன் ந ஆவா |
நயன மூதி சரணனி ஸிரு நாவா || 1994
பிஸ்மயவந்த் தேகி மஹ்தாரீ |
பயே பஹுரி ஸிஸுரூப் கராரீ || 1995

தாயாரின் சரீரம் புல்லரித்துப் போனது. வாயி லிருந்து வார்த்தைகள் வெளிவரவில்லை. கண்களை

மூடிக்கொண்டு ஸ்ரீ ராமச்சந்த்ரனின் பாத கமலங்களில் வணங்கினாள். ஆச்சர்யத்தினால் உந்தப்பட்ட தாயின் நிலையைக் கண்டு கரனின் சத்ருவான ராமன் மீண்டும் குழந்தை ரூபம் கொண்டார்.

அஸ்துதி கரி ந ஜாயி பய் மானா |
ஜகத் பிதா மைம் ஸுத கரி ஜானா || 1996
ஹரி ஜனனீ பஹுபிதி ஸமுஜாயீ |
யஹ் ஜனி கதஹும் கஹஸி ஸுனு மாயீ ||
1997

தாயாரினால் பகவான் ஹரியைத் துதிக்கக் கூட முடியாத நிலை. ஏனெனில்; ஜகத் பிதாவான ஸ்ரீ ராமனை நான் பிள்ளையாகப் பெற்று இருக்கிறேனே. அப்படிப் பெற்ற குழந்தையைத் தாய் நமஸ்கரிக்கலாமா? என்று அவள் பயந்து விட்டாள்.

எல்லாம் அறிந்த பகவான் தாயின் நிலை கண்டு பல விதமாக அவளை ஸமாதானம் செய்து, தாயே! நீ கண்ட காட்சியை வெளியில் யாரிடமும் கூறாதே என்றார். கௌஸல்யாவும் அப்படியே என்றாள்.

பார் பார் கௌஸல்யா
பிதய கர்யி கர் ஜோரி |
அப் ஜனி கப்ஹுஹும் ப்யாபை ப்ரபு
மோஹி மாயா தோரி || 1998

தாயார் கௌஸல்யா திரும்பத் திரும்பக் கைகளைக் கூப்பி, வணங்கி, வேண்டிக் கூறினாள். ஹே ப்ரபு! மீண்டும் எனக்குத் தங்களுடைய மாயா ரூபத்தைக் காட்டாதீர்கள். (அதாவது; இந்தக் குழந்தை ரூபத்திலேயே என்னிடம் இருங்கள்) என்றாள்.

பால சரித் ஹரி பஹு பிதி கீன்ஹா |
அதி அனந்த தாஸன்ஹ கஹும் நீன்ஹா ||1999
கஹுக் கால் பீதேம் ஸப் பாயீ |
படே பயே பரிஜன் ஸுக்தாயீ || 2000

பகவான் பலவிதமான பால லீலைகளைச் செய்து வந்தார். மேலும், பணி செய்யும் மக்களையும் பரவச மடையச் செய்தார். சிறிது காலம் சென்றதும் இந்த

நான்கு ஸஹோதரர்களும் தங்களது குடும்பத்திற் குப் பல விதத்திலும் ஸுகம் கொடுப்பவர்களாயினர்.

சூடாகரன் கீன்ஹ குரு ஜாயீ |
பிப்ரன்ஹ புனி தசினா பஹு பாயீ || 2001
பரம மனோஹர் சரித் அபாரா |
கர்த் பிரத் சாரிஉ ஸுகுமாரா || 2002

சூடாகரணம் என்னும் விதிப்படி நடக்க வேண்டிய நியதிக்காகக் (ஸம்ஸ்காரத்திற்காக) குரு வந்தார்.

ப்ராம்மணர்களுக்கு மீண்டும் பலவித தக்ஷிணைகள் கொடுக்கப்பட்டன. இந்த அழகான நான்கு ராஜகுமாரர் களும், மனத்தைக் கொள்ளை கொள்ளும் வரலாறு பொதிந்த அழகுடன் இங்கும் அங்கும் நிறைந்து இருந் தார்கள்.

மன க்ரம பசன் அகோசர் ஜோயீ |
தஸரத் அஜிர் பிசர் ப்ரபு ஸோயீ || 2003
போஜன் கர்த் போல் ஜப் ராஜா |
நஹிம் ஆவத் தஜி பால ஸமாஜா || 2004

எவர் மனத்தினாலும், சொற்களினாலும், செயல் களாலும் புலனாகாதவரோ; அப்படிப்பட்டவர் இன்று தசரதருடைய மாளிகையின் கூடத்தில் ஸஞ்சரித்துக் கொண்டிருக்கிறார். சாப்பிடும் நேரத்தில் ராஜா குழந்தை களை அழைத்தால்; குழந்தைகள் தங்கள் ஸகாக்களை விட்டு வருவதில்லை.

கௌஸல்யா ஜப் போலன் ஜாயீ |
டுமுகு டுமுகு ப்ரபு சல்ஹிம் பராயீ || 2005
நிகம நேதி ஸிவ் அந்த ந பாவா |
தாஹி தரை ஜனனீ ஹடி தாவா || 2006

மேலும், ராணி கௌஸல்யா எப்போது குழந்தை ராமனைக் கூப்பிடச் செல்கிறாளோ, அப்போது ஸ்வாமி தாவித்தாவி ஓடுகிறான். வேதங்கள் பகவானை 'இல்லை' என்று சொல்லிக் கொண்டே வருணிக்கின்றன.

சிவனாரும் அவருடைய முடிவைக் கண்டதில்லை.

அப்படிப்பட்ட பரமாத்மாவைத் தாயானவள் பிடி வாதமாகப் பிடிக்க ஓடுகிறாள்.

தூஸர் தூரி பரேம் தனு ஆயே |
பூபதி பிஹஸி கோத் பைடாஏ || 2007

பிறகு உடலெல்லாம் தூசிகளைப் பூசிக் கொண்டு வந்தான் குழந்தை ராமன். ராஜா சிரித்துக் கொண்டே குழந்தையை மடியில் வைத்துக் கொண்டார்.

போஜன் கர்த் சபல சித்
இத உத் அவஸரு பாயி |
பாஜி சலே கில்கத் முக் ததி
ஓதன் லப்டாயி || 2008

பிறகு சாப்பிட்டுக் கொண்டே நிம்மதி இல்லாமல் அங்கும் இங்கும் பார்க்கிறார் ராமன். மனத்தில் ஒரு சஞ்சலம், பரபரப்பு. ஸமயம் கிடைத்தவுடன் தயிரையும் சாதத்தையும் ஒன்றாகக் கலந்து, பிறர் முகத்தில் தடவி மகிழ்ந்து ஓடி விடுகிறான்.

பால சரித் அதி ஸரல் ஸுஹாஏ |
ஸாரத் ஸேஷ் சம்பு ச்ருதி காயே || 2009
ஜின்ஹ கர் மன் இன்ஹ ஸன் நஹிம் ராதா |
தே ஜன் பஞ்சித் கியே பிதாதா || 2010

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் இந்த நிர்மலமான பால லீலைகளைப் பற்றி ஸரஸ்வதி, ஆதி சேஷன், சிவனார் போற்றியுள்ளார்கள். வேதங்களிலும் பாடப்பட்டு இருக்கிறது. எவருக்கு இந்தப் பால்ய லீலைகளைப் பற்றி அறிய முடியவில்லையோ; அந்த ஆத்மாக்களை ப்ரம்மன் பாக்யஹீனர்களாகச் செய்து விட்டார். (அதாவது; மனமோஹனமான அவரது லீலை அத் தகைய அழகுடன் விளங்குவது)

பயே குமார் ஜப்ஹிம் ஸப் ப்ராதா |
தீன்ஹ ஜனேவூ குரு பிது மாதா || 2011
குர்க்ருஹம் கயே படன் ரகுராயீ |
அல்ப கால் பித்யா ஸப் ஆயீ || 2012

எப்படி எல்லாக் குமாரர்களும் குமாரப் பருவம் அடைந்தார்களோ; அப்பொழுது குரு பிதா, மாதா யாவரும் சேர்ந்து குழந்தைகளுக்கு யஜ்ஞோபவீதம் செய்வித்தார்கள். அதன் பின்பு, ஸ்ரீ ரகுநாதன் வித்தை கற்க வேண்டி ஸஹோதரர்களுடன் குருவின் இல்லம் செல்லலானார். சிறிது காலத்திற்குள்ளேயே அவர்களுக்கு எல்லா வித்தைகளும் ஸுலபமாகவே வந்து விட்டன.

ஜாகீ ஸஹஜ் ஸ்வாஸ் ச்ருதி சாரீ |
ஸோ ஹரி பட் யஹ் கௌதுக் பாரீ || 2013
பித்யா பினய நிபுன் குன ஸீலா |
கேல்ஹிம் கேல் ஸகல நிருபலீலா || 2014

நான்கு வேதங்களும் இந்த ராஜகுமாரர்களின் ச்வாஸம் போல் ஆகும். ஏனெனில்; வேதம் ஒன்றும் இவர்களுக்கு, ஸ்ரீ ராமனுக்கு அதிசயம் இல்லை. ஸ்வயம் ஸ்ருஷ்டியான வேதத்தைப் பகவானே படித்தார் என்பதுதான் இங்கு ஆச்சர்யம்.

நான்கு ஸஹோதரர்களும், வித்தை, விநயம், குணம், சீலம் எல்லாவற்றிலும் சிறந்து விளங்கினார்கள்.

அவர்கள் விளையாடுவதும், பெரிய பெரிய அரசர்கள் விளையாடுவது போல் விளையாடினர். (இவர்கள் ஸகலமும் அறிந்த தீர்க்கதரிசிகள்)

கரதல் பான் தனுஷ் அதி ஸோஹா |
தேகத் ரூப் சராசர் மோஹா || 2015
ஜின்ஹ பீதின்ஹ பிஹரஹிம் ஸப் பாயீ |
தகித் ஹோஹிம் ஸப் லோக் லுகாயீ || 2016

கைகளில் பாணங்களும், தனுஸும் மிகவும் அழகைக் கொடுக்கின்றன. அவர்களது அழகைக் கண்ட மாத்ரத்தில் அண்ட சராசரங்களும் மோஹித்துவிடுகின்றன. அவர்கள் எந்தத் தெரு வழியாக விளையாடிக் கொண்டு வருகிறார்களோ; அந்தத் தெருக்களிலுள்ள அவர்களைக் கண்ட ஸ்த்ரீ-புருஷர்கள் ஸ்நேஹத்தினால் மனம் நெகிழ்கிறார்கள்; திகைத்து விடுகிறார்கள்.

கோஸல்புர் பாஸீ நர் நாரி
ப்ருத்த அரு பால் |
ப்ரானஹு தே ப்ரிய லாகத்
ஸப் கஹும் ராம் க்ருபால் || 2017

அயோத்யா நகரவாஸிகளான ஸ்த்ரீகள், புருஷர்கள், கிழவர்கள், சிறுவர்கள் எல்லோருக்கும் அருளாளனான ஸ்ரீ ரமச்சந்த்ரன் அவர்களது உயிரைக் காட்டிலும் அன்பானவனாக, மேலானவனாக இருந்தார்.

பந்து ஸகா ஸங்க் லேஹிம் போல்ாயீ |
பன் ம்ருகயா நித கேல்ஹிம் ஜாயீ || 2018
பாவன் ம்ருக மார்ஹிம் ஜியம் ஜானீ |
தின் ப்ரதி ந்ருபஹி தேகாவ்ஹிம் ஆனீ || 2019

ஸ்ரீ ராமச்சந்த்ரன் தனது ஸஹோதரர்களையும் இன்னும் இஷ்டமித்ரர்களையும் அழைத்துக் கொண்டு தினம் காடு சென்று வேட்டையாடினார். மனத்தில் பவித்ரமான எண்ணம் வைத்து மான் வேட்டையாடி ராஜா தசரதரிடம் கொண்டு வந்து காட்டி ஸந்தோஷமடைந்தார்.

ஜே ம்ருக ராம் பான் கே மாரே |
தே தனு தஜி ஸுர்லோக் ஸிதாரே || 2020
அனுஜ ஸகா ஸங்க் போஜன் கர்ஹீம் |
மாது பிதா அக்யா அனுஸர்ஹீம் || 2021

எந்த மான்கள் ராமனுடைய பாணத்தினால் மரணமடைந்தனவோ, அவை இந்தச் சரீரத்தை விட்டுத் தானே ஸ்வர்க்க பதவி அடைந்தன. ஸ்ரீ ராமன் தனது சிறிய ஸஹோதரர்களுடனும், தோழர்களுடனும் போஜனம் சாப்பிடுவார். தாயார்-தந்தையின் ஆஜ்ஞையைச் சிரமேற்கொண்டு நடந்து வந்தார்.

ஜேஹி பிதி ஸுகீ ஹோஹிம் புர் லோகா |
கர்ஹி க்ருபாநிதி ஸோயி ஸம்ஜோகா || 2022
பேத் புரான் ஸுனஹிம் மன் லாயீ |
ஆபு கஹஹிம் அனுஜன்ஹ ஸமுஜாயீ || 2023

நகரவாஸிகள் ஸுகப்படுகிற அளவிற்கு க்ருபா நிதியான ராமன் பற்பல லீலைகளைச் செய்து வந்தார்.

அவர் மனத்தை ஈடுபடுத்தி வேதங்கள், புராணங்கள் இவைகளைக் கூறக் கேட்டார். பின்பு தான் தனது சிறிய ஸஹோதரர்களுக்கு அதன் ஸாராம்சத்தை எடுத்துக் கூறி வந்தார்.

ப்ராதகால் உடி கை ரகுநாதா |
மாது பிதா குரு நாவ்ஹிம் மாதா || 2024
ஆயஸு மாகி கர்ஹிம் புர் காஜா |
தேகி சரித் ஹர்ஷயி மன் ராஜா || 2025

ஸ்ரீ ரகுநாதன் தினமும் விடியற்காலையில் எழுந்து தாயார், தகப்பனார், குருவிற்குத் தலைவணங்கி, அவர்களிடமிருந்து ஆஜ்ஞை பெற்று, நகர வேலைகளைச் செய்து வந்தார். அவருடைய உத்தமமான வாழ்க்கையையும், நடத்தைகளையும் கண்ட ராஜா தசரதர் வெகுவாக ஆனந்தித்தார்.

ப்யாபக் அகல் அநீஹ் அஜ நிர்குன் நாம் ந ரூப் |
பக்த ஹேது நாநா பிதி கரத் சரித்ர அனூப் ||2026

எவர் எங்கும் நிறைந்தவரோ, அதாவது; பரப்ரம்மமோ, உறுப்புகள் அற்றவரோ, ஆசையற்றவரோ, ஜன்மம் இல்லாதவரோ, நிர்குணமானவரோ, எவருக்குப் பெயரும், ரூபமும், பிறப்பும் இல்லையோ; அப்படிப்பட்ட பகவான் ஸ்ரீ ராமன் பக்தர்களுக்காகப் பலவிதமான, உவமையற்ற லீலைகளைச் சரித்ரத்தை செய்து கொண்டு இருந்தார்.

யஹ் ஸப் சரித் கஹா மைம் காயீ |
ஆகிலி கதா ஸுநஹு மன் லாயீ || 2027
பிஸ்வாமித்ர மஹாமுனி க்யானீ |
பஸ்ஹிம் பிபின் ஸுப ஆச்ரம் ஜானீ || 2028

''இதுவரை எல்லோருடைய சரித்ரங்களையும், நான் உனக்கு வர்ணித்துக் கூறினேன். மேலும், நான் கூறப்போகும் கதையை மனம் வைத்துக் கேள்.''

பரம ஜ்ஞானியான, மஹாமுனிவர் விச்வாமித்ரர் கானகத்தில் ஒரு தூய ஆச்ரமத்தில் வாழ்ந்து வந்தார்.

ஜஹம் ஜப் ஜக்ய ஜோக் முனி கர்ஹீம் |
அதி மாரீச் ஸுபாஹுஹி டர்ஹீம் || 2029
தேகத் ஜக்ய நிஸாசர் தாவ்ஹிம் |
கர்ஹிம் உபத்ரவ் முனி துக் பாவ்ஹிம் || 2030

அந்த முனிவர் ஜபமும், யோகமும், யஜ்ஞமும் செய்து வந்த இடத்தில் அவர் மாரீசனுக்காகவும், ஸுபாஹுவிற்காகவும் மிகவும் பயந்து வந்தார். ஏனெனில்; அந்த அரக்கர்கள் யஜ்ஞத்தைக் கண்டவுடனே ஓடோடியும் வந்து முனிவருக்கு ஹிம்சை கொடுத்தார்கள். அதனால் முனிவர் மிகுந்த துக்கம்டைந்தார்.

காதிதனய் மன் சிந்தா ப்யாபீ |
ஹரி பினு மர்ஹிம் ந நிஸிசர் பாபீ || 2031
தப் முனிபர் மன் கீன்ஹ பிசாரா |
ப்ரபு அவதரேஉ ஹரன் மஹி பாரா || 2032

காதியின் புத்ரரான விச்வாமித்ர முனிவரின் மனத்தில் பெரும் கலக்கம் ஏற்பட்டது. பகவான் ராமனைத் தவிர்த்து வேறு எவராலும் இந்த ராட்சதப் பாபிகளைக் கொல்ல முடியாது; இவர்கள் சாகவும் மாட்டார்கள். இவர்களின் தொல்லை நீங்க, பூமி பாரம் நீங்கப் பகவான் ஹரி அவதாரம் எடுத்திருக்கிறார். ஆகவே, என் விருப்பமும் நிறைவேறும் என்று முனிவர் மனத்தினுள் எண்ணினார்.

ஏஹமிஸ் தேகௌம் பத் ஜாயீ |
கரி பின்தீ ஆனௌம் தோவு பாயீ || 2033
க்யான் பிராக் ஸகல் குன் அய்னா |
ஸோ ப்ரபு மைம் தேகப் பரி நயனா || 2034

மேலும், விச்வாமித்ரர்; இந்தச் சாக்கில் நான் சென்று பகவானின் பாத கமலங்களைத் தரிசிப்பேன். பின்னும் அவரை வேண்டி அந்த இரண்டு ஸஹோதரர்களையும், ராஜ குமாரர்களையும் அழைத்து வர யத்தனிப்பேன். ஆஹா! ஜ்ஞானம், வைராக்யம், மேலும், எல்லாக் குணங்களுக்கும் இருப்பிடமான ப்ரபுவை நான் கண் குளிரக் காண்பேன்.

பஹுபிதி கர்த் மனோரத் ஜாத்
லாகி நஹிம் பார் |
கரி மஜ்ஜன் ஸரவூ ஜல்
கயே பூப் தர்பார் || 2035

என இப்படிப் பலவிதமான எண்ணங்களை மனத்தில் கொண்டு உடனே கிளம்பினார் விச்வாமித்ரர். ஸரயூ நதியில் ஸ்னானம் செய்து விட்டு ராஜ தர்பாருக்குள் சென்றார்.

முனி ஆகமன் ஸுநா ஜப் ராஜா |
மிலன் கயவு லை பிப்ர ஸமாஜா || 2036
கரி தன்டவத் முனிஹி ஸன்மானீ
நிஜ ஆஸன் பைடாரேன்ஹி ஆனீ || 2037

ராஜா தசரதர்; முனிவர் விச்வாமித்ரர் வரும் செய்தியை அறிந்ததும்; உடனே அவர் எல்லா ப்ராம்மணர்களையும் அழைத்துக் கொண்டு வேத ஒலியுடன் வரவேற்கச் சென்றார்.

அவர் முனிவர் எதிரில் தண்டம் ஸமர்ப்பித்து எழுந்து வரவேற்றார். பின் அவரை அழைத்து வந்து தம் ஆஸனத்தில் அமர்த்தினார்.

சரன் பகாரி கீன்ஹி அதி பூஜா |
மோ ஸம ஆஜு தன்ய நஹிம் தூஜா || 2038
பிபித் பாந்தி போஜன் கர்வாவா |
முனிபர் ஹ்ருதயம் ஹர்ஷ அதி பாவா || 2039

பிறகு அம்முனிவரின் பாதங்களை நீராட்டிக் கழுவிப் பாத பூஜை செய்து, ராஜா அவரிடம்: முனிவரே! என் போன்ற புண்ணியவான் வேறு ஒருவரும் இல்லை இன்று என்றார். பிறகு பலவிதமான சிறந்த போஜனங்களைச் சாப்பிடச் செய்தார். இவையெல்லாம் கண்ட விச்வாமித்ரர் மனத்தில் பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

புனி சர்னனி மேலே ஸுத் சாரீ |
ராம் தேகி முனி தேஹ் பிஸாரீ || 2040
பயே மக்ன தேகத் முக் ஸோபா
ஜனு சகோர் பூரன் ஸஸி லோபா || 2041

பிறகு அரசர் தசரதர் தனது நான்கு குமாரர்களையும் அழைத்து முனிவரின் காலில் விழுந்து வணங்கும் படிச் செய்தார். ஸ்ரீ ராமச்சந்த்ரனைக் கண்ட முனிவர் ஆச்சர்யத்தினால் தன் நிலை மறந்தார். ஸ்ரீராமனின் முக கமலத்தைக் கண்ட முனிவர்; சந்த்ரனைக் கண்ட சகோர பக்ஷி மோஹத்தில் மயங்குவது போல்; மெய்ம் மறந்த நிலையில் நின்றார்.

தப் மன் ஹர்ஷி பசன் கஹ் ராவூ |
முனி அஸ் க்ருபா ந கீன்ஹிஹூ காவூ || 2042
கேஹி காரன் ஆகமன் தும்ஹாரா |
கஹஹூ ஸோ கர்த் ந லாவஉம் பாரா || 2043

அப்பொழுது, ராஜா பேரானந்தமடைந்து முனிவரை நோக்கி; ஹே முனிவரே! இது மாதிரி இதுவரை என்னிடம் தாங்கள் தயவு காட்டியதே இல்லை.

ஆமாம், இன்று எந்தக் காரணம் கருதித் தாங்கள் இங்கு வந்திருப்பது? அதை நிறைவேற்றுவதில் தாமதம் ஆக வேண்டாமே என்று கருதுகிறேன் என்றார்.

அஸூர் ஸமூஹ் ஸதாவ்ஹிம் மோஹீ |
மைம் ஜாசன் ஆயஉம் ந்ருப் தோஹீ || 2044
அனுஜ ஸமேத் தேஹூ ரகுநாதா |
நிஸிசர் பத் மைம் ஹோப் ஸநாதா || 2045

அதற்கு முனிவர்: ஹே ராஜன்! ராட்சத ஸமூஹம் எனக்கு மிகத் தொல்லை கொடுக்கிறது. இதனால் நான் உம்மிடம் ஒரு பொருளைக் கேட்க வந்திருக்கிறேன். சிறிய ஸஹோதரருடன் ஸ்ரீ ரகுநாதனை என்னுடன் அனுப்பிக் கொடுப்பீராக. அரக்கர்கள் ஒழிந்ததும் நான் பாதுகாப்பாக இருக்க முடியும்.

தேஹூ பூப் மன் ஹர்ஷித்
தஜஹூ மோஹ் அக்யான் |
தர்ம ஸூஜஸ் ப்ரபு தும்ஹ கௌம்
இன்ஹ கஹம் அதி கல்யான் || 2046

ஆகவே, ஹே ராஜன்! ப்ரஸன்ன மனத்துடன் உம் பிள்ளைகளை என்னிடம் கொடுங்கள். மோஹம்,

அஜ்ஞானம் இவைக்ளை விட்டுவிடுங்கள். ஹே ஸ்வாமி! இதனால் உமக்கும் தர்மமும், புகழும் உண்டாகும். இவர்களுக்கும் பரம கல்யாணங்களும் உண்டாகும் என்றார்.

ஸுனி ராஜா அதி அப்ரிய பானீ |
ஹ்ருதய கம்ப முக் துதி குமுலானீ || 2047
சௌதேம்பன் பாயஉம் ஸுத் சாரீ |
பிப்ர பசன் நஹிம் கஹேஹு பிசாரீ || 2048

இந்த ப்ரியமில்லாத சொல்லைக் கேட்ட அரசர் தசரதரின் ஹிருதயம் நடுங்க ஆரம்பித்தது. அவருடைய முக ஒளி மழுங்கி விட்டது. அவர் மேலும்;

ஹே ப்ராம்மணரே! நான் இந்த நான்காவது பிராயத்தில் (அதாவது; மனிதரின் நா ‹ கு ஆச்ரமங்களில் நான்காவது ஆச்ரமத்தில்) எனக்குப பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள். (அதாவது; வயோதிக காலத்தில் பிள்ளைகள் பிறந்திருக்கிறார்கள்) இதைத் தாங்கள் ஆலோசித்துக் கூறியதாகப்படவில்லை.

மாகஹு பூமி தேனு தன் கோஸா |
ஸர்பஸ் தேவும் ஆஜு ஸஹரோஸா || 2049
தேஹ் ப்ரான் தேம் ப்ரிய கசு நாஹீம் |
ஸோவு முனி தேவும் நிமிஷ ஏக் மாஹீம் ||2050

ஹே முனிவரே! பூமி, பசுக்கள், தனம், மேலும், என்பொக்கிஷம் இவைகளைக் கேளுங்கள். எல்லாவற்றையும் நான் ஸந்தோஷமாகத் தருகிறேன். தேஹம், ப்ராணன் இவையே எதையும் விட மனிதனுக்கு மிக்க ப்ரியமானது. நான் அவைகளைத் தங்களுக்கு ஒரு நொடியில் கொடுத்து விடுகிறேன்.

ஸப் ஸுத் ப்ரிய மோஹி ப்ரான் கி நாயீம் |
ராம் தேத் நஹிம் பனயி கோஸாயீம் || 2051
கஹம் நிஸிசர் அதி கோர் கடோரா |
கஹம் ஸுந்தர் ஸுத பரம கிஸோரா || 2052

மேலும், எல்லாப் பிள்ளைகளும் எனக்கு என் உயிரைப் போல் அன்பானவர்கள். அவர்களிலும் ஹே ப்ரபுவே! ஸ்ரீ ராமனை எவ்விதத்திலும் கட்டாயம் கொடுக்கவே முடியாது.

மஹாபயங்கரமான ராட்சதர்கள் எங்கே? இளம் பருவத்திய கோமலமான சரீரம் கொண்ட என் இந்த ஸுகுமார புத்ரர்கள் எங்கே? என்றார்.

ஸுனி ந்ருப கிரா ப்ரேம் ரஸ் ஸானீ |
ஹ்ருதயம் ஹர்ஷ மானா முனி க்யானீ || 2053
தப் பஸிஷ்ட பஹுபிதி ஸமுஜாவா |
ந்ருப ஸந்தேஹ் நாஸ் கஹம் பாவா || 2054

ப்ரேமை ரஸத்தில், மோஹத்தில் ஆழ்ந்து தவிக்கும் ராஜா தசரதரின் சொற்களைக் கேட்டு விச்வாமித்ரர் தனக்குள் ஸந்தோஷப்பட்டுக் கொண்டார்.

அச்சமயம் முனி வஸிஷ்டர் அங்கு வந்து ராஜா விற்கு வெகுவாக ஸமாதானம் அளித்து நல்லவை களைப் போதித்தார். இதனால் ராஜாவின் ஸந்தேஹம் தூர விலகியது.

அதி ஆதர் தோவு தனய போலாயே |
ஹ்ருதயம் லாயி பஹு பாந்தி ஸிகாயே ||2055
மேரே ப்ரான் நாத் ஸுத தோவூ |
தும்ஹ முனி பிதா ஆன் நஹிம் கோவூ || 2056

ராஜா பிள்ளைகள் இருவரையும் ஆதரவுடன் அழைத்து, மார்புடன் அணைத்துக் கொண்டு பலவித மான புத்திமதிகளைக் கூறினார். பிறகு விச்வாமித் ரரை நோக்கி; ஹே நாதரே! இந்த இரண்டு குமாரர் களும் எனது ப்ராணன் போன்றவர்கள். முனிவரே! இனி நீங்கள் தான் இவர்களுக்குத் தகப்பனார்; உங் களைத்தவிர இவர்களுக்கு வேறு யாரும் இல்லை என்று வருத்தத்துடன் கூறினார்.

ஸௌம்பே பூப் ரிஷி ஹிஸுத்
பஹுபிதி தேயி அஸீஸ் |
ஜனனீ பவன் கயே ப்ரபு
சலே நாயி பத் ஸீஸ் || 2057

ராஜா பலவிதமாகக் குமாரர்களுக்கு ஆசீர்வாதங் கள் செய்து, அவர்களை ரிஷியிடம் ஒப்படைத்தார்.

பிறகு ப்ரபு ராமன் தனது தாயாரின் அந்தப்புரம் சென்றார். தாயாரைத் தலை வணங்கி ஸஹோதரனு டனும், விச்வாமித்ரருடனும் கானகம் ஏகினார்.

புருஷ ஸிம்ஹ தோவு பீர் ஹர்ஷி
சலே முனி பய ஹரன் |
க்ருபாஸிந்து மதிதீர் அகில
பிஸ்வ காரன் கரன் || **2058**

புருஷ ஸிம்மம் போன்ற ராம-லக்ஷ்மணர் இருவரும் முனிவரின் பயத்தைப் போக்க, அவர் பின்னர்ல் ஸந்தோஷத்துடன் சென்றார்கள். அவர்கள் க்ருபா ஸமுத்ரம் போலவும், துணிவான புத்தியுள்ளவர்களாக வும், ஸம்பூர்ண உலகத்தின் காரண காரணர்களாக வும் தென்பட்டார்கள்.

அருன் நயன் உர் பாஹு பிஸாலா |
நீல ஜலஜ் தனு ஸ்யாம் தமாலா || **2059**
கடி பட் பீத் கஸேம் பர் பாதா |
ருசிர் சாப் ஸாயக் துஹும் ஹாதா || **2060**

பகவானுக்குச் சிவந்த கண்கள், அகன்ற மார்பு, விசாலமான புஜங்கள். நீல கமலத்தைப் போன்றதும், தமால வ்ருக்ஷத்தைப் போன்றதுமான நீலத்திருமேனி. இடுப்பில் பீதாம்பரம், அழகான அம்பராத் தூணி அணிந்திருக்கிறார். இரண்டு கைகளிலும் தனுஸும், பாணமும் வைத்திருக்கிறார்.

ஸ்யாம் கௌர் ஸுந்தர் தோவு பாயீ |
பிஸ்வாமித்ர மஹாநிதி பாயீ || **2061**
ப்ரபு ப்ரஹ்மன்யதேவ் மைம் ஜானா |
மோஹிநிதி பிதா தஜேவு பக்வானா || **2062**

கறுப்பும், வெண்ணிறமும் கொண்ட இந்த இரண்டு பாலகர்களும் வெகு அழகாக இருந்தார்கள். விச்வா மித்ரருக்கு ஏதோ பெரிய நிதி கிடைத்து விட்டது. மேலும், ப்ரபுவானவர் ப்ராம்மண பக்தர். ஆகவே, அவர் என் மீது உள்ள பக்தியினால் தனது அன்புத் தந்தையைக் கூட விட்டு வந்து விட்டார் என்று அவர் யோஜனையிலாழ்ந்தார்.

சலே ஜாத் முனி தீன்ஹி தேகாயீ |
ஸுனி தாடகா க்ரோத் கரி தாயீ || 2063
ஏக்ஹி பான் ப்ரான் ஹரி லீன்ஹா |
தீன் ஜானி தேஹி நிஜ பத் தீன்ஹா || 2064

வழியில் செல்லச் செல்ல முனிவர் எதிரில் தென் பட்ட தாடகையை ராம லக்ஷ்மணர்களுக்குக் காட்டி னார். சப்தம் கேட்டதும் தாடகை கோபத்துடன் ஓடோ டியும் வந்தாள். ஸ்ரீ ராமர் ஒரே ஒரு பாணத்தினால் தாடகையை அடித்தார்; அவள் மாண்டாள். அவ ளுடைய அவலநிலை கண்டு பரிதாபப்பட்டு தன் னுடைய திவ்ய ஸ்வரூப தரிசனம் அளித்தார். அவள் புண்ய லோகம் போய்ச் சேர்ந்தாள்.

(தாடகா என்பவள் ஸுகேது என்ற யக்ஷனின் கன்னிகையாவாள். அவள் ப்ரம்மனிடம் தபஸ் செய்து வரன் பெற்றாள். அதாவது; ஆயிரம் யானை பலம் தனக்கு வேண்டுமென வேண்டிப் பெற்றாள். ஜாம்ப வானின் புத்ரன் ஸுந்தனுடன் இவளுக்கு விவாஹம் ஆயிற்று. இவர்கள் புத்ரன்தான் மாரீசன். மகரிஷி அகஸ்த்யர் ஸுந்தனைச் சில காரணத்தினால் வதை செய்தார். இதைக் கேட்ட தாடகையும், அவள் புத்ரன் மாரீசனும் ரிஷியை அடித்துச் சாப்பிட ஓடினார்கள்.

அப்பொழுது ரிஷி சாபத்தினால் இருவரும் நிசா சரர்கள் ஆனார்கள். அன்றிலிருந்து அவர்கள் அரக்கர் களாகி கானகத்தில் அலைந்து திரிந்து வந்தார்கள். எல்லா ரிஷிகளையும் அழித்து வந்தார்கள். (வால்மீகி ராமாயணம்)

தப் ரிஷி நிஜ நாத் ஹி ஜியம் சீன்ஹீ |
பித்யாநிதி கஹுஂ பித்யா தீன்ஹீ || 2065
ஜாதே லாக் ந சுதா பிபாஸா |
அதுலித் பல் தனு தேஜ் ப்ரகாஸா || 2066

ப்ரபுவானவர் வித்தைகளின் இருப்பிடம், களஞ் சியம் என்று அறிந்தும் கூட ரிஷி விச்வாமித்ரர் அவ ருடைய அவதார லீலையைப் பூர்த்தி செய்யவே பசி, தாஹம் எடுக்காமல் இருக்கவும், சரீரம் திடமாகவும், இணையற்ற பலமாக இருக்கும்படியும், ஒளி வீசித்

திகழும்படியாகவும் உள்ள மந்த்ரங்களைக் கற்றுக் கொடுத்தார்.

ஆயுத் ஸர்ப் ஸமர்பி கை
ப்ரபு நிஜ ஆச்ரம் ஆனி |
தந்த மூல பல் போஜன்
தீன்ஹ பக்தி ஹித் ஜானி || 2067

எல்லா அஸ்த்ர சாஸ்த்ரங்களையும் ஸமர்ப்பித்து ப்ரபுவான ஸ்ரீ ராமனையும், லக்ஷ்மணனையும் தனது ஆச்ரமம் கூட்டி வந்தார். இந்தக் குமாரர்களைப் பரம ஹிதமானவர் என எண்ணி அன்புடன் கந்த, மூல பழவகைகளையும், உண்ணக் கொடுத்தார்.

ப்ராத் கஹா முனி ஸன் ரகுராயீ |
நிர்பய ஜக்ய கர்ஹு தும்ஹ ஜாயீ || 2068
ஹோம் கரன் லாகே முனி ஜாரீ |
ஆபு ரஹே மக் கீம் ரக்வாரீ || 2069

விடியற் காலத்தில் ப்ரபு ராமச்சந்த்ரன் முனிவரிடம் வந்து, ''முனிவரே! தாங்கள் பயமில்லாமல் யஜ்ஞும் செய்ய ஆரம்பிக்கலாம், என்றார். இதைக் கேட்டதும் முனிவர் கள் ஹோமம் செய்யலானார்கள். பின்பு யஜ்ஞத்திற்குக் காவலாளிகளாக ராம-லக்ஷ்மணர்கள் இருந்தார்கள்.

ஸுனி மாரீச நிஸாசர் க்ரோஹீ |
லை ஸஹாய் தாவா முனித்ரோஹீ || 2070
பினு பர் பான் ராம் தேஹி மாரா |
ஸத் ஜோஜன் கா ஸாகர் பாரா || 2071

முனிவர்களின் எதிரியான மாரீசன் என்பான் ராம-லக்ஷ்மணர்கள் யாக ஸம்ரக்ஷணைக்கு வந்திருக் கிறார்கள் என்பதை அறிந்து மிகக் கோபத்துடன் தனது ஸைன்யங்களுடன் அங்கு ஓடோடி வந்தான்.

ஸ்ரீ ராமச்சந்த்ரன் ஒரே ஒரு பாணத்தினால் அவனை ஸமுத்ரம் தாண்டி நூறு யோசனை தூரத்தில் விழும் படிச் செய்தார்.

பாவக் ஸர் ஸுபாஹு புனி மாரா |
அனுஜ் நிஸாசர் கடகு ஸம்காரா || 2072
மாரி அஸுர் த்விஜ நிர்பயகாரீ |
அஸ்துதி கர்ஹிம் தேவ முனி ஜாரீ || 2073

ப்ரபு, பின்பு ஸுபாஹுவை அக்னி பாணத்தை வீசி வதை செய்தார். லக்ஷ்மணனும் அனேக கடோர மான அரக்கர் படைகளை வதம் செய்தார். ராட்சதர் களை ஒழித்து ப்ராம்மணர்களுக்குப் பயமில்லாமல் யஜ் ஞம் செய்ய உதவிய ஸ்ரீ ராமனைத் தேவர்களும், முனிவர்களும் வாழ்த்தி வணங்கினார்கள்.

தஹம் புனி கசுக் திவஸ் ரகுராயா |
ரஹே கீன்ஹி பிப்ரன்ஹ பர் தாயா || 2074
பக்தி ஹேது பஹு கதா புரானா |
கஹே பிப்ர ஜத்யபி ப்ரபு ஜானா || 2075

ப்ராம்மணர்களைக் காக்க வேண்டிச் சிறிது காலம் ப்ரபுவானவர் அங்குத் தங்கியிருந்தார். ஸ்ரீ ராமன் எல்லாம் அறிந்தவர்தான் என்றாலும், பக்தியினால் ப்ராம்மணர்கள் கூறிய பழைய கதைகளை எல்லாம் கேட்டு அறிந்து கொண்டார்.

தப் முனி ஸாதர் கஹா புஜாயீ |
சரித் ஏக் ப்ரபு தேகிய ஜாயீ || 2076
தனுஷ் ஜக்ய ஸுனி ரகுகுல நாதா |
ஹர்ஷி சலே முனிபர் கே ஸாதா || 2077

பிறகு விச்வாமித்ரர்; ராமனை நோக்கி மரியாதை யுடன் ''ப்ரபுவே! இன்னும் ஓர் அழகிய சரித்ரம் பாருங்கள். நான் அழைத்துப் போகிறேன்''என;ராஜா ஜனகரின் தனுஷ் யஜ்ஞத்தைப் பற்றி விச்வாமித்ரர் மூலம் அறிந்த ரகுநாதன் மிகவும் ஆனந்தமடைந்து ரிஷியுடன் கூட அங்குச் சென்றார்.

ஆச்ரம ஏக் தீக் மக் மாஹீம் |
கக ம்ருக ஜீவ் ஜந்து தஹம் நாஹீம் || 2078
பூசா முனிஹி ஸிலா ப்ரபு தேகீ |
ஸகல கதா முனி கஹா பிஸேஷீ || 2079

நடந்து செல்லும் வழியில் அவர்கள் ஓர் ஆச்ரமத் தைப் பார்த்தார்கள். அங்கு ம்ருகங்கள், பறவைகள் முதலிய ஜீவ ஜந்துக்கள் ஒன்றையும் காணோம். அங்கு வழியில் ஒரு பெரிய பாறையைக் கண்டு ப்ரபுவானவர் விச்வாமித்ரரை நோக்கிக் கேட்டார். அந்த ரிஷி விச் வாமித்ரர் விஸ்தாரமாகக் கதையைச் சொன்னார்.

(ஒரு ஸமயம் ப்ரம்மாவானவர் ஓர் அழகிய பெண் ணாக அஹல்யாவை ஸ்ருஷ்டித்து கௌதம ரிஷியிடம் சீர் போல் கொடுத்தார். இந்த்ராதி தேவர்கள் முதற் கொண்டு எல்லோருமே அஹல்யாவை அடைய இச்சை கொண்டார்கள். ப்ரம்மா சில தினம் யோசித்து மீண் டும் கௌதமரே சரியான வரன் என்று தீர்மானித்து அவருக்கே தன் பெண்ணைக் கொடுத்தார். இருவரும் வாழும் காலத்தில் ஒரு நாள் இந்த்ரனானவன் கௌத மரைப் போல் வேஷம் பூண்டு அவர் இல்லாத ஸமயம் வீட்டில் நுழைந்து அஹல்யாவுடன் போகித்தான். இந்த ஸமயம் முனி கௌதமர் வரவே இந்த்ரன் அவரைப் போலவே வேடம் பூண்டு எதிரில் வந்தான். விஷயம் அறிந்த முனிவர் இனி இது தகாது என்று கூறி இந்த் ரனை நோக்கி ஆயிரம் யோனிக் குறிகள் உண்டாகும் படிச் சபித்தார். பிறகு அஹல்யாவை நோக்கி; நீ கற்பாறையாகி விழுந்து கிடக்க வேண்டும். ஸ்ரீ ராமச் சந்த்ர மூர்த்தி என்று இங்கு வருகிறாரோ; அன்று அவர் கால்பட்ட மாத்ரத்தில் நீ ஸ்வய உருவமடைவாய் என்று சாப விமோசனமும் கூறினார். (அஹல்யாவும் தெரிந்தும், தெரியாதது போல நடந்து இந்த்ரனிடம் உறவு கொண்டதால் சாபத்திற்கு உள்ளானாள் என் கிறார் துளஸீ)

'வால்மீகி எழுதியிருப்பது என்னவென்றால்; அஹல் யாவைக் கௌதம ரிஷி கல்லாகும்படிச் சபித்தார். இந்த்ரனை நபும்ஸகனாகும்படிச் சபித்தார். பிறகு பெரியவர்கள் அவனுக்கு ஓர் ஆட்டின் அண்ட கோஸத்திலிருந்து வைத்யம் செய்து நபும்ஸகத்தைப் போக்கினார்கள் என்கிறார்கள். எப்படியோ ராமா யணத்தில் இந்தக் கௌதம ரிஷியின் சாப விமோசனம் ப்ரபலமாகிவிட்டது.)

கௌதம நாரி ச்ராப் பஸ்
உபல் தேஹ் தரி தீர் |

சரன கமல் ரஜ சாஹ்தி
க்ருபா கர்ஹு ரகுபீர் || 2080

பின் விச்வாமித்ரர் ராமனை நோக்கி; இந்தக் கௌதம முனிவரின் மனைவி அஹல்யை சாபத்தினால் கல்லுருவம் பெற்றாள். ''ஹே ரகுவீர! தங்களுடைய சரண கமலத்தின் தூளுக்காக இந்தக் கல்லான அஹல்யா காத்திருக்கிறாள். தாங்கள் இந்தக் கல்லை அருள் கூர்ந்து சரணத்தினால் தீண்டவும் என்றார்.

பர்ஸத் பத பாவன் ஸோக்
நஸாவன் ப்ரகட் தபபுஞ்ஜ ஸஹீ |
தேகத் ரகுநாயக் ஜன ஸுகதாயக்
ஸன்முக் ஹோயி கர ஜோரி ரஹீ || 2081
அதி ப்ரேம அதீரா புலக் சரீரா
முக் நஹிம் ஆவயி பசன் கஹீ |
அதிஸய பட்பாகீ சரனன்ஹி லாகீ
ஜுகல்நயன் ஜல்தார் பஹீ || 2082

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் பவித்ரத் திருவடித்துகள் பாபத்தை போக்க வல்லது; சோகத்தை நீக்கவல்லது. அப்படிப்பட்ட அவர் சரணகமலம் பட்ட மாத்ரத்தில் தபோமூர்த்தியான அஹல்யை வெளிப்பட்டாள். பக்தர்களுக்கு ஸுகத்தை அளிக்கவல்ல ராமனைக் கண்டதும் அத்யந்த பக்தியினால் கைகூப்பி எதிரில் நின்றாள்; ப்ரேமபர வசையாகி தைர்யமற்றுப் போனாள்; அவளது உடல் புளகாங்கிதம் அடைந்தது. வாயில் வார்த்தைகளோ பேசவும் வெளிப்படவில்லை. அந்தப் பாக்யவதி உடனே ராமனின் சரணங்களில் மீண்டும் வீழ்ந்தாள். அவளது இரு கண்களிலிருந்தும் ஆனந்த ஜலப் ப்ரவாஹம் பெருகியது.

தீரஜு மன் கீன்ஹா ப்ரபு கஹும்
சீன்ஹா ரகுபதி க்ருபாம் பக்தி பாயீ |
அதி நிர்மல் பானீம் அஸ்துதி டானீ
க்யானகம்ய ஜய ரகுராயீ || 2083
மைம் நாரி அபாவன் ப்ரபு ஜக் பாவன்
ராவன் ரிபு ஜன் ஸுகதாயீ |
ராஜீவ் பிலோசன் பவ பய மோசன்
பாஹி பாஹி சரன்ஹிம் ஆயீ || 2084

மனத்தில் தைர்யம் வருவித்துப் பகவானைத் தெரிந்து கொண்டு அவரது க்ருபையால் பக்தியடைந்தாள். பிறகு அதிக உஜ்வலமான, நிர்மலமான குரலுடன் அஹல்யா ஸ்துதி செய்ய ஆரம்பித்தாள். பிறகு ஜ்ஞானத்தால் தங்களை அறிந்து கொள்ளக்கூடிய ஸ்ரீ ராமா! உமக்கு மங்களமுண்டாகட்டும். நான் தூய்மை அற்றவள். தாங்கள் உலகைப் பவித்ரமாக்குபவரும், பக்தர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்க வல்லவரும், ராவண சத்ருவும் தாங்கள்தான். ஹே கமலம் போன்ற கண்களுடையவரே! உலக ஜனன-மரண பயத்தைப் போக்க வல்லவரே! நான் தங்களைத் தஞ்சமென்று வந்து அடைந்து விட்டேன். என்னைக் காப்பாற்றுங்கள்; என்னைக் காப்பாற்றுங்கள்! என்று வருந்தி அழுதாள்.

முனி ச்ராப் ஜோ தீன்ஹா அதி பல்
கீன்ஹா பரம அனுக்ரஹ மைம் மானா |
தேகேவும் பரி லோசன் ஹரி பவ மோசன்
இஹயி லாப் சங்கர் ஜானா || **2085**
பின்தீ ப்ரபு மோரீ மைம் மதி போரீ
நாத் ந மாகவும் பர் ஆனா |
பத கமல் பராகா ரஸ் அனுராகா
மம மன் மதுப் கரை பானா || **2086**

ஹே பகவானே! முனிவர் சாபமளித்தார். அது ரொம்ப நல்லதாக ஆயிற்று. எனக்கு அனுக்ரஹமே கிடைத்தது என எண்ணுகிறேன். ஏனெனில்; உல்க பந்தத்திலிருந்து விடுவிக்கும் தன்மை வாய்ந்த பகவானை நான் நேரில் கண்ணாரக் கண்டேன். தங்களைக் காண்பது எல்லாவற்றையும் விட நன்மையானது என்று சிவனாரே பரம ஸுகத்தை எப்படி அடைகிறாரோ; அப்படிப்பட்ட தங்களை நான் கண்கள் குளிரக் கண்டு ஆனந்தித்தேன்.

ஹே ப்ரபு! வஞ்சகமில்லா அறிவுள்ளவள் நான். என்னுடைய ஒரு விண்ணப்பம் என்னவென்றால், தங்களுடைய சரண கமலத்தில் மனமாகிய வண்டு எப்பொழுதும் ப்ரேமையாகிற ரஸத்தைப் பருகி மொய்த்துக் கொண்டிருக்க வரம் அருள வேண்டும்; வேறேதும் வேண்டேன்!

ஜேஹிம் பத் ஸுரஸரிதா பரம புனீதா
ப்ரகட் பயீ சிவ ஸீஸ் தரீ |
ஸோயீ பத் பங்கஜ் ஜேஹி பூஜத் அஜ
மம ஸிர் தரேவு க்ருபால் ஹரீ || 2087
ஏஹி பாந்தி ஸிதாரீ கௌதம் நாரீ
பார் பார் ஹரி சரண் பரீ |
ஜோ அதி மன் பாவா ஸோ பரு பாவா
கை பதிலோக் அனந்த பரீ || 2088

எந்தத்திருவடிக் கமலத்தின் மஹிமையால் கங்கை யானவள் வெளிப்பட்டுச் சிவனால் அதைச் சிரத்தில் ஏற்றுக் கொண்டாரோ; எப்படிப்பட்ட சரண கமலத்தை, ப்ரம்மா எப்போதும் பூஜித்து வணங்கி வருகிறாரோ; அப்படிப்பட்ட தயாஸாகரரான ஸ்ரீராமச் சந்த்ரன் அவைகளை என் தலைமீது வைத்தான் என இவ்வாறு துதித்து, கால்களில் அஹல்யா மீண்டும் மீண்டும் வீழ்ந்து வணங்கி, மனத்தில் ஸந்தோஷம் கொண்டு ஆனந்தத்தில் திளைத்து, அவள் பதி உலகம் சென்றாள்.

(எப்போது பகவான் பலிச்சக்ரவர்த்தியை ஏமாற்றி இரண்டாவது பாதத்தை ப்ரம்ம லோகத்தில் வைத்தாரோ; அப்போது ப்ரம்மன் விரஜா நதியின் தீர்த்தத்தினால் பகவானுடைய பாதங்களைக் கழுவினார். அதே ஜலமானது கங்கை ரூபம் கொண்டது என்பது புராணம்)

அஸ் ப்ரபு தீனபந்து ஹரி
காரன் ரஹித் தயால் |
துளஸிதாஸ் ஸட் தேஹி பஜு
சாடி கபட் ஜஞ்ஜால் || 2089

ப்ரபு ஸ்ரீராமன் எளியவர்க் கிரங்குபவன். காரணம் இல்லாமலேயே அருள்புரிபவன்.

ஆகவே; துளஸீதாஸர் - 'ஹே மனமே! நீ வஞ்சனைகளை விட்டு அந்த ராமனையே இரவும் - பகலும் வழிபடுவாயாக' என்கிறார்.

சலே ராம லசிமன் முனி ஸங்கா |
கயே ஜஹாம் ஜக் பாவனி கங்கா || 2090

☆ காதி ஸுனு ஸப் கதா ஸுநாயீ |
ஜேஹி ப்ரகார் ஸுரஸரி மஹி ஆயீ || 2091

ஸ்ரீராமனும் - லக்ஷ்மணனும் முனிவருடன் உலகைத் தூய்மையாக்கும் கங்கை இருக்குமிடம் சென்றனர்.

அதாவது; தேவ நதியான கங்கையானது எவ்விதம் பூமிக்கு வந்தது என்பதைச் காதி மன்னரின் புதல் வரான விச்வாமித்ரர் விளக்கமாகக் கூறினார்.

தப் ப்ரபு ரிஷின்ஹ ஸமேத் நஹாயே |
பிபித் தான் மஹிதேவன்ஹி பாயே || 2092
ஹர்ஷி சலே முனி ப்ருந்த ஸஹாயா |
பேகி பிதேஹ் நகர் நிஅராயா || 2093

ஸ்ரீராமச்சந்த்ரமூர்த்தி ரிஷிகளோடு கூடவே அந்தக் கங்கை நதியில் ஸ்னானம் செய்தார். ப்ராம்மணர்கள் பலவிதமான தானங்களைப் பெற்றார்கள்.

பிறகு ஸ்ரீராமன் மனத்தில் ஆனந்தம் கொண்டு முனிவர் கூட்டத்துடன் சென்றார்; சீக்கிரமாகவே ஜனகபுரி நகரம் வந்தடைந்தார்.

புர் ரம்யதா ராம் ஜப் தேகீ |
ஹர்ஷே அனுஜ் ஸமேத் பிஸேஷீ || 2094
பாபீம் கூப் ஸரித் ஸர் நாநா |
ஸலில் ஸுதாஸம் மணி ஸோபானா || 2095

ஸ்ரீராமச்சந்த்ரமூர்த்தி ஜனக புரியின் அழகைக் கண்டதும், ஸஹோதரன் லக்ஷ்மணருடன் ப்ரம்மானந்த மடைந்தார்.

அங்கே விலையுயர்ந்த ரத்தினங்களாலும், மணி களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த கரைகளையும், அம்ரு தத்திற்கு ஸமமான ஜலத்தையும் கொண்ட சிறுசிறு நீரோடைகளும், கிணறுகளும், குளங்களும், நதிகளும் இருந்தன.

குஞ்ஜத் மஞ்ஜு மத்த ரஸ ப்ருங்கா |
கூஜத் கல் பஹுபரன் பிஹங்கா || 2096

பர்ன பர்ன பிகஸே பன்ஜாதா |
த்ரிபித் ஸமீர் ஸதா ஸுகதாதா || 2097

மேலும், ரஸத்தை உண்டு மயங்கிய வண்டினங்கள் மெய்ம்மறந்து அழகாக ரீங்காரமிட்டன. பல வண்ண நிறங்களைக் கொண்ட பறவை இனங்கள் மதுரகீதம் இசைத்தன. கண்கவர் வண்ணங்களைக் கொண்ட தாமரை மலர்கள் மலர்ந்திருந்தன. எப்பொழுதும் ஸுகத்தைத் தரக்கூடிய குளிர்ந்த, மணமுள்ள, மந்த மாருதம் வீசியது.

ஸுமன பாடிகா பாக் பன்
பிபுல் பிஹங்க நிவாஸ் |
பூலத் பலத் ஸுபல்லவத்
ஸோஹத் புர சஹும் பாஸ் || 2098

மேலும், நகரத்தின் நாலாபுறமும் புஷ்பங்களைக் கொண்ட பூந்தோட்டங்கள், காடுகள் அமைக்கப்பட் டிருக்கின்றன. பழங்களும், புஷ்பங்களும் அழகிய இலைகளும் நிறைந்த மரங்கள், கொடிகள் சூழ்ந்து விளங்கின. அவைகளில் பலவகைப் பறவைகள் வாஸம் செய்தன.

பனயி ந பர்னத் நகர் நிகாயீ |
ஜஹாம் ஜாயி மன் தஹம் இம் லோபாயீ || 2099
சாரு பஜாரு பிசித்ர அம்பாரீ |
மணிமய பிதி ஜனு ஸ்வகர் ஸம்வாரீ || 2100

நகரத்தின் அழகை வர்ணிக்க இயலாது. எந்தப் பக்கம் எங்கு போனாலும் எல்லோரும் மயங்கி விடு கிறார்கள். அழகழகான கடைகளும், வீதிகளும் மிகவும் ஆகர்ஷணமாக இருந்தன. மணிகளால் இழைக்கப்பட்ட விசித்ரமான பால்கனிகள் காட்சியளித்தன. அவை களைப் பகவான் ப்ரம்மாவே தனது கரங்களினால் உருவாக்கினாரோ என்று சொல்லும்படியாக இருந்தது.

தனிக் பனிக் பர் தனத் ஸமானா |
பைடே ஸகல பஸ்து லை நானா || 2101
சௌஹட் ஸுந்தர கலீம் ஸுஹாயீ |
ஸந்தத் ரஹஹிம் ஸுகந்த ஸிஞ்சாயீ || 2102

குபேரனைப் போன்ற சிறந்த செல்வ வணிகர்கள் பலவகைப் பொருள்களை வாங்கிக் கடையிலிருந்து வியாபாரம் செய்தார்கள்.

அழகிய நாற்சந்திகளும், கடைத் தெருக்களும், நேர்த்தியான ஸந்துகளும் எங்கும் செல்வம் நிறைந்து காணப்பட்டன. மேலும், எல்லா இடங்களிலும் வாஸனைத்ரவ்யங்களைத் தெளித்து விட்டதுபோல மணம் கமழ்ந்து கொண்டு இருந்தது. (நகரத்தின் சோபை சொல்லி லடங்காது.)

மங்கலமய மந்திர் ஸப் கேரேம் |
சித்ரித் ஜனு ரதிநாத் சிதேரேம் || 2103
புர் நர் நாரி ஸுபக் ஸுசி ஸந்தா |
தர்மஸீல் க்யானீ குனவந்தா || 2104

மேலும், எல்லார் வீடுகளும் மங்களகரமாக இருந்தன. அவைகளில் சித்ரங்கள் வரையப்பட்டு விளங்கின. ஒருக்கால் காமதேவனே இந்த நகரம் வந்து தன் கையினால் சித்ரம் எழுதியுள்ளானோ என்னும்படி அமைந்திருந்தது. நகரவாஸிகளான ஸ்த்ரீகளும், ஆண்களும், அழகும், தூய்மையும், அடக்கமும், அன்பும் கொண்டவர்களாகவும் இருந்தார்கள். தர்ம சீலர்களாகவும், நல்ல ஜ்ஞானிகளாகவும், நல்ல குணம் உள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

அதி அனூப் ஜஹம் ஜனக் நிவாஸூ |
பிதக்ஹிம் பிபுத் பிலோகி பிலாஸூ || 2105
ஹோத சகித் சித கோட் பிலோகீ |
ஸ்கல புவன் ஸோபா ஜனு ரோகீ || 2106

மேலும், அங்கு ஈடிணையற்று அழகுற விளங்கும் ஜனக மன்னருடைய மாளிகையிருந்தது. அந்த அரண்மனையில் உள்ள ஐச்வர்யங்களையும், போக விலாஸங்களையும் கண்டு, தேவர்களும் அதிசயிக்கும்படி இருந்தது என்றால், மனிதர்களைப் பற்றிச் சொல்லவா வேண்டும்? அரசமாளிகையின் கோட்டைச் சுவர்களைக் கண்டு மனம் திகைத்துவிடும். அதாவது; உலகின் அழகையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து ஒரே இடத்தில் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறதோ என்பது போல் இருந்தது.

தவள தாம் மனி புரட் பட்
ஸுகடித் நாநா பாந்தி |
ஸிய நிவாஸ் ஸுந்தர ஸதன
ஸோபா கிமி கஹி ஜாதி || 2107

மேலும், பளபளக்கும் அந்த அரண்மனையில் பல அழகான வரிசைகளில் தங்கத்தினால் ஆன ஜரிகைப் படுதாக்கள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. அந்தப் பட்டிகளில் விலையுயர்ந்த மணிகளும், கற்களும் பதிக்கப்பட்டு இருந்தன. ஸீதாதேவி வஸிக்கும் அழகுமஹலின் சோபையை யாரால்தான் வர்ணிக்க முடியும்?

ஸுபக த்வார் ஸப் குலிஸ் கபாடா |
பூப் பீர் நட் மாகத் பாடா || 2108
பனீ பிஸால் பாஜீ கஜ ஸாலா |
ஹய கய ரத் ஸங்குல ஸப் காலா || 2109

அரச மஹலின் பெரிய தோரண வாயில்கள் அழகாக விளங்கின. மேலும், அவைகளில் வஜ்ரம், வைரங்களால் இழைக்கப்பட்ட வலிமை பொருந்திய கதவுகள் பளபளத்தன. அங்கே, பணியாளர்களும், அரசர்களும், நடிகர்களும், நடனம் ஆடுபவர்களும், மாகதர்களும், அரசரைப் போற்றிப் பாடுபவர்களுமாக அநேக விதக் கலைஞர்கள் எந்நேரமும் கூடி இருந்தார்கள்.

குதிரைகள் கட்டவும், யானைகளைக் கட்டி வைக்கவும் மிகவும் ப்ரம்மாண்டமான குதிரை லாயங்களும், கஜசாலைகளும் ஒதுக்கப்பட்டு இருந்தன. யானைகளும், குதிரைகளும், பூட்டிய ரதங்களும் எந்நேரமும் காத்துக் கொண்டு இருந்தன.

ஸூர் ஸசிவ் ஸேனப் பஹுதேரே |
ந்ருப க்ருஹ ஸரிஸ் ஸதன ஸப் கேரே || 2110
புர பாஹேர் ஸர் ஸரித ஸமீபா |
உதரே ஜஹம் தஹம் பிபுல மஹீபா || 2111

பல வீரசூரர்களும், மந்த்ரிமார்களும், ஸேனாதிபதிகளும் நிறைந்து இருந்தார்கள். அவர்களுடைய வீடுகளும் ராஜாவின் அரண்மனை போலவே இருந்தன.

நகரத்தின் வெளியே குளங்களும், நதிகளும் இருந்தன. அவைகளின் அருகே அரசரைச் சார்ந்தவர்கள் தங்கி யிருந்தார்கள்.

தேகி அநூப் ஏக் அம்வராயீ |
ஸப் ஸுபாஸ் ஸப் பாந்தி ஸுஹாயீ || 2112
கௌஸிக் கஹேஉ மோர்மனு மானா |
இஹாம் ரஹிய ரகுபீர் ஏ ஜானா || 2113

மேலும், ஓர் அழகிய வஸதி நிறைந்த மாந்தோப் பைக் கண்ட விச்வாமித்ர முனிவர் ராமனை நோக்கி ''ரகுவரா! இந்த இடம் மிகவும் அழகாகவும், குளிர்ச்சி யாகவும் இருக்கிறது. இளைப்பாறுவதற்குச் சிறந்து விளங்குகிறது. ஆகவே, என் மனம் இங்கே சற்றுத் தங்க நினைக்கிறது. நாம் இங்குத் தங்கி களைப்பாற லாம்'' என்றார்.

பலேஹிம் நாத் கஹி க்ருபாநிகேதா |
உதரே தஹம் முனிப்ருந்த ஸமேதா || 2114
பிஸ்வாமித்ர மஹாமுனி ஆயே |
ஸமாசார் மிதிலாபதி பாயே || 2115

கருணைநிதியான ஸ்ரீ ராமச்சந்த்ரன் முனிவரின் வார்த்தையைக் கேட்ட மாத்ரத்தில் 'மிகவும் நல்லது ஸ்வாமி!' என்று ஆமோதித்து, அங்கேயே குருவின் ஆஜ்ஞைக்கு இணங்கி மற்ற முனிவர்களுடன் ஓய் வெடுக்க முடிவெடுத்தார். மஹாமுனி விச்வாமித்ரர் வந்திருக்கிறார் என்ற செய்தி உடனே ஜனக ராஜனுக் குத் தெரியவந்தது.

ஸங்க ஸசிவ் ஸுசி பூரி பட
பூஸுர பர் குர் க்யாதி |
சலே மிலன் முனிநாயக்ஹி
முதித் ராவு ஏஹி பாந்தி || 2116

அப்பொழுது அவர் நேர்மையும், யஜமான பக்தி யும் கொண்ட மந்த்ரிகளையும், பல போர் வீரர்களை யும், உத்தமமான ப்ராம்மணர்களையும், குருவான ஸதானந்தரையும், இனத்தாரில் சிறந்தவர்களையும்

கூட அழைத்துக் கொண்டு, ராஜா ஜனகர், மகிழ்வுடன் முனிவர்களின் நாயகரான விச்வாமித்ரரை எதிர் கொண் டழைக்க, ஸந்திக்க வந்தார்.

கீன்ஹ ப்ரநாமு சரன் தரி மாதா ।
தீன்ஹி அஸீஸ் முதித் முனிநாதா ॥ 2117
பிப்ரப்ருந்த ஸப் ஸாதர் பந்தே ।
ஜானி பாக்ய பட் ராவு அனந்தே ॥ 2118

முனிவரின் திருவடிகளில் தலைவைத்து ராஜா ஜன கர் வணங்கினார். முனி விச்வாமித்ரரும் மிக மகிழ்ச்சி யடைந்து ஆசீர்வாதம் செய்தார்.

ராஜா கூட வந்திருக்கும் எல்லா ப்ராம்மணர் களுக்கும் தலை வணங்கி நமஸ்கரித்தார். முனிவர்கள் வந்தது தனது பெரும் பாக்யம் என்று கருதி ராஜா அகமகிழ்ந்தார்.

குஸல் ப்ரஸ்ன கஹி பார்ஹிம் பாரா ।
பிஸ்வாமித்ர ந்ருபஹி பைடாரா ॥ 2119
தேஹி அவஸர் ஆயே தோவு பாயீ ।
கயே ரஹே தேகன் புல்வாயீ ॥ 2120

அடிக்கடி குசல ப்ரச்னங்கள் செய்துகொண்டே முனிவர் விச்வாமித்ரர் ஜனக ராஜாவை உட்கார வைத்தார்.

அதே ஸமயம் அருகில் உள்ள நந்தவனம் பார்க்கச் சென்றிருந்த ராமனும், லக்ஷ்மணனும் அங்கு வந்தார்கள்.

ஸ்யாம் கௌர் ம்ருது பயஸ் கிஸோரா ।
லோசன் ஸுகத் பிஸ்வ சித் சோரா ॥ 2121
உடே ஸகல் ஜப் ரகுபதி ஆயே ।
பிஸ்வாமித்ர நிகட் பைடாயே ॥ 2122

மேக வர்ணமும், வெண்மை நிறமும் கொண்ட அந்த அழகிய பாலப்பருவத்தில் உள்ள, கண்களுக்கு ஸுகத்தைத் தரக்கூடிய உள்ளங்களைக் கவரும் தன்மை யுள்ள ராம லக்ஷ் மணர்கள் அங்கு வந்தார்கள். ஸ்ரீ ராமச்சந்த்ரன் வந்ததும், அவரது உருவத்தினாலும்,

தேஜஸ்ஸாலும் கவரப்பட்டவர்களாக அவரைக் கண்ட வுடன் எல்லோரும் எழுந்து நின்றார்கள். விச்வாமித் தரரோ அவர்களைத் தம் அருகில் உட்கார்த்திக் கொண் டார்.

பயே ஸப் ஸுகீ தேகி தோவு ப்ராதா |
பாரி பிலோசன் புலகித் காதா || 2123
மூர்தி மதுர மனோஹர் தேகீ |
பயவு பிதேஹு பிதேஹு பிஸேஷீ || 2124

இரு ஸஹோதரர்களையும் கண்ட மக்கள் பரமஸுகம் அடைந்தார்கள். எல்லோருடைய கண்களிலும் ஆனந் தக் கண்ணீர் பெருகியது; உடல் புளகாங்கிதம் அடைந் தது. ஸ்ரீ ராமச்சந்த்ரனின் மனோஹரமான மூர்த்தி யைக் கண்ட விதேஹ ராஜா நிஜமாகவே தேஹப்ரஜ்ஞை இல்லாதவர் போல் ப்ரமிப்படைந்தார். (அதாவது, உண்மை தேஹி இப்பொழுதுதான் ஆனார் என்கிறார் துளஸீ).

ப்ரேம மக்ன மனு ஜானி
ந்ருபு கரி பிபேகு தரி தீர் |
போலேவு முனி பத் நாயி
ஸிரு கத்கத் கிரா கபீர் || 2125

ப்ரேமையினால் சிறிது நேரம் ஜனகர் மதி மயங்கிப் போனார். பின்னும் சமாளித்துக் கொண்டு முனிவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கித் தொண்டை தழுதழுக்க;

கஹஹு நாத் ஸுந்தர தோவு பாலக் |
முனிகுல திலக் கி ந்ருப குல பாலக் || 2126
ப்ரஹ்ம ஜோ நிகம் நேதி கஹி காவா |
உபய பேஷ தரி கீ ஸோயி ஆவா || 2127

''ஹே முனி ச்ரேஷ்டரே! கூறுங்கள்! ஸ்வாமி! இந்த இரு அழகிய பாலகர்கள் முனி குலத்தை அலங்கரிக்க உதித்தவர்களா? அல்லது; ராஜாவின் வம்சத்தை ரட் சிக்க வந்தவர்களா? வேதங்களில் 'பகவானை இல்லை' என்று கூறிக் கானம் செய்வது போல, உள்ள அதே பரப்ரம்மம்தானே இவர்கள் இருவரும்? மாறு வேடம் பூண்டு பூமியில் தோன்றினார்களா?

ஸஹஜ் பிராகரூப் மனு மோரா |
தகித் ஹோத் ஜிமி சந்த் சகோரா || 2128
தாதே ப்ரபு பூசவும் ஸதிபாவூ |
கஹஹு நாத் ஜனி கர்ஹு துராவூ || 2129

ஸ்பாவமாகவே வைராக்ய மனம் உள்ள நானே இவர்களைக் கண்டதும் மதிமயங்கி, சந்த்ரனைக் கண்ட சகோரப் பட்சி போல் ஸ்தம்பித்து விட்டேனே! ஹே ப்ரபுவே! இம்மாதிரி ஏன் ஏற்படுகிறது? ஸ்வாமி! நான் உண்மையாகவே தங்களைக் கேட்கிறேன்; ஒளிக்காமல் கூறுங்கள்; இவர்கள் யார்?

இன்ஹஹி பிலோகத் அதி அனுராகா !
பர்பஸ் ப்ரஹ்ம ஸுக்ஹி மன் த்யாகா || 2130
கஹ் முனி பிஹஸி கஹேஹு நிருப நீகா |
பசன தும்ஹார் ந ஹோயி அலீகா || 2131

இவர்களைத் தரிசித்ததில் இம்மாதிரியான ஓர் அன்பும், அனுராகமும் உண்டாகி ப்ரம்ம ஸுகத்தைக் கூட நான் த்யாகம் செய்யவும் தயாராகி விட்டேன்'' என்றார் ஜனகர் கம்பீரக் குரலில்.

அதற்கு விச்வாமித்ரர் சிரித்துக் கொண்டே, ''ராஜனே! நீர் சரியான வார்த்தை கூறினீர்; நீர்கூறிய வார்த்தை களிலும் பொய் இருக்க முடியாது.

ஏ ப்ரிய ஸப்ஹி ஜஹாம் லகி ப்ரானீ |
மன் முஸுகாஹிம் ராமு ஸுனி பானீ || 2132
ரகுகுல மனி தசரத் கே ஜாயே |
மம ஹித லாகி நரேஸ் படாயே || 2133

உலகில் உள்ள ப்ராணி உள்பட எல்லா ஜந்துக் களுக்கும், மக்களுக்கும் இவர்கள் ப்ரியமானவர்கள். முனிவரின் இந்த ரஹஸ்யச் சொற்களைக் கேட்டு ஸ்ரீராமன் உள்ளத்திலேயே நகைத்துக் கொண்டார். அப்பொழுது முனிவர் - இந்த ரகுகுல மணியான ராமனும், லக்ஷ்மணனும் மஹாராஜா தசரதரின் புத்ரர் கள். என்னுடைய நலன் காரணமாக இவர்களை ராஜா என்னுடன் அனுப்பியிருக்கிறார். இதைக் கேட்ட

ராமன் புன்னகை செய்தார். ஏனெனில்; ஜனகர் கேட்ட கேள்வி இவர்கள் ப்ரம்மாவின் அவதாரமா? என்றால் அதற்கு முனிவர் நீர் கூறுவதில் உண்மை இருக்கிறது. அதாவது; பகவானின் அவதாரத்தின் மஹிமையைச் சொல்லாமல் சொல்லுகிறார் முனிவர். ஆகவே, எல்லாம் அறிந்த ராமன் புன்முறுவல் செய் தார் என்கிறார் துளஸீ)

ராமு லகனு தோவு பந்துபர்
ரூப் ஸீல் பல தாம் |
மக ராகேவு ஸபு ஸாகி ஜகு
ஜீதே அஸுர ஸங்க்ராம் || **2134**

இந்த ராமன், லக்ஷ்மணன் என்ற இரு ஸஹோதர் களும் ரூபம், குணத்தில் மட்டுமல்ல; ப்ரமாதமான பலமும் பொருந்தியவர்கள். ஏனெனில்; பெரிய பெரிய அரக்கர்களை அழித்து எனது யாகத்திற்கு ரக்ஷணை செய்தார்கள்; இதற்கு இவ்வுலகமே சாட்சி என்றார். (என்னவென்றால்; இவர்கள் ஸாதாரண மனிதப் பிறப்பு இல்லை. ஜகத்தையே ரக்ஷிப்பவர்கள் என்பது கருத்து) பிறகு;

முனி தவ சரன் தேகி கஹ் ராவு |
கஹி ந ஸகவும் நிஜ புன்ய ப்ரபாவு || **2135**
ஸுந்தர் ஸ்யாம கௌர் தோவு ப்ராதா |
ஆனந்தஹு கே ஆனந்த் தாதா || **2136**

ராஜா ஜனகர்; ஹே முனிச்ரேஷ்டரே! தங்கள் பாதங்களைத் தரிசித்து என்னுடைய புண்யத்தின் ப்ரபாவத்தை இப்போதுதான் அறிந்தேன். ஸுந்தர மான ச்யாமள சரீரமும், அழகான வெண்மை நிறமும் கொண்டவர்களுமான இந்த இரு ஸஹோதரர்களும் ஆனந்தத்திற்கும் ஆனந்தமான ஒன்றைக் கொடுப்பவர் கள் என்பதையும் நான் அறிந்தேன் என்றார்.

இன்ஹ கை ப்ரீதி பரஸ்பர் பாவனி |
கஹி ந ஜாயி மன் பாவ் ஸுஹாவனி || **2137**
ஸுனஹு நாத் கஹ முதித் பிதேஹு |
ப்ரஹ்ம ஜீவ் இவ ஸஹஜ் ஸநேஹு || **2138**

அரசே! இவர்களுடைய அன்பானது சுத்தமானது; அழகானது; மனத்தை ஆட்கொள்வது; அது வார்த்தை களால் விவரிக்க முடியாதது என்றார் விச்வாமித்ரர். இதைக் கேட்ட அரசன் ஜனகர் மகிழ்ந்து; நாதரே! கேளுங்கள், ப்ரம்மத்திற்கும் ஜீவன்களுக்குமிருப்பது போல இவர்களிடத்தில் இயல்பான அன்பு இருக்கிறது என்றார்.

புனி புனி ப்ரபுஹி சிதவ நர்நாஹூ ।
புலக காத் உர் அதிக் உசாஹூ ॥ 2139
முனிஹி ப்ரஸம்ஸி நாயி பத ஸீஸூ ।
சலேவு லவாயி நகர அவநீஸூ ॥ 2140

திரும்பத் திரும்ப ராஜா ஜனகருக்கு ஸ்ரீ ராமச் சந்த்ரனைப் பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றி யது. அங்கிருந்து அவர் தமது பார்வையை அகற்ற விரும்பவில்லை. மனத்தின் உற்சாகத்தினால் சரீரம் புளகாங்கிதமும் அடைந்தது. முனிவரை மேலும் மேலும் புகழ்ந்த பின் அவர் பாதங்களை வணங்கி, ராம லக்ஷ்மணர் ஸஹிதம், விச்வாமித்ரர், முனிவர்கள் கூட் டத்துடன் ராஜா தனது நகரத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஸுந்தர் ஸதனு ஸுகத ஸப் காலா ।
தஹாம் பாஸு லை தீன்ஹ புவாலா ॥ 2141
கரி பூஜா ஸப் பிதி ஸேவகாயீ ।
கயவு ராவு க்ருஹ பிதா கராயீ ॥ 2142

மேலும், எல்லாப் பருவத்திலும் ஸுகத்தைத் தர வல்ல ஓர் அழகு மாளிகைக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு இருப்பிடம் அமைத்துக் கொடுத்தார். மேலும், அவர்களுக்குத் தேவையான பணிகளையும் செய்து, வழிபட்டு ராஜா ஜனகர் விடைபெற்றுத் தன் இருப்பிடம் சென்றார்.

ரிஷய ஸங்க ரகுபம்ஸ மனி
கரி போஜனு பிச்ராமு ।
பைடே ப்ரபு ப்ராதா ஸஹித்
திவஸு ரஹா பரி ஜாமு ॥ 2143

ஸ்ரீ ரகு வம்ச மணியான ராமன் ரிஷிகளுடன் உட்கார்ந்து போஜனம் சாப்பிட்டு, ஓய்வு எடுத்து

லக்ஷ்மணனுடன் அமர்ந்தார். அப்பொழுது 3 மணி நேரமே பகல் இருந்தது.

லகன் ஹ்ருதயம் லாலஸா பிஸேஷீ |
ஜாயி ஜனக் புர்ஆயிய தேகீ || 2144
ப்ரபு பய பஹுரி முனிஹி ஸகுசாஹீம் |
ப்ரகட் ந கஹஹிம் மனஹிம் முஸுகாஹீம் ||2145

எப்படியாவது ஜனகபுரியைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று லக்ஷ்மணன் ஹிருதயத்தில் மிகவும் ஆசையிருந்தது. ஸ்ரீராமனுக்கும் சுற்றிப் பார்த்து வர ஆவல் என்பதைத் தெரிந்து கொண்டார் லக்ஷ்மணன். ஆனால், கூடவே பயமும் இருந்தது. இதை முனிவரி டம் சொல்ல ஸ்ரீராமன் வெட்கப்பட்டார். ஆகவே, வெளிப்படையில் கூறவும் முடியாமல் தானே மனத் திற்குள் சிரித்துக் கொள்கிறார்.

ராம் அனுஜ மன் கீ கதி ஜானீ |
பக்த பசல்தா ஹியம் ஹுலஸானீ || 2146
பரம பிநீத் ஸகுசி முஸுகாயீ |
போலே குர் அனுஸாஸன் பாயீ || 2147

ஸ்ரீ ராமச்சந்த்ரன் ஸஹோதரனான லக்ஷ்மணனுடைய மனத்தை அறிந்து கொண்டார். பக்தர்களுக்கு அருள வேண்டுமென்ற வாத்ஸல்யம் பொங்கியது; இது பரந் தாமனுக்கு ஏற்படுவது இயற்கையே. (மற்றொரு அர்த் தத்தில் மிதிலாபுரி வாஸிகளான பக்தர்கள் எனப்படும் கன்றுகள், ராமன் என்னும் பரம்பொருளைப் பசுவைப் போல் கட்டி இழுக்கின்றனர். அதாவது; அந்நகர பக்தர்களுக்கும் க்ருபை செய்ய ராமன் கிளம்பி விட் டார் என்பது பொருள்) குருவினுடைய ஆணையைப் பெற்று, அடக்கமும், நாணமும் கொண்டு, புன்னகைத்த வண்ணம் - சொல்லலானார்.

நாத் லகனு புரு தேகன் சஹஹீம் |
ப்ரபு ஸகோச் டர் ப்ரகட் ந கஹஹீம் || 2148
ஜெளம் ராவுர் ஆயஸு மைம் பாவெளம் |
நகர் தேகாயி துரத் லை ஆவெளம் || 2149

ஏ ஸ்வாமியே! தம்பி லக்ஷ்மணன் நகரத்தைச் சுற்றிப் பார்க்க விரும்புகிறான். ஆனால்; ஸ்வாமியிடம் உள்ள பயத்தினாலும், நாணத்தினாலும் தெளிவாகக் கூற அவனால் முடியவில்லை.

ஒருக்கால் தங்களுடைய அனுமதி கிடைத்தால்; நான் அவனுக்கு நகரத்தைச் சுற்றிக் காட்டிச் சீக்ரம் திரும்பி வருவேன் என்றார்.

ஸுனி முனீஸு கஹ பசன் ஸப்ரீதீ |
கஸ் ந ராம் தும்ஹ ராக்ஹு நீதீ || 2150
தர்ம ஸேது பாலக் தும்ஹ தாதா |
ப்ரேம் பிபஸ் ஸேவக் ஸுக் தாதா || 2151

ராமனின் வார்த்தையைக் கேட்டு, சற்றுப் பிரிந்தாலும் தாள முடியாத துயரத்தில் மூழ்கும் முனிவர் ராமனை மீண்டும் நோக்கி அன்புடன் உள்ளம் நெகிழ, அப்பா! ''நீ ஆஜ்ஞை இடு என்று கேட்டால்; நான் கொடுக்காமல் இருப்பது நீதி இல்லை. நீயோ நீதி முறையைக் காப்பாற்றுகிறவன்; தர்மத்தின் நியமத்தைக் காப்பவன். ப்ரேமையின் காரணமாக எல்லா உயிர்களுக்கும் ஸுகம் அளிக்க வல்லவன். (அப்படிப்பட்ட நீ லக்ஷ்மணருக்கு ஸுகம் அளிக்க என்னிடம் ஆஜ்ஞை கேட்கிறாய். இது தகுமோ?)

ஜாயி தேகி ஆவஹு நகரு
ஸுக நிதான் தோவு பாயி |
கர்ஹு ஸுபல் ஸப்கே நயன்
ஸுந்தர பதன் தேகாயி || 2152

ஸுகத்தின் இருப்பிடமான நீங்கள் இரு ஸஹோதரர்களும் போய் நகரத்தைப் பார்த்து வாருங்கள். உங்களது அழகிய முகாரவிந்தத்தைக் காட்டி, நகர வாஸிகளின் எல்லோருடைய கண்களுக்கும் நன்மை செய்து வாருங்கள்.

(மிதிலா நகர வாஸிகளுக்காக ராமன் ஸுக நிதானம் போன்றவர். ஏனெனில்; அங்குள்ள சிவதனுஸை உடைத்து மைதிலியை மணக்கப் போகிறார் அல்லவா? ஊர்மிளாவும் அதே மாதிரி காத்திருக்கிறாள். ஆகவே,

இந்த நகர வாஸிகளுக்கு இவர்கள் ஸுகத்தின் இருப் பிடம் எனப்படுவர். அவர்கள் ஸுகத்திற்காக வேண் டியே ராமன் மிதிலை வருகிறார் என்பது பொருள்.)

முனிபத கமல பந்தி தோவு ப்ராதா |
சலே லோக் லோசன் ஸுக் தாதா || 2153
பாலக் ப்ருந்த தேகி அதி ஸோபா |
லகே ஸங்க் லோசன் மனு லோபா || 2154

எல்லோருடைய கண்களுக்கும் ஸுகமளிக்கும் இரு ஸஹோதரர்களும் ஊர் சுற்றிவரக் கிளம்பினார்கள்.

இவர்களின் அழகைக் கண்டு பாலகர்களும் கூட்ட மாக வந்து சேர்ந்து கொண்டார்கள். அவர்களது கண்களையும், மனத்தையும் கவர்ந்தனர். (எல்லோரும் ராமனுடைய கண்களின் ஸிருங்காரத்தைக் கண்டு மயங் கியும், அவர்களின் வார்த்தைகளைக் கேட்டு ரஸிக்கவும் இச்சை சொண்டு பின்னால் சென்றார்கள்.)

பீத பஸன பரிகர் கடி பாதா |
சாரு சாப ஸர் ஸோஹத் ஹாதா || 2155
தன் அனுஹரத் ஸுசந்தன் கோரீ |
ஸ்யாமள கௌர் மனோஹர் ஜோரீ || 2156

இரு ஸஹோதரர்களும் பீதாம்பரத்தைத் தரித்திருந் தார்கள். இடுப்பில் மஞ்சள் நிறத் துப்பட்டாவைக் கட்டியிருந்தார்கள். கைகளில் அழகான வில் - அம்பு களை ஏந்தி விளங்கினர். கருமை- வெண்மை என்ற நிறங்களைக் கொண்ட சரீரத்திற்கு ஏற்றவாறு அழகிய சந்தனத்திலகம் இட்டுக் கொண்டிருந்தனர். இவர்கள் கருமையும்-வெண்மையும் கலந்த மனோஹரமான ஜோடி கள்தான். (என்று கவி இவர்களது இடுப்பிலிருந்து தொடங்கிப் பாதம்வரை வர்ணிக்கிறார்)

கேஹரி கந்தர் பாஹு பிஸாலா |
உர் அதி ருசிர் நாகமனி மாலா || 2157
ஸுபக் ஸோன் ஸரஸீருஹ் லோசன் |
பதன் மயங்க் தாபத்ரய மோசன் || 2158

சிங்கத்தைப் போன்று புஷ்டியான கழுத்துப்புடனி யும்; நீண்ட, அழகான, அகன்ற கைகளும்; அதிக சோபையை அளிக்கின்றன. மார்பில் மிக அழகிய யானைமுத்து மணிமாலையும், செந்தாமரை போன்ற அழகுக் கண்களும், மூவகைத் தாபங்களிலிருந்து (அக்னி) விடுபட்ட சந்த்ரனைப் போன்ற முகமும், (மூன்றுவிதத் தாபங்களையும் விலக்கக் கூடிய அம்சங்கள். அதாவது;

தைஹிகம், 2. தைவிகம், 3. பௌதிகம் என்பன.

ராஜா ஜனகருடைய உத்வேக தாபம் தைஹிகம் என்பது,

பரசுராமனுடைய வருகை தைவிகத் தாபம் என்பது.

எல்லா ராஜாக்களும் வில்லை உடைக்க ஒன்று சேருவதும், யுத்தத்திற்கு ஆய்வுகளைச் செய்வதும் பௌதீகத் தாபம் என்பதாகும்.

இந்த மூன்று விதத் தாபங்களையும் அழிக்க வல்ல ஸுந்தரமான முகம் படைத்தவர் ராமர் என்கிறார் கவி.)

(அந்த ராம ஸௌந்தர்யம் என்னால் அறிந்து செல்லப் போமோ என்று சொல்கிறார் அருணாசலக் கவிராயர்)

கானன்ஹி கனக் பூல் சபி தேஹீம் |
சிதவத் சிதஹி சோரி ஜனு லேஹீம் || 2159
சிதவனி சாரு ப்ருகுடி பர் பாங்கீ |
திலக் ரேக் ஸோபா ஜனு சாங்கீ || 2160

காதுகளில் தங்கத்தினால் செய்யப்பட்ட காதணிகள் ஒளியூட்டிக் கொண்டிருந்தன. அவை கண்டவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவர் பார் வையோ உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும்படி இருக்கிறது. அழகிய கோமளமான வளைந்த புருவங் களும், திலகத்தின் கோடுகளும் அழகின் பொக்கிஷத் தையே திருடிக் கொண்டு போகின்றது. உருவெடுத்து வந்த அழகில் முத்திரை பதித்தது போலிருந்தது.

ருசிர் சௌதனீ ஸுபக் ஸிர்
மேசக் குஞ்சித் கேஸ் |
நக் ஸிக் ஸுந்தர் பந்து தோவு
ஸோபா ஸகல் ஸுதேஸ் || 2161

நான்கு மூலைகள் உள்ள தலை அங்கி ஸுந்தர மானதாகக் காட்சி தந்தது. அதன் கீழே அழகிய, கறுத்து சுருண்ட மயிர்கள் பின்னும் சோபையை உண்டாக்குகின்றன. இரண்டு ஸஹோதரர்களும் நகத்திலிருந்து உச்சிவரை அழகின் இருப்பிடமாகக் தோன்றினார்கள். எந்த இடத்தில் எப்படி அழகு இருக்க வேண்டுமோ; அதேபோல் இருந்தது.

தேகன் நகரு பூபஸுத் ஆயே |
ஸமாசார் புரபாஸின்ஹ பாயே || 2162
தாயே தாம் காம் ஸப் த்யாகீ |
மனஹும் ரங்க் லூடன் லாகீ || 2163

ராஜ குமாரர்கள் மிதிலா நகரைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்ற செய்தி நகரவாஸிகள் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. உடனே அவரவர்கள் தரித்ரன் கஜானாவைக் கொள்ளையிட ஓடுவது போலத் தங்கள் தங்கள் வேலையை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்தார்கள்.

(ராஜா ஜனகர் ஒரு யோகி. அந்த ஜனகரின் ப்ரஜைகள் ரகுவம்சத்தின் ஐச்வர்யமான ராமனைப் பெறத் தரித்ரமாகவே இருந்தார்கள் என்பது ஓர் உபமானம். இந்தத் தரித்ரர்களுக்கு ராமன் என்ற செல்வம் கிடைத்ததும்; தாங்கமுடியாத ஸந்தோஷத்தினால் அதைப் பெற ஓடோடி வந்தார்கள் என்பது கருத்து.)

நிரகி ஸஹஜ் ஸுந்தர் தோவு பாயீ |
ஹோஹிம் ஸுகீ லோசன் பல் பாயீ || 2164
ஜுப்தீம் பவன் ஜுரோகன்ஹி லாகீம் |
நிரக்ஹிம் ராம ரூப் அனுராகீம் || 2165

இயற்கையிலேயே மிக அழகு பொருந்திய இரு ஸஹோதரர்களையும் கண்ட மக்கள் கண்பெற்ற பயனையும், ஸுகத்தையும் பெற்றனர். (முதலில் ஸ்ரீ ரகு நாதனின் அற்புத அழகைப்பற்றிக் கேள்விப் பட்ட

யௌவன ஸ்த்ரீகளின் மனத்தில் முன்பே மயக்கம் இருந்தது. இப்பொழுது அவரே எதிரில் நகரத்தில் வந்திருக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டவுடன் இந்தத் தர்ம வேதனையானது பின்பு அதிகரித்தது.)

ராமன் பவனி வருவதை அறிந்த யௌவன மங்கை யர் தங்கள் தங்கள் வீட்டு ஜன்னல் வழியாக அவன் உருவ அழகைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கஹஹிம் பரஸ்பர் பசன் ஸப்ரீதீ |
ஸகி இன்ஹ கோடி காம சபி ஜீதீ || **2166**
ஸுர நர் அஸுர நாக முனி மாஹீம் |
ஸோபா அஸி கஹும் ஸுனிஅதி நாஹீம் || **2167**

அந்தப் பெண்கள் பரஸ்பரம் தங்கள் தங்கள் ஸகி களிடம்; ஸகீ! கோடிக்கணக்கான காம தேவர்களின் அழகை வென்றவர் போல் தோன்றுகிறது.

தேவர்கள், மனிதர்கள், ராட்சதர்கள், நாகர்கள், முனிவர்கள் இவர்களிடத்தில் கூட இத்தகைய சோபை கேட்பதற்குக் கூட கிடைக்காது.

பிஷ்ணு சாரி புஜ பிதி முக சாரீ |
பிகட பேஷ் முக பஞ்ச புராரீ || **2168**
அபர தேவு அஸ் கோவு ந ஆஹீ |
யஹ சபி ஸகீ பட தரிய ஜாஹீ || **2169**

ஹே ஸகீ! விஷ்ணுவிற்கு நான்கு புஜங்கள், ப்ரம் மனுக்கு நான்கு முகங்கள், புராரியான சிவனுக்கோ பயங்கர வேஷம், ஐந்து முகங்கள் உள்ளன இவர்கள் எல்லோரிடமும் தோஷம் இருக்கிறது. ஆனாலும்; வேறு எந்தத் தேவதைகள் இருக்கிறார்கள்? இந்த ராஜ குமாரர்களின் அழகை எவர்களுக்கு ஈடாக ஒப்பிட முடியும்?

பய் கிஸோர் ஸுஷமா ஸதன்
ஸ்யாம கௌர் ஸுக தாம் |
அங்க அங்க பர் பாரிஅஹிம்
கோடி கோடி ஸத் காம் || **2170**

ஸுகத்திற்கே இருப்பிடமான இவர்களுடைய பருவமோ குமரப்பருவம்; நீலநிறமும்-வெண்மையும் கலந்த இவர்கள் சோபையின் இருப்பிடம். இவர்களது ஒவ்வொரு அங்கத்திற்கும் கோடி கோடி மன்மதர்களை அர்ப்பணிக்க வேண்டும்.

கஹஹு ஸகீ அஸ் கோ தனுதாரீ |
ஜோ ந மோஹ் யஹ் ரூப் நிஹாரீ || 2171
கோவு ஸப்ரேம் போலீ ம்ருது பானீ |
ஜோ மைம் ஸுநா ஸோஸுநஹு ஸயானீ || 2172

ஹே தோழி! இந்த ராமனின் அழகைக் கண்டு மயங்காதவர் சரீரம் படைத்தவர்களில் யார் இருக்கிறார்கள்? (இவர் அழகைக் கண்டு சராசரங்கள் கூட மயங்கிடுமே) அப்பொழுது இன்னொரு பெண் மெதுவான குரலில்; ஹே ஸகீ! நான் கேள்விப்பட்டதை உனக்குக் கூறுகிறேன்; அதையும் கேள்.

ஏ தோவு தசரத் கே டோடா |
பால் மராலன்ஹி கே கல் ஜோடா || 2173
முனி கௌசிக் மக் கே ரக்வாரே |
ஜின்ஹ ரன் அஜிர் நிஸாசர் மாரே || 2174

இளம் அன்னங்கள் போன்ற அழகு ஜோடிகள் தான் ராஜா தசரதனின் புத்ரர்கள்; முனி விச்வாமித்ரரின் யஜ்ஞத்தைக் காக்க வந்தவர்கள். இவர்கள் யுத்தத்தில் பயங்கரமான அரக்கர்களை அழித்திருக்கிறார்கள்.

ஸ்யாம் காத் கல் கஞ்ஜ பிலோசன் |
ஜோ மாரீச் ஸுபுஜ் மது மோசன் || 2175
கௌஸல்யா ஸுத் ஸோ ஸுக் கானீ |
நாமு ராமு தனு ஸாயக் பானீ || 2176

ச்யாமள வர்ணம் கொண்டவனும், அழகான கமலம் போன்ற கண்களை உடையவனும், மாரீசன், ஸுபாஹு போன்ற அரக்கர்களின் கர்வத்தை அடக்கினவனும், ஸுகக் களஞ்சியமும், கைகளில் வில்லையும், அம்பையும் வைத்திருப்பவனும் ஆன அவன்தான் கௌஸல்யாவின் மகன் ஸ்ரீ ராமன்.

கௌர் கிஸோர் பேஷு பர் காஸேம் |
கர் ஸர் சாப் ராம் கே பாஸேம் || 2177
லசிமனு நாமு ராம் லகு ப்ராதா |
ஸுனு ஸகி தாஸு ஸுமித்ரா மாதா || 2178

, ஹே ஸகியே! கேள்; சிவந்த நிறமும், அழகிய குமரப் பருவமும் கொண்டு, அழகிய உடைகளையும் அணிந்து; கைகளில் வில்லும், அம்பும் ஏந்தி ராமனுக்குப் பின்னால் வருகிறவனே ராமனின் சிறிய ஸஹோதரன்; இவனுடைய தாய்தான் ஸுமித்ரை.

பிப்ரகாஜு கரி பந்து தோவு
மக் முனி பதூ உதாரி |
ஆயே தேகன் சாப மக்
ஸுனி ஹர்ஷீம் ஸப் நாரி || 2179

இந்த ஸஹோதரர்கள் இருவரும் விச்வாமித்ர ப்ராம்மணருடைய யஜ்ஞத்தைக் காத்து வரும் வழியில் கௌதம முனிவரின் பத்னியான அஹல்யாவின் சாபத்தை நீக்கிக் கடைத்தேற்றி, பிறகு இங்கு நடக்க விருக்கும் தனுர் யஜ்ஞத்தைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று ஒரு பெண் கூறியதும்; அவளுடைய வசனத்தைக் கேட்டு மற்றப் பெண்கள் ஆனந்தம் அடைந்தார்கள். (அந்தப் பெண் அயோத்யாவில் பிறந்து ஜனக புரியில் மணந்து வாழ்பவள். ஆகவே, அவளுக்கு ராமசரிதம் முழுவதும் தெரியும்.)

தேகி ராம சபி கோவு ஏக் கஹயீ |
ஜோகு ஜானகிஹி யஹ் பரு அஹயீ || 2180
ஜௌம் ஸகி இன்ஹஹி தேக் நர்நாஹூ |
பன் பரிஹரி ஹடி கர்யி பிபாஹூ || 2181

ராமனுடைய பேர் அழகைக் கண்டு மற்றும் ஒரு பெண் மற்றவர்களிடம்; ஹே ஸகிகளே! இந்த வரன் தான் நமது ஜானகிக்கு ஏற்ற வரன். நமது மன்னர் இவரை நோக்கின்துமே தமது ப்ரதிஜ்ஞையைத் தகர்த்து விட்டுப் பிடிவாதமாக இவருக்கே ஜானகியை விவாஹம் செய்து வைப்பாரே! என்றாள். (இதன் அர்த்தம் என்னவென்றால்; ராஜா தனது சுலப முறைப்படித் திருமணம் நடத்துவார். ஆகவே, இவரைக் கண்டதும்

தனது ப்ரதிஜ்ஞையும் மறந்து போகலாம். அதாவது; தனது கொள்கையை விட்டு விட்டு ஸ்ரீராமனுக்கு ஸீதையை மணம் முடிக்கலாம் என்பதுவே ஆகும்.)

கோவு கஹ ஏ பூபதி பஹிசானே |
முனி ஸமேத் ஸாதர் ஸன்மானே || 2182
ஸகி பரந்து பனு ராவு ந தஜயீ |
பிதி பஸ் ஹடி அபிபேக்ஹி பஜயீ || 2183

இன்னொருவர்; இவர்களை ராஜா அறிந்துகொண்டார். முனிவருடன் இவர்களை அழைத்துக் குசலம் விசாரித்து மரியாதை செய்து கௌரவித்தார். ஆனால்; ஹே ஸகி! இருந்தும்கூட ராஜா தமது ப்ரதிஜ்ஞையை விடவில்லை. விதிக்கு வசமாகிப் பிடிவாதமாக அறியாமைக்கே இடம் கொடுத்துவிட்டார். (அதாவது; ப்ரதிஜ்ஞையில் உறுதியோடிருப்பதற்கு வேண்டித் தமது அறியாமையை விடவில்லை)

கோவு கஹ் ஜெளம் பல அஹயி பிதாதா |
ஸப் கஹம் ஸுனிய உசித் பல தாதா || 2184
தெள ஜானகிஹி மிலிஹி பரு ஏஹூ |
நாஹின் ஆலி இஹாம் ஸந்தேஹூ || 2185

மற்றொருவள் - ஏ தோழீ! எல்லோருக்கும் - அவரவர்களுக்குத் தகுந்த மாதிரிதான் பலன் தருகிறார் என்று கேள்விப்படுகிறோம். அதனால் ப்ரம்மதேவன் நல்லவர்தான். ஆகவே, நம் ஜானகிக்கும் இதே வரன் தான் கிடைக்கும். இதில் கொஞ்சமும் ஸந்தேஹமில்லை என்றாள்.

ஜெளம் பிதி பஸ் அஸ் பனை ஸம்ஜோகூ |
தெள க்ருத க்ருத்ய ஹோயி ஸப் லோகூ ||2186
ஸகி ஹம்ரேம் ஆரதி அதி தாதேம் |
கப்ஹூம்க ஏ ஆவஹிம் ஏஹி நாதேம் || 2187

விதி வசத்தினால் நாம் நினைத்தபடியே ஆகிவிட்டால்; நாம் க்ருதார்த்தர்களாகி விடுவோம். ஹே ஸகியே! இந்த ஸம்பந்தம் நடந்துவிட்டால், உறவுமுறை வந்தால் மிக நல்லது என்று எனக்கு இதை நினைக்கும் போது ஒரு துடிப்பு ஏற்படுகிறதடி' என்றாள் மற்றவள்.

(இதனால் நாம் அவதபுரி போய்ப் பார்க்க முடியும். ஒருக்கால் இந்த ஸம்பந்தம் இல்லாது போய் விட்டால்; இவர்களை நாம் எங்கிருந்து பார்ப்போம்? அதுவும் நாம் வீட்டிற்குள் அமர்ந்து எப்படிப் பார்க்க முடியும்? ஏதாவது உறவு முறை இருந்தால் அவர்கள் இங்கு வருவார்கள்; நாம் பார்க்கலாம். இல்லையெனில் எப்படி? என்று கலங்கினாள் ஒரு பெண்.)

நாஹிம் த ஹம் கஹுஂ ஸுனஹு
ஸகி இன்ஹ கர் தர்ஸனு தூரி |
யஹ் ஸங்கடு தப் ஹோயி
ஜப் புன்ய புராக்ருத் பூரி || **2188**

ஹே ஸகீ! இந்த ராம-ஸீதா விவாஹம் நடைபெறா விட்டால்; இவர்கள் தரிசனம் நமக்குக் கிடைக்காது. இந்த ஸந்தர்ப்பம் எப்போது கிடைக்குமென்றால்; போன ஜன்மத்தில் நாம் புண்ணியம் செய்திருந்தால் ஒருக்கால் கிடைக்கலாம். இல்லையென்றால் இவர் களைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்காது என்றாள் இன்னொரு பெண்.

போலீ அபர் கஹேஹு ஸகி நீகா |
ஏஹிம் பிஆஹ் அதிஹித் ஸப்ஹீகா || **2189**
கோவு கஹ் ஸங்கர் சாப் கடோரா |
ஏ ஸ்யாமல் ம்ருதுகாத் கிஸோரா || **2190**

மேலும், ஒரு பெண்; கேளம்மா தோழி! நீ மிகச் சரியாகத்தான் சொன்னாய். உண்மையில் இந்த ராமன்-ஸீதாவின் விவாஹத்தினால் எல்லோருக்கும் ஹிதமே என்றாள். அடுத்து ஒருவள் இந்தச் சிவ தனுஸ் ரொம் பவும் கடினமானது. ஆனால், இந்த ச்யாமள வர்ணம் கொண்ட பாலகனோ மென்மையான சரீரம் கொண் டவன் என்றாள்.

ஸபு அஸ்மஞ்ஜஸ் அஹயி ஸயானீ |
யஹ் ஸுனி அபர் கஹ்யி ம்ருது பானீ || **2191**
ஸகி இன்ஹ கஹம் கோவு கோவு அஸ் கஹஹீம் |
பட் ப்ரபாவு தேகத் லகு அஹஹீம் || **2192**

ஹே ஸகீ! நாம் நினைப்பது போல் ஏதும் முடிவே செய்ய முடியாமல் இருக்கிறதே என்றாள் மற்றவள். இதைக் கேட்ட மற்றொரு தோழி; ''இவர்கள் பார்ப்ப தற்குச் சிறுவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இவர் களின் ப்ரபாவமோ மிகப் பெரியது'' என்று இப்படி ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகக் கூறினார்கள்.

பர்ஸி ஜாஸு பத பங்கஜ் தூரீ ।
தரீ அஹல்யா க்ருத அக பூரீ ॥ 2193
ஸோ கி ரஹிஹி பினு ஸிவதனு தோரேம் ।
யஹ் ப்ரதீதி பரிஹரிஅ ந போரேம் ॥ 2194

மேலும், அப்படிப்பட்ட இவர்களது சரணங்களின் தூள் பட்டு பாபப்பட்டுக் கிடந்த அஹல்யா சுயரூபம் பெற்றுத் திரும்பினாள். அப்படி இருக்க இவர்கள் இந்தச் சிவதனுஸை உடைக்காமல் போய் விடுவார் களா? நாம் மறந்தும் இந்த நம்பிக்கையை இழக்கக் கூடாது.

(அறியாத குமாரர்கள் என்று நாம் எண்ணுவது தவறு.)

ஜேஹிம் பிரஞ்சி ரசி ஸீய ஸம்வாரீ ।
தேஹிம் ஸ்யாமல் பரு ரசேவு பிசாரீ ॥ 2195
தாஸு பசன் ஸுனி ஸப் ஹர்ஷானீம் ।
ஜஸேயி ஹோவு கஹஹிம் ம்ருது பானீம் ॥ 2196

ப்ரம்மாவானவர் ஜானகியை மிக்க திறமையுடன் படைத்தார். அவரே அவளுக்கென்று நன்கு ஆலோ சித்து இந்த ச்யாமள வர்ணனான வரனையும் ஸ்ருஷ்டி செய்திருக்கிறார் என்றதும், எல்லாப் பெண்களும் அதைக்கேட்டு ஆனந்தத்தில் திளைத்து மனதார வேண்டிக் கொண்டு மிகவும் கோமளமான குரலில் 'இப்படியே நடக்கட்டும்' என்று ஆசீர்வதித்தார்கள்.

ஹியம் ஹர்ஷஹிம் பர்ஷஹிம் ஸுமன்
ஸுமுகி ஸுலோசனி ப்ருந்த ।
ஜாஹிம் ஜஹாம் ஜஹம் பந்து
தோவு தஹம் தஹம் பரமானந்த ॥ 2197

அழகு முகமும், கண்களும் உள்ள ஸ்த்ரீகள் மனத்தில் ஸந்தோஷம் தாங்காமல் சிறப்பாகப் பூமழை பொழிகிறார்கள். இரு ஸஹோதரர்களும் எங்கு எங்கு எந்தெந்த வீதியில் போகிறார்களோ; அங்கெல்லாம் பரமானந்தமடைந்த சூழ்நிலை ஏற்பட்டது. (1. புஷ்ப மழை பொழிதல் மங்களகரமானது. 2. அதாவது; ஸ்ரீ ரகுநாதன் சுற்றும் முற்றும் பார்க்காமல் நேரே நடந்துவருகிறார். இந்தப் பூ மாரியைக் கண்டு ஒரு வேளை மேலே பார்க்கலாம். அப்போது அவர் க்ருபா கடாக்ஷம் எங்களுக்குக் கிடைக்கும் என்று பெண்கள் எண்ணுகிறார்கள்.

3. மற்றொரு விளக்கம் என்னவென்றால்; ஸ்ரீ ரகுநாதன் நடக்கும் இடமெல்லாம் கரடு முரடாகக் இருப்பதால் பூமாரி பெய்து அவர் நடக்கும் இடங்களை மென்மைப் படுத்துகிறார்கள் பெண்கள். இம்மாதிரி அழகுள்ள பெண்கள் பலவிதமாக வரவேற்கிறார்கள்.

4. ஸ்ரீ ராம லக்ஷ்மணர்களை நகத்திலிருந்து தலை வரை கண் குளிரச் செய்து ஆனந்திக்கிறார்கள் பெண்கள். இவர்களைக் கண்கள் படைத்த ஸ்ரோசனி என்கிறார். ஆகவே, மக்கள் அவர்கள் பின்னால் பரமானந்த மடைந்து கூடவே போகிறார்கள் என்றார். இம்மாதிரி நிலை இருக்க அந்த ஸ்த்ரீகளின் நிலையை என்ன வென்று கூறுவது?)

புர் பூரப் திஸி கே தோவு பாயீ ।
ஜஹம் தனுமக் ஹித் பூமி பனாயீ ॥ 2198
அதி பிஸ்தார் சாரு கச் டாரீ ।
பிமல் பேதிகா ருசிர் ஸம்வாரீ ॥ 2199

நகரத்தின் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டிருந்த தனுஸ் யஜ்ஞ பூமி இருக்குமிடத்தை நோக்கி இரு ஸஹோதரர்களும் சென்றார்கள். பெரிய விஸ்தாரமான அழகு முற்றத்தில் அழகிய, தூய மேடை அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சஹ்ரம் திஸி கஞ்சன் மஞ்ச் பிஸாலா ।
ரசே ஜஹாம் பைட்ஹிம் மஹிபாலா ॥ 2200

தேஹி பாசேம் ஸமீப் சஹூம் பாஸா |
அபர் மஞ்ச் மண்டலீ பிலாஸா || 2201

நான்கு புறமும் தங்கத்தினால் செய்த ஆஸனங்கள் அமைக்கப் பட்டிருந்தன. அவைகளில் வரப்போகும் அரசர்கள் அமர்வர். அவைகளின் பின்னால் அருகி லேயே நான்கு புறத்திலும் இரண்டாவதாக வட்டமான மேடைகள் சூழ்ந்து விளங்கின.

ககுக் ஊஞ்சிஸப் பாந்தி ஸூஹாயீ |
பைட்ஹிம் நகர் லோக் ஜஹம் ஜாயீ || 2202
தின்ஹ கே நிகட் பிஸால் ஸூஹாயே |
தவல் தாம் பஹூபரன் பனாயே || 2203

அந்த இடம் கொஞ்சம் உயர்ந்து தென்பட்டது. மிகவும் அழகிய அந்த இடத்தில்தான் நகர வாஸிகள் உட்கார வேண்டி அமைக்கப்பட்டு இருந்தது. அந்த இடத்தின் அருகில் வெண்மையான, அழகான பல வண்ணங்களில் வீடுகள் அமைக்கப் பட்டிருந்தன.

ஜஹம் பைடேம் தேக்ஹிம் ஸப் நாரீ |
ஜதாஜோகு நிஜ குல் அனுஹாரீ || 2204
புர பாலக் கஹி கஹி ம்ருது பசனா |
ஸாதர் ப்ரபுஹி தேகாவ்ஹிம் ரசனா || 2205

அங்குத் தங்கள் தங்கள் குலத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி உள்ள இடத்தில் ஸ்த்ரீகள் உட்கார்ந்து பார்க்கலாம். நகரத்தில் உள்ள சின்னஞ் சிறார்கள் இம்மாதிரி அழகான வார்த்தைகளைக் கூறி ஸ்ரீராம பிரானுக்கு யஜ்ஞசாலையின் அமைப்பை விவரமாகக் கூறிக் காட்டிக்கொண்டிருந்தனர்.

ஸப் ஸிஸூ ஏஹி மிஸ் ப்ரேம
பஸ் பர்ஸி மனோஹர் காத் |
தன் புலக்ஹிம் அதி ஹர்ஷூ
ஹியம் தேகி தேகி தோவு ப்ராத் || 2206

எல்லாச் சிறுவர்களும் இப்படி வர்ணித்த வண்ணம் ப்ரேமை மிகுதியால் ஸ்ரீ ராமனின் மனோஹரமான அங்கத்தைத் தொட்டுத் தொட்டுப் புளகாங்கிதம் அடைந் தார்கள். இரண்டு ஸஹோதரர்களையும் பார்த்துப்

பார்த்துத் தங்கள் உள்ளத்தில் பெரிதும் மகிழ்வு கொண்டார்கள்.

ஸிஸு ஸப் ராம் ப்ரேம்பஸ் ஜானே |
ப்ரீதி ஸமேத் நிகேத் பகானே || 2207
நிஜ நிஜ ருசி ஸப் லேஹிம் போலாயீ |
ஸஹித் ஸ்நேஹ் ஜாஹிம் தோவு பாயீ || 2208

ஸ்ரீ ராமச்சந்த்ரன் ப்ரேமையின் காரணமாக வசமாகிச் சிறுவர்கள் நிற்பதைக் கண்டு, அவரும் அந்த யஜ்ஞசாலையைப் பற்றிப் பிள்ளைகளிடம் ப்ரமாதமாகப் புகழ்ந்தார். இதனால் பிள்ளைகளின் ஆர்வமும், அன்பும் மேலும் பெருகியது. இதனால் அவர்கள் தங்கள் மனத்திற்கு உகந்தபடி அவரை அழைத்தார்கள். ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் அவர்கள் இஷ்டப்படி ஒவ்வொருவரிடமும் போய்ப் பேசினார்கள்.

ராம் தேகாவஹிம் அனுஜஹி ரசனா |
கஹி ம்ருது மதுர் மனோஹர் பசனா || 2209
லவ நிமேஷ் மஹும் புவன் நிகாயா |
ரசயி ஜாஸு அனுஸாஸன் மாயா || 2210

கோமளமான, மதுர மனோஹரமான வார்த்தைகளால் ஸ்ரீ ராமன் தனது தம்பிக்கு யஜ்ஞ சாலையைப் பற்றி வருணித்தார்; அதன் அமைப்பை காட்டினார். எவருடைய ஒரு கண் இமைக்கும் நேரத்தில் ப்ரம்மாண்டமே அமைக்கப்படுகிறதோ; அப்படிப்பட்ட பரப்ரம்மமான ராமன் இந்த அமைப்பை பற்றித் தம்பியிடம் கூறுவது விந்தையாக இருந்தது.

பக்தி ஹேது ஸோயி தீனதயாளா |
சிதவத் சகித் தனுஷ் மகஸாலா || 2211
கௌதுக் தேகி சலே குரு பாஹீம் |
ஜானி பிலம்பு த்ராஸ் மன் மாஹீம் || 2212

பக்தி காரணமாகத் தீனர்களிடம் தயவு காட்டும் ஸ்ரீ ராமபிரான் ஆச்சரியத்தோடு தனுஸ் யஜ்ஞ சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். இம்மாதிரி ஒரு விசித்ர அமைப்பைப் பார்த்த பின் அவர்கள் குருவிடம் வந்து சேர்ந்தார்கள். நேரம் மிகவும் ஆகிவிட்டதை அறிந்து ராம லக்ஷ்மணர் மனத்தில் பயம் உண்டானது.

ஜாஸு த்ராஸ் டர் கஹுூம் டர் ஹோயீ |
பஜன் ப்ரபாவு தேகாவத் ஸோயீ || 2213
கஹி பாதேம் ம்ருது மதுர் ஸுஹாயீம் |
கியே பிதா பாலக் பரிஆயீம் || 2214

எவருடைய பயத்தினாலே பயமும் நடுங்குகிறதோ, (அப்படிப்பட்ட மஹான் பயத்தைக் காட்டி நடிக்கிறார் என்று காட்டுகிறார்) அவர் ம்ருதுவான, இனிய, அழகிய வார்த்தைகளைச் சொல்லி அந்தச் சிறுவர்களுக்குக் கம்பீரமாக விடைகொடுத்து அனுப்பினார்.

ஸபய் ஸப்ரேம் பினீத் அதி
ஸகுச் ஸஹித் தோவு பாயி |
குர் பத் பங்கஜ் நாயி
சிர் பைடே ஆயஸு பாயி || 2215

மேலும், பயம், ப்ரேமை, வினயம், மிகுந்த ஸங்கோசம் இவைகளோடு கூட இரண்டு ஸஹோதரர்களும் குருவின் பாத கமலங்களில் விழுந்து வணங்கிக் கட்டளையைப் பெற்று அமர்ந்தனர்.

நிஸி ப்ரபேஸ் முனி ஆயஸு தீன்ஹா |
ஸப்ஹிம் ஸந்த்யாபந்தனு கீன்ஹா || 2216
கஹத் கதா இதிஹாஸ் புராநீ |
ருசிர் ரஜனி ஜுக் ஜாம் ஸிராநீ || 2217

ஸந்த்யாகாலம் முடிந்து இரவு வந்தது. முனிவரின் ஆஜ்ஞை பெற்று எல்லோரும் ஸந்த்யாவந்தனம் செய்தார்கள். பிறகு யாவரும் பழங்கதைகளையும், இதிஹாஸக் கதைகளையும் சொல்லிக் கொண்டு அந்த இரவின் நடு ஜாமம் வரை கழித்தார்கள்.

முனிபர் ஸயன் கீன்ஹி தப் ஜாயீ |
லகே சரன் சாபன் தோவு பாயீ || 2218
ஜின்ஹ கே சரன் ஸரோருஹ் லாகீ |
கர்த பிபித் ஜப ஜோக் பிராகீ || 2219

அப்பொழுது தவச்ரேஷ்டரான விச்வாமித்ரர் சயனித்துக் கொண்டார். எவருடைய சரண கமலங்களைக்

காணவும், ஸ்பரிசிக்கவும் உலகிலுள்ள வைராக்ய புருஷர்களும், பக்தர்களும், பலவிதமான பூஜைகளும், தபஸ்களும், யோகங்களும் செய்கிறார்களோ; அப்படிப் பட்ட ஸ்ரீராமனும், லக்ஷ்மணனும் தனது கைகளினால் முனிவரின் சரணங்களைப் பிடித்து விடலாயினர்.

தேயி தோவு பந்து ப்ரேம் ஜனு ஜீதே |
குர் பத கமல பலோடத் ப்ரீதே || 2220
பார் பார் முனி அக்யா தீன்ஹீ |
ரகுபர் ஜாயி ஸயன் தப் கீன்ஹீ || 2221

அந்த இரு ஸஹோதரர்களும் பரம த்ருப்தியுடனும், ப்ரேமையுடனும், பக்தியுடனும் குருவின் சரணங்களைப் பிடித்துவிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது குரு நாதர் திரும்பத் திரும்ப ராம லக்ஷ்மணரைப் பார்த்து இரவு வெகு நேரமாகி விட்டது. நீங்கள் போய்ப் படுத்துக் கொள்ளுங்கள் என்றார்.

சாபத் சரன் லகனு உர் லாயேம் |
ஸபய ஸப்ரேம் பரம ஸசு பாயேம் || 2222
புனி புனி ப்ரபு கஹ் ஸோவஹு தாதா |
பௌடே தரி உர் பத ஜல் ஜாதா || 2223

பிறகு - லக்ஷ்மணனோ சயனித்திருக்கும் ஸ்ரீ ராம னின் சரணங்களை மார்பில் சார்த்திக் கொண்டு பிடித்து விடுகிறார். பக்தியுடனும், ப்ரேமையுடனும் அவர் செய்யும் கைங்கர்யத்தைக் கண்ட ஸ்ரீ ராமன் அன்புடன்; அப்பா ஸஹோதரா! நீ காலைப் பிடிப்பது போதும்; போய் உறங்கு என்றார். பிறகு ராமனின் பாத கமலங்களை மனத்தில் எண்ணியவாறு லக்ஷ்மண னும் உறங்கச் சென்றார்.

உடே லகனு நிஸி பிகத் ஸுனி
அருனஸிகா துனி கான் |
குர் தேம் பஹி லேஹிம் ஜகத்பதி
ஜாகே ராமு ஸுஜான் || 2224

ராத்ரி வெகுநேரம் கழிந்தபின், கோழி கூவுவதின் சப்தம் கேட்டு லக்ஷ்மணன் எழுந்தார். எல்லாமறிந்து, உலக ரக்ஷகனான ஸ்ரீராமன், குரு கண் விழிப்பதற்கு முன்பே கண் விழித்தார்.

ஸகல ஸௌச் கரி ஜாயி நஹாயே |
நித்ய நிபாஹி முனிஹி ஸிர் நாயே || 2225
ஸமய ஜானி குர் ஆயஸு பாயீ |
லேன் ப்ரஸூன் சலே தோவு பாயீ || 2226

நித்யம் செய்யவேண்டிய காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, ஸ்நானம் செய்து, ஸந்த்யாவந்தனம் செய்து, அக்னி ஹோத்ரம் முடித்துக் கொண்டு முனிவரிடம் தலை வணங்கி நின்றார்கள். பிறகு முனிவரின் பூஜை நேரம் அறிந்து, ராம லக்ஷ்மணர் இருவரும் பூக்கள் கொண்டு வர நந்தவனம் சென்றார்கள்.

பூப் பாகு பர் தேகேவு ஜாயீ |
ஜஹம் பஸந்த ரிது ரஹீ லோபாயீ || 2227
லாகே பிடப் மனோஹர் நாநா |
பரன் பரன் வர் பேலி பிதானா || 2228

அங்கு அவர்கள் ராஜா ஜனகரின் அழகிய உத்யான வனம் கண்டார்கள். அங்கு வஸந்த ருது தனது அமோகமான அழகை வாரி இறைத்துக் கொண்டிருந்தது. மனத்தை மயக்க வல்ல பல அழகிய மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ணமான பல அழகிய மலர்க் கொடிகளினால் மண்டபம் அலங்கரிக்கப் பட்டிருந்தது.

நவ பல்லவ பல் ஸுமன் ஸுஹாயே |
நிஜ ஸம்பதி ஸுர ரூக் லஜாயே || 2229
சாதக் கோகில கீர் சகோரா |
கூஜத் பிஹக் நடத் கல் மோரா || 2230

புதிய புதிய இலைகள், பழங்கள், புஷ்பங்கள், இவைகளால் அழகிய மரங்களும், தமது செல்வத்தினால் கல்பகவ்ருக்ஷத்தையும் நாணும்படிச் செய்து விட்டன. சாதகப்பக்ஷி குயில்கள், கிளிகள் சகோர பக்ஷிகள் போன்ற பல பக்ஷி இனங்கள் இனிமையாகப் பாடிக் கொண்டிருந்தன. மயில்கள் அழகாக நடனம் ஆடிக்கொண்டிருந்தன.

மத்ய பாக் ஸரு ஸோஹ் ஸுஹாவா |
மனி ஸோபான் பிசித்ர பனாவா || 2231

பிமல் ஸலிலு ஸரஸிஜ பஹுரங்கா |
ஜலகக் கூஜத் குஞ்ஜத் ப்ருங்கா || 2232

நந்தவனத்தின் நட்ட நடுவில் அழகிய ரம்யமான தடாகம் விளங்கியது. அதன் படிக்கட்டுகளில் அழகிய மணிகளும், ரத்னங்களும் இழைக்கப் பட்டிருக்கின்றன. அதன் தண்ணீர் நிர்மலமாக இருக்கிறது. அதனுள் அழகிய பலவித வண்ணக் கமலங்கள் பூத்திருக்கின்றன. ஜல பக்ஷிகள் கலகலவென்று சப்தமிட்டுக் கொண்டே இருக்கின்றன. வண்டுகள் கமலங்களில் ரீங்காரமிட்ட வண்ணம் இருக்கின்றன.

பாகு தடாகு பிலோகி ப்ரபு
ஹர்ஷே பந்து ஸமேத் |
பரம ரம்ய ஆராமு யஹு
ஜோ ராமஹி ஸுக் தேத் || 2233

அழகிய நந்தவனத்தையும், தடாகத்தையும் கண்ட ஸ்ரீ ராமச்சந்த்ரன், ஸஹோதரன் லக்ஷ்மணனுடன் மிகவும் ஸந்தோஷப்பட்டார். உண்மையாகவே அந்தத் தோட்டம் மிகவும் ரம்யமாகவே இருந்தது. அதாவது; ஜகத்திற்கு ஸுகம் கொடுக்கும் ஸ்ரீராமருக்கும் அந்த நந்தவனம் ஸுகத்தைக் கொடுத்தது.

சஹும் திஸி சிதயி பூஞ்சி மாலீ கன் |
லகே லேன் தல் பூல் முதித் மன் || 2234
தேஹி அவஸர் ஸீதா தஹம் ஆயீ |
கிரிஜா பூஜன் ஜனனி படாயீ || 2235

நாலா புறமும் பார்த்துவிட்டுப் பிறகு தோட்டக் காரனிடம் கேட்டபின் மகிழ்வோடு ஸ்ரீ ரகுபுங்கவரும், லக்ஷ்மணனும் புஷ்பங்களைப் பறிக்க ஆரம்பித்தனர். அதே ஸமயம் ஸீதாதேவி அங்கு வந்தாள். அவள் தாயார் அவளைக் கிரிஜா பூஜை செய்து விட்டு வா என்று அனுப்பியிருந்தாள்.

ஸங்க் ஸகீம் ஸப் ஸுபக் ஸயானீம் |
காவ்ஹிம் கீத் மநோஹர் பானீம் || 2236

ஸர் ஸமீப் கிரிஜா க்ருஹ ஸோஹா |
பர்னி ந ஜாயி தேகி மனு மோஹா || 2237

ஸீதையோடு கூட அழகிய அந்தரங்கத் தோழியர் இருந்தனர். அவர்கள் மதுரமான குரலில் கீதம் இசைத்துப் பாடினர். தடாகத்தின் அருகில் உள்ள கிரிஜா கோவிலின் அழகைச் சொல்லி முடியாது. பார்ப்பவர் மனம் மயங்கும்படி ஒரு தனி அழகு பெற்றிருந்தது அக்கோவில்.

மஜ்ஜனு கரி ஸர் ஸகின்ஹ ஸமேதா |
கயீ முதித் மன் கௌரி நிகேதா || 2238
பூஜா கீன்ஹி அதிக் அனுராகா |
நிஜ அனுரூப் ஸுபக பரு மாகா || 2239

ஸகிகளுடன் கூட ஸீதையும் தடாகத்தில் இறங்கி ஸ்நானம் செய்தாள். பின்னர் தெளிந்த மனத்துடனும், பக்தியுடனும் தேவிகிரிஜாவின் கோவிலுக்குச் சென்றாள். அங்கு மிகவும் ச்ரத்தையுடன் பூஜை செய்தாள். பிறகு தனக்குத் தகுந்த மாதிரி வரம் வேண்டி நின்றாள்.

ஏக் ஸகீ ஸிய ஸங்கு பிஹாயீ |
கயீ ரஹீ தேகன் புல்வாயீ || 2240
தேஹிம் தோவு பந்து பிலோகே ஜாயீ |
ப்ரேம் பிபஸ் ஸீதா பஹிம் ஆயீ || 2241

ஒரு பெண் நடுவில் ஸீதாதேவியைப் பிரிந்து நந்த வனத்தைப் பார்வையிடச் சென்றாள். அங்கு அவள் அகஸ்மாத்தாக அந்த இரண்டு ஸஹோதரர்களான ராம, லக்ஷ்மணரைக் கண்டாள். ப்ரேமையினால் கதி கலங்கி, உடனே திரும்பி ஸீதையிடம் ஓடிவந்தாள். ப்ரேமையினால் அவள் உள்ளம் நடுங்கியது. சமாளித்துக் கொண்டு நின்றாள்.

தாஸு தஸா தேகீ ஸகின்ஹ
புலக் காத் ஜலு நைன் |
கஹு காரணு நிஜ ஹர்ஷ கர்
பூசஹிம் ஸப் ம்ருது பைன் || 2242

மற்ற ஸகிகள் அந்தப் பெண்ணின் நிலைமையைக் கண்டு பரபரப்படைந்தார்கள். ஏனெனில்; அவள் உடல் புளகாங்கிதமடைந்தது; வார்த்தை ஒன்றும் வாயில் வராமல் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக நின்றாள். இதைக் கண்ட ஸகிகள் அப்பொழுது ம்ருது வான குரலில்; ''பெண்ணே! ஏன் இந்த நிலை? இத் தனை ஸந்தோஷம் அடையக் காரணம் யாது?'' என்று கேட்டார்கள்.

தேகன் பாகு கும்வர் துயி ஆயே |
பய கிஸோர் ஸப் பாந்தி ஸுஹாயே || 2243
ஸ்யாம கௌர் கிமி கஹெளம் பகானீ |
கிரா அநயன் நயன் பினு பானீ || 2244

அதற்கு அவள்; ஸகிமார்களே! நான் நந்தவனத்திற் குச் சென்றிருந்தேன். அங்குத் தோட்டத்தைப் பார்க்க வென்று இரண்டு ராஜ குமாரர்கள் வந்தார்கள். பாலப் பருவம் அடைந்துள்ள அவர்கள் மிகவும் அழகாக இருந்தார்கள். ஒருவர் ச்யாமள நிறம், மற்றவர் சிகப்பு கலந்த வெண்மை நிறம். அவர்களின் ஸௌந்தர்யத்தை நான் எவ்வாறு வர்ணித்துக் கூறமுடியும். வார்த்தைக்கோ கண்ணில்லை; பேச்சே வரவில்லை? கண்களுக்கோ மொழியில்லை. ஆகவே, நான் எப்படி வர்ணிப்பேன்? என்றாள்.

ஸுனி ஹர்ஷீம் ஸப் ஸகீம் ஸயானீ |
ஸிய ஹ்ரியம் அதி உத்கன்டா ஜானீ || 2245
ஏக் கஹ்யி ந்ருபஸுத தேயி ஆலீ |
ஸுனே ஜே முனி ஸங்க் ஆயே காலீ || 2246

தோழி மூலமாக அந்த ராஜகுமாரரைப் பற்றிக் கேட்டதும், ஸீதையின் ஹிருதயத்தில் அளவில்லாத ஆசை உண்டாயிற்று. ஸீதையின் இந்நிலையைக் கண் டதும் ஸகிகள் மகிழ்ந்தனர். அப்பொழுது ஒரு தோழி; ''ஹே ஸகீ! அந்த ராஜ குமாரர்கள் யார் தெரியுமா? நேற்று இந்த நகரத்திற்கு விச்வாமித்ர முனிவருடன் வந்தார்கள் என்று கேள்விப் பட்டோமே அவர்கள் தான் என்றாள்.

ஜின்ஹ நிஜ ரூப் மோஹனீ டாரீ |
கீன்ஹே ஸ்வபஸ் நகர் நர் நாரீ || 2247

பர்னத் சபி ஜஹம் தஹம் ஸப் லோகூ |
அவஸி தேகிஅஹிம் தேகன் ஜோகூ || 2248

அவர்கள் தங்களது வசீகர ரூபமோஹினியை ஏவி நகரத்தில் உள்ள ஸ்த்ரீ-புருஷர்களைத் தன்வயத்தில் ஆழ்த்தி விட்டனர், எங்கெங்கும் மக்கள் அவர்கள் அழகைப் பற்றியே விஸ்தாரமாக வர்ணனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களை அவசியம் நாமும் போய்ப் பார்த்தாக வேண்டும் என்று அவள் சொன்னாள்.

தாஸூ பசன் அதி ஸியஹி ஸோஹானே |
தரஸ் லாகி லோசன் அகுலானே || 2249
சலீ அக்ர கரி ப்ரிய ஸகி ஸோயீ |
ப்ரீதி புராதன் லகயி ந கோயீ || 2250

அவர்களுடைய வார்த்தைகள் ஸீதாதேவிக்கு மிக வும் இதமாகவும், இன்பமாகவும் இருந்தன. அவர்களது தரிசனத்திற்காக வேண்டி அவளுடைய கண்கள் ஆர்வத் துடன் துடித்தன. ஆகவே, அந்த அன்புத் தோழியை முன்னால் போகவிட்டு ஸீதை பின்னால் சென்றாள். ராமன் ஸீதையின் பழைய உறவு முறை மக்களுக்கு எப்படித் தெரியும்?

ஸுமிரி ஸீய நாரத பசன்
உபஜீ ப்ரீதி புனீத் |
சகித பிலோகதி ஸகல் திஸி
ஜனு ஸிஸூ ம்ருகீ ஸபீத் || 2251

முன்பு ஒருமுறை நாரதர் கூறிய வசனங்கள் ஸீதா விற்கு நினைவில் வந்தன. அவைகளால் அவளுடைய மனத்தில் ஸ்ரீ ராமனிடம் அதிக ப்ரீதி உண்டாயிற்று. அவர்கள் திகைப்புடன் இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டிருந்தனர். அதைப் பார்க்கும்போது மான் குட்டிகள் இங்கும் அங்கும் மிரட்சியுடன் பார்க்கின் றனவோ என்பது போல் தோன்றியது.

கங்கன் கிங்கினி நூபுர் துனி ஸுனி |
கஹத் லகன் ஸன் ராமு ஹ்ருதயம் குனி ||2252
மான்ஹுஂ மதன் துந்துபீ தீன்ஹீ |
மனஸா பிஸ்வ பிஜய் கஹம் கீன்ஹீ || 2253

கை வளையல்கள், ஒட்டியாணம், கால் சலங்கைகள் இவைகளின் ஒலியைக் கேட்டு ஸ்ரீ ராமன் தீவிரமாகச் சிந்தித்து ஸஹோதரனிடம்; லக்ஷ்மணா! இந்த ஒலி இப்படி வருவதைக் கேள். உலகை ஜயிக்க எண்ணிய மன்மதன் பறை அறைவது போல் இருக்கிறது அல்லவா இந்த ஒலி!

அஸ் கஹி பிரி சித்யே தேஹி ஓரா |
ஸிய முக ஸஸி பயே நயன் சகோரா || 2254
பயே பிலோசன் சாரு அசஞ்சல் |
மன்ஹும் ஸகுசி நிமி தஜே திகஞ்சல் || 2255

என்று சொல்லி, ஸ்ரீ ராமன் திரும்பி ஓசை வரும் பக்கம் நோக்கினார். ஸீதா தேவியின் முக ரூபமான அந்தச் சந்த்ரனைக் காண அவரது கண்கள் சகோர பக்ஷியாகி விட்டன. உடனே அவருடைய அழகு விழிகள் அப்படியே ஒருகணம் ஸ்தம்பித்து நின்று விட்டன. அதாவது; அவரது இமைகள் மூடவே மறந்துவிட்டன. அதாவது; ஜனகரின் முன்னோர் நிமி என்பவர் அவர் எல்லோர் இமைகளிலேயும் வாஸம் செய்பவராக இருந்தாராம். மகள்-மருமகன் சந்திப்பின்போது தாம் பார்ப்பது சரியில்லை என்று எண்ணிக் கண் இமைகளில் இருக்கலாகாது என்ற எண்ணத்துடன் கண்களை விட்டு, இமைகளை விட்டு இறந்து விட்டாராம். இந்தக் கதை இப்போது நினைவில் வந்தது என்றார்.

தேகி ஸீய ஸோபா ஸுகு பாவா |
ஹ்ருதயம் ஸராஹத் பசனு ந ஆவா || 2256
ஜனு பிரஞ்சி ஸப் நிஜ நிபுனாயீ |
பிரசி பிஸ்வ கஹம் ப்ரகடி தேகாயீ || 2257

ஸீதையினுடைய அழகிய முக மண்டலத்தைக் கண்டதும் ராமனுக்கு மிகுந்த ஸுகம் உண்டாயிற்று. மனத்திற்குள் அவளது அபூர்வ ஸௌந்தர்யத்தைப் பற்றி வர்ணனை செய்து கொண்டனர். ஆனால், வார்த்தைகள் வாயிலிருந்து வெளிவரவில்லை. ஒருக்கால் ப்ரம்மன் தனது திறன், சக்தியை எல்லாம் திரட்டி இந்த அழகான ரூபத்தை ஸ்ருஷ்டி செய்து, உலகத்தில் வெளிப்படுத்தியிருக்கிறாரோ; என்று எண்ணும்படியாக இருக்கிறது இவளது அழகுநிறை என எண்ணினார்.

ஸுந்தரதா கஹுஂ ஸுந்தர் கர்யீ |
சபிக்ருஹம் தீப்ஸிகா ஜனு பர்யீ || 2258
ஸப் உபமா கபி ரஹே ஜூடாரீ |
கேஹிம் படதரௌம் பிதேஹ்குமாரீ || 2259

அழகிற்கும் அழகு செய்வதுபோல் இருந்தது ஸீதை யின் அழகு. அது அழகு வடிவான இல்லத்தில் இருட்டைப் போக்கவல்ல தீபஜ்வாலை ப்ரகாசமாக எரிந்து கொண்டிருக்கிறதோ என்னும்படி இருந்தது. (அதாவது; அழகு வீட்டில் இருள் சூழ்ந்திருந்தது. அந்த வீடு ஸீதையின் அழகு ரூபமான தீபஜ்வாலை பெற்று ஒளிவீசித் திகழ்கிறதோ; முன்னைவிட அழகாக விளங்கு கிறதோ என்னும்படி இருந்தது) கவிஞர்தான் எல்லா உவமைகளையும் எடுத்துக்கூறி விட்டாரே! அப்படியிருக்க விதேஹ குமாரியான ஸீதையின் அழகுக்கு நான் யாரை ஒப்பிட முடியும்?

ஸிய ஸோபா ஹியம் பர்னி
ப்ரபு ஆபனி தஸா பிசாரி |
போலே ஸுசி மன் அனுஜ ஸன்
பசன் ஸமய அனுஹாரி || 2260

என்று இவ்வாறு மனத்திற்குள்ளேயே ஸீதா தேவி யின் திவ்யமான அழகை வர்ணித்துக் கொண்டே தனது மனநிலையையும் சிந்தித்து ப்ரபு ஸ்ரீராமச்சந்த்ரன் தூய உள்ளத்தோடு தனது சிறிய ஸஹோதரன் லக்ஷ்மண ரிடம் ஸமயம் பார்த்துக் கூறலானார்.

தாத் ஜனக்தனயா யஹ் ஸோயீ |
தனுஷஜ்ய ஜேஹி காரன் ஹோயீ || 2261
பூஜன் கௌரி ஸகீம் லை ஆயீம் |
கரத் ப்ரகாஸு பிர்யி புல்வாயீம் || 2262

ஹே ஸஹோதரா! இவள்தான் ஜனகருடைய கன்யா! இவர்களுக்காகவே ராஜா தனுஸ் யஜ்ஞம் அமைத் திருக்கிறார். ஸகிகள் இவளைக் கௌரீ பூஜை செய்ய அழைத்து வந்திருக்கிறார்கள். இந்த நந்தவனத்தில் அழகுபடுத்த ஒளி வீசிக் கொண்டு அலைந்து கொண் டிருக்கிறாள்.

ஜாஸு பிலோகி அலௌகிக் ஸோபா |
ஸஹஜ் புனீத் மோர் மனு சோபா || 2263
ஸோ ஸபு காரன் ஜான் பிதாதா |
பரக்ஹிம் ஸுபத் அங்க ஸுனு ப்ராதா ||2264

ஹே ஸஹோதரா! இவளுடைய அற்புதமான அஸாதாரணமான அழகைப் பார்த்ததுமே இயற்கையிலேயே என் தூய மனம் கலங்குகிறதே! இதன் காரணம் என்னவென்பதை ப்ரம்மனே அறிவார். ஆனால், ஹே ஸஹோதரா! கேள்; என்னுடைய வலது கண்ணும், தோளும், மங்களகரமாகத் துடிக்கின்றன. இதன் காரணம் என்ன?

ரகுவம்ஸின்ஹ கர் ஸஹஜ் ஸுபாவு |
மனு குபந்த பகு தர்யி ந காவு || 2265
மோஹி அதிஸய ப்ரதீதி மன் கேரீ |
ஜேஹிம் ஸப்னேஹுூம் பர்நாரி ந ஹேரீ ||2266

ரகுவம்ச மக்களின் வழக்கம் என்னவென்றால்; அவர்கள் மனம் எக்காரணம் கொண்டும் கெட்ட மார்க்கத்தில் அடி எடுத்துச் செல்ல மாட்டாது. எனக்கு என் மீது என் உள்ளத்திடம் மிகவும் நம்பிக்கை இருக்கிறது. ஸ்வப்னத்தில் கூட பரஸ்த்ரீகளைப் பற்றி நினையாதவர் என்றால்; விழித்துக் கொண்டிருக்கும்போது சொல்லவா வேண்டும்?

ஜின்ஹ கை லஹஹிம் ந ரிபு ரன் பீடீ |
நஹிம் பாவ்ஹிம் பரதிய மனு டீடீ || 2267
மங்கன் லஹஹிம் ந ஜின்ஹ கை நாஹீம் |
தே நர்பர் தோரே ஜக் மாஹீம் || 2268

யுத்தத்தில் சத்ருக்களைக் கண்டு புறமுதுகு காட்டி ஓடியவனும், பிற பெண்களை மனத்தாலும் கண்ணாலும் பார்க்காதவனும், பிச்சை எடுக்க வருபவர்களை வெறுங்கையுடன் திருப்பி அனுப்பாதவனுமான ச்ரேஷ்ட புருஷன் உலகில் ஜன்மம் எடுப்பது மிகக் குறைவே.

கர்த் பதகஹீ அனுஜ் ஸன்
மன் ஸிய ரூப் லோபான் |
முக ஸரோஜ் மகரந்த சபி
கர்யி மதுப் இவ பான் || 2269

ஸ்ரீ ராமன் தனது சிறிய ஸஹோதரன் லக்ஷ்மண னிடம் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவரது மனமானது ஸீதாதேவியின் அழகிலேயே லயித்து, ஸீதையின் முக ரூபமான கமலத்தில் உள்ள அழகு ரூபமான மகரந்த ரஸத்தை வண்டுகள் போல் பருகிக் கொண்டிருக்கிறது.

சிதவதி சகித் சஹூம் திஸி ஸீதா |
கஹம் கயே ந்ருபகிஸோர் மனு சிந்தா || 2270
ஜஹம் பிலோக் ம்ருக ஸாவக் நைநீ |
ஜனு தஹம் பரிஸ் கமல ஸித ச்ரேனீ || 2271

ஸீதாதேவி கலவரமடைந்து நான்கு புறமும் தேடு கிறாள். அங்கு வந்திருந்த ராஜகுமாரர்கள் எங்கு போனார்கள் என்று கவலையுறுகிறாள். இளம் மானின் கண்களைப் போன்ற அழகிய கண்களை உடைய ஸீதா தேவி எங்கெங்கு பார்க்கிறாளோ; அங்கெல்லாம் வெள்ளை நிறக் கமல மலர்களின் வரிசையே தென்பட்டன.

லதா ஓட் தப் ஸகின்ஹ லகாயே |
ஸ்யாமல கௌர் கிஸோர் ஸுஹாயே || 2272
தேகி ரூப் லோசன் லல்சானே |
ஹர்ஷே ஜனு நிஜ நிதி பஹிசானே || 2273

அப்பொழுது எல்லாத் தோழிகளும் ஸீதையிடம் வந்து ஒரு பூங்கொடியின் மறைவில், ச்யாமள, சிவந்த இரு குமாரர்களையும் காட்டினார்கள். அவர்களுடைய அழகைக் கண்டு ஸீதையின் கமலக் கண்கள் மேலும் மேலும் பார்க்க ஆவலுற்றன. அவர்கள் இத்தனை பரவசமடைந்தார்கள். எப்படி என்றால்; தனது பழைய பொக்கிஷத்தை மீண்டும் அடைந்து விட்டது போன்ற திருப்தி அவர்களுக்கு ஏற்பட்டது.

தகே நயன் ரகுபதி சபி தேகேம் |
பலகன்ஹிஹூம் பரிஹரீம் நிமேஷேம் || 2274
அதிக் ஸநேஹம் தேஹ் பை போரீ |
ஸரத் ஸஸிஹி ஜனு சிதவ சகோரீ || 2275

ஸ்ரீ ரகுநாதனின் அழகைக் கண்டு ஸீதையின் கண்கள் அசைய மறந்து விட்டன; இமைகள் மூட மறுத்தன. அதிக நட்பின் காரணமாக ஸீதையின்

உடல்நிலை ஒரு நிலையில் இல்லை; வருந்தியது. சரத் ருதுவின் சந்த்ரனைக் கண்டு சகோரப் பக்ஷி பிரஜ்ஞை யற்றுப் பார்த்து மகிழ்வடைவது போல ராமனைக் கண்ட ஸீதை மகிழ்ந்து போனாள்.

லோசன் மக ராம்ஹி உர் ஆனீ |
தீன்ஹே பலக் கபாட் ஸயானீ || **2276**
ஜப் ஸிய ஸகின்ஹ ப்ரேமபஸ் ஜானீ |
கஹி ந ஸக்ஹிம் கசு மன் ஸகுசானீ || **2277**

கண்களின் வழியாக ஸ்ரீ ராமனைத் தனது ஹிருதயத்திற்குள் கொண்டு வந்து, சதுர சிரோமணியான ஜானகி தனது கண்களின் இமையால் மூடிவிட்டாள். (அதாவது; கண்களை மூடிக்கொண்டு ராமனை த்யானம் செய்தாள்.) இம்மாதிரி ஸீதையின் ப்ரேமை நிலையைக் கண்ட தோழிகள் ஸீதை ராமனின் ப்ரேமையில் மயங்கிவிட்டதை அறிந்தார்கள். ஸீதை இதைக் கண்டு நாணுகிறாள். வெளியில் ஒரு வார்த்தையும் பேசமுடியாமல் நின்றாள்.

லதாபவன் தேம் ப்ரகட் பே
தேஹி அவஸர் தோவு பாயி |
நிகஸே ஜனு ஜுக் பிமல்
பிது ஜலத் படல் பிலகாயி || **2278**

அத்தருணம் அந்த ஸஹோதரர்கள் லதா க்ருஹத்திலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் வெளியே வந்து தரிசனம் அளித்தது எப்படியிருந்தது என்றால்; நிர்மலமான இரண்டு நிலாக்கள் மேகத் திரையைக் கிழித்துக் கொண்டு வெளியே தோன்றியிருக்கின்றனவோ என்று எண்ணும்படி இருந்தது.

ஸோபா ஸீவம் ஸுபக் தோவு பீரா |
நீல பீத ஜலஜாப் ஸரீரா || **2279**
மோர்பங்க ஸிர ஸோஹத் நீகே |
குச்ச பீச் பிச் குஸும கலீ கே || **2280**

இரு ஸஹோதரர்களும் அழகின் எல்லைக் களஞ்சியம். அவர்களுடைய சரீரத்தின் ஒளியோ ஒரு நீலக் கமலம் போலவும், ஒரு மஞ்சள் நிறக் கமலம் போலவும்

இருந்தது. தலையில் அழகான மயில் தோகை விளங்கியது. அதன் நடுநடுவிலே பூக்களினால் ஆன குஞ்சங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

பால திலக் ச்ரமபிந்து ஸுஹாயே |
ச்ரவன் ஸுபக் பூஷன் சபி சாயே || 2281
பிகட ப்ருகுடி கச் கூகர்வாரே |
நவ ஸரோஜ் லோசன் ரத்நாரே || 2282

நெற்றியில் திலகமும்; வியர்வைத் துளிகளும் மின்னின. காதுகளில் அழகிய காதணிகள் சோபையைக் கொடுக்கின்றன. வளைந்த வில் போன்ற புருவங்களுக்கு ஈடு எது? சுருண்ட சிறு தலை முடியில் மனம் மயங்குகிறது. புதிய சிவப்பு வர்ணத் தாமரையைப் போன்ற சிவந்த அழகான நேத்ரங்கள்.

சாரு சிபுக் நாஸிகா கபோலா |
ஹாஸ் பிலாஸ் லேத் மனு மோலா || 2283
முக்சபி கஹி ந ஜாயி மோஹி பாஹீம் |
ஜோ பிலோகி பஹு காம் லஜாஹீம் || 2284

முகவாய், மூக்கு, கன்னம் இந்த அங்கங்களின் அழகைச் சொல்லி முடியாது. அவளது சிரிப்பின் அழகோ நம் மனத்தைக் கவர்ந்து எங்கோ இழுத்துச் செல்கிறது. முகத்தின் அழகை என் வார்த்தை கொண்டு வர்ணிக்க இயலாது. அந்த முகத்தைக் கண்டு கோடிக் கணக்கான காம தேவர்களே நாணமுறுவார்கள்.

உர் மனி மால கம்பு கல கீவா |
காம் கலப கர் புஜ பலஸீம்வா || 2285
ஸுமன் ஸமேத் பாம் கர தோனா |
ஸாம்வர் கும்வர் ஸகீ ஸுடி லோனா || 2286

மார்பில் அழகான மணி மாலைகள் விளங்கின. சங்கு மாதிரிப் பேரழகு பொருந்திய கழுத்து. மேலும்-கீழுமாக ஏற்ற இறக்கத்துடன் யானையின் துதிக்கை போல் ரம்யமான புஜங்கள். அவை மிகுந்த பலத்தைக் காட்டுகின்றன. அவரது இடது கையில் புஷ்பக் கூடை இருக்கிறது. ஹே ஸகீ! இந்த ச்யாமள நிறக் குமாரன் மிகவும் ஸுந்தர வடிவம் கொண்டவர் என்கிறாள்.

உடல்நிலை ஒரு நிலையில் இல்லை; வருந்தியது. சரத் ருதுவின் சந்த்ரனைக் கண்டு சகோரப் பக்ஷி பிரஜ்ஞை யற்றுப் பார்த்து மகிழ்வடைவது போல ராமனைக் கண்ட ஸீதை மகிழ்ந்து போனாள்.

லோசன் மக ராம்ஹி உர் ஆனீ |
தீன்ஹே பலக் கபாட் ஸயானீ || 2276
ஜப் ஸிய ஸகின்ஹ ப்ரேமபஸ் ஜானீ |
கஹி ந ஸக்ஹிம் கசு மன் ஸகுசானீ || 2277

கண்களின் வழியாக ஸ்ரீ ராமனைத் தனது ஹிரு தயத்திற்குள் கொண்டு வந்து, சதுர சிரோமணியான ஜானகி தனது கண்களின் இமையால் மூடிவிட்டாள். (அதாவது; கண்களை மூடிக்கொண்டு ராமனை த்யா னம் செய்தாள்.) இம்மாதிரி ஸீதையின் ப்ரேமை நிலை யைக் கண்ட தோழிகள் ஸீதை ராமனின் ப்ரேமையில் மயங்கிவிட்டதை அறிந்தார்கள். ஸீதை இதைக் கண்டு நாணுகிறாள். வெளியில் ஒரு வார்த்தையும் பேசமுடி யாமல் நின்றாள்.

லதாபவன் தேம் ப்ரகட் பே
தேஹி அவஸர் தோவு பாயி |
நிகஸே ஜனு ஜுக் பிமல்
பிது ஜலத் படல் பிலகாயி || 2278

அத்தருணம் அந்த ஸஹோதரர்கள் லதா க்ருஹத்தி லிருந்து வெளியேறினார்கள். அவர்கள் வெளியே வந்து தரிசனம் அளித்தது எப்படியிருந்தது என்றால்; நிர்மலமான இரண்டு நிலாக்கள் மேகத் திரையைக் கிழித்துக் கொண்டு வெளியே தோன்றியிருக்கின்ற னவோ என்று எண்ணும்படி இருந்தது.

ஸோபா ஸீவம் ஸுபக் தோவு பீரா |
நீல பீத ஜலஜாப் ஸரீரா || 2279
மோர்பங்க ஸிர ஸோஹத் நீகே |
குச்ச பீச் பிச் குஸும கலீ கே || 2280

இரு ஸஹோதரர்களும் அழகின் எல்லைக் களஞ்சி யம். அவர்களுடைய சரீரத்தின் ஒளியோ ஒரு நீலக் கமலம் போலவும், ஒரு மஞ்சள் நிறக் கமலம் போலவும்

இருந்தது. தலையில் அழகான மயில் தோகை விளங்கியது. அதன் நடுநடுவிலே பூக்களினால் ஆன குஞ்சங்கள் தொங்கிக் கொண்டிருந்தன.

பால திலக் ச்ரமபிந்து ஸுஹாயே |
ச்ரவன் ஸுபக் பூஷன் சபி சாயே || 2281
பிகட ப்ருகுடி கச் கூகர்வாரே |
நவ ஸரோஜ் லோசன் ரத்நாரே || 2282

நெற்றியில் திலகமும்; வியர்வைத் துளிகளும் மின்னின. காதுகளில் அழகிய காதணிகள் சோபையைக் கொடுக்கின்றன. வளைந்த வில் போன்ற புருவங்களுக்கு ஈடு எது? சுருண்ட சிறு தலை முடியில் மனம் மயங்குகிறது. புதிய சிவப்பு வர்ணத் தாமரையைப் போன்ற சிவந்த அழகான நேத்ரங்கள்.

சாரு சிபுக் நாஸிகா கபோலா |
ஹாஸ் பிலாஸ் லேத் மனு மோலா || 2283
முக்சபி கஹி ந ஜாயி மோஹி பாஹீம் |
ஜோ பிலோகி பஹு காம் லஜாஹீம் || 2284

முகவாய், மூக்கு, கன்னம் இந்த அங்கங்களின் அழகைச் சொல்லி முடியாது. அவளது சிரிப்பின் அழகோ நம் மனத்தைக் கவர்ந்து எங்கோ இழுத்துச் செல்கிறது. முகத்தின் அழகை என் வார்த்தை கொண்டு வர்ணிக்க இயலாது. அந்த முகத்தைக் கண்டு கோடிக் கணக்கான காம தேவர்களே நாணமுறுவார்கள்.

உர் மனி மால கம்பு கல கீவா |
காம் கலப கர் புஜ பலஸீம்வா || 2285
ஸுமன் ஸமேத் பாம் கர தோனா |
ஸாம்வர் கும்வர் ஸகீ ஸுடி லோனா || 2286

மார்பில் அழகான மணி மாலைகள் விளங்கின. சங்கு மாதிரிப் பேரழகு பொருந்திய கழுத்து. மேலும்-கீழுமாக ஏற்ற இறக்கத்துடன் யானையின் துதிக்கை போல் ரம்யமான புஜங்கள். அவை மிகுந்த பலத்தைக் காட்டுகின்றன. அவரது இடது கையில் புஷ்பக் கூடை இருக்கிறது. ஹே ஸகீ! இந்த ச்யாமள நிறக் குமாரன் மிகவும் ஸுந்தர வடிவம் கொண்டவர் என்கிறாள்.

கேஹரி கடி பட பீத தர்
ஸுஷமா ஸீல் நிதான் |
தேகி பானுகுலபூஷன்ஹி
பிஸ்ரா ஸகின்ஹ அபான் || 2287

ஸிம்மம் போல் மெல்லிய அழகான இடுப்பு உடையவரும், பீதாம்பரம் உடுத்தி இருப்பவரும், சோபையும், சீலமும் கொண்ட களஞ்சியம் போன்ற வரும், ஸூர்ய குல பூஷணருமான ராமச்சந்த்ரனைப் பார்த்து எல்லா ஸகிகளும் தங்களை மறந்த நிலையில் நின்று விட்டார்கள்.

தரி தீரஜு ஏக் ஆலி ஸயானீ |
ஸீதா ஸன் போலீ கஹி பானீ || 2288
பஹூரி கௌரி கர் த்யான் கரேஹூ |
பூபகிஸோர் தேகி கின் லேஹூ || 2289

உண்மையில் கெட்டிக்காரியான ஸகி ஒருவள் துணிவுடன் ஜானகியின் கைகளைப் பற்றிக் கொண்டு; ஸீதா, கௌரீ பூஜையைப் பிறகு செய்யலாம். இத்தருணம் இந்த ராஜ குமாரனை ஏன் பார்க்கக் கூடாது.? இதுவல்லவோ தருணம்; என்றாள்.

ஸகுசி ஸீயம் தப் நயன உகாரே |
ஸன்முக் தோவு ரகுஸிங்க நிஹாரே || 2290
நக ஸிக் தேகி ராம் கை ஸோபா |
ஸுமிரி பிதா பனு மனு அதி சோபா || 2291

அப்போது ஸீதாதேவி நாணத்துடன் கண்களைத் திறந்ததும், அவள் தன் ரகுகுலத்தின் இரண்டு இளம் ஸிங்கங்களைக் கண்டாள். நகத்திலிருந்து சிரஸ் வரை ராமனின் சோபையைக் கண்டு மயங்கிய ஸீதைக்குத் தந்தையின் பயங்கரமான சபதம் நினைவில் வந்து மிகுந்த துக்கம் கொடுத்தது. (அதாவது; வில் உடைத்தால்தான் வரன், அவளை மணமுடிக்க வேண்டும் என்பது)

பர்பஸ் ஸகின்ஹ லகி ஜப் ஸீதா |
பயவு கஹ்ரு ஸப் கஹஹிம் ஸபீதா || 2292

புனி ஆவுப் ஏஹி பேரியாம் காலீ |
அஸ் கஹி மன் பிஹஸீ ஏக் ஆலீ || 2293

ப்ரேம வசத்தால் மயங்கிய நிலையில் நிற்கும் ஸீதை யைக் கண்ட ஸகிகள் பயத்துடன் ஹே தேவி! நேரம் அதிகம் ஆகிவிட்டது. ஆகையால், நாம் இப்பொழுது செல்வோம். நாளைக்கு இதே நேரம் மீண்டும் வரு வோம் என்று கூறினார்கள். ஒரு தோழி புன்னகை யுடன் மனத்தில் சிரித்துக் கொண்டாள்.

கூட் கிரா ஸுனி ஸிய ஸகுசானீ |
பயவு பிலம்பு மாது பய் மானீ || 2294
தரி படி தீர் ராமு உர் ஆனே |
பிரி அபனபவு பிது பஸ் ஜானே || 2295

தோழிகளின் இந்த ரகஸ்யமான வார்த்தையைக் கேட்ட ஸீதை உண்மையில் நாணத்தினால் உடல் சிலிர்த் தாள். நேரம் ஆகி விட்டதே என்பதை அறிந்ததும், தாய் என்ன கூறுவாளோ என்று பயந்தாள். பின்னர் தைரியத்தைத் தாங்கி ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியை மனத் தில் த்யானித்துக் கொண்டு தன்னைத் தந்தையின் அதீ னம் என்று நினைவில் கொண்டு ஸகிகளுடன் வீடு திரும்பினாள்.

தேகன் மிஸ் ம்ருக பிஹக் தரு
பிரயி பஹோரி பஹோரி |
நிரகி நிரகி ரகுபீர் சபி
பாடயி ப்ரீதி ந தோரி || 2296

ம்ருகங்களையும், பக்ஷிகளையும், மரம், கொடி களையும் பார்க்கும் சாக்கில் ஜானகி தேவி திரும்பித் திரும்பி ராமனுடைய அழகைக் கண்டு களித்த வண் ணம் சென்றாள். இதனால் ஸீதையின் ப்ரேமை மனத் தில் பொங்கும் ஆர்வத்திற்குக் குறைவில்லை.

ஜானி கடின ஸிவ சாப் பிஸுரதி |
சலீ ராகி உர் ஸ்யாமல் மூரதி || 2297
ப்ரபு ஜப் ஜாத் ஜானகீ ஜானீ |
ஸுக ஸனேஹ் ஸோபா குன் கானீ || 2298

கடினமான சிவதனுஸினுடைய பயங்கரமான சபதத்தை எண்ணி வருந்தியவாறு. ஸ்ரீ ராமனின் ச்யாமள சரீரத்தை மனத்தில் கொண்டும் தனது இல்லம் சென்றாள் ஸீதை. அவள் சென்றதும் அவளுடன் தனது ஸுகம், அன்பு, ஒளி, களஞ்சியம் போன்ற அற்புதமான அவர்கள் குணம் எல்லாமே சென்றது போல் உணர்ந்தார் ஸ்ரீராமச்சந்த்ரன். அதாவது; எல்லாமே நிறைந்த ஜானகி தன்னை விட்டுப் போவதாக நினைத்தார் ஸ்ரீராமன். சிவதனுஸ் கடினமானதாயிற்றே என்று நினைத்துப் பார்க்கும்போது ஸுகுமாரமான ஸ்ரீராமன் அதை எப்படி உடைப்பார் என்ற கவலை ஏற்பட்டது. தந்தை வைத்த பணயத்தை எண்ணும்போது அவளது உள்ளத்தில் கலக்கம் ஏற்பட்டது. ஆகவே, மனத்திலேயே புலம்பினாள். பகவானின் பலத்தை எண்ணியதும் மகிழ்வு கொண்டாள். பிறகு ச்யாமள வண்ணத்தை எண்ணியபடியே சென்றாள்.

பரம ப்ரேமமய ம்ருது மஸி கீன்ஹி ।
சாரு சித்த பீதீம் லிகி லீன்ஹி ॥ 2299
கயீ பவானீ பவன் பஹோரீ ।
பந்தி சரன் போலீ கர் ஜோரீ ॥ 2300

ஸீதாதேவி தனது அழகிய சித்தமாகிய மனத்திரையில் ஸ்ரீராமனின் உருவத்தை, ப்ரேமை மயமான அழகிய மையினால் வரைந்து கொண்டாள். பின்பு பவானியின் கோவிலுக்குச் சென்றாள். தேவியின் பாதங்களில் தலை வணங்கிக் கை கூப்பி வேண்டினாள்.

ஜய ஜய கிரிபரராஜ் கிஸோரீ ।
ஜய மஹேஸ் முக சந்த சகோரீ ॥ 2301
ஜய கஜபதன் ஷடானன் மாதா ।
ஜகத் ஜனனி தாமினி துதி காதா ॥ 2302

ஹே ச்ரேஷ்ட பர்வத ராஜா ஹிமாலயத்தினுடைய குமாரியான பார்வதியே! தங்களுக்கு ஜயம் உண்டாகட்டும். மஹா தேவனுடைய முகரூபமான சந்த்ரனைப் பார்க்கும் சகோரபக்ஷி போன்றவளே! உங்களுக்கு ஜய முண்டாகட்டும். யானை முகத்தினனான கணபதியின் தாயே! ஆறுமுகம் கொண்ட கார்த்திகேயனின் தாயே! ஹே ஜகஜ் ஜனனீ, மின்னலைப் போன்ற காந்தியு

டைய சரீரம் கொண்டவளே! உங்களுக்கு ஜயமுண்டா கட்டும்!!

நஹிம் தவ ஆதி மத்ய அவஸானா |
அமித ப்ரபாவு பேது நஹிம் ஜானா || 2303
பவ பவ பிபவ பராபவ காரினி |
பிஸ்வ பிமோஹனி ஸ்வபஸ் பிஹாரினி ||2304

தங்களுக்கு முதலும் இல்லை! இடையும் இல்லை! முடிவும் இல்லை. தங்களுடைய எல்லையில்லாத ப்ர பாவத்தை வேதமும் அறியவில்லை. தாங்களே உல கத்தை உண்டாக்கவும், காக்கவும், அழிக்கவும், வல்ல வள். உலக முழுமையும் மோஹமடையச் செய்பவளும், ஸ்வதந்த்ர ரூபமாக எங்கும் நிறைந்து விளையாடி வரு பவளும் தாங்கள்தான் என்று துதித்தாள் ஜானகி.

பதிதேவதா ஸுதீய மஹும்
மாது ப்ரதம தவ ரேக் |
மஹிமா அமித் ந ஸக்ஹிம்
கஹி ஸஹஸ் ஸாரதா ஸேஷ் || 2305

பதியையே தனது இஷ்ட தெய்வமாகப் போற்றும் ச்ரேஷ்ட ஸ்த்ரீகளுக்குள் அன்னையே! தங்களைத் தான் முதலாவதாக எண்ண வேண்டும். தங்களுடைய எல்லையில்லாத ப்ரபாவத்தை, மஹிமையை ஆயிரம் கலைமகளாலும், சேஷனாலும் கூட வர்ணிக்க முடியாது.

ஸேவத் தோஹி ஸுலப் பல் சாரீ |
பரதாயனீ புராரி பியாரீ || 2306
தேபி பூஜி பத் கமல தும்ஹாரே |
ஸுர் நர் முனி ஸப் ஹோஹிம் ஸுகாரே ||2307

பக்தர்களுக்கு இச்சைப்படி வரம் கொடுக்கும் தேவியே! த்ரிபுரத்தின் சத்ருவான சிவனாரின் ப்ரிய பத்னியே, தங்களுக்கு ஸேவை செய்வதால் நான்கு விதப் பலனும் கிடைக்கும் என்பது எனக்குத் தெரியும். ஹே தேவி! தங்கள் சரண கமலங்களைத் தலை குனிந்து வணங்கி வழிபட்டு, மனிதர்களும், ரிஷிகளும் மற்றும் யாவரும் பரம ஸுகத்தையடைகிறார்கள்.

மோர் மனோரது ஜானஹு நீகேம் |
பஸ்ஹு ஸதா உர் புர் ஸப்ஹீ கேம் || 2308
கீன்ஹேஉம் ப்ரகட் ந காரன் தேஹீம் |
அஸ கஹி சரன் கஹே பைதேஹீம் || 2309

ஆகவே; ஹே தேவி! என் விருப்பத்தைத் தாங்கள் அறிவீர்கள். எப்படியென்றால்; தாங்கள் எப்போதும் பக்தர்களின் ஹிருதய ரூபியான நகரத்தில் வாஸம் செய்கிறீர்கள். இந்தக் காரணத்தினால்தான் என் மனத்தைத் திறந்து நான் தங்களிடம் வெளிப்படையாகக் கூற முடியவில்லை. இவ்விதம் ஜானகி தேவி கிரிஜா தேவியின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

பிநய் ப்ரேம் பஸ் பயீ பவானீ |
கஸீ மால மூர்தி முஸ்கானீ || 2310
ஸாதர் ஸியம் ப்ரஸாது ஸிர் தரேவூ |
போலீ கௌரி ஹர்ஷ் ஹியம் பரேவூ || 2311

ஸீதையின் அடக்கமும், அன்பும், ப்ரேமையும் கொண்ட வந்தனத்திற்குக் கிரிஜாதேவி வசமாகி ஆதரவு கொடுத்தாற்போல் கிரிஜாதேவியின் மூர்த்தியிலுள்ள கழுத்துப் பூமாலை நழுவி விழுந்தது. கிரிஜாதேவியின் அந்த உருவம் மெதுவாகப் புன்னகை புரிந்தது. ஸீதையும் விழுந்த மாலையை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு தலையில் சூடிக் கொண்டாள். கௌரியின் மனம் குளிர்ந்தது. ஸீதையைப் பார்த்து;

ஸுனு ஸிய ஸத்ய அஸீஸ் ஹமாரீ |
பூஜிஹி மன் காமனா தும்ஹாரீ || 2312
நாரத் பசன் ஸதா ஸுசி ஸாசா |
ஸோ பரு மிலிஹி ஜாஹிம் மனு ராசா || 2313

ஹே ஸீதா! நம்முடைய ஆசீர்வாதம் இதுவே. உன் மனோபீஷ்டம் நிறைவேறும். நாரதரின் வசனம் என்றும் வீணாகாது; பொய்யாகாது; தூய்மையானது; ஸந்தேஹம், ப்ரமை முதலிய தோஷங்கள் இல்லாதது; உண்மையானது. எவர் மீது உன் மனம் ஈடுபட்டு விட்டதோ அதே வரன் உனக்குக் கட்டாயம் கிடைப்பான். நீ ஸுகமடைவாய்.

மனு ஜாஹிம் ராசேவு மிலிஹி
ஸோ பரு ஸஹஜ் ஸுந்தர் ஸாம்வரோ |
கருனா நிதான் ஸுஜான் ஸீலு
ஸநேஹு ஜாநத் ராவ்ரோ || 2314
ஏஹி பாந்தி கௌரி அஸீஸ் ஸுனி
ஸியஸஹித் ஹியம் ஹர்ஷீம் அலீ |
துளஸீ பவானிஹி பூஜி புனி புனி
முதித் மன் மந்திர் சலீ || 2315

எவரிடம் உன் மனம் லயித்ததோ; எவர் மீது நீ ஆவல் கொண்டாயோ; இயற்கையிலேயே அழகு வாய்ந்த அதே ச்யாமள வர்ணனான ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியே உனக்கு வரனாக அமைவார். அவர் தயையின் களஞ்சியம்; எல்லாம் தெரிந்த ஸர்வஜ்ஞர். உன்னுடைய, சீலமான குணத்தையும், நட்பையும் அவர் அறிவார். இம்மாதிரியான கௌரீ தேவியின் ஆசி வார்த்தைகளைக் கேட்டு ஸீதையும், ஸகிகளும் பரமானந்த மடைந்தார்கள். தேவி பவானியைப் பலமுறை திரும்பத் திரும்ப வணங்கி வழிபாடு செய்து விட்டு ஸீதாதேவி ப்ரஸன்ன மனத்தடன் ராஜ மஹல் திரும்பினாள், என்கிறார் துளஸி.

ஜானி கௌரி அனுகூல் ஸிய
ஹிய ஹர்ஷு ந ஜாயி கஹி |
மஞ்ஜுல மங்கல மூல் பாம
அங்க பர்கன் லகே || 2316

கௌரியின் அனுகூலமான வார்த்தைகளைக் கேட்டு ஸீதையின் மனம் குளிர்ந்த நிகழ்ச்சியைப் பற்றிச் சொல்லவே முடியாது. மங்களகரமான சகுனத்தின் அறிகுறியாக அவளது இடது தோள்கள் துடித்தன.

ஹ்ருதயம் ஸராஹத் ஸீய லோனாயீ |
குர் ஸமீப் கவ்னே தோவு பாயீ || 2317
ராம கஹா ஸபு கௌஸிக் பாஹீம் |
ஸரல் ஸுபாவு சுவத் சல் நாஹீம் || 2318

மனத்திற்குள் ஸீதையின் அழகை ச்லாகித்துக் கொண்டே இரு ஸஹோதரர்களும் குருவின் அருகில் வந்து சேர்ந்தார்கள். ஸ்ரீராமச்சந்த்ரமூர்த்தி விச்வாமித்ரரிடம்

எல்லா விவரங்களையும் கூறினார். ஏனெனில்; ராமன் ஸரளமான ஸ்வபாவம் உள்ளவர். ஆகவே; அவருக்கு ஒன்றையும் மறக்க முடியவில்லை. (அதாவது, வஞ் சனை தொட்டதே இல்லை)

ஸுமன் பாயி முனி பூஜா கீன்ஹி ।
புனி அஸீஸ் துஹு பாயின்ஹ தீன்ஹீ ॥ 2319
ஸுபல் மனோரத் ஹோஹும் தும்ஹாரே ।
ராமு லகனு ஸுனி பயே ஸுகாரே ॥ 2320

ராம லக்ஷ்மணர்களிடம் புஷ்பங்களைப் பெற்றுக் கொண்ட முனிவர் விசேஷமாகப் பூஜை செய்தார். பின்பு இரு குமாரர்களுக்கும் உங்களுடைய மனோபீஷ் டம் நன்கு நிறைவேறும் என்று ஆசீர்வாதம் செய்தார். பின்னர் அவர் ஆசியைக் கேட்ட ராம லக்ஷ்மணர்கள் மிகவும் மனமகிழ்வு அடைந்தார்கள்.

கரி போஜனு முனிபர் பிக்யானீ ।
லகே கஹன் கசு கதா புரானீ ॥ 2321
பிகத் திவஸு குரு ஆயஸு பாயீ ।
ஸந்த்யா கரன் சலே தோவு பாயீ ॥ 2322

முனிச்ரேஷ்டரான விச்வாமித்ரர் அன்னம் அருந் திய பின் குமாரர்களை உட்கார வைத்துப் புராணக் கதைகளைக் கூற ஆரம்பித்தார். இம்மாதிரியே பகல் கழிந்து மாலை நேரம் வந்தது. முனிவரின் ஆஜ்ஞை யைப் பெற்று ராம லக்ஷ்மணன் இருவரும் ஸந்த்யா வந்தனம் செய்யப் போனார்கள்.

ப்ராசீ திஸி ஸஸி உயவு ஸுஹாவா ।
ஸிய முக ஸரிஸ தேகி ஸுகு பாவா ॥ 2323
பஹுரி பிசாரு கீன்ஹ மன் மாஹீம் ।
ஸீய பதன் ஸம ஹிமகர் நாஹீம் ॥ 2324

அங்குக் கிழக்குத் திசையில் அழகான சந்த்ரன் உதய மாகினான். அந்த நிலவை ஸீதா தேவியின் முகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து பார்த்து ஸுகமடைந்தார். ஸ்ரீ ராமன். இந்த முழு நிலவு ஸீதையின் முக நிலவுக்கு எதிராக முடியுமா? என்று மனத்தில் எண்ணினார் ஸ்ரீ ராகவன்.

ஜன்மு ஸிந்து புனி பந்து |
பிஷு தின் மலீன் ஸகலங்க் ||
ஸிய முக் ஸமதா பாவ் கிமி |
சந்து பாவுரோ ரங்க் || 2325

உப்புக் கடலில் சந்த்ரன் தோன்றினான். அதே உப்புக் கடலில்தான் இவனுடைய ஸஹோதரன் ஆலகால விஷம் தோன்றியது. இவனோ பகலில் சோபை குன்றித் தேஜஸ் இல்லாமல் இருக்கிறான்; பகலிலே இவன் இருக்கும் இடம் தெரியவில்லை; மேலும், கலக்கத்தோடு கூடியவன். அப்படி அப்பாவியான, இத்தனையும் கொண்ட பரிதாபப்படத்தக்க சந்த்ரன் ஸீதா தேவியின் மாசுமறுவற்ற முகத்திற்கு எப்படி ஈடாக ஆக முடியும்?

கடயி படயி பிரஹினி துக்தாயீ |
க்ரஸயி ராஹு நிஜ ஸந்திஹிம் பாயீ || 2326
கோக் ஸோக்ப்ரத பங்கஜ் த்ரோஹீ |
அவகுன் பஹுத் சந்த்ரமா தோஹீ || 2327

இந்தச் சந்த்ரனானது வளர்வதும் குறைவதுமாக இருக்கிறது. மேலும், விரஹிணி ஸ்த்ரீகளுக்குத் துக்கத்தைக் கொடுக்கிறது. ராஹு என்னும் பாம்பு இதை அடிக்கடி விழுங்கி துக்கத்தைக் கொடுக்கிறது. சகோர பக்ஷிகளுக்குப் பிரிவின் துயரத்தைக் கொடுக்க வல்லது. (அதாவது;, காதலர்களுக்கு வியோகம் கொடுக்கக் கூடியது; மேலும், கமலமலரின் எதிரி ஸூர்யனைக் கண்டதும் கமலம் மலரும், ஆகவே; இரவில் வாடச் செய்வதால்; சந்த்ரனை எதிரி என்கிறார் கவி.)

ராமன் மனத்திற்குள் ஹே சந்த்ரனே! உன்னிடம் இப்படிப் பலவிதமான துர்க்குணங்கள் இருக்கின்றன. ஆனால்; இந்த ஸீதையிடத்திலோ உன்போன்ற எவ்வகைத் துர்க்குணங்களும் இல்லை.

பைதேஹீ முக் படதர் தீன்ஹே |
ஹோயி தோஷு பட் அனுசித் கீன்ஹே ||2328
ஸிய முக் சபி பிது ப்யாஜ் பகானீ |
குர் பஹிம் சலே நிஸா படி ஜானீ || 2329

ஆகவே; ஜானகியின் முக மண்டலத்தை உன்னுடன் உபமானமிட்டுக் கூறுவது தகுதியற்றது; அது மஹா தவறு; அவ்வாறு கூறினால் எனக்குத் தோஷமே நேரும். இம்மாதிரிச் சந்த்ரனை ஒப்பிட்டு ஒப்பிட்டுப் பார்த்து ஸீதையின் அழகிய முகத்தை நிறுத்தி வர்ணித்துக் கொண்டிருந்ததில் இரவு வெகு நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்து குருவின் அருகில் சென்றார் ஸ்ரீராமன்.

கரி முனி சரன் ஸரோஜ் ப்ரனாமா ।
ஆயஸு பாயி கீன்ஹ பிச்ராமா ॥ *2330*
பிகத் நிஸா ரகுநாயக் ஜாகே ।
பந்து பிலோகி கஹன் அஸ் லாகே ॥ *2331*

முனிவரின் சரண கமலங்களில் வீழ்ந்து வந்தனை செய்தபின், குருவின் ஆஜ்ஞை பெற்று ஸ்ரீ ரகுநாதன் நித்திரைக்குச் சென்றார். இரவு முடிந்து விடியற்காலையில் ஸ்ரீ ராமன் எழுந்திருந்தார். பிறகு ஸஹோதரனை நோக்கி;

உயவு அருன் அவலோகஹு தாதா ।
பங்கஜ் கோக் லோக் ஸுகதாதா ॥ *2332*
போலே லக்னு ஜோரி ஜுக் பானீ ।
ப்ரபு ப்ரபாவு ஸூசக் ம்ருது பானீ ॥ *2333*

ஹே ஸஹோதரா! இங்கு பார்! கமல மலருக்கும், சக்ரவாக பக்ஷிக்கும், இன்னும் ஸகல உலகிற்கும் ஸுகத்தை அளிக்க வல்ல அருணோதயமாகி விட்டது. எழுந்திரு என்றார். பின்பு லக்ஷ்மணன் ராமனை நோக்கிக் கை கூப்பி ஸ்வாமி ஸ்ரீராமனின் ப்ரபாவத்தைத் தெரிவிக்கின்ற முறையில் அருமையான குரலில்;

அருனோதயம் ஸகுசே குமுத்
உட்கன் ஜோதி மலீன் ।
ஜிமி தும்ஹார் ஆகமன் ஸுனி
பயே ந்ருபதி பலஹீன் ॥ *2334*

எப்படி அருணோதயம் ஆனவுடன் குமுதினி மலர் தானாகவே பலவீனமடைந்து வாடி விடுகிறதோ; நக்ஷத்ரங்களின் ஒளி மழுங்கிவிடுகிறதோ; அது போல் தங்

கள் வருகை பற்றிக் கேள்விப்பட்ட எல்லா ராஜாக்களும் பலவீனமடைந்து விட்டார்கள்.

நிருப ஸப் நகத் கரஹிம் உஜியாரீ |
டாரி ந ஸக்ஹிம் சாப் தம பாரீ || 2335
கமல் கோக் மதுகர் கக் நாநா |
ஹர்ஷே ஸகல நிஸா அவஸாநா || 2336

அதாவது; எல்லா ராஜாவாகிற தாரகைகள் மந்தமாக ஒளிவீசுகின்றன. ஆனால், தனுஸ் ரூபியான இருட்டைப் போக்க முடியவில்லை. எப்படி ராத்ரி முடிந்ததும் கமல மலர், சகோர பக்ஷிகள், வண்டுகள், மேலும்; பல்வேறு பறவை இனங்கள் ஆனந்தமடைகின்றனவோ;

ஐஸேஹிம் ப்ரபு ஸப் பக்த தும்ஹாரே |
ஹோயிஹஹிம் டுடேம் தனுஷ் ஸுகாரே ||2337
உயவு பாநு பிநு ச்ரம தம நாஸா |
துரே நகத் ஜக் தேஜு ப்ரகாஸா || 2338

அதே மாதிரி; ஹே ப்ரபு, தங்களுடைய பக்தர்கள் எல்லோரும் இந்தச் சிவ தனுஸைத் தாங்கள் உடைத்த துமே பரம ஸுகமடைவார்கள். ஸூர்யோதயம் ஆகி விட்டது; கஷ்டமே இல்லாமல் இருட்டு அழிந்தது; நக்ஷத்ரங்கள் மறைந்தன. உலகில் எங்கும் ஸூர்யனின் ஒளி ப்ரகாசிக்கத் தொடங்கியது. என்றார் லக்ஷ்மணன்.

ரபி நிஜ உதய ப்யாஜ் ரகுராயா |
ப்ரபு ப்ரதாபு ஸப் நிருபன்ஹ திகாயா || 2339
தவ புஜ பல் மஹிமா உத்காடீ |
ப்ரகடீ தனு பிகடன் பரிபாடீ || 2340

மேலும்; ஹே ரகுநாதா! ஸூர்யன் தன்னுடைய உதயத்தின் அபாரச் சக்தியின் ஒளியினால் எல்லாவற்றையும் மங்கச் செய்து விட்டான் என்பதுபோல் எல்லா மன்னர்களுக்கும் ப்ரபுவான தங்கள் ப்ரதாபம் காட்டப் பட்டு விட்டது. (தாங்கள் ஒரு ஸூர்யன் போன்றவர். தங்கள் சக்திக்கு முன் இந்த அரசர்களின் சக்தி எம் மாத்திரம்?) ஆயினும்; தங்களுடைய புஜ பலத்தையும் காட்ட வேண்டியே இந்த வில் உடைக்கும் படலம்

ஆகவே; ஜானகியின் முக மண்டலத்தை உன்னுடன் உபமானமிட்டுக் கூறுவது தகுதியற்றது; அது மஹா தவறு; அவ்வாறு கூறினால் எனக்குத் தோஷமே நேரும். இம்மாதிரிச் சந்த்ரனை ஒப்பிட்டு ஒப்பிட்டுப் பார்த்து ஸீதையின் அழகிய முகத்தை நிறுத்தி வர்ணித்துக் கொண்டிருந்ததில் இரவு வெகு நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்து குருவின் அருகில் சென்றார் ஸ்ரீராமன்.

கரி முனி சரன் ஸரோஜ் ப்ரனாமா ।
ஆயஸு பாயி கீன்ஹ பிச்ராமா ॥ *2330*
பிகத் நிஸா ரகுநாயக் ஜாகே ।
பந்து பிலோகி கஹன் அஸ் லாகே ॥ *2331*

முனிவரின் சரண கமலங்களில் வீழ்ந்து வந்தனை செய்தபின், குருவின் ஆஜ்ஞை பெற்று ஸ்ரீ ரகுநாதன் நித்திரைக்குச் சென்றார். இரவு முடிந்து விடியற்காலையில் ஸ்ரீ ராமன் எழுந்திருந்தார். பிறகு ஸஹோதரனை நோக்கி;

உயவு அருன் அவலோகஹு தாதா ।
பங்கஜ் கோக் லோக் ஸுகதாதா ॥ *2332*
போலே லக்னு ஜோரி ஜுக் பானீ ।
ப்ரபு ப்ரபாவு ஸூசக் ம்ருது பானீ ॥ *2333*

ஹே ஸஹோதரா! இங்கு பார்! கமல மலருக்கும், சக்ரவாக பக்ஷிக்கும், இன்னும் ஸகல உலகிற்கும் ஸுகத்தை அளிக்க வல்ல அருணோதயமாகி விட்டது. எழுந்திரு என்றார். பின்பு லக்ஷ்மணன் ராமனை நோக்கிக் கை கூப்பி ஸ்வாமி ஸ்ரீராமனின் ப்ரபாவத்தைத் தெரிவிக்கின்ற முறையில் அருமையான குரலில்;

அருனோதயம் ஸகுசே குமுத்
உட்கன் ஜோதி மலீன் ।
ஜிமி தும்ஹார் ஆகமன் ஸுனி
பயே ந்ருபதி பலஹீன் ॥ *2334*

எப்படி அருணோதயம் ஆனவுடன் குமுதினி மலர் தானாகவே பலவீனமடைந்து வாடி விடுகிறதோ; நக்ஷத்ரங்களின் ஒளி மழுங்கிவிடுகிறதோ; அது போல் தங்

கள் வருகை பற்றிக் கேள்விப்பட்ட எல்லா ராஜாக்களும் பலவீனமடைந்து விட்டார்கள்.

ந்ருப ஸப் நகத் கரஹிம் உஜியாரீ |
டாரி ந ஸக்ஹிம் சாப் தம பாரீ || 2335
கமல் கோக் மதுகர் கக் நாநா |
ஹர்ஷே ஸகல நிஸா அவஸாநா || 2336

அதாவது; எல்லா ராஜாவாகிற தாரகைகள் மந்தமாக ஒளிவீசுகின்றன. ஆனால், தனுஸ் ரூபியான இருட்டைப் போக்க முடியவில்லை. எப்படி ராத்ரி முடிந்ததும் கமல மலர், சகோர பக்ஷிகள், வண்டுகள், மேலும்; பல்வேறு பறவை இனங்கள் ஆனந்தமடைகின்றனவோ;

ஜஸேஹிம் ப்ரபு ஸப் பக்த தும்ஹாரே |
ஹோயிஹஹிம் டுடேம் தனுஷ் ஸுகாரே ||2337
உயவு பாநு பிநு ச்ரம தம நாஸா |
துரே நகத் ஜக் தேஜு ப்ரகாஸா || 2338

அதே மாதிரி; ஹே ப்ரபு, தங்களுடைய பக்தர்கள் எல்லோரும் இந்தச் சிவ தனுஸைத் தாங்கள் உடைத்த துமே பரம ஸுகமடைவார்கள். ஸூர்யோதயம் ஆகி விட்டது; கஷ்டமே இல்லாமல் இருட்டு அழிந்தது; நக்ஷத்ரங்கள் மறைந்தன. உலகில் எங்கும் ஸூர்யனின் ஒளி ப்ரகாசிக்கத் தொடங்கியது. என்றார் லக்ஷ்மணன்.

ரபி நிஜ உதய ப்யாஜ் ரகுராயா |
ப்ரபு ப்ரதாபு ஸப் ந்ருபன்ஹ திகாயா || 2339
தவ புஜ பல் மஹிமா உத்காடீ |
ப்ரகடீ தனு பிகடன் பரிபாடீ || 2340

மேலும்; ஹே ரகுநாதா! ஸூர்யன் தன்னுடைய உதயத்தின் அபாரச் சக்தியின் ஒளியினால் எல்லாவற்றையும் மங்கச் செய்து விட்டான் என்பதுபோல் எல்லா மன்னர்களுக்கும் ப்ரபுவான தங்கள் ப்ரதாபம் காட்டப் பட்டு விட்டது. (தாங்கள் ஒரு ஸூர்யன் போன்றவர். தங்கள் சக்திக்கு முன் இந்த அரசர்களின் சக்தி எம் மாத்திரம்?) ஆயினும்; தங்களுடைய புஜ பலத்தையும் காட்ட வேண்டியே இந்த வில் உடைக்கும் படலம்

அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தாங்கள் அறிவீர்கள் என்றார் லக்ஷ்மணன்.

பந்து பசன் ஸுனி ப்ரபு முஸுகானே |
ஹோயி ஸுசி ஸஹஜ் புனீத் நஹானே || 2341
நித்யக்ரியா கரி குரு பஹிம் ஆயே |
சரன் ஸரோஜ் ஸுபக் ஸிர் நாயே || 2342

இவ்வாறு ஸஹோதரன் சொன்ன வார்த்தைகளைக் கேட்ட ப்ரபு ஸ்ரீராமச்சந்த்ரன் புன்னகை புரிந்தார். இயற்கையிலேயே தூய்மையாளரான அவர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு ஸ்நானம் செய்தார். நித்ய கர்மாக்களை அனுஷ்டானம் செய்த பின்பு குரு விச்வாமித்ரரின் அருகில் சென்று அவரது சரண கமலங்களுக்கு வந்தனை செய்து நின்றார்.

ஸதானந்து தப் ஜனக போலாயே |
கௌஸிக் முனி பஹிம் துரத் படாயே || 2343
ஜனக் பிநய தின்ஹ ஆயி ஸுனாயீ |
ஹர்ஷே போலி லியே தோவு பாயீ || 2344

அத்தருணம் ராஜா ஜனகர் ஸதானந்தரை அழைத்து அவரை உடனே விச்வாமித்ர முனிவரிடம் அனுப்பினார். அவரும் அப்படியே சென்று விச்வாமித்ரரை வணங்கி ஜனகர் அனுப்பியதாகத் தெரிவித்தார். பிறகு ஜனகருக்குத் தன் வேண்டுகோளைத் தெரிவித்தார். மேலும், அவர் மிக ஸந்தோஷமடைந்து ராம லக்ஷ்மணர்களைக் கூப்பிட்டார்.

ஸதானந்த பத பந்தி ப்ரபு
பைடே குரு பஹிம் ஜாயி |
சலஹு தாத் முனி கஹேவு
தப் பட்வா ஜனக் போலாயி || 2345

ஸதானந்தரை வணங்கியபின் ஸ்ரீராமன் குரு விச்வாமித்ரர் அருகே வந்து அமர்ந்தார். அப்போது முனிவர்; ஹே குழந்தைகளா கிளம்புங்கள், ஜனகர் நமக்கு அழைப்பு அனுப்பியிருக்கிறார். போய் வரலாம் என்றார்.

ஸீய ஸ்வயம்பரு தேகிஅ ஜாயீ |
ஈஸு காஹி தெளம் தேயி படாயீ || 2346
லகன் கஹா ஜஸ் பாஜனு ஸோயீ |
நாத் க்ருபா தவ ஜாபர் ஹோயீ || 2347

நாம் சென்று ஸீதாதேவியின் ஸ்வயம்வரத்தைப் பார்க்க வேண்டும். யாருக்கு எப்படிப் பகவத் ஸங்கல் பம் இருக்கிறதோ; யாருக்கு எப்படிப் பெருமை கிடைக் கப் போகிறதோ; பார்க்கலாம் என்றார் விச்வாமித்ரர். இது கேட்ட லக்ஷ்மணன்; ஹே ப்ரபு!

எவர் மீது தங்களுடைய அருள் இருக்கிறதோ; அவருக்குத் தானாகவே இந்த வில்லை உடைக்கும் பாக்யம் கிடைக்கும் என்றார்.

ஹர்ஷே முனி ஸப் ஸுனி பர் பானீ |
தீன்ஹி அஸீஸ் ஸப்ஹிம் ஸுகு மானீ || 2348
புனி முனிப்ருந்த ஸமேத் க்ருபாலா |
தேகன் சலே தனுஷ்மக ஸாலா || 2349

இந்த லக்ஷ்மணனுடைய ச்ரேஷ்டமான வார்த்தை களைக் கேட்ட எல்லா முனிவர்களும் ப்ரஸன்னமடைந் தார்கள். எல்லா முனிவர்களும் ராம-லக்ஷ்மணருக்கு ஆசீர்வாதம் செய்தார்கள். பிறகு ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தி லக்ஷ்மணனுடனும், எல்லா முனிவர்களுடனும் சேர்ந்து தனுஸ் யஜ்ஞ சாலையைப் பார்க்கச் சென்றார்.

ரங்கபூமி ஆயே தோவு பாயீ |
அஸி ஸுதி ஸப் புர்பாலின்ஹ பாயீ || 2350
சலே ஸகல் க்ருஹ காஜ் பிஸாரீ |
பால ஜுபான் ஜரட் நர நாரீ || 2351

இரு ஸஹோதரர்களும் அரங்க மேடை போன்ற யஜ்ஞ சாலைக்கு வந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நகரவாஸிகள் யாவரும் கேள்விப்பட்டதும்: பாலகர் கள், யுவர்கள், கிழவர்கள், ஸ்த்ரீ- புருஷர்கள் உட்பட அனைவரும் அவரவர் வேலைகளையெல்லாம் அப்படி அப்படியே விட்டு விட்டு ஓடி வந்து விட்டார்கள்.

தேகீ ஜனக் பீர் பை பாரீ |
ஸுசி ஸேவக் ஸப் லியே ஹங்காரீ || 2352
துரத ஸகல் லோகன்ஹ பஹிம் ஜாஹூ |
ஆஸன் உசித் தேஹு ஸப் காஹூ || 2353

யாக சாலையில் ஏகப்பட்ட கும்பல் வந்துவிட்டதை ஜனகர் பார்த்ததும், உடனே அவர் நம்பிக்கைக்குப் பாத்ர மான தனது ஸேவகர்களைக் கூப்பிட்டு அவர்களது பக்கம் சென்று அவரவர்களுக்குத் தகுந்தபடி ஆஸனம் கொடுத்து அமரும்படிச் செய்யச் செய்தார்.

கஹி ம்ருது பசன் பினீத்
தின்ஹ பைடாரே நர் நாரி |
உத்தம் மத்யம் நீச லகு
நிஜ நிஜ தல் அனுஹாரி || 2354

அந்த ஸேவகர்கள் பொறுமையுடனும், தாழ்மையு டனும் நயமான வார்த்தைகளைப் பேசிச் சென்று, வந்திருக்கும் திரளான மக்களை அழைத்து, அதாவது, உயர்ந்தோர், நடுத்தர வகுப்பினர், கீழானவர், சிறி யவர் என்பதாக அவரவர்கள் நிலைமைக்குத் தகுந்த வாறு அந்தந்த ஆண் பெண்களை ஆஸனங்களில் உட்கார வைத்தார்.

ராஜகும்வர் தேஹி அவஸர் ஆயே. |
மன்ஹூம் மனோஹர்தா தன் சாயே || 2355
குன் ஸாகர் நாகர் பர் பீரா |
ஸுந்தர் ஸ்யாமல் கௌர் ஸரீரா || 2356

இதே ஸமயம் ராஜ குமாரர்களான ராம-லக்ஷ் மணர்கள் அங்கு வந்தார்கள். அதாவது; வசீகரிக்கும் அழகு பூராவும் ஒன்று திரண்டு அவர்களது சரீரத்தில் புகுந்து ஒளி வீசுகின்றதோ; என்று எண்ணும்படி இருந்தது. அழகிய ச்யாமள நீலவண்ணமும், அழகிய சிவந்த வெள்ளை நிறமும் கொண்ட இருவரும் அங்கு வந்தார்கள். அவர்கள் குணக்கடல்கள்! மிகுந்த புத்தி சாலிகள்! சிறந்த வீரர்கள்!

ராஜ ஸமாஜ் பிராஜத் ரூரே |
உட்கன் மஹூம் ஜனு ஜுக் பிது பூரே || 2357

ஜின்ஹ கேம் ரஹீ பாவனா ஜைஸீ |
ப்ரபு மூர்தி தின்ஹ தேகீ தைஸீ || 2358

நக்ஷத்ரக் கூட்டங்கள் நடுவே உதித்திருக்கும் இரண்டு பூர்ண சந்த்ரர்களை போல் ராம லக்ஷ்மணர்கள் ராஜாக்களின் ஸமூஹத்தில் அவர்கள் மிகவும் ப்ரகாச மானவர்களாகத் தோன்றினார்கள். ப்ரபு ராமச்சந்த் ரனை அவரவர் தங்கள் மனத்திற்கும், புத்திக்கும் எட் டியபடி நினைத்துப் பார்த்து மகிழ்ந்தார்கள்.

தேக்ஹிம் ரூப் மஹா ரனதீரா |
மன்ஹூம் பீர் ரஸு தரேம் ஸரீரா || 2359
டரே குடில் ந்ருப ப்ரபுஹி நிஹாரீ |
மனஹூம் பயானக் மூர்தி பாரீ || 2360

மஹா ப்ரதாபம் வாய்ந்த ரண தீரர்களான் ராஜாக் கள் ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியின் ரூபத்தைக் கண்டு, வீர ரஸமே தானாகச் சரீரம் கொண்டு எதிரே வந்து நிற் கிறதோ; என்று நினைத்தார்கள். கோணலான வஞ்சக புத்தியுள்ள ராஜாக்களோ ராமனைக் கண்டு பயந்தார் கள். அவர்கள் கண்களில் ஸ்ரீராமன் பயங்கர மூர்த்தி யாகத் தோன்றினார்.

ரஹே அஸுர் சல் சோனிப் பேஷா |
தின்ஹ ப்ரபு ப்ரகட காலஸம தேகா || 2361
புர்பாஸின்ஹ தேகே தோவு பாயீ |
நர்பூஷன் லோசன் ஸுகதாயீ || 2362

கபடமாக ராஜாக்கள் வேஷம் தரித்து அங்கு வந் திருந்த அஸுரர்களுக்கு ப்ரபு ஸ்ரீராமன் ஸாக்ஷாத் கால தேவனைப் போல் பயங்கரமாகத் தோன்றினார். ஆனால்; நகரவாஸிகளின் கண்களுக்கோ இதமளித் தார்கள்; அணிகளைப் போல் மகிழ்வு தந்தார்கள்.

நாரி பிலோக்ஹிம் ஹரஷி ஹியம்
நிஜ நிஜ ருசி அனுரூப் |
ஜனு ஸோஹத் ஸிங்கார் தரி
மூர்தி பரம அனூப் || 2363

பெண்கள் மனத்தில் ஸந்தோஷமடைந்து தங்கள் தங்கள் ருசிக்குத் தகுந்த மாதிரி ராம-லக்ஷ்மணரைப் பார்த்தார்கள். அதாவது; ஒருக்கால் ச்ருங்கார ரஸமே இணையற்ற ஒரு மூர்த்தியாகத் திரண்டு இந்த ஸபையை அலங்கரிக்க வந்திருக்கிறதோ என்று எண்ணினார்கள்.

பிதுஷன்ஹ ப்ரபு பிராடமய தீஸா |
பஹு முக் கர பக் லோசன் ஸீஸா || 2364
ஜனக் ஜாதி அவலோகஹிம் கைஸேம் |
ஸஜன் ஸகே ப்ரிய லாகஹிம் ஜைஸேம் ||2365

மஹா வித்வான்களின் கண்களுக்கு ப்ரபுவானவர் விராட் ரூபமாகக் காட்சியளித்தார்கள். அதாவது; அநேகம் முகங்கள், அநேகம் கைகள், அநேகம் கால்கள், அநேகம் கண்கள், அநேகம் தலைகள் உடையவர்களாகத் தோன்றினர். ராஜா ஜனகருக்கோ தம்மைப் போல் ஒரு ஸாதாரண குடும்பத்தில் ஒருவராகவும், ப்ரிய பந்துவாகவும் ஸ்நேகத்துடன் காட்சியளித்தார்.

ஸஹித் பிதேஹ் பிலோகஹிம் ரானீ |
ஸிஸு ஸம ப்ரீதி ந ஜாதி பகானீ || 2366
ஜோகின்ஹ பரம தத்வமய பாஸா |
ஸாந்த ஸுத்த ஸம ஸஹஜ ப்ரகாஸா || 2367

ராஜா ஜனகருடன் கூடிய அவருடைய ராஜபத்னிகள் யாவரும் அவ்விருவரையும் ஒரு குழந்தையைப் போல் ப்ரியத்துடன் பார்த்தார்கள். அவர்களுடைய அன்பை வர்ணித்துக் கூறமுடியாது. யோகிகளுக்கு அவர்கள் சாந்தமானவர்களாகவும், பவித்ரமானவர்களாகவும், ஸமானமானவர்களாகவும் தன்னைத்தானே ப்ரகாசிக்கச் செய்யவல்ல பரம தத்வர்களாகவும் காட்சி தந்தார்கள்.

ஹரிபக்தன்ஹ தேகே தோவு ப்ராதா |
இஷ்டதேவ இவ ஸப் ஸுக தாதா || 2368
ராம்ஹி சிதவ் பாயம் ஜேஹி ஸீயா |
ஸோ ஸனேஹு ஸுகு நஹிம் கதனீயா ||2369

ஹரி பக்தர்கள் இரு ஸஹோதரர்களையும், ஸகல ஸுகங்களையும் கொடுக்கவல்ல இஷ்ட தேவர்களாகக்

கண்டார்கள். ஸீதாதேவி எந்தக்கருத்துடன் ஸ்ரீராமனைப் பார்த்துக் கொண்டு இருந்தாளோ; அந்த அன்பையும் அந்த ஸுகத்தையும் சொல்லத்தான் முடியுமா?

உர் அனுபவதி ந கஹி ஸக் ஸோவூ |
கவன் ப்ரகார் கஹை கபி கோவூ || 2370
ஏஹி பிதி ரஹா ஜாஹி ஜஸ் பாவூ |
தேஹிம் தஸ் தேகேவு கோஸலராவூ || 2371

ஸீதா ராமனின் ஸ்னேஹத்தையும், ஸுகத்தையும், அவள் உள்ளூர அனுபவித்துக் கொண்டிருக்கிறாள். ஸீதையினாலேயே அந்த அனுபவத்தைக் கூறமுடிய வில்லை என்றால்; கவிகளால் மட்டும் இந்த அற்புத ஸ்னேஹத்தின் மஹிமையை எவ்வாறு கூற முடியும்? (எம் மாதிரி அவளுடைய ஹிருதயத்தில் ராமன் மீது பாவனை இருந்ததோ; அதே போல் அவள் கோஸல ராஜனான ராமச்சந்த்ரனைப் பார்த்துக் கொண்டே இருந்தாள் என்கிறார் கவி) அதே போல் யார் யாருக்கு எப்படி எப்படி அவர் மீது அன்பு இருந்ததோ; அதே பாவனையில் ராமனைப் பார்த்தார்கள்.

ராஜத் ராஜ் ஸமாஜ் மஹூம்
கோஸலராஜ் கிஸோர் |
ஸுந்தர் ஸ்யாமல் கௌர் தன்
பீஸ்வ பிலோசன் சோர் || 2372

அழகின் இருப்பிடமான ச்யாமள வண்ணமும், சிவந்த நிறமும் கொண்ட, சரீரம் தாங்கிய இவர்கள் உலகம் முழுவதும், உள்ளவர்களின் கண்களைக் கொள்ளை கொண்டவர்களாக, கோஸலாதீச்வரரான தசரதனின் புத்ரர்களாக இந்தக் குமாரர்கள் ஸபையில் மிக ப்ரகாசத்துடன் விளங்கினார்கள்.

ஸஹஜ் மனோஹர் மூர்த்தி தோவூ |
கோடி காம் உபமா லகு ஸோவூ || 2373
ஸரத் சந்த் நிந்தக் முக் நீகே |
நீரஜ் நயன் பாவ்தே ஜீ கே || 2374

இந்த இரு குமாரர்களுடைய உடலோ எந்தவிதச் செயற்கை அலங்காரமும் இல்லாமல் ஸ்வபாவமாகவே மனத்தைக் கொள்ளை கொள்ளும்படியாக இருந்தது. கோடிக்கணக்கான மன்மதனை ஈடு சொன்னாலும் உபமானம் சரியாக இராது; எல்லாம் இவர்கள் எதிரில் துச்சமே. இவர்களுடைய ஸுந்தர முக மண்டலம் குளிர் காலப் பூர்ணிமையைத் தோற்கடித்தது. (அதாவது; சரத் கால பூர்ண சந்த்ரனும் இவர்கள் முகத்திற்கு எதிரில் துச்சமாகக் காணப்பட்டன.) பின்னும் கமலக் கண்களின் அழகோ மனத்தை வசீகரிக்கின்றது.

சிதவனி சாரு மார் மனு ஹர்னீ |
பாவதி ஹ்ருதய ஜாதி நஹிம் பர்னீ || *2375*
கல கபோல் ச்ருதி குண்டல லோலா |
சிபுக் அதர் ஸுந்தர் ம்ருது போலா || *2376*

இந்த அழகான கண்களின் பார்வையோ நம் மனத்தை அடிமையாக்குகிறது. காம தேவனுடைய மனத்தையும் ஆகர்ஷிக்கவல்ல ஸுந்தரமான பார்வை. ஹிருதயத்தில் பதிந்து விட்ட அந்தக் கண்களைப் பற்றிப் பேசவும் முடியவில்லை. அழகான கன்னங்கள், காதுகளில் குண்டலங்கள் ஆடிக் கொண்டே இருக்கின்றன. முகவாயும், உதடுகளும் மிகவும் அழகாக இருக்கின்றன. இதில் ம்ருதுவான மனத்தைக் கொள்ளை கொள்ளும் குரலழகு வேறு.

குமுதபந்து கர் நிந்தக் ஹாம்ஸா |
ப்ருகுடீ பிகட் மனோஹர் நாஸா || *2377*
பால் பிஸால் திலக் ஜலகாஹீம் |
கச் பிலோகி அலி அவலி லஜாஹீம் || *2378*

அவர்களின் சிரிப்போ சந்த்ரனின் கிரணங்களையே தோற்கடிக்க வல்லதாக இருந்தது. வளைந்த நீண்ட புருவங்களும், ஸுந்தரமான மூக்கு நுனியும் பார்க்கப் பார்க்க ஆனந்தம் அளித்தன. மனத்தைக் கொள்ளை கொள்ளும் விசாலமான உயர்ந்த நெற்றியில் திலகம் ஒளிபடத் தோன்றுகிறது. கருத்த சுருண்ட மயிர்ச் சுருள்களைக் கண்டு கரு வண்டுகளே நாணமடைகின்றன.

பீத் சௌதனீம் ஸிரன்ஹி ஸுஹாயீம் |
குஸும கலீம் பிச் பீச் பன்னாயீம் || **2379**
ரேகேம் ருசிர் கம்பு கல கீவாம் |
ஜனு த்ரிபுவன் ஸுஷ்மா கீ ஸீவாம் || **2380**

மஞ்சள் நிற அழகிய தலையணியில் இடை இடையே பூ மொட்டுகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. (அதாவது; பூக்களினாலும் மஞ்சள் நிற வஸ்த்ரத்தினாலும் ஆன குல்லாய் அணிந்திருந்தார்கள்)

சங்கைப் போல் அழகான உருண்டைக் கழுத்தில் மனத்தைக் கொள்ளை கொள்ளும் மூன்று ரேகைகள். அவை மூவுலக ஸௌந்தர்யத்தின் நிலை ஒருங்கே திரண்டு வந்து விட்டதோ என்று எண்ணும்படி இருந்தது.

குஞ்ஜர் மனி கண்டா கலித்
உரன்ஹி துளஸிகா மால் |
ப்ருஷப கந்த கேஹரி டவனி
பல நிதி பாஹு பிஸால் || **2381**

மார்பில் யானை முத்து மணிகளோடு கூடிய அழகிய கழுத்தில் துளஸி மணி மாலைகளும் விளங்கின. அவர்களின் தோள்கள் எருதுகளின் தோள்களைப் போல் உயர்ந்தும், பருத்தும் இருந்தன. அவர்கள் நிற்கும் அழகோ சிங்கத்தைத் தோற்கடித்தது. கைகளோ அகன்று மிக்கனவாக இருந்தன.

கடி தூனீர் பீத் பட் பாந்தேம் |
கர ஸர தனுஷ் பாம பர் காந்தேம் || **2382**
பீத ஜக்ய உபபீத் ஸுஹாயே |
நக ஸிக மஞ்ஜு மகாசபி சாயே || **2383**

இடையில் அம்பு வைக்கும் தூணியையும், பீதாம்பரத்தையும் அணிந்திருந்தார்கள். வலது கையில் பாணமும், இடது தோள்களில் தனுஸும் மேலும், மஞ்சள் நிறப் பூநூலும் அணிந்திருந்தார்கள். நகத்திலிருந்து சிரஸ் வரை உள்ள ஒவ்வொரு அங்கமும் கூற இயலாத அழகு; அதனால் அவர்கள் இருக்குமிடம் மிக ப்ரகாசமாகத் தோன்றியது.

தேகி லோக் ஸப் பயே ஸுகாரே |
ஏகடக் லோசன் சலத் ந தாரே || 2384
ஹர்ஷே ஜனகு தேகி தோவு பாயீ |
முனி பத் கமல் கஹே தப் ஜாயீ || 2385

இப்படிப்பட்ட இந்த ராம லக்ஷ்மணர்களைப் பார்த் தவர்கள் ஸுகமாகப் பார்த்தபடி நின்று விட்டார்கள். அவர்களின் இமை கூட மூடவில்லை; கண் பாவை மணிகள் கூட அசையவில்லை. ராஜா ஜனகர் இரு குமாரர்களையும் நோக்கிப் பரமானந்தமடைந்தார். அப்போது அவர் வந்து முனிவரான விச்வாமித்ரரின் சரண கமலங்களைப் பற்றிக் கொண்டார்.

கரி பின்தீ நிஜ கதா ஸுனாயீ |
ரங்க அவனி ஸப் முனிஹி தேகாயீ || 2386
ஜஹம் ஜஹம் ஜாஹிம் கும்வர் பர் தோவூ |
தஹம் தஹம் சகித் சிதவ் ஸபு கோவூ || 2387

பின்பு ஜனகர் மிகவும் வினயத்துடன் முனிவரிடம் வந்து தன் கதையைச் சொன்னார். பிறகு யஜ்ஞ சாலை யின் இடங்களை அவருக்குக் காட்டி எடுத்துக் கூறி னார். முனிவருடன் கூட எங்கெங்கு இந்த இரு ராஜ குமாரர்களும் போகிறார்களோ; அங்கெல்லாம் மக்கள் திரண்டு எழுந்து அவர்களின் அழகைக் கண்டு மெய்ம் மறந்தார்கள்.

நிஜ நிஜ ருக ராம்ஹி ஸபு தேகா |
கோவு ந ஜான் கசு மர்மு பிஸேஷா || 2388
பலி ரசனா முனி ந்ருப ஸன் கஹேவூ |
ராஜாம் முதித் மஹாஸுக் லஹேவூ || 2389

எல்லோரும் ஸ்ரீராமனைத் தன்னைக் காணும் தோற்றத்திலேயே கண்டார்கள். அதாவது; ஒவ்வொரு வரையும் அவர் பார்ப்பது போல் உணர்ந்தார்கள். ஆனால் இந்த ரஹஸ்யத்தை யாரும் உணரவில்லை. முனிவர் ராஜாவிடம்; அரசே! இந்த யஜ்ஞ பூமியின் அமைப்பு மிகவும் அழகாக இருக்கிறது. விச்வாமித்ரர் போன்ற ராஜரிஷியான, ஆசையற்ற, வைராக்யமுள்ள, ஒரு ஜ்ஞானியான முனிவரின் வாயினால் தனது யஜ்ஞ பூமியின் பெருமையைச் சொல்லிக் கேட்ட ராஜா ஜனகர் மிகவும் ஸந்தோஷமடைந்தார்.

ஸப் மஞ்சன்ஹ தேம் மஞ்சு ஏக்
ஸுந்தர் பிஸத் பிஸால் |
முனி ஸமேத் தோவு பந்து
தஹம் பைடாரே மஹிபால் || 2390

எல்லா ஆஸனங்களைக் காட்டிலும், ஒரே ஒரு ஆஸனம் மிகவும் உயர்ந்ததாகவும், அழகாகவும் விசாலமாகவும் இருந்தது. ராஜா ஜனகர் தானே முனிவருடன் கூட இரு ஸஹோதரர்களையும் அந்த ஆஸனத்தில் உட்கார வைத்தார்.

ப்ரபுஹி தேகி ஸப் ந்ருப ஹியம் ஹாரே |
ஜனு ராகேஸ் உதய பயேம் தாரே || 2391
அஸி ப்ரதீதி ஸப் கே மன் மாஹீம் |
ராம சாப் தோரப் ஸக் நாஹீம் || 2392

எப்படிப் பூர்ண சந்த்ரனைக் கண்டதும் தாரகைகள் ப்ரகாசம் இழந்து காணப்படுகின்றனவோ; அம்மாதிரி ப்ரபு ராமனைக் கண்ட மற்ற அரசர்கள் நிராசையடைந்தார்கள்; உற்சாகம் குன்றிக் காணப்பட்டார்கள். ஸ்ரீ ராமனின் தேஜஸைக் கண்ட மக்கள் இந்தச் சிவதனுஸை ராமச்சந்த்ரன்தான் உடைக்க முடியும் என்று தீர்மானித்தார்கள்; இதில் ஸந்தேஹமே இல்லை என்ற நம்பிக்கை உண்டாயிற்று.

பினு பஞ்ஜேஹும் பவ தனுஷு பிஸாலா |
மேலிஹி ஸீய ராம் உர் மாலா || 2393
அஸ் பிசாரி கவன்ஹு கர் பாயீ |
ஜஸு ப்ரதாபு பலு தேஜு கவாம்யீ || 2394

அவர்களுடைய உருவத்தைக் கண்டதும் எல்லோர் மனத்திலும் இது நிச்சயமாகி விட்டது என்னவென்றால்; சிறு குமாரரான ஸ்ரீராமனால் சிவபிரானது இந்த மஹா பயங்கரமான, மிகப் பெரிய தனுஸை எப்படி உடைக்க முடியும்? ஒரு வேளை வில்லை உடைக்கா விட்டாலும் ராமச்சந்த்ரனின் கழுத்தில் ஸீதை வர மாலையை அணிவிக்கக் கூடும். அதாவது; இரு பக்கமும் நாம் தோல்விதான் காணப் போகிறோம். கடைசியில் விஜயம் ஸ்ரீராமனுக்குத் தான் இருக்கப்போகிறது.

இம்மாதிரி எண்ணிய நகரவாஸிகள் ஹே ஸஹோதரா! இதைப்பற்றிச் சிந்தித்துப் புகழ், ப்ரதாபம், பலம், வீரம் இவைகளை விட்டுவிட்டு உங்கள் வீடு செல்லுங்கள். (இந்தத் தனுஸை உடைப்பதில் யார் ஜயிக்கப் போகிறார்கள் என்று அறிவோம். ஆகவே; நாம் நமது வீடுகளுக்குப் போகலாம் என்றார்கள்)

பிஹஸே அபர் பூப் ஸுனி பானீ ।
ஜே அபிபேக் அந்த அபிமானீ ॥ 2395
தோரேஹுஂ தனுஷு ப்யாஹு அவகாஹா ।
பினு தோரேம் கோ கும்வரி பிஆஹா ॥ 2396

மற்றும் அங்குள்ள அஹம்பாவம் பிடித்த அரசர்கள் மக்களின் இவ்வார்த்தையைக் கேட்டுச் சிரித்தார்கள். மேலும், அவர்கள்; வில்லை உடைத்த பின்னும் ஜானகியை மணப்பது கடினம். ஆகவே, ஜானகியை நாம் கை நழுவ விட மாட்டோம். வில்லை உடைக்காமல் ராஜகுமாரியை மணப்பது எப்படி ஸாத்யமாகும்? என்றார்கள்.

ஏக் பார் காலவு கின் ஹோவூ ।
ஸிய ஹித் ஸமர் ஜிதப் ஹம் ஸோவூ ॥ 2397
யஹ் ஸுனி அவர் மஹிப் முஸுகானே ।
தர்மஸீல் ஹரிபக்த ஸயானே ॥ 2398

எத்தனை காலம் ஆனாலும் சரி, ஸீதையை அடைய வேண்டி நாங்கள் யுத்தம் ஆரம்பிக்கவும் தயார். அதாவது; யுத்தத்தில் ஜனகரை ஜயித்து ஸீதையை அபஹரிப்போம் என்று கோஷம் இட்டார்கள். தர்மாத்மாக்களான, ஹரிபக்தர்களான, அறிவுள்ளவர்களான, மற்ற ராஜாக்கள் நகைத்தார்கள்.

ஸீய பிஆஹபி ராம் கரப்
தூரி கரி ந்ருபன்ஹ கே ।
ஜீதி கோ ஸக் ஸங்க்ராம்
தஸரத் கே ரன் பாங்குரே ॥ 2399

இவர்கள் மேலும், யாராலும் உடைக்க முடியாத தனுஸை உடைத்து மற்ற அரசர்களின் கர்வத்தைத் தவிடுபொடியாக்கி ஸ்ரீராமச்சந்த்ரன் ஸீதாதேவியை

மணக்கப் போகிறார். இது நிச்சயம். யுத்தத்தைப் பற்றிய பேச்சை விட்டுத் தள்ளுங்கள். மஹாராஜா தசரதரின் வீர புத்ரர்களான ராம லக்ஷ்மணரை யுத்தத்தில் ஜயிப்பது ஸாத்யமில்லை என்றார்கள்.

ப்யர்த மர்ஹு ஜனி கால் பஜாயீ |
மன் மோதகன்ஹி கி பூக் புதாயீ || 2400
ஸிக் ஹமாரி ஸுனி பரம புனீதா |
ஜகதம்பா ஜானஹு ஜியம் ஸீதா || 2401

மார் தட்டிக் கொண்டு, தம்பட்டம் அடித்துக் கொண்டு வீணாக யுத்தத்தில் இறந்து போகாதீர்கள். மனத்தில் லட்டு மீது இச்சை கொண்டால் பசி அடங்கி விடுமா? எங்களுடைய பவித்ரமான புத்திமதியைக் கேளுங்கள்; ஸீதையை மனத்திற்குள் ப்ரார்த்தனை செய்யுங்கள்; அவள் ஸாக்ஷாத் ஜகதம்பாள். ஸர்வ லோக ரக்ஷகி. ஆகவே, ஸீதையைப் பத்னி ரூபமாக அடைவது என்னும் ஆசைக் கற்பனையை விட்டு ஒழியுங்கள் என்றார்கள். (இது ஒரு சாரி அரசர்களின் புத்திமதி)

ஜகத் பிதா ரகுபதிஹி பிசாரீ |
பரி லோசன் சபி லேஹு நிஹாரீ || 2402
ஸுந்தர ஸுகத் ஸகல குன ராஸீ |
ஏ தோவு பந்து ஸம்பு உர பாஸீ || 2403

ஸ்ரீ ரகுநாதனை ஜகத்திற்கெல்லாம் பிதாவாக நினையுங்கள். அவரைக் கண்களாரக் கண்டு ஆனந்த மடையுங்கள். இம்மாதிரி ஸந்தர்ப்பம் அடிக்கடி நமக்கு மறுபடி என்றும் கிடைக்காது. ஆகவே, அவரை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். ஸுந்தரமான, நிம்மதியான ஸுகம் கொடுக்கும் இந்த ஸஹோதரர்கள் குணங்களின் களஞ்சியம். சிவனாரின் ஹிருதயத்தில் அன்பாக வஸிப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் உங்கள் கண்கள் முன்னால் தானாகவே வந்திருக்கிறார்கள்.

ஸுதா ஸமுத்ர ஸமீப் பிஹாயீ |
ம்ருகஜலு நிரகி மர்ஹு கத் தாயீ || 2404
கர்ஹு ஜாயி ஜா கஹும் ஜோயி பாவா |
ஹம் தெள ஆஜு ஜன்ம பலு பாவா || 2405

ஸமீபத்தில் வந்துள்ள பகவத் தர்சன ரூபமான அம்ருத ஸமுத்ரத்தை விட்டு விட்டு, ஜகஜ் ஜனனீ ஜானகியைப் பத்னியாக அடைய வேண்டி, துராசை பிடித்துப் பொய்யான கானல் நீரை நோக்கி ஓடி மடியப்போகிறீர்களா?

ஹே ஸஹோதரர்களே! யாருக்கு எது நன்மையாகத் தோன்றுகிறதோ; அப்படியே செய்யுங்கள். ஸ்ரீராமனைத் தரிசித்து நாங்கள் ஜன்மம் எடுத்த பலனை இன்றுதான் கண்டோம். ஸ்ரீராமச்சந்த்ரனைக் கண்ணால் கண்டு பாவ விமோசனம் அடைந்தோம் என்றார்கள்.

அஸ் கஹி பலே பூப் அனுராகே |
ரூப அனூப் பிலோகன் லாகே || 2406
தேகஹி ஸுர நப சடே பிமானா |
பர்ஷஹிம் ஸுமன் கர்ஹிம் கல கானா || 2407

இம்மாதிரி கூறிய மற்ற அரசர்கள் ரொம்பவும் ப்ரியத்துடன் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் அபூர்வ ரூப லக்ஷணத்தைக் கண்டு பரமானந்தம் அடைந்தார்கள். ஆகாயத்தில் தேவதைகள்கூட இந்த வைபவத்தைக் காண விமானங்களில் வந்தார்கள். ஆனந்த கானம் இசைத்த வண்ணம் புஷ்பமாரி பெய்து கொண்டே இருந்தார்கள்.

ஜானி ஸுஅவஸரு ஸீய தப்
படயீ ஜனக் போலாயி |
சதுர் ஸகீம் ஸுந்தர் ஸகல
ஸாதர் சலீம் லவாயி || 2408

இந்த நல்ல ஸந்தர்ப்பத்தை அறிந்த ராஜா ஜனகர் ஸீதாதேவியைக் கூப்பிட்டு அனுப்பினார். அப்பொழுது அங்கு அழகிய திறமைவாய்ந்த பெண்கள் ஸீதாதேவியை அழைத்து வரச் சென்றார்கள்.

ஸிய ஸோபா நஹிம் ஜாயி பகானீ |
ஜகதம்பிகா ரூப குன் கானீ || 2409
உபமா ஸகல் மோஹி லகு லாகீம் |
ப்ராக்ருத நாரி அங்க அனுராகீம் || 2410

ஜானகி தேவியின் அழகை வர்ணிக்க இயலவில்லை. ஏனெனில்; அவள் உலக மாதாவானவள். மேலும் ரூப, குணத்தின் பொக்கிஷம். ஆகவே, எனக்கு என் காப்பியத்தில் ஸீதையைப் பொறுத்தவரை உபமான மிட்டுக் கூறுவது தவறு. எல்லா உவமைகளும் துச்ச மாகப் படுகின்றன. ஏனெனில்; ஸாதாரண இயற்கை யான ஸ்த்ரீகளை உபமானமிட்டுக் கூறுவதும் சரி யில்லை. அதாவது; இயற்கையில் அழகுள்ள ஸ்த்ரீ களைக் கூட ஸீதாதேவியின் அழகுக்கு உபமானமிட்டுக் கூறமுடியாது. ஏனெனில்; அது ஒரு அலௌகிக ரூபம் என்கிறார் துளஸீ.

ஸிய பர்னிய தேயி உபமா தேயீ |
குகபி கஹாயி அஜஸு கோ லேயீ || **2411**
ஜௌம் படதரிய தீய ஸம ஸீயா |
ஜக் அஸி ஜுபதி கஹாம் கமனீயா || **2412**

ஸீதையை வர்ணிக்கும்போது ஸீதாதேவியை மற்றப் பெண்களுடன் உபமானமிட்டுக் கூறி எந்தக் கவிதான் தன்னைச் சிறுமைப்படுத்திக் கொள்ள விரும்புவார்கள். மேலும், யார்தான் அபகீர்த்தியை விலை கொடுத்து வாங்குவார்கள்? மேலும், நல்ல கவிஞன் எவனும் முட்டாள்தனமாக தகுதியற்ற செயலில் இறங்க மாட் டான். அதாவது; எந்த ஸ்த்ரீயை ஜானகிக்கு உபமான மாகக் கூறுவது? அப்படிப்பட்ட அழகிய ஒரு ஸ்த்ரீயும் உலகில் இல்லையே என்கிறார் கவி.

கிரா முகர் தன் அர்த் பவானீ |
ரதி அதி துகித் அதனு பதி ஜானீ || **2413**
பிஷ பாருனீ பந்து ப்ரிய ஜேஹீ |
கஹிய ரமாஸம கிமி பைதேஹீ || **2414**

பூவுலகில் ஸ்த்ரீகளைப் பற்றிச் சொல்ல வேண்டிய தில்லை. தேவர்களது ஸ்த்ரீகளைப் பார்ப்போமானால்; நம்மைப் பொறுத்தவரை அதிக திவ்யா ஸௌந்தர்யம் உள்ளவர்கள் என்று சொல்லக்கூடிய ஸரஸ்வதியோ அதிகம் பேசுபவள். தேவி பவானியோ அர்தாங்கினி யானவள். (பாதி உடலால் பெண், பாதி உடலால் ஆண் ஆவாள்) ரதி தேவியோ புருஷனைப் பிரிந்த

துக்கத்தில் எந்த நேரமும் அவரை எண்ணித் துக்க மடைந்திருக்கிறாள். இதனால் அவளும் வியோகினி ஸ்த்ரீ. லக்ஷ்மி தேவியைக் கூறலாமென்றாலோ; அவளுடன்கூடக் கடலில் இருந்து விஷமும், மதுவும் ஸஹோதரர்களாகத் தோன்றின. ஆகவே, அவளையும் ஜானகி தேவிக்கு உபமானமாகக் கூற முடியாது. (அதாவது; ஸமுத்ரம் கடையும் பொழுது விஷமும் மற்ற மோஹமான த்ரவியங்களும், லக்ஷ்மி தேவியுடன் கூடவே வந்தன. ஆகவே, அவைகளை லக்ஷ்மிக்கு ஸஹோதரர்கள் என்கிறார்கள். இப்படிப்பட்ட கெட்ட பாதகமான வஸ்துக்களையும் கூடவே கொணர்ந்த லக்ஷ்மியை ஜானகிக்கு உபமானமாகக் கூற முடியாது என்கிறார் கவி.)

ஜௌம் சபி ஸுதா பயோநிதி ஹோயீ |
பரம ரூபமய கச்சபு ஸோயீ || 2415

ஸோபா ரஜூ மந்தரு ஸிங்காரூ |
மதை பானி பங்கஜ நிஜ மாரூ || 2416

மேலும், அழகு ரூபமான அமிருதக் கடல்; அதனுள் ஆமை ரூபமான பரம புருஷர் வீற்றிருக்கிறார். அந்த ஸமுத்ரத்தின் அழகைக் கடையும் கயிறாக ஓர் அழகு ச்ருங்கார ரஸம் என்னும் மத்தைக் கொண்டு காம தேவன் என்பவன் தனது கமலக் கரங்களால் கடை கிறான் என்கிறார்.

(அதாவது; (1) ஸீதை ஒரு அழகு ஸமுத்ரம் (2) ராமன் அதனைத் தாங்கும் ஆமை (3) சோபை என்பது கயிறு (4) ச்ருங்காரம் என்பது ஒரு மத்து (5) காம தேவன் என்பவன் அந்த ஸமுத்ரத்தைக் கடை பவன்.)

மேலும், லக்ஷ்மீ தேவியை உவமையாகக் கூறுவது சரியில்லை. ஏனெனில்; அவள் உப்புக் கடலில் தோன் றியவள். அந்த உப்புக் கடலைக் கடையவேண்டிப் பகவான் விஷ்ணு மிகக் கடினமான முதுகுப்புறங் கொண்ட ஆமை வடிவம் தாங்க வேண்டியதாயிற்று. மிகக் கொடும் விஷமுள்ள வாஸுகி என்ற பாம்பு கயி றாக ஆகவேண்டியதாயிற்று. அதைக் கடையும் மத்துக் கட்டையாக மிகமிகக் கடோரமான மந்தரமலை ஏற்க

வேண்டியதாயிற்று. அந்தக் கடலை ஒருபுறம் தேவர் களும், ஒருபுறம் அஸுரர்களும் இருந்து சேர்ந்து கடைய வேண்டியதாயிற்று. இவ்வாறு கடைந்த பிறகு அதிலி ருந்து அதிசய சோபையைத் தாங்கி - இணையற்ற ஸுந் தரியாக லக்ஷ்மீ தேவி தோன்றினாள் என்கிறார்கள். ஆனால், அந்த லக்ஷ்மீ தோன்றக் காரணமாயிருந்த உபகரணப்பொருள்கள் யாவும் இயல்பாகவே மிகவும் கொடுமையானவை அல்லவா? அத்தகைய கடினப் பொருள்களால் உண்டானவள்தானே! அப்படியிருக் கையில் எந்த வகையில் இந்த லக்ஷ்மீ தேவியை ஜான கிக்கு ஸமமாக உவமையிட்டுக் கூறுவது பொருத்தமாகும்?

ஏஹி பிதி உபஜை லச்சி ஜப்
ஸுந்தரதா ஸுக் மூல் |
ததபி ஸகோச் ஸமேத் கபி
கஹஹிம் ஸீய ஸமதூல் || **2417**

இதே மாதிரி லக்ஷ்மீ தேவியை அழகின் இருப்பிட மாகவும், ஸுகத்திற்கும், செல்வத்திற்கும் மூல காரண மாகவும் தோன்றினாள் என்று சொல்லி லக்ஷ்மீ தேவியை ஸீதா தேவிக்கு உபமான ஸ்தானமாகவும், லக்ஷ்மியைப் பின்னும் உபமேயமாகக் கூறுவதிலும் கவிக்கு நாணம் உண்டாகிறது; மனம் கூசுகிறது. அதாவது; ஸீதையின் அழகுக்கு லக்ஷ்மீ தேவியும் ஈடு ஆக மாட்டாள் என் கிறார் கவி.

சலீம் ஸங்க லை ஸகீம் ஸயானீ |
காவத் கீத் மனோஹர் பானீ || **2418**
ஸோஹ் நவல் தனு ஸுந்தர் ஸாரீ |
ஜகத் ஜனனி அதுலித சபி பாரீ || **2419**

அற்புத குணமுள்ள ஸகிகள் ஸீதையை ஸபையில் கூடவே அழைத்து வந்தார்கள். ஏனெனில்; அவர்களுக்கு ஸபையில் நீதி தெரியும்; பின்பு அழகான குரலில் கீத மிசைத்துக் கொண்டே வந்தார்கள். ஜானகியின் புதிய அழகிய சரீரத்தில் மிக அழகான சீலை அலங்கரிக்கப் பட்டிருந்தது. ஜகத் ஜனனியாக தேவி இணையில்லாத பேரழகுடன் விளங்கினாள். (இதில் ''சிருங்கார ரஸத் தின் வர்ணனைகளும் மற்றோர் இடத்தில் சாந்த ரஸ மும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ''நவல தனு'' என்பதற் குக் கவி பலவிதமாக அர்த்தங்களைக் கூறுகிறார்.

1. ஸீதாதேவியின் அழகைத்தான் ரம்பையும்-ரதியும்-தேவ கன்னிகளும் பகிர்ந்து கொண்டு இருக்கிறார்களோ? என்கிறார்.

2. அதாவது; குமரிப் பருவம் அடையும் தருணம் பெண்களில் உடலழகோ உபமானமற்றது. அத்தருணத்தில் உள்ள அந்தச் சரீரத்தை ''நவல தனு'' என்கிறார்.

3. ''நவல தனு'' புத்தம் புதிய சரீரம் என்கிறார். உலகத்தில் எத்தகைய பேரழகு உண்டோ அத்தனையும் ஒருங்கே பெற்ற சரீரத்துடன் விளங்கும் ஜகத் ஜனனி ஸீதா தேவியை, அவள் அழகை ச்ருங்கார ரஸத்திற்குச் சமானமாக ஒப்பிட்டிருக்கிறார்.)

பூஷண் ஸகல் ஸுதேஸ் ஸுஹாயே |
அங்க அங்க ரசி ஸகின்ஹ பனாயே || 2420
ரங்க பூமி ஜப் ஸிய பகு தாரீ |
தேகி ரூப் மோஹே நர் நாரீ || 2421

ஜானகி தேவி அணிந்திருந்த எல்லா அணிகலன்களும் அந்தந்த இடத்தில் மிகுந்த சோபையுடன் விளங்கின. ஜானகியின் சரீரத்தின் அந்தந்த அங்கங்களுக்கு ஏற்றவாறு ஸகிகள் நகைகளை அணிவித்திருந்தார்கள். ஜானகி தேவியானவள் ரங்க மேடையின் மீது காலை வைத்ததுமே அவளுடைய திவ்ய ரூப லாவண்யத்தைக் கண்ட ஸ்த்ரீ-புருஷர்கள் மோஹித்துப் போனார்கள். (ஸ்த்ரீ-புருஷர்கள் மோஹம் அடைவதற்குக் காரணம் யாதெனில்; தேவி இஹலோகத்தின் பெண் அல்லள். அவள் அப்ராக்ருத (இயற்கையை மீறிய) பெண் ஆவாள்.)

ஹர்ஷி ஸுரன்ஹ துந்துபீம் பஜாயீம் |
பர்ஷி ப்ரஸூன் அப்சரா காயீம் || 2422
பானி ஸரோஜ் ஸோஹ் ஜயமாலா |
அவசட் சிதயே ஸகல் புவாலா || 2423

கந்தர்வர்கள் என்ற பெயர் கொண்ட தேவர்கள் ப்ரஸன்னமடைந்து துந்துபி வாத்யம் வாஸித்தார்கள். பூமாரி பொழிந்த வண்ணம் அப்ஸரஸ்த்ரீகள் பாட்டு இசைத்தார்கள். ஜானகி தேவியின் கமலம் போன்ற கைகளில் ஜய மாலை விளங்கியது. வந்திருக்கும் ஸகல

ராஜாக்களும் வியப்புடன் எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.

ஸீய சகித சித ராம்ஹி சாஹா |
பயே மோஹ்பஸ் ஸப் நர்நாஹா || 2424
முனி ஸமீப் தேகே தோவு பாயீ |
லகே லல்கி லோசன் நிதி பாயீ || 2425

ஆனால்; ஸீதையோ உள்ள வியப்புடன் ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தியையே பார்க்கத் தொடங்கினாள். அப் பொழுது மற்றைய அரசர்கள் மோஹவசமாகிப் பார்த் தார்கள். ஸீதாதேவி விச்வாமித்ர முனிவர் அருகில் வீற்றிருக்கும் இரு குமாரர்களையும் பார்த்ததுமே; ஜானகி தேவியின் கண்கள் தனது ஆதி நிதியை மீண் டும் அடைந்தது போல்; இமை கொட்டாமல் ஆவ லுடன் ஸ்ரீராமனிடத்திலேயே லயித்தன. (எப்படி ஒரு வர் இழந்த பொருளை மீண்டும் அடைந்தால் இயற்கை ப்ரேமையில் மெய்ம்மறந்து பார்ப்பார்களோ; அம்மாதி ரிப் பார்க்கலானாள். இதில் ச்ருங்கார ரஸம் பொங்கி வழிகிறது என்கிறார் கவி.)

குர்ஜன் லாஜ் ஸமாஜு பட்
தேகி ஸீய ஸகுசானி |
லாகி பிலோகன் ஸகின்ஹ தன்
ரகுபீர்ஹி உர் ஆனி || 2426

பெரிய மனிதர்களும், உயர்ந்த ஸமூஹத்தவரும் வந்திருப்பதைப் பார்த்து, நடுவில் தான் நிற்பதை உணர்ந்து, ஜானகி நாணத்தால் உடல் தளர்ந்தாள். அப்பொழுது ஸீதாதேவி தன் ஹிருதயத்தில் ராமனைப் பதிய வைத்துக் கொண்டு ஸகிகள் இருக்குமிடம் பார்க் கலானாள். (இங்கு ராமனும் ஸீதையும் அர்த்தத்திற் கேற்பத் தோன்றினார்கள். ஸீதை என்னும் பொருளுக்குக் குளிர்ச்சியும், ரகுவீரன் என்னும் பொருளுக்கு வீரமும் வெளியாகிறது. அதாவது; ராமன் இப்பொழுது தனது பராக்ரமம் காட்டும் நேரம் வந்து விட்டது.)

ராம ரூபு அரு ஸிய சபி தேகேம் |
நர் நாரின்ஹ பரிஹரீம் நிமேஷேம் || 2427
ஸோசஹிம் ஸகல் கஹத் ஸகுசாஹீம் |
பிதி ஸன் பிநய் கர்ஹிம் மன் மாஹீம் || 2428

ஸ்ரீராமனின் அழகையும், ஸ்ரீ ஸீதாதேவியின் பேர ழகையும் ஒருங்கே கண்ட நகரவாஸிகள் ஸ்தம்பித்து விட்டார்கள். அதாவது; இமைகளைக் கொட்டவே மறந்து விட்டார்கள். ஒருவருக்கும் ஒன்றும் நினைக்கத் தோன்றவில்லை. பேசவும் தோன்றவில்லை. அவர்கள் இவர்களைப் படைத்த ப்ரம்மனைப் பற்றி மனத்தில் எண்ணியவாறு நின்றார்கள். அதாவது; இப்படி ஓர் அழகைப் படைத்தானே ப்ரம்மன் என்று ஆச்சரியப் பட்டார்கள்.

ஹரு பிதி பேகி ஜனக் ஜட்தாயீ |
மதி ஹமாரி அஸி தேஹி ஸுஹாயீ || 2429
பினு பிசார் பனு தஜி நர்நாஹூ |
ஸீய ராம கர் கரை பிபாஹூ || 2430

ஹே ப்ரம்மனே! ஜனகரின் இந்த மூடத்தனத்தைச் சீக்ரம் தெளிவாக்குவாயாக. இவருக்கு சீக்ரம் நல்ல புத்தியைக் கொடு. ஆகவே, கொஞ்சமும் யோஜனை செய்யாமல் தனது ப்ரதிஜ்ஞையை விட்டுவிட்டு ராஜா வானவர் ஜானகி தேவியை ஸ்ரீராமச்சந்த்ரனுக்கு விவா ஹம் செய்து கொடுக்கும்படிச் செய்யும். (இன்று நல்ல நாள். நாளை இந்த நாள் வராமல் போகலாம். மக் களின் அரசனே! இந்த மாதிரிச் செய்த சபதத்தை விட்டு விட்டு மக்கள் குரலைச் செவியில் ஏற்று ஸீதா, ராம விவாஹத்தைச் சீக்ரம் செய்து முடி. இதுதான் தர்மப் ப்ரஜைகளுடைய இச்சை; ஆகவே, ராஜா இதை நடத்தியே ஆக வேண்டும் என்றார்கள்.)

ஜகு பல் கஹிஹி பாவ் ஸப் காஹூ |
ஹட் கீன்ஹேம் அந்தஹூம் உர் தாஹூ ||2431
ஏஹிம் லாலஸாம் மகன் ஸப் லோகூ |
பரு ஸாம்வரோ ஜானகீ ஜோகூ || 2432

அதாவது; உலகமே ஸந்தோஷப்படும்; நல்லது என்று சொல்லும். எல்லோருக்கும் இது நல்லதாகவே படுகிறது. ஆனால்; ராஜாவின் இந்தப் பிடிவாதத்தால் மக்கள் மனத்திலும் துக்கம், கொதிப்பு உண்டாகும். இதே எண்ணத்தில்தான் ஆசையில் மூழ்கி மதியிழந்து இருக்கிறார்கள். அவர்கள் கற்பனையில் இந்த ச்யாமள வர்ணனுக்கு ஏற்றவள் ஜானகி ஒருவள்தான் என்பது புலப்படுகிறது.

தப் பந்தீஜன் ஜனக் போலாயே |
பிரிதாவலீ கஹத் சலி ஆயே || 2433
கஹ் ந்ருபு ஜாயி கஹஹூ பன் மோரா |
சலே பாட் ஹியம் ஹர்ஷூ ந தோரா || 2434

அப்பொழுது மன்னர் ஜனகர் ராஜவிருது பாடு பவர்களை வரவழைத்தார். அவர்களும் அரசரின் வம்சாவளிகளைப் புகழ்ந்து கட்டியம் கூறி அங்கே வந்தனர். உடனே அரசர், அவர்களிடம்; ''எனது சபதத்தை எல்லோரிடமும் சொல்லுங்கள்'' என்று சொன்னார். அங்கிருந்து அவர்கள் ஆணையேற்றுச் சென்றனர்.

ஆனால்; அவர்கள் மனத்தில் ஸந்தோஷம் இல்லை. (ஏனெனில்; ராஜா தனது சபதத்தை விடாமல் கூறும் படிச் செய்கிறார். இந்தச் சபதத்தினால் ஸீதா ராம விவாஹம் எப்படி நடக்குமோ? என்று அது பூர்த்தி யாகுமோ? என்று பயந்தார்கள். ஆகவே; அவர்கள் ராஜாவின் வார்த்தையைக் கடமைக்காக ஏற்று வந்து கூறினாலும் அவர்கள் மனத்தில் ராஜா இந்தச் சப தத்தை விட்டொழித்தால்; ஸ்ரீராமனை-ஜானகி அடை வாளே என்று எண்ணினார்கள். இந்த ராஜாவின் சபதத்தைத் தேஹம் உள்ள யாவருமே ஸஹிக்க மாட் டார்கள். இவருடைய இந்த வில் உடைக்கும் சபத மானது பெரிய பெரிய ராஜாக்களையே தேஹமற்ற வர்களாகச் செய்கிறது என்றார்கள்.)

போலே பந்தீ பசன் பர்
ஸுனஹூ ஸகல் மஹிபால் |
பன் பிதேஹ் கர் கஹஹிம் ஹம்
புஜா உடாயி பிஸால் || 2435

அந்தத் துதி பாடகர்கள் ராஜ ஸபையின் நடுவே வந்து; ''மக்கள் தலைவர்களே! அரசர்களே! கேளுங் கள். நாங்கள் எங்கள் விதேஹ ராஜாவின் சபதம் பற்றிக் கூறுகிறோம்'' என்று ஜனகரின் வில்லுடைக்கும் சபதத்தை ஸபையில் கூறினார்கள். (உலகில் பிறந்தவர் எவருமே இம்மாதிரிச் சபதத்தைச் செய்திருக்க மாட் டார்கள். ஆனால்; உங்கள் அரசன் விதேஹி; ஆக

தேஹமுள்ள யாவரும் கேளுங்கள் என்று பறை சாற்றினார்கள். ஆனால்; அவர்களின் மனம் துக்கத்தினால் வெதும்பியது. ஏனெனில்; இந்தச் சபதத்தால் எங்கு ராமன்-விவாஹம் நடக்காமல் போய் விடுமோ என்று கவலையுற்றார்கள்)

ந்ருப புஜபலு பிது சிவதனு ராஹூ |
கருஅ கடோர் பிதித் ஸப் காஹூ || 2436
ராவனு பானு மஹாபட் பாரே |
தேகி ஸராஸன் கவம்ஹிம் ஸிதாரே || 2437

ராஜாக்களின் புஜபலம் ஒரு சந்த்ரன். அந்தப் பூர்ண சந்த்ரனை விழுங்க வரும் ராஹு இந்தச் சிவ தனுஸ். வில்லினுடைய பெரும் கனத்தையும், சக்தியையும், கடூரத் தன்மையையும் எல்லோரும் அறிந்ததே. மிகப் பராக்ரமம் வாய்ந்த போர்வீரனான பாணாஸுரன் முதலான பெரும் பராக்ரம சாலிகளான ராஜாக்களும், புஜபலம் பொருந்திய யுத்த வீரர்களும் கூட இந்த வில்லைப் பார்த்து விட்டு, நம்மால் முடியாது என்று நினைத்து, மௌனமாகப் போய் விட்டார்கள். தொடக்கூட அவர்களுக்குத் துணிவில்லை. அப்படி இருக்க மற்ற அரசர்களால் என்ன முடியும்?

ஸோயி புராரி கோதண்டு கடோரா |
ராஜ ஸமாஜ் ஆஜு ஜோயி தோரா || 2438
த்ரிபுவன் ஜய் ஸமேத் பைதேஹீ |
பிநஹிம் பிசார் பர்யி ஹடி தேஹீ || 2439

இந்தச் சிவபிரானின் கடினமான வில்லை இன்று இந்த ராஜ ஸபையில் யார் உடைக்கப் போகிறாரோ; அவர் மூன்று உலகையும் ஜயித்து வெற்றி கண்டவர் என்பதோடு கூட எந்த ஆலோசனை-விசாரணையுமில்லாமல் ஜானகிதேவியை வலுக்கட்டாயமாக வரிக்கலாம் (மணம் செய்து கொள்ளலாம்) என்றனர்.

ஸுனி பன் ஸகல் பூப் அபிலாஷே |
பட்மானீ அதிஸய மன் மாகே || 2440
பரிகர் பாந்தி உடே அகுலாயீ |
சலே இஷ்டதேவன்ஹ ஸிர் நாயீ || 2441

இந்த ஜனகரின் சபதம் கேட்டு எல்லா அரசர்களும் தாங்கள் தங்கள் சக்தியைக் காட்டி ஸீதையை மணக்கலாம் என்ற பேராசையில் காத்திருந்தார்கள். அதாவது; தங்கள் பெருமை, சக்தி இவை மீது கர்வம் கொண்ட ராஜாக்களில் ஒரு சாரார், மிக்க கோபமடைந்தார்கள். ஏனெனில்; ஒருக்கால் நம் பலம் பலஹீனமடைந்து விட்டால்; எல்லார் எதிரிலும் அவமானமாகி விடும் என்று ஆர்ப்பரித்தனர். சீக்ரமாக எழுந்து சிலர் அவரவர் தங்கள் இஷ்ட தேவதைகளுக்கு வணக்கம் தெரிவித்து விட்டுத் தங்கள் பலத்தைப் பரீக்ஷிக்க நினைத்தார்கள். (சிலர் தங்கள் இஷ்ட தேவதைகளுக்கும் கூட நமஸ்காரம் செய்யாமல் ஒரே ஆதுரத்துடன் வில்லை ஒடிக்க ஆர்வமாக இருந்தார்கள். புத்திசாலியான சில ராஜாக்கள் சிவதனுசைக் கண்டு பயந்து கிட்டே வரவில்லை என்கிறார் கவி.)

தம்கி தாகி தகி சிவதனு தரஹீம் |
உடயி ந கோடி பாந்தி பலு கர்ஹீம் || **2442**
ஜின்ஹ கே கசு பிசாரு மன் மாஹீம் |
சாப் ஸமீப் மஹீப் ந ஜாஹீம் || **2443**

அவர்கள் கோபாவேசத்தோடு இந்தச் சிவ தனுஸைத் தூக்கி எடுக்க முடியும் என்று பேராவல் கொண்டு அதன் பக்கம் பார்த்தார்கள். கிட்ட வந்ததும் பல விதமானப் பலம் கொண்ட மட்டும் எடுத்துப் பார்த்தார்கள். ஆனால், அதை எடுக்க முடியவில்லை. அவர்கள் பலமே வீணானது. புத்தி வந்த அந்த சில ராஜாக்கள் அந்த வில்லின் பக்கம் போகாமல் ஒதுங்கி விட்டார்கள்.

தமகி தர்ஹிம் தனு மூட் ந்ருப
உட்யி ந சல்ஹிம் லஜாயி |
மன்ஹூம் பாயி பட் பாஹூ பலு
அதிகு அதிகு கருவாயி || **2444**

சில மூட ராஜாக்கள் ஆவேசத்தோடு வில்லைப் பிடித்தார்கள். ஆனால்; வில்லை எடுக்க முடியாமல் வெட்கி அங்கிருந்து சென்றார்கள். அதாவது; வீரர்களின் புஜ பலத்திற்கு ஏற்றவாறு வில்லின் கனமும் அதிகரித்ததுதான் காரணம்.

பூப் ஸஹஸ் தஸ் ஏக்ஹி பாரா |
லகே உடாவன் டர்யி ந டாரா || 2445
டகயி ந சம்பு ஸராஸனு கைஸேம் |
காமீ பசன் ஸதீ மனு ஜைஸேம் || 2446

அப்பொழுது வந்திருந்த பத்தாயிரம் ராஜாக்களும் ஒரே ஸமயத்தில் தனுஸை எடுத்து உடைக்க யத்தனித் தார்கள். அப்படி இருந்தும் அவர்கள் எல்லோருக்குமே அதை அலசக்க முடியவில்லை; வில்லை எடுக்க முடிய வில்லை. (அப்படி அவர்கள் எல்லோருமே இதில் ஜயமடைந்து இருந்தால்; ஜானகி யாரை மணம் செய்து கொள்வாள்? பின்னால் யுத்தம் செய்வார்கள். யுத்தத் தில் ஜயித்து ஜானகியை மணப்பார்கள். ஆகவே, இந்த வில் உடைக்க முடியாமல் போனது நல்லதற்கே என் றால்; அவர்களில் ஒருவரை ஜானகி மணந்திருக்க நேருமல்லவா? அதுபோல, சிவனாருடைய வில்லை ஒருவராலும் எடுக்கவே முடியவில்லை.) எப்படி ஒரு காமி புருஷன் பதிவ்ரதா ஸ்த்ரீயிடம் பசப்பு மொழிகள் பேசித் தனது வல்லமையைக் காட்டி அவளைக் கவர எண்ணுகிறபோது அவள் தனது ஸதி வ்ரதத்தால் அவனுக்கு அசைந்து கொடுப்பதில்லை அல்லவா? அம்மாதிரியே இந்தப் பேரவையில் உள்ள சிவதனு ஸும் அரசர்களின் கைகளுக்கு வளைந்து, அசைந்து கொடுக்கவேயில்லை.

ஸப் ந்ருப பயே ஜோகு உபஹாஸீ |
ஜைஸேம் பினு பிராக் ஸன்யாஸீ || 2447
கீர்தி பிஜய் பீரதா பாரீ |
சலே சாப் கர் பர்பஸ் ஹாரீ || 2448

எப்படி வைராக்யம் இல்லாத ஸன்யாஸிகள் பரி ஹாஸத்திற்கு பாத்ரமாவார்களோ; அதேபோல், எல்லா ராஜாக்களும் சிரிப்பிற்கு, ஏளனத்திற்கு இடமானார் கள். அவர்களுடைய புகழ், வெற்றி, வீரம் எல்லாமே இந்தச் சிவதனுஸின் எதிரில் தவிடு பொடியானது.

ஸ்ரீஹத் பயே ஹாரி ஹியம் ராஜா |
பைடே நிஜ நிஜ ஜாயி ஸமாஜா || 2449
ந்ருபன்ஹ பிலோகி ஜனகு அகுலானே |
போலே பசன் ரோஷ் ஜனு ஸானே || 2450

எல்லா அரசர்களும், தோல்வியடைந்து, மனத்திற்கு துக்கமும், நாணமும் கொண்டு சோபை இழந்து, ஆஸனத்தில் திரும்ப வந்து அமர்ந்து கொண்டார்கள். ராஜாக்களின் தோல்வியைப் பார்த்த ஜனகர் கலக்கமடைந்து, கோபத்துடன் பேசலானார்.

தீப் தீப் கே பூபதி நாநா |
ஆயே ஸுனி ஹம் ஜோ பனு டானா || 2451
தேவ தனுஜ் தரி மனுஜ் ஸரீரா |
பிபுல் பீர் ஆயே ரனதீரா || 2452

எங்களுடைய சபதம் கேட்டுப் பல தீவுகளிலிருந்து அநேக ராஜா, மகா ராஜாக்கள் வந்திருந்தார்கள். ஸ்வர்கவாஸி தேவதைகளும், அஸுரர்களும் பூமியில் பிறந்தவர்களைப் போல் மனுஷ்ய ரூபம் கொண்டு வந்தார்கள். பலவித யுத்தவீரர்களும், தீரர்களும் வந்தார்கள்.

கும்வரி மனோஹர் பிஜய படி
கீர்தி அதி கமநீய |
பாவ்னிஹார் பிரஞ்சி ஜனு
ரசேவு ந தனு தமனீய || 2453

ஆனால், இந்த உத்தமமான மனோஹரமான அழகுடைய கன்னிகை ஸீதைக்கு ஏற்ற மணாளனை ஏன் ப்ரம்மன் படைக்கவில்லையா? ஆம்; வில்லை உடைத்து மணம் முடிக்கும் வரனை, பெரும் வெற்றியையும், மிகுந்த புகழையும் பெறக்கூடிய ஒருவனைப் பரமன் இது வரை ஸ்ருஷ்டி செய்யவில்லை போலும்.

கஹஹு காஹி யஹ லாபு ந பாவா |
காஹும் ந ஸங்கர் சாப் சடாவா || 2454
ரஹவு சடாஉப் தோரப் பாயீ |
திலு பரி பூமி ந ஸகே சடாயீ || 2455

ஹே ஸஹோதரர்களே! இந்த விதமான லாபகரமான காரியம் யாருக்குத்தான் நல்லதாகப்படாது? சொல்லுங்கள். ஆனால், ஒருவராலும் கூடப் பூமியிலிருந்து வில்லை எடுத்து நாணேற்ற முடியவில்லையே. நாணேற்றுவதோ, உடைப்பதோ அப்படியே இருக்கட்டும். யாரும் பூமியிலிருந்து எள்ளளவு கூட நகர்த்த முடியவில்லையே!

அப் ஜனி கோவு மாகை பட் மானீ |
பீர் பிஹீன் மஹீ மைம் ஜானீ || 2456
தஜஹு ஆஸ் நிஜ நிஜ க்ருஹ ஜாஹு |
லிகா ந பிதி பைதேஹி பிபாஹு || 2457

உங்களில் ஒருவரும் இனி வீரத்தைப் பற்றிக் கொஞ் சமும் கர்வம்; கோபம் கொள்ள வேண்டாம். பூமியில் வீரர்களே இனிப் பிறக்கவில்லை போலும் என்பதாக நான் தெரிந்து கொண்டேன். ஆகவே, நீங்கள் எல் லோரும் நம்பிக்கையை விட்டுத் திரும்பிப் போய் விடுங்கள். விதி ஜானகியின் விவாஹத்தைப் பற்றி எழுதவில்லை போலும்.

ஸுக்ருது ஜாயி ஜைளம் பனு பரிஹர்வும் |
கும்வரி குவாரி ரஹவு கா கர்வும் || 2458
ஜைளம் ஜனதேவும் பினு பட் புபி பாயீ |
தௌ பனு கரி ஹோதேவும் ந ஹம்ஸாயீ || 2459

நான் என் சபதத்தை மீறினால், விட்டுவிட்டால், நான் எனது புண்யத்தை விட்டு விலகியவனாகி விடு வேன். இப்பொழுது என் பெண் ஸீதை கன்னியாகவே இருக்கட்டும். இதற்கு நான் என்ன செய்வேன்? வீரர் களே பூமியில் பிறக்கவில்லை என்று தெரிந்தால் சிரிப் பதற்கு இடமான இந்தச் சபதத்தை நான் வைத்திருக் கவே மாட்டேனே.

ஜனக் பசன் ஸுனி ஸப் நர் நாரீ |
தேகி ஜானகிஹி பயே துகாரீ || 2460
மாகே லகனு குடில் பயிம் பௌம்ஹேம் |
ரதபட் பர்கத் நயன் ரிஸௌம்ஹேம் || 2461

ஜனகரின் துக்கம் நிறைந்த இந்த வசனங்களைக் கேட்ட ஸ்த்ரீ- புருஷர்கள் ஜானகியை நோக்கி மிகவும் துக்கமடைந்தார்கள். ஆனால், குமாரர் லக்ஷ்மணனுக்கு மிகக் கோபம் உண்டாயிற்று. அவரது புருவங்கள் வளைந்தன; உதடுகள் துடித்தன; கண்கள் கோபத்தால் சிவப்பேறின.

கஹி ந ஸக்த் ரகுபீர் டர்
லகே பசன் ஜனு பான் |

நாஇ ராம பத் கமல ஸிரு
போலே கிரா ப்ரமான் || 2462

அதாவது; ஜனகரின் இந்த வார்த்தைகளைக் கேட்டதும் லக்ஷ்மணன் மிகக் கோபமடைந்தார். ஆயினும்; ஸ்ரீராமச்சந்த்ரனிடம் பயமடைந்து வெளியில் ஒன்றும் கூற முடியவில்லை. ஆனால், ஜனகரின் வார்த்தைகள் பாணம் போல் லக்ஷ்மணன் ஹிருதயத்தில் தைத்தது. உடனே அவர் ஸ்ரீராமனின் கால்களில் வீழ்ந்து வணங்கி உண்மையை எடுத்துக் கூறினார்.

ரகு பம்ஸின்ஹ மஹு ஜஹம் கோவு ஹோயீ |
தேஹிம் ஸமாஜ் அஸ கஹ்யி ந கோயீ || 2463
கஹீ ஜனக் ஜஸி அனுசித் பானீ |
பித்யமான் ரகுகுல மனி ஜானீ || 2464

மேலும், லக்ஷ்மணன்; ரகு வம்சத்தில் உதித்தவர்களின் ஸமூஹம் எங்கு இருக்கிறதோ; அவர்கள் கூட்டத்தில் இந்த மாதிரியான வசனம் யாரும் சொல்லக் கேட்கவே மாட்டார்கள். ரகுகுல சிரோமணியான ஸ்ரீ ராமச்சந்த்ரன் இருக்கும் பொழுதே தகுதியற்ற வார்த்தையை ராஜா ஜனகர் பேசி விட்டாரே. இம் மாதிரி வார்த்தையைப் பேசலாமா? என்றார்.

ஸுனஹு பானுகுல பங்கஜ் பானூ |
கஹவும் ஸுபாவு ந கசு அபிமானூ || 2465
ஜெளம் தும்ஹாரி அனுஸாஸன் பாவெளம் |
கீந்துக இவ ப்ரஹ்மாண்ட உடாவெளம் || 2466

மேலும், தொடர்ந்து, ஹே ஸூர்ய குலமாகிற கமலத்தை மலர வைக்கும் ஸூர்யனே! ஸ்ரீராமனே! தாங்கள் நான் கூறுவதைக் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். நான் இயற்கையாகவே கூறுகிறேன்; செருக்கால் அல்ல. தாங்கள் எனக்கு ஆஜ்ஞையிட்டால்; இந்த ப்ரம்மாண்டத்தையே பந்தாகச் சுருட்டி எடுத்து விடுவேன்.

காசே கட் ஜிமி டாரெளம் போரீ |
ஸகவும் மேரு மூலக் ஜிமி தோரீ || 2467
தவ ப்ரதாப் மஹிமா பக்வானா |
கோ பாபுரோ பினாக புரானா || 2468

மேலும், பச்சைக் களிமண்ணால் ஆன பானையைப் போல இந்த ப்ரம்மாண்டத்தை உடைத்துப் போடு வேன். நான் மஹாமேரு பர்வதத்தை முள்ளங்கிக் கிழங்கு போல் உடைத்து எரிந்து விடுவேன். ஹே பக வானே! தங்களுடைய ப்ரதாப மஹிமைக்கு எதிரில் இந்தப் புராதனமான வில் எம்மாத்திரம்?

நாத் ஜானி அஸ் ஆயஸு ஹோவு |
கௌதுகு கரௌம் பிலோகிய ஸோவு || 2469
கமல நால் ஜிமி சாப் சடாவௌம் |
ஜோஜன் ஸத் ப்ரமான் லை தாவௌம் ||2470

ஆகவே, *ஹே ஸ்வாமி! இவற்றை அறிந்து எனக்கு உசிதமான ஆஜ்ஞை கொடுங்கள்; கொஞ்சம் விளை யாடுகிறேன்; அதையும் பாருங்கள். கமல மலரின் தண்டு களைப் போல் இந்த வில்லில் நாணேற்றி உடைத்து நூறு யோஜனை தூரம் இழுத்து ஓடிப் போய்ப் போடுவேன்.

தோரௌம் சத்ரக் தண்ட ஜிமி
தவ ப்ரதாப் பல் நாத் |
ஜௌம் ந கரௌம் ப்ரபு பத் சபத்
கர் ந தரௌம் தனு பாத் || 2471

மேலும்; ஹே தலைவனே! தங்கள் வீரத்தின் பலத் தினாலே அந்த வில்லை நாய்க் குடையை உடைத்து எரிவது போல உடைப்பேன். அவ்வாறு நான் செய்யா விட்டால்; இனி கையினாலேயே வில்லையும், அம்பை யும் தொடவே மாட்டேன் என்பதாக ஸ்வாமியின் திருவடிகளில் உறுதி செய்கிறேன் என்றார்.

லகன் ஸகோப் பசன் ஜே போலே |
டக்மகானி மஹி திக்கஜ் டோலே || 2472
ஸகல் லோக் ஸப் பூப் டேரானே |
ஸியஹியம் ஹர்ஷு ஜனகு ஸகுசானே || 2473

லக்ஷ்மணன் எப்போது இம்மாதிரிக் கோபத்துடன் கூறினாரோ; அப்போது பூமியே நடுநடுங்கியது. திசை களின் யானைகள் ஆட்டம் கண்டன. எல்லா ஜனங் களும், எல்லா அரசர்களும், நடுநடுங்கிப் போனார் கள். ஜானகியின் மனத்தில் மகிழ்ச்சி உண்டாயிற்று. ராஜா ஜனகர் நாணினார்.

குர் ரகுபதி ஸப் முனி மன் மாஹீம் |
முதித் பயே புனி புனி புலகாஹீம் || 2474
ஸயனஹிம் ரகுபதி லகனு நேவாரே |
ப்ரேம ஸமேத் நிகட் பைடாரே || 2475

குரு விச்வாமித்ரர், ஸ்ரீ ராமச்சந்த்ரன், மற்றுமுள்ள முனிவர்கள் மனத்திற்குள் ஸந்தோஷமடைந்தார்கள். திரும்பத் திரும்ப அவர்கள் சரீரம் புளகாங்கிதமடைந்தன. ஸ்நேஹத்துடன் லக்ஷ்மணனை ஸ்ரீ ராமன் ஸமாதானம் செய்தார்; பின்னர் தம் அருகில் அன்போடு ஸஹோதரனை அமரும்படிச் செய்தார்.

பிஸ்வாமித்ர ஸமய ஸுப ஜானீ |
போலே அதி ஸ்நேஹமய பானீ || 2476
உடஹு ராம் பஞ்ஜஹு பவசாபா |
மேடஹு தாத் ஜனக் பரிதாபா || 2477

நல்ல முஹூர்த்த நேரம் அறிந்து குரு விச்வாமித்ரர் ராமனை நோக்கி அம்ருதம் போல் ம்ருதுவான குரலில் ''ஹே ராமச்சந்த்ரா எழுந்திரு; சிவனாரின் இந்தப் புனித வில்லை உடைத்து ஜனகரின் துயரத்தைத் தீர்ப்பாயாக'', என்றார்.

ஸுனி குரு பசன் சரன் ஸிரு நாவா |
ஹர்ஷு பிஷாது ந கசு உர் ஆவா || 2478
டாடே பயே உடி ஸஹஜ் ஸுபாயேம் |
டவனி ஜுபா ம்ருகராஜு லஜாஏம் || 2479

குருவின் வார்த்தையைக் கேட்ட ஸ்ரீராமன் மரியாதையுடன் தலை வணங்கினார். அவர் மனத்தில் ஸந்தோஷமும் இல்லை; துக்கமும் இல்லை. அவர் எழுந்திருக்க ஆரம்பித்தபொழுது ஸிம்ம ராஜனே நாணும்படி இயல்பாகவே எழுந்து நின்றார். (அதாவது; மனம் கவரும் அழகுடன் எழுந்து நின்று ராஜ நடை போட்டு வரும் அவரைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டார்கள்)

உதித் உதயகிரி மஞ்ச பர்
ரகுபர் பாலபதங்க் |
பிகஸே ஸந்த் ஸரோஜ் ஸப்
ஹர்ஷே லோசன் ப்ருங்க் || 2480

அரங்க மேடை அமைத்துக் கொண்ட உதயாசல பர்வதத்தின் மீது ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தி என்னும் பால ஸூர்யன் உதயமானதுமே, ஸாது ஜனங்களாகிற கமல வனம் தானாகவே மலர்ந்தது. அதுகண்டு கண் களாகிற வண்டுகள் மகிழ்வடைந்தன.

நருபன்ஹ கேரி ஆஸா நிஸி நாஸீ |
பசன் நகத் அவலீ ந ப்ரகாஸீ || 2481
மானீ மஹிப குமுத ஸகுசானே |
கபட பூப் உலூக் லுகானே || 2482

ஜானகி தேவியை அடைய வேண்டுமென்ற ராஜாக் களின் நம்பிக்கையாகிற இரவு நஷ்டமாகி விட்டது. அந்த ராஜாக்களுடைய பேச்சாகிற தாரகைகளும் இப் பொழுது ஒளி மழுங்கி விட்டன. அதாவது; இப் பொழுது அவர்கள் மௌனமாகி விட்டனர். செருக்கு மிகுந்த, மற்றும் ப்ரதாபம் உள்ள அரசர்களாகிற அல்லிமலர்கள் வாடின. கபடவேடம் கொண்ட வஞ்சக அரசர்களாகிற கோட்டான்கள் ஒளிந்து கொண்டன.

பயே பிஸோக் கோக் முனி தேவா |
பரிஸஹிம் ஸுமன் ஜனாவ்ஹிம் ஸேவா || 2483
குர் பத் பந்தி ஸஹித் அனுராகா |
ராம முனின்ஹ ஸன் ஆயஸு மாகா || 2484

மேலும், முனிவர்கள், தேவர்களாகிற சக்ரவாகப் பக்ஷிகள் துயரத்தை விட்டொழித்தன. அவர்கள் புஷ்ப மாரி பொழிந்த வண்ணம் தங்கள் தங்கள் வேலையில் ஈடுபட்டார்கள். பக்தியுடன் குருவின் சரண கமலங் களில் விழுந்து வணங்கிய ஸ்ரீராமன் மிகவும் ப்ரி யத்துடன் முனிவர்களிடம் ஆணை பிறப்பிக்கும்படி வேண்டினார்.

ஸஹஜ்ஹிம் சலே ஸகல் ஜக் ஸ்வாமீ |
மத்த மஞ்ஜு பர் குஞ்ஜர் காமீ || 2485
சலத் ராம் ஸப் புர் நர நாரீ |
புலக் பூரி தன பஏ ஸுகாரீ || 2486

ஸகல ஜகத்திற்கும் ஸ்வாமியான ஸ்ரீராமன் தானா கவே எழுந்து கிளம்பினார். அவருடைய கம்பீர நடை,

மதம் கொண்ட யானையின் நடையை ஒத்து இருந்தது. ஸ்ரீராமச்சந்த்ர மூர்த்தி நடக்க ஆரம்பித்த உடன் ஜனக புரியின் எல்லா ஆண்-பெண்களும் ஆனந்தத்தினால் புளகாங்கிதம் அடைந்தார்கள்.

பந்தி பிதர ஸுர் ஸுக்ருத ஸம்பாரே ।
ஜெளம் கசு புன்ய ப்ரபாவு ஹமாரே ॥ 2487
தெள ஸிவதனு ம்ருனால் கீ நாயீம் ।
தோரஹும் ராமு கனேச் கோஸாயீம் ॥ 2488

மேலும், அந்த ஸ்த்ரீ-புருஷர்கள், நகரவாஸிகள்; பித்ருக்களையும், தேவதைகளையும் நமஸ்கரித்து, தாங்கள் செய்த புண்ய பலன்களை எண்ணிப்பார்த்தனர். நாங்கள் உண்மையில் சிறந்த புண்யம் செய்திருந்தால்; ஹே கணேசரே! ஹே கோ ஸ்வாமியானவரே! ஸ்ரீ ராமன் இந்தச் சிவதனுஸைத் தாமரைத் தண்டைப் போல் எண்ணி உடைத்து எரியட்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

ராமஹி ப்ரேம் ஸமேத் லகி
ஸகின்ஹ ஸமீப் போலாயி ।
ஸீதா மாது ஸனேஹ் பஸ்
பசன் கஹ்யி பில்காயி ॥ 2489

ஸ்ரீ ராமச்சந்த்ரனை மிகப் ப்ரியத்துடன் பார்த்து, மகிழ்ந்து ஸகிகளைத் தன் அருகில் அழைத்து, ஸீதா தேவியின் தாயார் அத்தருணம் தனது அளவில்லாத அன்பினால் தழுதழுத்த குரலில்;

ஸகி ஸப் கௌதுக் தேகனிஹாரே ।
ஜேவு கஹாவத் ஹிதூ ஹமாரே ॥ 2490
கோவு ந புஜாயி கஹ்யி குர் பாஹீம் ।
ஏ பாலக் அஸி ஹட் பலி நாஹீம் ॥ 2491

ஹே ஸகிகளே! நமக்கு உதவுபவர்கள் என்று கூறிக் கொண்டு இந்த விபரீத விளையாட்டைப் பார்த்துக் கொண்டு இருப்பவர்கள் தான் எல்லோரும். இம்மாதிரி கேட்கத் தைரியம் இல்லை போலும் என்று குருவான விச்வாமித்ரரிடம் சென்று விவரம் தெரிவித்து, இந்த

இருவரும் பாலகர்கள். இவர்கள் எதிரில் இந்த வில்லை உடைக்கும் கடோரமான சபதத்தைக் காட்டாமல் விட்டு விடும்; இத்தகைய பிடிவாதம் நல்லதில்லை என்றாள்.

ராவன் பான் சுவா நஹிம் சாபா |
ஹாரே ஸகல் பூப் கரி தாபா || 2492
ஸோ தனு ராஜகுமர் கர் தேஹீம் |
பால மரால் கி மந்தர் லேஹீம் || 2493

மேலும், எந்த வில்லை ராவணனும், பாணாஸுரனும், தொட்டுக் கூடப் பார்க்கவில்லையோ, எந்த வில்லிடம் தங்கள் பலத்தை எல்லாம் காட்டித் தோற்றுப் போன செருக்குமிகுந்த பராக்ரம ராஜாக்களும் ஓடி மறைந்தார்களோ; அப்படிப்பட்ட இந்தக் கடினமான வில்லை இந்த ராஜ குமாரன் கையில் கொடுத்து பரீட்சிக்க விரும்புகிறார் ராஜா. ஹம்ஸ பக்ஷிகளின் குஞ்சுகள் எங்காவது மந்தர மலையை எடுக்க முடியுமா? அது போலல்லவா இருக்கிறது! இது என்ன விபரீதம்!

பூப் ஸயானப் ஸகல் ஸிரானீ |
ஸகி பிதி கதி கசு ஜாதி ந ஜானீ || 2494
போலீ சதுர் ஸகீ ம்ருது பானீ |
தேஜவந்த் லகு கனிய ந ரானீ || 2495

அது சரி, இந்த விவரத்தை விச்வாமித்ரருக்குத் தெரிவிக்கட்டும், தெரிவிக்காமல் போகட்டும். அரசர் ஜனகர்தான் எல்லாம் அறிந்தவர் ஆயிற்றே! அவராவது குருவிடம் தெரிவிக்க முயற்சிக்க வேண்டாமா? அவருக்கு இது தெரிய வேண்டாம்?

ஹே ஸகிகளே! எல்லா ராஜாக்களின் சாதுர்யம், சாமர்த்யம் முடிந்து போய்விட்டது. இதில் ப்ரம்மனின் ஸஹாயம் இருப்பதாகத் தெரியவில்லை. ப்ரம்மனின் போக்கு என்னவென்று அறிய முடியவில்லை என்று ராணி சொல்லி மௌனமானாள். அப்பொழுது ராம பிரானின் மஹிமையை அறிந்த கெட்டிக்காரப் பெண் ஒருவள், ம்ருதுவான குரலில்; ஹே ராஜ மாதா! இவரைச் சின்னவர்; அறியாதவர் என்று எண்ணாதீர்கள். தேஜஸ் மிகுந்த இவர் சின்னவராகப் பார்ப்பதற்குத் தோன்றினாலும், சிறியவர்களுக்குள் சேர்த்துக் கணக்கிடுவது தவறம்மா!

கஹம் கும்பஜ் கஹம் ஸிந்து அபாரா |
ஸோஷேவு ஸுஜஸு ஸகல் ஸம்ஸாரா || 2496
ரபி மண்டல் தேகத் லகு லாகா |
உதயம் தாஸு திபுவன தம பாகா || 2497

மேலும், குடத்திலிருந்து தோன்றியவர் குறுமுனி அகஸ்த்யர். அவர் எங்கே? கரையே இல்லாத ஸமுத்ரம் எங்கே? அத்தகைய அகஸ்த்யர் என்னும் சிறிய உருவம் கொண்ட சிறு முனிவர் ப்ரம்மாண்டமான ஸமுத்ரத் தைக் குடித்து, வற்றடித்து உலகில் கீர்த்தியை உண்டாக் கினார். மேலும், ஸூர்ய மண்டலம் பார்க்கச் சிறிய உருண்டையாகத் தென்படுகிறது. ஆனால் ஸூர்யன் உதயமானவுடன் மூன்று உலகங்களுக்கும் வெளிச்சம் தருகிறான் அல்லவா? அதனால் இருட்டு ஓடிவிடுகிற தல்லவா? அது போல் சிறியதைச் சிறியதாக எண்ணா தீர்கள். இந்தச் சிறியதின் மஹத்வம் அபாரம் என்றாள் அந்தப் பெண். பிறகு ராணி நிம்மதியடைந்தாள். (அதாவது; ஒரு ஸமயம் அகஸ்த்யர் கடற் கரையில் அமர்ந்து யாகம் செய்து கொண்டிருந்தார். அப்போது திரும்பத் திரும்பக் கடல் அலைகள் வந்து அவரது பூஜா ஸாமக்ரியைகளை அடித்துச் சென்றது. மிகவும் கோப மடைந்த அகஸ்த்ய முனிவர் ஸமுத்ரத்தையே உலர்ந்து போகும்படிச் செய்தார். அதாவது; ''ஓம் ராகவாய நமஹ ஓம் கேசவாய நமஹ ஓம் வாஸுதேவாய நமஹ'' என்று சொல்லி எல்லாக் கடல் ஜலத்தையும் வற்றும்படிச் செய்தார். பிறகு தேவதைகளின் ப்ராத் தனைக்கிணங்கிப் பின்னும் கடல் நீர் உண்டாகும்படிச் செய்தார். அன்றிலிருந்து கடல் நீர் உப்பான நீராக மாறியது என்பது வரலாறு.)

மந்த்ர பரம லகு ஜாஸு பஸ்
பிதி ஹரி ஹர் ஸுர் ஸர்ப் |
மஹாமத்த கஜராஜ் கஹும்
பஸ் கர் அங்குஸ் கர்ப் || 2498

மேலும், மந்த்ரங்கள் மிகச் சிறியன. ஆனால், இந்த மந்த்ர உச்சாரணத்தில், வேதங்களும், ப்ரம்ம, ருத்ர, விஷ்ணு போன்ற எல்லாத் தேவர்களும் அடக்கம் அல்லவா? இந்த ஓங்கார மந்த்ரத்தில் சிவன், விஷ்ணு ப்ரம்மா மூவரும் கலந்து இருக்கிறார்கள். பெரிய மதங்

கொண்ட யானையைக் கூட சிறு அங்குசமே தன் வசமாக்கி விடுகிறதில்லையா? இவர்களைச் சிறியவர் என்று எண்ணாதீர்கள் என்றாள் ஒரு பெண்.

காம குஸும தனு ஸாயக் லீன்ஹே |
ஸகல புவன் அப்னேம் பஸ் கீன்ஹே || 2499
தேபி தஜிய ஸம்ஸவு அஸ் ஜானீ |
பஞ்ஜப் தனுஷு ராம் ஸுனு ரானீ || 2500

மேலும், பாருங்கள் தேவி! காம தேவனிடம் வெறும் புஷ்பங்களினால் ஆன ம்ருதுவான பாணமே இருக் கிறது. அதை வைத்துக் கொண்டு அவன் உலகம் முழுவதையும் தனக்குள் வசமாக ஆக்கிக் கொண்டு விடுகிறான் இல்லையா? ஹே தேவி! ராணி மாதா! இந்த ஸந்தேஹத்தை விட்டொழியுங்கள். ஸ்ரீ ராமன் கட்டாயம் வில்லை உடைப்பார். இது ஸத்யம் என் றாள் மற்றொரு ஸகி. (இவரைக் குழந்தை என்கிறீர்கள், இது நிஜம்தான். ஆனால், இவரிடம் ச்ருங்கார ரஸமும், வீர ரஸமும் நிரம்பி இருக்கிறது. காம தேவன் போல் தோன்றும் இவரைச் 'சிறியன்' என்று எண்ணாதீர்.)

ஸகீ பசன் ஸுனி பை பர்தீதீ |
மிடா பிஷாது படீ அதி ப்ரீதீ || 2501
தப் ராம்ஹி பிலோகி பைதேஹீ |
ஸபய் ஹ்ருதயம் பினவதி ஜேஹி தேஹீ ||2502

தோழியினுடைய வார்த்தையைக் கேட்டு ராணிக்கு ஸ்ரீராமனின் திறமையில் நம்பிக்கை ஏற்பட்டது; அவ ளது துக்கம் தீர்ந்தது; ராமனிடம் அதிக ப்ரீதி ஏற்பட் டது. ஜானகி தேவி இதே ஸமயம் ஸ்ரீராமச்சந்த்ரனைக் கண்கொட்டாமல் பார்த்தாள். பல தேவ தேவதை களைப் பயம் உள்ள மனத்தோடு ப்ரார்த்தித்துக் கொண்டாள்.

மன்ஹீம் மன் மனாவ் அகுலானீ |
ஹோஹு ப்ரஸன்ன மஹேஸ் பவானீ || 2503
கர்ஹு ஸபல் ஆப்னி ஸேவகாஈ |
கரி ஹிது ஹர்ஹு சாப் கருவாஈ || 2504

கலக்கமடைந்து ஸீதா தேவி மனத்திற்குள்ளேயே தேற்றிக் கொண்டாள். சிவ பார்வதியை வணங்கி, ஹே சிவ-பார்வதி! தாங்கள் ஸந்தோஷமடைந்து, இந்த அடிமை ஸேவகியைக் காப்பாற்றுங்கள். நான் செய்த பூஜைகள் பலனளிக்கட்டும். என் ப்ரார்த்தனைக்கு இணங்கி என்னிடம் அன்புகாட்டி, இந்தச் சிவ தனுஸைக் கனமில்லாமல் செய்ய வேண்டும் என்றாள்.

கனநாயக பரதாயக தேவா ।
ஆஜூ லகேம் கீன்ஹிஉம் துஅ ஸேவா ॥ 2505
பார் பார் பின்தீ ஸுனி மோரீ ।
கர்ஹு சாப் குருதா அதி தோரீ ॥ 2506

ஹே கணங்களின் தலைவனே! வரதாதாவான கணபதியே! நான் இன்று உன்னை வெகுவாக வணங்குகிறேன். அடிக்கடி உன்னுடைய ஸேவையைச் செய்து கொண்டே இருக்கிறேன். திரும்பத் திரும்ப என் கோரிக்கை இதுதான். இந்த மஹா பயங்கரமான வில்லைக் கனமில்லாமல் லேசாக இருக்கும்படிச் செய் வீராக என்கிறாள் ஸீதாதேவி.

தேகி தேகி ரகுபீர் தன்
ஸுர் மனாவ் தரி தீர் ।
பரே பிலோசன் ப்ரேம் ஜல்
புலகாவலீ ஸரீர் ॥ 2507

ஜானகியானவள் ரகு வீரரான ராமனைப் பார்த்துப் பார்த்து, தைரியந்தாங்கி, தேவதைகளிடம் ப்ரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்களில் ப்ரேமைக் கண்ணீர் நிரம்பி இருந்தது; உடலில் மயிர்க் கூச்சம் உண்டாகியது.

நீகேம் நிரகி நயன் பரி ஸோபா ।
பிது பனு ஸுமிரி பஹுரி மனு சோபா ॥2508
அஹஹ தாத தாருனி ஹட் டானீ ।
ஸமுஜத் நஹி கசு லாபு ந ஹானீ ॥ 2509

நல்ல முறையில் கண்களார ஸ்ரீ ராமனின் சோபையைக் கண்டு, பிறகு தந்தையின் சபதத்தை எண்ணி ஸீதையின் மனம் துக்கமடைகிறது. பிறகு மனத்துள்ளேயே

என் பிதா பிடிவாதமாக எத்தனை கடுமையான சபதம் எடுத்திருக்கிறார். இந்தச் சபதம் காரணமாக எத்தனை பெரிய துயரம் என்னை வருத்துகின்றது? அவர் லாப நஷ்டத்தைப் பற்றிச் சிறிதும் எண்ணியதாகத் தெரிய வில்லை!

ஸசிவ் ஸபய ஸிக் தேஇ ந கோயீ |
புத ஸமாஜ் பட் அனுசித் ஹோயீ || 2510
கஹம் தனு குலிஸஹு சாஹி கடோரா |
கஹம் ச்யாமள ம்ருதுகாத் கிஸோரா || 2511

மந்த்ரிகள் பயத்தினால் நீதியைக் கூட எடுத்துக் கூற மாட்டார்கள். பண்டிதர்களோ அனுசிதமான வார்த் தைகள் பேசுவதில் காலம் கடத்துகிறார்கள். வஜ்ரத்தை விட மிகக் கடினமான இந்தப் பயங்கர வில் எங்கே? ம்ருதுவான சரீரம் படைத்த சிறு வயதுடைய ச்யாம ஸுந்தரன் எங்கே?

பிதி கேஹி பாந்தி தரௌளம் உர் தீரா |
ஸிரஸ் ஸுமன் கன் பேதிய ஹீரா || 2512
ஸகல ஸபா கை மதி பை போரீ |
அப் மோஹி ஸம்புசாப் கதி தோரீ || 2513

ஹே விதாதா! நான் எவ்விதம் மனத்தில் தைரியம் கொள்வேன்? தலையின் உள்ள ம்ருதுவான சிறு மலர் களால் கடினமான வைரத்தை உடைக்க முடியுமா? இந்த ஸபையில் உள்ளோரின் புத்தியே கெட்டு விட் டதே, ஆகையினால் ஹே சிவனுடைய வில்லே! ''கேள், நான் இப்பொழுது உன்னைத்தான் சரண மடைந்திருக்கிறேன்.''

நிஜ ஜடதா லோகன்ஹ பர் டாரீ |
ஹோஹி ஹருவ ரகுபதிஹி நிஹாரீ || 2514
அதி பரிதாப் ஸிய மன் மாஹீம் |
லவ நிமேஷ் ஜுக் ஸய ஸம் ஜாஹீம் || 2515

மேலும், ''ஹே சிவதனுஸே! கல்லைப் போன்ற உன் அசைவற்ற தன்மையை மக்களிடம் காட்டு. ஆனால்; ஸுகுமார சரீரம் கண்டு ஸ்ரீராமச்சந்த்ரனிடம் உன் பளுவைக் காட்டாதே. கனம் இல்லாமல் லேசாக

ஆவாயாக'' என இவ்விதம் புலம்பிய ஸீதையின் மனத்தில் பெரும் துக்கம் உண்டானது. ஒவ்வொரு நிமிஷத்தின் ஒவ்வொரு துளியையும் ஒரு யுகமாகக் கழித்தாள் அவள்.

ப்ரபுஹி சிதயி புனி சிதவ்
மஹி ராஜத் லோசன் லோல |
கேலத் மனஸிஜ் மீன் ஜுக்
ஜனு பிது மண்டல் டோல || 2516

ஸீதாதேவி சில ஸமயம் பூமியையும், சில ஸமயம் ராமனையும் பார்த்துப் பார்த்து நாணமடைகிறாள். அவளுடைய இரண்டு கண்களும் சஞ்சலமடைந்து பர பரப்புடன் துடிக்கின்றன. அந்த இரண்டு கண்களும் அழகுடன் விளங்குகின்றன. அது எப்படியிருந்தது என்றால்;காம தேவனுடைய இரண்டு மீன்களும் சந்த்ர மண்டலமாகிற ஊஞ்சலில் இங்கும் அங்கும் ஊசலாடு கின்றனவோ; என்று எண்ணும்படி இருந்தன. (அதா வது ஜானகி தேவியின் முகமண்டலம் ஒரு சந்த்ரன் என்றும் அதில் உள்ள இரண்டு கண்களும் மீன்கள் எனப்படும்படி இருக்கின்றன. பூமியிலிருந்து பிறந்த வளாதலால் பூமிப்பிராட்டியை நோக்கி அதாவது; தன் துயரைத் தாயாரிடம் சொல்ல விரும்புகிறாள் போலும் என்கிறார் கவி.)

கிரா அலினி முக பங்கஜ் ரோகீ |
ப்ரகட் ந லாஜ் நிஸா அவலோகீ || 2517
லோசன் ஜலு ரஹ் லோசன் கோனா |
ஜிஸேம் பரம க்ருபன் கர் ஸோனா || 2518

ஜானகி ஏதோ கூற விரும்புகிறாள். ஆனால், சொல்ல முடியவில்லை. ஏனெனில்; ஸீதையின் வாக் காகிற வண்டை, முகமாகிற தாமரை தடுத்து வைத் திருக்கிறது. அதாவது; அந்த வாக்கு ஸீதையின் கமல முகத்தை விட்டு அகல மறுக்கிறது. ஆனால், நாண மாகிற இரவைக் கண்டு அது வெளிவரவில்லை. அதா வது; இரவில் தாமரை மலருக்குள்ளேயே வண்டுகள் அகப்பட்டுக் கொண்டு விடும்; வெளியே வரத் தெரி யாது. அதே போல் ஜானகியின் முக ரூபமான தாமரை யில் அவள் வாக்கு அப்படியே முடங்கிக் கொண்டு

விட்டது; பேச முடியவில்லை. கஞ்சன் ஒருவனிடம் பொன் ஆபரணம் சிக்கிக் கொண்டால்; எப்படி அது வெளியே வராதோ அம்மாதிரி அவள் கண்களின் ஓரமாகப் பெருக்கெடுத்த கண்ணீரோ; கண் ஓரமாக அப்படியே நின்று விட்டது.

ஸகுசீ ப்யாகுலதா படி ஜானீ |
தரி தீரஜு ப்ரதீதி உர் ஆனீ || 2519
தன் மன் பசன் மோர் பனு ஸாசா |
ரகுபதி பத ஸரோஜ் சிது ராசா || 2520

தன்னுள் வளர்ந்து வரும் கலக்கம் கண்டு ஸீதை நாணினாள். பின்பு தன்னையே தேற்றிக் கொண்டு தைரியமும் அடைந்து நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டாள். எனது சரீரம், மனம், வசனம் ஆகியவை களால் என் உறுதி உண்மையாக இருக்கிறதால்தான்; ஸ்ரீராமனின் பாத கமலங்களில் என் உள்ளம் உண்மை யில் ஐக்யமடைகின்றது! என்று நினைத்தாள்.

தெள பகவானு ஸகல் உர் பாஸீ |
கரிஹி மோஹி ரகுபர் கை தாஸீ || 2521
ஜேஹி கேம் ஜேஹி பர் ஸத்ய ஸனேஹூ |
ஸோ தேஹி மிலயி ந கசு ஸந்தேஹூ || 2522

அப்படியானால் எல்லோர் ஹிருதயத்திலும் வாஸம் செய்கிற பகவான்; என்னை ரகுச்சிரேஷ்டரான ஸ்ரீராமச் சந்த்ரனின் பணிமாதாகவாவது கட்டாயம் செய்யட் டும். யாருக்கு, யார் மீது உண்மையிலேயே அன்பு, நட்பு ப்ரியம் இருக்கிறதோ; அவர் அவரோடு சேரவே சேருவார். இதில் ஸந்தேஹமே இல்லை. ஆகவே, ஸ்ரீராமன் எனக்குக் கட்டாயம் கிடைப்பார்.

ப்ரபு தன் சிதஇ ப்ரேம் தன் டானா |
க்ருபாநிதான் ராம் ஸபு ஜானா || 2523
ஸியஹி பிலோகி தகேவு தனு கைஸேம் |
சிதவ் கருரு லகு ப்யாலஹி ஜைஸேம் || 2524

ப்ரபுவின் பக்கம் பார்த்து இவ்விதம் ஜானகிதேவி தனது உடலின் மூலமாக ப்ரீதியை நிலைநிறுத்திக் கொண்டாள். ஸ்ரீராமனுடன் மனத்திற்குள்ளே சபதம்

இட்டாள். (என்னவென்றால்; ஸ்ரீராமன் வில்லுடைத்து என்னை அடைய முடியாவிட்டால், நான் இக்கணமே உயிர் த்யாகம் செய்து கொண்டு விடுவேன் என்கிறாள் ஸீதை.)

கருணைக் கடலான ஸ்ரீராமன் எல்லாம் தெரிந்தவ ராயிற்றே! ஆகவே, அவரும் ஸீதையின் துயரத்தை நன்றாக அறிந்து கொண்டார். பின்னால் தனது கம்பீர மான பார்வையை ஸீதாவின் மீதும், சிவதனுஸின் மீதும் ஏவினார். அந்தப் பார்வை எப்படி இருந்தது என்றால்; கருடன் எப்படிச் சிறு ஸர்ப்பத்தை நோக்கி இளக்காரமாகப் பார்க்குமோ அப்படி இவர் வில்லைப் பார்த்தார். ''அதாவது என் பலத்திற்கு எதிரில் இந்தப் பழைய வில் எந்த மட்டும்? என்று நினைத்தார்.

லகன் லகேவு ரகுபம்ஸமனி
தாகேவு ஹர் கோதண்டு |
புலகி காத் போலே பசன்
சரன் சாபி ப்ரஹ்மாண்டு || **2525**

ரகுகுலமணியான ஸ்ரீராமன் வில்லை உற்றுக்கவ னிப்பதைக் கண்டு இங்கு லக்ஷ்மணனும் நோக்கினார். பிறகு சரீரம் புளகாங்கிதம் அடையும்படிப் பூமியைக் காலால் அழுத்திக் கொண்டு பேசலானார். (முன்பு அவர் பிரதிஜ்ஞை செய்யும் பொழுது பூமியே ஆடியது. ஆகவே, இத்தருணம் பூமியைக் கால்களால் நன்றாக அழுத்திக் கொண்டு கூறலானார்.)

திஸி குஞ்ஜர்ஹு கமட் அஹி கோலா |
தர்ஹு தரனி தரி தீர் ந டோலா || **2526**
ராமு சஹஹிம் ஸங்கர் தனு தோரா |
ஹோஹு ஸஜக் ஸுனி ஆயஸு மோரா ||2527

ஹே திக்கஜங்களே! ஆமையே! ஆதிசேஷனே! வராஹமே! நீங்கள் அனைவரும் தைர்யத்துடன் பூமி யைத் தாங்கி நில்லுங்கள்; அசையாமல் கவனித்துக் கொள்ளுங்கள். ஸ்ரீராமபிரான் சிவதனுஸை உடைக்கப் போகிறார். ஆகவே, நீங்கள் யாவரும் என் ஆஜ்ஞை யைக் கேட்டு எச்சரிக்கையுடன் இருங்கள் என்றார் லக்ஷ்மணன்.

சாப் ஸமீப் ராமு ஜப் ஆயே |
நர் நாரின்ஹ ஸுர ஸக்ருத மனாயே || 2528
ஸப் கர் ஸம்ஸவு அரு அக்யானூ |
மந்த மஹீபன்ஹ கர் அபிமானூ || 2529

ஸ்ரீ ராமச்சந்த்ரன் வில்லின் அருகில் வந்ததும், எல்லா ஸ்த்ரீ- புருஷர்களும், தேவதைகளையும், புண்யத்தையும் வேண்டினர். எல்லோருடைய மனத்தில் உள்ள ஸந்தேஹமும், அஜ்ஞானமும், கீழ்த்தரமான ராஜாக்களின் செருக்கும்,

ப்ருகுபதி கேரி கர்ப கருஆயீ |
ஸுர முனிபரன்ஹ கேரி கத்ராயீ || 2530
ஸிய கர் ஸோசு ஜனக் பசிதாவா |
ரானின்ஹ கர் தாருன் துக் தாவா || 2531

மேலும், பரசுராமனின் கர்வமும், தேவர்கள், முனிவர்களின் பயமும், ஸீதையின் கலக்கமும், ஜனகரின் பச்சாதாபமும், மற்றும் ராணிகளின் பயங்கரமான துயரக் காட்டுத் தீயும்,

ஸம்புசாப் பட் போஹிது பாயீ |
சடே ஜாயி ஸப் ஸங்கு பனாயீ || 2532
ராம் பாஹுபல் ஸிந்து அபாரு |
சஹத் பாரு நஹிம் கோவு கட்ஹாரு || 2533

ஆக இவைகள் யாவும் சிவனாரின் வில்லாகிற ஒரு பெரிய கப்பலை அடைந்து எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து ஏறிக் கொண்டன. ஆனால், இவைகள் ஸ்ரீராமனுடைய புஜங்களின் பலமாகிற கரைகாணாக் கடலைக் கடக்க விரும்பின. ஆனால், அந்தப் பெரிய கப்பலை ஓட்ட எந்த ஓடக் காரனும் இல்லை.

ராம் பிலோகே லோக் ஸப்
சித்ர லிகே ஸே தேகி |
சிதயீ ஸீய க்ருபாயதன்
ஜானீ பிகல் பிஸேஷி || 2534

ஸ்ரீராமச்சந்த்ரன் ஸபையை ஒருமுறை நோக்கினார். மக்கள் சித்ரத்தில் எழுதியது போல் ப்ரமை பிடித்து

ஆடாமல் அவர்கள் நின்றிருந்ததைப் பார்த்தார். பிறகு கருணையின் இருப்பிடமான ஜானகியின் பக்கமாக நோக்கினார். அவளும் சீரிய மனத் துக்கத்தில் இருப்பதைக் கண்டார்.

தேகீ பிபுல் பிகல் பைதேஹீ |
நிமிஷ பிஹாத் கல்ப ஸம தேஹீ || 2535
த்ருஷித் பாரி பினு ஜோ தனு த்யாகா |
முயேம் கர்யி கா ஸுதா தடாகா || 2536

மேலும், அவர் ஜானகி மன நிம்மதியற்று வாட்டத்தோடு இருப்பதையும் பார்த்தார். ஒவ்வொரு நொடியையும் அவள் ஒரு யுகமாகக் கருதுவதாகவும், கழிப்பதாகவும் கண்டார். தாகத்தால் வருந்துகிறவன் தண்ணீர் கிடைக்காமல் சரீரத்தை த்யாகம் செய்த பின்பு அவன் இறந்த பின்னர் அமுதக் குளமே வந்தும் பயன் என்ன? உயிர் வரப் போகிறதா? அம்மாதிரியாக ஜானகியின் நிலையைக் கண்டார் ராமன்.

கா பர்ஷா ஸப் க்ருஷீ ஸுகானேம் |
ஸமய் சுகேம் புனி கா பசிதானேம் || 2537
அஸ் ஜியம் ஜானி ஜானகீ தேகீ |
ப்ரபு புலகே லகி ப்ரீதி பிஸேஷீ || 2538

எல்லா வயல்களும், பயிர்களும் உலர்ந்து மடிந்த பின் மழைக்கு என்ன அவசியம்? ஸமயம் கடந்த பின்பு வருந்துவதால் என்ன ப்ரயோஜனம்? என்று இம்மாதிரி எண்ணி; ஜானகியை ஸ்ரீராமன் நோக்கினார். அவளுடைய சிறந்த ப்ரேமையைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்.

குர்ஹி ப்ரணாமு மன்ஹிம் மன் கீன்ஹா |
அதி லாகவம் உடாயி தனு லீன்ஹா || 2539
தம்கேவு தாமினி ஜிமி ஜப் லயவு |
புனி நப் தனு மண்டலஸம பயவு || 2540

குருவை மனத்துள் ப்ரார்த்தித்துக் கொண்ட ப்ரபு ஸ்ரீராமன் சீக்ரமாகவே தனுஸைக் கையில் எடுத்து விட்டார். அவர் எடுத்த வேகம் எப்படி இருந்தது

என்றால்; ஒரு நொடியில் பெரிய மின்னல் மின்னியது போலும், ஆகாயம் முழுவதும் ஒளி தோன்றி மண்டலம் போட்டது போலவும் இருந்தது.

(குலகுரு வஸிஷ்டரை மனத்தில் எண்ணிய பின்பே தனுஸின் மீது ராமர் கையை வைத்தார். அவர் தனுஸை எடுத்து நாணேற்றினார். அப்பொழுது அவருடைய நீல வர்ண முகத்தின் ப்ரதிபிம்பம் ஆகாயம் முழுவதுமே நீல வர்ணத்துடன் ப்ரதிபலித்தது போல் தோன்றியது. அதாவது; ஸ்ரீராமன் மேகம் என்றும், அவர் வில்லை நாணேற்றியதும் ஸீதையின் முகம் மின்னல் போல் ஒளிவீசியது என்றும் கூறுகிறார். ஜானகி ப்ரஸன்ன மடைந்தார். ஜானகிக்கு உபமானமாக ஒளி வீசும் மின்னலைக் கூறுகிறார்.

ஒரு முறை மஹாதேவன் த்ரிபுராஸுரனைக் கொல்ல வேண்டி இந்தத் தனுஸைக் கையில் எடுத்தார். ஒரே பாணத்தில் அஸுரனைக் கொன்றுவிட்டார். பிறகு அந்தத் தனுஸிற்கு வேலையில்லை என்று அங்கேயே போட்டுவிட்டார். அப்பொழுது மஹா விஷ்ணு சிவனாரிடம் வந்து அந்த வில்லைப் பற்றிப் பேசினார். பிறகு அந்த வில்லில் ஒரு ஓரத்தையும் உடைத்து அங்கேயே போட்டுவிட்டார். அதனைச் சிவனார் விஷ்ணுவிடம் கூறினார். தாங்கள் மனுஷ்ய அவதாரம் எடுத்துப் பூமியல் பிறந்து, இந்த வில்லையே உடைத்து ஜானகியை மணம் புரிவீர்கள் என்றார். இந்தச் சிவ விஷ்ணு ஸம்பவத்திற்கு ஜானகி மிகவும் வருத்தமடைந்தாள். அதாவது; இது பிற்காலத்தில் ஸாத்யமாகுமா? என்று எண்ணினாள்.)

லேத் சடாவத் கைஞ்சத் காடேம் |
காஹூம் ந லகா தேக் ஸபு டாடேம் || 2541
தேஹி சன் ராம் மத்ய தனு தோரா |
பரே புவன் துனி கோர் கடோரா || 2542

ஸ்ரீராமன் வில்லை எடுத்ததையும், நாண் ஏற்றியதையும், அதைப் பலமாக இழுத்ததையும் யாவரும் பார்க்கவில்லை. எல்லாமே ஒரு நொடியில் நடந்தது. (இந்த வில்லை எப்பொழுது எடுத்தார், நாணேற்றினார், எப்பொழுது இழுத்தார்? என்ற விவரம் ஒருவருக்குமே

விவரம் தெரியவில்லை. இந்த மூன்று செயல்களும் அவ்வளவு துரிதமாக நடந்தன.) எல்லோரும் நின்று பார்த்தது பார்த்தவர்களாகவே நின்று விட்டார்கள். அதே கணம் ஸ்ரீராமன் பயங்கரமான வில்லை நடுவே உடைத்து விட்டார். உலகமெங்கிலும் பயங்கரமான ஒலி கேட்டு நிறைந்தது.

பரே புவன் கோர் கடோர் ரவ ரபி
பாஜி தஜி மார்கு சலே |
சிக்கர்ஹிம் திக்கஜ டோல் மஹி அஹி
கோல கூரும கல்மலே || 2543
ஸுர அஸுர் முனி கர் கான் தீன்ஹேம்
ஸகல பிகல் பிசார்ஹீம் |
கோதண்ட கண்டேவு ராம துளஸீ
ஜயதி பசன் உசார்ஹீம் || 2544

உலகம் எங்கிலும் மிகப் பயங்கரமான சப்தம் நிறைந்தது. ஸூர்யனுடைய குதிரைகளும் வழிவிட்டு விலகி ஓட ஆரம்பித்தன. வில்லை உடைத்த சப்தமானது பாதாளம் வரை போய் திக்குகளைத் தாங்கும் யானைகளையும் பிளிறவைத்தது. பூமியையும் அடியோடு ஆட வைத்தது. ஆதிசேஷனும், வராஹமும், ஆமையும் கனம் தாங்காமல் பயந்தவாறு ஓடி ஒளிந்து கொண்டன. இதுவே இப்படியிருக்க, மேலே உள்ள ஸுரர்களும், கீழே உள்ள அஸுரர்களும், மத்தியிலுள்ள ஸித்தர்களும், முனிவர்களும் காதுகளை இரண்டு கைகளாலும் பொத்திக் கொண்டு கலங்கிய வண்ணம் யோசனை செய்யலாயினர். பிறகு ஸ்ரீராமன் தனுஸை உடைத்து விட்டதுமே எல்லோரும் ஸ்ரீராமனுக்கு ஜய ஜயகோஷம் செய்யத் தொடங்கினர் என்கிறார் துளஸீ!

ஸங்கர் சாபு ஜஹாஜு
ஸாகரு ரகுபர் பாஹுபலு |
பூட் ஸோ ஸகல் ஸமாஜு சடா
ஜோ ப்ரதமஹிம் மோஹ் பஸ் || 2545

சிவனாரின் இந்த வில்லோ ஒரு கப்பல். ஸ்ரீராமனுடைய புஜபலம் ஒரு ஸமுத்ரம். வில்லை உடைத்த தாலே அதில் முன்னம் ஏறிய எல்லா ஸமூஹங்களும்,

(அதாவது; ஸந்தேஹம், அறியாமை, மற்ற அரசர் களின் செருக்கு, பரசுராமனின் கர்வம், தேவதைகள்-முனிவர்களின் பயம், ஸீதையின் விசாரம், ஜனகரின் பச்சாத்தாபம், ராணிகளின் துயரக் கனல் முதலானவை யாவும் மூழ்கிவிட்டன.)

ப்ரபு தோவு சாப்கண்ட மஹிடாரே |
தேகி லோக் ஸப் பயே ஸுகாரே || 2546
கௌஸிகரூப் பயோநிதி பாவன் |
ப்ரேம் பாரி அவகாஹு ஸுஹாவன் || 2547

ப்ரபுவானவர் வில்லை உடைத்து இரண்டு துண் டாக்கிக் கீழே போட்டதுமே எல்லா ஜனங்களும் ஸுக மடைந்தனர். விச்வாமித்ரர் என்கிற தூய ஸமுத்ரத்தில் ப்ரேமை என்கிற அழகிய மடு ஜலத்தால் நிரம்பியது.

ராமரூப் ராகேஸு நிஹாரீ |
படத் பீசி புலகாவலி பாரீ || 2548
பாஜே நப் கஹகஹே நிஸானா |
தேவபதூ நாச்ஹிம் கரி கானா || 2549

மேலும், ராமனாகிற முழுநிலாவைக் கண்டதும் மயிர்க் கூச்சமாகிற பேரலைகள் அதிகரித்தன.

(ஸ்ரீ ராமச்சந்த்ரனுடைய சந்த்ரனைப் போன்ற அழகிய ரூபத்தைக் கண்ட விச்வாமித்ரரின் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கியது.) ஆகாயத்தில் நகாரா முதலிய பலவித வாத்யங்களின் கோஷம் கேட்டது. அப்ஸர ஸ்த்ரீகள் இசை பாடிக் கொண்டு நர்த்தனம் செய் தார்கள்.

ப்ரஹ்மாதிக் ஸுர ஸித்த முனீஸா |
ப்ரபுஹி ப்ரஸம்ஸஹிம் தேஹிம் அஸீஸா || 2550
பரிஸ்ஹிம் ஸுமன் ரங்க் பஹு மாலா |
காவ்ஹிம் கின்னர் கீத் ரஸாலா || 2551

ப்ரம்மாதி தேவர்களும், ஸித்தர்களும், முனிவர் களும் ப்ரபு ஸ்ரீராமனின் புகழ்ப் பெருமையைப் பாடி, அவருக்கு ஆசீர்வாதம் செய்தார்கள். அவர்கள்

பலவித வண்ண வண்ண மலர்களையும், மாலைகளை யும் மாரியாகப் பொழிந்தனர். கின்னரர்கள் பலவித மான மதுர இசையைப் பாடினார்கள்.

ரஹீ புவன் பரி ஜய ஜய பானீ |
தனுஷ்பங்க் துனி ஜாத் ந ஜானீ || 2552
முதித் கஹஹிம் ஜஹம் தஹம் நர் நாரீ |
பஞ்ஜேவு ராம் ஸம்புதனு பாரீ || 2553

உலகெங்கிலும் ஜய ஜய என்ற தொனி படர்ந்தது. அதில் வில்லை உடைத்த ஒலியை அறியவே முடிய வில்லை.

ஸ்ரீராமன் கடினமான சிவனாரின் வில்லை உடைத்து விட்டார் என்று எல்லா ஸ்த்ரீ-புருஷர்களும், மித்ர-பந்துக்களும் மகிழ்வுடன் கூறினார்கள்.

பந்தீ மாகத் ஸூதகன்
பிருத பதஹிம் மதிதீர் |
கர்ஹிம் நிசாவரி லோக் ஸப்
ஹய கய தன் மனி சீர் || 2554

துதிபாடுவோர், மாகதர்கள், ஸூதர்கள் இவர்கள் ராஜ மஹா ராஜாக்களின் புராதனப் பெயர்களைச் சொல்லி ராஜ வம்சத்தைப் பற்றி வர்ணனை செய்து கொண்டிருக்கிறார்கள். ஜனங்கள் ஒவ்வொருவரும் தங் கள் தங்கள் குதிரைகள், யானைகள், செல்வங்கள், மணி மாலைகள், வஸ்த்ரங்கள் முதலியவைகளைக் கொண்டு வந்து பரிசாகக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜான்ஜி ம்ருதங்க ஸங்க் ஸஹ்னாயீ |
பேரி டோல் துந்துபீ ஸுஹாயீ || 2555
பாஜ்ஹிம் பஹு பாஜ்னே ஸுஹாயே |
ஜஹம் தஹம் ஜுப்தின்ஹ மங்கல காயே || 2556

அரண்மனையில்; ஜாலரா, ம்ருதங்கம், சங்கு, ஷனாய், பேரிகை, டோல், நகாரா முதலிய அழகிய பலவகை வாத்யங்களும் வாசிக்கப்பட்டன. இளம் கன்னிகைகள் மங்கள கானம் இசைத்தார்கள்.

ஸகின்ஹ ஸஹித் ஹர்ஷீ அதி ரானீ |
ஸுகத் தான் பரா ஜனு பானீ || 2557
ஜனக் லஹேவு ஸுகு ஸோசு பிஹாயீ |
பைரத் தகேம் தாஹ் ஜனு பாயீ || 2558

உலர்ந்துவிட்ட தானியப் பயிர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினால் சுவை எப்படித் தளிர்க்கத் தொடங் குமோ; அதேபோல தோழியருடன் கூடிய அரசமா தேவியர் மிகவும் ஸந்தோஷமடைந்தார்கள். நீந்தி நீந்திக் களைத்தவனொருவன் ஆழத்திற்குச் சென்றுவிடுவது போல ஜனகர் கவலைகளையெல்லாம் விட்டுவிட்டு ஸுகத்தை அடைந்தார்.

ஸ்ரீஹத் பயே பூப் தனு டூடே |
ஜைஸேம் திவஸ் தீப் சபி மூடே || 2559
ஸீய ஸுக்ஹி பர்னிய கேஹி பாந்தீ |
ஜனு சாதகீ பாயி ஜலு ஸ்வாதீ || 2560

பகலில் எப்படித் தீபத்தின் வெளிச்சம் ப்ரகாசிப்ப தில்லையோ; அவ்விதம் இந்த வில்லை உடைத்ததும், அங்குள்ள மற்ற அரசர்கள் சோபையை இழந்தார்கள். எப்படி சக்ரளவாகப் பக்ஷிக்கு ஸ்வாதி மழைத் துளி கிடைத்துவிட்டால் எத்தனை ஸுகமடையுமோ; அம் மாதிரி ஜானகி தேவிக்கு உண்டான மன ஸந்தோஷத்தை எப்படி வர்ணிப்பது?

ராம்ஹி லகனு பிலோகத் கைஸேம் |
ஸஸிஹி சகோர் கிஸோர்கு ஜைஸேம் || 2561
ஸதானந்த் தப் ஆயஸு தீன்ஹா |
ஸீதாம் கமனு ராம் பஹிம் கீன்ஹா || 2562

சந்த்ரனைச் சகோரப் பறவைக் குஞ்சுகள் பார்ப்பது போல ஸ்ரீராமனை லக்ஷ்மணன் அத்தனை ப்ரியத் துடன் நோக்கினார். அப்பொழுது சதானந்தர்; ஸீதையை ஸ்ரீராமன் அருகில் அழைத்து வரும்படி ஆணை செய் தார். ஸீதை மெதுவாக ஸ்ரீராமன் இருக்குமிடம் நடந்து வந்தாள்.

ஸங்க் ஸகீம் ஸுந்தர் சதுர்
காவ்ஹிம் மங்கலசார் |
கவ்னீ பால் மரால் கதி
ஸுஷமா அங்க் அபார் || 2563

கூட இருக்கும் புத்திசாலிகளான அழகிய ஸகிகள் மங்கள கானம் இசைத்தார்கள். ஸீதை ராஜ ஹம்ஸத் தின் குஞ்சு போல அழகாக மென் நடை நடந்து வரு கிறாள். அப்போதிருந்த அவள் தேஹத்தின் காந்தியை வர்ணிக்க முடியாது.

ஸகின்ஹ மத்ய ஸிய ஸோஹதி கைஸேம் |
சபிகன் மத்ய மஹாசபி ஜைஸேம் || 2564
கர ஸரோஜ் ஜயமால் ஸுஹாயீ |
பிஸ்வ பிஜய ஸோபா ஜேஹிம் சாயீ || 2565

அதாவது; அழகிற்கெல்லாம் நடுவேயுள்ள ஒரு பேரழகுடன் ஸகிகளின் நடுவே ஸீதை விளங்குகிறாள். அவளது கமலக் கரங்களில் அழகான ஜய மாலை, அதில் உலகையே வசீகரித்து வெல்லும்படியாக ஒரு சோபை மிளிர்ந்தது.

தன் ஸகோசு மன் பரம உசாஹூ |
கூட ப்ரேமு லகி பர்யி ந காஹூ || 2566
ஜாயி ஸமீப் ராம சபி தேகீ |
ரஹி ஜனு கும்அரி சித்ர அவரேகீ || 2567

ஸீதையின் சரீரத்தில் நாணம் இருக்கிறது. ஆனால், மனத்தில் மிகுந்த உற்சாகம் பொங்கியது. அவளது அடக்க மான ரகஸ்ய அன்பை வெளியே காட்டிக் கொள்ள அருகில் வந்து, ஸ்ரீராமனை நோக்கினாள். அப்படியே சித்ரத்தில் எழுதப்பட்ட ஓவியப் பதுமை போல் ராம னின் அழ்கைக் கண்டு அப்படியே நின்று விட்டாள்.

சதுர் ஸகீம் லகி கஹா புஜாயீ |
பஹிராவஹு ஜயமால் ஸுஹாயீ || 2568
ஸுனத் ஜுகல் கர் மால் உடாயீ |
ப்ரேம் பிபஸ் பஹிராயி ந ஜாயீ || 2569

திறமை வாய்ந்த ஸகி ஜானகியின் நிலையை அறிந்து உடனே ஜானகியிடம்; ''ஜயமாலையை ஸ்ரீராமன் கழுத்தில் அணிவித்து வா'' என்றாள். ஸீதை நினை வடைந்து இரண்டு கைகளிலும் ஜயமாலையைப் பிடித் துக் கொண்டாள். ப்ரேமையின் காரணமாக உடல் சிலிர்க்க அவளால் மாலையை அணிவிக்க முடியாமல் நிலைதடுமாறி நின்றாள்.

ஸோஹத் ஜனு ஜுக் ஜலஜ் ஸநாலா |
ஸஸிஹி ஸபீத் தேத் ஜயமாலா || 2570
காவஹிம் சபி அவலோகி ஸஹேலீ |
ஸியம் ஜயமால் ராம உர் மேலீ || 2571

அப்போது தாமரைத் தண்டுகளோடு கூடிய இரு தாமரைகள் சந்த்ரனுக்குப் பயந்து ஜய மாலையை அணிவிக்கிறதோ என்று எண்ணும்படியாக ஸீதையின் கைகள் அத்தனை அழகாக இருந்தன. அந்த அழகைக் கண்டு வர்ணித்து ஸகிகள் இசைபாடினார்கள். அந்த நேரம் ஜானகிதேவி உணர்வடைந்து ஜயமாலையை ஸ்ரீராமன் கழுத்தில் அணிவித்தாள்.

ரகுபர் உர் ஜயமால் தேகி
தேவ் பரிஸஹிம் ஸுமன் |
ஸகுசே ஸகல் புஆல் ஜனு
பிலோகி ரபி குமுதகன் || 2572

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் கழுத்தில் ஜயமாலையைக் கண்ட தேவர்கள் பூமாரி பொழியலாயினர். எப்படி ஸூர்யனைக் கண்டதும் குமுத மலர் வாடி மயங்குமோ அதேபோல் மற்றுமுள்ள அங்குள்ள அரச[illegible] கத்தால் தலை குனிந்தார்கள்.

புர் அரு ப்யோம் பாஜ்னே பாஜே |
கல் பயே மலின் ஸாது ஸப் ராஜே || 25[illegible]
ஸுர கின்னர் நர நாக் முனீஸா |
ஜய ஜய ஜய கஹி தேஹிம் அஸீஸா || 2574

நகரத்திலும், ஆகாயத்திலும் வாத்யங்கள் ஒலிக்க ஆரம்பித்தன. துஷ்டர்கள் துன்பமுடையவர்களானார் கள்; ஸாதுக்கள் ஸந்தோஷமடைந்தார்கள். தேவதை கள், கின்னரர்கள், மனிதர்கள், நாகர்கள், முனிவர்கள் எல்லோரும் ஜய ஜய என்று கோஷம் செய்து கொண்டு ஸீதா ராமனுக்கு ஆசீர்வாதம் செய்தார்கள்.

நாச்ஹிம் காவ்ஹிம் பிபுத் பதூடம் |
பார் பார் குஸுமாஞ்ஜலி தூடம் || 2575
ஜஹம் தஹம் பிப்ர பேத துனி கர்ஹீம் |
பந்தீ பிரிதாவளி உச்சரஹீம் || 2576

கந்தர்வர்களுடைய கன்னிகைகள் நர்த்தனம் செய்கிறார்கள். அடிக்கடி கைகளால் புஷ்பாஞ்சலி செய்தார்கள். ப்ராம்மணர்கள் வேத மந்த்ரங்களை ஓதுகிறார்கள். துதி பாடகர்கள் ராஜ வம்சத்தினரின் வம்ஸாவளியை பிருதுகளை, புகழைக் கூறிக் கொண்டே இருந்தார்கள்.

மஹி பாதால் நாக் ஜஸு ப்யாபா |
ராம் பரீ ஸிய பஞ்ஜேவு சாபா || 2577
கர்ஹிம் ஆரதீ புர நர் நாரீ |
தேஹிம் நிசாவரி பித்த பிஸாரீ || 2578

ராமன் இந்த தனுஸை உடைத்து, ஜானகியை விவாஹம் செய்து கொண்டார் என்ற இந்தக் கீர்த்தி மயமான ஸம்பவம் ப்ருத்வி, பாதாளம், ஸ்வர்க்கம் ஆகிய எல்லா இடங்களிலும் வ்யாபித்து விட்டது. நகர ஸ்த்ரீகளும், புருஷர்களும் ஆரத்தி எடுக்கிறார்கள். பொருள்களாலும், செல்வங்களினாலும் மிக அதிக அளவில் தான தருமங்களைச் செய்தார்கள்.

ஸோஹதி ஸீய ராம் கை ஜோரீ |
சபி ஸிங்காரு மன்ஹு ஏக் டோரீ || 2579
ஸகீம் கஹஹிம் ப்ரபுபத் கஹு ஸீதா |
கர்தி ந சரன் பரஸ் அதி பீதா || 2580

ஆஹா இந்த அழகுத் தன்மையும், ச்ருங்கார ரஸமும் ஒரு சேரத் திரண்டு வந்துள்ளனவோ; என்னும்படி ஸ்ரீராம-ஸீதா ஜோடி அத்தனை அழகாக இருந்தது. ஹே ஸீதா தேவி! ஸ்ரீராமச்சந்த்ர ஸ்வாமியின் சரணங்களைத் தொட்டு வணங்கு என்றார்கள் ஸகிகள். ஆனால்; ஜானகி அதிகப் பயத்துடன் இருந்ததால் அவர் பாதம் தொட மறுத்தாள். ஏனெனில்,

கௌதம திய கதி ஸுர்தி கரி
நஹிம் பர்ஸதி பக் பானி |
மன் பிஹஸே ரகுபம்ஸமனி
ப்ரீதி அலௌகிக் ஜானி || 2581

கௌதம தர்ம பத்னியான அஹல்யையின் நினைவு வந்தவுடன் ஜானகி ப்ரபுவான ஸ்ரீராமனின் பாதங்களைத் தொட மறுத்து விட்டாள். இந்த அலௌகிய ப்ரேமையை எண்ணி ரகுகுலமணி ஸ்ரீராமன் சிரித்துக் கொண்டார்.

(இதில் பல அர்த்தங்கள் உள்ளன.

1. ரகுநாதனின் கால்களைப் பிடிக்கப் போய் நாமும் ஒரு கல்லாகி விடுவோமோ, அதனால் அந்தக் கல் உயிர் பெற்று வேறு பெண்ணாகி விடுமோ என்று பயப்படுகிறாள்.

2. கால்களை நான் தொட்டு வணங்கி விட்டால்; ரகுநாதனைப் பிரிந்து அரண்மனைக்குள் போக வேண்டி நேரும். அந்த வியோகத்தை என்னால் ஸஹிக்க முடியாதே, என்று எண்ணுகிறாள்.

3. எதுவரை நான் ரகுநாதனின் கால்களைத் தொடாமல் இருக்கிறேனோ; அதுவரை நான் இங்கேயே அவர் எதிரில் இருக்க முடியும். காலைத் தொட்டு வணங்கி விட்டால்; ஸகிகள் என்னை இழுத்துப் போய் விடுவார்களோ எனப் பயப்படுகிறாள்.

4. ஒரு புராதனக் கதையும் இருந்தது. ரகுவம்சத்தில் ராமனிடம்- ஸீதைக்கு ஒரு சபதம் இருந்தது. அதாவது; என்னைத் தவிர எந்த ஸ்த்ரீயையும் தாங்கள் ஏற்கக் கூடாது. அப்போதுதான் நான் அவதாரம் எடுப்பேன் என்று ஆதியில் கூறியதை ஸீதை ராமனுக்கு நினைவு படுத்தினாள். நீங்கள் முன்னாலேயே ஒரு பெண்ணை அஹல்யாவைக் கால்களினால் தொட்டு அவளுக்குச் சாப விமோசனம் கொடுத்தீர்கள். இப்பொழுது மற்றொரு ஸ்த்ரீக்கு இடமேது? இதனால் அவர் கால்களைத் தொடவே பயப்படுகிறாள். ஏனெனில்; ராமனுக்கு ஒரே ஒரு மனைவி; அது நானாகத்தான் இருக்க முடியும், என்று நினைக்கிறாள். இந்த ஹாஸ்ய ப்ரத ஸம்பந்தத்தையும், குழப்பத்தையும் கண்ட ராமன் சிரித்துக் கொள்கிறார்.

5. அஹல்யா-கௌதமர் என்ற அந்தகாரம் விலகிய பின்னும், ஸீதை அநேக தேவ தேவிகளை வணங்குகிறாள்; பெரியவர்களை மூதாதையர்களை வணங்குகிறாள். ஆனால்; ராமனை மட்டும் காலைத் தொட்டு வணங்கப் பயப்படுகிறாள். இம்மாதிரி ஸ்த்ரீ தர்மத்தை நிலைநாட்ட முடியாமல் வெதும்பி நிற்கும் ஸீதையின் வேதனையைக் கண்டு ராமன் மனத்திற்குள் சிரித்துக் கொண்டார்.)

தப் ஸிய தேகி பூப் அபிலாஷே |
கூர் கபூத் மூட் மன் மாகே || 2582
உடி உடி பஹிரி ஸநாஹ் அபாகே |
ஜஹம் தஹம் கால் பஜாவன் லாகே || 2583

ஸீதையைக் கண்டு அந்த ஸமயம் மற்ற ராஜாக்கள் பேராசை கொள்ளலானார்கள். அந்தத் துஷ்டர்களான, கெட்ட பிள்ளைகளான, முட்டாள்களான ராஜாக்களின் மனத்தில் சினம் பொங்கி வந்தது. அந்த அபாக்யவான்களான அரசர்கள் தாங்கள் அவமானப் பட்டதை நினைத்துப் போகுமிடமெல்லாம் கத்தித் திட்டிக் கொண்டே, பறையடித்துக் கொண்டே போனார்கள்.

லேஹு சடாயி ஸீய கஹ் கோவூ |
தரி பாந்தஹு நிருப பாலக் தோவூ || 2584
தோரேம் தனுஷு சாட் நஹிம் ஸர்யீ |
ஜீவத் ஹம்ஹி கும்வரி கோ பர்யீ || 2585

சிலர்; ''ஜானகியை அபஹரித்துக் கொள்ளுங்கள்; ராஜ குமாரர்களான இந்த இரு யுவர்களையும் பிடித்துக் கட்டி வையுங்கள்'' என்றனர். வேறுசிலர்; ''வில்லை உடைத்தால் மட்டும் விருப்பம் நிறைவேறிவிடாது. நாம் உயிருடன் இருக்கும்வரை ராஜகுமாரி ஜானகியை எவர் மணக்க முடியும்? என்று மார் தட்டினார்கள்.

ஜெளம் பிதேஹு கசு கரை ஸஹாயீ |
ஜீதஹு ஸமர் ஸஹித் தோவு பாயீ || 2586
ஸாது பூப் போலே ஸுனி பானீ |
ராஜ்ஸமாஜ்ஹி லாஜ் லஜானீ || 2587

சிலர் இந்த விதேஹ ராஜா ஜனகர்; இவர்கள் பக்கம் எத்தனை ஸஹாயம் வேண்டுமானாலும் செய்யட்டும். நம்முடன் இவரும், இந்தக் குமாரர்களும் யுத்தம் செய்ய வரட்டும். பின்பு ஜயிக்கட்டும் பார்க்கலாம் என்றனர். மஹாத்மாவான ராஜா ஜனகர் இவர்கள் வார்த்தையைக் கேட்டு; இந்த ராஜ ஸமூஹத்தில் வெட்கமே வெட்கிப் போய் விட்டதோ? என்றார்.

பலு ப்ரதாபு பீர்தா படாயீ |
நாக் பினாகஹி ஸங்க ஸிதாயீ || 2588

லோயி ஸுரதா கி அப் கஹூம் பாயீ |
அஸி புதி தெஎ பிதி முஹம் மனி மாயீ || 2589

உங்களுடைய கீர்த்தியும், ப்ரதாபமும், வீரமும், பெருமையும் மானமும் வில் உடைந்த பொழுதே போய் விட்டது. இப்போது எங்கிருந்து அந்த வீரம் வந்தது? இப்படித் துர்ப் புத்திசாலிகளாக நீங்கள் இருப்பதால்தான் ப்ரம்மாவானவர் உங்கள் முகத்தில் கரியைத் தீட்டி விட்டார் என்றார்.

தேகஹு ராம்ஹி நயன் பரி
தஜி இரிஷா மது கோஹு |
லகன் ரோஷு பாவகு ப்ரபல்
ஜானி ஸலப் ஜனி ஹோஹு || 2590

மேலும்; பொறாமையையும், செருக்கையும், சினத்தையும் விட்டொழித்து ஸ்ரீராமச்சந்த்ரனைக் கண் குளிரப் பார்த்துக் கொள்ளுங்கள். லக்ஷ்மணனுடைய கோபமானது ப்ரபலமான அக்னி போன்றது; உங்களை எரித்து விடும் அந்தக் கோபம். அறியாமையினால் விட்டில் பூச்சி போல மடியாதீர்கள் என்றார்.

பைனதேய பலி ஜிமி சஹ் காகூ |
ஜிமி ஸஸு சஹை நாக் அரி பாகூ ||
ஜிமி சஹ் குஸல் அகாரன் கோஹீ |
ஸப் ஸம்பதா சஹை சிவ த்ரோஹீ || 25

கருடனுடைய தீனியைக் காகம் தின்ன முடியுமா? அதே போல் ஸிம்மத்தின் ஆஹாரத்தை முயற்குட்டி சாப்பிடமுடியுமா? அதுபோல் அகாரணமாகக் கோபம் கொண்டவன் தனக்கு க்ஷேமநலனை சிவனிடம் விரோதம் பாராட்டுபவன் எல்லாவகைச் செல்வங்களையும் பெற முடியுமா?

லோபீ லோலுப் கல் கீர்தி சஹ்யீ |
அகலங்கதா கி காமீ லஹ்யீ || 2593
ஹரி பத் பிமுக் பரம கதி சாஹா |
தஸ் தும்ஹார் லாலசு நர்நாஹா || 2594

பேராசைக்காரர்கள், லோபிகள் சிறந்த புகழை விரும்பினால் கிடைக்குமா? காமுகன் ஒருவன் களங்க மில்லாதிருக்க விரும்பினால்; அதைப் பெற முடியுமா? பகவானிடம் விரோதம் கொண்டு பகவானுடைய திரு வடிகளை த்யானிக்காது பாராமுகமாக இருப்பவன் முக்திக்கு ஆசைப்பட்டால் அது முடியுமா? அம் மாதிரி இந்த வஸ்து இந்த மனிதர்களுக்குக் கிடைக்காது. ஹே ராஜாக்களே! ஜானகி விஷயத்தில் உங்களுடைய ஆசை நிராசைதான். (எந்தெந்த வஸ்து எங்கெங்கு அமைய வேண்டுமோ; அங்குதான் அமைந்து விடுகிறது. இதில் ஸந்தேஹமில்லை; நீங்கள் ஆசைப்படுவது வீண் ஆசை தான் என்றார்.)

கோலாஹலு ஸுனி ஸீய ஸகானீ |
ஸகீம் லவாயி கயீம் ஜஹம் ரானீ || 2595
ராமு ஸுபாயம் சலே குரு பாஹீம் |
ஸிய ஸநேஹு பர்னத் மன்மாஹீம் || 2596

இந்தக் கூச்சலைக் கண்டு ஜானகி மிகவும் பய மடைந்தாள். ஸகிகள் அவளைத் தாயாரிடம் அழைத் துச் சென்றார்கள். ராஜாக்களின் வார்த்தைகளைக் கேட்ட ராமச்சந்த்ரனும் ஸீதையை அதி ப்ரேமையுடன் பார்த்து, அவள் அன்பை மனத்தில் எண்ணிக் கொண்டே குரு விச்வாமித்ரரிடம் வந்து சேர்ந்தார்.

ரானின்ஹ ஸஹித் ஸோச்பஸ் ஸீயா |
அப் தெளம் பிதிஹி காஹ் கர்னீயா || 2597
பூப் பசன் ஸுனி இத் உத் தக்ஹீம் |
லக்னு ராம் டர் போலி ந ஸக்ஹீம் || 2598

ராணிகளுக்கிடையில் ஜானகி துஷ்ட ராஜாக்களின் துர்வசனங்களைக் கேட்டு ஆழ்ந்த கவலையுடன் தென் பட்டாள். ப்ரம்மாவானவர் என்ன முடிவு செய்யப் போகிறாரோ என்று ஏங்கினாள். ராஜாக்களின் வார்த்தைகளைக் கேட்டுக் கோபம் கொண்ட லக்ஷ்மணன் இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டு பொறுமை இழந் திருந்தார். ஆயினும்; ராமனிடத்தில் உள்ள பயத் தினால் பேசாது சும்மா இருந்தார்.

அருன் நயன் ப்ருகுடீ குடில்
சிதவத் ந்ருபன்ஹ ஸகோப் |
மன்ஹும் மத்த கஜகன் நிர்கி
ஸிங்ககிஸோர்ஹி சோப் || 2599

லக்ஷ்மணனின் கண்கள் சிவந்தன; புருவங்கள் வளைந்தன. எப்படி மதம் கொண்ட யானைகளின் கூட்டத்தைப் பார்த்ததும் சிங்கக்குட்டிக்கு ஆவேசம் வருமோ அதேபோல்; அவர் ராஜாக்களை மிகக் கோபத்துடன் பார்க்கலானார்.

கர்பரு தேகி பிகல் புர் நாரீம் |
ஸப் மிலி தேஹிம் மஹீபன்ஹ காரீம் || 2600
தேஹிம் அவஸர் ஸுனி ஸிவதனு பங்கா |
ஆயஉ ப்ருகுகுல் கமல் பதங்கா || 2601

இந்தக் கோலாஹலத்தைக் கண்ட ஜனகபுரியின் ஆண்-பெண்களும் மிகவும் வ்யாகுலமடைந்தார்கள். எல்லோருமாகச் சேர்ந்து அரசனைத் திட்டத் தொடங்கினர். மேலும்; சிவதனுசு உடைந்த சப்தம் கேட்டு ப்ருகு குலமாகிய கமலத்தை மகிழ்விக்கும் ஸூர்யன் போன்றவரான பரசுராமன் அங்கு வந்தார்.

தேகி மஹீப் ஸகல் ஸகுசானே |
பாஜ் ஜபட் ஜனு லவா லுகானே || 2602
கௌரி ஸரீர் பூதி பல் ப்ராஜா |
பால் பிஸால் த்ரிபுண்ட் பிராஜா || 2603

எப்படிக் கழுகைக் கண்டதும் காடை ஓடி மறைகிறதோ; அம்மாதிரி, ஸபையில் அவரைக் கண்டதும் எல்லா அரசர்களும் நாணித் தலை குனிந்தார்கள். சிவந்த நிற அழகிய தேஹம். அதில் பூசப்பட்டிருந்தது விபூதி, பரந்த நெற்றி, அதில் மூன்று கோடுகளுடன் சேர்ந்து விபூதியே சோபையை அளிக்கிறது.

ஸீஸ் ஜடா ஸஸிபதனு ஸுஹாவா |
ரிஸ் பஸ் கசுக் அருன் ஹோயி ஆவா || 2604
ப்ருகுடீ குடில் நயன் ரிஸ் ராதே |
ஸஹஜ்ஹும் சிதவத் மன்ஹும் ரிஸாதே || 2605

தலையில் ஜடாமுடி, அழகிய முக சந்த்ரன் கோபத்தின் காரணமாகச் சிவந்து இருந்தது; புருவங்கள் வளைந்திருந்தன; அந்த நயனங்கள் சிவப்பேறியிருந்தன. இயற்கையாகப் பார்க்கும்பொழுதே மிகக் கோபங் கொண்டுள்ளவராகத் தென்பட்டார்.

ப்ருஷப கந்த உர் பாஹு பிஸாலா |
சாரு ஜனேவு மால் ம்ருகசாலா || **2606**
கடி முனிபஸன் தூன் துயி பாந்தேம் |
தனு ஸர் கர் குடாரு கல் காந்தேம் || **2607**

மேலும், அவரது உயர்ந்த புஷ்டியான அழகிய எருதைப் போல் நிமிர்ந்து உயர்ந்த தோள்களும், பரந்த கைகளும் அகன்ற மார்பும் மிகவும் அழகுடன் தோன்றின. அந்த அழகிய மார்பில் பூனூல் தரித்திருந்தார்; மாலை அணிந்திருந்தார்; மான் தோல் வைத்திருந்தார்; இடுப்பில் முனிவர்களைப் போல் மரவுரி கட்டியிருந்தார். பின்னும் இரண்டு பக்கமும் அம்பராத் தூணிகளைக் கட்டியிருந்தார். கைகளில் தனுஸும் பாணமும், தோளில் கோடரியும் கொண்டு ப்ரமாதமான ஒரு கவர்ச்சியுடன் தோன்றினார்.

ஸாந்த் பேஷு கர்னீ கடின்
பர்னி ந ஜாயி ஸரூப் |
தரி முனிதனு ஜனு பீர் ரஸு
ஆயவு ஜஹம் ஸப் பூப் || **2608**

பெரிய ஸாது ஸந்யாஸியைப் போல் வேஷம் கொண்டிருந்தார். ஆனால்; செயலோ கடுமையாக இருந்தது. அந்தக் கடூரமான ஸ்வரூபத்தை வர்ணிக்க இயலாது. எல்லா ராஜாக்களுக்கும் எதிரில் வீர ரஸமே முனிவராக உருக்கொண்டு வந்ததுவோ என்பது போல் தோன்றினார்.

தேகத் ப்ருகுபதி பேஷு கராலா |
உடே ஸகல் பய பிகல் புவாலா || **2609**
பிது ஸமேத் கஹி கஹி நிஜ நாமா |
லகே கரன் ஸப் தண்ட ப்ரனாமா || **2610**

பரசுராமனின் இந்தப் பயங்கரக் கம்பீரமான தோற்றத்தைக் கண்டு எல்லா ராஜாக்களும் பயந்து கலங்கினார்கள்; எழுந்து நின்றார்கள். தங்கள் தங்களுடைய

குலத்தையும், தகப்பனாரின் பெயர்களையும் தாங்களாகவே கூறிக்கொண்டு நமஸ்கரித்தார்கள். (பிதாவினுடைய பெயர் கூறக் காரணம் என்னவென்றால்; இவர்களை முன்பே பரசுராமன் தோற்கடித்து இருக்கிறார். முன்பே க்ஷத்ரிய வம்சங்களைப் பரசுராமன் அழித்திருக்கிறார். சில முனிவர்களின் க்ருபையால் அவர்கள் வம்சம் மீண்டும் துளிர்த்தது. ஆகவே; அவர்கள் பயந்து தங்கள் தங்கள் முனிவர்களின் பெயர்களைக் கூறித் தகப்பனாரின் பெயரைக் கூறி நமஸ்கரித்தார்கள் என்கிறார் கவி.)

ஜேஹி ஸுபாயம் சிதவ்ஹிம் ஹிது ஜானீ |
ஸோ ஜானயி ஜனு ஆயி குடானீ || 2611
ஜனக் பஹோரி ஆயி ஸிரு நாவா |
ஸீய போலாயி ப்ரனாமு கராவா || 2612

இயற்கையாகவே பரசுராமர் இதத்தை எண்ணியார் பக்கம் பார்க்கிறாரோ; அப்படிப் பார்க்கப்பட்டவர்கள் எங்களுடைய ஆயுள் இன்றுடன் முடிந்து விட்டது என்று கருதினர். பிறகு ஜனகர் வந்து தலை வணங்கினார்; மகள் ஜானகியையும் கூப்பிட்டுத் தலை வணங்கும்படிக் கூறினார்

ஆஸிஷ் தீன்ஹி ஸகீம் ஹர்ஷானீம் |
நிஜ ஸமாஜ் லை கயீம் ஸயானீம் || 2613
பிஸ்வாமித்ரு மிலே புனி ஆயீ |
பித ஸரோஜ் மேலே தோவு பாயீ || 2614

பரசுராமன் ஜானகியை நோக்கி மௌனமாக்யவதியாக இரு என்று ஆசீர்வாதம் செய்ததைக் கேட்டு ஸகிகள் ஸந்தோஷித்தார்கள். மேலும், அங்கு வெகு நேரம் வரை தங்கியிருப்பது சரியில்லை என்று எண்ணிப் பிறகு விச்வாமித்ரர் வந்து ஸந்தித்தார். அவர் இரண்டு ஸஹோதரர்களான ராம-லக்ஷ்மணரைப் பரசுராமனின் கால்களில் வீழ்ந்து நமஸ்கரிக்கும்படிச் செய்தார்.

ராமு லகனு தனித் கே பாயா |
தீன்ஹி அஸீஸ் தேகி ஜிய் ஹோயா || 2615
ராம்ஹி சிதயி ரஹே தகி லோசன் |
ரூப் அபார் மார் மத் மோசன் || 2616

ராமன்-லக்ஷ்மணன் என்ற பெயர் கொண்ட இவர் கள் தசரதரின் பிள்ளைகள் என்று அறிமுகப் படுத் தினார் விச்வாமித்ரர். அந்தத் தசரதனின் இரு குமாரர் களான அழகு ஜோடியான ராம- லக்ஷ்மணரைப் பார்த்துப் பரசுராமன் ஆசீர்வாதம் செய்தார். காம தேவனின் மதமோஹத்தையும் அபஹரிக்கும் தன்மை வாய்ந்த ஸ்ரீராமச்சந்த்ரனை நோக்கியதும் பரசுராம னின் கண்கள் அப்படியே அசைவற்று நின்றுவிட்டன. (ஏனெனில்; ஸ்ரீராமனின் பேரழகானது அபாரமான காம தேவனின் கர்வத்தை அழிக்க வல்லதாக இருந்தது. மேலும், அவனது ரூபம் ராஜாக்கள் எல்லோரையும் தவிரப் பரசுராமனின் கர்வத்தையும், அடக்க வல்லதாக இருந்தது. முக்யமாகப் பரசுராமனின் பலத்தை அழிக்க வல்லது என்கிறார் கவி.)

பஹுரி பிலோகி பிதேஹ் ஸன்
கஹஹு காஹ் அதி பீர் |
பூஞ்சத் ஜானி அஜான் ஜிமி
ப்யாபேவு கோபு ஸரீர் || **2617**

பிறகு எல்லாவற்றையும் பார்த்தும், எல்லாவற்றை யும் அறிந்தும் அறியாதவர் போல் அந்தப் பரசுராமன் ஜனகரை நோக்கி; ஹே ஜனகரே ஏன் இந்தப் பெருங் கூட்டம் இங்கு? என்ன நடக்கிறது? என்று கபடமாகக் கேட்டார். அவர் சரீரத்தில் கோபத்தின் சாயை படர்ந் திருந்தது.

ஸமாசார் கஹி ஜனக் ஸுநாயே |
ஜேஹி காரன் மஹீப் ஸப் ஆயே || **2618**
ஸுனத் பசன் பிரி அனத் நிஹாரே |
தேகே சாபகண்ட் மஹி டாரே || **2619**

எதற்காக எல்லா ராஜாக்களும் வந்திருக்கிறார்கள்? என்ன நடந்தது? என்பவை எல்லாம் விவரமாக ஜனகர் பரசுராமனுக்கு எடுத்துரைத்தார். இந்த ஜனகரின் வார்த்தையைக் கேட்டுக் கொண்டே கீழே பூமியில் விழுந்து உடைந்து கிடக்கும் சிவதனுஸையும் பரசு ராமன் பார்த்தார்.

அதி ரிஸ் போலே பசன் கடோரா |
கஹு ஜட் ஜனக் தனுஷ் கை தோரா || **2620**

பேகி தேகாவு மூட் ந த ஆஜூ |
உல்டவும் மஹி ஜஹம் லஹி தவ ராஜூ ||2621

அப்போது பரசுராமன் மிகுந்த கோபத்துடன்; ''ஹே மூர்க்க ஜனகரே! யார் இந்த வில்லை உடைத்தது? சீக்கிரம் அவரைக் காட்டு இல்லையேல்; இங்கிருந்து எது வரை உனது நிலம் இருக்கிறதோ; அதைக் கவிழும்படிச் செய்திடுவேன்'' என்றார்.

அதி டரு உதரு தேத் ந்ருபு நாஹீம் |
குடில் பூப் ஹர்ஷே மன் மாஹீம் || **2622**
ஸுர முனி நாக் நகர் நர் நாரீ |
ஸோச்ஹிம் ஸகல் த்ராஸ் உர் பாரீ || **2623**

மிகவும் பயத்தினால் ஜனகருக்கு வாயில் வார்த்தை எழவில்லை. இதைப் பார்த்த வஞ்சக மன்னர்கள் ஜனகருக்கு இப்பொழுது கேடு காலம் வந்து விட்டது என்று எண்ணித் தங்களுக்குள் எகத்தாளமாகச் சிரித்துக் கொண்டார்கள். தேவதைகள், முனிவர்கள், நாகர்கள், மேலும், நகரத்தின் ஸ்த்ரீ-புருஷர்கள் யாவரும் தங்களுக்குள் நினைத்து வருந்தினார்கள். என்ன நடக்குமோ? எப்படியாகுமோ? என்று பயந்தார்கள்.

மன் பசிதாதி ஸீய மஹ்தாரீ |
பிதி அப் ஸம்வரீ பாத் பிகாரீ || **2624**
ப்ருகுபதி கர் ஸுபாவு ஸுனி ஸீதா |
அர்த் நிமேஷ் கல்ப ஸம பீதா || **2625**

ஸீதாதேவியின் தாயார் மிகவும் வ்யாகுலமடைந்து, மனத்திற்குள்; 'அஹோ, ப்ரம்மன் எல்லாவற்றையும் அழகாகச் செய்து பின் இப்பொழுது அழிக்கப் பார்க்கிறானே' என்று சங்கடப்பட்டாள். இங்கு ஸீதையோ; பரசுராமனின் பயங்கர ஸ்வபாவத்தைக் கேட்டதும் என்ன ஆகுமோ என்று பயந்து ஒரு நிமிடத்தை ஒரு கல்ப யுகமாகக் கழித்தாள்.

ஸபய பிலோகே லோக் ஸப்
ஜானி ஜானகீ பீரு |
ஹ்ருதயம் ந ஹர்ஷு பிஷாது கசு
போலே ஸ்ரீ ரகுபீரு || **2626**

அப்பொழுது எல்லோருமே பயத்தால் நடுநடுங்கிக் கொண்டிருப்பதை ஸ்ரீராமன் கண்டார். ஜானகி தேவியும் பயத்துடன் இருப்பதையும் அறிந்தார். அவர் மனத்திலோ மகிழ்ச்சியும் சிறிதுமில்லை; வருத்தமும் சிறிதுமில்லை. எல்லோரையும் ஒருமுறை பார்த்து விட்டு;

நாத ஸம்புதனு பஞ்ஜநிஹாரா |
ஹோயிஹி கேவு ஏக் தாஸ் தும்ஹாரா || 2627
ஆயஸு காஹ் கஹிய கின் மோஹீ |
ஸுனி ரிஸாயி போலே முனி கோஹீ || 2628

ஹே ப்ரபுவே! இந்தச் சிவதனுஸை உடைத்தவன் யாராக இருக்கக்கூடும்? உங்களுடைய தாஸன் ஒருவரால்தான் இதை உடைக்க முடியும்.

தாங்கள் என்ன ஆஜ்ஞையிட்டாலும் கேட்க நான் தயாராக இருக்கிறேன்; என்னிடம் ஏன் கூறவில்லை? என்று கேட்டுவிட்டுப் பரசுராமன் அதிகக் கோபம் கொண்டு;

(வேண்டுமென்றே ஸ்ரீராமன் இந்த இடத்தில் உங்களுடைய ஒரு தாஸன் என்று கூறிக் கொள்கிறார்.) அதாவது; இந்த வில்லை உடைப்பவன் ஒரு ப்ராம்மணனாக இருக்கக் கூடும். அல்லது; சிவனாரின் தலைவரான ஈச்வரன் இந்த வில்லை உடைத்திருக்கக்கூடும். அதாவது; எந்த ப்ருகுவானவர் ஈச்வரனான விஷ்ணுவின் மார்பில் காலை எடுத்து உதைத்தாரோ; அந்த விஷ்ணுவின் தாஸராகத்தான் இருக்க முடியும் என்று கூறினார் என்பது கருத்து.)

ஸேவகு ஸோ ஜோ கரை ஸேவகாயீ |
அரி கர்னீ கரி கரிய லராயீ || 2629
ஸுனஹு ராம் ஜேஹிம் ஸிவதனு தோரா |
ஸஹஸ்பாஹு ஸம ஸோ ரிபு மோரா || 2630

ஸேவகன் என்று சொன்னால் அவன் ஸேவகனுக்குரிய பணிகளைத்தான் செய்ய வேண்டும். பகைவனுடைய செயலைச் செய்தால் சண்டையிடத்தான் வேண்டும். ஹே தசரத ராமா, கேள்! இந்தச் சிவதனுஸை எவன் உடைத்தாலும் சரி; அவன் ஸஹஸ்ரபாஹுவுக்கு ஸமமாக எனக்குச் சத்ருவாகிறான்.

(எப்படி என்றால்; ஒரு ஸமயம் பரசுராமனின் பிதா ஜமதக்னியானவர் ஸஹஸ்ர பாஹு ராஜாவை விருந்துக்கு அழைத்திருந்தார். தன்னிடமுள்ள காமதேனுவின் ப்ரதாபத்தினால் அவர்கள் யாவருக்கும் இச்சைப்படி விருந்து அளித்துத் திருப்தி செய்தார். இதைக் கண்ட அந்த ராஜன் காமதேனுவை அபஹரிக்க எண்ணி முனிவரிடம் கேட்டான். முனிவர் தரமறுத்தார். காமதேனு இந்த்ரலோகம் சென்று மறைந்து கொண்டது. ராஜா மிகவும் கோபித்துக் கொண்டு ஜமதக்னி முனிவரைக் கொன்று விட்டான். இதை அறிந்த பரசுராமன் மிகவும் சினம் கொண்டு சீறி எழுந்து ஸஹஸ்ர பாஹு ராஜாவைக் கண்டதுண்டமாக்கியதுடன் க்ஷத்ரிய வம்சத்தைப் பூண்டோடு அழித்து விடுவதாகவும் சபதம் இட்டார். அதன்படி க்ஷத்ரிய அரசர்களை அழித்து வந்தார்.)

ஸோ பிலகாவு பிஹாயி ஸமாஜா |
ந த மாரே ஜைஹஹிம் ஸப் ராஜா || 2631
ஸுனி முனி பசன் லகன் முஸுகானே |
போலே பரஸுதர்ஹி அப்மானே || 2632

மேலும், பரசுராமன், 'யார் இந்த வில்லை உடைத்தானோ; அவன் இந்த ராஜாக்கள் கூட்டத்திலிருந்து தனியாக இருக்க வேண்டும், இல்லையென்றால்; எல்லா அரசர்களும் கொல்லப் படுவார்கள்' என்றார். இந்த வார்த்தையைக் கேட்டதும் லக்ஷ்மணன் பரசுராமனை அவமானப்படுத்துமளவில் சிரித்தார். மேலும்,

பஹு தனுஹீம் தோரீம் லரிகாயீம் |
கப்ஹும் ந அஸி ரிஸ் கீன்ஹி கோஸாயீம் ||2633
ஏஹி தனு பர் மமதா கேஹி ஹேதூ |
ஸுனி ரிஸாயி கஹ் ப்ருகுகுலகேதூ || 2634

லக்ஷ்மணன்; ஹே கோஸாயீ ஸ்வாமி, சிறு வயதில் நாங்கள் இம்மாதிரிப் பல தனுஸ்களை உடைத்திருக்கிறோம். அப்போதெல்லாம் தாங்கள் இப்படிக் கோபிக்கவே இல்லையே, இந்தத் தனுஸில் மட்டும் தங்களுக்கு என்ன காரணத்தால் இவ்வளவு அன்பு இருக்கிறது? என்றார். இதைக் கேட்டதும் ப்ருகுவம்சத்தின் கொடி போன்ற பரசுராமன் கோபித்துக்கொண்டு;

(பூர்வத்தில் பரசுராமன் அனேக ராஜாக்களை ஜயித்து அவர்களுடைய வில்களை எல்லாம் திரட்டி வந்து ஓர் இடத்தில் வைத்தார். அனேக தேவதைகளின் தனுஸுகளையும் சேகரித்து ஒரே இடத்தில் வைத்தார். அப்போது பூமி பாரம் தாங்காமல் ஆடியது. இதனால் ஆதிசேஷன் (லக்ஷ்மணரூபத்தில்) மிகவும் பயந்தான். பூமி பெண்ணாகவும், சேஷன் சிறு பாலகனாகவும் அங்கு வந்து, தங்கள் ஏழ்மைக்கு வழி சொல்லும் படியும், சாப்பாடு போடும்படியும், தாங்கள் இருவரும் இதே குடிசையில் கொஞ்ச நாள் தங்குவதாகவும் கூறினார்கள். பரசுராமன் ஒப்புக் கொண்டார். பரசுராமனின் கோபத்திற்கு ஆளாகாமல் பூமி தேவி சேஷனைக் காப்பாற்றினாள். ஒருமுறை பரசுராமன் வெளியே போயிருக்கும் ஸமயம் பார்த்துச் சேஷன் (லக்ஷ்மணன்) அத்தனை வில்களையும் எடுத்து உடைத்துக் குவித்து விட்டார். பரசுராமன் வந்து பார்த்தார். ஆனால், கோபம் கொள்ளாமல் சிறுவனை ஆசீர்வாதம் செய்தார்; இங்கிருந்து போய்விடு என்றார். ஆனால், அந்தச் சேஷன் ஒரே ஒரு வில்லை அங்கு வைத்து விட்டு, இந்தச் சிவதனுஸ் இப்படியே இருக்கட்டும். பகவான் பிறந்து ஸ்ரீராமச்சந்த்ர ரூபமாக இங்கு வருவார். ஜனகர் ஸபையில் வந்து இந்தச் சிவதனுஸை அவர் உடைப்பார் என்று சொல்லிய அந்தச் சிறுவன், பரசுராமன் எதிரில் ஆதிசேஷனாக மாறிச் சுய ரூபத்துடன் தோன்றினான். பிறகு நாம் அத்தருணம் ஸந்திக்கலாம் என்று கூறினான். அதன்பின்பு பரசுராமன், சேஷன் இருவரும் பிரிந்தார்கள்.)

ரே ந்ருப பாலக் கால் பஸ்
போலத் தோஹி ந ஸம்பார் |
தனுஹீ ஸம திபுராரி தனு
பிதித் ஸகல் ஸம்ஸார் || **2635**

ஹே ராஜ புத்ரனே, (லக்ஷ்மணா) உனக்கு மரியாதையாய் அடக்கமாகக் கூடப் பேச வராதா? இது உலகிலேயே மிகப் ப்ரஸித்தமான சிவனாரின் தனுஸ்; விளையாட்டு வில்லல்ல. பழைய விற்கள் எல்லாம் மோசமானவை. இதை உடைத்தது ரொம்பவும் அதிசயம். தெரியுமா! என்றார் பரசுராமன்.

லகன் கஹா ஹம்ஸி ஹம்ரேம் ஜானா |
ஸுனஹு தேவ் ஸப் தனுஷ் ஸமானா || 2636
கா சதி லாபு ஜூன் தனு தோரேம் |
தேகா ராம் நயன் கே போரேம் || 2637

லக்ஷ்மணன் சிரித்துக் கொண்டே; ஹே தேவ! எமக்கு எல்லா தனுஸும் ஒரே மாதிரிதான். பழைய வில்லை உடைப்பதில் லாபம் என்ன? நஷ்டம் என்ன? ஒன்றும் இல்லை. ஸ்ரீராமச்சந்த்ரன் இதைப் புதியதான வில்லோ என்று நினைத்து எடுத்து விட்டார். உளுத்துப் போன பழைய வில் ஆனதால் உடனே உடைந்து விட்டது என்றார்.

சுவத் டுட் ரகுபதிஹு ந தோஸூ |
முனி பினு காஜ் கரிய கத் ரோஸூ || 2638
போலே சிதயி பரஸு கீ ஓரா |
ரே ஸட் ஸுநேஹி ஸுபாவு ந மோரா || 2639

தொட்ட மாத்ரத்திலேயே உடைந்து சிதறியது இந்தப் பழைய வில். அதை உடைத்த தோஷம் ரகுநாதனுக்கு இல்லை. ஹே முனிவரே! வீணாக ஏன் கோபம் கொள்கிறீர்கள்? அப்பொழுது பரசுராமன் தனது கோடரியின் பக்கம் பார்த்து; ஏ துஷ்டனே! நீ என்னுடைய ஸ்வபாவத்தைப் பற்றி அறியவில்லை போலும்.

பாலகு போலி பதவும் நஹிம் தோஹீ |
கேவல் முனி ஜட் ஜான்ஹி மோஹீ || 2640
பால ப்ரஹ்மசாரீ அதி கோஹீ |
பிஸ்வ பிதித் சத்ரியகுல் த்ரோஹீ || 2641

மேலும், நான் உன்னைச் சிறுவன் என்று எண்ணி அடிக்கவில்லை. அடே மூர்க்கனே! நீ என்னை ஸாதாரண முனிவன் என்று எண்ணுகிறாயா? நான் பாலப் ரஹ்மசாரி, மேலும், மஹா கோபிஷ்டன் நான் ஒரு க்ஷத்ரிய குல வைரி என்பதாக உலகமே என்னை அறியும் என்றார்.

புஜபல் பூமி பூப் பினு கீன்ஹீ |
பிபுல் பார் மஹி தேவன்ஹ தீன்ஹீ || 2642
ஸஹஸ்பாஹு புஜ சேதநிஹாரா |
பரஸு பிலோகு மஹீப்குமாரா || 2643

என் புஜபலத்தால் நான் இந்தப் பூமியை ராஜாக்களே இல்லாமல் ஒழித்தவன். பின்னும் இருபத்தி ஒரு தடவை ப்ராம்மணர்களுக்கு ராஜாக்களை ஒழித்துப் பூமியைத் தானமாகக் கொடுத்திருக்கிறேன்.

ஸஹஸ்ர பாஹு என்னும் அரசனின் தோள்களை இதோ இந்தக் கோடாரியால் வெட்டி வீழ்த்தினேன். ஏ ராஜ குமாரா! இதைப் பார்.

மாது பிதஹி ஜனி ஸோச்பஸ்
கர்ஸி மஹீஸ்கிஸோர் |
கர்பன்ஹ கே அர்பக் தலன்
பர்ஸு மோர் அதி கோர் || 2644

ஹே ராஜ புத்ரா! நீ உனது தாய் தந்தையரை எண்ணிக் கொள்; தர்க்கம் செய்யாதே. இந்த என்னுடைய கோடரி மிகவும் கோரமானது. கர்ப்பத்தில் இருக்கும் சிசுக்களையும் கூடக் கொல்லக் கூடியது என்றார். (அதாவது; இதனுடைய பயங்கர ஒலியைக் கேட்டாலே கர்ப்பத்தில் இருக்கும் சிசுவும் இறந்து விடுகிறது. அப்படிப்பட்ட பயங்கரமான கோடாரி இது)

பிஹஸி லகனு போலே ம்ருது பானீ |
அஹோ முனீஸு மஹா பட்மானீ || 2645
புனி புனி மோஹி தேகாவ் குடாரூ |
சஹத் உடாவன் பூங்கி பஹாரூ || 2646

சிரித்துக் கொண்டே லக்ஷ்மணன் ம்ருதுவான மொழியில்; அந்தோ! தாங்கள் முனிவராக இருந்து கொண்டு பெரிய போர் வீரனைப் போல் கர்வமாகப் பேசுகிறீர்களே! திரும்பத் திரும்ப என்னிடம் இந்தக் கோடாரியைக் காட்டுகிறீர்களே! பூ என்று ஊதி மலையைப் பறக்க வைக்க விரும்புகிறீர்களே! பேஷ்!

இஹாம் கும்ஹட் பதியா கோவு நாஹீம் |
ஜே தர்ஜனீ தேகி மரி ஜாஹீம் || 2647
தேகி குடாரு ஸரார்ஸன் பானா |
மைம் கசு கஹா ஸஹித் அபிமானா || 2648

ஆள்காட்டி விரலைக் காட்டினதுமே அதைப் பார்த்து உயிரை விடுவதற்கு இங்கு யாரும் ஸாதாரணப் பூசணிக்காய் இல்லை. இந்த உங்களுடைய கோடாரியையும் தனுஸ்-பாணங்களையும் கண்டுதான் நானும் கொஞ்சம் கர்வத்துடன் பேசினேன்.

ப்ருகுஸுத ஸமுஜி ஜனேவு பிலோகீ |
ஜோ கசு கஹஹு ஸஹவும் ரிஸ் ரோகீ || 2649
ஸுர் மஹிஸுர் ஹரிஜன் அரு காயீ |
ஹம்ரேம் குல் இன்ஹ பர் ந ஸுராயீ || 2650

ப்ருகுகுலத்தைச் சேர்ந்தவர் என்பதையும் அறிந்து, தங்கள் மார்பில் உள்ள பூணூலையும் பார்த்து, என் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன். தேவதைகளிடமும், ப்ராம்மணர்களிடமும், ஹரி பக்தர்களிடமும், பசுக்களிடமும் நாங்கள் எங்கள் வீரத்தைக் காட்ட மாட்டோம், என்பதைத் தெரிந்து கொள்ளும்.

பதேம் பாபு அபகீர்தி ஹாரேம் |
மாரத்ஹுமும் பா பரிய தும்ஹாரேம் || 2651
கோடி குலிஸ் ஸம பசனு தும்ஹாரா |
ப்யர்த தர்ஹு தனு பான் குடாரா || 2652

ஏனென்றால்; இவர்களை நாம் கொன்றால் தீராத பாவமும், பழியும் உண்டாகும். இவர்களிடம் தோல்வி அடைந்தால்; அபகீர்த்தியும் உண்டாகும். ஆகவே, தாங்கள் ப்ராம்மணர் ஆனதால், தாங்கள் அடித்தாலும் தங்கள் திருவடிகளைப் பிடித்துக் கொள்வது எங்கள் தர்மம். தங்களது ஒவ்வொரு சொல்லும் கோடிக் கணக்கான வஜ்ரங்கள் போல இருக்கிறது. அப்படிப் பட்ட வார்த்தைகள் இருக்கும்போது இந்தக் கோடாரியும், வில்லும்-பாணமும் தாங்கள் சுமந்திருப்பது வீண் என்று கருதுகிறேன். (இந்த ப்ராம்மண சாபமே வஜ்ரம் போன்று கடுமையானது, வில்-அம்பு-கோடரி இவை வீண் என்பது லக்ஷ்மணர் வாதம்)

ஜோ பிலோகி அனுசித் கஹேவும்
சமஹு மஹாமுனி தீர் |
ஸுனி ஸரோஷ் ப்ருகுபம்ஸமனி
போலே கிரா கபீர் || 2653

ஹே தீரமா முனிவரே! தாங்கள் ஒரு வீரர். ஆகவே, நான் தங்களுடைய தனுஸ், பாணம் கோடரி இவை களைப் பார்த்த பின்பும் ஏதாவது அனுசிதமான வார்த் தைகளைப் பேசியிருந்தால் என்னை மன்னித்துவிடுங் கள். இவ்விதம் லக்ஷ்மணன் கூறியதைக் கேட்டு ப்ருகு குலமணியான பரசுராமன் கோபத்துடன் கம்பீரமாக;

கௌஸிக் ஸுனஹு மந்த யஹு பாலகு |
குடில காலபஸ் நிஜ குல காலகு || 2654
பானு பம்ஸ் ராகேஸ் கலங்கூ |
நிபட் நிரங்குஸ் அபுத் அஸங்கூ || 2655

ஹே விச்வாமித்ரரே! கேளும் இந்தச் சிறுவன் மிக வும் கெட்ட புத்தி உடையவன்; போக்கிரி. கால தேவ னின் கரங்களில் அகப்பட்டுத் தனது குலத்தைத் தானே நாசம் செய்து கொள்ளப் போகிறான். இது ஸூர்ய வம்சமாகிற சந்த்ரனுக்கு ஒரு களங்கம் போல இருக் கிறது. இவன் முரடன், முட்டாள், பயம் இல்லாதவன்.

கால் கவலு ஹோயிஹி சன் மாஹீம் |
கஹவும் புகாரி கோரி மோஹி நாஹீம் || 2656
தும்ஹ ஹடக்கஹு ஜெளம் சஹஹு உபாரா |
கஹி ப்ரதாபு பலு ரோஷு ஹமாரா || 2657

மேலும், ஒரு க்ஷணத்தில் இவன் காலதேவன் பிடி யில் அகப்படக் கூடும். நான் கூப்பிட்டுக் கூறுகிறேன். பிறகு என்னைத் தூஷணை செய்யாதீர்கள். நீர் இவ னைக் காக்க விரும்பினால், எமது வீரப்ரதாபம், பலம், கோபம் இவைகளை அறிவித்துத் தடுத்து நிறுத்தும், என்றார்.

லகன் கஹேவு முனி ஸுஜஸு தும்ஹாரா |
தும்ஹஹி அசத் கோ பர்னை பாரா || 2658
அப்னே மும்ஹ் தும்ஹ ஆப்னி கர்னீ |
பார் அனேக் பாந்தி பஹு பர்னீ || 2659

அதைக் கேட்ட லக்ஷ்மணன்; ஹே முனிவரே! தாங்கள் இருக்கும் பொழுதே தங்களது பெரும் புகழை, வேறு யார் வர்ணிக்க முடியும்? தங்கள் வாயினால் தாங்களே தங்கள் செயலைப் பற்றிப் பல தடவை, பல வாறு வர்ணித்திருக்கிறீர்களே!

நஹிம் ஸந்தோஷு த புனி கசு கஹஹு ।
ஜனி ரிஸ் ரோகி துஸஹ துக் ஸஹஹு ॥2660
பீரப்ரதீ தும்ஹ தீர் அசோபா ।
காரீ தேத் ந பாவஹு ஸோபா ॥ 2661

இவ்வளவிற்குப் பிறகும் தங்கள் மனம் த்ருப்தி அடையாவிடில்; இன்னும் ஏதாவது சொல்லுங்கள். தங்களது இந்தக் கோபத்தை அடக்கி மேலும் கஷ்டத்தைப் பொறுத்திட வேண்டாம். தாங்கள் வீரத்தை வ்ரதமாகக் கொண்டவர்கள்; தைர்யசாலி, கலக்கமில்லாதவர். ஆனால், திட்டுவது தங்களுக்கு அழகைக் கொடுக்காது.

ஸூர் ஸமர் கர்னீ கர்ஹிம்
கஹி ந ஜனாவ்ஹிம் ஆபு ।
பித்யமான் ரன் பாயி ரிபு
காயர் கதஹிம் ப்ரதாபு ॥ 2662

சூர-வீரர்கள் யுத்தத்தில் செயலைச் செய்வார்களே தவிர, மார்தட்டிப் பேச மாட்டார்கள். யுத்த களத்தில் பகைவர் எதிரில் இருக்கும்போது கோழைகள்தான் தன்னைப் பற்றித் தற்புகழ்ச்சி செய்து கொள்வார்கள்.

தும்ஹ தெள காலு ஹாங்க் ஜனு லாவா ।
பார் பார் மோஹி லாகி போலாவா ॥ 2663
ஸுனத் லகன் கே பசன் கடோரா ।
பர்ஸு ஸுதாரி தரேவு கர் கோரா ॥ 2664

ஹே முனிவரே! தாங்கள்தான் கால தேவனைக் கூப்பிட்டு எனக்காக அழைக்கிறீர்கள். இது வீண் ஆர்ப்பாட்டம் என்றார் லக்ஷ்மணன். இதைக் கேட்ட பரசுராமன் மிகுந்த கோபத்துடன் கைகளில் பயங்கரமான கோடாரியைத் தூக்கி எடுத்தார்.

அப் ஜனி தேயி தோஸு மோஹி லோகு ।
கடுபாதீ பாலகு பத்ஜோகு ॥ 2665
பால் பிலோகி பஹுத் மைம் பாஞ்சா ।
அப் யஹு மரநிஹார் பா ஸாஞ்சா ॥ 2666

பிறகு பரசுராமன்; இப்பொழுது யாவரும் மனத்தால் கூட என்னை த்வேஷிக்காதீர்கள். இந்தக் கடுஞ் சொற்களைக் கூறும் பாலகன் அடித்துக் கொல்லத் தகுந்தவன்தான். நானோ இவனைச் சிறுவன் என்று எண்ணிப் பலவிதமாகக் காக்க நினைத்தேன். ஆனால், இனி இவனை விட மாட்டேன். உண்மையில் இவன் சாகத்தான் வந்திருக்கிறான் என்றார்.

கௌஸிக் கஹா சமிய அபராதூ |
பால தோஷ் குன் கன்ஹிம் ந ஸாதூ || 2667
கர் குடார் மைம் அகருன் கோஹீ |
ஆகேம் அபராதீ குருத்ரோஹீ || 2668

பரசுராமனின் சொல்லைக் கேட்ட விச்வாமித்ரர் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். சிறுவர்களது குணங்களையும் குற்றங்களையும் ஸாதுமக்கள் பொருட்படுத்துவதில்லை என்றார். அதற்குப் பரசுராமன் நான் உண்மையிலேயே தகாத கோபக்காரன், தயை இல்லாதவன், என் கையிலோ கூரிய கோடாரி உள்ளது. மேலும், என் எதிரில் குருத்ரோஹி, குற்றவாளி நிற்கிறான்.

உதர் தேத் சோடவும் பினு மாரேம் |
கேவல் கௌஸிக் ஸீல் தும்ஹாரேம் || 2669
ந த ஏஹி காடி குடார் கடோரேம் |
குர்ஹி உரின் ஹோதேவும் ச்ரம் தோரேம் || 2670

அதுவும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறான். ஹே விச்வாமித்ரரே! இவ்வளவிருந்தும் உம்மிடத்தில் உள்ள அன்பின் காரணமாகத்தான் நான் இவனை அடிக்காமல் விடுகிறேன். இல்லாவிட்டால்; இந்தக் கடோரமான கோடாரியினாலே வெட்டி என் குருவின் ஸேவைக்குக் கடனில்லாதவன் ஆகியிருப்பேன் எனச் சீறினார் பரசுராமன்.

காதிஸூனு கஹ் ஹ்ருதயம் ஹம்ஸி
முனிஹி ஹரிஅர்யி ஸூஜ் |
அயமய காண்ட் ந ஊக்மய
அஜஹூம் ந பூஜ் அபூஜ் || 2671

இந்தப் போக்கை அறிந்த விச்வாமித்ரர் மனத்துள் சிரித்துக் கொண்டே, முனிவர்க்குத் தோல்வி அடையச் செய்வதிலேயே எண்ணமிருக்கிறது. அதாவது, எல்லா இடத்திலும் வெற்றி பெற்றதன் காரணமாக ஸ்ரீராம லக்ஷ்மணரையும் ஒரு ஸாதாரண க்ஷத்ரியர் என்றே நினைத்துக் கொண்டிருக்கிறார் போலும். ஸ்ரீராமர் உடைத்தெறிந்த வில் எஃகினால் செய்யப்பட்ட வில் லல்லவா! கரும்புத் தண்டில்லையே வாயிலே வைத்துக் கடித்தெறிய? இது வருந்தத்தக்க விஷயம். முனிவர் இவர்களை யாரென்று இப்பொழுது கூட அறியவில் லையே. இவர்களது மஹிமையைப் பற்றியும் கூடத் தெரிந்து கொள்ளவில்லையே என்று சொல்லலானார்.

கஹேவு லகன் முனி ஸீலு தும்ஹாரா |
கோ நஹிம் ஜான் பிதித் ஸம்ஸாரா || 2672
மாதா பிதஹி உரின் பயே நீகேம் |
குர் ரினு ரஹா ஸோசு பட் ஜீ கேம் || 2673

உடனே லக்ஷ்மணன்; ஹே முனி ச்ரேஷ்டரே! தங்களுடைய சீலமான குணத்தைப் பற்றி யாருக்குத் தான் தெரியாது? அதைத்தான் உலகம் அறியுமே. இதில் ஸந்தேஹமில்லை. தாங்கள் மாதா பிதாவிற் குரிய கடனைத் தீர்த்துக் கடமையைச் செய்து முடித்தீர் கள். இப்பொழுது குருவின் கடனையும் பாக்கி வைக் காமல் முடித்து விடுங்கள். அதற்கு ஏன் யோஜனை? என்றார்.

(பரசுராமனின் தந்தை-ஜமதக்னி முனிவரின் மனை வியான ரேணுகாதேவி கற்பிற் சிறந்தவளாதலால், தினமும் நதிக்குச் சென்று மண்ணால் குடம் செய்து தண்ணீர் எடுத்து வருவது வழக்கம். அப்படி எடுக்கச் செல்லுகையில் ஒரு ஸமயம் ஒரு கந்தர்வன் வான வெளியில் சென்று கொண்டிருந்தான். அப்போது கீழே விழுந்த அவனுடைய நிழலைக் கண்டு மெய்ம் மறந்து போனாள். அதனால் கற்பு நிலையை இழந் தாள் என்பதற்கு அறிகுறியாக வழக்கம்போல் அன்று மண்ணால் குடம் செய்தாள். அது வரவில்லை. அது வந்தால்தானே அதில் நீரை எடுத்து வரமுடியும். நேரமோ ஆகியது. தன் மனைவி ரேணுகா வராததைக் கண்டு தமது ஞான த்ருஷ்டியினால் விவரம் அறிந்தார்.

இவள் பதி வ்ரதா தர்மத்திலிருந்து தவறி விட்டாள் என்பது தெரிய வந்தது. அதனால் கோபம் கொண்டு தனது புத்ரர்களை அழைத்து ரேணுகாவைக் கொல்லும் படி ஆணையிட்டார். ஆனால், அவருடைய பிள்ளை கள் இந்த ஆஜ்ஞையை ஏற்க மறுத்து விட்டார்கள். பின்பு மற்றொரு பிள்ளையான பரசுராமனை அழைத்து உன் தாயாரையும் இந்தக் கேவலமான ஸஹோதரர் களையும் உடனே கொன்று விடு என்றார். பரசுராமன் உடனே எல்லோரையும் கொன்று விட்டார். ஜமதக்னி ஸந்தோஷமடைந்து புத்ரனே! என்ன வரம் வேண்டுமோ அதைக் கேள்? நான் தருகிறேன் என்றார். அப்போது பரசுராமன் தனது ஸஹோதரர்களின் உயிர்களையும், தாயாரின் உயிரையும் மீட்கும்படிக் கேட்டுக் கொண் டார். பரசுராமன் கேட்டபடி ஜமதக்னி 'ததாஸ்து', என்று சொல்லி வனம் ஏகி விட்டார். பிறகு எல்லோரை யும் உயிர்ப்பித்தார் பரசுராமன். பிறகு பரசுராமன் பூமியைச் சுற்றப் போய்விட்டார். ஆனால், ராஜா கார்த்த வீர்யன், ஒரு ஸமயம் வந்து முனிவரான ஜமதக் னியைக் காமதேனு தராததால் கொன்று விட்டான்.

இதை அறிந்து ரேணுகா இருபத்தி ஒரு முறை தனது மார்பில் அடித்துக் கொண்டாள். இதே ஸமயம் அங்கு வந்த பரசுராமன் இந்தச் சோகத்தைக் கண்டு சபதமிட் டார். நான் இருபத்தி ஒரு முறை க்ஷத்ரிய வம்சத்தை நாசம் செய்வேன் என்று கத்தினார். அதன்படியே செய்து வந்தார். இதைத் தான் லக்ஷ்மணன் கூறினார். நீர் தாய் தந்தைக்கான கடமையைச் செய்தீர். ஆனால்; குருவின் கடனை ஏன் விட்டு விட்டீர்கள்? என்று கேட்டார்.)

ஸோ ஜனு ஹமரேஹி மாதே காடா |
தின் சலி கயே ப்யாஜ் பட் பாடா || **2674**
அப் ஆநிய ப்யவஹரியா போலீ |
துரத் தேவும் மைம் தைலீ கோலீ || **2675**

கேளும், முனிவரே! தங்களுடைய குருவின் கடன் இன்று பாக்கியிருக்கிறது. ரொம்ப நாளாகி விட்டது. இதனால் வட்டியும் மிகவும் அதிகமாகி விடும். ஏதாவ தொரு கணக்குப் போட்டுச் சொல்லுபவரைக் கூப் பிடுங்கள். நான் வட்டியுடன் கூட உங்கள் கடனைத் தீர்க்கத் திறந்த பையுடன் கொடுக்கக் காத்திருக்கிறேன் என்றார் லக்ஷ்மணன்.

ஸுனி கடு பசன் குடார் ஸுதாரா |
ஹாய் ஹாய் ஸப் ஸபா புகாரா || 2676
ப்ருகுபர் பரஸு தேகாவஹு மோஹீ |
பிப்ர பிசாரி பசவும் ந்ருபத்ரோஹீ || 2677

இத்தகைய லக்ஷ்மணருடைய கடுமையான வசனங் களைக் கேட்டு, பரசுராமன் ஆர்ப்பரித்துக் கொண்டே கோடாரியை உயரத் தூக்கி எடுத்தார். ஸபையில் உள்ள அனைவரும் ஹாஹா! ஐயோ! ஐயோ! என்று கோஷம் செய்தார்கள். அப்போது லக்ஷ்மணன், ஹே ப்ருகுகுல ச்ரேஷ்டரே, பரசுராமரே! என்னிடமா உங் கள் கோடாரியைக் காட்டுகிறீர்கள்? ஹே அரசர்களின் பகைவரே! நான் உங்களை ப்ராம்மணன் என்ற ஒரே காரணத்தால் விட்டு வைக்கிறேன்.

மிலே ந கப்ஹும் ஸுபட் ரன் காடே |
த்விஜ தேவதா கர்ஹி கே பாடே || 2678
அனுசித் கஹி ஸப் லோக் புகாரே |
ரகுபதி ஸயன்ஹிம் லகனு நேவாரே || 2679

அதாவது; நான் நினைக்கிறேன். தங்களுக்கு இது வரை சிறந்த யுத்த வீரன் யாருமே கிடைக்கவில்லை போலும். ஹே ப்ராம்மண தேவதையே! தாங்கள் வீட்டில்தான் வீரரோ? என்று லக்ஷ்மணன் கூறியதைக் கேட்டதும், அங்கிருந்த மக்கள் எல்லோரும்; ''இது ரொம்ப அநியாயம். இது சரியில்லை, இது சரியில்லை'' என்று சொல்லிக் கூச்சலிடலானார்கள். அப்போது ஸ்ரீராமன் ஸமிஜ்ஞை காட்டிக் கொதிக்கும் லக்ஷ்மண னைச் சாந்தப் படுத்தினார்.

லகன் உதர் ஆஹுதி ஸரிஸ்
ப்ருகுபர் கோபு க்ருஸானு |
படத் தேகி ஜல் ஸம பசன்
போலே ரகுகுலபானு || 2680

ஸ்ரீலக்ஷ்மணருடைய வார்த்தைகள் ஆஹுதி போல் ஆகிப் (எரிகிற அடுப்பில் நெய் ஊற்றுவது போல்) பரசுராமனின் கோபமாகிற அக்னியை வளர்த்து விட் டதைக் கண்டு, ரகுகுல ஸூர்யனான ஸ்ரீராமச்சந்த்ரன்; அந்தத்தீயை அணைக்கும் ஜலத்திற்கு ஸமமாகச் சாந்தி செய்யும் வார்த்தைகளைக் கூறினார்.

நாத் கர்ஹு பாலக் பர் சோஹு |
ஸுத் தூத்முக் கரிய ந கோஹு || 2681
ஜெளம் பை ப்ரபு ப்ரபாவு கசு ஜானா |
தெள கி பராபரி கரத் அயானா || 2682

ஹே ஸ்வாமி! இந்தச் சிறுவன் மீது க்ருபை காட்டுங்கள். ஏனெனில்; இவன் வஞ்சனை அறியாத குழந்தை; பால் மணம்மாறாத அவன் முகத்தைக் கண்டு இவன் மீது கோபம் அடையாதீர்கள். தங்களுடைய அருமை பெருமை தெரிந்திருந்தால்; தங்களுக்கு ஸமானமாக இப்படிப் பேசியிருப்பானா? அவன் ஒன்றும் அறியாத சிறுவன்.

ஜெளம் லரிகா கசு அச்கரி கர்ஹீம் |
குர் பிது மாது மோத் மன் பர்ஹரீம் || 2683
கரிய க்ருபா ஸிஸு ஸேவக் ஜானீ |
தும்ஹ ஸம ஸீல் தீர் முனி க்யானீ || 2684

தனது குழந்தை அனுசிதமான வார்த்தைகள் கூறி விட்டால்; குருவோ, பெற்ற தாய்-தந்தையோ, அவனை ரக்ஷித்து மனத்தினுள் ஸந்தோஷமே அடைகிறார்கள். ஆகவே, இந்தச் சிறு பாலகனைத் தங்களது ஸேவகன் என்று எண்ணி க்ருபை செய்யுங்கள். தாங்கள் எல்லோரையும் ஸமமாகப் பாவிப்பவர்கள். குணமும், தீரமும் ஜ்ஞானியுமான முனிவர் அல்லவா? தாங்கள்? என்றார் ஸ்ரீராமன்.

ராம பசன் ஸுனி கசுக் ஜுடானே |
கஹி கசு லக்னு பஹுரி முஸுகானே || 2685
ஹிம்ஸத் தேகி நக் ஸிக் ரிஸ ப்யாபீ |
ராம் தோர் ப்ராதா பட் பாபீ || 2686

பரசுராமன் ஸ்ரீராமனின் வார்த்தைகளைக் கேட்டுக் கொஞ்சம் ஸமாதானம் அடைந்தார். இதற்குள் லக்ஷ்மணன் ஏதோ சொல்லி மீண்டும் சிரிக்கலானார். அவர் சிரிப்பதைக் கண்டு பரசுராமனுக்கு உள்ளங் காலிலிருந்து உச்சந்தலைவரை கோபத்தின் நிழல் படர்ந்தது.

பிறகு அவர்; ஹே ராமா! உன் ஸஹோதரனான இவன் பெரிய பாவி.

கௌர் ஸரீர் ஸ்யாம் மன் மாஹீம் |
கால்கூடமுக் பயமுக் நாஹீம் || 2687
ஸஹஜ் டேட் அனுஹரயி ந தோஹீ |
நீசு மீசு ஸம தேக் ந மோஹீ || 2688

இவன் சரீரத்தால் சிவந்த வெண்மை நிறம் கொண்டவன், ஆனால்;, இவனுடைய மனமோ கறுப்பு. இவனுடைய முகம் விஷமுகம், பால் வடியும் முகம் இல்லை. இவன் ஸ்வபாவத்திலேயே துஷ்டன். உன்னைப் போல் ஸாத்வீகன் இல்லை. பெரிய நீசன் இவன். ம்ருத்யுவைப் போல் எனக்குத் தோன்றுகிறான் - என்றார் பரசுராமன்.

லகன் கஹேவு ஹம்ஸி ஸுநஹு முனி
க்ரோது பாப் கர் மூல் |
ஜேஹி பஸ் ஜன் அனுசித் கர்ஹிம்
சர்ஹிம் பிஸ்வ ப்ரதிகூல் || 2689

மறுபடி லக்ஷ்மணன் சிரித்துக் கொண்டே; ஹே முனிவரே! கோபம் பாபத்திற்கு மூலகாரணம். இதன் வசத்தில் அகப்பட்டு மனிதன் அனுசிதமான அனேக கார்யங்களைச் செய்கிறான். அவன் எல்லோருக்கும் நன்மைக்குப் பதில் தீமையே செய்வான் என்றார்.

மைம் தும்ஹார் அனுசர் முனிராயா |
பரிஹரி கோபு கரிய அப் தாயா || 2690
டுட் சாப் நஹிம் ஜூரிஹி ரிஸானே |
பைடிய ஹோயிஹி பாய் பிரானே || 2691

ஹே முனி ராஜரே! நான் தங்களுடைய வழியில் செல்பவன்; தங்கள் தாஸன். தாங்கள் கோபத்தை விட்டு என்மீது க்ருபை செய்யுங்கள். உடைந்து போன வில் கோபம் கொள்வதினால் ஒட்டிவிடப் போவ தில்லை. நின்றுகொண்டே இருந்தால் கால்கள் வலி எடுக்கும். சற்று அமருங்கள்.

ஜௌம் அதி ப்ரிய தௌ கரிய உபாயீ |
ஜோரிய கோவு பட் குனீ போலாயீ || 2692
போலத் லகன்ஹிம் ஜனகு டேராஹீம் |
மஷ்ட கர்ஹு அனுசித் பல் நாஹீம் || 2693

இந்த வில்லின்மீது தங்களுக்கு ப்ரியமிருந்தால்; அதற்கு ஒருவழி செய்யலாம். அதாவது; நல்ல, பண் புள்ளதொரு கைதேர்ந்த வேலைக்காரரை அழைத்து வந்து ஒட்டி வைத்துவிட்டால் போகிறது என்று இப்படி லக்ஷ்மணன் பேசியதைக் கேட்டதும் ஜனகர் பயந்தே போனார். மேலும், நீங்கள் சற்றுச் சும்மா இருங்கள். பெரியவர்களிடம் அனுசிதமான வார்த்தைகளைப் பேசுவது சரியில்லை, என்றார்.

தர் தர் காம்பஹிம் புர நர் நாரீ |
சோட் குமார் கோட் பட் பாரீ || 2694
ப்ருகுபதீ ஸுனி ஸுனி நிர்பய் பானீ |
ரிஸ் தன் ஜரயி ஹோயி பல் ஹானீ || 2695

ஜனகபுரியில் உள்ள ஸ்த்ரீ-புருஷர்கள் அனைவரும் நடு நடுங்கிப் போனார்கள். இந்தச் சிறு குமாரன் மிகவும் கடுமையானவன், குற்றமுள்ளவன் என்று மனத்துள் சொல்லிக் கொண்டார்கள். இங்கோ-லக்ஷ் மணருடைய பயமற்ற, கடுமையான வார்த்தைகளைக் கேட்கக் கேட்கப் பரசுராமனுக்கு உடம்பு கோபத்தால் தஹித்தது. அவரது உடல் பலம் இழந்து நெகிழ்ந்தது.

போலே ராம்ஹி தேயி நிஹோரா |
பசவும் பிசாரி பந்து லகு தோரா || 2696
மனு மலீன் தனு ஸுந்தர் கைஸேம் |
பிஷ ரஸ் பரா கனக் கடு ஜைஸேம் || 2697

அப்பொழுது பரசுராமன் ஸ்ரீராமனை நன்றியோடு நோக்கி, குமாரா! இவன் உன்னுடைய இளைய ஸஹோ தரன் என்பதால்: நான் இதுவரை இவனை விட்டு வைத்திருக்கிறேன். இவன் மனமோ அழுக்குள்ளது. ஆனால்; இவன் சரீரமோ எத்தனை அழகாக இருக்கிறது? விஷம் நிறைந்த தங்கக்குடம் போலல்லவா இருக்கிறது.

ஸுனி லசிமன் பிஹஸே பஹுரி
நயன் தரேரே ராம் |
குர் ஸமீப் கவ்னே ஸகுசி
பரிஹரி பானீ பாம் || 2698

பரசுராமனின் இந்த வார்த்தையைக் கேட்ட லக்ஷ்மணன் மீண்டும் சிரித்தார். அப்பொழுது, ஸ்ரீராமன் கடைக்கண்களினால் ஜாடை செய்து பார்த்தார். உடனே லக்ஷ்மணன் வெட்கமுடன் தன் வார்த்தைகளை அடக்கிக் கொண்டு குருவின் ஸமீபம் வந்து விட்டார்.

அதி பினீத் ம்ருது ஸீதல் பானீ |
போலே ராமு ஜோரி ஜுக் பானீ || 2699
ஸுநஹு நாத் தும்ஹ ஸஹஜ் ஸுஜானா |
பாலக் பசனு கரிய நஹிம் கானா || 2700

கரம் குவித்துக் கொண்டே ஸ்ரீராமன் பரசுராமனிடம் விநயமாக; ஹே ஸ்வாமி! கேளுங்கள், தாங்களோ மஹாமேதாவி. இந்தப் பாலகன் வார்த்தையைக் காது கொடுத்துக் கேட்காதீர்கள்.

பர்ரை பாலகு ஏகு ஸுபாவூ |
இன்ஹஹி ந ஸந்த் பிதூஷஹிம் காவூ || 2701
தேஹிம் நாஹீம் கசு காஜ் பிகாரா |
அபராதீ மைம் நாத் தும்ஹாரா || 2702

ஏனெனில்; வ்ருத்தர்களும், பாலகர்களும் ஒரே மாதிரியான குணம் உள்ளவர்களே. இவர்களை ஸாதுக்கள் குற்றங்கற்பிக்காது மன்னித்து விடுவார்கள். மேலும், லக்ஷ்மணன் எந்தக் காரியத்தையும் கெடுக்கவில்லை. ஆகவே, அபராதி நான் தான்.

க்ருபா கோபு பது பந்தப் கோஸாயீம் |
மோ பர் கரிய தாஸ் கீ நாயீம் || 2703
கஹிய பேகி ஜேஹி பிதி ரிஸ் ஜாயீ |
முனிநாயக் ஸோயி கரௌம் உபாயீ || 2704

ஆகவே, ஹே ஸ்வாமி! தாங்கள் என்னைத் தங்களது தாஸனாக எண்ணி, அருள் செய்வதோ, கோபம் காட்டுவதோ, கொல்லுவதோ, கட்டுப்படுத்துவதோ எதை வேண்டுமானாலும் என்னிடம் செய்யுங்கள். ஹே முனி ராஜரே! எந்த வகையினால் தங்களது கோபம் சீக்ரமாக விலகும் என்பதைத் தெரிவியுங்கள். அதற்கான வழிவகையை நான் செய்கிறேன் என்று அழகாகக் கூறினார்.

கஹ் முனி ராம் ஜாயி ரிஸ் கைஸேம் |
அஜஹூம் அனுஜ் தவ சிதவ் அனைஸேம் ||
2705

ஏஹி கேம் கண்ட குடாரு ந தீன்ஹா |
தோ மைம் காஹ் கோபு கரி கீன்ஹா || 2706

அதற்கு முனிவர் பரசுராமன்; ஹே ராமா! என் கோபம் எப்படித் தணியும்? உன் ஸஹோதரன் என்னை விபரீதமாக நினைக்கிறானே, இவனை நான் என் கோடாரியினால் கொன்று வீழ்த்தாவிடில் நான் கோபித்துக்கொண்டு என்ன ப்ரயோஜனம்? நான் என்ன செய்ய? என்று சத்தமிட்டார்.

கர்ப ச்ரவ்ஹிம் அவனிப்
ரவனி ஸூனி குடார் கதி கோர் |
பரஸூ அசத் தேகவும் ஜியத்
பைரீ பூப்கிஸோர் || 2707

எனது இந்தக் கோடாரியின் பயங்கர சப்தத்தைக் கேட்டு ராஜாக்களுடைய ஸ்த்ரீகளின் கர்ப்பம்கூடக் கலைந்து விடும். அம்மாதிரிக் கோடாரியைக் கையில் வைத்துக் கொண்டு இந்த வைரியான ராஜகுமாரன் வாழ்வதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே என்றார் பரசுராமன்.

பஹயி ந ஹாது தஹயி ரிஸ் சாதீ |
பா குடாரு குண்டித ந்ருபகாதீ || 2708
பயவு பாம பிதி பிரேவு ஸூபாவூ |
மோரே ஹ்ருதயம் க்ருபா கஸி காவூ || 2709

அந்தோ! இது என்ன? என் கை மேலே எழும்பவில்லையே! கோபத்தினால் என் ஹிருதயம் தஹிக்கிறது. ராஜாக்களைக் கொன்று குவித்த இந்தக் கோடாரி மழுங்கிவிட்டதே! ப்ரம்மதேவனே வேறு விதமாக மாறி விட்டாரே? இதனால் என் ஸ்வபாவமே மாறிவிட்டதே! என் ஸ்வபாவம் இப்படி மாறக் காரணம் என்ன? என்ன விந்தை? இல்லையானால் என் ஹிருதயத்தில் எந்த நேரத்திலாவது இப்படிக் கருணை பிறந்ததுண்டா? என்று பரசுராமன் துடிதுடித்தார்.

ஆஜு தயா துகு துஸஹ் ஸஹாவா |
ஸுனி ஸௌமித்ரி பிஹஸி ஸிரு நாவா || 2710
பாவு க்ருபா மூர்தி அனுகூலா |
போலத் பசன் ஜரத் ஜனு பூலா || 2711

இன்று தெய்வமே துக்கமடைந்தது போலும், தைர்யத்தின் இடத்தில் தயவு எப்படி வந்தது? அதாவது; இன்று தயவு என்ற பெயரில் பெரிய மனக் கஷ்டத்தை நான் ஸஹிக்க வேண்டி வந்தது என்றார் பரசுராமன். இதைக் கேட்டு லக்ஷ்மணன் சிரித்துக் கொண்டே தலை வணங்கினார். மேலும், முனிவரே! எந்த மனோபாவத்தில் தாங்கள் இருக்கிறீரோ, அதற்குத் தயாபாவம் என்று சொல்லப்படும். க்ரோதம் என்னும் வ்ருக்ஷத்திற்கு அடியில் தங்களது மனம் தயவு என்னும் ரூபத்தில் குடி கொண்டு விட்டது. தாங்கள் மிகவும் க்ருபா ஸாகரராக விளங்குகிறீர்கள். ஆகவே, தங்கள் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் அந்த வ்ருக்ஷத்தின் மலர் உதிர்வதுபோல் வெளியே காட்டுகின்றன.

ஜௌளம் பை க்ருபாம் ஜரிஹிம் முனி காதா |
க்ரோத் பயேம் தனு ராக் பிதாதா || 2712
தேகு ஜனக் ஹடி பாலகு ஏஹூ |
கீன்ஹ சஹத் ஜட் ஜம்புர் கேஹூ || 2713

மேலும், ஹே முனிவரே! தயவு செய்தாலே தங்கள் உள்ளம், உடல், எரிகிறது என்று சொன்னால்; உங்களுக்குக் கோபம் வந்துவிட்டால் சரீரத்தை ப்ரம்மனே வந்து காப்பார் என்றார்.

லக்ஷ்மணன் கூறியதைக் கேட்ட பரசுராமன் மீண்டும்; ஹே ஜனகரே! இந்த முட்டாளான பாலகனின் அடத்தைப் பார்த்தீரா? இவன் யமலோகத்தில் நிச்சயம் வீடு அமைக்கவே விரும்புகிறான்.

பேகி கர்ஹூ கின் ஆங்கின்ஹ ஓடா |
தேகத் சோட் கோட் ந்ருப டோடா || 2714
பிஹஸே லகனு கஹா மன் மாஹீம் |
மூதேம் ஆங்கி கத்ஹூம் கோவு நாஹீம் || 2715

கஹ் முனி ராம் ஜாயி ரிஸ் கைஸேம் |
அஜஹூம் அனுஜ் தவ சிதவ் அனைஸேம் ||
2705

ஏஹி கேம் கண்ட குடாரு ந தீன்ஹா |
தோ மைம் காஹ் கோபு கரி கீன்ஹா || 2706

அதற்கு முனிவர் பரசுராமன்; ஹே ராமா! என் கோபம் எப்படித் தணியும்? உன் ஸஹோதரன் என்னை விபரீதமாக நினைக்கிறானே, இவனை நான் என் கோடாரியினால் கொன்று வீழ்த்தாவிடில் நான் கோபித்துக்கொண்டு என்ன ப்ரயோஜனம்? நான் என்ன செய்ய? என்று சத்தமிட்டார்.

கர்ப ச்ரவ்ஹிம் அவனிப்
ரவனி ஸூனி குடார் கதி கோர் |
பரஸூ அசத் தேகவும் ஜியத்
பைரீ பூப்கிஸோர் || 2707

எனது இந்தக் கோடாரியின் பயங்கர சப்தத்தைக் கேட்டு ராஜாக்களுடைய ஸ்த்ரீகளின் கர்ப்பம்கூடக் கலைந்து விடும். அம்மாதிரிக் கோடாரியைக் கையில் வைத்துக் கொண்டு இந்த வைரியான ராஜகுமாரன் வாழ்வதை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேனே என்றார் பரசுராமன்.

பஹயி ந ஹாது தஹயி ரிஸ் சாதீ |
பா குடாரு குண்டித ந்ருபகாதீ || 2708
பயவு பாம பிதி பிரேவு ஸுபாவூ |
மோரே ஹ்ருதயம் க்ருபா கஸி காவூ || 2709

அந்தோ! இது என்ன? என் கை மேலே எழும்பவில்லையே! கோபத்தினால் என் ஹிருதயம் தஹிக்கிறது. ராஜாக்களைக் கொன்று குவித்த இந்தக் கோடாரி மழுங்கிவிட்டதே! ப்ரம்மதேவனே வேறு விதமாக மாறி விட்டாரே? இதனால் என் ஸ்வபாவமே மாறிவிட்டதே! என் ஸ்வபாவம் இப்படி மாறக் காரணம் என்ன? என்ன விந்தை? இல்லையானால் என் ஹிருதயத்தில் எந்த நேரத்திலாவது இப்படிக் கருணை பிறந்ததுண்டா? என்று பரசுராமன் துடிதுடித்தார்.

ஆஜு தயா துகு துஸஹ் ஸஹாவா |
ஸுனி ஸௌமித்ரி பிஹஸி ஸிரு நாவா || 2710
பாவு க்ருபா மூர்தி அனுகூலா |
போலத் பசன் ஜரத் ஜனு பூலா || 2711

இன்று தெய்வமே துக்கமடைந்தது போலும், தைர்யத்தின் இடத்தில் தயவு எப்படி வந்தது? அதாவது; இன்று தயவு என்ற பெயரில் பெரிய மனக் கஷ்டத்தை நான் ஸஹிக்க வேண்டி வந்தது என்றார் பரசுராமன். இதைக் கேட்டு லக்ஷ்மணன் சிரித்துக் கொண்டே தலை வணங்கினார். மேலும், முனிவரே! எந்த மனோபாவத்தில் தாங்கள் இருக்கிறீரோ, அதற்குத் தயாபாவம் என்று சொல்லப்படும். க்ரோதம் என்னும் வ்ருக்ஷத்திற்கு அடியில் தங்களது மனம் தயவு என்னும் ரூபத்தில் குடி கொண்டு விட்டது. தாங்கள் மிகவும் க்ருபா ஸாகரராக விளங்குகிறீர்கள். ஆகவே, தங்கள் வாயிலிருந்து வெளியாகும் வார்த்தைகள் அந்த வ்ருக்ஷத்தின் மலர் உதிர்வதுபோல் வெளியே காட்டுகின்றன.

ஜௌம் பை க்ருபாம் ஜரிஹிம் முனி காதா |
க்ரோத் பயேம் தனு ராக் பிதாதா || 2712
தேகு ஜனக் ஹடி பாலகு ஏஹூ |
கீன்ஹ சஹத் ஜட் ஜம்புர் கேஹூ || 2713

மேலும், ஹே முனிவரே! தயவு செய்தாலே தங்கள் உள்ளம், உடல், எரிகிறது என்று சொன்னால்; உங்களுக்குக் கோபம் வந்துவிட்டால் சரீரத்தை ப்ரம்மனே வந்து காப்பார் என்றார்.

லக்ஷ்மணன் கூறியதைக் கேட்ட பரசுராமன் மீண்டும்; ஹே ஜனகரே! இந்த முட்டாளான பாலகனின் அடத்தைப் பார்த்தீரா? இவன் யமலோகத்தில் நிச்சயம் வீடு அமைக்கவே விரும்புகிறான்.

பேகி கர்ஹூ கின் ஆங்கின்ஹ ஓடா |
தேகத் சோட் கோட் ந்ருப டோடா || 2714
பிஹஸே லகனு கஹா மன் மாஹீம் |
மூதேம் ஆங்கி கத்ஹூம் கோவு நாஹீம் || 2715

இவனைச் சீக்ரமாகவே கண்களுக்கு எதிரிலிருந்து மறைத்துத் தொலைக்க வேண்டும். இந்த ராஜகுமாரன் பார்ப்பதற்குச் சிறுவனாக இருந்தாலும், பெரிய துஷ்டனாக இருக்கிறான் என்றார். அப்போது லக்ஷ்மணன் தன் மனத்திற்குள்ளேயே - கண்களை மூடிக்கொண்டு விட்டால்; எங்கும் யாரும் இருக்கமாட்டார்கள் என்று முணுமுணுத்தார்.

பரஸுராமு தப் ராம் ப்ரதி
போலே உர் அதி க்ரோது |
ஸம்பு ஸராஸனு தோரி ஸட்
கர்ஸி ஹமார் ப்ரபோது || 2716

அப்போது மிக்க கோபங்கொண்ட பரசுராமன் ஸ்ரீராமனை நோக்கி; அட போக்கிரி! நீ சிவனாரின் இந்தப் பயங்கர வில்லை உடைத்துவிட்டு அதற்கு மாறாக எனக்கே அறிவு புகட்டுகிறாயா!

பந்து கஹுயி கடு ஸம்மத் தோரேம் |
தூ சல் பினய் கர்ஸி கர் ஜோரேம் || 2717
கரு பரிதோஷு மோர் ஸங்க்ராமா |
நாஹிம் த சாட் கஹாஉப் ராமா || 2718

ஹே ராமா, உன் ஸஹோதரன் உன் ஸம்மதத்தின் பேரில் தான் இத்தனை கடும் வார்த்தைகள் பேசுகிறான். இங்கு நீயோ கபடமாகக் கை கூப்பி வணங்குகிறாய். எப்படியோ போகட்டும். யுத்தத்திற்கு வா, அப்போது தான் எனக்கு ஸந்தோஷம் ஏற்படும். இல்லையெனில்; ராமன் என்ற உன் பெயர் சொல்வதை விட்டுவிடு.

சலு தஜி கர்ஹி ஸமரு ஸிவத்ரோஹீ |
பந்து ஸஹித் ந த மாரவும் தோஹீ || 2719
ப்ருகுபதி பக்ஹிம் குடார் உடாயேம் |
மன் முஸுகாஹிம் ராமு ஸிர் நாயேம் || 2720

ஹே சிவத்ரோஹீ! கபடம் ஒழித்து என்னுடன் யுத்தம் செய்ய வா. இல்லையெனில்; உன் ஸஹோதரன் உள்பட உன்னையும் ஒழித்து விடுவேன். இம் மாதிரி கூறிக்கொண்டே பரசுராமன் கோடாரியைக் கையில் எடுத்தபடி உளறினார். ஸ்ரீராமனோ இவ் வார்த்தைகளைக் கேட்டுத் தலைகுனிந்தபடி மனத்திற் குள் சிரித்துக் கொண்டார்.

குணஹ் லகன் கர் ஹம் பர் ரோஷூ |
கதஹுூம் ஸுதாயிஹு தே பட் தோஷூ ||2721
டேட் ஜானி ஸப் பந்தயி காஹூ |
பக்ர சந்த்ரமஹி க்ரஸயி ந ராஹூ || 2722

மேலும், ஸ்ரீராமன் தன் மனத்திற்குள்; குற்றம் செய்ததோ ஸஹோதரன் லக்ஷ்மணன். கோபத்தை என் மீது காட்டுகிறீரே! நேர்மையானவரிடத்திலும்கூடத் தோஷம் உண்டாகத்தான் செய்கிறது. வளைந்து கோணலான சந்த்ரனை ராஹு விழுங்குகிறதில்லை யல்லவா? அதே போல: வக்ரபுத்தியுடையவன் என் றால்; அவரை எல்லோரும் வணங்குகிறார்கள், எனச் சொல்லிக் கொண்டார்.

ராம் கஹேவு ரிஸ் தஜிய முனீஸா |
கர் குடாரு ஆகேம் யஹ் ஸீஸா || 2723
ஜேஹிம் ரிஸ் ஜாயி கரிய ஸோயி ஸ்வாமீ |
மோஹி ஜானிய ஆபன் அனுகாமீ || 2724

பிறகு வெளிப்படையாக ஸ்ரீராமன்; ஹே முனீச் வரரே! இந்தக் கோபத்தை விடுங்கள். தங்கள் கரத்தில் கோடாரி இருக்கிறது; என்னுடைய தலையோ இதோ உம் எதிரில் இருக்கிறது. ஸ்வாமி! இனி தங்கள் உசிதம் போல் செய்யுங்கள். ஆனால், உங்களை அனுசரித் துப் போகிறவன், தாஸன் என்று என்னை அறிந்து கொள்ளுங்கள்.

ப்ரபுஹி ஸேவக்ஹி ஸமரு கஸ்
தஜஹு பிப்ரபர் ரோஸு |
பேஷு பிலோகேம் ககேஸி கசு
பாலக்ஹூ நஹிம் தோஸு || 2725

ஹே ஸ்வாமி! ஸேவகருக்கும், ஸ்வாமிக்கும் யுத்தம் நடப்பது உண்டா? ஹே ப்ராம்மண ச்ரேஷ்டரே! சினத்தை விடுங்கள். தங்களது வீர ரூபத்தைக் கண்டு என் ஸஹோதரன் ஏதாவது கூறியிருப்பான். உண்மை யில் அவன் மீதும் தோஷம் இல்லை.

தேகி குடார் பான் தனு தாரீ |
பை லரிகஹி ரிஸ பீரு பிசாரீ || 2726

நாமுஜான் பை தும்ஹஹி ந சீன்ஹா |
பம்ஸ் ஸுபாயம் உத்ரு தேஹி தீன்ஹா || 2727

தாங்கள் ப்ராம்மணர். ஆனால்; தங்களிடம் கோடாரியையும், வில்லையும், அம்பையும், பார்த்த சிறுவன் லக்ஷ்மணன் வீரன் என்று எண்ணிக் கோபம் கொண்டிருக்கிறான். அவன் தங்கள் பெயரை முன்னமே கேட்டிருக்கிறான். ஆனால்; அவன் அறிமுகம் செய்து கொண்டதில்லை. இதுதான் முதன்முறை நாம் ஸந்தித்தோம். ஆகவே, அவன் எங்களது வம்ச முறைப்படி ஏற்பட்ட ஸ்வபாவத்தால் பதில் கூறினான்.

ஜெளம் தும்ஹ ஒளதேஹு முனி கீ நாயீம் |
பத ரஜ் ஸிர் ஸிஸு தரத் கோஸாயீம் || 2728
சமஹு சூக் அன்ஜானத் கேரீ |
சஹிய பிப்ர உர் க்ருபா கனேரீ || 2729

தாங்கள் உண்மையில் முனிவரின் வேஷத்தில் வந்திருந்தால்; ஹே ஸ்வாமி! உங்களை இந்தச் சிறுவன் தலைவணங்கி உங்கள் பாத தூளிகளைச் சிரசில் அணிந்து கொள்வான். ஆனால், தங்கள் ரூபமோ இப்பொழுது வேறு விதமாக இருக்கிறது. ப்ராம்மணர்களின் ஹிருதயத்தில் என்றும் இரக்கம் இருக்கவேண்டும். ஏதோ தெரியாத்தனமாகத் தவறு நடந்துவிட்டது; எங்களை மன்னியுங்கள்.

ஹம்ஹி தும்ஹஹி ஸரிபரி கலி நாதா |
கஹஹு ந கஹாம் சரன் கஹம் மாதா || 2730
ராம மாத்ர லகு நாம் ஹமாரா |
பரஸு ஸஹித் பட் நாம் தோஹாரா || 2731

ஹே ஸ்வாமி! தங்களுக்கும், நமக்கும் சரி சமானம் உண்டா? எப்படி யுத்தம் நடத்த முடியும்? தலை எங்கே? கால் எங்கே சொல்லுங்கள். அதாவது; நாங்கள் நமஸ்காரம் செய்பவர்கள். தாங்களோ நமஸ்கரிக்கத் தக்கவர். தாங்கள் சரத்தை வணங்குபவர், நாங்களோ சரணத்தை (விஷ்ணு சரணத்தை வணங்குபவர்கள். ராமன் என்னும் சிறு பெயர் கொண்டவன் நான். தாங்களோ பரசுவோடுகூடிய ராமன் என்று பெரும் பெயர் கொண்டவர்! (இப்படிக் கூறி, ராமன் என்று தன் பெயரைத் தனக்குள் இழுத்துக்கொண்டார் ப்ரபு ஸ்ரீராமன்).

தேவ ஏகு குணு தனுஷ் ஹமாரேம் |
நவ குன் பரம புனீத தும்ஹாரேம் || *2732*
ஹப் ப்ரகார் ஹம் தும்ஹ ஸன் ஹாரே |
சமஹு பிப்ர அபராத் ஹமாரே || *2733*

ஸ்வாமி! எங்களிடம் ஒரே ஒரு குணம்தான் உண்டு. அது தனுஸ்தான். ஆனால், தங்களிடமோ; (சமம், தமம், தவம், சௌசம், க்ஷமை, ''ஸரளத்தன்மை, ஜ்ஞானம், விஜ்ஞானம், ஆஸ்திகத்தன்மை என) இவ் விதம் ஒன்பது குணங்கள் இருக்கின்றன. ஆகவே, தங்களிடம் நாம் ஜயிப்பது எங்கே? நாமே எமக்குத் தோல்வியை ஒப்புப் கொள்கிறோம். ஹே அந்தணா ளரே! என் ஸஹோதரனை மன்னித்து, எங்களது குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு எங்களை ஆசீர் வாதம் செய்யுங்கள் என்றார்.

பார் பார் முனி பிப்ரபர்
கஹா ராம் ஸன் ரீம் |
போலே ப்ருகுபதி ஸருஷ் ஹஸி
தஹுமம் பந்து ஸம பாம் || *2734*

இப்படியாக ஸ்ரீராமன் திரும்பத் திரும்பப் பரசு ராமனை நோக்கி ப்ராம்மணன் என்றும், முனிவர் என்றும் கூறுவதைக் கேட்ட பரசுராமன் சினந்து அட்ட காசச் சிரிப்புடன்; நீயும் உன் தம்பிபோல் கோணல் புத்தியுடையவன்தான்.

நிபட்ஹிம் த்விஜ கரி ஜான்ஹி மோஹீ |
மைம் ஜஸ் பிப்ர ஸுநாவவும் தோஹீ || *2735*
சாப் ச்ருவா ஸர் ஆஹுதி ஜானூ |
கோபு மோர் அதி கோர் க்ருஸானூ || *2736*

மேலும், நீ என்னை வெறும் ப்ராம்மணன் என்று எண்ணுகிறாய் அல்லவா? இதோ நான் எப்படிப்பட்ட ப்ராம்மணன் என்பதை உனக்குச் சொல்லுகிறேன். அதாவது; எனது வில்லே ஸ்ருவம்; பாணமே ஆஹுதிப் பொருள்; கோபமே மிகப் பயங்கரமான அக்னி குண் டம் என்பதையும் நீ அறிவாயாக. (ஹோமம் செய்யும் போது ஹோமப் பொருளான நெய்யை, ஸ்ருவம் என் னும்ஒருவகைக் கரண்டியால் எடுத்து அக்னியில் சேர்த்து

ஹோமம் செய்வது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.) வில்வித்தையில் நான் வீரன், என்னுடைய கோபத்தினால் எல்லாமே வெந்து பொசுங்கிவிடும்.

ஸமிதி ஸேன் சதுரங்க ஸுஹாயீ |
மஹா மஹீப் பயே பஸு ஆயீ || 2737
மைம் ஏஹிம் பரஸு காடி பலி தீன்ஹே |
ஸமர் ஜக்ய ஜப் கோடின்ஹ கீன்ஹே || 2738

யஜ்ஞத்தில் சேர்க்கப்படும் ஸமித்துக்கள் (பொரசங் குச்சி)தான், என்னிடம் உள்ள சதுரங்க ஸேனைகள். பெரிய பெரிய ராஜாக்கள் தாங்களாகவே வந்து இந்த யஜ்ஞ குண்டத்தில் பலியாகும் பலிப்பசுக்கள். அத் தகைய பலிப்பசுக்களை நான் இந்தக் கோடாரியால் வெட்டி வீழ்த்திப் பலி கொடுத்திருக்கிறேன். இம்மாதிரிக் கோடிக்கணக்கான ஜபத்தோடு கூடிய யுத்த யஜ்ஞம் செய்திருக்கிறேன். (அதாவது; ஸ்வாஹா, ஸ்வாஹா, என்று மந்த்ர உச்சாரணம் செய்து தான் ஆஹுதி கொடுக்கப்பட வேண்டும். அதேபோலத்தான் நான் சொல்லிச் சொல்லி ராஜாக்களைப் பலியிட்டேன்.)

மோர் ப்ரபாவு பிதித் நஹி தோரேம் |
போலஸி நிதரி பிப்ர கே போரேம் || 2739
பஞ்ஜேவு சாபு தாபு பட் பாடா |
அஹமிதி மன்ஹும் ஜீதி ஜகு டாடா || 2740

ஹே ராமா! என்னுடைய ப்ரபாவம் உனக்குத் தெரியாது. ஆகவே; நீ என்னை ப்ராம்மணன் என்ற சாக்கில் ஏமாற்றி மரியாதையில்லாமல் பேசுகிறாய். நீ வில்லை உடைத்தது உண்மைதான். இதனால் உனக்கு அஹங்காரம், தலைக்கேறி விட்டது. அதாவது; உலகம் முழுவதையும் ஜயித்து விட்ட பெருமையுடன் இப் பொழுது நீ இருக்கிறாய், என்றார்.

ராம் கஹா முனி கஹஹு பிசாரீ |
நிஸ் அதி படி லகு சூக் ஹமாரீ || 2741
சுவத்ஹிம் டுட் பினாக் புரானா |
மைம் கேஹி ஹேது கரௌளம் அபிமானா || 2742

இவ்வாறு பரசுராமரின் வார்த்தைகளைக் கேட்ட ஸ்ரீராமன்; ஹே முனிவரே! கொஞ்சம் யோஜித்துக் கூறுங்கள். தங்கள் கோபம் மிகவும் அதிகமானது. என்னுடைய பிழையோ மிகச் சிறியது. அதுவோ பழைய பெரும் வில். அப்படியிருக்க நான் எதற்கு அஹங்காரம் கொள்ள வேண்டும்?

ஜெளம் ஹம் நிதர்ஹிம் பிப்ர பதி
ஸத்ய ஸுநஹு ப்ருகுநாத் |
தெள அஸ் கோ ஜக் ஸுபடு ஜேஹி
பய பஸ் நாவ்ஹி மாத் || 2743

ஹே ப்ருகு நாதரே! ஒரு வேளை நாங்கள் தங்களை ப்ராம்மணர் என்று எண்ணி மரியாதையற்றுப் பேசி இருப்போமானால் உண்மையாகக் கூறுகிறேன் வேறு எவர் உலகில் இத்தகைய போர் வீரராக இருக்க முடியும்? உலகில் வேறு எந்த ப்ராம்மணரிடம் நாங்கள் பயத்தால் தலைகுனிவோம்? (அதாவது; எங்கள் தர்மம் ப்ராம்மணருக்குத் தலை வணங்குவது, அப்படியிருக்க உங்களை அவமதிப்போமா? என்கிறார்.)

தேவ தனுஜ பூபதி பட் நானா |
ஸமபல் அதிக் ஹோவு பல்வானா || 2744
ஜெளம் ரன் ஹம்ஹி பசாரை கோவு |
லர்ஹிம் ஸுகேன காலு கின் ஹோவு || 2745

தேவதைகள், அஸுரர்கள், ராஜாக்கள் இன்னும் பல யுத்த வீரர்கள் யாவரும் பலத்தில் வேண்டுமானால் நமக்கு நிகராகவே இருக்கட்டும். இல்லை அதிக பல வான்களாகவே கூட இருக்கட்டும். ஆனால்; யாராவது போருக்கழைத்து சவால் விடுவார்களேயானால்; அந்த யுத்தத்தில் யமதேவனே வந்தாலும் சரி, நாங்கள் வீரத் துடன் அவர்களை எதிர்த்து ஸுகமாக யுத்தம் செய் திடுவோம்.

சத்ரிய தனு தரி ஸமர ஸகானா |
குல கலங்கு தேஹிம் பாம்வர் ஆனா || 2746
கஹவும் ஸுபாவு ந குலஹி ப்ரஸம்ஸீ |
காலஹு டர்ஹிம் ந ரன் ரகுபம்ஸீ || 2747

இன்னும் கேளும் க்ஷத்ரியனாக உடலை வைத்துக் கொண்டு எவன் யுத்தத்தில் வீரனாக விளங்கப் பயப் படுகிறானோ; அவன் நீசனாவான். அவன் குலத் திற்கே களங்கம் விளைவிப்பவன். கேளும், ரகுவம்சத் தில் பிறந்தவன் யுத்தத்தில் கால தேவனைக் கண் டாலும் பயப்பட மாட்டான். ஆம், இப்படிச் சொல் லித் தம் குலத்தைப் பெருமைபடப் புகழ்ந்து கூறிப் பேசுவதாக நினைக்க வேண்டாம். இதை நான் இயற்கை யாகவே கூறுகிறேன்.

பிப்ரபம்ஸ் கை அஸி ப்ரபுதாயீ |
அபய ஹோயி ஜோ தும்ஹஹி டேராயீ ||2748
ஸுனி ம்ருது கூட் பசன் ரகுபதி கே |
உகரே படல் பரஸுதர் மதி கே || 2749

மேலும், ப்ராம்மண வம்சத்தில் பிறந்ததன் மஹி மையே தனிதான். எல்லோருமே தங்களிடம் பயப்படு கிறார்கள். பயமற்றவனும்கூடத் தங்களிடம் பயப்படு கிறான். தாங்கள் ப்ராம்மணர். இப்படி வர நேர ல்லாமா? என்று கூறிய ரகுராமனின் இனிய, ரகஸ்ய வார்த்தைகளைக் கேட்ட பரசுராமன் மனம் நெகிழ்ந்து விட்டார். அவர் மனத் திரையும் விலகியது.

ராம் ரமாபதி கர் தனு லேஹூ |
கைஞ்சஹு மிடை மோர் ஸந்தேஹூ || 2750
தேத் சாபு ஆபுஹிம் சலி கயவூ |
பரஸுராம மன் பிஸ்மய பயவூ || 2751

பிறகு பரசுராமன்; ஹே ராமா! ஹே ல்க்ஷ்மீபதி, இந்த லக்ஷ்மீ பதியான விஷ்ணுவின் வில்லைக் கையில் எடுத்து இதை இழுத்து நாணேற்றுங்கள். அப்போது என் ஸந்தேஹம் தீர்ந்துவிடும் என்று அவர் கூறி முடித்து, வில்லை ஸ்ரீராமன் கையில் கொடுக்கப் போக வில் தானாகவே ஸ்ரீராமன் கைகளில் அடைக்கலம் அடைந்தது. உடனே பரசு ராமன் ஆச்சர்யத்தால் திகைத்துப் போனார்.

ஜானா ராம் ப்ரபாவு தப்
புலக ப்ரபுல்லித காத் |
ஜோரி பாளி போலே பசன்
ஹ்ருதயம் ந ப்ரேமு அமாத் || 2752

அப்பொழுது ஸ்ரீராமன் யார் என்பதை அறிந்து கொண்ட பரசுராமன் ராமனின் ப்ரபாவத்தை அறிந்து கைகூப்பி நின்றார். அவர் சரீரம் புளகாங்கிதம் அடைந்து பூரித்தது. ப்ரேமையினால் அவர் உள்ளம் தழுதழுத்தது.

ஜய ரகுபம்ஸ பனஜ் பன் பானூ ।
கஹன் தனுஜ் குல் தஹன் க்ருஸானூ ॥ 2753
ஜய ஸூர பிப்ர தேனு ஹிதகாரீ ।
ஜய மத் மோஹ் கோஹ் ப்ரம ஹாரீ ॥ 2754

ஹே ரகுகுலமாகிற தாமரைக் காட்டின் ஸூர்யனே! ஹே ராட்சதர்களின் குலமாகிற அடர்ந்த காடுகளை அழிக்க வல்ல அக்னியே, தங்களுக்கு ஜயம் உண்டா கட்டும், தேவதைகளையும், ப்ராம்மணர்களையும், பசுக் களையும் காக்கும் பரம் பொருளே! உமக்கு ஜயம் உண்டாகட்டும். காம, மோஹ, கோப, ப்ரமையை அழிக்க வல்லவரே! தங்களுக்கு ஜயம் உண்டாகட்டும்!

பினய் சீல கருனா குன் ஸாகர் ।
ஜயதி பசன் ரசனா அதி நாகர் ॥ 2755
ஸேவக் ஸுகத் ஸுபக் ஸப் அங்கா ।
ஜய சரீர் சபி கோடி அநங்கா ॥ 2756

அடக்கமும், பண்பும், அருளும் கொண்ட குணக் கடலே! பேசுவதில் சிறந்த திறமையாளரே! தங்களுக்கு ஜயமுண்டாகட்டும். தாஸர்களை ஸுகம் தந்து காக்கும் ரட்சகரே! அழகிய உறுப்புகளைக் கொண்டவரே! தமது சரீரத்தில் கோடி மன்மத லாவண்யத்தைத் தாங்கு பவரே! தங்களுக்கு ஜயமுண்டாகட்டும்!

கரௌம் காஹ் முக ஏக் ப்ரஸம்ஸா ।
ஜய மஹேஸ் மன் மானஸ் ஹம்ஸா ॥ 2757
அனுசித பஹுத் கஹேவும் அக்யாதா ।
சமஹு சமாமந்திர் தோவு ப்ராதா ॥ 2758

ஹே ராமா! என்னுடைய ஒரு வாயினால் உம்மை எப்படி வர்ணிப்பேன்? ஸ்ரீமஹாதேவனின் மனமாகிற மானஸ ஸரோவரின் ஹம்ஸமே, தங்களுக்கு ஜய முண்டாகட்டும். நான் தெரியாமல் என்னவெல்லாமோ அநுசிதமான வார்த்தைகளைப் பேசிவிட்டேன். மன் னிக்கும் பண்புள்ள கோயிலான இரு ஸஹோதரர் களே, நீங்கள் என்னை மன்னித்தருள வேண்டும்.

கஹி ஜய ஜய ஜய ரகு குல கேதூ |
ப்ருகுபதி கயே பன்ஹி தப் ஹேதூ || 2759
அபபயம் குடில் மஹீப் டேரானே |
ஜஹம் தஹம் காயர் கம்வஹிம் பரானே ||2760

ஹே ரகு குலத்தின் கொடியாகிய ராமச்சந்த்ரனே! உமக்கு ஜயமுண்டாகட்டும்; ஜயம் உண்டாகட்டும்; ஜயம் உண்டாகட்டும், என இவ்விதம் சொல்லியவாறு பரசுராமன மீண்டும் தபம் செய்ய வனம் போய்விட்டார். இந்த அற்புதமான நிகழ்ச்சியைக் கண்ட மற்ற அரசர்கள் பயந்து போனார்கள். மனத்தில் அவர்கள் காரணம் இல்லாமல் கற்பனையாக; ஸ்ரீராமனிடம் பயங்கரமான பரசுராமனே தோல்வியடைந்து ராமனை விட்டுப் போய் விட்டால், நாம் எம்மாத்திரம் என்று நினைத்தார்கள். மேலும்; கோழைகளான சில அரசர்கள் மெதுவாக அந்த மண்டபத்தை விட்டே ஓடி மறைந்து விட்டார்கள்.

தேவன்ஹ தீன்ஹீம் துந்துபீம்
ப்ரபு பர் பர்ஷஹிம் பூல் |
ஹர்ஷே புர் நர் நாரி ஸப்
மிடீ மோஹமய ஸூல் || 2761

தேவதைகள் நகராவாத்யங்களை முழங்கச் செய்தார்கள். அவர்கள் ப்ரபு ஸ்ரீராமனின் மீது புஷ்பமாரி பொழிந்தார்கள். ஜனகபுரியின் ஸ்த்ரீ-புருஷர்கள் யாவரும் ஸந்தோஷம் தாங்காமல் துள்ளினார்கள். அவர்களுடைய மோஹ மயமான ஒரு மயக்கம், பயம் தகர்ந்தது.

அதி கஹ்கஹே பாஜ்னே பாஜே |
ஸப்ஹிம் மனோஹர் மங்கல் ஸாஜே || 2762
ஜூத் ஜூத் மிலி ஸுமுகி ஸுநயனீம் |
கர்ஹிம் கான் கல் கோகில பயனீம் || 2763

மிகக் கம்பீரமான ஆரவாரத்துடன் வாத்யங்கள் முழங்கத் தொடங்கின. மனோஹரமாக மங்கள அலங்காரங்களைச் செய்யலாயினர். எல்லோரும் மங்கள கானம் பாடினார்கள். அழகிய முகமுடைய அழகுக் கண்ணியர், குயில் குரலியர்களான பல ஸ்த்ரீகளும் ஒன்று கூடித் தங்களது மதுரக் குரலில் இன்னிசை பாடத் தொடங்கினர்.

ஸுகு பிதேஹ் கர் பரனி ந ஜாயீ |
ஜன்ம தரித்ர மனஹுஂ நிதி பாயீ || 2764
பிகத் த்ராஸ் பயி ஸீய ஸுகாரீ |
ஜனு பிது உதயம் சகோரகுமாரீ || 2765

ஜனகருக்குண்டான பெருமைக்கும் மகிழ்வுக்கும் ஓர் அளவே இல்லை. அத்தனை ஸந்தோஷமடைந்தார். எப்படி ஒரு பிறவித் தரித்ரன் தனத்தின் பொக்கிஷத்தைப் பார்த்து மெய்ம்மறந்து போவானோ; அம்மாதிரி இருந்தது அவர் நிலைமை. ஸீதையைப் பிடித்திருந்த பயமும் கொஞ்சம் கொஞ்சமாக விலகியது. சந்த்ரனின் உதயத்தைக் கண்டு பெண் சகோரப் பக்ஷி எப்படி மகிழ்வடையுமோ? அம்மாதிரி இருந்தது அவள் உள்ளம்.

ஜனக் கீன்ஹ கௌஸிகஹி ப்ரனாமா |
ப்ரபு ப்ரஸாத் தனு பஞ்ஜேவு ராமா || 2766
மோஹி க்ருத க்ருத்ய கீன்ஹ துஹுஂ பாயீம் |
அப் ஜோ உசித் ஸோ கஹிஅ கோஸாயீம் || 2767

ஜனகர் விச்வாமித்ரரை வணங்கி; ப்ரபுவின் க்ருபையால் ஸ்ரீராமன் வில்லை உடைத்து விட்டார். இரு ஸஹோதரர்களும் என்னை க்ருதார்த்தனாக்கி விட்டார்கள். ஹே ஸ்வாமி! இப்பொழுது என்ன செய்ய வேண்டுமென்பதைச் சொல்லுங்கள் என்றார்.

கஹ் முனி ஸுனு நரநாத் ப்ரவீனா |
ரஹா பிவாஹ் சாப் ஆதீனா || 2768
டுட்தஹீம் தனு பமவு பியாஹூ |
ஸுர நர் நாக் பிதித் ஸப் காஹூ || 2769

அதற்கு விச்வாமித்ரர்; ஹே புத்திசாலியான அரசரே, கேளும், விவாஹமானது வில்லிற்கு உட்பட்டிருந்தது. ஸ்ரீராமன் வில்லை உடைத்ததுமே விவாஹம் ஆகி விட்டது என்பதைத் தேவர்கள், மனிதர்கள், நாகர்கள் எல்லோருமே அறிவார்கள்.

ததபி ஜாயி தும்ஹ கர்ஹ் அப் ஜதா பம்ல ப்ரபவஹாரு |
பூஜி பிப்ர குல ப்ருத்த ஸிர் பேத பிதித் ஆசாரு || 2770

ஆயினும், நீங்கள் உடனே சென்று உங்கள் குல வழக்கப்படி குலத்தின் வயோதிகர்களிடமும், ப்ராம் மணர்களிடமும், குருமார்களிடமும் கேட்டு வேதங் களில் கூறப்பட்ட ஆசார விதிப்படி எல்லாம் நடத்தவும்.

தூத் அவத்புர் படவஹு ஜாயீ |
ஆனஹிம் ந்ருப தஸரத்ஹி போலாயீ || 2771
முதித் ராவு கஹி பலேஹி க்ருபாலா |
படஏ தூத் போலி தேஹி காலா || 2772

மேலும், நீர் போய் உடனே அயோத்யாவிற்கு ஒரு தூதனை அனுப்பி வையுங்கள். ராஜா தசரதரை அழைத்து வரும்படிச் சொல்லுங்கள் என்றார். ஜனகர் மகிழ்வடைந்து; ஹே அருளாளரே! மிகவும் நல்ல விஷயம் என்று கூறி அதே ஸமயம் தூதர்களை அழைத் துத் தசரதரிடம் செல்லுமாறு அனுப்பினார்.

பஹு ரி மஹாஜன் ஸகல் போலாயே |
ஆயி ஸபன்ஹி ஸாதர் ஸிர் நாயே || 2773
ஹாட் பாட் மந்திர் ஸுர் பாஸா |
நகரு ஸம்வார்ஹு சாரிஹும் பாஸா || 2774

பின்பு ஜனகர் நகரத்திலுள்ள பெரிய மனிதர்களை எல்லாம் மரியாதையுடன் அழைத்தார். எல்லோரும் வந்ததும் அவர்களை வணங்கினார். கடைவீதிகள், நெடுஞ்சாலைகள், வீடுகள் தேவாலயங்கள் போன்ற நகரத்தின் நாற்புறங்களிலும் இப்படி எல்லா இடங் களையும் மிக அழகாக அலங்காரம் செய்யுங்கள் என்று மேலும், எல்லோருக்கும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஹர்ஷி சலே நிஜ நிஜ க்ருஹ ஆயே |
புனி பரிசாரக போலி படாயே || 2775
ரசஹு பிசித்ர பிதான் பனாயீ |
ஸிர் தரி பசன் சலே ஸுபாயீ || 2776

எல்லா மஹா ஜனங்களும் ஸந்தோஷமடைந்து அவர் அவர் இல்லம் சென்றனர். மறுபடி ஜனக ராஜா வேலையாட்களைக் கூப்பிட்டு அழகிய விசித்ரமான மண்டபம் தயாரிக்கும்படிச் செய்தார். இதைக் கேட்ட அவர்கள் மிக மகிழ்ச்சியுடன் தங்கள் தங்கள் கார். யத்தை ஆரம்பிக்கச் சென்றார்கள்.

படயே போலி குனீ தின்ஹ நான்னா |
ஜே பிதான் பிதி குஸல ஸுஜானா || 2777
பிதிஹி பந்தி தின்ஹ கீன்ஹ அரம்பா |
பிர்சே கனக் கதலி கே கம்பா || 2778

அவர்கள் மண்டபம் அமைப்பதில் கைதேர்ந்த திறமையுள்ள, வல்லுனர்களான பல கைத்தொழில் செய்பவர்களையும், சிற்பிகளையும் வரவழைத்தார்கள். அவர்கள் ப்ரம்மனைத் தொழுது, பின்பு வேலையை ஆரம்பித்தார்கள். முதலில் தங்கத்தினால் செய்த வாழை மரங்களைத் தயாரித்தார்கள்.

ஹரித மனின்ஹ கே பத்ர பல்
பதுமராக் கே பூல் |
ரசனா தேகி பிசித்ர அதி மனு
பிரஞ்சி கர் பூல் || 2779

பச்சைப்பசேல் என்ற பச்சைமணி இழைத்த இலை களையும், பழங்களையும் செய்தார்கள். பத்மராகம், மாணிக்கம் இவைகளைக் கொண்டு புஷ்பங்களைச் செய்தார்கள். இந்தக் கல்யாண மண்டபத்தின் விசித்ர மான ஸ்ருஷ்டியையும், அமைப்பையும் கண்ட பிரம் மாவே தனது நிலையை மறந்தார்.

பேனு ஹரித மனிமய ஸப் கீன்ஹே |
ஸரல் ஸபர்ப் பரஹிம் நஹிம் சீன்ஹே || 2780
கனக கலித் அஹிபேலி பனாயீ |
லகி நஹிம் பர்யி ஸபரன் ஸுஹாயீ || 2781

மூங்கில்களில் மரகதப் பச்சை நிற மணிகளைச் சுற்றி யிருந்தார்கள். அதன் கணுக்களை யாரும் மணிகளால் செய்யப்பட்டவையா? ஸாதாரணமானதா என்று அடை யாளம் கண்டு கொள்ள முடியாத அளவுக்கு அவ்வளவு அழகுடன், சிங்காரித்திருந்தார்கள். ஆகவே, மூங்கில் மரமோ, அல்லது; வேறு ஏதாவதோ என்று புரியாமல் இருந்தது. இலைகளோடு கூடிய தங்கத்தாலான வெற் றிலைக் கொடி தயாரிக்கப்பட்டிருந்தது. அதுவும் அடை யாளம் கண்டு கொள்ள முடியாமல் நேர்த்தியாக இருந்தது.

தேஹி கே ரசி பசி பந்த் பனாயே |
பிச் பிச் முகுதா தாம் ஸுஹாயே || 2782
மானிக் மரகத் குலிஸ் பிரோஜா |
சீரி கோரி பசி ரசே ஸரோஜா || 2783

வெற்றிலைக் கொடி போல் தங்கத்தினால் செய்து கல் பதித்து அந்த வண்ணக் கொடிகளைக் கட்டுவதற்கு உரிய அழகான கயிற்று நூல் தயாரித்திருந்தார்கள். இடைஇடையே முத்துக்களாலான குஞ்சங்கள் பல விதமான மாணிக்கங்கள், மரகதங்கள், ரத்னங்கள், வைர வைடூரியங்கள், பச்சையும், நீலமும் கலந்த ரத்னங்கள், மற்றும் பலவித உயர்ந்த மணிகள் இவைகளை அறுத்து, வரிசையாகக் கற்களைப் பதித்துச் சிவப்பு, பச்சை, வெள்ளை, பச்சையும், நீலமும் கலந்த தாமரை மலர்களைச் செய்து அலங்கரித்தார்கள்.

கியே ப்ருங்க பஹுரங்க பிஹங்கா |
குஞ்ஜஹிம் கூஜஹிம் பவன் ப்ரஸங்கா || 2784
ஸுர ப்ரதிமா கம்பன் கடி காடீம் |
மங்கல த்ரவ்ய லியேம் ஸப் டாடீம் || 2785

வண்டுகளையும், வண்ண வண்ணப் பக்ஷிகளையும் செயற்கையினால் செய்து அலங்கரித்தார்கள். அவைகள் காற்றின் உதவியினால் ரீங்காரம் செய்தன; கூவின. அவை பார்க்க மிக அழகாக இருந்தன. கம்பங்களில் பலவித மங்கலப் பொருள்களைத் தாங்கியபடி நின்ற கோலத்துடன் தேவதைகளின் உருவங்கள் செதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

சௌகேம் பாந்தி அனேக் புராயீம் |
ஸிந்துர் மனிமய ஸஹஜ் ஸுஹாயீம் || 2786

ஊரில் எல்லா இடங்களிலும் நாற்சந்துகளிலும், முற்றங்களிலும் மங்களகரமான யானை முத்துக்களால் அழகாக இழைக்கப்பட்டிருந்தன. அவை எல்லோரும் அதிசயிக்கும்படித் தோன்றியது.

ஸௌரப் பல்லவ ஸுபக் ஸுடி
கியே நீலமணி கோரி |
ஹேம பௌர் மரகத் கவரி லஸத்
பாடமய டோரி || 2787

நீலமணிகளை வரிசைபடக் கோர்த்து மிகவும் அழகிய மாவிலைகளைச் செய்து கட்டினார்கள். பட்டுக் கயிற்றில் கட்டப்பட்ட தங்கத்தாலான மாம்பூவையும், பச்சைக் கற்களால் ஆன மாங்காய், பழக் கொத்துகளையும் அழகு பெறக் கட்டிவைத்தார்கள். (இவை

எல்லாமே தங்கத்தினாலும்- மாணிக்கம்-வைரம்-வைடூரியத்தினாலும் செயற்கையாகச் செய்து மண மண்டபத்தையும், ஸபா மண்டபத்தையும், நகரத்தையும் மக்கள் பலவிதமாக அலங்கரித்தார்கள் என்று கூறுகிறார்.)

ரசே ருசிர் பர் பந்த நிவாரே ।
மன்ஹும் மனோபவம் பந்த் ஸம்வாரே ॥ 2788
மங்கல கலஸ் அனேக் பநாயே ।
த்வஜ பதாக பட சமர் ஸுஹாயே ॥ 2789

இவ்வாறு அழகிய, மிகச் சிறந்த தோரணங்களும், நெற்றிக் கொடிகளும் இத்தனை அழகாகத் தோன்றியது, ஒருக்கால் காமதேவன் நேரில் வந்து மிதிலை நகரை வலையாக அலங்கரித்தானோ என்று எண்ணும்படி மன மயக்கத்தைக் கொடுத்தது. பலவிதமான மங்களக் கலசங்கள் வரிசை வரிசையாக வைக்கப்பட்டன. அழகிய கொடிகளும், சிறு கொடிகளும், திரைச் சீலைகளும், சாமரங்களும் எங்கும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

தீப் மனோஹர் மனிமய நாநா ।
ஜாயி ந பர்னி பிசித்ர பிதாநா ॥ 2790
ஜேஹிம் மண்டப் துல்ஹினி பைதேஹீ ।
ஸோ பர்னை அஸி மதி கபி கேஹீ ॥ 2791

அந்த மண்டபத்தில் பலவிதமான மாணிக்கம் இழைத்த திருவிளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன. இந்த அற்புதமான சித்ர- விசித்ர மண்டபத்தில் தேவி ஜானகி மணமகளாக அமரப் போகிறாள். இந்த அழகை வர்ணிக்க எந்தக் கவியால்தான் முடியும்?

தூல்ஹு ராமு ரூப் குன் ஸாகர் ।
ஸோ பிதானும் திஹும் லோக் உஜாகர் ॥2792
ஜனக் பவன் கை ஸோபா ஜைஸீ ।
க்ருஹ க்ருஹ ப்ரதி புர் தேகிய தைஸீ ॥ 2793

அந்த மண்டபத்தில் ரூப குண ஸாகரமான ஸ்ரீராமச் சந்த்ர மூர்த்தி மணமகனாக அமரப் போகிறார். மூவுலகத்திலும் இந்த மண்டபம் சிறந்து விளங்கியது. ஜனகருடைய அரண்மனை எத்தனை சோபையுடன் காணப்பட்டதோ; அதேபோல் அந்த ஜனக புரியில் உள்ள அத்தனை வீடுகளும் அழகுடன் விளங்கின.

ஜெஹிம் தேரஹுூதி தேஹி ஸமய நிஹாரீ |
தேஹி லகு லகஹிம் புவன் தஸ் சாரீ || 2794
ஜோ ஸம்பதா நீச க்ருஹ ஸோஹா |
ஸோ பிலோகி ஸுரநாயக் மோஹா || 2795

அந்த ஸமயத்தில் இந்த ஜனக புரியின் அழகிற்கும், புகழுக்கும் எதிரில் பதினான்கு உலகமும், துச்சமாகத் தென்பட்டது. நீசர்களுடைய வீடுகளும்கூட அத்தனை சோபையுடன் விளங்கியதைப் பார்த்து இந்த்ரனே மோஹமடைந்தார்.

பஸ்யி நகர் ஜெஹிம் லச்சி கரி
கபட நாரி பர் பேஷுூ |
தேஹி புர் கை ஸோபா கஹத்
ஸகுசஹிம் ஸாரத் ஸேஷுூ || 2796

அந்த நகரத்தில் ஸாக்ஷாத் லக்ஷ்மீ தேவியே மறை முகமாக ஸ்த்ரீ வேஷம் பூண்டு வாழ்ந்து வருகிறாள். அந்த நகரத்தைப் பற்றி வர்ணிக்க ஸரஸ்வதி தேவியும், சேஷ நாகனும் ஸங்கோசப் படுகிறார்கள். ஏனெனில்; லக்ஷ்மியான ஜானகி வஸிக்கும் இடத்தில் செல்வம் பொங்காதா?

பஹுூஞ்சே தூத் ராம் புர பாவன் |
ஹர்ஷே நகர் பிலோகி ஸுஹாவன் || 2797
பூப் த்வார் தின்ஹ கபரி ஜனாயீ |
தசரத் ந்ருப ஸுனி லியே போலாயீ || 2798

ஜனகருடைய தூதர்கள் ஸ்ரீராமனின் ஸுந்தர நகர மான அயோத்யா வந்தடைந்தார்கள். அதைக் கண்டு மனமகிழ்ந்தார்கள். அரண்மனையை அடைந்து செய்தி சொல்லி அனுப்பினர். ராஜா தசரதரும் அவர்களை அழைத்து விசாரித்தார்.

கரி ப்ரனாமு தின்ஹ பாதீ தீன்ஹீ |
முதித் மஹீப் ஆபு உடி லீன்ஹீ || 2799
பாரி பிலோசன் பாஞ்சத் பாதீ |
புலக் காத் ஆயீ பரி சாதீ || 2800

தூதர்கள் ராஜாவை வணங்கிக் கடிதத்தைக் கொடுத் தார்கள். மகிழ்வுடன் தசரத ராஜா தானே எழுந்து வந்து வாங்கிப் படித்தார். கடிதம் படிக்கும் பொழுதே அவர் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. சரீரம் புளகாங்கிதமடைந்தது; மனம் மகிழ்ச்சியில் திளைத்தது.

ராமு லகனு உர் கர் பர் சீடூ ।
ரஹி கயே கஹத் ந காடூ மீடூ ॥ 2801
புனி தரி தீர் பத்ரிகா பாஞ்சீ ।
ஹர்ஷீ ஸபா பாத் ஸுனி ஸாஞ்சீ ॥ 2802

ஹிருதயத்தில் ராமனும்-லக்ஷ்மணனும் நிரந்தரமாக வஸிக்கிறார்கள். கையிலோ அழகான கடிதம். ராஜா அந்தக் கடிதத்தைப் பார்த்ததும் அப்படியே நின்று விட்டார். ஏதும் பேசமுடியவில்லை. தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கடிதம் படித்தார். ஸபையில் எல்லோரும் இந்தச் சுபச் செய்தியைக் கேட்டு ஆனந்தத் தில் துள்ளினார்கள்.

கேலத் ரஹே தஹாம் ஸுதி பாயீ ।
ஆயே பரது ஸஹித் பாயீ ॥ 2803
பூசத் அதி ஸ்நேஹம் ஸகுசாயீ ।
தாத கஹாம் தேம் பாதீ ஆயீ ॥ 2804

பரதன் தனது ஸஹோதரன், சத்ருக்னன் கூட விளையாடிக் கொண்டு இருந்தார். இந்த மங்களகர மான செய்திகளைக் கேட்டு அவர்கள் தகப்பனாரிடம் ஓடி வந்தனர். மிகவும் அன்புடன், நாணி என்ன விஷயம் என்று கேட்டார்கள்; தந்தையே கடிதம் எங் கிருந்து வந்திருக்கிறது? கூறுங்கள் என்றனர்.

குஸல ப்ரானப்ரிய பந்து தோவு
அஹஹிம் கஹஹு கேஹிம் தேஸ் ।
ஸுனி ஸ்னேஹ் ஸானே பசன்
பாசீ பஹுரி நரேஸ் ॥ 2805

நமது ப்ராணனை விடப் ப்ரியமான ஸஹோதர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்கள் ஸுகமா? தந்தையே, அவர்கள் எந்த தேசத்தில் இருக்கிறார்கள்? இக்கடிதம் எங்கிருந்து வந்தது? அவர்களுடைய அன்பு வசனங் களைக் கேட்ட ராஜா தசரதன் மீண்டும் கடிதத்தைப் படித்துக் காட்டினார்.

ஸுனி பாதீ புலகே தோவு ப்ராதா |
அதிக ஸ்னேஹு ஸமாத் ந காதா || 2806
ப்ரீதி புனீத் பரத் கை தேகீ |
ஸகல ஸபாம் ஸுகு லஹேவு பிஸேஷீ || 2807

வந்திருந்த கடிதத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட பரதனும், சத்ருக்னனும் மிகவும் ஸந்தோஷப் பட்டார்கள். அவர்களுடைய சரீரம் அவர்கள் வசத்தில் இல்லை. ப்ரேமையினால் உள்ளம் குளிர்ந்தனர். பரதனுடைய இந்த அபாரப் ப்ரேமையைக் கண்ட ஸபையிலுள்ள பெரியோர்கள் ஆச்சர்யப் பட்டார்கள்; சிறந்த ஸுக மடைந்தார்கள்.

தப் ந்ருப தூத் நிகட பைடாரே |
மதுர மனோஹர் பசன் உசாரே || 2808
பையா கஹஹு குஸல் தோவு பாரே |
தும்ஹ நீகேம் நிஜ நயன் நிஹாரே || 2809

அப்போது ராஜா தசரதன் தூதர்களை அருகில் அமர வைத்துக் கொண்டு அன்பான மொழியால்; "ஸஹோதரா! என்னுடைய இரு குழந்தைகளும் க்ஷேம மாகத்தானே இருக்கிறார்கள்? அவர்கள் ஸுகமா? அவர்களை உன் கண்களினால் நன்றாகப் பார்த்து விட்டு வந்தீர்களல்லவா? என்றார்.

ஸ்யாமல கௌர் தரேம் தனு பாதா |
பய கிஸோர் கௌஸிக முனி ஸாதா || 2810
பஹிசானஹு தும்ஹ கஹஹு ஸுபாவூ |
ப்ரேம் பிபஸ் புனி புனி கஹ் ராவூ || 2811

அதற்கு அவர்கள்; ஒருவன் கருத்த நீலவர்ணனாகவும், ஒருவன் சிவந்த வெள்ளை நிறத்தானாகவும் இருந்தார்கள்; இவர்கள் எப்போதும் வில்லையும்-அம்புறாத் தூணியை யும் தரித்து இருந்தார்கள்; அவர்கள் சிறு வயது பாலகர்கள். விச்வாமித்ர முனிவருடன் வந்திருக்கிறார்கள் என்றனர்.

நீ அவர்களை அறிந்திருந்தால் அவர்கள் குணத்தைப் பற்றி என்னிடம் கூறு என்று ராஜா அன்பின் வச மாகிய காரணத்தினால் திரும்பத் திரும்ப தூதரிடம் தம் குழந்தைகளை-ராம லக்ஷ்மணரைப் பற்றிக் கேட்கலானார்.

ஜா தின தேம் முனி கயே லவாயீ |
தப் தேம் ஆஜு ஸாஞ்சி ஸுதி பாயீ || 2812
கஹஹு பிதேஹ கவன் பிதி ஜானே |
ஸுனி ப்ரிய பசன் தூத் முஸுகானே || 2813

ஹே ஸஹோதரா எந்த தினத்தில் முனிவர் குழந்தைகளைக் கூட்டிச் சென்றாரோ; அதன் பின் இன்று தான் நான் அவர்களைப் பற்றிய உண்மையான செய்திகளை அறிந்தேன். ஆமாம், ராஜா ஜனகர் இவர்களை எப்படித் தெரிந்து கொண்டார்? சொல்லுங்கள், என்று தசரதர் நாத் தழுதழுக்கக் கேட்டார். இத்தகைய அன்பு வார்த்தையைக் கேட்ட தூதன் சிரித்துக் கொண்டான்.

ஸுனஹு மஹீபதி முகுட மனி
தும்ஹ ஸம தன்ய ந கோவு |
ராமு லகனு ஜின்ஹ கே தனய
பிஸ்வ பிபூஷன் தோவு || 2814

பிறகு தூதர்கள், ஹே ராஜாக்களின் மகுடமணியே கேளும்; தங்களைப் போன்ற பெருமையும், மரியாதையுள்ளவரும் ஒருவரும் இல்லை. எவருக்கு ராம-லக்ஷ்மணரைப் போல் புத்ரர்கள் பிறந்திருக்கிறார்கள்? அவர்கள் இருவரும் உலகத்தில் தெய்வீக அணிகள்.

பூசன் ஜோகு ந தனய தும்ஹாரே |
புருஷ ஸிங்க திஹு புர் உஜியாரே || 2815
ஜின்ஹ கே ஜஸ் ப்ரதாப கேம் ஆகே |
ஸஸி மலீன் ரபி ஸீதல் லாகே || 2816

தங்களுடைய புத்ரர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? இருவரும் புருஷ ஸிம்மங்கள்; மூன்று உலகத்திற்கும் ப்ரகாசம் கொடுக்கும் சக்தி உள்ளவர்கள். அவர்களுடைய புகழுக்கு எதிரில் சந்த்ரனே மலினமடைகிறான். (மங்குகிறான்.) அவர்களுடைய ப்ரதாபத்திற்கு எதிரில் ஸூர்யன் குளிர்ந்து போய் விடுகிறான்.

தின்ஹ கஹம் கஹிய நாத் கிமி சீன்ஹே |
தேகிஅ ரபி கி தீப் கர் லீன்ஹே || 2817
ஸீய ஸ்வயம்பர் பூப் அனேகா |
ஸமிடே ஸுபட் ஏக் தேம் ஏகா || 2818

ஹே ஸ்வாமி, அவர்களைப் பற்றிக் கூறுகிறீர்களே! அவர்களைப் பற்றி எப்படி அறிந்து கொண்டீர்கள்? ஸூர்யனை விளக்கைப் பிடித்துக் கொண்டு பார்த்தீர் களா? என்று கேட்பது போல் இருக்கிறது. மிதிலையில் ஸீதாதேவியின் ஸ்வயம் வரத்திற்காக ஒருவர் பின் ஒருவராக ராஜபலம் பொருந்திய அனேகப் போர்வீரர் களான ராஜாக்கள் வந்திருந்தார்களே!

ஸம்பு ஸராஸனு காஹீம் ந டாரா |
ஹாரே ஸகல பீர் பரிஆரா || 2819
தீனி லோக் மஹம் ஜே பட்மானீ |
ஸப் கை ஸக்தி ஸம்பு தனு பானீ || 2820

ஆனால், அவர்களில் எவருமே சிவதனுஸை நகர்த் தக்கூட முடியவில்லை. எல்லா வீர தீரர்களும் தோல்வி யடைந்தார்கள். மூவுலகத்திலுமுள்ள எந்தப் பராக்ரம சாலிகள் தங்களுடைய பலத்தினால் கர்வமடைந்து இருந்தார்களோ; அவர்கள் எல்லாருடைய சக்தியையும் சிவதனுஸ் முறித்து விட்டது.

ஸகயி உடாயி ஸராஸூர் மேரூ |
ஸோவு ஹியம் ஹாரி கயவு கரி பேரூ || 2821
ஜேஹிம் கௌதுக ஸிவஸைலு உடாவா |
ஸோவு தேஹி ஸபாம் பராபவு பாவா || 2822

மேலும்; பாணாஸுரன் ஸுமேருவையும் எடுத்து எறிபவன்; அவனும் இந்த ப்ரம்மாண்ட வில்லிடம் வந்து பயந்து போய் வில்லைச் சுற்றிவந்து விட்டுப் போய்விட்டான். கைலாஸ கிரியை விளையாட்டாகத் தூக்கி விளையாடிய ராவணனும் இந்த யஜ்ஞ ஸபை யில் தோல்வியை ஒப்புக் கொண்டு நகர்ந்து விட்டான்.

தஹாம் ராம் ரகுபம்ஸமனி
ஸுனிய மஹா மஹிபால் |
பஞ்ஜேவு சாப் ப்ரயாஸ் பினு
ஜிமி கஜ பங்கஜ நால் || 2823

ஹே மஹாராஜரே, கேளும்; அங்குள்ள ஜனகர் ஸபையில் பெரிய பெரிய போராளி அரசர்கள் தங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு ஓடி மறைந்தார்கள்.

ஆனால்; அங்கு வந்திருந்த ரகுவம்ச மணியான ஸ்ரீராமச்சந்த்ரன் கொஞ்சமும் ப்ரயாசைப்படாமல் யானை தாமரைத் தண்டை உடைத்துப் போடுவது போல அந்தச் சிவதனுஸை அப்படியே உடைத்துப் போட்டு விட்டார்.

ஸுனி ஸரோஷ் ப்ருகு நாயகு ஆயே |
பஹுத் பாந்தி தின்ஹ ஆங்கி தேகாயே ||2824
தேகி ராம் பலு நிஜ தனு தீன்ஹா |
கரி பஹு பினய கவனு பன் கீன்ஹா || 2825

ஸ்ரீராமன் வில் உடைத்த செய்தியைக் கேட்டுப் பரசுராமர் மிகுந்த சினத்துடன் அங்கு வந்தார். அவர் பலவிதமாக மிரட்டினார். ஆனால்; அவரும் கடைசியில் ஸ்ரீராமச்சந்த்ரனின் பலத்தைப் பார்த்து அதிசயித்து, தனது விஷ்ணு வில்லையே ஸ்ரீராமனிடம் கொடுத்து வணங்கி விட்டு வனம் சென்று விட்டார்.

ராஜன் ராமு அதுலபல் ஜைஸேம் |
தேஜ் நிதான் லகனு புனி தைஸேம் || 2826
கம்பஹிம் பூப் பிலோகத் ஜாகேம் |
ஜிமி கஜ் ஹரி கிஸோர் கே தாகேம் || 2827

மன்னரே! ஸ்ரீராமன் எப்படி ஈடிணையற்ற பலவானோ; அதே போல ப்ரகாசமானவர். அவருடைய ப்ரகாசத்திற்கு முன் எவரும் நிற்க முடியாது. லக்ஷ்மணரும் அப்படித்தான் இருக்கிறார். யானையானது சிங்கக்குட்டிகளைக் கண்டதுமே எப்படிப் பயந்து நடுங்குமோ; அதேபோல அவர்கள் இருவரையும் கண்ட மற்ற எல்லா அரசர்களும் பயந்து நடுங்குகின்றனர்.

தேவ் தேகி தவ பாலக் தோவூ |
அப் ந ஆங்கி தர் ஆவத் கோவூ || 2828
தூத் பசன் ரசவா ப்ரிய லாகீ |
ப்ரம ப்ரதாப் பீர் ரஸ் பாகீ || 2829

ஹே தேவனே! தங்களுடைய இரண்டு குமாரர்களும் எங்கள் கண்முன்னேயே இருக்கிறார்கள். அதாவது; அவர்களைப் பார்த்த பிறகு இப்பொழுது கண்கள் எதிரில் வேறு ஏதும் தோன்றவில்லை. (வேறு

எதையும் பார்க்க விரும்பவில்லை) ப்ரேமை, ப்ரதாபம், வீரரஸம், இவ்விதங்களில் தோய்ந்து வந்த இம்மாதிரியான பலவிதமான மனோபாவங்களைக் கொண்ட தூதனின் பேச்சுக் கோர்வைகள் எல்லோருக்கும் பரமானந்தமாக இருந்தன.

ஸபா ஸமேத் ராவு அனுராகே |
தூதன்ஹ தேன் நிசாவரி லாகே || 2830
கஹி அனீதி தே மூதஹிம் கானா |
தர்மு பிசாரி ஸப்ஹிம் ஸுகு மானா || 2831

ஸபையோருடன் கூட ராஜாவும் தூதர்களின் அன்பான மொழியையும், பக்தியையும் கண்டு, மிகவும் மகிழ்ந்து அவர்களுக்குப் பலவிதமான வெகுமதிகளைக் கொடுத்தார். இதைக் கண்ட தூதர்கள் இம்மாதிரியான வெகுமதிகளை நாங்கள் வாங்கக்கூடாது, இது நீதிக்குப் புறம்பானது; என்று கூறி அந்தத் தூதர்கள் முகத்தையும், காதுகளையும் மூடிக்கொண்டனர்.

இம்மாதிரி பரிசளிப்பை வாங்குவது எங்களுடைய தருமத்திற்கு எதிரானது என்றார்கள். இவர்கள் சொல்லைக் கேட்ட மக்கள் ஆச்சர்யமடைந்தார்கள். இம்மாதிரியும் ஒரு நேர்மை மிதிலா தேசத்தில் உண்டோ? என்று வியந்தனர்.

தப்உடி பூப் பஸிஷ்ட கஹுஂ
தீன்ஹி பத்ரிகா ஜாயி |
கதா ஸுனாயீ குர்ஹி
ஸப் ஸாதர் தூத் போலாயி || 2832

அப்போது ராஜா தசரதர் எழுந்து தனது குருவான வஸிஷ்டரிடம் சென்று, செய்திக் கடிதத்தைக் கொடுத்து, மரியாதையுடன் அந்தத் தூதுவர்களை அழைத்து எல்லாச் செய்திகளையும் குருவிற்குச் சொல்லச் செய்தார்.

ஸுனி போலே குர் அதி ஸுகு பாயீ |
புன்ய புருஷ கஹுஂ மஹி ஸுக் சாயீ || 2833
ஜிமி ஸரிதா ஸாகர் மஹுஂ ஜாஹீம் |
ஜத்யபி தாஹி காமனா நாஹீம் || 2834

எல்லா ஸமாசாரங்களையும் கேட்ட முனி வஸிஷ்டர் பரம த்ருப்தியடைந்தார். பிறகு; எப்படி நதிகள் ஸமுத்ரத்தை அடைகின்றனவோ; இருந்தாலும்; ஸமுத்ரத்திற்கு நதியின் மீது ஒரு காதலும் இல்லையோ, அதேபோல் புண்யாத்மாவான புருஷர்களுக்காகவே இந்த உலகத்தில் ஸுகம் நிறைந்திருக்கிறது.

திமி ஸுக் ஸம்பதி பினஹிம் போலாயேம் |
தர்மஸீல் பஹிம் ஜாஹிம் ஸுபாயேம் || 2835
தும்ஹ குர் பிப்ர தேனு ஸுர் ஸேபீ |
தஸி புனீத் கௌஸல்யா தேபீ || 2836

மேலும், ஸுகமும், ஐச்வர்யமும், கூப்பிடாமல் இயல்பாகவே தர்மாத்மாவான புருஷரிடம் எல்லாம் தானாகவே வருகிறது. நீர் எப்படி குரு ப்ராம்மணன், பசு, தேவதைகள் யாவருக்கும் ஸேவை செய்து வணங்குகிறீரோ; அதேமாதிரி உன் தர்மசீல பத்னியான கௌஸல்யா தேவியும் ஆவார்.

ஸுக்ருதீ தும்ஹ ஸமான் ஜாக் மாஹீம் |
பயவு ந ஹை கோவு ஹோனேவு நாஹீம் ||2837
தும்ஹ தே அதிக் புன்ய பட் காகேம் |
ராஜன் ராம் ஸரிஸ ஸுத ஜாகேம் || 2838

அரசே! உம்மைப் போல் புண்யாத்மா உலகில் எவருமே இல்லை; இருந்ததும் இல்லை; இனிமேலும் இருக்கப் போவதுமில்லை; இது திண்ணம். உம்மைக் காட்டிலும் யாருக்கு அதிகப் புண்யம் இருக்கமுடியும்?, ஸ்ரீராமனைப் போல் புத்ர ஸந்தானத்தைப் பெற்றவர் நீர்.

பீர் பிநீத் தர்ம ப்ரத தாரீ |
குன் ஸாகர் பர் பாலக் சாரீ || 2839
தும்ஹ கஹுூம் ஸர்ப கால கல்யானா |
ஸஜ்ஹு பராத் பஜாயி நிஸானா || 2840

ஹே ராஜனே! உம்முடைய நான்கு புத்ரர்களும் மஹாவீரர்கள் பணிவுள்ளவர்கள், தர்மநெறிப்படி நடப்பவர்கள், குணத்திலும் கடல் போன்றவர்கள். ஆகவே, உமக்கு எக்கணமும் நல்லகாலம் தான், மங்களம் தான். ஆகவே, நகராவை முழக்கித் திருமண ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்வீராக.

சலஹு பேகி ஸுனி குர் பசன்
பலேஹிம் நாத் ஸிரு நாயி |
பூபதி கவனே பவன் தப்
தூதன்ஹ பாஸு தேவாயி || 2841

சீக்கிரம் கிளம்பும் என்ற குருவின் வார்த்தையைக் கேட்டு, நாதனே! 'மிகவும் நல்லது!' என்று குருவிற்கு வணக்கம் செய்தபின் தாங்கள் கூறியபடியே செய்கிறேன் என்றார் தசரதர். பின்பு தூதர்களுக்குத் தங்குமிடம் கொடுக்கச் செய்து, அரண்மனை சென்றார்.

ராஜா ஸபு ரனிவாஸ் போலாயீ |
ஜனக் பத்ரிகா பாசி ஸுநாயீ || 2842
ஸுனி ஸந்தேஸு ஸகல ஹர்ஷானீம் |
அபர் கதா ஸப் பூப் பகானீம் || 2843

ராஜா தசரதர் தனது ராணிகளை அழைத்து, ஜனகரின் பத்ரிகையையும் படித்துக் காட்டினார். அதைக் கேட்டதும் ராஜமாதேவியர் மிகவும் மகிழ்ந்தனர். தூதர்கள் வாயினால் தனது புத்ரர்களின் பெருமை அனைத்தும் கேட்டபடியே வர்ணித்துக் கூறினார்.

ப்ரேம் ப்ரபுல்லித ராஜஹிம் ரானீ |
மனஹும் ஸிகினி ஸுனி பாரித் பானீ || 2844
முதித் அஸீஸ் தேஹிம் குர் நாரீம் |
அதி ஆனந்த மக்ன மஹ்தாரீம் || 2845

மழைக்கால மேக கர்ஜனையைக் கேட்டுப் பெண் மயில்கள் எப்படிச் சிறகு விரித்து மகிழுமோ; அதே போல ப்ரேமையினால் மகிழ்வில் திளைத்த ராஜமாதேவியர் திகழ்ந்தனர். பெரிய பெரிய வயதான கிழவியர் கூட மகிழ்வையடைந்து ஆசீர்வதித்தனர். தாய்மார்கள் பரமானந்தத்தில் திளைத்தனர்.

லேஹிம் பரஸ்பர அதிப்ரிய பாதீ |
ஹ்ருதயம் லகாயி ஜுடாவ்ஹிம் சாதீ || 2846
ராம லகன் கை கீர்தி கர்னீ |
பார்ஹிம் பார் பூப்வர் பர்னீ || 2847

அந்த ஜனகர் அனுப்பிய மிகப் ப்ரியமான செய்திப் பத்ரிகையை ஒவ்வொருவரும் கேட்டு வாங்கி, ஹிரு தயத்தில் அணைத்துக் கொண்டு, அந்த மார்பைக் குளிரச் செய்தனர். ராஜர்க்களுள் ச்ரேஷ்டரான தசர தர் தனது குமாரர்களான ராம-லக்ஷ்மணரின் புகழை யும், செய்யவேண்டிய செயலையும் பற்றித் திரும்பத் திரும்ப வர்ணித்தார்.

முனி ப்ரஸாது கஹி த்வார் ஸிதாயே |
ரானின்ஹ தப் மஹிதேவ் போலாயே || 2848
தியே தான் ஆனந்த ஸமேதா |
சலே பிப்ரவர் ஆஸிஷ் தேதா || 2849

'இவையெல்லாம் முனிவர் விச்வாமித்ரரின் அருள் தான்', என்று கூறித் தசரதர் வெளியே சென்றார். அப்பொழுது ராணிகள் ப்ராம்மணர்களை அழைத்து, மகிழ்வுடன் அவர்களுக்குத் தானங்களைக் கொடுத் தனர். குமாரர்களை ஆசீர்வாதம் செய்து அந்தப் ப்ராம்மணர்கள் சென்றனர்.

ஜாசக் லியே ஹங்காரி தீன்ஹி
நிசாவாரி கோடி பிதி |
சிரு ஜீவஹுூம் ஸுத சாரி
சக்ரபர்த்தி தசரத்த கே || 2850

பிறகு பிக்ஷுூகளையெல்லாம் அழைத்து அவர்களுக் குக் கோடிக்கணக்கான மதிப்புள்ள தானங்களைச் செய்தார்கள். அவர்கள்; சக்ரவர்த்தி தசரதரின் நான்கு குமாரர்களும் சிரஞ்ஜீவியாக இருக்கட்டும்'',

கஹத் சலே பஹிரேம் பட் நானா |
ஹர்ஷி ஹனே கஹகஹே நிஸானா || 2851
ஸமாசார் ஸப் லோகன்ஹ பாயே |
லாகே கர் கர் ஹோன் பதாயே || 2852

என இம்மாதிரி ஆசீர்வாதம் செய்த வண்ணம் அந்த பிக்ஷுூக்கள் பலவிதமான, அழகிய வஸ்த்ரங்களை அணிந்து கொண்டு சென்றார்கள். பறையடிப்பவர்கள் மிக ஸந்தோஷத்துடன் பலமாகப் பறையடித்தார்கள். இந்தச் செய்தி எல்லோருக்கும் பரவியதும் ஒவ்வொரு வீட்டிலும் மங்கள வாத்யங்கள் முழங்கத் தொடங்கின.

புவன் சாரி தஸ் பரா உசாஹூ |
ஜனகஸுதா ரகுபீர் பிபாஹூ || 2853
ஸுனி ஸுப கதா லோக் அனுராகே |
மக க்ருஹ கலீம் ஸம்வாரன் லாகே || 2854

ஜனகஸுதாவான ஜானகிக்கும்-ஸ்ரீரகுநாதனுக்கும் விவாஹம் நடக்கப்போகிறது என்ற விவரமறிந்ததுமே; பதினான்கு உலகங்களிலும் உற்சாகம் நிரம்பி வழிந்தது. இந்தச் சுப ஸமாசாரத்தைக் கேட்ட மக்கள் ஆனந்தத்தில் மூழ்கினார்கள். பாதைகளையும், வீடுகளையும், ஸந்துகளையும், அலங்கரிக்கத் தொடங்கினர்.

ஜத்யபி அவத் ஸதைவ ஸுஹாவனி |
ராம புரீ மங்கலமய பாவனி || 2855
ததபி ப்ரீதி கை ப்ரீதி ஸுகாயீ |
மங்கல ரசனா ரசீ பனாயீ || 2856

எப்படியும் அயோத்யாபுரி என்றுமே செல்வமும், ஸுகமும், ஸந்தோஷமும், அழகும் நிறைந்தது. ஏனெனில்; அது ஸ்ரீராமச்சந்த்ரனின் மங்களகரமான, புண்ய புரி. இருந்தாலும்; அன்புக்கு மேல் அன்பு கொழிக்கும் ஊர்ஆக இருப்பதினால் அது மங்களகரமான பலவிதச் செயல்களால் அழகூட்டும்படிச் சித்தரிக்கப்படுகிறது.

த்வஜ பதாக பட் சாமர் சாரூ |
சாவா பரம பிசித்ர பஜாரூ || 2857
கனக் கலஸ் தோரன் மனி ஜாலா |
ஹரத் தூப் ததி அச்சத் மாலா || 2858

கொடிகளோடும், தோரணங்களோடும் படுதாக்களோடும், அழகழகான சாமரங்களோடும் கூடிக் கடை வீதிகள் பூராவும் மிக விசித்ரமானதொரு மெருகூட்டித் திகழ்ந்தது. ஓர் அதிசயமான தோற்றம் எங்கும் வ்யாபித்து இருந்தது. தங்கக் கலசங்கள், தோரணங்கள், மணிகளினால் செய்யப்பட்ட ஜாலராக்கள், மஞ்சள், அருகம் புல், தயிர், அக்ஷதைகள், மாலைகள் ஆகியவைகளாலே;

மங்கலமய நிஜ நிஜ பவன்
லோகன்ஹ ரசே பனாயி |
பீதீம் ஸீஞ்சீம் சதுரஸம
சௌகேம் சாரு புராயி || 2859

மக்கள் தங்கள் தங்கள் இல்லங்களையும் அலங்கரித்து மங்கள அழகு செய்தார்கள். ஸந்துக்களையும், தெருக்களையும் வாஸனைப் பொடி கொண்டு பலவித மான புதிய முறைப்படி அலங்கரித்து வீட்டுப் படிகளிலும், தாழ்வாரங்களிலும் வண்ண வண்ணக் கோலம் தீட்டினார்கள். (அதாவது; சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, கற்பூரம் இவைகளைச் சேர்த்துக் குழைத்துச் செய்யப்பட்ட ஒருவகை வாஸனைத் த்ரவ்யங்களுடன் உள்ள கலவைப் பொருளுக்குச் சதுரஸமம் என்று பெயர்)

ஜஹம் தஹம் ஜுத் ஜுத் மிலி பாமினி |
ஸஜி நவ ஸப்த ஸகல துதி தாமினி || 2860
பிது வதனீம் ம்ருக ஸாவக் லோசனி |
நிஜ ஸரூப் ரதி மானு பிமோசனி || 2861

மின்னலைப் போன்ற காந்தியுள்ள பெண்மணிகள், சந்த்ரனைப் போன்ற முகம் உள்ளவர்கள், மான் குட்டியைப் போல் விழி அழகு பொருந்தியவர்கள், தங்களுடைய அழகால், காமதேவனின் மனைவி ரதியின் கர்வத்தையும் போக்கடிக்கும் அழகுள்ளவர்கள், அப்படிப்பட்ட ஸுமங்கலி ஸ்த்ரீகள் யாவரும் பதினாறு விதமான ச்ருங்கார அணிகளையும் செய்து கொண்டு ஒன்றாக அங்கும் இங்கும் கூடி,

காவ்ஹிம் மங்கல மஞ்ஜுல பானீம் |
ஸுனி கல ரவ கலகண்டி லஜானீம் || 2862
பூப் பவன் கிமி ஜாயி பகானா |
பிஸ்வ பிமோஹன் ரசேவு பிதானா || 2863

இசை பாடும் குயில்களும், நாணும்படியாக மதுரமான குரலில் மங்கள கீதம் பாடினார்கள். இவர்கள் இப்படியிருக்க ராஜ மஹலை எப்படி வர்ணிப்பது? உலகத்தையே ஆச்சர்யத்தில் ஆழ்த்தும் படியான அளவு மண மண்டபம் போல் அமைத்தார்கள்.

மங்கல த்ரவ்ய மனோஹர் நாநா |
ராஜத் பாஜத் பிபுல் நிஸானா || 2864
கதஹும் பிரித பந்தீ உச்சர்ஹீம் |
கதஹீம் பேத் துனி பூஸுர் கர்ஹீம் || 2865

பலவிதமான மனோஹரமான மங்கலப் பொருள்களும், சோபையை அளிக்கின்றன. பலவிதமான வாத்யங்கள், பறைகள் முழங்கின. எல்லா இடங்களிலும் குலப் பெருமையைப் பாடுபவர் பலவிதமான வம்சாவளியைப் பாடிக் கொண்டே இருக்கிறார்கள், பலவிதமான வேத மந்த்ரங்களை ப்ராம்மணர்கள் ஒன்று கூடி ஓதுகிறார்கள்.

காவஹி ஸுந்தரி மங்கல கீதா ।
லை லை நாமு ராமு அரு ஸீதா ॥ 2866
பஹுத் உசாஹு பவனு அதிதோரா ।
மானஹும் உமகி சலா சஹு ஓரா ॥ 2867

ஸுந்தரிகள் ஸ்ரீராமன், ஸீதாதேவி இவர்களின் பெயரைச் சொல்லிச் சொல்லி மங்கள கீதம் பாடினார்கள். உற்சாகம் அதிகரிக்கவே அரண்மனை ரொம்பவும் சிறிதாகி விட்டது. அதனால் இவர்களுடைய உற்சாகத்தின் எதிரொலி நகரமெங்கிலும், நாலா பக்கத்திலும் பொங்கி நின்றது.

ஸோபா தஸரத் பவன் கயி
கோ கபி பர்னை பார் ।
ஜஹாம் ஸகல ஸுர ஸீஸ மனி
ராம் லீன்ஹ அவதார் ॥ 2868

ஸமஸ்த தேவதைகளின் சிரோ மணியான ஸ்ரீ ராமச்சந்த்ரன் அவதாரம் எடுத்துள்ள தசரதனுடைய அரண்மனையின் ப்ரகாசத்தையும், மகிழ்ச்சியையும் எந்தக் கவியினால்தான் வருணிக்க முடியும்?

பூப் பரத புனி லியே போலாயீ ।
ஹய கய ஸ்யந்தன ஸாஜஹு ஜாயீ ॥ 2869
சலஹு பேகி ரகுபீர் பராதா ।
ஸுனத் புலக் பூரே தோவு ப்ராதா ॥ 2870

பின்பு ராஜா பரதனைக் கூப்பிட்டார். அவரை நோக்கி; நீ போய்க் குதிரைகளையும், யானைகளையும், ரதங்களையும் அலங்கரிக்க ஏற்பாடு செய். சீக்கிரம் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் விவாஹ ஊர்வலத்திற்குப் புறப்படு, என்றதும்; பரதன், சத்ருக்னன் ஆகிய இருவரும் ஆனந்தம் தாங்காமல் மெய்ம் மறந்தார்கள்.

பரத் ஸகல ஸாஹனீ போலாயே |
ஆயஸு தீன்ஹ முதித் உடி தாயே || 2871
ரசி ருசி ஜீன் துரக தின்ஹ ஸாஜே |
பரன் பரன் பர் பாஜி பிராஜே || 2872

பரதன் குதிரை லாயத்தின் தலைவரைக் கூப்பிட்டார். அவனிடம் குதிரைகளைச் சிங்காரிக்கும்படிக் கூறினார். அவர்களும் அவ்வார்த்தையைச் சிரமேற் கொண்டு மகிழ்வுடன் ஓடினார்கள். அவர்கள் மிகவும் சிரத்தையுடன் சேணத்தைக் கட்டிப் பலவித வண்ணக் குதிரைகளைச் சிங்காரித்தார்கள்; அவ்வுத்தமக் குதிரைகள் சிறப்பாகத் திகழ்ந்தன.

ஸுபக் ஸகல் ஸுடி சஞ்சல் கர்னீ |
அய இவ ஜரத் தரத் பக் தர்னீ || 2873
நாநா ஜாதி ந ஜாஹிம் பகானே |
நிதரி பவனு ஜனு சஹத் உடானே || 2874

எல்லாக் குதிரைகளும், மிக அழகாகவும், தந்த்ர முள்ளவையாகவும் இருந்தன. எரிகிற இரும்பில் காலை வைப்பதுபோலப் பூமியில் கால்களை வைக்கும் முன்பே பறந்துவிடும் போல் அதிவேகமாகச் செல்லும் குதிரைகளாக இருந்தன. அவைகள் காற்றையும் பழிக்கும்படியான அளவு வேகமுள்ள பல்வேறு இனக் குதிரைகள்.

தின்ஹ ஸப் சயல் பயே அஸ்வாரா |
பரத் ஸரிஸ பய ராஜகுமாரா || 2875
ஸப் ஸுந்தர் ஸப் பூஷன் தாரீ |
கர் ஸர் சாப் தூன் கடி பாரீ || 2876

பரதனைப் போலவே ஒரே ஸம வயதுடைய ஆடம்பர ப்ரியர்களான ராஜகுமாரர்கள் அக்குதிரைகளின் மீது இருந்தார்கள். அவர்கள் எல்லோரும் அழகாக இருந்தார்கள்; ஆபரணங்கள் அணிந்திருந்தார்கள். அவர்கள் கையிலும் தனுஸும்- பாணமும் இருந்தன; இடுப்பில் அம்புறாத் தூணியும் இருந்தது.

சரே சபீலே சயல் ஸப்
ஸூர் ஸுஜான் நபீன் |
ஸுக் பதசர் அஸ்வார் ப்ரதி
ஜே அஸிகலா ப்ரபீன் || 2877

எல்லோரும் பொறுக்கி எடுத்தாற்போல் அழகும், அந்தஸ்தும், ஆடம்பரமும் உள்ளவராயிருந்தனர். சூர-வீரராகவும், ஸாமர்த்ய சாலிகளாகவும், இளம் யுவர் களாகவும் இருந்தார்கள். ஒவ்வொரு குதிரை வீரர் களுடன்கூட இரண்டு கால்நடைச் சிப்பாய்களும் இருந் தார்கள். அவர்கள் வாள் வித்தையில் மிகவும் வல்லவர் களாக இருந்தார்கள்.

பாந்தேம் பிரத் பீர் ரன காடே |
நிகஸி பயே புர் பாஹேர் டாடே || 2878
பேர்ஹி சதுர் துரக கதி நாநா |
ஹர்ஷஹிம் ஸுனி ஸுனி பனவ் நிஸானா ||2879

வீரர்களுக்கு உரிய ஆடைகளை அணிந்து கொண்டு அந்தப் போர்வீரர்கள் அனைவரும் நகரத்திலிருந்து வெளியே வந்து அணி வகுத்து நின்றார்கள். அந்த வீரர்கள் தங்கள் தங்கள் குதிரைகளைப் பலவிதமாக நடைபோட, சுற்ற வைக்கிறார்கள்.

மேலும், பேரிகை போன்ற வாத்யங்கள் இசைப்பது கேட்டு அவர்கள் தங்களது மகிழ்ச்சியைப் பலவிதமாக காட்டிக் கொண்டார்கள்.

ரத ஸாரதின்ஹ பிசித்ர பனாயே |
த்வஜ பதாக மணி பூஷன் லாயே || 2880
சம்வர் சாரு கிங்கினி துனி கர்ஹீம் |
பானு ஜான் ஸோபா அபஹர்ஹீம் || 2881

ஸாரதிகள், கொடிகளையும், தோரணங்களையும் மணிகளாலும், பல்வேறு அணிகளாலும் ரதத்தை அலங்கரித்திருந்தார்கள். அவைகளில் கட்டியிருந்த சிறுசிறு மணிகளும் ஒலியை ஊட்டிய வண்ணமிருந் தன. ஸூர்யனுடைய ரதத்தின் அழகையே பறித்துக் கொண்டுவிட்டதோ என்னும்படியாக அந்த ரதங்கள் அத்தனை அழகாக இருந்தன.

ஸாம்வகரன் அகனித ஹய ஹோதே |
தே தின்ஹ ரதன்ஹ ஸாரதின்ஹ ஜோதே ||2882
ஸுந்தர் ஸகல அலங்க்ருத ஸோஹே |
ஜின்ஹஹி பிலோகத் முனி மன மோஹே ||
2883

அளவில்லாத ச்யாமள வர்ணக் குதிரைகள் இருந்தன. அவைகளின் ஸாரதிகள் அக்குதிரைகளை ரதங்களில் பூட்டினார்கள். பார்ப்பதற்கு அவை பல அணிகளால் அலங்கரிக்கப்பட்டு ரொம்பவும் அழகாக இருந்தன. அவைகளின் அற்புதக் காட்சியைக் கண்டு முனிவர்களின் மனமும் மோஹமடையும்படியாயிற்று.

ஜே ஜல் சலஹிம் தலஹி ஜீ நாயீம் ।
டாப் ந பூட் பேக் அதிகாயீம் ॥ 2884
அஸ்த்ர ஸஸ்த்ர ஸபு ஸாஜு பனாயீ ।
ரதீ ஸாரதின்ஹ லியே போலாயீ ॥ 2885

அந்தக் குதிரைகள் ஜலத்திலும் கூடப் பூமியில் ஓடுவதுபோல் மிக வேகமாக ஓடின. அதாவது; அத்தனை வேகமாக ஓடுவதால் ஜலத்தில் அவைகளின் காலடிகூட அமிழவில்லை.

அஸ்த்ர, சஸ்த்ரம் முதலிய எல்லா வகைச் சிங்காரங்களையும் செய்து ஸாரதிகள் ரதவீரர்களை அழைத்தனர்.

சடி சடி ரத் பாஹேர்
நகர் லாகீ ஜுரன் பராத் ।
ஹோத் ஸகுன் ஸுந்தர் ஸப்ஹி
ஜோ ஜேஹி காரஜ் ஜாத் ॥ 2886

ரதங்களில் ஏறிய அத்தனை வீரர்களும் நகரத்தின் வெளியில் ஒரு புறம் போய் ஒன்றாகச் சேர்ந்தார்கள். யார் -யார் எந்த வேலையாகக் கிளம்பியிருக்கிறார்களோ; அவர்கள் எல்லாருக்குமே நல்ல சகுனம் உண்டாயிற்று. (எங்குமே மங்கள கரமான தோற்றம் உண்டாயிற்று)

கலித் கரிபரன்ஹி பரீம் அம்பாரீம் ।
கஹி ந ஜாஹிம் ஜேஹி பாந்தி ஸம்வாரீம் ॥2887
சலே மத்த கஜ கண்ட பிராஜீ ।
மனஹும் ஸுபக் ஸாவன் கன் ராஜீ ॥ 2888

சிறந்த யானைகளின் மீது அம்பாரிகள் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தன. அவை எப்படி மிக அழகாகச் சிங்காரிக்கப்பட்டு இருந்தன என்பதைச்

சொல்லி முடியாது. ஆவணி மாதத்திய அழகு மேகக் கூட்டம் மின்னல்- இடிமுழக்கத்துடன் தோன்றுவது போல்; மத்த கஜம் போன்ற அந்த யானைகள் மணி களை அடித்துக்கொண்டே நடப்பது மிக அழகாக இருந்தது.

பாஹன் அபர் அனேக பிதானா |
ஸிபிகா ஸுபக் ஸுகாஸன் ஜானா || 2889
தின்ஹ சடி சலே பிப்ரபர் ப்ருந்தா |
ஜனு தனு தரேம் ஸகல ச்ருதி சந்தா || 2890

ஸுகமாக உட்காரும் வகையில் நாற்காலிபோல் அமைக்கப்பட்டிருந்த அழகிய பல்லக்குகளும், ரதம் முதலான பல்வேறு தரப்பட்ட வாஹனங்களும் இருந்தன. அவைகளில் வேதங்களின் சந்தஸ்ஸே உருவெடுத்து வந்தனவோ என்று சொல்லும்படியான சிறந்த அந்தணர்கள் ஏறிச்சென்றனர்.

மாகத் ஸுத பந்தி குன காயக் |
சலே ஜான் சடி ஜோ ஜேஹி லாயக் || 2891
பேஸர் ஊண்ட் ப்ருஷப பஹு ஜாதீ |
சலே பஸ்து பரி அகனித பாந்தீ || 2892

மாகதர்கள், ஸுதர்கள், பறை அறிவிப்பவர்கள், ராஜ வம்ஸ குணங்களைப் பாடுபவர்கள் என இம் மாதிரிப் பலரும் அவரவருக்குத் தகுந்த வாஹனங் களில் ஏறிக் கொண்டுசென்றனர். பல ஜாதிக் கோவேறுக் கழுதைகளும், ஒட்டகங்களும், எருதுகளும் எண்ணற்ற பலவிதச் சாமான்களையும் சுமந்து கொண்டு சென்றன.

கோடின்ஹ காம்வரி சலே கஹாரா |
பிபித பஸ்து கோ பர்னை பாரா || 2893
சலே ஸகல ஸேவக் ஸமுதாயீ |
நிஜ நிஜ ஸாஜு ஸமாஜு பனாயீ || 2894

பணியாளர்கள் கோடிக்கணக்கான காவடிகளில் பலதரப்பட்ட பொருள்களை ஏற்றிச் சுமந்து சென் றனர். அவைகளை வர்ணிக்க யாரால் இயலும்? எல்லா ஸமூஹத்தினரும் அவரவர்களுக்குத் தக்கபடி தங்கள் தங்கள் கூட்டத்துடன் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஸப் கேம் உர் நிர்பர்
ஹர்ஷு பூரித் புலக ஸரீர் |
கப்ஹிம் தேகிபே நயன பரி
ராமு லகனு தோவு பீர் || 2895

எல்லோர் ஹிருதயத்திலும் பெருமையும் - ஆனந்த மும் பொங்கியது; சரீரம் புளகாங்கிதமடைந்தது. நாம் எப்போது ஸ்ரீராம - லக்ஷ்மணர் என்ற இரு ஸஹோ தரர்களையும் கண் குளிரப் பார்ப்போம்? எல்லோர் விருப்பமும் எண்ணமும் ஒரே மாதிரி இருந்தது.

கர்ஜஹி கஜ கண்டா துனி கோரா |
ரத ரவ பாஜி ஹிம்ஸ சஹு ஒரா || 2896
நிதரி கன்ஹி குர்ம்மரஹிம் நிஸானா |
நிஜ பராயி கசு ஸுனிஅ ந கானா || 2897

யானைகள் பிளிரிக் கொண்டிருக்கின்றன. அவை களின் கழுத்தில் உள்ள மணிகளே பயங்கரமாக ஒலிக் கின்றன. நாலா பக்கமும் ரதங்களின் கடகட சப்தங் களும், குதிரைகளின் கனைக்கும் குரல்களும் ஆரவாரத் துடன் கேட்கின்றன. மேகத்தின் இடியையும் தோற்கடிக் கும்படி நகாரா என்னும் பறைகள் முழங்கிக்கொண் டிருக்கின்றன. ஒருவருக்கு ஒருவர் பேசும் வார்த்தைகள் கூடக் காதுகளில் விழவில்லை. அப்படி எங்கும் ஒரே ஆரவாரம்.

மஹா பீர் பூபதி கே த்வாரேம் |
ரஜ ஹோயி ஜாயி பஷான் பபாரேம் || 2898
சடீ அடாரின்ஹ தேக்ஹிம் நாரீம் |
லியேம் ஆரதீ மங்கல தாரீம் || 2899

ராஜா தசரதனுடைய ராஜமஹலுக்கு வெளியே அவ்வளவு பெரும் கூட்டம் சொல்லி முடியாது. கற் களை விட்டெறிந்தால்கூடப் பூமியில் அடங்கித் தூசி யாகிவிடும். அப்படி ஒரு கூட்டம் நிரம்பி வழிந்தது. உப்பரிகைகளில், மாட மாளிகைகளில் ஏறிய ஸ்த்ரீகள் கைகளில் மங்கல ஆரத்தி எடுக்க வேண்டித் தட்டு களுடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

காவஹிம் கீத் மனோஹர் நானா |
அதி ஆனந்து ந ஜாயி பகானா || 2900
தப் ஸுமந்த்ர துயி ஸ்யந்தன் ஸாஜீ |
ஜோதே ரபி ஹய நிந்தக் பாஜீ || 2901

அவர்கள் பலவகையான மங்கள கானம் இசைக் கிறார்கள். அவர்களின் பேரானந்தத்தை வர்ணித்துக் கூறமுடியாது. அப்பொழுது ஸுமந்த்ரர் இரு ரதங் களை அலங்கரித்து அவைகளில் ஸூர்ய தேவனின் குதிரைகளைத் தோற்கச் செய்யும்படியான குதிரை களைப் பூட்டினார்.

தோவு ரத ருசிர் பூப் பஹிம் ஆனே |
நஹிம் ஸாரத் பஹிம் ஜாஹிம் பகானே ||2902
ராஜ ஸமாஜு ஏக் ரத ஸாஜா |
தூஸர் தேஜ் புஞ்ஜ அதி ப்ராஜா || 2903

இரண்டு அழகிய ரதங்களை அலங்கரித்து ராஜா தசரதரிடம் சுமந்த்ரர் கொண்டு வந்தார். ஒன்று ராஜாங்க முறைப்படிச் சிங்காரிக்கப்பட்டிருந்தது. மற்றொன்று வீரத்தின் சின்னமாக, ஒளிப்பிழம்பாகப் பின்னால் அங்க ரக்ஷகர்களின் கூட்டம் உட்காருவது போல் தயார் செய்யப்பட்டிருந்தது.

தேஹிம் ரத் ருசிர் பஸிஷ்ட கஹு:ம்
ஹர்ஷி சடாயி நரேஸு: |
ஆபு சடேவு ஸ்யந்தன ஸுமிரி
ஹர குர் கௌரி கனேஸு: || 2904

அந்த அழகிய ரதத்தில் ராஜா தசரதர் குரு வஸிஷ் டரையும் ஸந்தோஷத்துடன் உட்கார வைத்துத் தானும் சிவ, குரு ப்ரம்மா, கௌரி, கணேசன் இவர்களை த்யானித்து ஏறி அமர்ந்தார்.

ஸஹித் பஸிஷ்ட ஸோஹ் ந்ருப கைஸேம் |
ஸுர குர் ஸங்க புரந்தர் ஜைஸேம் || 2905
கரி குல ரீதி பேத் பிதி ராவூ |
தேகி ஸப்ஹி ஸப் பாந்தி பனாவூ || 2906

முனிவரான வஸிஷ்டருடன் ராஜா தசரதர் ரதத்தில் ஏறிச்செல்லும்போது தேவ குருவான ப்ருஹஸ்பதியுடன் இந்த்ரன் இருப்பதுபோல் மிகுந்த சோபையுடன் காட்சி அளித்தார். வேத விதிப்படியும், குலத்திற்கு ஏற்றவாறும் எல்லாக் காரியங்களையும் செய்த பின்பு எல்லாரும் பலவகையாக அலங்கரித்துக்கொண்டு நிற்பதைக் கண்டு;

ஸுமிரி ராமு குர் ஆயஸு பாயீ |
சலே மஹீபதி ஸங்க பஜாயீ || 2907
ஹர்ஷே பிபுத பிலோகி பராதா |
பர்ஷஹிம் ஸுமன் ஸுமங்கல தாதா || 2908

ஸ்ரீ ராமச்சந்த்ர மூர்த்தியை மனத்தில் எண்ணிக் கொண்டு, குருவினுடைய ஆஜ்ஞையைச் சிரமேற் கொண்டு, பூமிநாயகனான தசரதர் சங்கம் எடுத்து முழங்கிக்கொண்டு புறப்பட்டார். இந்த அழகிய ஊர் வலத்தைக் கண்டு தேவர்கள் மனம் மகிழ்ந்தார்கள்; அழகாக மங்கலமூட்டும் நறுமண மலர்களை மாரி போல் பொழிந்தார்கள்.

பயவு கோலாஹல் ஹய கய காஜே |
ப்யோம பராத் பாஜ்னே பாஜே || 2909
ஸுர நர் நாரி ஸுமங்கல காயீம் |
ஸரஸ ராக பாஜ்ஹிம் ஸஹ்நாயீம் || 2910

எங்கும் ஒரே கோலாஹலம். குதிரைகளும், யானைகளும், சப்தமிட்டபடி இருந்தன. ஆகாயத்திலும், ஊர் வலத்திலும் பலவிதமான இசைகள், வாத்யங்கள் முழங்கத் தொடங்கின. தேவ கன்னிகைகளும், மனித ஸ்த்ரீகளும் அழகிய மங்கள கானம் பாடி மகிழ்ந்தார்கள்; இன்பமூட்டும் ராகத்தில் ஷெனாயியும் இசைக்கத் தொடங்கின.

கன்ட கன்டி துனி பர்னி ந ஜாஹீம் |
ஸர்வ கர்ஹிம் பாயிக் பஹ்ராயீம் || 2911
கர்ஹிம் பிதூஷக் கௌதுக் நாநா |
ஹாஸ் குஸல் கல கான் ஸுஜானா || 2912

பல்வேறு மணிகளின் பலவித ஒசைகளை வர்ணிக்கவே முடியாது. கால் நடையாகப் போகும் ஸேவகர்கள், சிலம்பாட்டக்காரர்கள், பலவிதமான தேகப் பயிற்சியாக வேடிக்கை வினோதங்களைச் செய்தவாறே சென்றார்கள்; வானவெளியில் குதித்த வண்ணம் சென்றார்கள். சிரிப்பு மூட்டுவதில் சதுரர்களான மனிதர்கள், அழகாகப் பாடுவதில் நிபுணர்களான விதூஷகர்கள், பற்பல விளையாட்டுகளைக் காட்டிய வாறே சென்றார்கள்.

துரக் நசாவஹிம் கும்வர்
பர் அகனி ம்ருதங்க நிஸான் |
நாகர் நட சிதவ்ஹிம் சகித்
டக்ஹிம் ந தால் பந்தான் || 2913

அழகிய ராஜ குமாரர்கள் ம்ருதங்கம், பறை இவைகளின் ஒலிப் ப்ரகாரம் குதிரைகளை ஆட்டுவித்தார்கள். அவைகள் தாளம் தவறாமல் ஆடுவதைக் கண்டு அங்கிருந்த நடனக்காரர்களும் ஆச்சர்யத்துடன் பார்த்துக் கொண்டேயிருந்தார்கள்.

பனயி ந பர்னத் பனீ பராதா |
ஹோஹிம் ஸகுன் ஸுந்தர் ஸுப தாதா || 2914
சாரா சாஷு பாம் திஸி லேயீ |
மனஹும் ஸகல மங்கல கஹி தேயீ || 2915

வர்ணிக்கவே முடியாத அளவுக்கு ஊர்வலம் அத்தனை அழகாக இருந்தது. ஸுந்தரமான சுபத்தை அளிக்கக்கூடிய நல்ல சகுனங்கள் ஏற்பட்டன. நீல வர்ணக் கழுத்துள்ள பக்ஷிகள் இடதுபுறமாக உணவை எடுத்துப் பறந்தன. பூரணமான மங்களங்கள் அறிவிப்பதுபோல் இருந்தன.

தாஹின் காக் ஸுகேத ஸுஹாவா |
நகுல தரஸு ஸப் காஹும் பாவா || 2916
ஸானுகூல் பஹ் த்ரிபித் பயாரீ |
ஸகட் ஸபால் ஆவ பர் நாரீ || 2917

வலது புறமாகக் காக்கைகள் வயற் புறங்களில் அதிக சோபையைக் கொடுக்கின்றன. கீரிப்பிள்ளை பின் தரிசனம் கண்டும் எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

மூன்று விதமாகக் குளிர்ந்த, மென்மையான, நறுமண முள்ள காற்று அனுகூலமான திசையில் இதமாக வீசி யது. சிறந்த, மங்கள கரமாக, ஸுமங்கலிப் பெண்கள், எதிரில் தலையில் நீர் நிறைந்த பானையுடனும், இடுப் பில் குழந்தையுடனும் வந்தார்கள்.

லோவா பிரி பிரி தர்ஸு தேகாவா |
ஸுரபீ ஸன்முக ஸிஸுஹி பிஆவா || 2918
ம்ருகமாலா பிரி தாஹினி ஆயீ |
மங்கல சன் ஜனு தீன்ஹி தேகாயீ || 2919

நரிகள் அடிக்கடி கண்களில் தென்பட்டன. (நரிகள் எதிரில் அகப்பட்டால் நல்ல சகுனம் என்பார்கள்) பசுக்கள் எதிரில் தன் குட்டிகளுக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தன. மான் கூட்டங்கள் இடமிருந்து சுற்றிக் கொண்டு வலமாக ஓடின. இவ்வாறு எல்லா மங்கள சகுனங்களும் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றுவது போல் சென்றன அந்த மான் கூட்டங்கள்.

சேமகரீ கஹ் சேம பிஸேஷீ |
ஸ்யாமா பாம் ஸுதரு பர் தேகீ || 2920
ஸன்முக் ஆயவு ததி அரு மீனா |
கர புஸ்தக் துயி பிப்ர ப்ரவீனா || 2921

வெள்ளை நிறத் தலையுடைய பருந்துகள் விசேஷ மான ரூபத்தில் மங்களம் பாடுவதுபோல் கூவுகின்றன. கருமாங்குயில் இடது பக்கம் மரங்களில் அழகாக வீற்றிருக்கிறது. தயிர் எடுத்து வருவோர், மீன் எடுத்து வருவோர், மேலும், கைகளில் புத்தகம் தாங்கிய வண் ணம் வேதம் ஓதும் இரு ப்ராம்மணர்கள் இந்த ஊர் வலத்தில் எதிரில் தென்பட்டார்கள்.

மங்கலமய கல்யானமய
அபிமத் பல் தாதார் |
ஜனு ஸப் ஸாசே ஹோன் ஹித்
பயே ஸகுன் ஏக் பார் || 2922

இப்படி எல்லாமே மங்கள கரமாகவும், கல்யாண மயமாகவும், மனம் விரும்பிய பலனைத் தரக்கூடிய தாகவும், உள்ள நல்ல சகுனங்கள் யாவும் உண்மையை எடுத்துக்காட்டுவனபோல் ஏககாலத்தில் தோன்றின.

மங்கல ஸகுன் ஸுகம் ஸப் தாகேம் |
ஸகுன் ப்ரஹ்ம ஸுந்தர் ஸுத ஜாகேம் || 2923
ராம ஸரிஸ பரு துல்ஹினி ஸீதா |
ஹமதீ தஸரது ஜனகு புனீதா || 2924

இயற்கையிலேயே இங்கு ஸகுண ப்ரம்மம் போன்ற அழகிய புத்ரர்கள் உள்ளனர். அவர்களுக்காக எல்லாமே மங்கள சகுனம் உண்டாவது சுலபமானதுதான். அதிலும் ஸ்ரீ ராமச்சந்த்ரனைப் போல் மணமகனும், ஸீதாதேவியைப் போல் மணமகளும், தசரதரைப் போல், ஜனகரைப்போல் ஸம்பந்திகளும் ஏற்பட்டிருக்கும் பொழுது நல்ல சகுனத்திற்கு எப்படிக் குறைவு வரும்?

ஸுனி அஸ் ப்யாஹு ஸகுன் ஸப் நாசே |
அப் கீன்ஹே பிரஞ்சி ஹம் ஸான்சே || 2925
ஏஹி பிதி கீன்ஹ பராத் பயானா |
ஹய கய காஜஹிம் ஹனே நிஸானா || 2926

இம்மாதிரி ஒரு விவாஹம் ஏற்பட்டதைக் கேட்டதும் எல்லா சகுனங்களும் நர்த்தனமாடின. இப்பொழுது ப்ரம்மனே நமக்கு உண்மையைச் செய்திருக்கிறார் என்று அவை கூறின. இம்மாதிரி ஊர்வலம் அமர்க்கள மாகக் கிளம்பியது. குதிரைகள், யானைகள், சப்த மிட்டுக்கொண்டே சென்றன. நகராவை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆவத் ஜானி பானுகுல கேதூ |
ஸரிதன்ஹி ஜனக் பந்தாயே ஸேதூ || 2927
பீச் பீச் பர் பாஸ் பனாயே |
ஸுரபுர் ஸரிஸ ஸம்பதா சாயே || 2928

ஸூர்ய வம்சத்தின் கொடிபோன்ற தசரதர் வருவதைக் கேள்விப்பட்ட ஜனகர் நதிகளின் மீது பாலம் கட்டுவித்தார். நடு நடுவில் யாத்ரீகர்கள் இளைப்பார அழகிய வீடுகளைக் கட்டச் செய்தார். அவை தெய்வ லோகம் போல் செல்வமும், சிறப்புமாகத் தென்பட்டன.

அஸன் ஸயன் பர் பஸன் ஸுஹாயே |
பாவஹி ஸப் நிஜ நிஜ மன் பாயே || 2929
நித நூதன் ஸுக லகி அனுகூலே |
ஸகல பராதின்ஹ மந்திர் பூலே || 2930

அங்கு ஊர்வலத்திற்கு வந்த யாத்ரீகர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் மனத்துக்கு உகந்தபடி எல்லா வித ஸௌகரியமும், அடைந்தார்கள். சிறந்த உணவுகளையும், ஆடைகளையும் இளைப்பாறப் படுக்கைகளையும் எல்லாமே பெற்று இன்புற்றார்கள். அவர்கள் மனத்திற்கு ஏற்பத்தினமும் புதுப்புது ஸுக நலன்களைப் பெற்றுத் தங்கள் தங்கள் வீடுகளையே மறந்து போனார்கள்.

ஆவத் ஜானி பராத் பர் ஸுனி
கஹ்ர் கஹே நிஸான் |
ஸஜி கஜ ரத் பதசர் துரக
லேன் சலே அக்வான் || 2931

மிகவும் பலமாக அடிக்கப்பட்ட முரசின் ஒலியைக் கேட்டு, ஊர்வலம் வந்துகொண்டிருப்பதை அறிந்து ஜனகபுரியின் மக்கள் பிள்ளைவீட்டாரை எதிர் கொண்டழைக்க; யானைகளையும், ரதங்களையும், பாதசாரிகளையும், குதிரைகளையும் சிங்காரித்து ஊர்வலத்தை நடத்திச் சென்றார்கள்.

கனக கலஸ பரி கோபர் தாரா |
பாஜன் லலித அனேக் ப்ரகாரா || 2932
பரே ஸுதாஸம ஸப் பக்வானே |
நாநா பாந்தி ந ஜாஹிம் பகானே || 2933

பால், பழ ரஸம், குளிர்ச்சியூட்டும் இன்னும் அனேக பானங்கள், தண்ணீர் இவைகளையும் தங்கக் குடங்களில் நிரப்பிக் கொண்டு பற்பல விதப் பண்டங்களாலே நிரப்பப்பட்ட பெரிய பெரிய தாம்பாளங்களையும், தட்டுகளையும், இன்னும் பல அழகிய பாத்ரங்களையும்;

பல் அனேக் பர் பஸ்து ஸுஹாயீம் |
ஹர்ஷி பேன்ட் ஹித பூப படாயீம் || 2934
பூஷன் பஸன் மஹாமனி நானா |
கக ம்ருக ஹய கய பஹு பிதி ஜானா || 2935

இன்னும் மிகவும் உத்தமமான பழங்களையும், மற்றும் அனேகம் அழகிய வஸ்துக்களையும், மேலும், ராஜா ஜனகர் மிக மகிழ்ச்சியுடன் காணிக்கையாக

அனுப்பி வைத்தார். நகைகள், துணிமணிகள், பலவித மான விலைமிக்க ரத்ன, வைடூரியங்களையும், பறவை கள், ம்ருகங்கள், குதிரைகள், யானைகள், மற்றும் பலதரப்பட்ட வாஹனங்கள் ஆகியவைகளையும்;

மங்கல ஸகுன் ஸுகந்த ஸுஹாயே |
பஹுத் பாந்தி மஹிபால் படாஏ || 2936
ததி சிவுரா உபஹார் அபாரா |
பரி பரி காம்வரி சலே கஹாரா || 2937

அப்படியே பலவகை வாஸனைத் த்ரவ்யங்களையும், மங்கலமான த்ரவ்யங்களையும், நல்ல நல்ல பதார்த்தங் களையும் ராஜா ஜனகர் அனுப்பிவைத்தார். தயிர், அவல், இன்னும் கணக்கில்லாத சாப்பிடும் பொருள் கள் எல்லாவற்றையும் காவடிகளில் நிரப்பி வைத்து வேலைக்காரர்கள் எடுத்துச் சென்றார்கள்.

அகவானன்ஹ ஜப் தீகி பராதா |
உர் ஆனந்து புலக் பர் காதா || 2938
தேகி பனாவ் ஸஹித அக்வானா |
முதித் பராதின்ஹ ஹனே நிஸானா || 2939

எதிர் கொண்டு அழைக்கப் போனவர்கள் கண் எதிரே ஊர்வலம் வரக் கண்டதும் அவர்களின் ஹிரு தயத்தில் ஆனந்தம் பொங்கியது; சரீரத்தில் மயிர்க் கூச்சம் உண்டாயிற்று. வரவேற்பாளர்களின் சிங்கார அலங்காரங்களைக் கண்டதும் ஊர்வலத்தில் வந்தவர் கள் மகிழ்ந்து முரசை முழக்கினார்கள்.

ஹர்ஷி பரஸ்பர் மிலன் ஹித்
கசுக் சலே பகமேல் |
ஜனு ஆனந்த ஸமுத்ர துயி
மிலத் பிஹாயி ஸுபேல் || 2940

இரு பக்கத்து மக்களும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவ ஆனந்தத்துடன் விரைந்தார்கள். ஆனந்தக் கடல் கள் இரண்டு; வரம்பு கடந்து ஒன்று சேர்ந்தாற்போல் தோன்றியது.

பர்ஷி ஸுமன் ஸுர ஸுந்தரி காவ்ஹிம் |
முதித தேவ துந்துபீம் பஜாவ்ஹிம் || 2941

பஸ்து ஸகல ராகீம் ந்ருப ஆகேம் |
பினய கீன்ஹி தின்ஹ அதி அனுராகேம் ||2942

தேவ ஸுந்தரிகள் புஷ்ப மாரி பொழிந்தார்கள்; பாட்டிசைத்தார்கள். தேவர்கள் ஆனந்தமடைந்து மத்தளம் கொட்டினார்கள். வரவேற்கச் சென்றவர்கள் அத்தனை பெரும் பொருள்களையும் தசரதருக்கு முன்னால் வைத்துவிட்டு அத்யந்த ப்ரேமையுடன் எதிரில் நின்று வணங்கினார்கள்.

ப்ரேம ஸமேத் ராயம் ஸபு லீன்ஹா |
பை பக்ஸீஸ் ஜாசகன்ஹி தீன்ஹா || 2943
கரி பூஜா மான்யதா படாயீ |
ஜன்வாஸே கஹும் சலே லவாயீ || 2944

ராஜா தசரதர், ஜனகர் அனுப்பிய சீர்வரிசைகளை எல்லாம் அன்புடன் ஸ்வீகாரம் செய்து கொண்டார். பிறகு இனாம் என்ற பெயரில் வந்தவர் எல்லோருக்கும் ஸன்மானம் வழங்கினார்; யாசகர்களுக்கும் தானம் வழங்கப்பட்டது. பிறகு பூஜை முதலிய மரியாதைகள் இவைகளை மிகவும் நன்றாகச் செய்தனர். எல்லாம் முடிந்தபின் வரவேற்பாளர்கள் வந்தவர்களை ஜானு வாஸத்திற்கு அழைத்துப் போனார்கள்.

பஸன் பிசித்ர பாம்வடே பர்ஹீம் |
தேகி தனது தன் மது பரிஹர்ஹீம் || 2945
அதி ஸுந்தர் தீன்ஹேவு ஜனவாஸா |
ஜஹம் ஸப் கஹும் ஸப் பாந்தி ஸுபாஸா ||2946

மிகவிலக்ஷணமான வஸ்த்ரங்களாலான மரியாதைக்குரிய நடைபாவாடைகள் விரிக்கப்பட்டிருந்தன. அவைகளைப் பார்த்துக் குபேரன்கூடத் தனது செல்வச் செருக்கை விட்டொழிப்பான், என்பது உறுதி. மிகவும் நேர்த்தியாக மாப்பிள்ளையழைப்பு ஊர்வலம் இருந்தது. அதில் ஸம்பந்திகள், ஸேனைகள், மக்கள் யாவரும் அதிகமாக நல்லவாய்ப்பைப் பெற்றார்கள்.

ஜானீ ஸியம் பராத் புர் ஆயீ |
கசு நிஜ மஹிமா ப்ரகடி ஜனாயீ || 2947
ஹ்ருதயம் ஸுமிரி ஸப் ஸித்தி போலாயீம் |
பூப பஹுநயீ கரன் படாயீம் || 2948

ஜானவாஸ ஊர்வலம் தமது ஊருக்குள் வந்தது தெரிந்துகொண்ட ஜானகி தேவி மனத்திற்குள் மிக்க மகிழ்ச்சி கொண்டாள். தனது பெருமை வாய்ந்த ஸித்திகளையெல்லாம் த்யானித்து, அழைத்து, ராஜா தசரதரைத் தகுந்தபடி உபசரிக்க அனுப்பினாள்.

ஸிதி ஸப் ஸிய ஆயஸு அக்னி
கயீம் ஜஹாம் ஜனவாஸ் |
லியேம் ஸம்பதா ஸகல ஸுக
ஸுர புர போக் பிலாஸ் || 2949

ஸீதா தேவியின் ஆஜ்ஞையைப் பெற்று எல்லா ஸித்திகளும், மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்திற்கு - ஜானவாஸ ஸ்தலத்திற்குப் போய்ச் சேர்ந்தது. சென்றதும் அவை ஸகல செல்வ ஸுகபோகங்களையும், இந்த்ரலோகத்திற்கு உரித்தான போக விலாஸங்களையும் கொடுத்துச் சென்றன.

நிஜ நிஜ பாஸ் பிலோகி பராதீ |
ஸுர ஸுக ஸகல ஸுலப ஸப் பாந்தீ || 2950
பிபவ் பேத் கசு கோவு ந ஜானா |
ஸகல ஜனக் கர் கர்ஹிம் பகானா || 2951

ஊர்வலத்தில் வந்தவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் தங்குமிடங்களைக் கண்டு மகிழ்ந்தார்கள். தேவர்களின் எல்லா ஸுகங்களையும் ஒருங்கே இங்கு எல்லா வகையிலும் சுலபமாக அடைந்தார்கள். இந்த ஐச்வரியத்தின் பெருமையைப் பற்றிச் சிறிதும் யாருக்கும் தெரிந்துகொள்ள முடியவில்லை. எல்லோரும் ஒரே மனத்துடன் ஜனகரை; அவரது பெருந்தன்மையைப் புகழ்ந்தார்கள்.

ஸிய மஹிமா ரகுநாயக் ஜானீ |
ஹர்ஷே ஹ்ருதயம் ஹேது பஹிசானீ || 2952
பிது ஆகமனு ஸுனத் தோவு பாயீ |
ஹ்ருதயம் ந அதி ஆனந்து அமாயீ || 2953

ஸ்ரீ இருக்குமிடம் செல்வம் நிறைந்து இருக்கும். அதுபோல ஸீதையிருக்கும் இடத்தினால்தான் இத்தனை பெருமையும், புகழும் நிறைந்திருக்கிறது. அவளுடைய

ப்ரேமையினால் மஹிமையினால்தான் எல்லாமே நடக்கிறது என்று மிகவும் ஆனந்தமடைந்தார் ஸ்ரீ ராமச் சந்த்ரன். தந்தை தசரதர் வந்திருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டவுடன் இரண்டு ஸஹோதரர்களும் மிக்க ஸந்தோஷம் அடைந்தார்கள்.

ஸகுசன்ஹ கஹி ந ஸக்த குரு பாஹீம் ।
பிது தர்ஸன் லாலசு மன் மாஹீம் ॥ 2954
பிஸ்வாமித்ர பினய படி தேகீ ।
உபஜா உர் ஸந்தோஷு பிஸேஷீ ॥ 2955

ஸந்தோஷத்தினால் ராம லக்ஷ்மணர்களுக்குப் பிதாவைப் பார்க்கப் போக வேண்டுமென்று ஆசையிருந்தது. ஆனால், விச்வாமித்ரரிடம் ஸங்கோசத்தினால் சொல்ல முடியவில்லை. இவர்களின் வணக்கத்தையும், தவிப்பையும் குரு விச்வாமித்ரர் கண்டு கொண்டார்; அவரது உள்ளம் மகிழ்வால் குளிர்ந்தது.

ஹர்ஷி பந்து தோவு ஹ்ருதயம் லகாயே ।
புலக் அங்க அம்பக் ஜல் சாயே ॥ 2956
சலே ஜஹாம் தஸரது ஜனவாஸே ।
மனஹும் ஸரோபர் தகேவு பிஆஸே ॥ 2957

ஸந்தோஷமடைந்த விச்வாமித்ரர் இரண்டு ஸஹோதரர்களையும் ஹிருதயத்துடன் கட்டி அணைத்துக் கொண்டார். அவர் உடல் புளகாங்கிதமடைந்தது. கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகியது. சிஷ்யர்களைக் கொண்டவனை நோக்கிக் குளம் செல்வதுபோல் தசரதர் இருக்கும் ஜானவாஸ ஊர்வலம் நோக்கி அவர்கள் சென்றார்கள்.

பூப் பிலோகே ஜப்ஹிம் முனி
ஆவத் ஸுதன்ஹ ஸமேத் ।
உடே ஹர்ஷி ஸுகஸிந்து மஹும்
சலே தாஹ் ஸீ லேத் ॥ 2958

அப்பொழுது தமது புத்ரர்களுடன் விச்வாமித்ரர் வருவதைப் பார்த்தார் தசரதர். ஸந்தோஷமடைந்து எழுந்து நின்றார். ஸுகஸாரத்தில் ஆழம் கண்டறிவது போல் சென்றார். (ஆழமான கடலையும் தான் கடக்கும் சக்தியும் ஆர்வமும் அப்பொழுது அவருக்கு வந்து விட்டது)

முனிஹி தண்டவத் கீன்ஹ மஹீஸா ।
பார் பார் பத ரஜ் தரி ஸீஸா ॥ 2959
கௌஸிக ராவு லீயே உர்லாயீ ।
கஹி அஸீஸ் பூசீ குஸலாயீ ॥ 2960

பூமிநாயகனான தசரதர் எதிரில் முனிவரைக் கண்டதும் அவரது சரணங்களில் வீழ்ந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். விச்வாமித்ரரும் அவரை வாரி எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டார்; ஆசீர் வாதம் செய்து குசலங்கள் விசாரித்தார்.

புனி தண்டவத் கரத் தோவு பாயீ ।
தேகி ந்ருபதி உர் ஸுகு ந ஸமாயீ ॥ 2961
ஸுத ஹியம் லாயி துஸஹ துக் மேடே ।
ம்ருதக் ஸரீர் ப்ரான ஜனு பேடே ॥ 2962

பிறகு இரு ஸஹோதரர்களும் ராஜா தசரதனின் பாதங்களில் வீழ்ந்து ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார் கள். அப்போது ராஜாவிற்கு ஆனந்தம் தாள முடிய வில்லை. தமது இரண்டு குமாரர்களையும் வாரி எடுத்து அணைத்துக் கொண்டார். புத்ரர்களை அணைத்துக் கொண்டு இதுவரை பிரிவினால் அனுபவித்த துக்கத் தையும் துடைத்துக் கொண்டார். அவர் நிலமை அப் பொழுது இறந்து போனவன் சரீரத்தில் மீண்டும் ப்ராணன் வந்ததுபோல் இருந்தது.

புனி பஸிஷ்ட பத ஸிர் தின்ஹ நாயே ।
ப்ரேம முதித முனிபர் உர் லாயே ॥ 2963
பிப்ர ப்ருந்த பந்தே துஹுஂ பாயீ ।
மன்பாவதீ அஸீஸேம் பாயீ ॥ 2964

பின்பு குமாரர்கள் குரு வஸிஷ்டரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். முனி ச்ரேஷ்டரான வஸிஷ்டர் குழந்தைகளை அன்புடன் மார்புடன் அணைத்துக் கொண் டார். ஸ்ரீ ராம-லக்ஷ்மணர் இருவரும் வந்திருந்த எல்லா ப்ராம்மணர்களுக்கும் வந்தனம் செலுத்தினார்கள். அவர் களும் மனம் குளிர்ந்து ஆசீர்வாதம் செய்தார்கள்.

பரத் ஸஹானுஜ கீன்ஹ ப்ரனாமா ।
லீயே உடாயி லாயி உர் ராமா ॥ 2965

ஹர்ஷே லகன் தேகி தோவு ப்ராதா |
மிலே ப்ரேம பரிபூரித காதா || 2966

பரதன் தன் சிறு ஸஹோதரன் சத்ருக்னனுடன் கூட ஸ்ரீராமனை வணங்கினார். ஸ்ரீராமனும் அவர்களை எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டார். லக்ஷ்மணனும் இரு ஸஹோதரர்களையும் கண்டு ஸந்தோஷமடைந்தார். அன்புநிறை சரீரத்தினால் இருவரையும் அணைத்துக் கொண்டார்.

புரஜன் பரிஜன் ஜாதிஜன்
ஜாசக் மந்த்ரீ மீத் |
மிலே ஜதாபிதி ஸப்ஹி ப்ரபு
பரம க்ருபால பினீத் || 2967

பிறகு பண்பும், கருணையும் கொண்ட அயோத்யா வாஸிகளுடனும், தமது குடும்பத்தாருடனும், ஜாதி ஜனங்களுடனும், யாசகர்கள், மந்த்ரிமார்கள், நண்பர்கள் எல்லோருடனும் அவரவர்களுக்குரிய முறைப்படி ஸந்தித்துப் பேசினார்; ஸுகம் விசாரித்தார்.

ராம்ஹி தேகி பரா த் ஜூடானீ |
ப்ரீதி கி ரீதி ந ஜாதி பகானீ || 2968
ந்ருப ஸமீப் ஸோஹஹிம் ஸுத் சாரீ |
ஜனு தன் தர்மாதிக் தனுதாரீ || 2969

ஸ்ரீ ராமச்சந்த்ரனைக் கண்டவுடன் ஊர்வலத்தினர் மனம் குளிர்ந்தனர். (ராமனுடைய பிரிவினால் எல்லோருடைய உள்ளத்திலும் அக்னி கொழுந்து விட்டெரிந்தது. அதனால் வருந்திய அவர்கள் இப்பொழுது சாந்தி பெற்றனர்.)

அந்நேரம் அவர்களுக்குண்டான ப்ரியத்தை வர்ணிக்க இயலாது. ராஜா தசரதரின் அருகில் நான்கு குமாரர்களும் மிக அழகாகக் காணப்பட்டனர். தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகிய நான்கு தர்மங்களும் உருவெடுத்து வந்ததைப்போல்;

ஸுதன்ஹ ஸமேத் தசரதஹி தேகீ |
முதித நகர் நர் நாரி பிஸேஷீ || 2970

ஸுமன் பரிஸி ஸுர ஹனஹிம் நிஸானா |
நாகநடீம் நாசஹிம் கரி கானா || 2971

புத்ரர்களுடன் கூட ராஜா தசரதரைக் கண்ட நகர வாழ் மக்கள் ப்ரஸன்ன மடைந்தார்கள். ஆகாயத்தி லிருந்து தேவதைகள் பூமாரி பொழிந்தார்கள்; மத்தளம் இசைத்தார்கள். அப்ஸரஸ்த்ரீகள் பாடிக்கொண்டே நர்தனம் செய்தார்கள்.

ஸதானந்த அரு பிப்ர ஸசிவ கன் |
மாகத ஸுத பிதுஷ பந்தீஜன் || 2972
ஸஹித பராத் ராவு ஸன்மானா |
ஆயஸு மாகி பிரே அக்வானா || 2973

எதிர் கொண்டு அழைக்க வந்திருக்கும் சதானந்தர், மற்றும் ப்ராம்மணர்கள், மந்த்ரிகள், மாகதர்கள், ஸுதர் கள், வித்வான்கள், மேலும், பறை சாற்றுவோர் யாவ ரும் ராஜா தசரதருக்கு மரியாதை உபசாரங்களைச் செய்தார்கள்; பின்பு ஆணை பெற்றுத் திரும்பிப் போனார்கள்.

ப்ரதம பராத் லகன் தேம் ஆயீ |
தாதேம் புர் ப்ரமோது அதிகாயீ || 2974
ப்ரஹ்மானந்து லோக் ஸப் லஹஹீம் |
பட்ஹும் திவஸ் நிஸி பிதி ஸன் கஹஹீம் || 2975

மாப்பிள்ளை வீட்டாரின் ஊர்வலக்காரர்கள் குறிப் பிட்ட தினத்திற்கு முதல் நாளே வந்து சேர்ந்துவிட் டார்கள். இதனால் ஜனகபுரியில் எங்கும் ஒரே கோலா ஹலமாக இருந்தது. எல்லோரும் ப்ரம்மானந்த ஸுகத் தோடு இருந்தார்கள். இந்தப் பகலும் இரவும் நீண்டு கொண்டே இருக்கவேண்டும் என்று அவர்கள் ப்ரம் மனிடம் ப்ரார்த்தனை செய்து கொண்டார்கள்.

ராமு ஸீய ஸோபா அவதி ஸுக்ருத்
அவதி தோவு ராஜ் |
ஜஹம் தஹம் புரஜன் கஹஹிம்
அஸ் மிலி நர் நாரி ஸமாஜ் || 2976

ஸ்ரீ ராமச்சந்த்ரனும் - ஸீதாதேவியும் அழகு எனப் படும் ஓர் எல்லையில்லாத பொக்கிஷம். இரண்டு அரசர்களும் அந்த அழகை அனுபவிக்கும் புண்யத்தின் ஓர் எல்லை போன்றவர்கள், என்று ஜனகபுரி மக்கள் ஆங்காங்கே கூடிக் கூடிக் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஜனக ஸுக்ருத மூர்தி பைதேஹீ |
தசரத ஸுக்ருத ராமு தரேம் தேஹீ || 2977
இன்ஹ ஸம காஹுூம் ந ஸிவ அவராதே |
காஹுூம் ந இன்ஹ ஸமான் பல் லாதே ||2978

ஜனகருக்குப் புண்யமாகவே உருவெடுத்து வந்தவள் ஜானகி. தசரதருக்குப் புண்ய சரீரம் தாங்கி வந்தவர் ஸ்ரீராமன். இந்த இரு அரசர்களைப் போல் புண்யம் செய்து சிவ ஆராதனை செய்தவர்கள் யாரும் இல்லை. இவர்களுக்கு ஸமானமாக யாருமே பலன் அடையவும் இல்லை.

இன்ஹ ஸம கோவு ந பயவு ஜக் மாஹீம் |
ஹை நஹிம் கத்ஹுூம் ஹோனேவு நாஹீம் ||2979
ஹம் ஸப் ஸகல ஸுக்ருத கை ராஸீ |
பயே ஜக் ஜன்மி ஜனகபுர் பாஸீ || 2980

இவர்களைப்போல ஜகத்தில் யாருமே உண்டானது இல்லை; எங்கும் இருக்கவும் இல்லை; உலகில் பிறந்து ஜனகபுரியில் வஸிப்பவர்களான நாம் எல்லோரும் ஸம்பூர்ணமான புண்யத்தின் குவியல்கள் போன்றவர் கள் என்று தாங்கள் வஸிக்கும் இடத்தைப் பெருமை படப் பாராட்டிக் கொண்டார்கள்.

ஜின்ஹ ஜானகீ ராம சபி தேகீ |
கோ ஸுக்ருதீ ஹம் ஸரிஸ் பிஸேஷீ || 2981
புனி தேகப் ரகுபீர் பிஆஹூ |
லேப் பலீ பிதி லோசன் லாஹூ || 2982

மேலும், ஜானகி-ஸ்ரீராமன் இவர்களது அழகொளி யைக் கண்டவர்கள் யாவரும் நம்மைப்போல் சிறந்த புண்யசாலிகள் யார் இருக்க முடியும்? இப்பொழுது ஸ்ரீரகுநாதனின் திருமண வைபவத்தைப் பார்க்கப் போகிறோம். அதனால் நம் கண்களுக்கு நல்ல பயன் உண்டாகும் என்றனர்.

கஹஹிம் பரஸ்பர் கோகில பயனீம் |
ஏஹி பிஆஹம் பட் லாபு ஸுநயனீம் || 2983
படேம் பாக் பிதி பாத் பனாயீ |
நயன் அதிதி ஹோயிஹஹிம் தோவு பாயீ || 2984

கோகிலம் போல் பேசும் அழகிய குரலுடைய ஸுந்தரி ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர்; அழகிய கண்கள் உடையவளே! கேள், இந்தத் திருமண வைபவத்தினால் பெரிய லாபம் உண்டாகப் போகிறது. மிகுந்த அதிர்ஷ்ட வசமாக ப்ரம்மன் இம்மாதிரி ஒரு ஸந்தர்ப்பத்தை நமக்கு அளித்துள்ளார். இந்த இரு ஸஹோதரர்களும் நமது கண்களுக்கு விருந்தினராகப் போகிறார்கள்.

பாரஹிம் பார் ஸ்னேஹ் பஸ்
ஜனக் போலாவுப் ஸீய |
லேன் ஆயிஹஹிம் பந்து தோவு
கோடி காம் கமனீய || 2985

ஜனகர் திரும்பத் திரும்ப அன்புடன் தனது மகள் ஸீதையை அழைப்பார். அப்போது கோடிக்கணக்கான் மன்மதனையும் பழிக்கும் தோற்றமுள்ள ஸ்ரீராம-லக்ஷ்மணர்களும் ஸீதைக்கு விடை கொடுக்க வருவார்கள்.

பிபித பாந்தி ஹோஇஹி பஹுனாயீ |
ப்ரிய ந காஹி அஸ ஸாஸுர் மாயீ || 2986
தப் தப் ராம லகன்ஹி நிஹாரீ |
ஹோயிஹஹி ஸப் புர் லோக் ஸுகாரீ || 2987

அப்பொழுது அவர்கள் இருவருக்கும் பலவிதமான ஆடை அலங்காரங்களைச் செய்வார்கள். ஹே ஸகியே! இம்மாதிரியான மாமனார் வீடு யாருக்குத்தான் ப்ரியமாக இருக்காது? நாம் கொடுத்துவைத்தவர்கள்தாம். அவ்வப்பொழுது நாம் எல்லோரும் இந்த நகரில் ஸ்ரீராமன் லக்ஷ்மணன் இருவரையும் பார்த்துப் பார்த்து மகிழ்வடைவோம் என்று பேசலாயினர்.

ஸகி ஜஸ் ராம் லகன் கர ஜோடா |
தைஸேயி பூப் ஸங்க துயி டோடா || 2988
ஸ்யாம கௌர் ஸப் அங்க் ஸுஹாயே |
தே ஸப் கஹஹிம் தேகி ஜே ஆயே || 2989

ஹே ஸகி! ஸ்ரீராம லக்ஷ்மணர் ஜோடி போன்ற இன்னுமொரு ஜோடி குமாரர்களும் தசரதருடன் வந்திருக்கிறார்களாம். அவர்களும் ஸ்ரீராம லக்ஷ்மணரைப் போல் ஒருவன் ஸ்யாம வர்ணனாகவும், ஒருவன் சிவந்த தாமரை நிறமாகவும் இருக்கிறார்களாம். அவர்களும் பார்க்க மிகவும் அழகாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து வந்தவர்கள் கூறுகிறார்கள் என்றாள் ஒரு பெண்.

கஹா ஏக் மைம் ஆஜ் நிஹாரே ।
ஜனு பிரஞ்சி நிஜ ஹாத் ஸம்வாரே ॥ 2990
பரது ராம்ஹீ கீ அனுஹாரீ ।
ஸஹஸா லகி ந ஸக்ஹிம் நர் நாரீ ॥ 2991

மற்றும் ஒருவர்; நான் இன்றுதான் அவர்களைப் பார்த்தேன். அவர்கள் அவ்வளவு அழகுடையவர்கள். ஒரு வேளை ப்ரம்மன் தானே ப்ரயாசை எடுத்து அவர்களைத் தன் கைகளினாலேயே செய்தாரோ என்று தோன்றுகிறது. பரதன் அதே ஸ்ரீராமனைப் போலவே இருக்கிறார். அதே ரூபம் அதே சாயல். ஸ்த்ரீ, புருஷர்கள், அகஸ்மாத்தாக நோக்கினால்; ஸ்ரீராமனையும், பரதனையும் வித்யாசம் தெரியாமல் மலைப்பார்கள் என்றார்.

லகனு ஸத்ரு ஸுதனு ஏக் ரூபா ।
நக் ஸிக தே ஸப் அங்க அனூபா ॥ 2992
மன் பாவஹிம் முக் பர்னி ந ஜாஹீம் ।
உபமா கஹும் த்ரிபுவன் கோவு நாஹீம் ॥2993

லக்ஷ்மணனும் சத்ருக்னனும் ஒரே ரூபம் கொண்டவர்கள். இருவருக்கும் நகம் முதல் தலை வரை எல்லா அவயங்களும் ஒரே மாதிரி இணையற்றதாக வாய்த்திருக்கிறது. வாயினால் அவர்களை வர்ணனையும் செய்ய முடியாதபடி மனத்திற்கு மிக நல்லவர்களாகப் படுகிறார்கள். அவர்களுக்கு உபமானமாகக் கூற மூன்று உலகிலும் ஒருவரும் இல்லை என்றாள் ஒரு பெண்.

உபமா ந கோவு கஹ் தாஸ்
துளஸீ கதஹும் கபி கோபித் கஹம் ।
பல் பினய பித்யா ஸீல ஸோபா
ஸிந்து இன்ஹ ஸே ஏஇ அஹம் ॥ 2994

புர நாரி ஸகல பஸாரி அஞ்சல்
பிதிஹி பசன் ஸுநாவ்ஹீம் |
ப்யாஹி அஹும் சாரிஉ பாயி
ஏஹிம் புர ஹம் ஸுமங்கல காவ்ஹீம் || 2995

துளஸீ தாஸரும், கவிகளும், நல்லறிஞர்களும் இந்த நான்கு குமாரர்களுக்கும் உபமானமாக எங்கும் ஒரு வரும் இல்லை என்கிறார்கள். அதாவது; பலம், வினயம், வித்தை, பண்பு, அழகுக் காந்திக் கடல் போன்ற இவர்களுக்கு நிகர் இவர்களேதான்! இந்த நான்கு ஸஹோதரர்களுக்கும் இங்கேயே மிதிலாபுரியிலேயே திருமணம் நடக்க வேண்டும், நாங்கள் பார்த்து ரஸிக்க வேண்டும், இன்பமாக மங்கள கீதம் பாடவேண்டும் என இப்படியாக ஜனகபுரியிலுள்ள எல்லா ஸ்த்ரீகளும் பகவான் ப்ரம்மனிடம் தங்களது புடவைத் தலைப்பை விரித்து மடிப்பிச்சை கேட்டு ஒரே மாதிரி ப்ரார்த்தனை செய்கிறார்கள்.

கஹஹிம் பரஸ்பர் நாரி பாரி
பிலோசன் புலக தன் |
ஸகி ஸபு கரப் புராரி புன்ய
பயோநிதி பூப் தோவு || 2996

கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக, புளகாங்கித மடைந்த சரீரத்துடன் ஸ்த்ரீகள் ஒருவருக்கொருவர், ஹே ஸகி! இரண்டு ராஜாக்களும் மஹா புண்ய ஸமுத்ரம் போன்றவர்கள். இவர்களுடைய மனோரதத்தைப் பகவான் த்ரிபுராரி பூர்ணமாக்குவார் என்று கூறினார்கள்.

ஏஹி பிதி ஸகல மநோரத கர்ஹீம் |
ஆனந்த உமகி உமகி உர் பர்ஹீம் || 2997
ஜே ந்ருப ஸீய ஸ்வயம்பர் ஆயே |
தேகி பந்து ஸப் தின்ஹ ஸுக பாயே || 2998

இவ்வாறு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள். அவர்களுடைய உள்ளத்தில் உற்சாக அலைகள் பொங்கி நிரம்பின. ஸீதையின் ஸ்வயம்வரத்திற்காக வந்த அரசர்கள் அனைவரும் கூட நான்கு ஸஹோதரர்களையும் கண்டு ஸுகித்தனர்.

கஹத் ராம் ஜஸு பிஸத் பிஸாலா |
நிஜ நிஜ பவன் கயே மஹிபாலா || 2999
கயே பீதி கசு தின் ஏஹி பாந்தீ |
ப்ரமுதித புரஜன் ஸகல பராதீ || 3000

ஸ்ரீராமச்சந்த்ரனுடைய நிர்மலமான கீர்த்தியைப் பாடிக் கொண்டே கூடியிருந்த ராஜாக்கள் அனைவரும் தங்கள் தங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தார்கள். இம் மாதிரியாகச் சில நாட்கள் கழிந்தன. ஜனகபுரி வாஸி களும், வந்திருக்கும் ஸம்பந்தி மக்களும் எல்லோருமே ஒன்று கூடிக் களிப்படைந்திருந்தார்கள்.

மங்கல மூல லக்ன தினு ஆவா |
ஹிம ரிது அகஹனு மாஸு ஸுஹாவா || 3001
க்ரஹ திதி நகது ஜோகு பர் பாரூ |
லகன் ஸோதி பிதி கீன்ஹ பிசாரூ || 3002

மங்களகரமான காரியங்களுக்கென முக்கிய லக்ன தினம் வந்தது. ஹேமந்தருது ஸுகமான மார்கழி மாதம், க்ரஹம், திதி, நக்ஷத்ரம், யோகம், வாரம் எல்லாம் சிறப்பாக அமைந்திருந்தன. லக்ன முஹூர்த் தத்தை எடுத்துக் கொண்ட ப்ரம்மன் சோதித்து ஆராய்ந்து கொண்டிருந்தார். (சுபயோக சுபதினத்தைக் கணிக்க ஏற்பாடுகள் நடந்தன.)

படை தீன்ஹி நாரத ஸன் ஸோயீ |
கீனீ ஜனக் கே கனகன்ஹ ஜோயீ || 3003
ஸுனீ ஸகல லோகன்ஹ யஹ் பாதா |
கஹஹிம் ஜோதிஷீ ஆஹிம் பிதாதா || 3004

ப்ரம்மன் தான் கணித்த முஹூர்த்தப் பத்ரிகையை நாரதரின் மூலமாக ஜனகருக்கு அனுப்பி வைத்தார். ஜனகருடைய அரண்மனை ஜோதிடர்களும் அந்த விதமாகவே கணித்திருந்தார்கள். இந்த நல்ல வார்த் தையைக் கேட்ட மக்கள் யாவரும்; இங்குள்ள ஜன கருடைய அரண்மனை ஜோதிடர்களும் ப்ரம்மனே என்று கூறத் தொடங்கினர்.

தேனு தூரி பேலா பிமல்
ஸகல ஸுமங்கல மூல் |
பிப்ரன்ஹ கஹேவு பிதேஹ ஸன்
ஜானி ஸகுன் அனுகூல் || 3005

நிர்மலமான எல்லாவிதத்திலும் சுபம் அளிக்கவல்ல பவித்ரமான கோதூளி நேரம் வந்தது; (அதாவது; விடியற்காலை. பசுக்கள் கூட்டமாக மேயச் செல்லும் போது நிலத்திலிருந்து தூசிகள் வானவெளியில் பறக்கும். அது மங்கலகரமான வேளையாகும்) இப்படி அனுகூலமான சுபநேரம் வந்ததும் நல்ல சகுனங்களும் ஒன்று சேர்ந்தன.

இதையறிந்த ப்ராஹ்மணர்கள் ஜனகரிடம் கூறினார்கள்.

உபரோஹிதஹி கஹேவு நர்நாஹா |
அப் பிலம்ப கர காரனு காஹா || 3006
ஸதானந்த தப் ஸசிவ போலாயே |
மங்கல ஸகல ஸாஜி ஸப் ல்யாயே || 3007

அப்போது ராஜா ஜனகர் புரோஹிதரான சதானந்தரைக் கூப்பிட்டு நேரம் ஏன் கடத்துகிறீர்கள். சீக்கிரம் முஹூர்த்தத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார். புரோஹிதர் சதானந்தரும் மந்த்ரிமார்களைக் கூப்பிட்டு அனுப்பினார். அவர்களும் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் மங்கள ஸாமக்ரியைகளையும் தயாராக எடுத்து வந்தனர்.

ஸங்க நிஸான் பனவ பஹு பாஜே |
மங்கல கலஸ் ஸகுன் ஸுப ஸாஜே || 3008
ஸுபக் ஸுஆஸினி காவ்ஹிம் கீதா |
கர்ஹிம் பேத் துனி பிப்ர புனீதா || 3009

சங்குகள், முரசு வாத்யங்கள், டோல்கள், மேலும், பற்பல தாளங்களும் வாத்யங்களும் இசைக்க ஆரம்பித்தன. மங்களக் கலசங்களும் சுபசகுனப் பொருள்களான பால்குடங்கள், தயிர்க் குடங்கள், அருகம்புற்கள் வைக்கப் பட்டிருந்தன. அழகிய ஸுமங்கலிப் பெண்கள் மங்கள கீதம் பாடினார்கள். தூயமறையோர்கள் வேத கோஷம் செய்தார்கள்.

லேன் சலே ஸாதர் ஏஹி பாந்தீ |
கயே ஜஹாம் ஜனவாஸ் பராதீ || 3010
கோஸலபதி கர் தேகி ஸமாஜூ |
அதி லகு லாக தின்ஹஹி ஸுரராஜூ || 3011

இவ்விதமாகக் கோஸலபதி ஜனகருடன் எல்லோரும் மிக மரியாதையுடன் ஊர்வலத்தினரை அழைத்துச் செல்ல அந்த ஊர்வலத்தினர் (ஜானவாஸத்தினர்) தங்கியிருந்த இடம் ஏகினார்கள். அந்தத் தசரதனின் அழகான ஸமூஹ வைபவத்தைக் கண்ட கோஸலாதி பதி ஜனகர் முதலானோர் இந்த்ரனைக்கூடத் துச்சமாக எண்ணினார்கள்.

பயவு ஸமவு அப் தாரிஅ பாவூ ।
யஹ் ஸுனி பரா நிஸானஹிம் காவூ ॥ 3012
குர்ஹி பூசி கரி குல் பிதி ராஜா ।
சலே ஸங்க முனி ஸாது ஸமாஜா ॥ 3013

அவர்கள் சென்று விநயத்துடன் ஸம்பந்தி தசரதர் முதலானோரைப் பார்த்து; ''நேரமாகிவிட்டது தயவு செய்து யாவரும் மணமண்டபம் வரவேண்டும்'' என்று திருமணத்திற்கு அழைத்தார்கள். இதைக் கேட்ட தசரதர் உள்ளம் குளிர்ந்து, குரு வஸிஷ்டரிடம் கலந்து ஆலோசித்து, ஆவன செய்து கொண்டு கிளம்பினார். உடனே மத்தளங்கள், ம்ருதங்கங்கள், பறைகள், தாளங்கள் ஒலித்தன. ஒரே மங்கள முழக்கச் சப்தத்துடன் ராஜா தசரதர் தன் குல வழக்கப்படி முனிவர்களையும், ஸாதுக்களையும், ஸமூஹத்தவர்களையும் அழைத்துச் சென்றார்.

பாக்ய பிபவ அவதேஸ் கர்
தேகி தேவ் ப்ரஹ்மாதி ।
லகே ஸராஹன் ஸஹஸ்
முக ஜானி ஜன்ம நிஜ பாதி ॥ 3014

அயோத்தி மன்னரான தசரதனின் ஸௌபாக்யத்தையும், வைபவத்தையும் கண்டு தமது ஜன்மமே வீண் என்று நினைத்து ப்ரம்மா முதலான தேவர்கள் ஆயிரம் முகங்களால் தசரதரைப் புகழ்ந்து பாராட்டலாயினர்.

ஸுரன்ஹ ஸுமங்கல அவஸரு ஜானா ।
பர்ஷஹிம் ஸுமன் பஜாயி நிஸானா ॥ 3015
ஸிவ ப்ரஹ்மாதிக் பிபுத பஹூதா ।
சடே பிமானன்ஹி நாநா ஜூதா ॥ 3016

தேவ கணங்கள் அழகிய 'மங்களகரமான' தக்க ஸமயம் பார்த்து, அறிந்து கெட்டி மத்தளம் கொட்டிப் பூமாரி பொழிந்தார்கள். சிவன், ப்ரம்மா முதலிய தேவ கணங்கள் கும்பல் கும்பலாகத் தங்கள் தங்கள் விமானங்களில் அமர்ந்து புறப்பட ஸித்தமானார்கள்.

ப்ரேம புலக தன் ஹ்ருதயம் உசாஹூ ।
சலே பிலோகன் ராம பிவாஹூ ॥ 3017
தேகி ஜனக்புரு ஸுர அனுராகே ।
நிஜ நிஜ லோக் ஸப்ஹிம் லகு லாகே ॥ 3018

எல்லோரும் ப்ரேமையினால் உந்தப்பட்டுப் புள காங்கித சரீரத்துடன், மனத்தில் உற்சாகம் பொங்க ஸ்ரீராம விவாஹம் பார்க்கக் கிளம்பினார்கள். ஜனக புரியைக் கண்டு தேவதைகள் மிக்க அன்பு கொண்டு மகிழ்ந்தார்கள். ஏனெனில்; இந்த ஜனகபுரியைப் பார்க் கும்போது இப்புரி அதிக மடங்கு சிறப்பாக விளங்கிய தால் எல்லோருக்கும் தங்கள் தங்கள் இருப்பிடம் துச்ச மாகப் பட்டது.

சிதவஹிம் சகித் பிசித்ர பிதானா ।
ரசனா ஸகல் அலௌகிக் நாநா ॥ 3019
நகர் நாரி நர ரூப் நிதானா ।
ஸுகர் ஸுதர்ம ஸுஸீல் ஸுஜ்ஞானா ॥ 3020

தேவர்கள் ஜனகபுரியில் உள்ள விசித்ரமய்மான மணி மண்டபத்தையும், மற்றும் பலவிதமான அஸாதரண மான செயல் அமைப்புகளையும் கண்டு ஸ்தம்பித்துப் பார்த்த வண்ணமிருந்தனர். நகரத்தின் ஸ்த்ரீ-ஆண் களும் எல்லோருமே அழகின் பொக்கிஷமாகவும், திறமைசாலிகளாகவும், நல்ல திடகாத்ரத்துடனும் மிக்க ஸௌகரியத்துடனும், சிறந்த தர்மாத்மாக்களாகவும், நற்பண்பு மிக்கவர்களாகவும் நல்ல அறிவுள்ளவர்களாக வும் இருந்தார்கள்.

தின்ஹஹி தேகி ஸப் ஸுர ஸுரநாரீம் ।
பயே நகத் ஜானு பிது உஜிஆரீம் ॥ 3021
பிதிஹி பயவு ஆசரஜு பிஸேஷீ ।
நிஜ கரனீ கசு சுதஹுஂ ந தேகீ ॥ 3022

அவர்களின் ரூப லாவண்யத்தைக் கண்ட எல்லா ஸுரநாயகர்களும், தேவாங்கனைகளும் வியப்படைந் தார்கள். முழு நிலவொளியில் நக்ஷத்ரங்கள் மங்குவன போல் இந்தத் தேவர்களின் ஸெந்தர்யம் மங்கிவிட்டது. தான் சிறப்புடன் செய்த ஒரு படைப்பையும் அங்குக் காணவே இல்லையே என்று எண்ணும்போது ப்ரம் மனுக்கோ அதிக ஆச்சர்யம் ஏற்பட்டது. (அதாவது; அங்குள்ளவர்கள் எல்லோருமே ப்ரம்ம ஸிருஷ்டியையும் விஞ்சி இயற்கையாகவே எழிலோடு விளங்கினார்கள்.)

ஸிவம் ஸமுஜாயே தேவ ஸப்
ஜனி ஆசரஜ் புலாஹு |
ஹ்ருதயம் பிசார்ஹு தீர தரி
ஸிய ரகுபீர் பிஆஹு || **3023**

அந்தஸமயம் சிவனார் எல்லாத் தேவர்களையும் அழைத்து; நீங்கள் வியப்பில் மூழ்கி மறந்திருக்காதீர் கள். நீங்கள் மனத்தில் தைர்யம் கொண்டு ஸஞ்சாரம் செய்யுங்கள்; இந்தத் திருமண வைபவத்தை நன்றாகப் பாருங்கள். மஹாமஹிமை பொருந்திய பகவானின் இயற்கை மாயா சக்திதான் இது. ஜகன்மாதாவான ஸீதாதேவிக்கும், அகில கோடி ப்ரம்மாண்ட நாயக னாக விளங்கும் ஸாக்ஷாத் பகவான் ஸ்ரீராமபிரானுக் கும் நடக்கும் விவாஹம் என்று எடுத்துக் கூறினார்.

ஜின்ஹ கர் நாமு லேத் ஜக மாஹீம் |
ஸகல அமங்கல மூல் நஸாஹீம் || **3024**
கரதல் ஹோஹிம் பதார்த சாரீ |
தேஇ ஸிய ராமு கஹேவு காமாரீ || **3025**

பரந்தாமனான அவருடைய நாமத்தை நினைத்த மாத்ரத்திலேயே ஸகல ஜகத்தினுடைய அமங்கலங்கள் யாவும் வேறோடு வெட்டிக் கொண்டு வீழ்கின்றன. நான்கு வகைப் பேறுகளான 1. அர்த்தம் 2. தர்மம் 3. காமம் 4. மோக்ஷம் ஆகியவை நமது கைப்பிடிக்கும் வந்து சேரும். உலகின் தாய் தந்தையரே இந்த ஸீதா-ராமன் என இவ்வாறாக; காமனின் பகைவனான சிவன் கூறினார்.

ஏஹி பிதி ஸம்பு ஸுரன்ஹ ஸமுஜாவா |
புனி ஆகேம் பர் பஸஹ் சலாவா || 3026
தேவன்ஹ தேகே தஸரது ஜாதா |
மஹாமோத் மன் புலகித் காதா || 3027

இதே மாதிரி சிவனார் மற்ற தேவர்களுக்கும் விளக்கம் கூறிவிட்டுத் தனது சிறப்புள்ள நந்தி தேவரை அழைத்து; அதிலமர்ந்து மேலே செல்லச் செய்தார். பிறகு தேவர் கள்; தசரதர் ஸந்தோஷங் கொண்டு, ஆனந்த ஸாகரத் தில் மூழ்கிப் புளகாங்கிதம் அடைந்திருப்பதையும், செல்வதையும் கண்டு ஆச்சர்யப்பட்டார்கள்.

ஸாது ஸமாஜ் ஸங்க மஹிதேவா |
ஜானு தனு தரேம் கர்ஹிம் ஸுக ஸேவா ||3028
ஸோஹத் ஸாத் ஸுபக் ஸுத சாரீ |
ஜனு அபபர்க ஸகல தனு தாரீ || 3029

தசரதருடன் அனேக ஸாதுக்களும், ப்ராம்மணர் களின் ஸமூஹமும் சோபையூட்டிக் கூடவந்தது. அப் பொழுது எல்லா ஸுகமும், ஸௌபாக்யமும் உருவம் எடுத்து வந்து அவருக்கு ஸேவை செய்கின்றதோ என்று எண்ணும்படி இருந்தது.

ஸம்பூர்ண மோக்ஷ ஸாதனங்களான

1. ஸாலோக்யம், 2. ஸாமீப்யம் 3. ஸாரூப்யம் 4. ஸாயுஜ்யம் யாவும் உருவெடுத்து வந்தவைபோல் அழகான நான்கு புத்ரர்களும் கூட வந்தார்கள்.

மரகத கனக் பரன் பர் ஜோரீ |
தேகி ஸுரன்ஹ பை ப்ரீதி ந தோரீ || 3030
புனி ராம்ஹி பிலோகி ஹியம் ஹர்ஷே |
ந்ருபஹி ஸராஹி ஸுமன் தின்ஹ பர்ஷே ||3031

மரகத மணியைப் போல் இரு குமாரர்களும், ஸ்வர்ண வர்ணமான இரு குமாரர்களும் ஆகிய இரு ஜோடிகளைக் கண்ட தேவர்களுக்குண்டான அன்புக் குக் குறைவே இல்லை, மேலும், அவர்கள் ஸ்ரீராமச் சந்த்ரனைப் பார்த்து உள்ளில் பரமானந்தமடைந்தார் கள். பின்னர் ராஜாவைப் புகழ்ந்து கொண்டே மேலி ருந்தவாறு புஷ்பமாரி பொழிந்தார்கள்.

ராம ரூபு நக ஸிக ஸுபக
பார்ஹிம் பார் நிஹாரி |
புலக காத் லோசன் ஜலு
உமா ஸமேத் புராரி || *3032*

ஸ்ரீராமனுடைய பரமானந்த ஸ்வரூபத்தை நகத்திலிருந்து சிரஸ் வரை கண்டு களித்தார். ஸ்ரீசிவனார் கூட பார்வதியும் இருந்தார்கள். ஸ்ரீராமன் அழகைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த திருபுராரியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வந்தது.

கேகி கண்ட துதி ஸ்யாமல அங்கா |
தடித் பிநிந்தக் பஸன் ஸுரங்கா || *3033*
ப்யாஹ் பிபூஷன் பிபித பனாயே |
மங்கள ஸப் ஸப் பாந்தி ஸுஹாயே || *3034*

மயிலினுடைய கழுத்தைப் போல் அழகான நீல வர்ண ச்யாமல சரீரம் கொண்ட ஸ்ரீராமன், மின்னலையும் தோற்கடிக்கும் காந்தியுள்ள மஞ்சள் பட்டாடையை அணிந்திருந்தார். விவாஹத்திற்கு வேண்டி மங்களகரமான பலவித ஆபரணங்களால் அவருடைய சரீரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஸரத் பிமல் பிது பதனு ஸுஹாவன் |
நயன் நவல் ராஜீவ் லஜாவன் || *3035*
லகல அலௌகிக் ஸுந்தர்தாயீ |
கஹி ந ஜாயி மனஹீம் மன் பாயீ || *3036*

அவருடைய அழகிய முகம் சரத் காலத்திய நிர்மல பூர்ணிமா சந்த்ரனையும், மனோஹரமான நேத்ரங்கள் புதிய கமல புஷ்பத்தையும் நாணும்படிச் செய்தது. அவரது அஸாதாரணமான அழகு மாயையானது அல்ல; திவ்ய சச்சிதானந்த மயமானது. அந்த அழகு நம் மனத்துள் மகிழ்வையும், ப்ரியத்தையும் ஊட்டி நின்றதைச் சொல்லி முடியாது.

பந்து மனோஹர் ஸோஹஹிம் ஸங்கா |
ஜாத் நசாவத் சபல துரங்கா || *3037*
ராஜ கும்வர் பர் பாஜி தேகாவ்ஹிம் |
பம்ஸ ப்ரஸம்ஸக் பிரித ஸுநாவ்ஹிம் || *3038*

தங்களது சஞ்சலமான தன்மையுள்ள குதிரைகளை ஆட்டுவித்துக் கொண்டே செல்லும் அந்த அழகிய ஸஹோதரர்களும் ப்ரமாதமாக விளங்கினர். மேலும், ராஜகுமாரர்கள் மிகச்சிறந்த குதிரைகளை நடைக்குத் தகுந்தபடி ஆடிச் செல்லும் தந்திரச் செயல்களைக் காட்டிக் கொண்டு போகிறார்கள். வம்சாவளி கூறும் மாகதர்கள், பாணர்கள் ஆகியோர் வம்சாவளி கூறிக் கொண்டே வருகிறார்கள்.

ஜேஹி து ரங்க பர் ராமு பிராஜே ।
கதி பிலோகி ககநாயகு லாஜே ॥ *3039*
கஹி ந ஜாயி ஸப் பாந்தி ஸுஹாவா ।
பாஜி பேஷு ஜனு காம பநாவா ॥ *3040*

எந்தக் குதிரைமீது ஸ்ரீராமன் அமர்ந்து விளங்கினாரோ; அந்தக் குதிரையின் வேகத்தை, போக்கைக் கண்டு கருடனும் நாணும். அதன் வர்ணனையைச் செய்ய முடியாது. காமதேவனே குதிரை ரூபத்தில் இத்தனை அழகுடன் தோன்றுகிறாரோ என்று எண்ணும்படி இருந்தது.

ஜனு பாஜி பேஷு பனாயி மனஸிஜு
ராம ஹித் அதி ஸோஹயீ ।
ஆப்னேம் பய பல் ரூப் குன கதி
ஸகல புவன் பிமோஹயீ ॥ *3041*
ஜக்மகத ஜீனு ஜராவ் ஜோதி
ஸுமோதி மனி மானிக் லகே ।
கிங்கினி லலாம் லகாமு லலித்
பிலோகி ஸுர நர் முனி டகே ॥ *3042*

ஸ்ரீராமச்சந்த்ரன் மணமகனாக இருப்பதைக் கண்டு காமதேவனே குதிரை ரூபம் எடுத்து வந்து விட்டான். ஸ்ரீராமரின் குதிரை மிக்க அழகாக இருந்தது. அது தனது வயதாலும், பலத்தாலும், ரூபத்தாலும், குணத்தாலும், தந்திரத்தாலும் எல்லோரையும் கவர்ந்தது. அழகிய முத்துக்களினாலும், மணிகளினாலும், மாணிக்கங்களினாலும் பதித்து அமைக்கப்பட்ட அதன் சேணம் தனது காந்தியினால் பளபளத்தது. சிறு சிறு அழகிய சலங்கைகள் கொண்ட லகானைக் கண்டு தேவர்கள், மனிதர்கள், முனிவர்களும் இது என்ன அற்புத சப்தம் என்று ஏமாந்து போனார்கள்.

ப்ரபு மனஸ்ஹிம் லயலீன் மனு
சலத் பாஜி சபி பாவ் |
பூஷித் உட்கன் தடித் கனு
ஜனு பர் பர்ஹி நசாவ் || **3043**

ப்ரபு ஸ்ரீராமனின் இச்சைப்படி மனம் லயித்துச் செல்லும் குதிரையின் அழகு, நக்ஷத்ரங்களாலும், மின்னலினாலும் அலங்கரிக்கப்பட்ட மேகம் அழகிய மயில்களை நடனமாடச் செய்கிறதோ என்பது போல் தோன்றியது. (அதாவது; நீலநிற மேகத்தினூடே நக்ஷத்ரம் மின்னல் மின்னுவது போல் ஸ்ரீராமன் நீலவர்ணம், அவர் அணிந்துள்ள அணிகளின் ஒளி - நக்ஷத்ரம் - மின்னல். அவர் செலுத்தும் குதிரையானது மேகத்தைக் கண்டு ஆடும் மயில் போல் ஸ்ரீராமனைக் கண்டு ஆடுகின்றது என்கிறார்.)

ஜேஹிம் பர் பாஜி ராமு அஸ்வாரா |
தேஹி ஸாரதவு ந பர்னை பாரா || **3044**
ஸங்கரு ராம் ரூப் அனுராகே |
நயன் பஞ்சதஸ் அதி ப்ரிய லாகே || **3045**

அத்தகைய ச்ரேஷ்டமான குதிரையில் ஸ்ரீராமச் சந்த்ரன் அமர்ந்து ஸவாரி செய்தார். ஸரஸ்வதி தேவி கூட அதை வர்ணனை செய்ய முடியாது.

பகவான் சங்கரன் ஸ்ரீராமனின் அழகில் இத்தனை ஆத்மார்த்தமாக ஈடுபட்டு அனுபவிக்கிறார். அவருக்குத் தம்து பதினைந்து கண்கள் இப்போது அன்பைச் சொரிந்தன.

ஹரி ஹித ஸஹித ராமு ஜப் ஜோஹே |
ரமா ஸமேத் ரமாபதி மோஹே || **3046**
நிரகி ராம் சபி பிதி ஹர்ஷானே |
ஆடயி நயன் ஜானி பசிதானே || **3047**

பகவான் ஸ்ரீமஹாவிஷ்ணு ப்ரேமையுடன் இந்த ரமணீயரான ராமனை கண்டதும் லக்ஷ்மீபதியான அவர் லக்ஷ்மியுடன் மோஹமடைந்தார். தவிர ப்ரம்மனும் ஸ்ரீராமனின் சோபையைக் கண்டு மிகவும் ஆனந்தப்பட்டார். தமக்கு இந்த எட்டு கண்கள்தானே! ராமன் அழகைக் காண இவை போதாதே என்று எண்ணி வருந்தினார்.

ஸுர ஸேனப் உர் பஹுத் உசாஹூ |
பிதி தே டேவட் லோசன் லாஹூ || 3048
ராமஹி சிதவ ஸுரேஸ ஸுஜானா |
கௌதம் ச்ராபு பரம ஹித மானா || 3049

தேவதைகளின் ஸ்வாமி ஸேனாதிபதி கார்த்திகேயனின் ஹிருதயத்திலும் மிகவும் உத்ஸாகம் ஏற்பட்டது. ஏனெனில்; ப்ரம்மனை விட இவருக்கு ஒன்றரை மடங்கு அதிகம். அதாவது; பன்னிரண்டு நேத்ரங்களால் ஸ்ரீராம தர்சனத்தைக் கண்டு நான் லாபமடைவேன் என்று பெருமையடைந்தார். இந்த்ரன் ஸ்ரீராமச்சந்த்ரனைத் தனது ஆயிரங்கண்களால் பார்க்கிறான். முனிவரான கௌதமரின் சாபமும் இதனால் தனக்கு ஹிதமாயிற்று என எண்ணினான்.

தேவ ஸகல ஸுரபதிஹி ஸிஹாஹீம் |
ஆஜு புரந்தர ஸம கோவு நாஹீம் || 3050
முதித் தேவகன் ராம்ஹி தேகீ |
ந்ருப ஸமாஜ் துஹும் ஹர்ஷு பிஸேஷீ ||3051

எல்லாத் தேவதைகளும் தேவராஜனான இந்த்ரனைக் கண்டு பொறாமை கொண்டார்கள். மேலும், இன்று இந்த்ரனைப் போல் பாக்யவான்கள் யாருமே இல்லை என்றும் கூறினார்கள். ஸ்ரீராமனின் பெருமையையும் வைபவத்தையும் கண்ட தேவர்கள் மிகவும் ஆனந்தமடைந்தார்கள். இரண்டு ராஜ ஸமூஹங்களும் ஸந்தோஷத்தில் மூழ்கிக் காணப்பட்டன.

அதி ஹர்ஷு ராஜ ஸமாஜ் துஹு
திஸி துந்துபீம் பாஜ்ஹிம் கனீ |
பர்ஷஹிம் ஸுமன் ஸுர ஹர்ஷி கஹி
ஜய ஜயதி ஜய ரகுகுலமனீ || 3052
ஏஹி பாந்தி ஜானி பராத்
ஆவத் பாஜ்நே பஹு பாஜ்ஹீம் |
ரானீ ஸுஆஸினி போலி பரிசனி
ஹேது மங்கல ஸாஜ்ஹீம் || 3053

இருபுறத்து ராஜ ஸமூஹங்களிலும் ஒரே கோலாஹலம்; எங்கும் ஆனந்தம். பெரும் சப்தத்துடன் முரசை முழக்குகிறார்கள். தேவர்கள் ஸந்தோஷமடைந்து

ரகுகுலமணி ஸ்ரீராமனுக்கு ஜயமுண்டாகட்டும்! ஜயமுண்டாகட்டும்! ஜயமுண்டாகட்டும்! என்று கூறிப் பூ மாரி பொழிந்தார்கள். இவ்விதம் ஊர்வலம் அருகில் வருவதை அறிந்து பலவகையான மங்களகரமான வாத்யங்கள் முழங்கத் தொடங்கின. ராணி ஸுமங்கலி ஸ்த்ரீகளைக் கூப்பிட்டுப் பலவிதமான ஆரத்திகளை எடுக்கவும், த்ருஷ்டி சுற்றிப் போடவும், பலவித வாஸனைத் த்ரவ்யங்களில் ஆரத்திகளைத் தயார் செய்யும்படியும் கூறினார்கள்.

ஸஜி ஆரதீ அனேக் பிதி
மங்கல ஸகல ஸம்வாரி |
சலீம் முதித பரிசனி கரன்
கஜகாமினி பர் நாரி || 3054

அனேக விதமான சுபமங்கள த்ரவ்யங்களைக் கொண்டும், பலவித ஆரத்திகளைத் தயார் செய்து கொண்டும், மத்தகஜம் போன்ற நடையழகுள்ள உத்தம ஸ்த்ரீகள் அனேகம் பேர்கள் ஆரத்தி, த்ருஷ்டி சுற்றக் கிளம்பினார்கள்.

பிது பதனீம் ஸப் ஸப் ம்ருகலோசனி |
ஸப் நிஜ தன சபி ரதி மது மோசனி || 3055
பஹிரேம் பரன் பரன் பர் சீரா |
ஸகல பிபூஷன் ஸஜேம் ஸரீரா || 3056

அதாவது; சந்த்ரனைப் போன்ற முகமுடைய பெண்களும், மான்விழிகள் போல் விழிகள் உள்ள பெண்களும், தங்கள் சரீர அழகினால் ரதியின் கர்வத்தைப் போக்கவல்லவர்களாக இருந்தார்கள். ஸுந்தரமான வண்ண வண்ண அழகிய சீலைகளை அணிந்திருந்தார்கள். அவர்கள் சரீரத்தில் பலவித ஸுந்தர ஆபரணங்களை அணிந்திருந்தார்கள்.

ஸகல ஸுமங்கல அங்க பநாயேம் ||
கர்ஹி கான் கலகண்டி லஜாயேம் || 3057
கங்கன கிங்கினி நூபுர் பாஜ்ஹிம் |
சாலி பிலோகி காம் கஜ லாஜ்ஹிம் || 3058

தங்களுடைய அவயங்களைப் பலவிதமான மங்களப் பொருள்களால் அலங்கரித்துக் கொண்டிருக்கிற அந்த ஸ்த்ரீகள் குயில்களும் நாணும்படியான அழகிய, இனிய குரலில் மங்கள கீதம் பாடிக் கொண்டிருக்கிறார்கள். கைவளைகளும், ஒட்டியாணங்களும், கால் சலங்கைகளும் ஒலிக்க வரும் ஸ்த்ரீகளின் நடையைக் கண்டு காமதேவனின் யானையும் நாணியது.

பாஞ்ஹிம் பாஞ்னே பிபிதி ப்ரகாரா |
நப அரு நகர் ஸுமங்கல சாரா || 3059
ஸசீ ஸாரதா ரமா பவானீ |
ஜே ஸுரதிய ஸுசி ஸஹஜ் ஸயானீ || 3060

எல்லா இடங்களிலும் மனோஹரமான வாத்யங்கள் இசைத்துக் கொண்டே இருக்கின்றன. ஆகாசம், பூமி எங்கும் மங்கல கார்யங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. அங்கு இந்த்ராணீ, ஸரஸ்வதி, லக்ஷ்மீ, பார்வதி ஆகியோரும் மற்றும் அனேக தூய அழகிய தேவாங்கனைகள் யாவருமே வந்திருந்தார்கள்.

கபட நாரி பர் பேஷ் பனாயீ |
மிலீம் ஸகல ரனிவாஸஹிம் ஜாயீ || 3061
கர்ஹிம் கான் கல் மங்கல பானீம் |
ஹர்ஷ பிபஸ் ஸப் காஹும் ந ஜானீம் || 3062

அந்தத் தேவ ஸ்த்ரீகளும், தேவ கன்னிகளும் மறைமுகமாக, வஞ்சகமாக ஸாதாரண மானுடஸ்த்ரீகள் போல் வேடம் தாங்கி அந்தப்புரத்துக்குள் வந்து ராணிகளுடன் சேர்ந்து இனிய குரலாலே மங்கலப் பாட்டுப் பாடி ஆடலாயினர். அங்குள்ளோர் மகிழ்வில் திளைத்திருந்ததால்; அவர்களை யாருமே தேவ கன்னிகள் என்று அறியவில்லை.

கோ ஜான் கேஹி ஆனந்த பஸ்
ஸப் ப்ரஹ்மு பர பரிசன் சலீ |
கல் கான் மதுர நிஸான் பர்ஷஹி
ஸுமன் ஸுர ஸோபா பலீ || 3063
ஆனந்த கந்து பிலோகி தூல்ஹு
ஸகல ஹியம் ஹர்ஷித் பயீ |
அம்போஜ் அம்பக் அம்பு உமகி
ஸுஅங்க புலகாவலி சயீ || 3064

யார் யாரை அறிய முடியும்? எல்லாருமே ஆனந்த வசமாகி மணமகனாக இருக்கும் பரப்ரம்மத்திற்கு ஆரத்தி எடுக்கச் சென்றார்கள். மனோஹரமான பாட்டுக்கள் பாடப்படுகின்றன; மதுர மிருதங்க முரசத் வனிகள் ஒலிக்கின்றன; தேவதைகளோ பூமாரி பொழி கின்றார்கள். மிகவும் அழகான, காணக் கிடைக்காத சோபை மிளிர்ந்தது.

இதில் ஆனந்தகந்தனான மணமகன் ஸ்ரீராமனைக் கண்டு எல்லா ஸ்த்ரீகளும் உள்ளூர மகிழ்ந்தார்கள். அவர்களது கமலம் போன்ற கண்களில் ப்ரேமை நிறைந்த ஆனந்தக் கண்ணீர் பொங்கிப் பெருகியது. அவர்களின் ஸுந்தரமான சரீரத்தில் புளகாங்கிதம் உண்டாயிற்று.

ஜோ ஸுகு பா ஸிய மாது மன்
தேகி ராம் பர் பேஷு |
ஸோ ந ஸக்ஹிம் கஹி கல்ப
ஸத ஸஹஸ் ஸாரதா ஸேஷு || 3065

ஸ்ரீராமச்சந்த்ரனின் மணமகன் வேஷத்தைக் கண்ட ஸீதையின் தாயார் ஸுநயனாவின் மனத்தில் எத்தனை ஆனந்தம் உண்டானது என்பதை ஆயிரம் ஸரஸ்வதி யினாலும், ஆயிரம் சேஷனாலும் நூறு கல்ப வருடம் வரை கூடக் கூறமுடியாததாக இருந்தது. (இல்லையேல், லக்ஷ்க்கணக்கான ஸரஸ்வதியும், சேஷனும், லக்ஷக்கணக் கான கல்ப வருடத்திலும் கூடக் கூற முடியாது.)

நயன நீரு ஹடி மங்கல் ஜானீ |
பரிசனி கர்ஹிம் முதித் மன் ரானீ || 3066
பேத் பிஹித அரு குல ஆசாரூ |
கீன்ஹ பலீ பிதி ஸப் ப்யவஹாரூ || 3067

இந்த மங்களமான தினத்தில் மங்கள வேளையை எண்ணிக் கண்ணீர் விடக்கூடாது என்று கண்களில் பெருகும் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட ராணி மகிழ்வுள்ள மனத்தோடு ஆரத்தி எடுத்துக் கொண்டிருக் கிறார். அந்த ஸீதையின் தாயார் வேதங்களில் கூறியுள்ள படியும், தங்கள் குலத்தின் முறைப்படியும் ஸந்தோஷத் துடன் எல்லாவிதச் சுபகாரியங்களையும் செய்தார்.

பஞ்ச ஸப்த துனி மங்கல கானா |
பட் பாம்வடே பர்ஹிம் பிதி நானா || 3068
கரி ஆரதீ அரகு தின்ஹ தீன்ஹா |
ராம கமனு மண்டப் தப் கீன்ஹா || 3069

1. கம்பிவாத்யம் 2. தாளவாத்யம் 3. ஜாலரா 4. பறை 5. தாரை (கொம்பு வாத்யம்) என இவ்வாறு ஐந்து வித சப்த வாத்யங்களும், 1.வேதத்வனி 2.வந்தித் வனித் (துதி பாடுவோர் ஒலி) 3.ஜயத்வனி 4.சங்கத் வனி 5.ஹுலுத்வனி ஆகிய ஐந்து வகை ஒலிகளும், மேலும்; மங்கள கீதமும் நடந்து கொண்டிருந்தன. பல வகையினாலான நடைபாவாடைகள் விரிக்கப்பட்டன. ராணிதேவி ஆரத்தி எடுத்து அர்க்யம் கொடுத்தாள். அப்பொழுது ஸ்ரீராமன் மண மண்டபத்திற்குச் செல்ல லானார்.

தஸரது ஸஹித் ஸமாஜ் பிராஜே |
பிபவ பிலோகி லோகபதி லாஜே || 3070
ஸமயம் ஸமயம் ஸுர பர்ஷஹிம் பூலா |
ஸாந்தி பட்ஹிம் மஹிஸுர் அனுகூலா || 3071

தசரதர் தனது ஸமூஹக் கூட்டாளிகளுடன் மண்ட பத்தில் அவர்க்குரிய ஆஸனத்தில் அமர்ந்து விளங் கினார். அவருடைய சிறந்த வைபவத்தைக் கண்டு உலகைக் காப்பவனே நாணங் கொண்டார். அந்தந்த நேரத்தில் தேவதைகள் பூக்களை மாரியாகப் பொழிந் தார்கள். பூமியின் தேவர்கள் எனப்படும் மறையவர் களும் காலநேரத்திற்குத் தகுந்தமாதிரி சாந்தி பாடம் படித்தார்கள்; வேதம் ஓதினார்கள்.

நப் அரு நகர் கோலாஹல் ஹோயீ |
ஆபனி பர் கசு ஸுனயி ந கோயீ || 3072
ஏஹி பிதி ராமு மண்டப்ஹிம் ஆயே |
அரகு தேயி ஆஸன் பைடாயே || 3073

ஆகாயத்திலும், நகரங்களிலும் ஒரே கோலாஹல சப்தம் எழுந்தது. ஒருவரும் ஒருவர் பேச்சைக் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இல்லை. அத்தனை

மக்கள் மெய்ம்மறந்து இருந்தார்கள். அதே ஸமயம் ஸ்ரீராமச்சந்த்ரன் மண்டபத்திற்கு வந்தார். அவருக்கு அர்க்யம் கொடுத்தபின், அவரை மண்டபத்தில் உள்ள ஆஸனத்தில் உட்கார வைத்தார்கள்.

பைடாரி ஆஸன் ஆரதீ கரி
நிரகி பரு ஸுகு பாவ்ஹீம் |
மனி பஸன் பூஷன் பூரி வார்ஹிம்
நாரி மங்கல காவ்ஹீம் || 3074
ப்ரஹ்மாதி ஸுரபர் பிப்ர பேஷ்
பனாயி கௌதுக் தேக்ஹீம் |
அவலோகி ரகுகுல கமல் ரபி
சபி ஸுபல் ஜீவன் லேக்ஹீம் || 3075

ஆஸனத்தின் மீது ஸ்ரீராமனை உட்காரவைத்து ஸ்த்ரீகள் ஆரத்தி எடுத்து கொண்டே மணமகளைப் பார்த்துப் பரம ஸுகத்தையடைந்தார்கள். அவர்கள் குவியல் குவியலாக மணிகளையும், ஆடைகளையும், நகைகளையும் அர்ப்பணித்து இசைபாடுகிறார்கள். ப்ரம்மனும், மற்ற தேவர்களும் ஸாதாரண ப்ராம் மணரைப் போல் வேஷம் பூண்டு ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்கள் ரகுகுல மாகிற கமலத்தின் மலரை அழகாக மலரச் செய்ய வல்ல ஸூர்யனான ஸ்ரீராமபிரானுடைய காந்தியைக் கண்டு தங்கள் வாழ்நாள் முழுவதும் இவர் சரணங்களி லேயே அர்ப்பணம் என்று எண்ணி மகிழ்ந்தார்கள்.

நாவூ பாரீ பாட் நட் ராம
நிசாவரி பாயி |
முதித அஸீஸஹி நாயி ஸிர் ஹர்ஷு
ந ஹ்ருதயம் ஸமாயி || 3076

நாவிதர், இலை தைப்பவர், துதிபாடகர், நடிகர் யாவரும், ஸ்ரீராமரிடம் காணிக்கை பெற்றுக் கொண்டு, மகிழ்ந்து, தலைவணங்கி, ஆசீர்வாதங்களை அளித்தார் கள். அதாவது; நல்வாழ்த்துக் கூறினார்கள். அவர்கள் ஹிருதயத்தில் உள்ள ஆனந்தத்தைக் கூறமுடியாது.

மிலே ஜனகு தஸரது அதி ப்ரீதீம் |
கரி பைதிக் லௌகிக ஸப் ரீதீம் || 3077

மிலத் மஹா தோவு ராஜ் பிராஜே |
உபமா கோஜி கோஜி கபிலாஜே || 3078

வைதிகமான, லௌகிகமான அனேக முறைகளை யும் சரிவரச் செய்து முடித்துக் கொண்டு ஜனகரும், தசரதரும் பெரும் ப்ரேமையுடன் ஸந்தித்தார்கள். இரண்டு மஹாராஜாக்களும் ஒன்றாகச் சேர்ந்தது மிக அழகாக இருந்தது. இதற்குக் கவிஞர்கள் உபமானம் சொல்ல வேண்டி தேடிப் பார்த்தும் கிடைக்காது நாணினர்.

லஹீ ந கதஹுூம் ஹாரி ஹியம் மானீ |
இன்ஹ ஸம ஏஇ உபமா உர் ஆனீ || 3079
ஸாமத் தேகி தேவ அனுராகே |
ஸுமன் பர்ஷி ஜஸு காவன் லாகே || 3080

எப்பொழுது எங்குமே உவமானம் கிடைக்கவில் லையோ; அப்போது கவி தமது தோல்வியை ஒப்புக் கொண்டு அவர் "இவர்களுக்கு நிகர் இவர்களே" என்று இந்த உவமையைச் சொல்ல முடிவு செய்தார். ஸம்பந்திகளின் ஸந்திப்பு, இருவருக்கும் ஏற்பட்ட ஸம்பந்தம் கண்டு, நட்பையும் கண்டு ப்ரஸன்னமடைந்து தேவதைகளும் அவர்களது புகழைப் பாடியவண்ணம் புஷ்பமாரி பொழிந்தார்கள்.

ஜகு பிரஞ்சி உபஜாவா ஜப் தேம் |
தேகே ஸுனே ப்யாஹ் பஹு தப் தேம் ||3081
ஸகல் பாந்தி ஸம ஸாஜு ஸமாஜூ |
ஸம ஸமதீ தேகே ஹம் ஆஜூ || 3082

மேலும், அவர்கள்; ப்ரம்மா உலகை ஸ்ருஷ்டி செய்ததிலிருந்து இதுவரை நாங்கள் எத்தனையோ விவாஹங்களைப் பார்த்திருக்கிறோம்; கேட்டிருக் கிறோம். ஆனால்; எல்லா வகையிலும் ஸமமான பொருள்களும், ஸமூஹமும் பரிபூர்ணமாக ஒரே மாதி ரியுள்ள ஸம்பந்திகளை இதுவரை நாம் கண்டதே யில்லை. இன்றுதான் கண்டோம் என்கிறார்கள்.

தேவ கிரா ஸுனி ஸுந்தர் ஸாஞ்சீ |
ப்ரீதி அலௌகிக துஹு திஸி மாசீ || 3083

தேத் பாம்வடே அரகு ஸுஹாயே |
ஸாதர் ஜனகு மண்டப்ஹிம் ல்யாயே || 3084

தேவதைகளின் இம்மாதிரி உண்மையான வர்ணனைகளையும், பேச்சுக்களையும் கேட்டு இரண்டு பக்கங்களிலும் பரஸ்பரம் அஸாதாரணமான அன்பு பெருகியது. அழகிய நடைபாவாடை விரித்து, அர்க்யமும் கொடுத்து ஜனகர் தசரதரை மண்டபத்திற்கு மரியாதையுடன் அழைத்து வந்தார்.

மண்டபு பிலோகி பிசித்ர ரசனாம்
ருசிரதாம் முனி மன் ஹரே |
நிஜ பானி ஜனக் ஸுஜான் ஸப்
கஹும் ஆனி ஸிங்காஸன் தரே || 3085
குல இஷ்ட ஸரிஸ பஸிஷ்ட பூஜே
பினய கரி ஆஸிஷ லஹீ |
கௌஸிகஹி பூஜத் பரம ப்ரீதி
கி ரீதி தெள ந பரை கஹீ || 3086

மண்டபத்தின் அமைப்பையும், விசித்ரச் செயலையும், அழகையும் கண்டு முனிவர்கள் கூட மோஹமடைந்தார்கள். எல்லாமறிந்த ஜனகர் தானே போய்ப் போய்த் தமது கைகளினாலேயே எல்லோருக்கும் ஸிம்மாஸனங்களைக் கொண்டு வந்து போட்டு அமரச் செய்தார். அவர் தம் குடும்பத்தின், குலத்தின் இஷ்ட தேவதை போல் இருக்கும் குரு வஸிஷ்டருக்குப் பூஜை செய்தார்; வினயத்துடன் அவரிடமிருந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். விச்வாமித்ரரையும் பூஜித்து வணங்கிய நிலையைச் சொல்லி முடியாது. ஏனெனில்; அம்முனிவர் தான் இந்தக் காரியம் நிறைவேறக் காரணமாக இருந்தார்.

பாமதேவ் ஆதிக் ரிஷய
பூஜே முதித் மஹீஸ் |
தியே திவ்ய ஆஸன் ஸப்ஹி
ஸப் ஸன் லஹீ அஸீஸ் || 3087

ராஜா ஜனகர்; வாமதேவர் போன்ற மற்றுமுள்ள முனிவர்களையும் மகிழ்வுடன் பூஜித்தார். எல்லோருக்கும் திவ்யமான ஆஸனங்களைக் கொடுத்து எல்லாரிடமிருந்தும் ஆசீர்வாதம் பெற்றார்.

பஹுரி கீன்ஹி கோஸலபதி பூஜா ।
ஜானி ஈஸ் ஸம பாவு ந தூஜா ॥ 3088
கீன்ஹி ஜோரி கர் பினய படாயீ ।
கஹி நிஜ பாக்ய பிபவ பஹுதாயீ ॥ 3089

பின்பு ஜனகர் கோஸலாதிபதியான ராஜா தசரதரை மஹாதேவன் போல் நினைத்து மரியாதையுடன் பூஜை செய்தார். பின்னர் அவர் எதிரில் கை கூப்பி நின்று கொண்டு அவரது ஸம்பந்தம் கிடைத்தது பற்றித் தமது அதிர்ஷ்டத்தையும், ஸௌபாக்யத்தையும் பற்றி விவரித்துப் புகழ்ச்சியாகக் கூறித் தமது விநயத்தையும், பெருமையையும் காட்டினார்.

பூஜே பூபதி ஸகல பராதீ ।
ஸமதீ ஸம ஸாதர் ஸப் பாந்தீ ॥ 3090
ஆஸன் உசித் தியே ஸப் காஹூ ।
கஹெளம் காஹ் முக ஏக் உசாஹூ ॥ 3091

ராஜா ஜனகர் வந்திருந்த ஸம்பந்தி வீட்டார் யாவரையும் வணங்கி, ராஜா தசரதரைப் போலவே மரியாதை கொடுத்து, வரவேற்று உபசரித்தார்; பூஜித்தார்; எல்லோருக்கும் உசிதப்படி ஆஸனமும் அளித்தார். அத்தகைய உற்சாக நிகழ்ச்சியான இதை இந்த ஒரு வாயினால் என்ன கூறமுடியும்?

ஸகல பராத் ஜனக் ஸன்மானீ ।
தான் மான் பினதீ பர் பானீ ॥ 3092
பிதி ஹரி ஹரு திஸிபதி தின்ராவூ ।
ஜே ஜான்ஹிம் ரகுபீர் ப்ரபாவூ ॥ 3093

வந்திருந்த மாப்பிள்ளை வீட்டார் எல்லோருக்கும் ஜனகர் தானம் வழங்கி, மரியாதை காட்டிக் கௌரவித்து விநயத்துடன் சிறப்பும் கலந்த வார்த்தைகளைக் கூறி உபசரித்து வரவேற்றார். ப்ரம்மா, விஷ்ணு சிவன் மற்றும் திக்பாலகர்கள், ஸூர்யன் யாவரும் ஸ்ரீரகுநாதரின் ப்ரதாபத்தையும், மஹிமையையும் தெரிந்து கொண்டார்கள்.

கபட பிப்ர பர் பேஷ் பநாயேம் ।
கௌதுக் தேக்ஹிம் அதி ஸசு பாயேம் ॥ 3094

பூஜே ஜனக் தேவ் ஸம ஜானேம் |
தியே ஸுஆஸன் பினு பஹிசானேம் || 3095

அவர்கள் கபடமாக அழகான ப்ராம்மண வேஷம் பூண்டு இந்த விவாஹ மண்டபத்தில் அமர்ந்து பல ஸுகம் பெற்று, எல்லா லீலைகளையும் பார்த்து அதி ஆனந்தமடைந்தார்கள். (இந்த அழகான திருமண இல்லத்தைக் கண்டு களிக்க வந்திருந்தார்கள்) ஜனகர் அவர்களையும் தெரியாமலேயே தேவர்களைப் போல் எண்ணிப் பூஜித்து உபசரித்தார். அடையாளம் தெரியாமலேயே நல்ல நல்ல ஆஸனங்களையும் கொடுத்தார்.

பஹிசான் கோ கேஹி ஜான்
ஸப்ஹி அபான் ஸுதி போரீ பயீ |
ஆனந்த கந்து பிலோகி தூல்ஹு
உபய திஸி ஆனந்தமயீ || 3096
ஸுர் லகே ராம ஸுஜான் பூஜே
மானஸிக் ஆஸன் தியே |
அவலோகி ஸீலு ஸுபாவு ப்ரபு கோ
பிபுத மன் ப்ரமுதித பயே || 3097

யார் யாரை அடையாளம் காண முடியும்! அந்த அளவுக்கு எல்லோரும் தங்களை மறந்திருந்தார்கள். (அதாவது; எல்லோரும் ஒரே ஆனந்த ஸாகரத்தில் மூழ்கியிருக்கிறார்கள். யாருக்கும் ஆனந்தத்தை அளிக்கக் கூடியவரான மணமகன் ஸ்ரீராமச்சந்த்ரனைப் பார்த்த இரு தரப்பாரும் பெரும்பான்மையானவர்கள் மயங்கியிருந்தார்கள். ஸர்வஜ்ஞனான ஸ்ரீராமன் அங்கு வந்துள்ள தேவதைகளை நன்கு அறிந்து கொண்டு விட்டார். ஆகவே, அவர்களை மானஸீக பூஜை செய்து, வணங்கி விட்டு, அவர்களுக்கு மானஸீகமாகவே ஆஸனமும் அளித்தார். ப்ரபுவின் சீலமான குணத்தைக் கண்ட தேவர்கள் அவரது அருளைக் கண்டு மனத்துள் மிக ஆனந்தம் அடைந்தார்கள்.

ராமசந்த்ர முக சந்த்ர சபி
லோசன் சாரு சகோர் |
கரத் பான் ஸாதர் ஸகல ப்ரேமு
ப்ரமோது ந தோர் || 3098

ஸ்ரீராமச்சந்த்ரனின் முகமாகிற சந்த்ரனின் ஒளியை எல்லாருடைய அழகுக் கண்களாகிய சகோரப் பக்ஷிகள் மரியாதையுடன் பானம் செய்து கொண்டிருக்கின்றன. ப்ரேமைக்கும், ஆனந்தத்திற்கும் குறைவில்லை.

ஸமவு பிலோகி பஸிஷ்ட போலாயே ।
ஸாதர் ஸதாநந்து ஸுனி ஆயே ॥ 3099
பேகி கும்வரி அப் ஆனஹு ஜாயீ ।
சலே முதித் முனி ஆயஸு பாயீ ॥ 3100

ஸமயம் அறிந்து, பார்த்து வஸிஷ்டர் சதானந்தரை மரியாதையுடன் அழைத்தார். அவரும் அவர் வார்த்தையைச் சிரமேற்கொண்டு அங்கு வந்தார். அப்போது வஸிஷ்டர்; சதானந்தரிடம் ''சீக்கிரம் சென்று மண மகளை அழைத்து வாரும்'' என்றார். அவரும் முனிவரின் ஆணை வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்து உடனே உள்ளே சென்றார்.

ரானீ ஸுனி உபரோஹித் பானீ ।
ப்ரமுதித் ஸகின்ஹ ஸமேத் ஸயானீ ॥ 3101
பிப்ர பதூ குலப்ருத்த போலாயீம் ।
கரி குல ரீதி ஸுமங்கல காயீம் ॥ 3102

புத்திசாலியான ராணி புரோஹிதரின் வார்த்தையைக் கேட்டு; தோழியரோடு கூட மிகவும் ஸந்தோஷமடைந்தார். ப்ராம்மண ஸ்த்ரீகளையும், மேலும், குலத்தின் வயது முதிர்ந்த பெண்களையும் அழைத்து ராஜ குலத்தின் வழக்க முறைப்படி மங்கல கீதம் பாடச் செய்தாள்.

நாரி பேஷ் ஜே ஸுர பர் பாமா ।
ஸகல ஸுபாயம் ஸுந்தரீ ஸ்யாமா ॥ 3103
தின்ஹஹி தேகி ஸுகு பாவ்ஹிம் நாரீம் ।
பினு பஹிசானி ப்ரானஹு தே ப்யாரீம் ॥3104

ச்ரேஷ்டமான தேவ கன்னிகள் மனிதப் பெண் வடிவு தாங்கி வந்திருந்தார்கள்.

அவர்கள் இயற்கையாகவே ஸுந்தரிகள், ச்யாமாக்கள். அதிக வனப்புடன் காட்சியளித்த அவர்கள் பதினாறு வயது உடையவர்களே ஆவர். அந்தப் பெண்களைப்

பார்த்ததும் அந்தப்புரத்துப் பெண்களனைவரும் ஸுக மடைந்தார்கள். அவர்கள் யாரென்று அடையாளம் தெரியாமலேயே அவர்களிடம் உயிரைவிட அன்புடன் நேசித்துப் பழகினார்கள்.

பார் பார் ஸன்மான்ஹிம் ரானீ |
உமா ரமா ஸாரத் ஸம ஜானீ || **3105**
ஸீய ஸம்வாரி ஸமாஜூ பனாயீ |
முதித் மண்டப்ஹிம் சலீம் லவாயீ || **3106**

அவர்களைப் பார்வதியாகவும், லக்ஷ்மியாகவும் நினைத்துக் கொண்டே ஸீதையின் தாயார் ராணிமா தேவி அவர்களுக்கு மிக்க உபசாரம் செய்தாள். அந்தப் புரத்துப் பெண்களும், தோழியரும் ஸீதாதேவியைப் பலவிதமாகச் சிங்காரித்து, ஒரு வட்டமாகக் கூடிக் கொண்டு மகிழ்வுடன் ஸீதையை விவாஹ மண்டபத் திற்கு அழைத்துச் சென்றார்கள்.

சலி ல்யாயி ஸீதஹி ஸகீம் ஸாதர்
ஸஜி ஸுமங்கல பாமினீம் |
நவஸப்த ஸாஜேம் ஸுந்தரீம் ஸப்
மத்த குஞ்ஜர காமினீம் || **3107**
கல் கான் ஸுனி முனி த்யான் த்யாகஹிம்
காம கோகில லாஜ்ஹீம் |
மஞ்ஜீர நூபுர கலித கங்கன்
தால் கதி பர் பாஜ்ஹீம் || **3108**

அழகிய மங்கலமான பல விதமான அலங்காரங் களை ஸீதாதேவிக்குச் செய்து அந்தப்புர ஸ்த்ரீகளும், தோழியரும் மரியாதையுடன் அவளைத் திருமண மண் டபத்திற்கு அழைத்து வந்தார்கள். எல்லா ஸுந்தரீ ஸகிகளும் பதினாறு வகையான சிருங்காரங்களைச் செய்து கொண்டு மத்த கஜம் போல் நடந்து வந்தார் கள். அவர்களுடைய மனோஹரமான கீதத்தைக் கேட்டு முனிவர்கள் தங்கள் த்யானத்தைக் கூட விட்டு விடு கிறார்கள். பின்னும் அவர்களின் குரல் காமதேவனின் குயில்களைக் கூட நாணமுறச் செய்கிறது. கால்களின், சலங்கைகளும், காப்புகளும், கொலுசுகளும், ஸுந்தர மான கைக்கங்கணங்களும் அவரவர் தாளத்தின் நடைக் கேற்ப இசைத்துக் கொண்டே வருகின்றன.

ஸோஹதி பநிதா ப்ருந்த மஹும்
ஸஹஜ் ஸுஹாவனி ஸீய |
சபி லலனா கன மத்ய ஜனு
ஸுஷமா திய கமனீய || 3109

அழகாகிய ஸமூஹத்திற்கு நடுவே மிகு மனங்கவர் சோபையாகிற பெண்ணொருத்தி எப்படி விளங்குவாளோ; அதேபோல் இயல்பாகவே அழகு நங்கை ஸீதாதேவி மற்ற பெண்களுக்கிடையே விளங்கலானாள்.

ஸிய ஸுந்தரதா பர்னி ந ஜாயீ |
லகு மதி பஹுத் மனோஹரதாயீ || 3110
ஆவத் தீகி பராதின்ஹ ஸீதா |
ரூப் ராஸி ஸப் பாந்தி புனீதா || 3111

ஸீதையின் அழகை வர்ணிக்கவே முடியாது; அவளை வர்ணிக்க நமது புத்தி ரொம்பச் சிறியது; ஆனால்; அவளுடைய மனோஹர அழகோ அளவு கடந்தது, மிகப் பெரியது. அழகுக் கூட்டமான, எல்லா வ்கை யிலும் தூயவளான ஸீதாதேவியை ஜானவாஸத்திற்கு வந்திருக்கும் ஸம்பந்தி வீட்டு மக்கள் ஆர்வத்துடன் பார்த்தார்கள்.

ஸப்ஹி மன்ஹிம் மன் கியே ப்ரனாமா |
தேகி ராம் பயே பூரன காமா || 3112
ஹர்ஷே தஸரத் ஸுதன்ஹ ஸமேதா |
கஹி ந ஜாயி உர் ஆனந்து ஜேதா || 3113

எல்லோரும் ஸீதையின் ரூபத்தைக் கண்டு மனத்திற் குள்ளேயே வந்தனை செய்தார்கள். ஸ்ரீராமனைக் கண்டதுமே அனைவரும் செய்ய வேண்டியதைச் செய் தவர்களாக ஆயினர். தசரதரோ தனது புத்ரர்களுடன் மகிழ்விலாழ்ந்திருந்தார். அவர் மனத்தில் எத்தகைய ஆவலுடன் ஆதுரமும் நிறைந்து இருந்ததோ; அதை யாராலும் கூறவே முடியாது.

ஸுர ப்ரனாமு கரி பரிஸஹிம் பூலா |
முனி அஸீஸ் துனி மங்கல மூலா || 3114
கான் நிஸான் கோலாஹலு பாரீ |
ப்ரேம் ப்ரமோத் மக்ன நர் நாரீ || 3115

தேவதைகள் பூமாரி பொழிந்து கொண்டே பக வான் ஸ்ரீராமனுக்கு வந்தனம் செய்கிறார்கள். மங்கலத் திற்கு ஆதாரமாக மந்த்ரங்களின் ஒலி முழங்க முனிவர் களின் ஆசீர்வாதத்வனிகளும் கூட ஒலிக்கின்றன. பாட் டுக்களாலும், மேளதாளங்களினாலும் எங்கும் ஒரே இரைச்சலாக இருந்தது. எல்லா ஆண்-பெண்களும் ஆனந்தத்தில் மூழ்கி நின்றார்கள்.

ஏஹி பிதி ஸீய மண்டப்ஹிம் ஆயீ |
ப்ரமுதித் ஸாந்தி· பட்ஹிம் முனிராயீ || 3116
தேஹி அவஸர் கர் பிதி ப்யவஹாரூ |
துஹூம் குலகுர் ஸப் கீன்ஹ அசாரூ || 3117

அந்தநேரம் ஸீதாதேவி மணமண்டபம் வந்து சேர்ந்த ாள். முனி ராஜர்கள் மிகவும் ஆனந்தமும், த்ருப்தி யும் அடைந்து சாந்தி பாடம் படிக்க ஆரம்பித்தார்கள். அந்த ஸமயத்தில் அவரவர்கள் குல வழக்கப்படி, குலாச்சாரத்தின்படி இரு குலகுருவினரும் சேர்ந்து எல் லாக் கார்யங்களையும் செய்தார்கள்.

ஆசாரு கரி குர் கௌரி கனபதி
முதித பிப்ர புஜாவஹீம் |
ஸூர ப்ரகடி பூஜா லேஹிம் தேஹிம்
அஸீஸ் அதி ஸுகு பாவஹீம் || 3118
மதுபர்க மங்கல த்ரவ்ய ஜோ ஜேஹி
ஸமய முனி மன் மஹூம் சஹம் |
பரே கனக கோபர் கலஸ்
ஸோ தப் லியேஹி பரிசாரக் ரஹம் || 3119

ப்ரஸன்ன மனத்துடன் குரு வஸிஷ்டர், கௌரி, கணேசர், ப்ராம்மணர் ஆகியோருக்குக் குல ஆசாரப் படி பூஜை செய்யச் செய்தார். தேவதைகள் ப்ரத்யக்ஷ மாகிப் பூஜைகளைப் பெற்றுக் கொண்டனர்; பிறகு ஆசீர்வாதம் அளித்தார்கள்; ஸுகமடைந்தார்கள். மது பர்கம் என்னும் மங்களகரமான, பதார்த்தங்களையும் முனிவர் மனத்தில் சேகரிக்க நினைத்த மாத்ரத்தில் எல்லாம் தானாகவே கூடி வந்து விடுகிறது. ஸேவகர் கள் அந்த ஸமயம் தங்கத் தட்டுகளில், கலசங்களில் அந்தப் பதார்த்தங்களை, ஸாதனங்களை நிரப்பிக் கொண்டு வந்து தயாராக நிற்கிறார்கள்.

குல ரீதி ப்ரீதி ஸமேத ரபி
கஹி தேத் ஸபு ஸாதர் கியோ |
ஏஹி பாந்தி தேவ் புஜாயி
ஸீதஹி ஸுபக் ஸிங்காஸனு தியோ || 3120
ஸிய ராம அலலோகனி பரஸ்பர
ப்ரேமு காஹு ந லகி பரை |
மன் புத்தி பர் பானீ அகோசர்
ப்ரகட கபி கைஸேம் கரை || 3121

தானாகவே ஸூர்ய தேவனே வந்து அன்போடு தங்கள் குலத்தின் பழக்க வழக்கங்களை அறிவிக்கிறார். எல்லோரும் அவைகளைப் பின்பற்றி மரியாதையுடன் செய்கிறார்கள். இவ்வாறு தேவர்களைப் பூஜித்தபின் முனிவர்கள் ஸீதாதேவிக்கு அழகான சிங்காதனம் கொடுத்தார்கள். ஸ்ரீஸீதாதேவியும், ஸ்ரீராமச்சந்த்ரனும் ஒருவர்கொருவர் பரஸ்பரம் ப்ரேமையுடன் பார்த்துக் கொள்வதை யாருமே கவனிக்கவில்லை எனலாம். அந்த ஸம்பவத்தைச் சிறந்ததொரு மனத்தினாலும், புத்தியினாலும், வார்த்தைகளாலும் கூடக் கூறமுடியாத படி இருந்தது என்றால்; அப்படிப்பட்ட ச்ரேஷ்டமான ஸம்பவத்தைக் கவி எவ்விதம் கூறுவார்.

ஹோம் ஸமய தனு தரி அனலு
அதி ஸுக ஆஹுதி லேஹிம் |
பிப்ர பேஷ் தரி பேத் ஸப்
கஹி பிபாஹ பிதி தேஹிம் || 3122

ஹோமம் செய்ய வேண்டிய நேரத்தில் அக்னி தேவனே உருவம் தாங்கி வந்து ஸுகமாக ஆஹுதியை (வேள்விப் பொருள்களை) பெற்றுக் கொள்கிறான். எல்லா வேதங்களும் ப்ராம்மணர் வேஷம் பூண்டு அங்கு வந்து முறைப்படித் திருமணம் நடக்க வழி வகுத்துக் கொடுக்கின்றன.

ஜனக பாடமஹிஷீ ஜக் ஜானீ |
ஸீய மாது கிமி ஜாயி பகானீ || 3123
ஸுஜஸு ஸுக்ருத ஸுக ஸுந்தர்தாயீ |
ஸப் ஸமேடி பிதி ரசீ பனாயீ || 3124

ஜனகருடைய உலகப் ப்ரஸித்திபெற்ற பட்ட மஹிஷி, அதாவது; ஸீதாதேவியின் தாயார் பற்றி எப்படி வர்ணிக்க முடியும்? நல்ல புகழ், புண்யம், ஸுகம், அழகு இவைகளையெல்லாம் ஒன்றாகத் திரட்டி ப்ரம்மன் அவரைச் சீர்படுத்தி ஒழுங்காக ஸ்ருஷ்டித்திருந்தார்.

ஸமவு ஜானி முனிபரன்ஹ போலாயீம் |
ஸுனத் ஸுஆஸினி ஸாதர் ல்யாயீம் || 3125
ஜனக பாம திஸி ஸோஹ ஸுநயனா |
ஹிமகிரி ஸங்க் பனீ ஜனு மயனா || 3126

ஸமயம் வந்ததும் அந்த முனிவர்களும் ஜனகரின் மனைவியைத் திருமண மண்டபம் வரும்படி அழைத்தார்கள். இதைக் கேட்டதும் ஸுமங்கலி ஸ்த்ரீகள் அந்த ராஜமஹிஷியை மரியாதையுடன் அழைத்து வந்தார்கள். ஸுநயனா என்னும் ஜனகரின் பட்ட மஹிஷி ஜனகரின் இடது பக்கத்தில் ஹிமவானின் அருகில் மைனாவதி அமர்ந்து காட்சி தருவதைப் போல் காட்சி தந்தாள்.

கனக் கலஸ மனி கோபர் பூரே |
ஸுசி ஸுகந்த மங்கல ஜல் பூரே || 3127
நிஜ கர் முதித ராயம் அரு ராணீ |
தரே ராம் கே ஆகேம் ஆனீ || 3128

பவித்ரமான ஸுகந்தமணம் வீசும் மங்கல ஜல நிரம்பிய தங்கக் கலசங்களையும், ஸுந்தரமான மணி, மாணிக்கம் இழைத்த தாம்பாளங்களையும் ராஜா-ராணி இருவரும் தங்கள் கைகளாலேயே எடுத்து வந்து ஸ்ரீராமன் எதிரில் மண்டபத்தில் வைத்தார்கள்.

பட்ஹி பேத குலி மங்கல யானீ |
ககன ஸுமன் ஜ்ரி அவஸரு ஜானீ || 3129
பரு பிலோகி துல்யதி அனுராகே |
பாய புனீத பகாரன் வாகே || 3130

முனிவர்கள் மங்களத்வனியுடன் வேதம் ஓதிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சுபதினத்தை அறிந்து ஆகாயத்திலிருந்து வண்ண மலர்களின் தூறல் பெய்து கொண்டிருந்தது. மணமகன் ஸ்ரீராமனைக் கண்டு ஜனகரும் ஸுநயனாவும் அகம் மகிழ்ந்தார்கள். இருவரும் சேர்ந்து ஸ்ரீராமனின் தூய பாதங்களை அலம்பலானார்கள்.

லாகே பகாரன் பாய் பங்கஜ
ப்ரேம் தன் புலகாவலீ |
நப் நகர் கான் நிஸான் ஜயதுனி
உமகி ஜனு சஹுூம் திஸி சலீ || 3131
ஜே பத் ஸரோஜ் மனோஜ் அரி
உர் ஸர் ஸதைவ பிராஜஹீம் |
ஜே ஸக்ருத ஸுமிரத் பிமலதா
மன் ஸகல கலி மல் பாஜஹீம் || 3132

அவர்கள் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் திருவடித்தாமரை களை அலம்பிவிடும்போது அன்பு காரணமாக அவர் களது உடல் புளகாங்கிதம் அடைந்தது. ஆகாயம், பூமியிலுள்ள நகரம் இவை எல்லா இடங்களிலும் மங்கள கீதங்களும், வாத்யங்களும், ஜயபேரிகைகளும், 'ஜயவிஜயீபவ' என்கிற ஜயத்வனிகளும், நான்கு திசை களிலும் பொங்கி எழுந்தன. அந்தப் பாதங்கள் காம தேவனின் சத்ருவான சிவனாரின் ஹிருதயமாகிய தடாகத்தில் எப்போதும் விளங்குபவை. அந்தத் திரு வடிகளை ஒருதடவை மட்டும் நினைவு செய்தாலே மனத்தில் தெளிவு உண்டாகும். கலியுகத்துப் பாபங் களும் தூரவிலகும்.

ஜே பரஸி முனிபனிதா லஹீ கதி
ரஹீ ஜோ பாதக மயீ |
மகரந்து ஜின்ஹ கோ ஸம்பு ஸிர்
ஸுசிதா அவதி ஸுர பர்நயீ || 3133
கரி மதுப் மன் முனி ஜோகிஜன்
ஜே ஸேயி அபிமத் கதி லஹெம் |
தே பத பகாரத் பாக்யபாஜனு
ஜனகு ஜய ஜய ஸப் கஹெம் || 3134

மேலும், அந்தப் பாதங்களின் ஸ்பர்ச மாத்ரத்தில் கௌதம முனிவரின் பாவமயமான மனைவி அஹல்யை புண்யகதி அடைந்தாள். அந்தச் சரண கமலங்களின் மகரந்த ரஸமாகிய கங்கை சிவனாரின் முடிகளில் அமைந்து விளங்குகிறது. அந்தப் பாதங்களைத் தேவர் கள் தூய்மையின் எல்லை என்கிறார்கள்.

முனிவர்களும், யோகிகளும் தங்களது மனத்தை வண்டுகளைப் போல் ஆக்கி அந்தச் சரணங்களைச் சுற்றி வந்து பணிகளைச் செய்து மனம் விரும்பிய நற்கதிகளை

அடைகிறார்கள். அதே சரணகமலங்களைப் பெரும் பாக்யமாக எண்ணி ஜனகர் கழுவுகிறார்; பாதபூஜை செய்கிறார். இதைக்கண்ட அனைவரும் எங்கும் ஜய ஜய என்று வாழ்த்தொலிகளை வழங்குகிறார்கள்.

பர் கும்வரி கரதல் ஜோரி ஸாகோசாரு
தோவு குலகுர் கரைம் |
பயோ பானிகஹணு பிலோகி பிதி ஸுர
மனுஜ முனி ஆனந்த பரைம் || 3135
ஸுகமூல தூல்ஹு தேகி தம்பதி புலக
தன ஹுலஸ்யோ ஹியோ |
கரி லோக் பேத் பிதானு கன்யாதானு
ந்ருப பூஷன் கியோ || 3136

இரண்டு தரப்பிலுள்ள குலகுருமார்கள், மணமகன், மணமகள் இருவருடைய உள்ளங்கைகளைச் சேர்த்து வைத்து வேத மந்த்ர உச்சாரணம் செய்தார்கள். இவ்வாறு 'பாணி க்ரஹணம்' ஆனதும் ப்ரம்மன் முதலான ஸகல தேவர்களும், மனிதர்களும், முனிவர்களும் பரமானந்தமடைந்தார்கள். ஸுகத்தின் அவதாரமான மணமகன் ஸ்ரீராமனைப் பார்த்துப் பார்த்து ராஜா ஜனகரும் அவர் மனைவியும் மகிழ்ந்தார்கள். அவர்களது சரீரம் புளகாங்கிதமடைந்தது; ஹிருதயம் ஆனந்தத்தினால் பொங்கியது. ராஜாக்களின் அணிகலன் போல் விளங்கும் மஹாராஜாவான ஜனகர் உலக முறைப்படியும், வேதத்தின் முறைப்படியும் தன் மகளைக் கன்யாதானம் செய்து கொடுத்தார்.

ஹிமவந்த் ஜிமி கிரிஜா மஹேஸஹி
ஹரிஹி ஸ்ரீ ஸாகர் தயீ |
திமி ஜனக் ராமஹி ஸிய ஸமர்பீ
பிஸ்வ கல கீர்தி நயீ || 3137
க்யோம் கரை பிநய பிதேஹு கியோ
பிதேஹு மூர்தி ஸாம்வரீம் |
கரி ஹோமு விதிவத் கான்டி
ஜோரீ ஹோன் லாகீம் பாம்வரீம் || 3138

எப்படி ஹிமவான் தனது மகள் பார்வதியைச் சிவனாருக்குக் கொடுத்தாரோ; எப்படி ஸமுத்ரராஜன் ஸ்ரீமகாவிஷ்ணுவிற்குத் தன் மகள் லக்ஷ்மீ தேவியைக்

கொடுத்தாரோ; அதே மாதிரி ஜனகர் ஸ்ரீ ராமச் சந்த்ரனுக்கு- ஸீதாதேவியை ஸமர்ப்பித்தார். அதனால் உலகெங்கும் அத்புதமான, ஸுந்தரமானதொரு புகழ் பரவிவிட்டது. விதேஹி மன்னர் ஜனகர் எப்படி ப்ரார்த்தனை செய்தாரோ; அதேபோல் அந்த ஸ்யாமள மூர்த்தியானவர் உண்மையில் அவர் மனத்தைக் கொள்ளை கொண்டு விட்டார். விதிமுறைப்படி ஹோமம் செய்து முடிச்சு போடப்பட்டது. (அதாவது; வடநாட்டு முறைப்படி-புடவை-வேஷ்டி முடியப்பட்டது) பின்பு மணமக்கள் அக்னியை வலம் வந்தார்கள். (ஸ்ரீராம-ஸீதையின் திருக் கல்யாண வைபவம் இவ்வாறு வெகு கோலாஹலமாக நிறைவேறியது)

ஜய துனி பந்தீ பேத் துனி
மங்கல கான் நிஸான் |
ஸுனி ஹர்ஷஹிம் பர்ஷஹிம் பிபுத
ஸுரதரு ஸுமன் ஸுஜான் || 3139

ஜயத்வனி, வந்திமக்களின் சப்தம், வேதத்வனி, மங்கள கானம், மத்தளங்களின் ஒலி, இவைகளைக் கேட்டுத் தேவர் ஸமூஹம் ப்ரம்மானந்தமடைந்தது. அவர்கள் கல்பக வ்ருக்ஷ மலர்களைப் பொழியலாயினர்.

கும்அரு கும்அரி கல் பாம்வரி தேஹீம் |
நயன லாபு ஸப் ஸாதர் லேஹீம் || 3140
ஜாயி ந பர்னி மனோஹர் ஜோரீ |
ஜோ உபமா கசு கஹெளம் ஸோ தோரீ ||3141

மணமகன் ஸ்ரீராமனும், மணமகள் ஸீதையும் அக்னி ப்ரதக்ஷணம் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து அனைவரும் கண்கள் பெற்ற பயனைப் பெற்றார்கள். அந்த மனோஹரமான ஜோடிகளை வர்ணிக்கவே முடியாது. உவமை சொல்லப் போனாலும் அது குறைவாகவே இருக்கும்.

ராம ஸீய ஸுந்தர் ப்ரதிசாஹீம் |
ஜக்மகாத் மனி கம்பன் மாஹீம் || 3142
மனஹுூம் மதன் ரதி தரி பஹு ரூபா |
தேகத் ராம் பிஆஹு அனூபா || 3143

ஸ்ரீராமன், ஸ்ரீஸீதாதேவி இவர்களுடைய ப்ரதி பிம்பங்கள் அங்குள்ள மணியாலான கம்பங்களில் ப்ரதிபலிக்கின்றன. அதைப் பார்க்கையில் காமதேவனும்-ரதிதேவியும் பலரூபங்களை எடுத்துக் கொண்டு ஸ்ரீராமனின் ஈடற்ற திருமண வைபவத்தைக் காண்கிறார்களோ என்று எண்ணத் தோன்றியது.

தரஸ் லாலஸா ஸகுச் ந தோரீ |
ப்ரகடத் துரத் பஹோரி பஹோரீ || 3144
பயே மக்ன ஸப் தேக்நிஹாரே |
ஜனக் ஸமான் அபான் பிஸாரே || 3145

அந்த ரதிக்கும், காமதேவனுக்கும் இந்த விலாஸத்தைக் காண மிகவும் ஆசை கூடவே நாணம் வேறு மிகுதியாயிற்று. ஆகவே; தர்சனம் செய்ய வேண்டுமென்ற ஆசையில் இவர்கள் மறைந்து மறைந்து பின்னும் காட்சியளிக்கிறார்கள். பார்க்க வந்த மக்கள் அத்தனை ஸந்தோஷமடைந்தார்கள். ஜனகரைப் போல் அவர்களும் வந்த கார்யத்தை மறந்தும், நினைவு மறந்தும் சிந்தனையில் ஆழ்ந்தார்கள்.

ப்ரமுதித் முனின்ஹ பாம்வரீம் பேரீம் |
நேகஸஹித ஸப் ரீதி நிபேரீம் || 3146
ராம ஸீய ஸிர் ஸெந்துர் தேஹீம் |
ஸோபா கஹி ந ஜாதி பிதி கேஹீம் || 3147

முனிவர்கள் ஸந்தோஷத்துடன் ப்ரதக்ஷிணம் செய்யச் செய்தார்கள். வெகுமானம் வழங்குதல் முதலிய முறைகளையும் செய்தனர். ஸ்ரீராமன்-ஸீதாதேவியின் தலையில் ஸிந்தூரம் இட்டார்கள். இந்த அழகின் நிலையை நம்மால் கூறவும் முடியாது.

அருன் பராக் ஜலஜ பரி நீகம் |
ஸஸிஹி பூஷ் அவரி வோம் அமீ கேம் || 3148
ப்ஹரி பலிஷ்ட தீன்வரி அனுலானன் |
பரு துல்ஹினி பைடே ஏக் ஆனன் || 3149

அது எப்படி இருந்தது என்றால்; கமலப் பூக்களில் சிவந்த மகரந்தங்களைக் கொண்டு நிரப்பியது போலும், அமுதம் பருக வேண்டுமென்ற ஆசையால் நாகம் சந்த்ரனை அலங்கரித்திருந்தது போலும்படியும் இருந்தது.

(அதாவது; ஸ்ரீராமனின் கைக்குக் கமலத்தையும், ஸிந் தூரத்திற்கு மகரந்தத் தூள்களையும், ஸ்ரீராமனின் கரிய கைக்கு நாகத்தையும், ஸீதையின் முகத்திற்குச் சந்த்ரனையும் உவமையாகக் கொடுத்துள்ளார் கவி துளஸீ).

பிறகு வஸிஷ்டரின் ஆணைப்படி மணமகனும்-மணமகளும் ஒரே ஆஸனத்தில் அமர்ந்தார்கள்.

பைடே பராஸன் ராமு ஜானகி
முதித மன் தஸரது பயே |
தனு புலக் புனி புனி தேகி அப்னேம்
ஸுக்ருத ஸுரதரு பல் நயே || 3150
பரி புவன் ரஹா உசாஹு ராம
பிபாஹு பா ஸப்ஹீம் கஹா |
கேஹி பாந்தி பர்னி ஸிராத்
ரஸனா ஏக் யஹு மங்கலு மஹா || 3151

ஸ்ரீராமனும்-ஸ்ரீஜானகியும் சிறந்த ஆஸனத்தில் அமர்ந்தார்கள். அவர்களைக் கண்ட தசரதர் தனது ஜன்மம் சாபல்யம் அடைந்து விட்ட பெருமை கொண் டார். தமது ஸுக்ருதமாகிற கல்ப வ்ருக்ஷத்தில் புதிய பழங்கள் பழுத்து விட்டதைக் கண்டு அவர் சரீரம் திரும்பத் திரும்பப் புளகாங்கிதம் அடைந்தது. பதி னான்கு உலகிலும் ஆனந்தம் நிரம்பியது. ஸ்ரீ ராமச் சந்த்ரனின் விவாஹம் நன்கு நிறைவேறி விட்டது என்று எல்லோரும் ஒரே முகமாகக் கூறினார்கள். நமது நாக்கு ஒன்றே; ஆயினும், இதன் மங்கலம் மிகப் பெரி யது. சரி, இதை வர்ணித்து எப்படி முடிவு செய்ய முடியப் போகிறது?

தப் ஜனக் பாயி பஸிஷ்ட ஆயஸு
ப்யாஹ் ஸாஜ் ஸம்வாரி கை |
மாண்டவீ ச்ருதகீர்த்தி உர்மிலா
கும்வரி லயீம் ஹங்காரி கை || 3152
குஸகேது கன்யா ப்ரதம ஜோ
குன் ஸீல ஸுக ஸோபாமயீ |
ஸப் ரீதி ப்ரீதி ஸமேத் கரி
ஸோ ப்யாஹி ந்ருப பரதஹி தயீ || 3153

அப்போது முனி வஸிஷ்டரின் ஆஜ்ஞை பெற்று ஜனகர் திருமணத்திற்கு வேண்டிய ஸகல ஸாமக்ரியை களையும் சேர்த்து அணிசெய்து வைத்தார். பிறகு மாண்டவி, ச்ருதகீர்த்தி, ஊர்மிலா என்ற மூன்று ராஜ குமாரிகளையும் அழைத்தார். குசத்வஜன் என்பவ ருடைய பெரிய மகள் மாண்டவி என்பவள், ரூபம், குணம், சீலம், ஸுகம், சோபை இவைகளில் சிறந்த வளாக இருந்தாள். அவளுக்கு எல்லா ஏற்பாடுகளை யும் முறைப்படிச் செய்து, பரதனுக்கு அவளைத் திரு மணம் செய்து கொடுத்தார்.

ஜானகீ லகு பகினீ ஸகல ஸுந்தரி
ஸிரோமனி ஜானி கை ।
ஸோ தனய தீன்ஹி ப்யாஹி லகன்ஹி
ஸகல பிதி ஸன்மானி கை ॥ 3154
ஜேஹி நாமு ச்ருதகீர்த்தி ஸுலோசனி
ஸுமுகி ஸப் குன் ஆகரீ ।
ஸோ தயீ ரிபு ஸூதன்ஹி பூபதி
ரூப் ஸீல உஜாகரீ ॥ 3155

ஜானகியின் சிறிய ஸஹோதரி ஊர்மிளா அழகில் சிரோமணி போலச் சிறந்தவள். அவளை எல்லாவித மணவிதிப்படி மரியாதை செய்து லக்ஷ்மணனுக்கு விவாஹம் செய்து வைத்தார்கள். அடுத்தபடியாக; அழகுக் கண்களும், அழகு முகமும், அழகு, குணக் களஞ்சியமும், நடத்தை இவைகளில் சிறந்தவளான ச்ருத கீர்த்தி என்பவளை ஜனகர் சத்ருக்னனுக்குத் திரு மணம் செய்து வைத்தார்.

அனுரூப பர் துல்ஹினி பரஸ்பர்
லகி ஸகுச ஹியம் ஹர்ஷஹீம் ।
ஸப் முதித ஸுந்தரதா ஸராஹஹிம்
ஸுமன் ஸுர கன் பர்ஷஹீம் ॥ 3156
ஸுந்தரீம் ஸுந்தர் பரன்ஹ ஸஹ
ஸப் ஏக் மண்டப் ராஜஹீம் ।
ஜனு ஜீவ உர் சாரிவு
அவஸ்தா பிபுன் ஸஹித பிராஜஹீம் ॥ 3157

மணமகன்கள், மணமகள்கள் ஆகியோர் தங்களுக்கு ஏற்ப ஜோடி அமைந்ததைக் கண்டு பரஸ்பரம் நாண மும், ஆனந்தமும், திருப்தியும் அடைந்தார்கள்.

எல்லோரும் இந்த ஜோடிகளைக் கண்ணால் கண்டு பரவசம் அடைந்தார்கள்; புகழத் தொடங்கினார்கள். தேவ கணங்கள் பூமாரி பொழிந்து கொண்டே இருந்தார்கள். எல்லா அழகிய மணமகள்களும், அழகு மணமகன்களும் ஒரே மண்டபத்தில்; ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி, துரீய என்ற ஜீவன்களின் ஹிருதயத்திலுள்ள நான்கு நிலைகளும், விச்வ, தைஜஸ், ப்ராஜ்ஞ, ப்ரம்ம என்கிற தமது நான்கு ஸ்வாமிகளுடனும் இருப்பது போல் சோபையுடன் காட்சி தந்தார்கள்.

முதித் அவத்பதி ஸகல ஸுத
பதுன்ஹ ஸமேத நிஹாரி |
ஜனு பாயே மஹிபால் மனி
க்ரியன்ஹ ஸஹித் பல் சாரி || *3158*

மருமகள்களுடன் கூடத் தமது புத்ரர்களையெல்லாம் கண்டு அயோத்யை மன்னன் தசரதர் ராஜாக்களுக்கே உரிய தலை சிறந்த கர்மாக்களான; யாகக்ரியை, ச்ராத்தக்ரியை, யோகக்ரியை, ஜ்ஞானக்ரியை ஆகியவைகளோடு கூடிய நால்வகைப் பலன்களான; தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் ஆகியவைகளைப் பெற்றது போல் மகிழ்ந்தார்.

ஜஸி ரகுபீர் ப்யாஹ் பிதி பர்னீ |
ஸகல கும்வர் ப்யாஹே தேஹிம் கர்னீ || *3159*
கஹி ந ஜாஇ கசு தாஇஜ் பூரீ |
ரஹா கனக் மனி மண்டபு பூரீ || *3160*

ஸ்ரீ ராமச்சந்த்ரனுக்கு எவ்விதப் பாங்குடன் விதிப்படி விவாஹம் செய்து வைத்தார்களோ; அதே போல மற்ற ராஜ குமாரர்களுக்கும் விவாஹம் செய்து வைக்கப்பட்டது. வரதட்சணைக்கு ஒரு குறைவும் இல்லை. மண்டபங்கள் முழுதும் தங்கத்தாலும், மாணிக்கங்களாலும் நிரப்பப்பட்டிருந்தன.

கம்பல் பஸன் பிசித்ர படோரே |
பாந்தி பாந்தி பஹு மோல் ந தோரே || *3161*
கஜ ரத துரக் தாஸ் அரு தாஸீ |
தேனு அலங்க்ருத காமதுஹா ஸீ || *3162*

விலையுயர்ந்த கம்பளிகளும், வஸ்த்ரங்களும், பற் பல விதப் பட்டு வஸ்த்ரங்களும், மேலும், யானைகள், ரதங்கள், குதிரைகள், பணிமாந்தர்கள், (ஆண்-பெண்) ஆபரணங்களாலங்கரிக்கப்பட்ட காமதேனு போன்ற பசுக்கள்;

பஸ்து அனேக் கரிஅ கிமி லேகா |
கஹி ந ஜாஇ ஜானஹிம் ஜின்ஹ தேகா ||3163
லோகபால் அவலோகி ஸிஹானே |
லீன்ஹ அவத்பதி ஸபு ஸுகு மானே || 3164

முதலிய பல பொருள்கள் இருந்தன. அவைகளை எண்ணுவதுதான் எப்படி முடியும்? அடேயப்பா! அவைகளை வர்ணிக்கவே முடியாது. யார் கண்களால் கண்டார்களோ அவர்களே அறிய முடியும். அவை களைக் கண்டு லோகபாலகரும் பொறாமை கொண்டு திகைத்து விடும்படி இருந்தது. அயோத்தி ராஜரான தசரதர் தமது கடமை என்று எண்ணி எல்லா வஸ்துக் களையும், மற்றும் வைபவங்களையும் மகிழ்வுடன் பெற்றுக் கொண்டார்.

தீன்ஹ ஜாசகன்ஹி ஜோ ஜேஹி பாவா |
உபரா ஸோ ஜனவாஸேஹிம் ஆவா || 3165
தப் கர் ஜோரி ஜனகு ம்ருது பானீ |
போலே ஸப் பராத் ஸன்மானீ || 3166

யார் யாருக்கு எவ்விதம் கொடுக்க வேண்டுமோ; எது நன்றாக இருக்குமோ; அத்தனையும் யாசகர்களுக் குக் கொடுத்த பின்பு ஜனக மஹாராஜன் மாப்பிள்ளை வீட்டார் தங்குமிடம் வந்தார். அப்பொழுது, கைகூப்பி அவர்களுக்கு மரியாதை செலுத்தி ம்ருதுவான அன்பு மொழியில் கூறினார்.

ஸன்மானி ஸகல பராத் ஆதர்
தான் பிநய படாயி கை |
ப்ரமுதித் மஹா முனி ப்ருந்த பந்தே
பூஜி ப்ரேம லடாயி கை || 3167
ஸிரு நாஇ தேவ் மனாயி ஸப் ஸன்
கஹத் கர் ஸம்புட் கியேம் |
ஸுர ஸாது சாஹத் பாவு ஸிந்து
கி தோஷ் ஜல அஞ்ஜலி தியேம் || 3168

மரியாதை, தானம், வினயம், பெருமை எல்லாவற்றோடும் மாப்பிள்ளை வீட்டாருக்குக் கௌரவம் தந்து, ராஜா ஜனகர் மிக்க ஆனந்தத்துடன், அன்பு காட்டி, முனிவர்களுக்குப் பூஜை செய்து, வணங்கினார். பிறகு தேவதைகளை வேண்டி, அஞ்சலித்து எல்லோரையும் பார்த்து; தேவதைகளும், ஸாதுக்களும் அன்பையே விரும்புகிறார்கள். அன்பினாலேயே ஸந்தோஷமடைகிறார்கள். அப்படியிருக்கப் பூர்ண காமர்களான மஹான்களுக்கு நாம் எந்தவிதமாக, எதைக்கொடுத்து ஸந்தோஷத்தைக் கொடுக்க முடியும்? ஒரு கை அஞ்சலி நீரைக் கொடுத்தால் ஸமுத்ரம் ஸந்தோஷத்தை அடைய முடியுமா? ஆகவே, ஏதோ என்னால் முடிந்ததைச் செய்தேன் என்கிறார் ஜனகர்.

கர் ஜோரி ஜனகு பஹோரி பந்து
ஸமேத் கோஸலராய் ஸோம் |
போலே மனோஹர் பயன் ஸானி
ஸனேஹ் ஸீல் ஸுபாய் ஸோம் || *3169*
ஸம்பந்த ராஜன் ராவரேம் ஹம்
படே அப் ஸப் பிதி பயே |
ஏஹி ராஜ் ஸாஜ் ஸமேத ஸேவக்
ஜானிபே பினு கத் லயே || *3170*

பின்பு ஜனகர் தன் ஸஹோதரர் கூட வந்து கைகூப்பிய வண்ணம் கோஸல ராஜனான தசரதரிடம் நட்பு, பண்பு, அன்புடன் கூட மனோஹரமான வார்த்தைகளில்; ''ஹே ராஜன்! தங்களுடைய ஸம்பந்தத்தினால் நாம் இப்பொழுது எவ்வகையிலும் பெரியவர்கள் ஆகிவிட்டோம். இந்த ராஜ ஸமூஹமே விலையில்லாத ஸேவகர்கள் என்பதைத் தாங்கள் அறியவும்.

ஏ தாரிகா பரிசாரிகா கரி
பாலிபீம் கருனா நயீ |
அபராது சமிபோ போலி படஏ
பஹுத் ஹெளம் டீட்யோ கயீ || *3171*
புனி பானுகுல பூஷன் ஸகல
ஸன்மான் நிதி ஸமதீ கியே |
கஹி ஜாதி நஹிம் பின்தீ பரஸ்பர
ப்ரேம் பரிபூரன் ஹியே || *3172*

மேலும், ஜனகர், இந்தக் கன்னிகைகளைப் பணிமாது களாக எண்ணித் தயவு காட்டிக் காப்பாற்றுங்கள். நான் தங்களைத் துடுக்குத்தனமாக வரவழைத்து, மிக வும் சிரமம் கொடுத்து விட்டேன்; அதற்காக என்னை மன்னியுங்கள். மேலும்; ஸூர்ய குல பூஷணரான தசரதர் ஜனகருக்கு மனோஹர வார்த்தைகளைக் கூறிக் கௌர வித்தார். இப்படி இவருடைய மரியாதையும், அன்பும் சொல்லி முடியாது. இருவரும் ஒருவருக்கொருவர் இதயத்தில் ப்ரேமையினால் பூர்ணராயினர்.

ப்ருந்தாரகா கன் ஸுமன் பரிஸஹிம்
ராவு ஜனவாஸேஹி சலே |
துந்துபீ ஜய துனி பேத துனி
நப் நகர் கௌதூஹல் பலே || *3173*
தப் ஸகீம் மங்கல் கான் கர்த
முனீஸ ஆயஸு பாயி கை |
தூல்ஹ துல்ஹிநின்ஹ ஸஹித
ஸுந்தரி சலீம் கோஹ் பர் ல்யாயி கை || *3174*

தேவதா கணங்கள் பூக்களை மழையாகப் பொழி கிறார்கள். ராஜா மாப்பிள்ளை வீட்டார் இருக்குமிடம் சென்றார். மத்தள ஒலியும், ஜயத்வனிகளும், வேதத் தின் ஒலிகளும் ஒலிக்க; ஆகாயம்-பூமி எங்கும் ஒரே ஆனந்தமாக இருந்தது. அப்போது வஸிஷ்ட முனி வரின் ஆஜ்ஞையைப் பெற்று எல்லா அழகுத் தோழி யரும் மங்களகானம் பாடியபடியே மணமகனையும், மணமகளையும் கூப்பிட்டுக் கொண்டு அந்தப்புரத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

புனி புனி ராமஹி சிதவ ஸிய
ஸகுசதி மனு ஸகுசைன் |
ஹர்த மனோஹர் மீன் சபி
ப்ரேம் பியாஸே நைன் || *3175*

ஸீதாதேவி திரும்பத் திரும்ப ராமரைப் பார்க் கிறார்; ஸங்கோஜப்படுகிறார்; ஆனால்; அவள் மனமோ நாணவேயில்லை. ப்ரேமையினால் உந்தப்பட்ட அவ ருடைய கண்கள் அழகான மீன்களின் அழகைத் தோற் கடித்தன.

ஸ்யாம ஸரீரு ஸுபாயம் ஸுஹாவன் |
ஸோபா கோடி மனோஜ் லஜாவன் || 3176
ஜாவக் ஜுத் பத் கமல ஸுஹாயே |
முனி மன் மதுப் ரஹத் ஜின்ஹ சாயே || 3177

இயற்கையிலேயே அழகுள்ள ச்யாமள வர்ண முடைய ஸ்ரீராமன் கோடிக்கணக்கான மன்மதனைத் தோற்கடிக்கும் அழகுடன் விளங்கினார். செம்பஞ்சுக் குழம்புடன் கூடிய திருவடித் தாமரைகளில் முனிவர் களின் மனமாகிய வண்டுகள் எப்பொழுதும் மொய்த் துக் கொண்டே இருக்கின்றன.

பீத புனீத மனோஹர் தோதீ |
ஹரதி பால் ரபி தாமினி ஜோதீ || 3178
கல கிங் கினி கடி ஸூத்ர மனோஹர் |
பாஹு பிஸால் பிபூஷன் ஸுந்தர் || 3179

ஸ்ரீராமனுடைய பவித்ரமான மனங்கவர் மஞ்சள் நிற வேஷ்டி விடியற்காலையில் ஸூர்யனையும், மின் னல் ஒளியையும் தோற்கடிக்கிறது. இடுப்பில் அழகிய ஒட்டியாணமும், அரைஞாணும் கட்டியிருந்தார், பரந்த கைகளில் பல்வகை அழகிய ஆபரணங்கள் அதிக சோபையைக் கொடுத்தன.

பீத ஜனேவு மாஹாசபி தேயீ |
கர் முத்ரிகா சோரி சிது லேயீ || 3180
ஸோஹத் ப்யாஹ் ஸாஜ் ஸப் ஸாஜே |
உர் ஆயத் உர் பூஷன் ராஜே || 3181

மஞ்சள் நிறப் பூணூலும், விரல்களில் உள்ள மோதிரங்களும் சித்தத்தைக் கொள்ளை கொள்கின் றன. திருமணத்திற்குச் செய்யப்பட்ட சிங்கார அலங் காரங்கள் சோபையூட்டின. அகன்ற மார்பில் அணியப் பட்ட நகைகளின் அழகோ சொல்லி முடியாது.

பிஅர் உபர்னா காகாஸோதீ |
துஹும் ஆஞ்சரன்ஹி லகே மனி மோதீ || 3182
நயன கமல் கல் குண்டல கானா |
பத்னு ஸகல ஸௌந்தர்ஜ நிதானா || 3183

பூணூல்போல் அணிந்துள்ள மார்பில் உள்ள மஞ் சள் நிற வேஷ்டி சிறப்பாக விளங்கின. அதன் இரு ஓரங்களிலும் மணிகளும், முத்துக்களும் வைத்துத் தைக்கப்பட்டு இருந்தன. கமலத்தைப் போலக் கண்கள்; காதுகளிலோ அழகிய குண்டலங்கள்; இவைகளைப் பார்க்கையில் எல்லா ஸௌந்தரியங்களுக்கும் பொக் கிஷம் போன்றதாகத் தென்பட்டது.

ஸுந்தர் ப்ருகுடி மனோஹர் நாஸா |
பால திலகு ருசிரதா நிவாஸா || 3184
ஸோஹத் மௌரு மனோஹர் மாதே |
மங்கலமய முகுதா மனி காதே || 3185

ஸுந்தரமான புருவங்களும், அழகிய மனங்கவர் நாஸியும், நெற்றியில் திலகமும் அழகின் இருப்பிடம் போல் தோன்றின. மங்கலமான முத்துக்களினாலும், மணிகளினாலும் கோர்க்கப்பட்ட மனோஹரமான தலைச்சுட்டி அவர் நெற்றிக்குப் பின்னும் அழகூட்டுகிறது.

காதே மஹாமணி மௌர் மஞ்ஜுள்
அங்க ஸப் சித சோர்ஹீம் |
புர நாரி ஸுர ஸுந்தரீம் பர்ஹி
பிலோகி ஸப் தின் தோர்ஹீம் || 3186
மனி பஸன் பூஷன் வாரி
ஆரதி கர்ஹிம் மங்கல காவ்ஹீம் |
ஸுர ஸுமன் பரிஸஹிம் ஸுத
மாகத் பந்தி ஸுஜஸு ஸுநாவ்ஹீம் || 3187

ஸுந்தரமான தலைச்சுட்டியில் விலையுயர்ந்த மணி களும், ரத்னங்களும் இழைக்கப்பட்டிருக்கின்றன. எல்லா அங்கங்களும் சித்தத்தை ஆகர்ஷிக்கின்றன. எல்லா நகர ஸ்த்ரீகளும், தேவ கன்னிகைகளும் மண மகனுக்காக த்ருஷ்டி சுற்றிப் போடுகிறார்கள். பின் னும் மணிகள், வஸ்த்ரங்கள், ஆபரணம் எல்லாம் ஸ்ரீராமனின் எதிரில் வைத்து ஆரத்தி எடுத்தார்கள். மங்கள கானம் மேலும் முழங்கத் தேவதைகள் புஷ்ப மாரி பொழிய ஸுதர்கள், மாகதர்கள், பிருதாவலி கூறும் பாணர் ஜாதி மக்கள் ஆகியோர் அரசர் புகழி னைப் பாடி வ்ருத்தாந்தம் கூறினார்கள்.

கோஹபர்ஹிம் ஆனே கும்அர் கும்அரி
ஸுஆ ஸினின்ஹ ஸுக பாயி கை |
அதி ப்ரீதி லௌகிக் ரீதி லாகீம்
கரன் மங்கல காயி கை || 3188
லஹ்கௌரி கௌரி ஸிகாவ் ராமஹி
ஸீய ஸன் ஸாரத கஹைம் |
ரனிவாஸு ஹாஸ் பிலாஸ் ரஸ பஸ்
ஜன்ம கோ பலு ஸப் லஹைம் || 3189

ஸுமங்கலி ஸ்த்ரீகள் ஸுகம் பெறக் குமாரர்களை யும், குமாரிகளையும், (நான்கு தம்பதிகளையும்) குல தேவதையுள்ள கோவிலுக்கு அழைத்து வந்தார்கள்.

அத்யந்த ப்ரீதியுடன் மங்கல கானம் இசைத்துக் கொண்டே லௌகிக முறைப்படிச் சடங்குகளைச் செய் தார்கள். பார்வதி தேவி ஸ்ரீ ராமச்சந்த்ரனுக்குக் கல் யாண ஸந்தர்ப்பத்தில் ஒருபிடி உணவை மணமகனுக் கும் மணமகளுக்கும் வாயில் போடக் கற்றுத் தரு கிறாள்; வேடிக்கை வினோதங்களையும் சொல்லிக் கொடுக்கிறார். ஸரஸ்வதி தேவியும் மணமான பெண் ணான ஸீதைக்கு வேடிக்கை வினோதங்களைக் கற்பிக் கிறார். இப்படியாக ராணியின் அந்தப்புரம் வேடிக்கை வினோதங்களில் மூழ்கி இருந்தது. ஸ்ரீராமனையும்-ஸீதாதேவியையும் பார்த்துப் பார்த்து எல்லோரும் தங் களது ஜன்மம் எடுத்ததன் பலனை அனுபவித்தார்கள்.

நிஜ பானி மனி மஹுஂ தேகி அதி
மூர்தி ஸுரூபநிதான் கீ |
சாலதி ந புஜபல்லீ பிலோகனி
பிரஹ் பய பஸ் ஜானகீ || 3190
கௌதுக் பிநோத் ப்ரமோது ப்ரேமு
ந ஜாயி கஹி ஜானஹிம் அலீம் |
பர் கும்வரி ஸுந்தர் ஸகல ஸகீம்
லவாயி ஜன்வாஸேஹி சலீம் || 3191

ஸீதாதேவி தனது கைகளில் உள்ள அழகிய மணி வளைகளின் மூலம் அழகுப் பொக்கிஷமான ஸ்ரீ ராமச் சந்த்ரனின் அழகிய முகத்தை நிழலாகப் பார்த்துப் பூரிக்கிறாள். இந்த அழகிய தோற்றத்தைக் கண்டு கொண்டே இருந்த ஜானகி கைகளை அசைத்தால்

எங்கே ஸ்ரீராமனுடைய முகம் தெரியாது போய் விடுமோ; என்று அவள் அந்த விரஹத்தைக் கூட ஸஹிக்க முடியாதவளாய்க் கொடிக் கைகளைக் கொஞ்சமும் அசைக்காமல் அப்படியே வைத்திருக்கிறாள். தன் கண்களையும், இமைகளையும் மூடாமல் அப்படியே பார்த்துக் கொண்டு இருந்தாள். அந்த ஸமயத்தில் பெண்டிர்களுடன் நடந்த கேளிக்கைகளும், விநோதங்களும், ஆனந்தமும், அன்பும் சொல்லில் அடங்காதவை. அந்த அனுபவத்தை அங்கிருந்த ஸகிகள்தான் அறிவர்; கூற முடியும். இதன் பின்பு வரன்-வது இருவரையும் ஸகிகள் மாப்பிள்ளை வீட்டார் தங்கியிருந்த இடம் கூட்டிச் சென்றார்கள்.

தேஹி ஸமய ஸுநிஅ அஸீஸ் ஜஹம்
தஹம் நகர் நப் ஆனந்து மஹா ।
சிரு ஜிஅஹுஂ ஜோரீம் சாரு
சார்யோ முதித் மன் ஸப்ஹீம் கஹா ॥ 3192

ஜோகீந்த்ர ஸித்த முனீஸ் தேவ
பிலோகி ப்ரபு துந்துபி ஹனீ ।
சலே ஹர்ஷி பர்ஷி ப்ரஸுன் நிஜ
நிஜ லோக் ஜய ஜய ஜய பனீ ॥ 3193

அந்த ஸமயத்தில் எங்குமே எல்லா இடங்களிலும், ஆகாயத்திலும், பூமியிலும் ஜய ஜய கோஷம் எழுந்தது. எல்லா இடங்களிலும் ஆசீர்வாதங்களின் தொனி கேட்டுக் கொண்டிருந்தது. எங்கும் ஆனந்த நிழல் படர்ந்தது. இந்த அழகிய நான்கு ஜோடிகளும் சிரஞ்ஜீவியாக இருக்க வேண்டுமென்று யாவரும் தெளிந்த உள்ளத்தோடு ப்ராத்தனை செய்தார்கள். யோகிகள், ஸித்தர்கள், முனிவர்கள், யாவரும் தேவர்களின் ப்ரபுவான ஸ்ரீ ராமச்சந்த்ரனைக் கண்டு மகிழ்ந்தார்கள். துந்துபி வாஸித்தார்கள். ஸந்தோஷமடைந்து புஷ்பமாரி பொழிந்த வண்ணம் ஜய முண்டாகட்டும், ஜய முண்டாகட்டும், ஜய முண்டாகட்டும், என்று கூறியவாறே தங்கள் தங்கள் (உலகம்) இருப்பிடம் சென்றார்கள். (இப்படியாக ஸ்ரீராம-ஸீதா விவாஹம் சிறப்பாக முடிந்தது)

ஸஹித பதூடின்ஹ கும்வர் ஸப்
தப் ஆயே பிது பாஸ் ।
ஸோபா மங்கல மோத்
பரி உம்கேவு ஜனு ஜன்வாஸ் ॥ 3194

அப்பொழுது அந்த நான்கு ராஜகுமாரர்களும் தங்கள் தங்கள் மனைவியுடன் கூடத் தந்தையார் அருகே வந்தார் கள். அந்நேரம் சோபை, மங்களம், ஆனந்தம் எல்லாமே ஒன்று சேர்ந்து பொங்கி வழிவது போல் மாப்பிள்ளை வீட்டார் இருக்குமிடம் விளங்கியது. (அதாவது; அப் போது மணமகன் வீட்டில் ஆனந்தம் பொங்கியது)

புனி ஜேவநார் பயீ பஹு பாந்தீ |
படயே ஜனக் போலாயீ பராதீ || 3195
பரத் பாம்வ்டே பஸன் அஞுபா |
ஸுதன்ஹ ஸமேத் கவன் கியோ பூபா || 3196

பிறகு பலவிதமான சமையல் விருந்துகள் செய்யப் பட்டன. ஜனகர் எல்லாப் பிள்ளை வீட்டாரையும் அழைத்தார். ராஜா தசரதர் பிள்ளைகள் ஸஹிதம் வந்தார். அவருக்கு விலை உயர்ந்த நடைபாவாடைகள் விரிக்கப்பட்டன.

ஸாதர் ஸப் கே பாய் பகாரே |
ஜதாஜோகு பீடன்ஹ பைடாரே || 3197
தோயே ஜனக அவதபதி சர்னா |
ஸீலு ஸநேஹு ஜாயி நஹிம் பர்னா || 3198

பிறகு ஜனகர் மரியாதையுடன் எல்லோருடைய பாதங்களையும் தன் கைகளாலேயே கழுவி விட்டார். அதன் பின்னர் எல்லோரையும் அவரவர்கட்குத் தகுந்த படி ஆஸனத்தில் அமர வைத்தார். அப்பொழுது ஜனகர் அயோத்யாதிபதி தசரதரின் சரணங்களைத் தண்ணீர் விட்டுக் கழுவினார். அவருடைய குணத்தை யும், நட்பையும் யாரால் வர்ணிக்க முடியும்?

பஹுரி ராம பத் பங்கஜ் தோயே |
ஜே ஹர் ஹ்ருதய கமல மஹும் கோயே || 3199
தீனிவு பாயி ராம ஸம ஜானீ |
தோயே சரன் ஜனக் நிஜ பானீ || 3200

அதன்பின்பு சிவபிரானின் ஹ்ருதய கமலத்தில் மறைந் திருக்கும் ஸ்ரீராமனின் பாத கமலங்களைத் தண் ணீர் விட்டு அலம்பினார். அவர் ராமனைப் போலவே எண்ணி மற்ற ராஜகுமாரர்களின் கால்களையும் கைக ளால் கழுவினார்.

ஆஸன் உசித் ஸப்ஹி ந்ருப் தீன்ஹே |
போலி ஸுப்காரீ ஸப் லீன்ஹே || 3201
ஸாதர் லகே பரன் பன்வாரே |
கனக கீல் மனி பான் ஸம்வாரே || 3202

ராஜா ஜனகர் எல்லா விருந்தாளிகளையும் அவர வர்க்குத் தகுந்த ஆஸனத்தில் அமர்த்தினார்; பரிமாறு பவர்களை அழைத்து மரியாதையுடன் இலை போடச் செய்தார். அதாவது; மரகதம், மாணிக்கங்கள் இழைக் கப்பட்டு இருந்த தட்டுகளில் தங்க ஆணிகளைக் கொண்டு அடிக்கப்பட்டிருந்தன.

ஸுபாதன் ஸுரபீ ஸர்பி
ஸுந்தர் ஸ்வாது புனீத் |
சன் மஹும் ஸப் கேம் பருஸி
கே சதுர் ஸுஆர் பிநீத் || 3203

மிகவும் கை தேர்ந்த, திறமை வாய்ந்த சிறந்த சமை யற் காரர்களைக் கொண்டு மிகவும் சுவையுள்ள பற்பல பருப்பு வகைகளும், அன்ன வகைகளும், நறுமண முள்ள பசுவின் நெய்யும் நிமிட நேரத்தில் எல்லோர் எதிரிலும் கொண்டு வந்து பரிமாறப்பட்டன.

பஞ்ச கவல் கரி ஜேவன் லாகே |
காரி கான் ஸுனி அதி அனுராகே || 3204
பாந்தி அனேக் பரே பக்வானே |
ஸுதா ஸரிஸ நஹிம் ஜாஹி பகானே || 3205

எல்லோரும் ஐந்து கவளங்களை எடுத்து; 'ப்ரா ணாய ஸ்வாஹா, அபாநாயா ஸ்வாஹா, வ்யாநாய ஸ்வாஹா, உதானாய ஸ்வாஹா, ஸமானாய ஸ்வாஹா' என்ற இந்த மந்த்ரங்களை உச்சரித்துக் கொண்டு அந்த முதல் ஐந்து கவளங்களை, உட்கொண்டு சாப்பிட ஆரம்பித்தனர். வசைகீதம் அழகாகப் பாடப்பட்டது கேட்டு மகிழ்வில் திளைத்தனர். பலவகை அம்ருதம் போன்ற சுவைமிக்க உணவு வகைகள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன அவைகளை வர்ணிக்கவே முடியாது.

பருஸன் லகே ஸுஆர் ஸுஜானா |
பிஞ்ஜன் பிபித நாம் கோ ஜானா || 3206

சாரி பாந்தி போஜன் பிதி காயீ |
ஏக் ஏக் பிதி பர்னி ந ஜாயீ || 3207

ஸாமர்த்யமான சமையற் காரர்களைக் கொண்டு பலவிதமான வ்யஞ்ஜனங்கள் செய்து பரிமாறப்பட்டன. அவைகளின் பெயர்களை யார்தான் அறிந்து சொல்ல முடியும்? மேலும், சர்வ்ய, சோஷ்ய, லேஹ்ய, பேய (மெல்லல், உறிஞ்சல், நக்கிடுதல், குடித்தல் என்பன) என்று சுவைதரும், சாப்பிடுவதற்கு ஏற்ற வகையில் நான்கு வித வகைப்படிச் சாப்பாடு தயார் செய்து எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. ஒவ்வொரு வகையிலும் அவ்வளவு பதார்த்தங்கள் சமைக்கப்பட்டிருந்தன. யாரும் இது வரை செய்தது இல்லை. அதைப் பற்றி விளக்கிக் கூறவும் முடியாது.

சரஸ் ருசிர் பிஞ்ஜன் பஹு ஜாதீ |
ஏக் ஏக் ரஸ் அகனித் பாந்தீ || 3208
ஜேவந்த தேஹிம் மதுர் துனி காரீ |
லை லை நாம் புருஷ அரு நாரீ || 3209

ஆறுவித ருசிப்படிப் பலதரப்பட்ட வ்யஞ்ஜனங்கள் செய்யப் பட்டிருந்தன. ஒவ்வொரு வித ருசியிலும் பல ஆஹாரங்கள் பண்ணப் பட்டிருந்தன. போஜனம் சாப்பிட ஆரம்பித்ததும் ஸ்த்ரீகளும்-புருஷர்களும் பரஸ் பரம் ஒவ்வொருவர் பெயரைச் சொல்லி வேடிக்கை யாக மதுரமான குரலில் எல்லோரையும் திட்டிக் கொண்டிருந்தனர்.

ஸமய ஸுஹாவனி காரி பிராஜா |
ஹம்ஸத் ராவு ஸுனி ஸஹித் ஸமாஜா || 3210
ஏஹி பிதி ஸப்ஹீம் போஜனு கீன்ஹா |
ஆதர் ஸஹித் ஆசமனு தீன்ஹா || 3211

ஸமயத்திற்குத் தகுந்தபடி அந்தத் திட்டுகளும் ப்ர மாதமாகவே நன்றாகவேயிருந்தன. அந்த வசவுகளைக் கேட்டு ராஜா தசரதரும் தாங்க முடியாமல் தனது இஷ்டமித்ர பந்துக்களுடன் சிரித்து மகிழ்ந்தார். எல் லோரும் போஜனம் செய்து முடித்தவுடன் யாவருக்கும் ஆசமனம் செய்ய; அதாவது; முகம்- கைகள் கழுவத் தண்ணீர் கொடுக்கப்பட்டது.

தேயி பான் பூஜை ஜனக்
தஸரது ஸஹித் ஸமாஜ் |
ஜன்வாஸேஹி கவ்னே முதித்
ஸகல் பூப் ஸிரதாஜ் || 3212

பின்னர் சாப்பிட்டு முடிந்தவுடன் ராஜா ஜனகர் எல்லோருக்கும் தாம்பூலம் கொடுத்தார்; தசரதரை அன்புடன் பூஜை செய்தார். எல்லா ராஜாக்களிலும் சிறந்த சக்ரவர்த்தியான ராஜா தசரதர் மகிழும் சித்தத் துடன் மாப்பிள்ளை வீட்டார் தங்கிய இடம் சென்றார்.

நித நூதன் மங்கல் புர் மாஹீம் |
நிமிஷ ஸரிஸ தின் ஜாமினி ஜாஹீம் || 3213
படே போர் பூபதிமனி ஜாகே |
ஜாசக் குன் கன் காவன் லாகே || 3214

ஜனக புரியில் நித்யம் புதிய புதிய மங்கலமான சுப காரியங்கள் நடந்து வந்தன. இரவும்-பகலும் ஒரு நிமிடம் போல் கழிந்தது. ராஜாக்களின் மகுட மணி போன்ற தசரதர் விடியற்காலையிலேயே எழுந்தார். யாசகர்கள் அவருடைய வம்சாவளியைப் பற்றிப் புகழ்ந்து பாடினார்கள்.

தேகி கும்வர் பர் பதுன்ஹ ஸமேதா |
கிமி கஹி ஜாத் மோது மன் ஜேதா || 3215
ப்ராத க்ரியா கரி கே குரு பாஹீம் |
மஹா ப்ரமோது ப்ரேமு மன் மாஹீம் || 3216

நான்கு புத்ரர்களையும் நான்கு வதுக்களுடனும் கூடப் பார்த்த தசரதர் தன்னைப் போன்ற புண்யம் எவருமே செய்ததில்லையென ஆனந்தம் அடைந்தார். அதை எப்படி நம்மால் கூற முடியும்? காலைக் கடன் களை முடித்துக் கொண்ட அவர் குரு வஸிஷ்டரிடம் சென்றார். அவர்கள் மனத்தில் மிகுந்த ஆனந்தமும், ப்ரேமையும் சொல்லில் அடங்காமல் நிறைந்திருந்தது.

கரி ப்ரநாமு பூஜா கர் ஜோரீ |
போலே கிரா அமியம் ஜனு போரீ || 3217
தும்ஹரீ க்ருபாம் ஸுனஹு முனி ராஜா |
பயஉம் ஆஜு மைம் பூரனகாஜா || 3218

ராஜா தசரதர் ப்ரணாமம் செய்து, பூஜித்து, கை குவித்து அஞ்ஜலித்து, அமுத மொழியில்; ஹே முனி ராஜரே! கேளும், தங்கள் க்ருபையால் இன்று நான் பூர்ண காமனாக ஆனேன்.

அப் ஸப் பிப்ர போலாயி கோஸாயீம் |
தேஹு தேனு ஸப் பாந்தி பனாயீம் || *3219*
ஸுனி குர் கரி மஹிபால் படாயீ |
புனி படயே முனி ப்ருந்த போலாயீ || *3220*

ஹே ஸ்வாமி, இப்பொழுது எல்லா ப்ராம்மணர் களையும் அழைத்து அவரவர்களுக்கு விதவிதமான நகைகளாலும், வஸ்த்ரங்களாலும் அலங்கரிக்கப்பட்ட பசுக்களை (கோதானம்) கொடுக்க வேண்டும் என்றார். இதைக் கேட்ட குருவும் ராஜாவின் பெருந்தன்மையை, குணத்தைப் புகழ்ந்து எல்லா முனிவர்களையும் தானம் பெற வேண்டி அழைத்தார்.

பாமதேவு அரு தேவரிஷி
பால்மீகி ஜாபாலி |
ஆயே முனிபர் நிகர் தப்
கௌஸிகாதி தபஸாலி || *3221*

அப்பொழுது குரு வாமதேவரும், தேவரிஷி நார தரும், வால்மீகியும், ஜாபாலியும், விச்வாமித்ரரும், மற்றும் அனேக தபஸ்விகளான ச்ரேஷ்ட முனிவர் களும் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

தண்ட ப்ரனாம் ஸப்ஹி ந்ருப கீன்ஹே |
பூஜி ஸப்ரேம் பராஸன் தீன்ஹே || *3222*
சாரி லச்ச பர் தேனு மகாயீம் |
காம ஸுரபி ஸம ஸீல் ஸுஹாயீம் || *3223*

ராஜா எல்லோருக்கும் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார்; அவர்களை அன்புடன் பூஜித்தார்; உயர்ந்த ஆஸனம் கொடுத்தார். நான்கு லக்ஷம் பசுக்களை வாங்கினார். அவைகள் பார்ப்பதற்கு அழகாகவும், காமதேனுவைப் போல் நல்ல குணமுள்ளனவாகவும் இருந்தன.

ஸப் பிதி ஸகல அலங்க்ருத கீன்ஹீம் |
முதித் மஹிப மஹிதேவன்ஹ தீன்ஹீம் || 3224
கர்த பினய் பஹு பிதி நர்நாஹூ |
லஹேவும் ஆஜு ஜக் ஜீவன் லாஹூ || 3225

அவர்கள் எல்லாரையும் ஆபரணங்களினாலும், ஆடையினாலும் அலங்கரித்து மகிழ்ந்த தசரத ராஜன் பூ தேவர்களான ப்ராம்மணர்களுக்கும் எல்லாவற்றையும் கொடுத்தார். பின்னர் ராஜா எல்லோரையும் வணங்கி ஜகத்தில் இன்றுதான் நான் பிறந்ததின் பயனை அடைந்தேன் என்றார்.

பாயி அஸீஸ் மஹீஸு அனந்தா |
லியே போலி புனி ஜாசக் ப்ருந்தா || 3226
கனக் பஸன் மனி ஹய கய ஸ்யந்தன் |
தியே பூஜி ருசி ரபிகுல நந்தன் || 3227

பிறகு ப்ராமணர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்ட அரசன் மகிழ்ந்த பின்னர் யாசக ஸமூஹங்களைக் கூப்பிட்டார். எல்லோரையும் கேட்டு அவரவர் இஷ்டத்தைக் கேட்டு, தங்கம், வஸ்த்ரம், மணிகள், குதிரைகள், யானைகள், ரதங்கள் எல்லாவற்றையும் பரிசாகக் கொடுத்தார். இம்மாதிரி ஸூர்ய குலத்தை ஆனந்த மயமாக்கும் தசரதர் ஏகப்பட்ட தான தருமம் செய்தார்.

சலே படத் காவத் குன் காதா |
ஜய ஜய ஜய் தின்கர் குல நாதா || 3228
ஏஹி பிதி ராம் பிஆஹ் உசாஹூ |
ஸகயி ந பர்னி ஸஹஸ் முக் ஜாஹூ || 3229

அவர்கள் யாவரும் குண கானம் செய்தவாறு ''ஸூர்ய குலத்தின் ஸ்வாமிக்கு மங்களமுண்டாகட்டும், மங்களமுண்டாகட்டும்!! என்று சொல்லிக் கொண்டே போனார்கள். இவ்விதமாக ஸ்ரீ ராமச்சந்த்ரன் விவாஹ உத்ஸவம் நடந்தேறியது. ஆயிரம் முகம் கொண்ட ஆதி சேஷனாலும் அதை வருணிக்க முடியாது.

பார் பார் கௌஸிக் சரன்
ஸீஸு நாயி கஹ் ராவு |

யஹ் ஸபு ஸுகு முனிராஜ்
தவ க்ருபா கடாச்ச பஸாவு || *3230*

திரும்பத் திரும்பத் தசரதர் விச்வாமித்ரரின் கால்களில் வீழ்ந்து வணங்கி, ஹே முனி ராஜரே! இந்த எல்லா ஸுகமும் தங்கள் க்ருபாகடாக்ஷத்தால் வந்த அனுக்ரஹமாகும் என்றார்.

ஜனக் ஸ்னேஹு ஸீலு கர்தூதீ |
ந்ருபு ஸப் பாந்தி ஸராஹ் பிபூதீ || *3231*
தின் உடி பிதா அவத்பதி மாகா |
ராக்ஹிம் ஜனகு ஸஹித் அனுராகா || *3232*

ராஜா தசரதர் ஜனகருடைய ஸ்நேஹத்தையும், சீலமான குணத்தையும், செயலையும், ஐச்வர்யத்தையும் பற்றி மிகவும் பாராட்டிப் புகழ்ந்தார். தினம் தினம் விடியற்காலையில் அயோத்தி மன்னன் தசரதர் தான் நகரம் போக வேண்டும் என்று அனுமதி கேட்கிறார். ஆனால்; ஜனகரோ ப்ரேமையினாலும், மரியாதையினாலும் உந்தப்பட்டு அவரைப் போக விட மாட்டேன் என்று இருக்க வைத்தார்.

நித நூதன் ஆதரு அதிகாயீ |
தின் ப்ரதி ஸஹஸ் பாந்தி பஹுநாயீ || *3233*
நித நவ நகர் அனந்த உசாஹூ |
தஸரத கவனு ஸோஹாயி ந காஹூ || *3234*

மரியாதையும், அன்பும் தினம் தினம் புதிதாகப் பெருகிக் கொண்டே வந்தது. தினம் தினம் ஆயிரம் விதமான விருந்து உபசாரங்களை ஜனகர் செய்தார். நகரத்தில் நித்யம் புதிய நிகழ்ச்சியும், உத்ஸாஹமும் இருந்தன. ஆகவே, தசரதரை இத்தனை சீக்கிரம் ஊருக்குத் திரும்ப அனுப்ப யாருக்கும் இஷ்டமில்லை.

பஹுத் திவஸ் பீதே ஏஹி பாந்தீ |
ஜனு ஸ்னேஹ் ரஜு பந்தே பராதீ || *3235*
கௌஸிக் ஸதாநந்த தப் ஜாயீ |
கஹா பிதேஹ் ந்ருபஹி ஸமுஜாயீ || *3236*

இவ்வாறாக பல நாட்கள் கழிந்த பின், வந்திருந்த ஸம்பந்தி வீட்டார் அன்பினால் கட்டுண்டு, ஊருக்குத் திரும்பிக் கூடப் போக முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ராஜா ஜனகரிடம் விச்வாமித்ரரும், குரு சதானந்தரும் போய் விவரம் அறிவித்து;

அப் தஸரத் கஹம் ஆயஸு தேஹூ ।
ஜத்யபி சாடி ந ஸகஹூ ஸநேஹூ ॥ 3237
பலேஹி நாத் கஹி ஸசிவ் போலாயே ।
கஹி ஜய ஜீவ ஸீஸ் தின்ஹ நாயே ॥ 3238

ஸ்வாமி ஹே ராஜன்! தங்களுக்குத் தசரதரின் ஸமூஹத்தாரிடம் மிகுந்த பற்று உண்டாகி, அதனால் அவர்களைப் போக விடமாட்டேன் என்கிறீர்கள். ஆயினும், தாங்கள் இப்பொழுது தயவு செய்து தசரதரைத் தம் நாடு போக அனுமதி தாருங்கள் என்றனர். அதற்கு - 'மிகவும் நல்லது' என்று ஜனகரும் ஒத்துக் கொண்டு, தமது மந்த்ரிமார்களை உடனே அழைத்தார். அவர்களும் வந்து 'ஜயஜீவ' என்று சொல்லித் தலைவணங்கி நின்றார்கள்.

அவதநாது சாஹத் சலன்
பீதர் கர்ஹு ஜனாவு ।
பயே ப்ரேமபஸ் ஸசிவ ஸுனி
பிப்ர ஸபாஸத் ராவு ॥ 3239

ஜனகர் அந்த மந்த்ரிகளிடம் அயோத்யாவின் நாதர் தசரதர் தங்கள் ஊர் செல்ல விரும்புகிறார். அந்தப் புரம் போய் இவ்விஷயத்தைக் கூறுங்கள் என்றார். உடனே மந்த்ரிகள், ப்ராம்மணர்கள், ஸபையோர்களும், ராஜா ஜனகரும் கூட எல்லோருமே ப்ரேமையின் வசமாயினர்.

புர்பாஸீ ஸுனி சலிஹி பராதா ।
பூஜத் பிகல் பரஸ்பர பாதா ॥ 3240
ஸத்ய கவ்னு ஸுனி ஸப் பிலகானே ।
மனஹு ஸாஞ்ஜ் ஸரஸிஜ ஸகுசானே ॥ 3241

ஸம்பந்திமார்கள், தசரதர் யாவரும் ஊருக்குத் திரும்புகிறார்கள், என்பதைக் கேட்ட ஜனகபுரி மக்கள்

வ்யாகுலமடைந்து ஒருவருக்கொருவர் கேட்கத் தொடங்கினர். கேட்டதும்; மாலை நேரத்தில் எப்படிக் கமல புஷ்பம் வாடிடுமோ அம்மாதிரி அவர்கள் இதயக் கமலம் துக்கத்தினால் வாடிவிட்டது.

ஜஹம் ஜஹம் ஆவத் பஸே பராதீ |
தஹம் தஹம் ஸித்த சலா பஹு பாந்தீ ||3242
பிபித் பாந்தி மேவா பக்வானா |
போஜன் ஸாஜு ந ஜாயி பகானா || 3243

எங்கெங்கு எந்த எந்த இடத்தில் ஸம்பந்தி வீட்டார் வந்து தங்கி இருந்தார்களோ; அங்கெல்லாம் அனேக விதமான ஸமையற் சாமான்கள் அனுப்பப்பட்டன. பலவிதத் தின்பண்டங்கள் பாலினால் செய்து அனுப்பப் பட்டன.

பரி பரி பஸஹம் அபார் கஹாரா |
படயீ ஜனக் அனேக ஸுஸாரா || 3244
துரக் லாக் ரத் ஸஹஸ பசீஸா |
ஸகல் ஸம்வாரே நக அரு ஸீஸா || 3245

பலவிதமான எருதுகளிலும், எருது பூட்டிய வண்டிகளில் ஸாமான்களையும் மூட்டை மூட்டையாக அனுப்பப்பட்டன. கூடவே அழகிய கட்டில்களும், படுக்கைகளும் அனுப்பப்பட்டன. அழகாக நகத்திலிருந்து தலை வரை அலங்கரிக்கப்பட்ட லக்ஷம் குதிரைகளும், மேலும் 35 ஆயிரம் ரதங்களும்;

மத்த ஸஹஸ தஸ் ஸிந்துர் ஸாஜே |
ஜின்ஹஹி தேகி திஸி குஞ்ஜர் லாஜே || 3246
கனக் பஸன் மனி பரி பரி ஜானா |
மஹிஷீம் தேனு பஸ்து பிதி நாநா || 3247

மேலும், பத்தாயிரம் அலங்கரிக்கப்பட்ட திசை யானைகளும், நாணும் அழகுடைய மத்த கஜங்களும், வண்டிகளில் தங்கத்தையும், வஸ்த்ரங்களையும், ரத்னங்களையும் எல்லாம் நிரப்பி நிரப்பி அனுப்பப்பட்டன. எருமைகளையும் நிறையப் பசுக்களையும், மற்றும் அனேக வித வஸ்துக்களையும் அனுப்பினார் ஜனகர்.

தாயிஜ் அமித ந ஸகிய கஹி
தீன்ஹ பிதேஹம் பஹோரி |
ஜோ அவலோகத் லோகபதி
லோக் ஸம்பதா தோரி || 3248

இது மாதிரி, ஜனகர் பின்பும் பலவிதமான வர தக்ஷிணைகளைக் கொடுத்தார். இந்த வரதக்ஷிணை களின் மதிப்பைக் கூற முடியாது. இதைக் கண்டு லோகபாலகர்களின் லோகங்களில் உள்ள செல்வங்கள் கூடக் குறைவாகவே தெரியும்.

ஸபு ஸமாஜு ஏஹி பாந்தி பனாயீ |
ஜனக் அவதபுர் தீன்ஹ படாயீ || 3249
சலிஹி பராத் ஸுனத் ஸப் ரானீம் |
பிகல் மீனகன் ஜனு லகு பானீம் || 3250

இம்மாதிரி ஸகல சாமான்களையும் அணி செய்து வைத்து ராஜா ஜனகர் அயோத்யாபுரிக்கு அனுப்பி விட்டார். ஸம்பந்தி வீட்டார் திரும்பிப் போவதைக் கேள்விப்பட்ட ராணிகள் வ்யாகுலமடைந்தார்கள். சிறிது தண்ணீரில் மீன்கள் எப்படித் தத்தளிக்குமோ அதைப் போல அவர்கள் மனம் துடித்தது.

புனி புனி ஸீய கோத் கரி லேஹீம் |
தேயி அஸீஸ் ஸிகாவனு தேஹீம் || 3251
ஹேஏஹு ஸந்ததத் பியஹி பியாரீ |
சிரு அஹிபாத் அஸீஸ் ஹமாரீ || 3252

அவர்கள் திரும்பத் திரும்பத் தமது மகள் ஸீதையை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு, ஆசீர்வாதம் செய்து, புருஷன் வீட்டில் போய் எப்படி இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிக் கொடுத்தார்கள். நீ எப்போதும் உன் கணவனிடம் ப்ரியமான மனைவியாக இருக்க வேண்டும். உன் மங்களம், ஸௌபாக்யம், என்றும் நிலைக்கட்டும்; தீர்க்க ஸுமங்கலியாக இருப் பாயாக. எங்களுடைய ஆசீர்வாதம் உனக்கு என்றும் இருக்கட்டும் என்று ப்ரியத்துடன் தழுதழுத்த குரலில் கூறினார்கள்.

ஸாஸூ ஸஸுர் குர் ஸேவா கரேஹூ |
பதி ருக் லகி ஆயஸு அனுஸரேஹூ || 3253
அதி ஸ்னேஹ் பஸ் ஸகீம் ஸயானீ |
நாரி தர்ம ஸிகவ்ஹிம் ம்ருது பானீ || 3254

மாமனார், மாமியார், குருதேவர்கள், யாவருக்கும் ஸேவை செய்ய வேண்டும்.

பதியினுடைய பக்கம் பார்த்து அவரது மனது ப்ரகாரம் நடந்து அவருடைய ஆஜ்ஞைகளை நிறை வேற்ற வேண்டும். மேலும், சாதுர்யமான ஸகி கள் மிகுந்த வாஞ்சையோடு ம்ருதுவான குரலில் பலவிதமான ஸ்த்ரீதர்மங்களைக் (அன்புப் பாடங் களை) கற்பித்தார்கள்.

ஸாதர் ஸகல கும்வரி ஸமுஜாயீம் |
ரானின்ஹ பார் பார் உர் லாயீம் || 3255
பஹுரி பஹுரி பேட்ஹிம் மஹ்தாரீம் |
கஹஹிம் பிரஞ்சி ரசீம் கத் நாரீம் || 3256

மரியாதையுடனும், அன்புடனும் எல்லாப் பெண் களுக்கும் ராணிகள் ஸ்த்ரீ தர்மத்தைப் பற்றி நல்ல உபதேசங்களைச் செய்து திரும்பத் திரும்ப அன்புடன் அணைத்துக் கொண்டார்கள். தாயார்கள் துயரம் தாங் காமல் திரும்பத் திரும்பத் தழுவிக் கொள்கிறார்கள். மேலும், ப்ரம்மனைப் பார்த்து இந்த ஸ்த்ரீ ஜன்மித்தை ஏன் உண்டாக்கினீர்? இவர்கள் புருஷன் வீடு செல்வது என்ற துயரத்தை எங்களால் தாங்க முடியவில்லையே என்று வருந்தினார்கள்.

தேஹி அவஸர் பாயின்ஹ ஸஹித
ராமு பானு குல கேது |
சலே ஜனக மந்திர் முதித்
பிதா கராவன் ஹேது || 3257

அதே ஸமயம் ஸூர்ய வம்சத்தின் கொடி போன்ற ஸ்ரீ ராமச்சந்த்ரன் தன் ஸஹோதரர்களுடன் ஸந்தோஷத் துடன் விடைபெற வேண்டி ஜனகரின் அரண்மனை வந்தார்.

சாரிஉ பாயி ஸுபாயம் ஸுஹாயே |
நகர் நாரி நர் தேகன் தாயே || 3258
கோவு கஹ் சலன் சஹத் ஹஹிம் ஆஜூ |
கீன்ஹ பிதேஹ் பிதா கர் ஸாஜூ || 3259

இயற்கையிலேயே பெரும் அழகுடன் விளங்கும் இந்த நான்கு ஸஹோதரர்களையும் பார்க்க வேண்டி நகரத்தில் உள்ள எல்லா ஸ்த்ரீ-புருஷர்களும் ஓடோடி வந்தார்கள். இன்று இவர்கள் போக விரும்புகிறார்கள். நமது விதேஹ ராஜா அவர்களை வழி அனுப்ப எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டார் என்றனர் சிலர்.

லேஹு நயன் பரி ரூப் நிஹாரீ |
ப்ரிய பாஹுனே பூப் ஸுத சாரீ || 3260
கோ ஜானை கேஹி ஸுக்ருத ஸயானீ |
நயன் அதிதி கீன்ஹே பிதி ஆனீ || 3261

இந்த ராஜாவின் நான்கு புத்ரர்களையும் அவர் களது மனோஹரமான ரூபத்தையும் நன்றாகப் பார்த் துக் கொள்ளுங்கள். நாம் என்ன தவம் செய்தோமோ; ப்ரம்மன் இவர்களை இங்கு வரவழைத்து நமது கண் களுக்கு விருந்தாளியாக்குகிறார். இப்படி நடக்கும் என்று யாருக்காவது தெரியுமா?

மரனஸீலு ஜிமி பாவ் பியூஷா |
ஸுரதரு லஹை ஜன்ம கர் பூகர் || 3262
பாவ் நாரகீ ஹரிபது ஜைஸேம் |
இன்ஹ கர் தர்ஸனு ஹம் கஹும் தைஸேம் || 3263

இறக்கும் தருவாயிலுள்ள ஒருவனுக்கு அகஸ்மாத் தாக அம்ருதம் கிடைத்தால் எப்படியிருக்குமோ; ஜன் மம் முழுவதும் தரித்ரனாக இருந்தவனுக்குத் திடீரென்று கல்பக வ்ருக்ஷம் கிடைத்தால் எப்படியிருக்குமோ; நரகத்தில் கிடந்து தவிக்க வேண்டிய ஒருவனுக்குத் திடீரென்று பகவானுடைய பரமபதம் கிடைத்தால் எப்படியிருக்குமோ, அம்மாதிரி நமக்கு இந்த ஸ்ரீராமச் சந்த்ரனின் தர்சனம் கிடைக்கப் பெற்றதும் ஆகும்.

நிரகி ராம் ஸோபா உர் தர்ஹூ |
நிஜ மன் பனி மூர்த்தி மனி கரஹூ || 3264

ஏஹி பிதி ஸப்ஹி நயன் பலு தேதா |
கயே கும்வர் ஸப் ராஜ் நிகேதா || 3265

மேலும், ஸ்ரீ ராமச்சந்த்ரனின் அழகை, சோபையைக் கண்டு உங்கள் இதயக் கோவிலிலும் பதிய வைத்துக் கொள்ளுங்கள். உங்களது மனத்தைப் பாம்பாகவும் ஸ்ரீராமரின் திவ்ய மூர்த்தியை நாக மணியாகவும் நினைத்துக் கொள்ளுங்கள் என இம்மாதிரி எல்லோர் கண்களுக்கும் அருள் பயனை அளித்தவாறே நான்கு ராஜகுமாரர்களும் ஜனகரின் அரண்மனைக்குச் சென் றார்கள்.

ரூப் ஸிந்து ஸப் பந்து லகி
ஹர்ஷி உடா ரனிவாஸூ |
கர்ஹிம் நிசாவ்ரி ஆரதீ மஹா
முதித மன் ஸாஸூ || 3266

அழகுக் கடல் போன்ற எல்லா ஸஹோதரர்களை யும் கண்ட அந்தப்புர ஸ்த்ரீகள் தாங்கமுடியாத ஸந் தோஷமடைந்தார்கள். மாமிமார்கள் மகிழ்வுடன் நிரம் பிய மனத்துடன் மருமகப் பிள்ளைகளுக்கு த்ருஷ்டி சுற்றிப் போட்டு ஆரத்தி எடுத்தார்கள்.

தேகி ராம சபி அதி அனுராகீம் |
ப்ரேம பிபஸ் புனி புனி பத லாகீம் || 3267
ரஹீ ந லாஜ் ப்ரீதி உர் சாயீ |
ஸஹஜ் ஸ்னேஹூ பர்னி கிமி ஜாயீ || 3268

பெண்கள் ஸ்ரீராமனின் அற்புதமான அழகு ரூபத் தைக் கண்டு, மிகவும் அன்புடன் திரும்பத் திரும்ப அவர் கால்களில் விழுகிறார்கள். அவர்கள் ஹிருதயத்தில் ப்ரீதி நிழலிட்டிருந்தது. அதனால் அவர்களுக்கு வெட் கம் கூடத் தோன்றவில்லை. அவர்களுடைய ஸ்வபாவ மான நட்புக் குணத்தை எப்படி வர்ணிப்பது?

பாஇன்ஹ ஸஹித் உபடி அன்ஹவாயே |
சரஸ் அஸன் அதி ஸேது ஜேவாம் யே || 3269
போலே ராமு ஸூஅவஸரு ஜானீ |
ஸீல் ஸ்னேஹ் ஸகுசமய பானீ || 3270

அங்கிருந்த அந்தப்புர ஸ்த்ரீகள் வாஸனை த்ரவ்யங் களைப் பூசி ஸ்ரீராமனுக்கும், அவரது ஸஹோதரர் களுக்கும் மங்கல ஸ்நானம் செய்வித்தார்கள். பின்பு மகிழ்வுடன் யாவருக்கும் அறுசுவைப் போஜனங்களை அளித்து உண்ணச் செய்தார்கள். இந்த ஸமயம் அறிந்து ஸ்ரீராமன்; பண்பும், நட்பும், நாணமும் கலந்த குரலில்;

ராஉ அவதபுர் சஹத் ஸிதாயே ।
பிதா ஹோன ஹம் இஹாம் படாயே ॥ 3271
மாது முதித் மன் ஆயஸு தேஹூ ।
பாலக் ஜானி கரப் நித நேஹூ ॥ 3272

தாயே! மஹாராஜா தசரதர் அயோத்யாபுரிக்குச் செல்ல விரும்புகிறார். ஆகவே, அவர் தங்களிடம் விடை பெற்றுக் கொள்ளவே எங்களை இங்கு அனுப்பி வைத்தார். மகிழ்வோடு எங்களுக்கு ஆணையிடுங்கள்; எங்களை ஆசீர்வதியுங்கள். எங்களைத் தங்கள் பிள் ளைகளாகவே எண்ணி என்றும் ஸ்நேஹத்துடன் இருங் கள் என்றார்.

ஸுநத் பசன் பிலகேவு ரனிவாஸூ ।
போலி ந ஸக்ஹிம் ப்ரேமபஸ் ஸாஸூ ॥ 3273
ஹ்ருதயம் லகாயி கும்வரி ஸப் லீன்ஹீ ।
பதின்ஹ ஸௌம்பி பின்தீ அதி கீன்ஹீ ॥ 3274

இந்த வார்த்தைகளைக் கேட்ட ராணிகளுக்கு ஒன் றுமே பேசமுடியவில்லை. அந்தரப்புரமே வருத்தத்தி லாழ்ந்தது. எல்லோரும் துக்கத்தினால் வெறுப்படைந்து விட்டார்கள். மாமிமார்கள் அன்புப் பெருக்கில் பேச முடியாது நின்றார்கள். எல்லோரும் தங்கள் குமாரி களை மார்புடன் கட்டி அணைத்துக் கொண்டனர். பிறகு அவரவர் கணவன்மார்களிடம் ஒப்படைத்தார் கள்; பின் வணக்கத்தினைக் கூறினார்கள்.

கரி பிநய ஸிய ராமஹி ஸமர்பீ
ஜோரி கர் புனி புனி கஹை ।
பலி ஜாவும் தாத ஸுஜான் தும்ஹ
கஹும் பிதித கதி ஸப் கீ அஹை ॥ 3275
பரிவார் புரஜன் மோஹி ராஜஹி
ப்ரானப்ரிய ஸிய ஜானிபீ ।

துலஸீஸ் ஸீலு ஸ்னேஹு லகி
நிஜ கிங்கரீ கரி மானிபீ || 3276

வந்தனம் செய்து அவர்கள் ஸீதாதேவியின் கைகளைப் பிடித்து ஸ்ரீ ராமச்சந்த்ரன் கைகளில் ஒப்படைத்துக் கைகூப்பி; ஹே ஸ்வாமி! அறிவுள்ளவரே! நான் உங்கள் நிலையை நன்கு அறிவேன்; தாங்கள் எல்லாம் அறிந்தவர்; குடும்பத்திற்கும், குலத்திற்கும், நகரவாஸிகளுக்கும், எனக்கும், இவள் தகப்பனார் ஜனகருக்கும் ஸீதை ப்ராணனைப் போல ப்ரியமானவள் என்பதை அறிய வேண்டுகிறேன். ஹே துளஸீதாஸரின் ஸ்வாமியே! ஒழுக்கமுள்ள குணத்தையும், பற்றையும் கண்டு தங்கள் தாஸியாக இவளை ஏற்றுக் கொள்வீராக.

தும்ஹ பரிபூரன் காம ஜான்
ஸிரேமனி பாவப்ரிய |
ஜன குன காஹிக் ராம்
தோஷ் தலன் கருனாயதன் || 3277

ஹே ராமா! நீர் பூர்ணகாமர்; ஞானத்தில் சிரோமணி; சிறந்த அன்பர். நீர் பக்தர்களின் குணங்களை க்ரஹித்துக் கொள்பவர்; குற்றங்குறைகளை நாசம் செய்பவர்; கருணையின் இருப்பிடம்.

அஸ கஹி ரஹீ சரன் கஹி ரானீ |
ப்ரேம பங்க ஜனு கிரா ஸமானீ || 3278
ஸுனி ஸ்நேஹ் ஸானீ பர் பானீ |
பஹுபிதி ராம் ஸாஸு ஸன்மானீ || 3279

என இம்மாதிரி கூறிய ராணி ஸ்ரீராமனின் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு மௌனமாகி விட்டாள். ப்ரேமையாகிய சேற்றில் அவருடைய பேச்சுகள் அப்படியே ஒன்றாகின. ஸ்நேஹபாவத்துடன் சேர்ந்த இவள் பேச்சுக்களைக் கேட்ட மாமியாருக்குப் பலவிதமாக மரியாதைகளைச் செய்தார்.

ராம பிதா மாகத் கர் ஜோரீ |
கீன்ஹ ப்ரனாமு பஹோரி பஹோரீ || 3280
பாஇ அஸீஸ் பஹுரி ஸிரு நாஈ |
பாயின்ஹ ஸஹித் சலே ரகுராஈ || 3281

அப்போது ஸ்ரீராமன் இரு கரங்களையும் குவித்து விடைபெற்று மாமியை வணங்கினார். அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று ஸகோதரர்களுடன் கூட ஸ்ரீரகு ராமன் கிளம்பினார்.

மஞ்ஜு மதுர் மூர்தி உர் ஆனீ |
பயீ ஸ்னேஹ் ஸிதில ஸப் ரானீ || 3282
புனி தீரஜு தரி கும்வரி ஹங்காரீம் |
பார் பார் பேட்ஹிம் மஹதாரீம் || 3283

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் அழகிய, இனிய, உருவத்தைத் தங்களது ஹிருதயத்தில் வைத்துக் கொண்டு, ராணிகள் அனைவரும், வாஞ்சை காரணமாகத் தளர்ச்சி அடைந் தார்கள். பிறகு தைர்யத்தை வரவழைத்துக் கொண்டு, குமாரிகளை அழைத்து அந்தத் தாய்மார்கள் திரும்பத் திரும்ப அவர்களை மார்புடன் அணைத்துக் கொண் டார்கள். பாசத்தின் தாங்கமுடியாத சோகம் அப்போது தலை தூக்கி நின்றது.

பஹுஞ்சாவஹிம் பிரி மில்ஹிம் பஹோரீ |
பஹு பரஸ்பர் ப்ரீதி ந தோரீ || 3284
புனி புனி மிலத் ஸகின்ஹ பிலகாயீ |
பால் பச்ச ஜிமி தேனு லவாயீ || 3285

பெண்களை அனுப்புவதும், மீண்டும் மறுபடி அழைத்து ஆலிங்கனம் செய்து கொள்வதுமாக இருந் தனர். இதனால் அவர்கள் ப்ரீதி அதிகரித்தது. அந்தப் ப்ரேமை வசத்தால் துக்கமடைந்த பொழுது மற்ற தோழிப் பெண்கள் அந்தத் தாய்மார்களைக் கன்று போட்ட பசுவை அதன் அன்புக் கன்றிடமிருந்து தனி யாகப் பிரித்துச் செல்லும் காட்சி போல் ஸமாதானம் செய்து தனியாக அழைத்துச் சென்றனர். அந்த நிலைமை எப்படியிருந்தது என்றால்;

ப்ரேமபிபஸ் நர் நாரி ஸப்
ஸகின்ஹ ஸஹித் ரனிவாஸு |
மானஹும் கீன்ஹ பிதேஹ்புர்
கருனாம் பிரஹம் நிவாஸு || 3286

ஸ்த்ரீகளும்-புருஷர்களும், ஸகிகளுடன் கூடிய அந்தப் புரத்து ராஜமாதேவியரும் எல்லோருமே பிரிவு துக்கம் தாங்கமுடியாமல் தவித்தார்கள். மிதிலை நகரமே வியோக துக்கம் தாங்காமல் அன்புப் பாசத்தால் கட்டுண்டு, கருணையும், பிரிவும் நிலை கொண்டு துக்கத்துடன் காட்சியளித்தது.

ஸுக ஸாரிகா ஜானகீ ஜ்யாயே |
களக் பிஞ்ஜரன்ஹி ராகி படாயே || 3287
பியாகுல் கஹஹிம் கஹாம் பைதேஹீ |
ஸுனி தீரஜு பரிஹரயீ ந கேஹீ || 3288

ஜானகி தேவி எந்தக் கிளிகளையும், மைனாக்களையும் தங்கக் கூண்டில் வைத்து வளர்த்து வந்தாளோ அந்தப் பறவைகள் துக்கத்துடன் கலங்கியவண்ணம்; வைதேஹி எங்கே வைதேஹி? வைதேஹி எங்கே? என்று கதறும் போது அவைகளின் குரலைக் கேட்டதுமே யார்தான் தைர்யத்தை இழக்காமல் இருந்தார்கள்? எல்லோரும் தைர்யம் இழந்துதான் காணப் பட்டார்கள்.

பயே பிகல் கக ம்ருக ஏஹி பாந்தீ |
மனுஜ தஸா கைஸேம் கஹி ஜாதீ || 3289
பந்து ஸமேத ஜனகு தப் ஆயே |
ப்ரேம உமகி லோசன் ஜல் சாயே || 3290

அப்போது பறவைகளும்-ம்ருகங்களும் கூட இவ்விதம் பிரிவாற்றமையினால் துக்கமடைந்து தவித்தன என்பதைப் பார்க்கும்போது மனிதப் பிறவியின் நிலை பற்றிக் கேட்கவா வேண்டும்? ப்ரேமையினாலும், பாசத்தினாலும் கண்களில் கண்ணீர் பெருகிட ஜனக மஹாராஜா தனது ஸஹோதரருடன் அங்கு வந்தார்.

ஸீய பிலோகி தீரதா பாகீ |
ரஹே கஹாவத் பரம பிராகீ || 3291
லீன்ஹி ராயம் உர் லாயி ஜானகீ |
மிடீ மஹாமர்ஜாத் க்யான்கீ || 3292

பரம வைராக்யவானான ஜனகர்-ஸீதையைக் கண்டதும் தமது தைர்யமே போய்விட்டது என்கிறார்.

மேலும், அவர் ஜானகியை அழைத்து மார்புடன் அணைத்துக் கொண்டார். அன்பின் ஆதிக்கத்தின் காரணமாக-ஜ்ஞானம், மரியாதைகூட எங்கோ ஓடி மறைந்து விட்டது.

ஸமுஜாவத் ஸப் ஸசிவ ஸயானே |
கீன்ஹ பிசாரு ந அவஸர் ஜானே || 3293
பார்ஹிம் பார் ஸுதா உர் லாயீம் |
ஸஜி ஸுந்தர் பாலகீம் மகாயீம் || 3294

புத்திமான்களான மந்த்ரிகள் யாவரும் ராஜா ஜனகரிடம் வந்து ஸமாதானம் செய்தார்கள். இது வருந்துவதற்கு நேரமில்லை என்பதை அறிந்த ராஜா மகளைத் திரும்ப திரும்ப அணைத்தவாறு சிங்காரம் செய்யப் பட்ட அழகிய பல்லக்கை வருவித்தார்.

ப்ரேமபிபஸ் பரிவாரு ஸபு
ஜானி ஸுலகன் நரேஸ் |
கும்வரி சடாயீம் பாலகின்ஹ
ஸுமிரே ஸித்தி சனேஸ் || 3295

பரிவாரம் முழுவதும் பாசவசப்பட்டு சோகக் கடலில் ஆழ்ந்து இருந்தது. நல்ல முஹூர்த்தம், நல்ல லக்னம் ஒன்று கூடி வரவே ஜனகர் ஸித்தி வினாயகரை ப்ரார்த்தித்துக் கொண்டு தம் குமாரிகளைப் பல்லக்குகளில் ஏற்றி வைத்தார்.

பஹுபிதி பூப் ஸுதா ஸமுஜாயீம் |
நாரிதர்மு குலரீதி ஸிகாயீம் || 3296
தாஸீம் தாஸ் தியே பஹுதேரே |
ஸுசி ஸேவக் ஜே ப்ரிய ஸிய கேரே || 3297

குலரீதிப்படி ஜனகர் தன் மகளுக்குப் பெண் தர்மங்களைக் கூறினார். பலவிதமான பணிமாதுகளையும், பணியாளர்களையும் ஸீதையுடன் கூடவும் அனுப்பி வைத்தார். அவர்கள் ஸீதையிடம் அன்புள்ளவர்களாகவும், நம்பிக்கையுள்ளவர்களாகவும் இருந்தனர்.

ஸீய சலத் ப்யாகுல் புர்பாஸீ |
ஹோஹி ஸகுன் ஸுப மங்கல ராஸீ || 3298

பூஸுர் ஸசிவ ஸமேத் ஸமாஜா |
ஸங்க சலே பஹுஞ்சாவன் ராஜா || 3299

ஜனகபுரி வாஸிகள் யாவரும் ஸீதை போகும் போது கலக்கமடைந்தார்கள். மங்களமான ராசிகளும், சுப சகுனங்களும் உண்டாயின. மறையாளர்களையும், மந்த்ரிகளையும் அழைத்துக் கொண்டு ஸம்பந்திமார் களையும், வரன் வதூக்களையும் சிறிது தூரம் வரை கொண்டு விட ஜனகரும் கிளம்பினார்.

ஸமய் பிலோகி பாஜ்னே பாஜே |
ரத் கஜ பாஜி பராதின்ஹ ஸாஜே || 3300
தஸரத் பிப்ர போலி ஸப் லீன்ஹே |
தான் மான் பரிபூரன் கீன்ஹே || 3301

நல்ல நேரம் வந்ததும் பெரிதாக மங்கல வாத்யங் கள் முழங்கின. ஸம்பந்தி வீட்டார் (பிள்ளை வீட்டார்) ரதம், யானை, குதிரைகளைத் தயார் செய்தார்கள். தசரதர் எல்லா மறையவர்களையும் கூப்பிட்டுத் தான தருமங்களை எல்லாம் செய்தார்.

சரன் ஸரோஜ் தூரி தரி ஸீஸா |
முதித் மஹீபதி பாயி அஸீஸா || 3302
ஸுமிரி கஜானனு கீன்ஹ பயானா |
மங்கல மூல் ஸகுன் பயே நாநா || 3303

அந்த ப்ராம்மணர்களை வணங்கி, அவர்கள்து சரண கமலத் தூசிகளைச் சிரமேல் தாங்கி அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்று, மகிழ்ந்து, ராஜா தசரதர் கணே சரை ப்ரார்த்திக் கொண்டு, த்யானித்து ப்ரயாணத் திற்குப் புறப்பட்டார். மங்களார்த்தமான பல நல்ல சகுனங்கள் உண்டாயின.

ஸுர ப்ரஸூன் பர்ஷஹிம் ஹர்ஷி
கர்ஹிம் அப்சரா கான் |
சலே அவத்பதி அவத்புர்
முதித் பஜாயி நிஸான் || 3304

தேவர்கள் மனம் மகிழ்ந்து புஷ்பமாரி பொழி கிறார்கள். அப்ஸர ஸ்த்ரீகள் இசைபாடுகிறார்கள். அயோத்யாபதி தசரதர் முரசை முழங்கச் செய்து ஆனந் தமாக அயோத்யாபுரிக்குக் கிளம்பினார்.

ந்ருப கரி பினய மஹாஜன் பேரே |
ஸாதர் ஸகல மாக்னே டேரே || *3305*
பூஷன் பஸன் பாஜி கஜ தீன்ஹே |
ப்ரேம போஷி டாடே ஸப் கின்ஹே || *3306*

ராஜா தசரதர் கௌரவமான பெரிய மனிதர்களை அன்புடன் வணங்கி அவர்களைத் திரும்ப அனுப் பினார். அன்புடன் பிச்சைக்காரர்களை அழைத்தார். அவர்களுக்கு நகைகள், வஸ்த்ரங்கள், குதிரைகள், யானைகள் எல்லாம் ஸன்மானமாகக் கொடுத்து அவர் கள் எல்லோரையும் செல்வச் செழிப்புள்ளவர்களாகச் செய்து எப்போதும் அன்பு இருக்கும்படித் திருப்பி அனுப்பினார்.

பார் பார் பிரிதாவலி பாஷீ |
பிரே ஸகல ராம்ஹி உர் ராகீ || *3307*
பஹுரி பஹுரி கோஸலபதி கஹஹீம் |
ஜனகு ப்ரேமபஸ் பிரை ந சஹஹீம் || *3308*

அவர்கள் எல்லோரும் திரும்பத் திரும்பக் குல கீர்த்தி விருதாவளிகளைப் பாடினார்கள். ஸ்ரீ ராமச் சந்த்ரனை ஹிருதயத்தில் த்யானித்துக் கொண்டு திரும் பினார்கள். கோஸலைநாயகனான தசரதர் திரும்பத் திரும்ப மிதிலை நாயகனான ஜனகரை திரும்பிப் போங்கள் என்கிறார். ஆனால்; அன்பின் மிகுதி யாலும், பாசத்தாலும் கட்டுண்ட ஜனகர் திரும்பிப் போக விரும்பவில்லை.

புனி கஹ் பூபதி பசன் ஸுஹாயே |
பிரிய மஹீஸ் தூரி படி ஆயே || *3309*
ராவு பஹோரி உதரி பயே டாடே |
ப்ரேம் ப்ரபாஹ் பிலோசன் பாடே || *3310*

தசரதர் மீண்டும் ப்ரியமாக; ஹே ராஜன்! தாங்கள் வெகு தூரம் வந்து விட்டீர்கள்; இப்பொழுது தாங்கள் திரும்புங்கள் என்று சொல்லித் தசரதர் ரதத்திலிருந்து இறங்கிக் கீழே நின்றார். அவர் கண்களில் அன்புக் கண்ணீர் ப்ரவாஹமாக ஓடி வழிந்தது.

தப் பிதேஹ் போலே கர் ஜோரீ |
பசன் ஸ்னேஹ் ஸுதாம் ஜனு போரீ || 3311
கரௌம் கவன் பிதி பிநய பனாயீ |
மஹாராஜ் மோஹி தீன்ஹி படாயீ || 3312

அப்பொழுது ஜனகர் இருகைகளையும் கூப்பி ஸ்நேஹமாகிற அம்ருதத்தில் மூழ்கி; மஹாராஜரே! நான் எந்த விதத்தில் எந்த வார்த்தைகளைச் சொல்லித் தங்களை வேண்டுவேன்? தாங்கள் எனக்கு மிகவும் பெரிய மதிப்பையும், மரியாதையையும் கொடுத்தீர்கள் என்றார்.

கோஸலபதி ஸமதீ ஸஜன்
ஸன்மானே ஸப் பாந்தி |
மில்னி பரஸ்பர பினய அதி
ப்ரீதி ந ஹ்ருதயம் ஸமாதி || 3313

அயோத்யாதிபதி தசரதர் தங்கள் கூட வந்திருக்கும் அனேக வித மக்களுக்கும், ஸம்பந்திகளுக்கும் பலவித மான வெகுமதிகளைக் கொடுத்தார். மரியாதை செய்த பின் வினயத்துடன் எல்லோரையும் வணங்கினார். இந்தப் ப்ரீதிக்கு ஓர் அளவேயில்லை.

முனி மண்டலிஹி ஜனக் ஸிரு நாவா |
ஆஸிர்பாது ஸப்ஹி ஸன் பாவா || 3314
ஸாதர் புனி பேன்டே ஜாமாதா |
ரூப் ஸீல் குன நிதி ஸப் ப்ராதா || 3315

ஜனகர் எல்லா முனிவர்களையும் பார்த்துத் தலை வணங்கினார். எல்லோரிடமிருந்தும் ஆசீர்வாதங் களைப் பெற்றார். பின்பு மரியாதையுடன் ரூபம், சீலம், குணம் இவைகளின் இருப்பிடமான எல்லா ஸஹோதரர்களையும், ஸந்தித்தார். அதாவது; தனது மருமகப் பிள்ளைகளை ஸந்தித்தார்.

ஜோரி பங்கருஹ பானி ஸுஹாயே |
போலே பசன் ப்ரேம ஜனு ஜாயே || 3316
ராம கரௌம் கேஹி பாந்தி ப்ரஸம்ஸா |
முனி மஹேஸ் மன மானஸ் ஹம்ஸா || 3317

அழகுத் தாமரை போன்ற கைகளைக் குவித்து, மேலும்; ஸ்ரீராமரிடம்; அன்பே வடிவான ஹே ராமா! தங்களை நான் எப்படிப் புகழ்வது? தாங்கள் முனிவர் களின், மஹாதேவனின் மனமாகிற மானஸ ஸரோவரில் உள்ள ஹம்ஸம் போன்றவர்.

கர்ஹிம் ஜோக் ஜோகீ ஜேஹி லாகீ |
கோஹு மோஹு மமதா மது த்யாகீ || 3318
ப்யாபகு ப்ரம்ஹு அலகு அபிநாஸீ |
சிதானந்து நிர்குண குனராஸீ || 3319

எவன் எல்லா இடங்களில் வ்யாபித்தும், பரப்ரம்ம மாகவும், வெளிப்படையாகத் தெரியாதவனாகவும், அழிவற்றவனாகவும், சிதானந்தனாகவும், நிர்குணனாகவும், குணங்களின் ராசியாகவும் இருக்கிறானோ அவனுக்காக; கோபம், மோஹம், பற்று, மதம் இவைகளை த்யாகம் செய்து யோகியர்கள் யோகஸாதனம் செய்கிறார்கள்.

மன் ஸமேத ஜேஹி ஜான் ந பானீ |
தர்கி ந ஸக்ஹிம் ஸகல் அனுமானீ || 3320
மஹிமா நிகமு நேதி கஹி கஹயீ |
ஜோ திஹு ம் கால ஏகரஸ் ரஹயீ || 3321

எவரைப் பற்றி மனத்தோடு கூடிய வார்த்தை அறிய வில்லையோ, அனுமானம்தான் செய்ய முடிகிறதோ; தர்க்கம் செய்ய முடியவில்லையோ; எவனுடைய மஹிமையை 'இல்லை என்று கூறி' வேதம் வர்ணிக்கிறதோ; எந்த ஸத்சிதானந்தன் முக்காலங்களிலும் ஒரே சுவையோடு விகாரமற்றிருக்கிறானோ;

நயன பிஷய மோ கஹு ம்
பயவு ஸோ ஸமஸ்த ஸு க மூல் |
ஸபயி லாபு ஜக் ஜீவ் கஹம்
பயேம் ஈஸு அனுகூல் || 3322

அவரே எல்லா ஸுகங்களுக்கும் மூலகாரணம். என்னுடைய இந்தக் கண்களுக்குக் காரணமானவரும் அவரேதான். ஈச்வரனுடைய அனுகூலம் கிடைக்கின்ற பக்ஷத்தில் உலகில் ஜீவன்களுக்கு எதிலும் குறை இராது; லாபம்தான்.

ஸப்ஹி பாந்தி மோஹி தீன்ஹி படாயீ |
நிஜ ஜன் ஜானி லீன்ஹ அப்நாயீ || 3323
ஹோஹிம் ஸஹஸ் தஸ் ஸாரத ஸேஷா |
கர்ஹிம் கல்ப் கோடிக பரி லேகா || 3324

தாங்கள் எனக்குப் பலவிதத்திலும் பெருமையைக் கொடுத்தீர்கள். என்னைத் தாங்களாகவே பார்த்தீர்கள்; தமதாக்கினீர்கள். பத்தாயிரம் ஸரஸ்வதியும், ஆதிசேஷனும், கோடிக்கணக்கான கல்பங்கள், வருடங்கள் வரை இந்தப் பெருமையை எண்ணிக் கொண்டே இருப்பார்கள்.

மோர் பாக்ய ராவுர் குன் காதா |
கஹி ந ஸிராஹிம் ஸுநஹு ரகுநாதா || 3325
மைம் கசு கஹவும் ஏக் பல் மோரேம் |
தும்ஹ ரீஜஹு ஸ்நேஹ் ஸுடி தோரேம் ||3326

அப்படியிருந்தும் கேளும், ஸ்ரீரகுநாதரே! ஸௌபாக்யம் என்னவென்றால்; தங்களுடைய குணகானம் செய்து கூட இன்னும் முடியவில்லை. அதற்கு என் மனம் சளைக்கவில்லை. நான் எது கூறினாலும் தாங்கள் சிறிது அன்பினாலேயே ஸந்தோஷமடைகிறீர்கள். இதுவே எனக்குப் போதுமானது.

பார் பார் மாகவும் கர் ஜோரேம் |
மனு பரிஹரை சரன் ஜனி போரேம் || 3327
ஸுனி பர் பசன் ப்ரேம் ஜனு போஷே |
பூர்னகாம் ராமு பரிதோஷே || 3328

நான் திரும்பத் திரும்பக் கை கூப்பி வேண்டுகிறேன். என் மனம் மறந்தும் கூடத் தங்கள் சரணார விந்தங்களைக் கை நழுவ விடக்கூடாது. ப்ரேமையினாலும், பக்தியினாலும், பலவிதமாகப் புலம்பும் ஜனகரின் இந்த ச்ரேஷ்டமான வார்த்தைகளைக் கேட்ட பூர்ண காமனான ஸ்ரீ ரகுநாதன் பரமானந்தமடைந்தார்.

கரி பர் பிநய ஸஸுர் ஸன்மானே |
பிது கௌஸிக பஸிஷ்ட ஸம ஜானே || 3329
பின்தீ பஹுரி பரத் ஸன் கீன்ஹீ |
மிலி ஸப்ரேமு புனி ஆஸிஷ தீன்ஹீ || 3330

ஸ்ரீராமன் ஜனகரைத் தமது தந்தை போலவும், குரு விச்வாமித்ரரைப் போலவும், குலகுரு வஸிஷ்டரைப் போலவும் பாவித்து அவருக்கு மரியாதை செய்தார். அதன்பின்பு ஜனகர் பரதனையும் கூப்பிட்டு மரியாதை செய்து பரதனையும் ஆசீர்வதித்தார்.

மிலே லகன் ரிபுஸூதன்ஹி
தீன்ஹி அஸீஸ் மஹீஸ் |
பயே பரஸ்பர ப்ரேமபஸ்
பிரி பிரி நாவ்ஹிம் ஸீஸ் || 3331

பின்னர் ஜனகர் லக்ஷ்மணனையும், சத்ருக்னனை யும் ஸந்தித்து ஆசீர்வாதம் செய்தார். அவர்களும் திரும்பத் திரும்ப ப்ரேம பாசத்தால் கட்டுண்டு ஜன கருக்குத் தலை வணங்கினார்கள்.

பார் பார் கரி பிநய படாயீ |
ரகுபதி சலே ஸங்க ஸப் பாயீ || 3332
ஜனக் கஹே கௌஸிக் பத் ஜாயீ |
சரன் ரேணு ஸிர் நயனன்ஹ லாயீ || 3333

ஜனகருக்குத் திரும்பத் திரும்ப வந்தனம் செய்து, பெருமையூட்டி ஸ்ரீரகுநாதன் ஸஹோதரர்களுடன் அயோத்யாவிற்குக் கிளம்பினார். ஜனகர் மீண்டும் விச்வாமித்ரரிடம் வந்து அவர் சரணங்களைப் பற்றிக் கொண்டு அவர் திருவடித்துகள்களைத் தமது சிரஸ் ஸிலும் வைத்து, கண்களிலும் ஒற்றிக் கொண்டார்.

ஸுனு முனீஸ பர் தர்ஸன் தோரேம் |
அகமு ந கசு ப்ரதீதி மன் மோரேம் || 3334
ஜோ ஸுகு ஸுஜஸு லோகபதி சஹஹீம் |
கர்த் மனோரத் ஸகுசத் அஹஹீம் || 3335

ஹே முனிச்வரரே! கேளும்; தங்களுடைய தரிசனத் தினால் உலகில் ஏதும் துர்லபம் இல்லை என்பதாக என் மனத்தில் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. ஸுகத்தை யும், புகழையும் லோகபாலகர்கள் விரும்புகிறார்கள். ஆனால், அவைகளை அடைய முடியாது என எண்ணி நாணுகிறார்கள்.

ஸோ ஸுகு ஸுஜஸு ஸுலப மோஹி ஸ்வாமீ |
ஸப் ஸிதி தவ தர்ஸன் அனுகாமீ || 3336
கீன்ஹி பிநய புனி புனி ஸிரு நாயீ |
பிரே மஹீஸு ஆஸிஷா பாயீ || 3337

ஹே ஸ்வாமீ! அதே ஸுகம், அதே புகழ் அதே ஸித்திகள் எல்லாமே தங்களுடைய தரிசனத்தைத் தொடர்ந்து எனக்குச் சுலபமாகவே கிடைத்து விட்டன. இம்மாதிரித் திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டே, தலை வணங்கி நமஸ்காரம் செய்தபின் அவரிடமிருந்து ஆசிபெற்று ராஜா ஜனகர் அங்கிருந்து சென்று விட்டார்.

சலீ பராத் நிஸான் பஜாயீ |
முதித் சோட் பட் ஸப் ஸமுதாயீ || 3338
ராமஹி நிரகி க்ராம் நர நாரீ |
பாயி நயன் பலு ஹோஹி ஸுகாரீ || 3339

பெரிய மேளதாளங்களுடன் வந்திருந்த ஸம்பந்திகள் திரும்பவும் தங்கள் இருப்பிடம் திரும்பினார்கள். சிறியவர்களும்- பெரியவர்களுமாக எல்லா மக்கள் ஸமுதாயமும் பேரின்பமடைந்தது. வழியில் உள்ள பல க்ராமங்களில் வாழும் ஸ்த்ரீ-புருஷர்கள் ஸ்ரீ ராமச்சந்த்ரனைத் தரிசித்துக் கண்கள் செய்த புண்யத்தைப் பெற்று ஸுகம் அடைந்தார்கள்.

பீச் பீச் பர் பாஸ் கரி மக்
லோகன்ஹ ஸுக் தேத் |
அவத் ஸமீப் புனீத தின்
பஹுஞ்சீ ஆயி ஜனேத் || 3340

செல்லும் வழிகளில் எல்லாம் ஆங்காங்கே தங்குமிடம் அமைத்து, அதாவது; கூடாரம் போட்டுக் கொண்டும் தசரதரின் (திருமணம் செய்து திரும்பிய கோஷ்டி) வழியில் உள்ள மக்கள் கண்களுக்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டு தூயநன்னாளில் அயோத்யாபுரியின் அருகில் வந்து சேர்ந்தது.

ஹனே நிஸான் பனவ் பர் பாஜே |
பேரி ஸங்க துனி ஹய கய காஜே || 3341
ஜாஞ்ஜி பிரவ் டிண்டிமீம் ஸுஹாயீ |
ஸரஸ ராக் பாஜ்ஹிம் ஸஹ்நாயீ || 3342

மத்தளம், நகாரா இவைகளின்மீது அடிவிழத் தொடங்கியது. அதாவது; பறை முழங்கியது; தோல் கருவி முழங்கத் தொடங்கியது. பேரிகை, சங்கு இவைகளின் பேரொலி கேட்டது. யானைகளும் பிளிறின; குதிரைகளும் கனைத்தன; சிறப்பாக ஒலியை எழுப்பும் ஜாலரா என்னும் வாத்யக் கருவிகளும், விசேஷமான ஒலியுள்ள அழகிய தபேலாக்களும் இனிய நாதம் எழுப்பின. இனிய ராகத்தோடு இழைந்த ஷெனாய் வாத்யங்களும் ஒலித்தன.

புர ஜன் ஆவத் அகனி பராதா |
முதித் ஸகல புலகாவலி காதா || *3343*
நிஜ நிஜ ஸுந்தர் ஸதன் ஸம்வாரே |
ஹாட் பாட் சௌஹட் புர் த்வாரே || *3344*

பெண்ணை அழைத்துக் கொண்டு ஊர் திரும்பும் பிள்ளை வீட்டாரின் ஊர்வலம் அயோத்யா நகரின் அருகில் வந்து விட்டது என்பதை அறிந்த அவ்வூர் மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் உடல் புளகாங்கிதம் அடைய, எல்லோரும் தங்கள் தங்கள் வாசல்களையும், தெருக்களையும், சந்துகளையும், நாற் சந்திகளையும் நகர வாயில்களையும் இப்படியாக எல்லா இடங்களையும் மிக அழகாகச் சிங்காரித்தார்கள். தோரணங்களுடன் எதிர் கொண்டழைக்க ஸித்தமானார்கள்.

கலீம் ஸகல் அரகஜாம் ஸிஞ்சாயீ |
ஜஹம் தஹம் சௌகேம் சாரு புராயீ || *3345*
பனா பஜாரு ந ஜாயி பகானா |
தோரன் கேது பதாக் பிதானா || *3346*

எல்லா நகரச் சந்துக்களிலும் அர்கஜாவை அரைத்துக் தெளித்திருந்தார்கள். தோரணங்களினாலும், கொடிகளினாலும், மண்டபங்களினாலும் நாற்சந்திகளை, கடைத்தெருக்களைப் ப்ரமாதமாகச் சிங்காரித்தார்கள். அந்த அழகை நம்மவர் வர்ணனை செய்முடியாது.

ஸபல பூகபல் கதலி ரஸாலா |
ரோபே பகுல் கதம்ப தமாலா || *3347*
லகே ஸுபக் தரு பர்ஸத் தர்னீ |
மனிமய ஆல்பால் கல கர்னீ || *3348*

பழங்களுடன் கூடிய பாக்கு மரங்களையும், வாழைக் குலைகளுடன் கூடிய வாழைமரங்களையும், மாவிலை களையும், மகிழ மரங்களையும், கதம்ப-தமால வ்ருக்ஷங் களின் இலைகளையும், இன்னும் பழக்குலைகளுடன் கூடிய அந்த அழகிய மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. அவை பூமியைத் தொட்ட வண்ணமிருந்தன. மரங் களினால் மண்டபத்தையும், நகர வாயிற்களையும் சிங்காரித்தார்கள். மணிகள் நிரம்பிய தாளங்கள் நகாசு வேலைகள் செய்யப்பட்டு மிக உயர்ந்த விதமாக இருந்தன.

பிபித பாந்தி மங்கல கலஸ்
க்ருஹ க்ருஹ ரசே ஸம்வாரி |
ஸுர ப்ரஹ்மாதி ஸிஹாஹிம்
ஸப் ரகுபர் புரீ நிஹாரி || *3349*

பலவிதமான மங்கலக் கலசங்கள் வீடுதோறும் அலங்கரித்து வைக்கப்பட்டன. ஸ்ரீரகுநாதனின் ஊரான அயோத்யாபுரியைப் பார்த்து ப்ரம்மா முதலான ஸகல தேவதைகளும் ஆச்சர்யப்பட்டார்கள்; அதிசயப்பட் டார்கள்.

பூப் பவனு தேஹி அவஸர் ஸோஹா |
ரசனா தேகி மதன மனு மோஹா || *3350*
மங்கல ஸகுன் மனோஹர்தாயீ |
ரிதி ஸிதி ஸுக ஸம்பதா ஸுஹாயீ || *3351*

அந்த ஸமயத்தில் ராஜாவின் அரண்மனையும் மிகவும் சோபையுடன் விளங்கியது. அதனுடைய அழ கிய செயல் அமைப்பைக் கண்டு காமதேவனும் மன மோஹமடைந்தாற் போல் தோன்றியது. மங்கலமான சகுனங்கள் உண்டாயின; மனோஹரமான சூழ்நிலை உருவாயிற்று. பயிர்ச்செழிப்பும் ஸித்திகளும், எல்லா வகை ஸுகங்களும், செல்வக் கொழிப்பும் ஒன்றாக அமைந்தன.

ஜனு உசாஹ் ஸப் ஸஹஜ் ஸுஹாயே |
தனு தரி தரி தஸரத் க்ருஹம் சாயே || *3352*
தேகன் ஹேது ராம பைதேஹீ |
கஹஹு லாலஸா ஹோஹி ந கேஹீ || *3353*

எல்லாவிதமான ஸுகபோகங்களும், உத்ஸாஹமும் ஒன்றாகச் சேர்ந்து சரீரரூபங் கொண்டு தசரதரின் வீடு முழுவதும் வ்யாபித்து விட்டனவோ என்று எண்ணும் படியாக இருந்தது. ஸ்ரீ ராமச்சந்த்ரன்-ஸீதாதேவி இவர் களைக் காண நல்லதைச் சொல்லுங்கள். யாருக்கும் பேராசை இருக்கக்கூடாது.

ஜுத் ஜுத் மிலி கலீம் ஸுஆஸினி |
நிஜ சபி நிதர்ஹிம் மதன் பிலாஸினி || *3354*
ஸகல் ஸுமங்கல ஸஜே ஆரதீ |
காவ்ஹிம் ஜனு பிஹு பேஷ் பாரதீ || *3355*

ஸுமங்கலி ஸ்த்ரீகள் ஒன்று சேர்ந்து செல்லும் போது தங்களுடைய பேரழகால் காமதேவனின் மனை யாள் ரதியையும் பழிக்கும்படிச் சென்றனர். மக்கள் அனைவரும் இசைகளைப் பாடிக்கொண்டு ஸ்ரீராம ஸீதாவிற்காக மங்களப் பொருள்களையும், ஆரத்தியை யும் எடுத்துச் சென்றார்கள். அப்பொழுது ஸரஸ்வதி தேவியே பல மங்கையரைப் போல் வேஷம் பூண்டு அங்கு வந்து பாடுவது போல் தோன்றியது.

பூபதி பவன் கோலாஹலு ஹோயீ |
ஜாயி ந பர்னி ஸமவு ஸுகு ஸோயீ || *3356*
கௌஸல்யாதி ராம் மஹ்தாரீம் |
ப்ரேமபிபஸ் தன் தஸா பிஸாரீம் || *3357*

ராஜமஹலின் ஆனந்தத்தினால் எங்கும் ஒரே கோலாஹலமாக இருந்தது. அந்த நேரத்தில் உண்டான ஸுகத்தை வர்ணனை செய்ய முடியாது. ஸ்ரீ ராமச் சந்த்ரனின் தாயார்களான கௌஸல்யை முதலான ராணிகள், ப்ரேமையின் காரணமாகத் தங்களையே மறந்திருந்தார்கள்.

தியே தான் பிப்ரன்ஹ பிபுல்
பூஜி கனேஸ் புராரி |
ப்ரமுதித் பரம தரித்ர ஜனு
பாஇ பதார்த சாரி || *3358*

கணேசருக்கும், த்ருபுராரியான சிவனுக்கும் பூஜை செய்து அவர்கள் ப்ராம்மணர்களுக்குப் பலவிதமான

தானங்களைக் கொடுத்தார்கள். இதனால் பரமதரித்ரன் ஒருவன் நான்குவிதப் பதார்த்தங்களை அடைந்தால் எப்படி த்ருப்தி கொள்வானோ; அதேபோல அவர்கள் மிகுந்த த்ருப்தி அடைந்தார்கள்.

மோத ப்ரமோத பிபஸ் ஸப் மாதா |
சல்ஹி ந சரன் ஸிதில் பயே காதா || 3359
ராம தரஸ் ஹித் அதி அனுராகீம் |
பரிசனி ஸாஜு ஸஜன் ஸப் லாகீம் || 3360

ஸுகத்தினாலும், மிகுதியான ஆனந்தத்தினாலும் வசமிழந்த ராணிகளின்; ஸ்ரீராமனின் தாய்மார்களின் உடல் நிலை தளர்ச்சி கொண்டது. அவர்கள் பாதங்கள் ஆனந்தத்தினால் செல்ல முடியவில்லை.

அவர்கள் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் தரிசனத்திற்காக வேண்டி, அன்புகொண்டு பலவித ஆரத்திகளையும், த்ருஷ்டி கழிக்கும் பொருள்களுடன் தயாராக வைத் திருந்தார்கள்.

பிபித் பிதான் பாஜ்னே பாஜே |
மங்கல முதித் ஸுமித்ராம் ஸாஜே || 3361
ஹரத் தூப் ததி பல்லவ பூலா |
பான் பூகபல் மங்கல் மூலா || 3362

பலவிதமான வாத்யங்கள் முழங்கிக் கொண்டிருந் தன. தேவி ஸுமித்ரை ஆனந்தத்துடன் மஞ்சள், அரு கம்புல், தயிர், மாவிலைகள், பூக்கள், வெற்றிலை, பாக்குகள் முதலான அனேக சுபலக்ஷண வஸ்துக்களை (பலவித மங்களகரமான த்ரவ்யங்களை) அலங்கரித்தாள்.

அச்சத அங்குர் லோசன் லாஜா |
மஞ்ஜுல மஞ்ஜரி துளஸி பிராஜா || 3363
சுஹே புரட் கட் ஸஹஜ் ஸுஹாயே |
மதன் ஸகுன் ஜனு நீட் பனாயே || 3364

அக்ஷதைகள், விதைமுளைகள், கோரோஜனை மற்றும் பொரி போன்றவைகளும், துளஸித்தளிர்கள் யாவும் அழகாக விளங்கின. பலவித வர்ணங்களால்

அலங்கரிக்கப்பட்ட சுபமான ஸுந்தர ஸ்வர்ணக் கல சங்கள் காமதேவனின் பக்ஷிகள் கூடுகட்டி இருக்கின் றனவோ என்னும்படிப் பார்வைக்கு விருந்தாகத் தென் பட்டன.

ஸகுன் ஸுகந்த ந ஜாஹிம் பகானீ |
மங்கல ஸகல ஸஜஹிம் ஸப் ரானீ || 3365
ரசீம் ஆரதீம் பஹுத் பிதானா |
முதித் கர்ஹிம் கல மங்கல கானா || 3366

மணமகனுக்காகத் தந்த மங்கள வாஸனைப் பொருள் கள் வர்ணிக்க முடியாத அளவு இருந்தது. எல்லா ராணிமாதேவியரும் ஸம்பூர்ண மங்களகரமான அலங் காரங்களைச் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் பலவிதமான ஆரத்திகளைத் தயார் செய்து கொண்டு மகிழ்வுடன் இன்னிசையைப் பாடிக் கொண்டேயிருந் தார்கள்.

கனக் தார் பரி மங்கலன்ஹி
கமல கரன்ஹி லியேம் மாத் |
சலீம் முதித் பரிசனி கரன்
புலக் பல்லவித காத் || 3367

தங்கத் தட்டுகளைப் பலவிதமான மங்கலப்பொருள் களால் நிரப்பிய வண்ணம் தங்களுடைய ம்ருதுவான தாமரைக் கைகளில் எடுத்துக் கொண்டு தாயார்கள் ஆனந்தத்துடன் த்ருஷ்டி கழிக்கச் சென்றார்கள். அவர் கள் சரீரம் புளகாங்கிதம் அடைந்திருந்தது.

தூப் தூம் நபு மேசக் பயவூ |
ஸாவன் கன் கமண்டு ஜனு டயவூ || 3368
ஸுரதரு ஸுமன் மால் ஸுர பர்ஷஹிம் |
மன்ஹும் பலாக் அவலி மனு கர்ஷஹிம் || 3369

மழைக்காலத்து ஆவணி மேகம் உருண்டு திரண்டு படர்வது போல் தூபப்புகைகள் ஆகாயம் வரை சென்று எங்கும் கருநிறமாகி விட்டதோ என்னும்படி இருந்தது. தேவர்கள் கல்ப வ்ருக்ஷத்தின் பூக்களின் மாலைகளைப் பொழிகிறார்கள். அது பார்ப்பதற்கு வரிசையாகப் போகும் கொக்குகள் நமது மனத்தை வசீகரிப்பது போல் இருந்தது.

மஞ்ஜுள மனிமய பந்தநிவாரே |
மன்ஹும் பாகரிபு சாப் ஸம்வாரே || 3370
ப்ரகட்ஹிம் துர்ஹிம் அடன்ஹ பர பாமினி |
சாரு சபல் ஜனு தமக்ஹிம் தாமினி || 3371

அழகிய மணிகளினால் செய்த தோரணங்கள் இந்த்ர வில் அலங்கரிக்கப்பட்டிருக்கிறதோ என்பது போல் இருந்தன. மேலே உப்ரிகைகளின் மீது அழகு ஸுந்தரிகள் வருவதும் போவதுமாக நிலையற்று இருந்தார்கள். அது எப்படி இருந்தது என்றால் மின்னல் பளிச்பளிச்சென்று வீசி மறைவது போல் இருந்தது.

துந்துபி துனி கன் கர்ஜனி கோரா |
ஜாசக் சாதக் தாதுர் மோரா || 3372
ஸுர ஸுகந்த ஸுசி பர்ஷஹிம் பாரீ |
ஸுகீ ஸகல் ஸஸி புர் நர் நாரீ || 3373

பறை, மத்தள ஒலிகள் மழைக்கால மேக இடிகள் போலச் சத்தமிட்டன. கூடவரும் யாசகர்கள் மழைக் கால சாதகப் பக்ஷி போன்றும், தவளைகள் போலவும், மயில்கள் போலவும் இருக்கிறார்கள். தேவர்கள் பவித்ர மான நறுமண ஜலத்தைக் கொட்டுகிறார்கள். இதனால் வயல் வெளிகளில் மழை பெய்தால் எப்படிப் பயிர் ஸந்தோஷமடையுமோ; அம்மாதிரி அந்த ஜல வர்ஷத் தினால் நகர மக்கள் ஸுகமடைந்தார்கள்.

ஸமஉ ஜானி குர் ஆயஸு தீன்ஹா |
புர் ப்ரபேஸு ரகுகுலமனி கீன்ஹா || 3374
ஸுமிரி ஸம்பு கிரிஜா கனராஜா |
முதித் மஹீபதி ஸஹித் ஸமாஜா || 3375

நகரப்ரவேச ஸமயத்தை அறிந்து உடனே குரு வஸிஷ்டர் கட்டளையிட்டார். அதாவது; தசரதரை நோக்கி ஸமிஜ்ஞை செய்தார். உடனே ரகுகுலமணி தசரதர் தமது இஷ்ட தெய்வங்களான சிவனையும், பார்வதியையும், கணபதியையும் த்யானித்து, வணங் கியபடி, தமது ஸமூஹங்களுடன் ஆனந்தித்து அயோத்யா நகரத்தினுள் ப்ரவேசம் செய்தார்.

ஹோஹிம் ஸகுன் பர்ஷஹிம்
ஸுமன் ஸுர் துந்துபீம் பஜாயி |
பிபுத பதூ நாச்ஹிம் முதித்
மஞ்ஜுல மங்கல காயி || 3376

நல்ல சகுனங்கள் உண்டாயின. தேவர்கள் துந்துபி வாசித்து, புஷ்பமாரி பொழிகிறார்கள். தேவ ஸ்த்ரீகள் ஸந்தோஷ மிகுதியால் மங்கலமான கீதம் இசைத்து நடனம் ஆடுகிறார்கள்.

மாகத் ஸூத பந்தி நட் நாகர் |
காவ்ஹிம் ஜஸு திஹு லோக் உஜாகர் || 3377
ஜய துனி பிமல் பேத் பர் பானீ |
தஸ் திஸி ஸுனிஅ ஸுமங்கல ஸானீ || 3378

மாகதர்கள், ஸூதர்கள், வம்சாவளி பாடுபவர்கள். யாவரும் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் கீர்த்தியைப் பாடுகிறார்கள். ஜயத்வனியும், வேதவத்வனியும் சேர்த்து மங்கள கரமான சப்தத்தை பத்துத் திசைகளிலும் பரவச் செய்தது.

பிபுல் பாஜ்னே பாஜன் லாகே |
நப் ஸுர நகர் லோக் அனுராகே || 3379
பனே பராதீ பர்னி ந ஜாஹீம் |
மஹா முதித மன் ஸுக ந ஸமாஹீம் || 3380

பலவிதமான மத்தளங்களும், பேரிகைகளும் முழங்கின. ஆகாயத்தில் தேவதைகளும், நகரத்தில் மக்களும் யாவருமே ப்ரேமையினால் மெய்ம் மறந்திருந்தார்கள். கல்யாணக் கூட்டம் திரும்பியது; பார்க்கப் பரமானந்த மாக இருந்தது; அவர்கள் ஆனந்தத்திற்கு ஓர் எல்லை இல்லை; ஸுகத்தில் மிதந்தார்கள் எனலாம்.

புர்பாஸின்ஹ தப் ராய் ஜோஹாரே |
தேகத் ராம்ஹி பயே ஸுகாரே || 3381
கர்ஹிம் நிசாவரி மனிகன் சீரா |
பாரி பிலோசன் புலக் ஸரீரா || 3382

அப்போழ்து நகரவாஸிகள் தமது ராஜா தசரதரைப் பார்த்து வந்தனம் செய்தார்கள். ஸ்ரீராமச்சந்த்ரனைப்

பார்த்து பரம ஸுகம் அடைந்தார்கள். மணிகளையும், வஸ்த்ரங்களையும் தானம் செய்தார்கள். அவர்களது கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகச் சரீரம் புளகாங் கிதமடைய அன்புடன் நோக்குகிறார்கள்.

ஆரதி கர்ஹி முதித் புர நாரீ |
ஹர்ஷஹி நிரகி கும்வர் பர் சாரீ || 3383
ஸிபிகா ஸுபக் ஓஹார் உகாரீ |
தேகி துல்ஹினின்ஹ ஹோஹி ஸுகாரீ || 3384

நகரத்தின் பெண்மணிகள் ஆனந்தமடைந்து ஆரத்தி எடுத்தார்கள். அழகிய அந்த நான்கு ராஜ குமாரர் களையும் கண்டு ஸுகானுபவம் அடைந்தார்கள். பல் லக்கினுடைய அழகிய படுதாக்களை விலக்கி விலக்கி அழகே உருவான மணப்பெண்களைத் திரும்பத் திரும் பப் பார்த்து ஸுகித்தார்கள். அவர்கள் மனம் நிம்மதி யடைந்தது.

ஏஹி பிதி ஸப்ஹி தேத்
ஸுகு ஆயே ராஜதுஆர் |
முதித் மாது பரிசனி கர்ஹிம்
பதுன்ஹ ஸமேத் குமார் || 3385

இவ்விதம் எல்லோருக்கும் ஸுகத்தை அளித்துக் கொண்டு மணமக்களுடன் தசரதர் தம்முடைய அரச மாளிகை வாயில்புறம் வந்து சேர்ந்தார். தாய்மார்கள் மிக்க மகிழ்ச்சியுடன் மணமகன், மணமகள் யாவருக்கும் திருஷ்டி சுற்றிப் போட்டார்கள்.

கர்ஹிம் ஆரதீ பார்ஹிம் பாரா |
ப்ரேமு ப்ரமோது கஹை கோ பாரா || 3386
பூஷன் மணி பட நாநா ஜாதீ |
கர்ஹிம் நிசாவரி அகனித பாந்தீ || 3387

அவர்கள் திரும்பத் திரும்ப ஆரத்தி எடுக்கிறார்கள். அந்த ப்ரேமையையும், மிகச் சிறப்பான ஆனந்தத்தை யும் யார்தான் வர்ணிக்கவும் முடியும்? பலவிதமான ஆபரணங்களையும், ரத்னங்களையும், வஸ்த்ரங்களை யும் மற்றும் பல வஸ்துக்களையும் தானமாகக் கொடுத் தார்கள்.

பதுன்ஹ ஸமேத் தேகி ஸுத சாரீ |
பரமானந்த மக்ன மஹ்தாரீ || 3388
புனி புனி ஸீய ராம சபிதேகீ |
முதித் ஸபல் ஜக் ஜீவன் லேகீ || 3389

மருமகள்களுடன் நான்கு புத்ரர்களையும் கண்ட ராஜமாதாக்கள் பரமானந்த மடைந்தார்கள். ஸீதா தேவி-ஸ்ரீ ராமச்சந்த்ரனின் அழகைத் திரும்பத் திரும்பப் பார்த்துப் பார்த்து உலகில் தங்களது பிறவியின் பயனை எண்ணி ஆனந்திக்கிறார்கள்.

ஸகீம் ஸீய முக் புனி புனி சாஹீ |
கான் கர்ஹிம் நிஜ ஸுக்ருத ஸராஹீ || 3390
பர்ஷஹிம் ஸுமன் சன்ஹிம் சன் தேவா |
நாச்ஹிம் காவ்ஹிம் லாவ்ஹிம் ஸேவா || 3391

ஸீதையின் அழகிய முகாரவிந்தத்தைப் பார்த்துப் பார்த்து ஸகிகள் தங்களது புண்யங்களை எண்ணி எண்ணி மகிழ்ந்து பாடுகிறார்கள். தேவதைகள் ஒவ் வொரு கணமும் பூக்களை வாரி இறைத்து மழையாகப் பொழிகிறார்கள்; நிருத்யம் செய்கிறார்கள்; பாடுகிறார் கள். தங்களாலான ஸேவைகளைச் செய்கிறார்கள்.

தேகி மனோஹர் சாரிவு ஜோரீம் |
ஸாரத் உபமா ஸகல் டண்டோரீம் || 3392
தேத் ந பன்ஹிம் நிபட் லகு லாகீம் |
ஏக்டக் ரஹீம் ரூப் அனுராகீம் || 3393

நான்கு மனோஹர ஜோடிகளைக் கண்ட ஸரஸ்வதி யும் எல்லா உபமானங்களையும் தேடுகிறாள். ஆயி னும்; அவருக்கு இந்த ஜோடிகளுக்குரிய உவமை கூறத் தக்கபடி ஏதும் கிடைக்கவில்லை. இவர்களுக்கு எதிரில் எல்லாமே துச்சமாகத் தென்பட்டன. பின்பு இந்த விதமான தமது தோல்வியை ஒப்புக் கொண்ட ஸரஸ் வதி தேவி ஸ்ரீ ராமச்சந்த்ரனின் ரூப லாவண்யத்தில் மயங்கி ஒரேயடியாகப் பார்த்தவாறே நின்றுவிட்டாள்.

நிகம நீதி குல் ரீதி
கரி அர்ச் பாம்வடே தேத் |
பதுன்ஹ லஹித் ஸுத பரிசி
ஸப் சலீம் லவாயி நிகேத் || 3394

வேதங்களின் முறைப்படி, குலத்தின் வழக்கப்படி அர்க்யமும் கொடுத்து, நடை பாவாடை விரித்து, தாயார் பிள்ளைகளுடன் மருமகள்களையும் சேர்த்து திருஷ்டி கழித்து எல்லோரையும் அரண்மனைக்குள் கூட்டிச் சென்றார்கள்.

சாரி ஸிங்காஸன் ஸஹஜ் ஸுஹாயே |
ஜனு மனோஜ் நிஜ ஹாத் பனாயே || 3395
தின்ஹ பர் கும்வரி கும்வர் பைடாரே |
ஸாதர் பாய புனீத் பகாரே || 3396

இயற்கையாகவே அழகான நான்கு ஸிம்ஹாஸனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மன்மதனே தன் கைகளினால் செய்தானோ; என்று வியக்கும்படி அத்தனை அழகாக சிங்காரம் செய்யப்பட்டிருந்தன. தாய்மார்கள் நான்கு ராஜகுமாரர்களையும், ராஜகுமாரிகளையும் அமர்த்தினார்கள். பின்னர் அவர்களின் பவித்ரமான சரணங்களைத் தண்ணீர் விட்டுக் கழுவினார்கள்.

தூப் தீப் நைபேத பேத் பிதி |
பூஜே பர் துல்ஹினி மங்கல நிதி || 3397
பாரஹிம் பார் ஆரதீ கர்ஹீம் |
ப்யஜன் சாரு சாமர் ஸிர் டர்ஹீம் || 3398

பிறகு வேத முறைப்படி மங்களத்தின் இருப்பிடமான மணமகள்கள் மணமகள்களுக்கு தூப, தீப, நைவேத்யம் முதலியவை காட்டினார்கள்; பூஜை செய்தார்கள். அடிக்கடி ஆரத்தி எடுத்தார்கள். பிறகு குல விதிப்படி மணமகள்கள், மணமகள்கள் தலையில் வெண் சாமரமும், மயில் இறகுகளையும் வைத்து மூடினார்கள்.

பஸ்து அனேக் நிசாவரி ஹோஹீம் |
பரீம் ப்ரமோத் மாது ஸப் ஸோஹீம் || 3399
பாவா பரம தத்வ ஜனு ஜோகீம் |
அம்ருது லஹேவு ஜனு ஸந்தத் ரோகீம் || 3400

அநேக விதமான வஸ்துக்களைத் தாய்மார் தானமாக அளித்தார்கள். எப்படியென்றால் யோகிகள் பரம தத்வத்தை அடைந்து எத்தனை ஆனந்தமடைந்தார்களோ; ஸதா வ்யாதியினால் பீடிக்கப்பட்டுள்ள ஒரு

ரோகிக்கு அம்ருதம் கிடைத்தால் எப்படி ஸந்தோஷ மடைவார்களோ; அப்படி எல்லாத் தாய்மார்களும் ஆனந்தத்தினால் சோபையுடன் விளங்கினார்கள்.

ஜன்ம ரங்க ஜனு பாரஸ் பாவா |
அந்தஹி லோசன் லாபு ஸுஹாவா || 3401
மூக் பதன் ஜனு ஸாரத சாயீ |
மான்ஹும் ஸமர் ஸூர் ஜய பாயீ || 3402

ஜன்ம தரித்ரனுக்கும் பாரஸ்மணி (இரும்பைப் பொன்னாக்கும் ஒரு வகைக்கல்) கிடைத்தாற் போலும், குருடனுக்கு அழகிய கண்கள் கிடைத்தன போலும், வாய் பேசாதவனுக்கு ஸரஸ்வதி அருள் கிடைத்த மாதிரியும், சூரவீரன் ஒருவன் யுத்தத்தில் விஜயம் அடைந்தது போலவும் ஆன;

ஏஹி ஸுக் தே ஸத கோடி
குன் பாவ்ஹிம் மாது அனந்து |
பாஇன்ஹ ஸஹித் பிஆஹி கர்
ஆயே ரகு குல சந்து || 3403

இந்த ஸுகத்தைக் காட்டிலும் நூறு கோடிக்கணக் கான மடங்கு அதிகமான ஆனந்தத்தைத் தாய்மார்கள் அனுபவித்தார்கள். ஏனெனில்; ரகுகுலத்தின் சந்த்ரன் போன்ற ஸ்ரீராமன் திருமணம் செய்து கொண்டு ஸஹோதரர்களுடன் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள் என் பதுவே காரணமாகும்.

லோக ரீதி ஜனனீம் கர்ஹிம்
பர் துல்ஹினி ஸகுசாஹிம் |
மோது பிநோது பிலோகி பட்
ராமு மனஹிம் முஸுகாஹிம் || 3404

தாயார்கள் செய்யும் இம்மாதிரி லோக ரீதியான கார்யங்களைக் கண்ட நவதம்பதிகள் நாணுகிறார்கள். இந்த அற்புதமான பெரிய கார்யங்களைக் கண்டும், அற்புதமான நிகழ்ச்சியைக் கண்டும், ஸ்ரீராமன் மனத் துக்குள்ளேயே புன்னகை செய்கிறார்.

தேவ பிதர் பூஜே பிதி நீகீ ।
பூஜீம் ஸகல் பாஸனா ஜீ கீ ॥ 3405
ஸப்ஹி பந்தி மாகஹிம் பர்தானா ।
பாஇன்ஹ ஸஹித் ராம கல்யானா ॥ 3406

மனத்தினுடைய எல்லா ஆசைகளும் நிறைவேறியது கண்டு தாய்மார்கள் தேவதைகளுக்கும், பித்ருக்களுக்கும் சீராகப் பூஜை செய்தார்கள். எல்லோருக்கும் வந்தனை செலுத்திப் புத்ரர்களின், வதூக்களின் ஸுகத்திற்காக; ஸஹோதரர்களுடன் கூட ஸ்ரீ ராமனுக்குப் பரிபூர்ண மங்களம் உண்டாகட்டும், ஆசியைக் கொடுங்கள் என்று ப்ரார்த்தனை செய்து வரம் கேட்டார்கள்.

அந்தர்ஹித் ஸுர ஆஸிஷ் தேஹீம் ।
முதித் மாது அஞ்சல் பரி லேஹீம் ॥ 3407
பூபதி போலி பரர்தீ லீன்ஹே ।
ஜான் பஸன் மனி பூஷன் தீன்ஹே ॥ 3408

வான்வெளியில் தேவர்கள் மறைமுகமாக இருந்து கொண்டு ஆசீர்வாதம் செய்தார்கள். தாய்மார்கள் ஸந் தோஷத்துடன் தங்கள் புடவைத் தலைப்பை விரித்து அவர்கள் ஆசியை வாங்கிக் கொள்கிறார்கள். அதன் பின் தசரதர் ஊர்வலமாக வந்த தனது ஆட்களை அழைத்து அவர்களுக்கு யாத்திரை செய்து போக வாஹனங்களையும், வஸ்த்ரங்களையும், மணி, மாணிக் கங்களையும், ஆபரணங்களையும் கொடுத்தனுப்பினார்.

ஆயஸு பாஇ ராகி உர் ராம்ஹி ।
முதித் கயே ஸப் நிஜ நிஜ தாம்ஹி ॥ 3409
புர் நர் நாரி ஸகல் பஹிராயே ।
கர் கர் பாஜன் லகே பதாயே ॥ 3410

ஆஜ்ஞை பெற்று, ஸ்ரீராமனை மனத்தில் வைத்து, அவர்கள் எல்லோரும் ஆனந்தத்துடன் தங்கள் தங்கள் இல்லம் சென்றார்கள். நகரத்திலுள்ள எல்லா ஸ்த்ரீ, புருஷர்களுக்கும் ராஜா வஸ்த்ரங்களையும், ஆபரணங் களையும் அணிவித்தார். வீடுதோறும் மங்கல வாத்யங் கள் முழங்கத் தொடங்கின.

ஜாசக் ஜன் ஜாசஹிம் ஜோயி ஜோயீ |
ப்ரமுதித் ராவு தேஹிம் ஸோயி ஸோயீ ||3411
ஸேவக் ஸகல் பஜனிஆ நாநா |
பூரன் கியே தான் ஸன்மானா || 3412

யாசகர்கள் எதை எதை விரும்பிக் கேட்கிறார் களோ; ப்ரஸன்ன சித்தத்துடன் ராஜா அவர்களுக்கு அதை அதையே கொடுத்தார். எல்லா ஸேவர்களுக்கும், வாத்ய கோஷ்டியினருக்கும் பற்பல தானங்களையும், வெகுமானங்களையும் கொடுத்து மகிழ்விலாழ்த்தினார்.

தேஹிம் அஸீஸ் ஜோஹாரி ஸப்
காவ்ஹிம் குன் கன் காத் |
தப் குர் பூஸுர் ஸஹித் க்ருஹம்
கவனு கீன்ஹ நரநாத் || 3413

எல்லோரும் வந்தனம் செய்து, ஆசீர்வாதம் செய்து, தசரதரின் குண ஸமூஹத்தின் கதையைச் சிறப்பாகப் பாடினார்கள். அந்த ஸமயம் ராஜா தசரதர் குருதேவர் பின்தொடர ப்ராம்மணர்களுடன் கூடத் தனது அரண் மனைக்குள் சென்றார்.

ஜோ பஸிஷ்ட அனுஸாஸன் தீன்ஹி |
லோக் பேத் பிதி ஸாதர் கீன்ஹி || 3414
பூஸுர் பீர் தேகி ஸப் ரானீ |
ஸாதர் உடம் பாக்ய பட் ஜானீ || 3415

குரு வஸிஷ்டர் ஆஜ்ஞை இட்டதும் அதை லௌகிக - வைதிக விதிப்படி அனுஸரித்து ராஜா தசரதர் மரியாதையுடன் செய்தார். ப்ராம்மணர்களின் பெரும் கோஷ்டியைக் கண்டு மிகுந்த பாக்யம் எனக் கருதி ராணிகள் அனைவரும் இது தங்களது ஸௌபாக்யம் என்று கருதி மரியாதையாகப் பணிவுடன் எழுந்து நின்றார்கள்.

பாய் பகாரி ஸகல் அன்ஹவாயே |
பூஜி பலீ பிதி பூப் ஜேம்வாயே || 3416
ஆதர் தான் ப்ரேம் பரிபோஷே |
தேத் அஸீஸ் சலே மன் தோஷே || 3417

மேலும்; அந்த ப்ராம்மணர்களுக்குப் பாத பூஜை செய்து அவர்களை ஸ்நானம் செய்யச் செய்தார். பிறகு ராஜா ஒரே விதமாகப் பூஜை செய்து, போஜனம் செய்யச் செய்தார். மரியாதையாலும், எல்லையில்லாத் தானங்களாலும், அன்பாலும் போஷிக்கப்பட்ட அந்த ப்ராம்மணர்கள் மனமகிழ்வுடன் நல்ல ஆசி அளித்துச் சென்றார்கள்.

பஹு பிதி கீன்ஹி காதி ஸுத பூஜா ।
நாத் மோஹி ஸம தன்ய ந தூஜா ॥ 3418
கீன்ஹி ப்ரஸம்ஸா பூபதி பூரீ ।
ரானின்ஹ ஸஹித லீன்ஹி பக் தூரீ ॥ 3419

ராஜா காதி புத்ரரான விச்வாமித்ரரைப் பலவித மாகப் பூஜித்தார். பின்பு ஹே ஸ்வாமி! என் போல் பாக்யவான் மற்றவர் எவரும் இல்லை. தாங்களால் அன்றோ நான் இன்று தன்யனானேன், என்று அவ ரைப் புகழ்ந்து பாராட்டினார். பின்னர் ராணிகளுடன் கூட அவரது சரணதூளிகளைச் சிரத்தில் இட்டுக் கொண்டார்.

பீதர் பவன் தீன்ஹ பர் பாஸூ ।
மன் ஜோகவத் ரஹ் ந்ருபு ரனிவாஸூ ॥ 3420
பூஜே குர் பத கமல் பஹோரீ ।
கீன்ஹி பிநய உர் ப்ரீதி ந தோரீ ॥ 3421

அவருக்குத் தமது ராஜ மஹாலில் தங்கியிருக்க நல்ல உத்தமமான இடத்தை அளித்தார். ராஜா தசரதர், அந்தப்புரத்திலுள்ள ராணிகளும், மற்றவர்களும் நன்கு அவரைக் கவனிக்கும்படியான இடத்தில் அமர்த்தினார். பின்னர் ராஜா குரு வஸிஷ்டரின் திருவடித்தாமரை களை வழிபட்டார்; வணங்கினார். அவரது உள்ளில் மிகுந்த பக்தி அந்நேரம் உண்டாயிற்று.

பதுன்ஹ ஸமேத் குமார்
ஸப் ரானின்ஹ ஸஹித் மஹீஸூ ।
புனி புனி பந்தத் குர்
சரன் தேத் அஸீஸ் முனீஸூ ॥ 3422

மனைவிமார்களுடன் எல்லா ராஜ புத்ரர்களும், மேலும்; ராணிமார்களுடன் ராஜாவும் திரும்பத் திரும் பக் குருவின் கால்களில் வீழ்ந்து வந்தனை செய்தார் கள். அந்த முனீச்வரர் மனம் மகிழ்ந்து நிரம்பிய மனத் துடன் ஆசீர்வாதம் செய்தார்.

பிநய கீன்ஹி உர் அதி அனுராகேம் |
ஸுத ஸம்பதா ராகி ஸப் ஆகேம் || 3423
நேகு மாகி முனிநாயக் லீன்ஹா |
ஆஸிர்பாது பஹுத் பிதி தீன்ஹா || 3424

ராஜா அத்யந்த ப்ரேமை நிறைந்த மனத்துடன் புத்ரர்களையும் தனது ஆஸ்திகளையும் முனிவரின் எதிரில் வைத்து வினயத்துடன் ஹே முனிராஜாவே! இவைகளைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று வேண்டினார். ஆனால்; குருவான முனிதேவரோ புரோஹிதர் என்கிற முறையில் விவாஹ காலத்தில் தரப்படும் ஸன்மானத்தை மட்டும் வேண்டினார்; பிறகு ஆசீர்வதித்தார்.

உர் தரி ராம்ஹி ஸீய ஸமேதா |
ஹர்ஷி கீன்ஹ குர் கவனு நிகேதா || 3425
பிப்ரபதூ ஸப் பூப் போலாயீம் |
சைல சாரு பூஷன் பஹிராயீம் || 3426

ஸீதையுடன், ஸ்ரீராமச்சந்த்ரனை ஆலிங்கனம் செய்து கொண்டு ஸந்தோஷத்துடன் குரு வஸிஷ்டர் தமது இருப்பிடம் சென்றார். பின்னர் ராஜா தசரதர் அந்த தந்த ப்ராம்மணர்களின் ஸ்த்ரீகளையும் அழைத்து வித விதமான உடைகளையும், நகைகளையும் அணிவித்தார்.

பஹுரி போலாயி ஸுஆஸினி லீன்ஹீம் |
ருசி பிசாரி பஹிராவனி தீன்ஹீம் || 3427
நேகீ நேக் ஜோக் ஸப் லேஹீம் |
ருசி அனுரூப் பூபமனி தேஹீம் || 3428

பின்னர் நகரத்திலுள்ள ஸுவாஸினி என்கிற ஸுமங்கலிப் பெண்களையும் (ஸஹோதரி - பெண், மருமாள் முதலானோரை) அழைத்து அவரவர்கள் இஷ்டப்படித் துணி மணிகளையும், நகைகளையும்

கொடுத்தார்கள். பக்தி ச்ரத்தை கொண்ட மக்களுக்கும் ராஜாதி ராஜாவான, ராஜ சிரோமணி போன்ற தசரதர் அவரவர் இஷ்டப்படி எல்லாமே செய்தார்.

ப்ரிய பாஹூனே பூஜ்யஜே ஜானே ।
பூபதி பலீபாந்தி ஸன்மானே ॥ 3429
தேவ் தேகி ரகுபீர் பிபாஹூ ।
பர்ஷி ப்ரஹூன் ப்ரஸம்ஸி உசாஹூ ॥ 3430

விருந்தாளிகள் எவர் எவரை ராஜா; மதிப்புள்ளவர், ப்ரியமானவர், பூஜைக்கு லாயக்கானவர் என்று நினைத்தாரோ; அவர்களை அழைத்து மரியாதைக்குத் தக்கபடி ஒரே சீராக வெகுமானங்களை அளித்தார். தேவகணங்கள் ஸ்ரீரகுநாதனின் விவாஹத்தைக் கண்டு, அந்த விழாவினது அழகை வருணித்தபடி பூமாரி பொழிந்தார்கள்.

சலே நிஸான் பஜாஇ ஸூர
நிஜ நிஜ புர் ஸுக் பாயீ ।
கஹத் பரஸ்பர் ராம் ஜஸு
ப்ரேம் ந ஹ்ருதயம் ஸமாயீ ॥ 3431

தேவர்களும் பேரிகை கொட்டியவாறு பலவிதமான ஸுகங்களை அனுபவித்து அவரவர் தங்கள் தங்கள் லோகம் சென்றனர். அவர்கள் ஒருவர் மற்றவரிடம் ஸ்ரீரகுநாதனின் கீர்த்திகளைப் பற்றிப் புகழ்ந்து கொண்டே போகிறார்கள். இதயத்தில் அளவிடமுடியாத ப்ரேமை நிரம்பி வழிந்தது.

ஸப் பிதி ஸப்ஹி ஸமதி நர்நாஹூ ।
ரஹா ஹ்ருதயம் பரி பூரி உசாஹூ ॥ 3432
ஜஹம் ரனிவாஸு தஹாம் பகு தாரே ।
ஸஹித் பஹூடின்ஹ கும்வர் நிஹாரே ॥ 3433

எல்லோருக்கும் எல்லாவித தான தருமங்களையும், கடமைகளையும், மரியாதைகளையும், செய்தபின்பு தசரதரின் மனம் பூரண உத்ஸாஹம் பெற்று நிம்மதியடைந்தது. பின்னர் அவர் அந்தப்புரம் சென்றார். அங்கு மணப் பெண்களான மருமகள்களுடன் தமது புத்ரர்களையும் கண்ணாரக் கண்டு களித்தார்.

லியே கோத் கரி மோத் ஸமேதா |
கோ கஹி ஸகயி பயவு ஸுகு ஜேதா || 3434
பதூ ஸப்ரேம் கோத் பைடாரீம் |
பார் பார் ஹியம் ஹர்ஷி துலாரீம் || 3435

ராஜா தசரதர் ஆனந்தத்துடன் தனது புத்ரர்களை மடிமீது வைத்து உச்சிமோந்தார். அந்த ஸமயம் உண்டான ஸுகத்தைச் சொல்லி முடியாது. பிறகு மருமகப் பெண்களையும் மடிமீது வைத்து மனம் மகிழ்ந்து திரும்பத் திரும்ப அவர்களை அன்புடன் ஆசிகூறி வாழ்த்தினார்.

தேகி ஸமாஜு முதித் ரனிவாஸூ |
ஸப் கேம் உர் ஆனந்த கியோ பாஸூ || 3436
கஹேவு பூப் ஜிமி பயவு பிபாஹூ |
ஸுனி ஸுனி ஹர்ஷ ஹோத் ஸப் காஹூ ||3437

இந்த அழகிய கொண்டாட்டத்தைக் கண்ட அந்தப் புர மக்கள் பரமானந்தமடைந்தார்கள். எல்லோருடைய உள்ளிலும் மகிழ்ச்சி குடிகொண்டது. அப்பொழுது ராஜா ஸ்ரீராமனுக்கும் மற்றவருக்கும் விவாஹம் நடந்த சிறப்பை எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட யார்தான் மகிழ்வடைய மாட்டார்கள்? எல்லோரும் அடைந்தார்கள்.

ஜனக் ராஜ குன் ஸீலு படாயீ |
ப்ரீதி ரீதி ஸம்பதா ஸுஹாயீ || 3438
பஹ்ஃபிதி பூப் பாட் ஜிமி பர்னீ |
ரானீம் ஸப் ப்ரமுதித் ஸுனி கரனீ || 3439

ராஜா ஜனகருடைய குணத்தைப் பற்றியும், சீலத்தைப் பற்றியும், பெருமை பற்றியும், ப்ரீதி முறை பற்றியும், செல்வத்தைப் பற்றியும், தசரதர் பாணரைப் போல் பலவாறு வர்ணித்துக் கொண்டே போனார். ஜனகருடைய இந்த மஹத்வத்தைக் கேட்ட ராணிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

ஸுதன்ஹ ஸமேத நஹாயி ந்ருப
போலி பிப்ர குர் க்யாதி |
போஜன் கீன்ஹ அனேக் பிதி
கரீ பஞ்ச கயி ராதி || 3440

புத்ரர்களுடன் ராஜா தசரதர் ஸ்நானம் செய்து விட்டு ப்ராம்மணர்கள், குரு குடும்பத்தில் உள்ளவர் யாவரையும் கூப்பிட்டுப் பலவகையான போஜனம் செய்து வைத்தார். இம்மாதிரிப் பலவிதச் சடங்குகளை யும் செய்து செய்து ஒருவாறாக இரவு ஐந்து மணியும் கழிந்தது.

மங்கல கான் கர்ஹிம் பர் பாமினி |
பை ஸுகமூல் மனோஹர் ஜாமினீ || 3441
அஞ்சயி பான் ஸப் காஹூம் பாஏ |
ச்ரக் ஸுகந்த பூஷித சபி சாயே || 3442

அழகிய பெண்கள் மங்கல இசைபாட ஸுகத்தின் இருப்பிடமாகவும், மங்கலமாகவும், ஆனந்தமயமாகவும் அந்த இரவு மனோஹரமான இரவாக ஆகிவிட்டது. எல்லோரும் ஆசமனம் செய்து வெற்றிலை-பாக்கு போட்டுக் கொண்டார்கள். பின்னர் பலவித ஸுகந்த மலர்மாலைகளை அணிந்து கொண்டு, நறுமணப் பொருள்களையும் பூசிக் கொண்டு மிகச் சோபையுடன் அனைவரும் காட்சி அளித்தார்கள்.

ராமஹி தேகி ரஜாயஸு பாயீ |
நிஜ நிஜ பவன் சலே ஸிர் நாயீ || 3443
ப்ரேம ப்ரமோது பிநோது படாயீ |
ஸமவு ஸமாஜு மனோஹர்தாயீ || 3444

ஸ்ரீராமச்சந்த்ரனை நோக்கி அவருடைய ஆஜ்ஞை யைப் பெற்று, தலைவணங்கி அவரவர் தங்கள் தங்கள் இல்லம் ஏகினார்கள். அங்கு அந்த ஸமயம் குடி கொண்டிருந்த அன்பும், ஆனந்தமும் வினோதங்களும், மஹத்வங்களும் அந்த ஸமயமும் அந்த ஸமூஹமும், மனோஹரமான சூழ்நிலையையும் பற்றி;

கஹி ந ஸக்ஹிம் ஸத் ஸாரத் ஸேஸூ |
பேத் பிரஞ்சி மஹேஸ் கனேஸூ || 3445
ஸோ மைம் கஹெளம் கவன் பிதி பர்னீ |
பூமிநாகு ஸிர தர்யி கி தர்னீ || 3446

நூற்றுக்கணக்கான ஸரஸ்வதிகள், சேஷன், வேதம், ப்ரம்மா, மஹாதேவன், கணேசன், வந்தாலும் எவராலும் இந்த மனோஹரமான ஸம்பவத்தைப் பற்றிக் கூற

இயலாது. அப்படி இருக்க நான் எந்தத் தைர்யத்தைக் கொண்டு இந்தச் சுபதினத்தை வர்ணனை செய்வேன்? எங்காவது மண்புழுவானது தன் தலை மீது பூமியின் பாரத்தைத் தூக்க முடியுமா? இம்மாதிரி இயலாத காரியத்தில் நான் ஏன் பிரவேசிப்பது? அதனால் விட்டு விடுகிறேன்.

ந்ருப ஸப் பாந்தி ஸப்ஹி ஸன்மானீ |
கஹி ம்ருது பசன் போலாயீ ரானீ || 3447
பதூ லரிகனீம் பர் கர் ஆயீம் |
ராகேஹு நயன் பலக் கீ நாயீம் || 3448

ராஜா எல்லோருக்கும் எல்லாவிதத்திலும் தகுந்த படி மரியாதை செய்தபின் ம்ருதுவான கோமலக் குரலில் ராணிகளைக் கூப்பிட்டார். பின்னர் ''மருமகள் யாவரும் சிறு குழந்தைகள்; பிறர் மனையிலிருந்து வந்திருக்கிறார்கள். ஆகவே, இவர்களுக்குத் தகுந்தபடி அன்பு செலுத்திக் கண்களை இமை காப்பது போல் நீங்கள் எல்லா வகையிலும், காத்துப் பார்க்க வேண்டும்; ஸுகம் பெறச் செய்ய் வேண்டும்.

லரிகா ச்ரமித் உநீத் பஸ்
ஸயன் கராவஹு ஜாயி |
அஸ் கஹி கே பிச்ராமக்ருஹம்
ராம சரன் சிது லாயி || 3449

புத்ரர்கள் ரொம்பவும் களைத்து இருக்கிறார்கள். ஆகவே, நித்திரைக்கு வசமாகிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இவர்களைச் சீக்கிரம் சயன க்ருஹத்திற்கு அழைத்துப் போங்கள்; உறங்கச் செய்யுங்கள் என்று ராணிகளிடம் கூறிவிட்டு, ராஜா ஸ்ரீராமனின் திருவடிகளை எண்ணியபடித் தமது விச்ராம பவனுக்குச் (களைப்பாறும் இடம்) சென்றார்.

பூப் பசன் ஸுனி ஸஹஜ் ஸுஹாயே |
ஜரித கனக மனி பலங்க் டஸாயே || 3450
ஸுபக் ஸுரபி பய பேன் ஸமானா |
கோமல் கலித ஸுபேதீம் நானா || 3451

இயற்கையிலேயே அன்பு உள்ளம் கொண்ட ராஜா வின் இந்த வார்த்தைகளைக் கேட்ட ராணிகள் கற்கள் பதித்த தங்கக் கட்டில்களில் அழகழகான விரிப்புகளை விரித்தார்கள். அதன் மீது பசுவின் பால் போல் வெண்மை நிறத்த அனேக விரிப்புகளையும் விரித் தார்கள்.

உபபர்ஹன் பர் பர்னி ந ஜாஹீம் |
ஸ்ரக் ஸுகந்த மனி மந்திர் மாஹீம் || 3452
ரத்ன தீப் ஸுபு சாரு சந்தோவா |
கஹத் ந பனயி ஜான் ஜேஹி ஜோவா || 3453

ஸுந்தரமான தலையணைகளைப் பற்றி வர்ணிக் கவே இயலாது. மணிகளினாலான கோவில்களில் பூக்களின் ஹாரங்களும், பலவிதமான ஸுகந்த த்ரவ் யங்களும் அணி செய்தன. அழகிய ரத்ன தீபங்களும் மண்டபத்தின் ஓரங்களில் அதிக சோபையைக் கொடுக் கின்றன. இந்த அழகை யார் கண்டார்களோ அவர்கள் தான் கூறமுடியும்.

ஸேஜ் ருசிர் ரசி ராமு உடாயே |
ப்ரேம ஸமேத் பலங்க பௌடாயே || 3454
அக்யா புனி புனி பாஇன்ஹ தீன்ஹீ |
நிஜ நிஜ ஸேஜ் ஸயன் தின்ஹ கீன்ஹீ || 3455

இம்மாதிரி ஸுந்தரமான படுக்கைகளை அலங்கரித்த பின் தாய்மார்கள் ஸ்ரீராமனைக் கைகளால் பிடித் தெழுப்பி ப்ரேமையுடன் கட்டிலின்மீது உட்கார வைத் தார்கள்.

ஸ்ரீராமச்சந்த்ரன் திரும்பத் திரும்ப ஸஹோதரர் களுக்கு ஆணை கொடுத்தார். பின்பு அவர்களும் தங்கள் தங்கள் படுக்கைக்குத் தூங்கச் சென்றனர்.

தேகி ஸ்யாம் ம்ருது மஞ்ஜுள காதா |
கஹஹிம் ஸப்ரேம் பசன் ஸப் மாதா || 3456
மார்க ஜாத் பயாவனி பாரீ |
கேஹி பிதி தாத தாடகா மாரீ || 3457

ஸ்ரீராமனுடைய நீலவர்ண அழகிய மென்மையான சரீரத்தைப் பார்த்து எல்லாத் தாய்மார்களும் ப்ரேமையுடன்; கண்மணி போன்ற குமாரா! போகும் வழியில் நீ எப்படி அந்தப் பயங்கரமான தாடகை என்ற ராக்ஷஸியை வதம் செய்தாய்?

கோர் நிஸாசர் பிகட் பட
ஸமர் கநஹி நஹிம் காஹூ |
மாரே ஸஹித் ஸஹாய் கிமி
கல மாரீச ஸுபாஹூ || 3458

மிகவும் பயங்கரமான ராக்ஷதனும், பயங்கரமான பெரிய பலவானும், போரில் யாரையும் லட்சியம் செய்யாத வீரனும் இருந்தானே; அப்படிப்பட்ட, யாவரும் யுத்தத்தில் ஜயிக்க முடியாத அந்தத் துஷ்டன் மாரீசனையும், ஸுபாஹுவையும், மற்றும் அவன் கூட்டாளிகளையும் நீ எப்படி அடித்துக் கொன்றாய்?

முனி ப்ரஸாத் பலி தாத தும்ஹாரீ |
ஈஸ் அனேக கர்வரேம் டாரீ || 3459
மக ரக்வாரீ கரி துஹூம் பாயீம் |
குரு ப்ரஸாத் ஸப் பித்யா பாயீம் || 3460

அப்பா! ஹே குமாரா! நான் உனக்காக ப்ரார்த்திக்கிறேன்; திருஷ்டி கழிக்கிறேன். முனிவருடைய க்ருபையாலும்; ஈச்வர அனுக்ரஹத்தாலும் உங்களுக்கு வந்த பெரும் பாதகங்கள் தானாகவே விலகி விட்டன. நீங்கள் இரு ஸஹோதரர்களும் குருவின் யஜ்ஞத்தைக் காப்பாற்றிவிட்டு அந்தக் குருவின் க்ருபையால் பல விதமான வித்தைகளையும் கற்றீர்கள்.

முனிதிய தரீ லகத் பக் தூரீ |
கீர்தி ரஹீ புவன பரி பூரீ || 3461
கமட பீடி பபி கூட் கடோரா |
ந்ருப ஸமாஜ் மஹூம் ஸிவ தனு தோரா || 3462

சரணத்தின் துளி பட்டவுடனேயே கௌதம பத்னியான அஹல்யாவைப் புண்ய பலனை அடையும்படிச் செய்தாய். உலகமெங்கும் இந்தச் செய்தி வ்யாபித்து

விட்டது. ஆமையின் முதுகு ஓட்டையும் விட, வஜ்ரத் தையும் விட, மலையைக் காட்டிலும் கடுமையான அந்தச் சிவதனுஸை ராஜாக்கள் நிரம்பிய மண்டபத்தில் உடைத்து ஆச்சர்யத்தை உண்டாக்கினாய்.

பிஸ்வ பிஜய ஜஸு ஜானகி பாயீ |
ஆயே பவன் ப்யாஹி ஸப் பாயீ || 3463
ஸகல் அமானுஷ் கர்ம தும்ஹாரே |
கேவல் கௌஸிக் க்ருபாம் ஸுதாரே || 3464

உலகம் முழுவதும் உன் கீர்த்தி பரவும்படிச் செய்தாய். ஜானகியை அடைந்தாய். பின்பு எல்லா ஸஹோதர்களுக்கும் விவாஹம் செய்வித்து, வீட்டிற்குக் கூட்டி வந்தாய். உனது எல்லாச் செயல்களுமே மனுஷ்ய சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தியினால் அமானுஷ்யமான கார்யம் செய்தாய். இம்மாதிரி அற்புதங்களை விச்வாமித்ரரின் க்ருபையால் பெற்றாய்.

ஆஜு ஸுபல் ஜக் ஜன்மு ஹமாரா |
தேகி தாத பிதுபதன் தும்ஹாரா || 3465
ஜே தின் கயே தும்ஹஹி பினு தேகேம் |
தே பிரஞ்சி ஜனி பார்ஹிம் லேகேம் || 3466

அப்பா! உன்னுடைய சந்த்ரன் போன்ற முகத்தைக் கண்ட நாம் உலகில் ஜன்மம் எடுத்ததன் சாபல்யத்தை அடைந்தோம். உன்னைப் பார்க்காமல் கழிந்த நாட்களின் துயரத்தை ப்ரம்மாவினால் கூட எண்ண முடியாது. அதாவது; அந்த நாட்களை எண்ணுவது ஸாத்யமில்லை. நமது ஆயுளில் அவைகளைச் சேர்க்க மாட்டார்.

ராம ப்ரதோஷீம் மாது
ஸப் கஹி பினீத் பர் பைன் |
ஸுமிரி ஸம்பு குர் பிப்ர பத
கியே நீத்பஸ் நைன் || 3467

வினயத்துடன் அன்பான, சிறப்புள்ள வார்த்தைகளைக் கூறி ஸ்ரீரகுராமன் தாய்மார்களை ஸந்தோஷம் அடையச் செய்தார். பின்னர் சிவன், குரு ப்ராம்மணர் ஆகியவர்களின் பாதங்களை மனத்தில் எண்ணிக் கொண்டு நித்ரை வசப்பட்டார்.

நீதவும் பதன் ஸோஹ் ஸுடி லோனா |
மனஹுூம் ஸாஞ்ஜ் ஸரஸீருஹ் ஸோனா ||3468
கர் கர் கர்ஹிம் ஜாகரன் நாரீம் |
தேஹிம் பரஸ்பர மங்கல காரீம் || 3469

நித்ரையிலுங் கூட அவர் முகம் அத்யந்த அழகுடன் ப்ரகாசித்தது. அதாவது; மாலை நேரத்தில் தாமரை மலர் எப்படி இருக்குமோ; அம்மாதிரி இருந்தது. ஸ்த்ரீகள் வீடுதோறும் கண் விழித்திருந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டும் வசை மாரி பொழிந்து கொண்டும், விளையாடிக் கொண்டும் இருந்தார்கள்.

புரீ பிராஜதி ராஜதி ரஜனீ |
ரானீம் கஹஹிம் பிலோ கஹுூ ஸஜனீ || 3470
ஸுந்தர் பதுன்ஹ ஸாஸுூ லை ஸோயீம் |
பனிகன்ஹ ஜனு ஸிரமனி உர் கோயீம் || 3471

ராணிகள்; ஹே ஸகீ! இங்கே பார்! இன்றைய இரவு எத்தனை ஒளியுடன் இருக்கிறது? இதனால் அயோத்யாபுரியே இன்று விசேஷ ஒளியுடன் விளங்குகிறது! மாமியார்கள் தங்கள் அழகிய மருமகள்களைத் தங்களுடன் அழைத்துச் சென்று தூங்க வைத்துக் கொள்வது போலிருக்கிறது. அது எப்படி இருந்தது என்றால்; ஸர்ப்பங்கள் தமது சிரோமணியை எடுத்து ஹிருதயத்தில் ஒளித்து வைத்துக் கொள்கிறதோ என்னும்படி இருந்தது.

ப்ராத புனீத கால் ப்ரபு ஜாகே |
அருன் சூட் பர் போலன் லாகே || 3472
பந்தி மாகதன்ஹி குன்கன் காயே |
புரஜன் த்வார் ஜோஹாரன் ஆயே || 3473

விடியற்காலை தூய ப்ராம்ம முஹுூர்த்தத்தில் ப்ரபுவான ஸ்ரீராகவன் விழித்து எழுந்து விட்டான். கோழிகள் அழகாகக் கூவின. பாணர்களும், மாகதர்களும், ஸுப்ரபாதம் பாடுபவர்களும் ப்ரவுவின் குண கானம் செய்தார்கள். அவ்வாறே நகரவாஸிகள் பலரும் ப்ரபுவை வந்தனை செய்ய ராஜமஹால் நுழைவாயிலில் வந்து நின்றிருந்தார்கள்.

பந்தி பிப்ர ஸுர குர் பிது மாதா |
பாயி அஸீஸ் முதித் ஸப் ப்ராதா || 3474
ஜனனின்ஹ ஸாதர் பதன் நிஹாரே |
பூபதி ஸங்க த்வார் பகு தாரே || 3475

ப்ராம்மணர்கள், தேவதைகள், குரு, மாதா, பிதா, யாவரையும் வந்தனம் செய்து, ஆசீர்வாதம் பெற்று, எல்லா ஸஹோதரர்களும் ஸந்தோஷம் அடைந்தார் கள். தாய்மார்களும் அன்புடனும், பக்தியுடனும் அவர் களை நோக்கினார். பின்பு இந்த ஸஹோதரர்கள் ராஜா தசரதருடன் வெளி வாசல் அதாவது; ராஜத் வாரம் வந்து சேர்ந்தார்கள்.

கீன்ஹி ஸௌச் ஸப் ஸஹஜ் ஸுசி
ஸரித் புனீத் நஹாயி |
ப்ராதக்ரியா கரி தாத
பஹிம் ஆயே சாரிவு பாயி || 3476

இயற்கையிலேயே நற்குணமுடைய ஸஹோதரர்கள் நால்வரும் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பவித்ரமான ஸரயூ நதியில் தீர்த்தாமாடினர். பிறகு காலையில் செய்ய வேண்டிய க்ரியைகளான ஸந்த்யா வந்தனாதிகளைச் செய்தபின்பு தங்கள் தகப்பனாரிடம் அவர்கள் வந்தார்கள்.

பூப் பிலோகி லியே உர் லாயீ |
பைடே ஹர்ஷி ரஜாயஸு பாயீ || 3477
தேகி ராமு ஸப் ஸபா ஜுடானீ |
லோசன் லாப் அவதி அனுமானீ || 3478

ராஜா, புத்ரர்களைக் கண்டதுமே ஆனந்தத்துடன் ஆலிங்கனம் செய்து கொண்டார். பின்னர் அவர்கள் தந்தையின் ஆஜ்ஞை பெற்று, மகிழ்ந்து ஆஸனங்களில் அமர்ந்தார்கள். ஸ்ரீ ராகவனைத் தரிசித்தது தங்களுடைய கண்கள் செய்த தவப்பயனே என்று எண்ணி மகிழ்ந்து ஸபையில் உள்ள ஸபையோரும் குளிர்ச்சி பெற்றார் கள்; நிம்மதியடைந்தார்கள். (அதாவது; மூன்று விதத் தாபங்களும் அழிந்து விட்டன போன்ற நிலை மக்க ளிடையே உண்டானது.)

புனி பஸிஷ்டு முனி கௌசிகு ஆயே ।
ஸுபக் ஆஸனன்ஹி முனி பைடாயே ॥ 3479
ஸுதன்ஹ ஸமேத் பூஜி பத லாகே ।
நிரகி ராமு தோவு குர் அனுராகே ॥ 3480

பின்னர் முனி வஸிஷ்டரும், விச்வாமித்ரரும் வந்தார்கள். ராஜா அவர்களுக்கு அழகிய ஆஸனங்களைத் தந்து அமரும்படிச் செய்தார். மேலும்; புதல்வர்களுடன் அந்த முனிவர்களுக்குப் பூஜை செய்து, அவர்களது திருவடிகளைப் பிடித்துக் கொண்டு வணங்கினர். இரண்டு குருதேவர்களும் ஸ்ரீராமனைக் கண்ணாரக் கண்டு அழகில் மெய்ம்மறந்து, ப்ரேமையில் மூழ்கினார்கள்.

கஹஹிம் பஸிஷ்டு தர்ம இதிஹாஸா ।
ஸுனஹிம் மஹீஸு ஸஹித் ரனிவாஸா ॥3481
முனி மன் அகம காதிஸுத கர்னீ ।
முதித் பஸிஷ்ட பிபுல பிதி பர்னீ ॥ 3482

குரு வஸிஷ்டர் தர்மத்தின் சரித்ரங்களைக் கூறினார். ராஜா தமது மனைவிமார் அந்தப்புரவாஸிகளுடன் இவைகளைக் கேட்டார். முனிவர்களது மனத்திற்கும் அடைய முடியாத குரு விச்வாமித்ரரின் செயலைப் பற்றி எண்ணிய வஸிஷ்டர் பரமானந்தமடைந்து அவர் செய்த அபாரமான கார்யங்களைப் பற்றிப் பல விதமாக வர்ணனை செய்தார்.

போலே பாமதேவு ஸப் ஸாஞ்சீ ।
கீர்தி கலித லோக் திஹும் மாசீ ॥ 3483
ஸுனி ஆனந்து பயவு ஸப் காஹூ ।
ராம லகன் உர் அதிக் உசாஹூ ॥ 3484

வாமதேவர்; இந்த வார்த்தைகள் யாவும் ஸத்தியம் தான். குரு விச்வாமித்ரரின் கீர்த்தி மூன்று உலகங்களிலும் பரவியுள்ளது. இதைக் கேட்ட யாவரும் மகிழ்ந்தனர். ஸ்ரீராமன், லக்ஷ்மணரின் உள்ளங்களும் நிரம்பிய ஆனந்தத்தோடு திகழ்ந்தது.

மங்கல மோத் உசாஹ் நித்
ஜாஹிம் திவஸ் ஏஹி பாந்தி ।

உமகீ அவத் அனந்த பரி
அதிக் அதிக் அதிகாதி || 3485

தினமும் மங்களமும், ஆனந்தமும், உத்ஸவங்களும் நடந்து கொண்டே இருக்கின்றன. இம்மாதிரியே நாட்களும் கழிந்தன. அயோத்யாபுரி ப்ரம்மானந்தத்தில் பொங்கித் திளைத்து இருந்தது. அதிக ஆனந்தம் பின்னும் பின்னும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

ஸுதின் ஸோதி கல் கங்கன் சோரே |
மங்கல மோத் பினோத் ந தோரே || 3486
நித நவ ஸுகு ஸுர தேகி ஸிஹாஹீம் |
அவத் ஜன்ம ஜாசஹிம் பிதி பாஹீம் || 3487

நல்ல முஹூர்த்த நாட்களைப் பார்த்து, நல்ல சுப நேரத்தில், அழகிய கங்கணங்கள் அவிழ்க்கப்பட்டன. மங்களம், ஆனந்தம், வினோதம் இவைகளுக்குக் குறைவில்லை. நித்யம் இம்மாதிரியான பரம ஸுகப்ராப்தியினால் ஆனந்தமடைந்த தேவர்கள் இதே மாதிரியான அயோத்யாவிலேயே ஜன்மம் எடுக்க மாட்டோமா என்று ப்ரம்மனிடம் வேண்டிக் கொண்டார்கள்.

பிஸ்வாமித்ரு சலன் நித சஹஹீம் |
ராம ஸப்ரேம பிநய பஸ் ரஹஹீம் || 3488
தின் தின் ஸயகுன பூபதி பாவூ |
தேகி ஸராஹ மஹாமுனி ராவூ || 3489

தினம் தினம் விச்வாமித்ரர் அயோத்தி அரசனிடமும், ராம, லக்ஷ்மணன் முதலானவருடனும், விடை பெற்றுப் போக நினைத்தார். ஆனால்; ஸ்ரீராமனின் ப்ரேமையும் அடக்கமும் அவரைப் போகவிடவில்லை; ராஜாதசரதனின் ப்ரேமையும் தினமும் அவரை கலங்கச் செய்தது. இதனால் அவர் பயணம் சற்றுத் தள்ளிப் போனது. இவர்களது அன்பை எண்ணி எண்ணி வாயாறப் புகழ்ந்து பேசினார் மஹாமுனி விச்வாமித்ரர்.

மாகத பிதா ராவு அனுராகே |
ஸுதன்ஹ ஸமேத் டாட் பே ஆகே || 3490
நாத் ஸகல ஸம்பதா தும்ஹாரீ |
மை ஸேவகு ஸமேத் ஸுத நாரீ || 3491

முடிவில் எப்பொழுது விச்வாமித்ரர் எல்லோரிடமும் விடை பெற வந்தாரோ, அப்போது ராஜா தசரதர் பிரிவு தாங்க முடியாமல் ப்ரேமையில் திளைத்துப் பிள்ளையோடு கூட எதிரில் வந்து நின்று கொண்டார். பிறகு; ஹே ஸ்வாமி! இந்த எல்லா ஸம்பத்துகளும், வைபவங்களும் தங்களுக்கே அடைக்கலம். நாங்கள் எல்லோருமே என்றும் தங்கள் ஸேவகர்கள் என்றார்.

கர்ப் ஸதா லரிகன்ஹ பர் சோஹூ |
தர்ஸனு தேத் ரஹப் முனி மோஹூ || 3492
அஸ் கஹி ராவு ஸஹித ஸுத ரானீ |
பரேவு சரன் முக ஆவ் ந பானீ || 3493

ஹே முனிவரே! என் புத்ரர்கள் மீது எப்போதும் தங்கள் ஸ்னேகத்தையும், கருணையையும் காட்டுங்கள். எனக்கும் அடிக்கடி தங்களது தர்சனம் கிட்டும்படிச் செய்யுங்கள் என இப்படிக் கூறிய தசரதர் ராணிகளுடனும், புத்ரர்களுடனும் வந்து விச்வாமித்ரரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார். அப்போது அதிக ப்ரீதி வசத்தில் இருந்ததால் அவர் குரல் தழுதழுத்தது. அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெளிவரவே இல்லை.

தீன்ஹி அஸீஸ் பிப்ர பஹு பாந்தீ |
சலே ந ப்ரீதி ரீதி கஹி ஜாதீ || 3494
ராமு ஸப்ரேம் ஸங்க ஸப் பாயீ |
ஆயஸு பாயி பிரே பஹுஞ்சாயீ || 3495

குரு விச்வாமித்ரர் பலவிதமாக ஆசீர்வாதங்களைச் செய்தார். பின்னர் தனது இருப்பிடம் செல்லலானார். அந்தப் ப்ரீதியின் முறையை யாரால் கூறமுடியும்? எல்லா ஸஹோதரர்களுடன் சேர்ந்து ஸ்ரீராமன் விச்வாமித்ரருடன் சிறிது தூரம் சென்று கொண்டு விட்டு ஆணை பெற்றுத் திரும்பினார்.

ராம ரூபு பூபதி பக்தி
ப்யாஹு உசாஹு அனந்து |
ஜாத் ஸராஹத் மன்ஹிம் மன்
முதித் காதி குல சந்து || 3496

காதி வம்சத்தின் சந்த்ரன் போன்ற விச்வாமித்ரர் மிகப் ப்ரியத்துன் ஸ்ரீ ராமச்சந்த்ரனின் ரூபத்தைக் கண்டும், தசரதனின் பக்தியைக் கண்டும் நான்கு புத்ரர் களின் விவாஹ வைபவ உத்ஸாஹத்தைக் கண்டும், எல் லோருடைய அன்பைப் பற்றியும் மனத்தினில் எண் ணிக் கொண்டே த்ருப்தியான நெஞ்சத்துடன் புகழ்ந்த வாறே போனார்.

பாமதேவ் ரகுகுல குர் க்யானீ |
பஹுரி காதிஸுத கதா பகானீ || 3497
ஸுனி முனி ஸுஜஸு மன்ஹிம் மன் ராவு |
பர்னத் ஆபன் புன்ய ப்ரபாவு || 3498

குரு வாமதேவரும், ரகு குலத்தின் குருவான வஸிஷ் டரும் விச்வாமித்ரருடைய வாழ்க்கை வரலாற்றுக் கதை களைப் பற்றிக் கூறினார். இப்படிப்பட்ட முனிவரின் புகழ்க் கதையைக் கேட்ட ராஜா தசரதர் மனத்தினுள் தமது புண்ய ப்ரபாவத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்தார்.

பஹுரே லோக் ரஜாயஸு பயவு |
ஸுதன்ஹ ஸமேத் ந்ருபதி க்ருஹம் கயவு ||3499
ஜஹம் தஹம் ராம ப்யாஹு ஸபு காவா |
ஸுஜஸு புனீத் லோக் திஹும் சாவா || 3500

ராஜாவின் ஆஜ்ஞை பெற்று எல்லோரும் அவரவர் தமது இல்லம் சென்றனர். ராஜா தசரதரும் தம் புத்ரர் களுடன் ராஜ மஹாலுக்குள் ப்ரவேசித்தார். அங்கு எல்லா இடங்களிலும் ஸ்ரீராமனின் விவாஹ வைபவத் தைப் பற்றிய கதையை பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் பரிசுத்தமான புகழ் மூவுலகங் களிலும் பரவி நின்றது.

ஆயே ப்யாஹி ராமு கர் ஜப் தேம் |
பஸயி அனந்த அவத் ஸப் தப் தேம் || 3501
ப்ரபு பிபாஹம் ஜஸ் பயவு உசாஹூ |
ஸகஹிம் ந பர்னி கிரா அஹிநாஹூ || 3502

எப்பொழுது ஸ்ரீ ராமச்சந்த்ரன் விவாஹம் செய்து கொண்டு வீடு வந்தாரோ; அப்போதிலிருந்தே எல்லா விதமான ஆனந்த வைபோகங்களும் அயோத்யாவில் தானாகவே தங்க வந்து சேர்ந்து விட்டன. ப்ரபுவின் விவாஹத்தில் எத்தனை உத்ஸாஹமும், ஆனந்தமும், மக்களுக்கு உண்டானது என்பதை வர்ணிக்க ஸரஸ்வதி யினாலும், ஸர்ப்ப அரசன் சேஷனாலும் முடியாது.

கபி குல ஜீவனு பாவன் ஜானீ |
ராம ஸீய ஜஸு மங்கல் கானீ || 3503
தேஹி தே மைம் கசு கஹா பகானீ |
கரன் புனீத் ஹேது நிஜ பானீ || 3504

ஸ்ரீ துளஸீதாஸர்; ஸ்ரீ ஸீதாராமனின் புகழையும், பெருமையையும், கவி குலங்களின் வாழ்க்கையைப் பவித்ரமாக்கும் என்பதை அறிந்தும், மங்களத்தின், ஸுபிக்ஷத்தின் பொக்கிஷம் என்று தெரிந்தும் கூட இந்த நூலில் நான் கொஞ்சம் கொஞ்சமாக எனது சொற்களையும் தூயவையாக்க எண்ணிச் சொந்தக் கற்பனைகளையும் சேர்த்து வர்ணனை செய்திருக் கின்றேன் என்கிறார்.

நிஜ கிரா பாவனி கரன் காரன்
ராம் ஜஸு துளஸீம் கஹ்யோ |
ரகுபீர் சரித அபார் பாரிதி
பாரு கபி கௌனேம் லஹ்யோ || 3505
உபபீத் ப்யாஹ் உசாஹ் மங்கல
ஸுனி ஜே ஸாதர் காவ்ஹீம் |
பைதேஹி ராம் ப்ரஸாத் தே ஜன்
ஸர்பதா ஸுகு பாவ்ஹீம் || 3506

தனது வாணியைப் பவித்ரமாக்க வேண்டும் என்னும் நோக்கத்திலேயே துளஸீ தாஸர் இந்த ஸ்ரீராம னின் புகழைப் பாடியிருக்கிறார். இல்லையெனில்; ஸ்ரீராமனின் சரித்ரக் கதை மஹா ஸமுத்ரம் போன்றது; எந்தக் கவிஞன்தான் அதைக் கடக்க முடியும்? யார் ஸ்ரீராமபிரானின் யஜ்ஞோபவீததாரண வைபவத்தைப் பற்றியும், விவாஹ மங்கல உத்ஸவத்தைப் பற்றியும்

அன்போடு கேட்டுப் பாடுகிறார்களோ; அவர்கள் அனைவரும் ஸ்ரீ ஜானகி-ஸ்ரீ ராமபிரான் அருளால் எப்பொழுதும் ஸகல ஸௌபாக்ய ஸுகங்களையும் பெற்று நீடுவாழ்வார்கள்.

ஸிய ரகுபீர் பிபாஹூ
ஜே ஸப்ரேம காவ்ஹிம் ஸுனஹிம் |
தின்ஹ கஹூம் ஸதா உசாஹூ
மங்கலாயதன் ராம் ஜஸூ || 3507

ஸ்ரீ ராமச்சந்த்ரனின் புகழ் மங்களத்திற்கு ஓர் இருப்பிடம் ஸ்ரீ ஸீதாதேவி, ஸ்ரீ ராமபிரான் இவர்களது விவாஹ வைபவ ப்ரஸங்கத்தை யார் யார் கேட்கிறார்களோ; பாடுகிறார்களோ; அவர்களுக்கு உத்ஸாஹத்தின் மேல் உத்ஸாஹம் உண்டாகும் என்பதில் ஐயமில்லை.

ஸகல ஸௌபாக்ய ஸுகங்களைத் தரவல்ல
கலியுகத்தில் எல்லாப் பாவங்களையும் போக்கவல்ல

ஸ்ரீராம சரித மானஸத்தின் முதல் ஸோபானம்

(பாலகாண்டம் நிறைவடைந்தது)

ஸ்ரீ ராமாய பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ராமஜயம்

சுக்ரன்	ஸூர்யன் புதன்		கேது
	ராசிச்சக்ரம்		லக்னம், குரு, சந்திரன்
செவ்வாய்			
ராஹு		சனி	

ஸ்ரீராமசந்த்ர: ச்ரித பாரிஜாத:
ஸமஸ்த கல்யாண குணபிராம:
ஸீதா முகாம்போருஹ சஞ்சரீக:
நிரந்தரம் மங்களம் ஆதநோது

அநுபந்தம்

கங்கை வரலாறு

ஸ்ரீராமனும், லக்ஷ்மணனும் முனிவர் விச்வாமித்ர ருடன் உலகைப் பரிசுத்தமாக்கும் கங்கையைச் சென்ற டைந்தனர்.

பிறகு ஸ்ரீராமன் முனிவரை வணங்கிக் கங்கையின் உற்பத்தியைப் பற்றிய வரலாற்றைக் கூறும்படிக் கேட் டார். அதற்கு முனிவர்; ஹே ராமா! உன்னுடைய வம் சத்தில் ஓர் அரசர் இருந்தார். அவர் பெயர் ஸகரர். அவரை மூவுலகும் அறியும். அவருக்கு கேசினீ, ஸுமதி என்ற இரு அழகிய ராஜமாதேவியர் இருந்தனர். செல்வ ஸுகபோகங்கள் எல்லாம் இருந்தன; ஆனால், பிள் ளைப் பேறு மட்டும் இல்லை. அதனால் அரசர் மிகவும் வருத்தத்திலாழ்ந்தார். அவர் ஒரு ஸமயம் தன் இரு மனைவியரையும் அழைத்துக் கொண்டு காட்டிற்குத் தவம் செய்யப் புறப்பட்டார். அங்குப் பலவகைப் பழ மரங்கள் இருந்தன. அங்குதான் ப்ருகுமுனிவரின் ஆச் ரமும் இருந்தது. அவர் மஹா தபஸ்வி, தேஜஸ் மிக் கவர். அதே காட்டில் அரசர் மகிழ்வோடு 100 ஆண்டு காலம் வரை தவம் செய்து கொண்டிருந்தார். ப்ருகு முனிவரைப் பலவாறாகத் துதித்தார். அப்பொழுது ப்ர ஸன்னமடைந்தப் ப்ருமுனிவர் வேண்டும் வரங்களைக் கேளுங்கள் என்றார். அரசரும் தமது இதயத்துயரை வெளியிட்டார். முனிவரும் ஆசி கூறி வரமும் அளித் தார். ராணிகளை நோக்கி உங்களுக்கு என்ன வரம் வேண்டுமோ அவற்றைக் கேளுங்கள் என்றார். முனி வரின் வார்த்தையைக் கேட்ட இரண்டு ராணிகளும் தலை வணங்கி; மஹாராஜரே! நாங்கள் மனதில் கொண்டுள்ள இச்சையை வரமாகக் கேட்கிறோம் என்றார்கள்.

ஒரு ராணி கேசினி என்பவள் அவரிடம் ''ஒரே அன்பான புத்திரனைக் கொடுங்கள்'', என்றாள். ஸுமதி என்ற மற்றவள் முனிவரிடம் ஹே முனிவரே! எனக்கு அறுபதாயிரம் பிள்ளைகள் வேண்டும் என்று கேட்டாள். முனிவரும், ''அப்படியே ஆகுக'' என்றார்.

ராஜா முனிவரின் கால்களில் விழுந்து வணங்கினார். அவர் வேண்டிய வரம் கிடைத்தது. பின்னர் தனது மனைவிகளுடன் அயோத்யாபுரி வந்தார். மகிழ்வோடு சிறிது காலத்தைக் கழித்தார். நல்ல அழகான வேளையில் கேசியானவள் அஸமஞ்ஜஸன் என்ற ஒரே ஒரு பிள்ளையைப் பெற்றாள். ஸுமதியிடம் அறுபதாயிரம் புத்திரர்கள் உண்டானார்கள். புத்திரர்களின் ஜன்மத்தைக் கண்ட ராஜா வெகுவாக மகிழ்ந்தார். நாமகரணம், மங்கள கரணம் எல்லாம் செய்து தானம், தக்ஷணைகள் கொடுத்தார். பிறகு ப்ராம்மணர்களுக்கும், குருவிற்கும், பார்வதிக்கும், கணேசனுக்கும் பூஜை செய்தார்.

ராஜா அழகான நெய்யினாலான குடங்களைத் தருவித்தார். அதில் அத்தனை குழந்தைகளையும் தனித்தனியாக வைத்துக் காப்பாற்றினார்.

ஹே மேகவண்ணா! ராமா! இம்மாதிரியே எல்லாக் குமாரர்களும் உண்டானார்கள். இதைக் கண்டு ராஜாவும்- ராணிகளும் ராத்திரி பகல் தெரியாமல் ஸந்தோஷத்தில் திளைத்திருந்தார்கள்.

நகரத்தில் உள்ளவர்கள் எல்லோரும், ஒவ்வொரு வீட்டாரும் மகிழ்ந்தனர். ராஜாவும் பரமானந்தம் அடைந்தார்; எல்லோருடைய துக்கமும் விலகியது. எல்லாக் குழந்தைகளும் பால லீலைகளைச் செய்த வண்ணம் குமாரப் பருவம் அடைந்து பலவித அற்புதங்களைச் செய்தார்கள். இந்தச் சுப காரியங்களினால் யாவருடைய இச்சைகளும் பூர்ணமானது. இதே ஆனந்தத்தில் ராஜா ஸகரர் இருந்தார். காலம் சென்றது; நிறைந்த நீருள்ள ஸரயூ நதி அயோத்யாவில் வடக்கு முகமாக அழகாகப் பெருகி ஓடியது.

நகர மக்களின் குழந்தைகள் தினமும் அங்குக் குளிக்க வருவார்கள். ஸகர ராஜாவின் மூத்த மகன் அஸமஞ்ஜஸன் அங்குப் பெரிய படகை எடுத்து வருவான். அதில் தன்னுடைய கைகளால் குழந்தைகளைப் படகில் எடுத்துப் போய்த் தண்ணீரில் முழுக அடித்து வதம் செய்து வந்தான்.

ஹே ராமா! குழந்தைகளின் அழிவைக் கேட்டு நகர மக்கள் யாவரும் மிகவும் வருந்தினார்கள். அரசர் இருக்குமிடத்திற்கு அனைவரும் சென்றனர். அவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி;

ஹே அரசே! தாங்கள் ப்ரஜைகளைக் காப்பாற் றவே நல்லெண்ணம் கொண்டு வாழ்கிறீர்கள். ஆனால்; தங்கள் பிள்ளையோ எங்களுக்குக் காலனாகத் தோன்று கிறார். ஹே மன்னா! நாங்கள் இந்தத் தேசத்தை விட்டுப் போகிறோம். நாங்கள் போகாவிட்டால் எங் கள் கஷ்டங்களும் தீராது.

அரசே! தங்கள் புத்திரன் மஹாபாபம் செய்திருக் கிறான். நகரத்தில் உள்ள பலரது குழந்தைகளைக் கொன்றிருக்கிறான். தங்களுக்கு வேண்டுமானால் இந் தப் பிள்ளை ப்ராணன் போன்றவன். ஆனால்; எங்க ளுக்கோ இவன் எமனாவான்.

இவ்வாறு ப்ரஜைகளின் அழுகையைக் கேட்ட ராஜா அவர்களை ஸமாதானம் செய்து தனது புத் திரனை நாடு கடத்தினார். அந்த அஸமஞ்ஜஸன் பெரிய தொரு யோகி. நகரைவிட்டுப் போகவே அவ்வாறு செய்தான். அவன் நகரம் விட்டுப் போகும்பொழுது தனது யோக பலத்தால் நகர வாஸிகளின் குழந்தை களை மீண்டும் உயிர்ப்பித்து அவர்களிடம் கொடுத்து விட்டுப் போனான். அந்த அஸமஞ்ஜஸன் என்பவ னுடைய குமாரர்தான் அம்சுமான் என்பவன். மகாபிர தாபி; குணக்கடல், அவனால் மக்கள் மகிழ்ந்தார்கள்.

ஹே பரத்வாஜ முனிவரே! அந்த அரசனின் மன தில் ப்ரஜைகளின் மீது அபார அன்பு இருந்தது. எப் படி ஜலத்தில் இருக்கும் மீனுடைய மனதில் ஜலத்தின் மீதே விருப்பம் இருக்கிறதோ; அம்மாதிரி மக்களுக்கு ராஜாவின் மீது அளவில்லாத நம்பிக்கையும் நிம்மதியும் ஏற்பட்டது. ப்ரஜைகள் தங்கள் தங்கள் இல்லம் சென்று நிம்மதியடைந்தார்கள். பிறகு ராஜா ஸகரர் தனக்கு வயோதிகம் வந்து விட்டதை உணர்ந்து, தனது அந்த ரங்க அன்புள்ள மந்த்ரியையும், குருவையும் புத்திரர் களையும் அழைத்தார். இமாலயத்தின், விந்த்ய, பர்வ தத்தின் மத்திய ஸ்த்தானத்திற்கு அனைவரும் வந்து சேர்ந்தனர்.

வருணிக்க இயலாத அளவில் ஓர் அழகான மேடையை அமைக்கச் செய்தார். யஜ்ஞும் ஆரம்பித்த பின் ஓர் அற்புதமான குதிரையை ஓட விட்டார்கள். அந்தக் குதிரையானது ஸர்ப்பத்தைப் போல் வெகு வேகமாக ஓடியது. இந்த்ரன் இந்தச் செயலைக் கேள்விப்பட்டுப் பயந்து ஒருவரும் அறியா வண்ணம் குதிரையைத் தன்வசமாக்கிக் கொண்டான். குதிரையை யார் திருடினார்கள் என்பது கூடத் தெரியாத வண்ணம் இந்த்ரன் அந்தக் குதிரையை ஒருவரும் அறியா வண்ணம் முனிவர் கபிலரின் ஆச்ரமத்தில் விட்டு விட்டுப் போய் விட்டான். குதிரையைப் பாதுகாக்க நான்கு வீரர்கள் இருந்தும் யாருமே குதிரை திருட்டுப் போனதை அறியவில்லை. யார் குதிரையை எடுத்தார்கள் என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் யாரும் ராஜாவிடம் வந்து; ஹே அரசே! நாங்கள் கூறவே பயப்படுகிறோம். யாரோ ஒருவன் நமக்கும் அறியாமல் குதிரையைத் திருடிப் போய் விட்டான். நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று தாங்கள் கட்டளையிட வேண்டும் என்று வினயத்துடன் கேட்டார்கள்.

இந்த வசனத்தைக் கேட்ட அரசன் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தார். உடனே தனது பிள்ளைகளைக் கூப்பிட்டு; ''நீங்கள் யாவரும் போய்க் குதிரையைத் தேடுங்கள்'' என்றார். அவர்களும் ராஜாவின் ஆஜ்ஞைப்படி காலில் விழுந்து வணங்கிக் கிளம்பினார்கள். எல்லா வீரர்களும் இந்த்ரனைப் போல் மிகவும் பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். யுத்தத்தில் பயப்படாமல் வீரத்துடன் யுத்தம் செய்யும் மஹா பலிஷ்டர்களாக இருந்தார்கள். அவர்கள் நடக்கும்பொழுதே பூமி கலக்க மடைந்தது. பலவிதமான ஜந்துக்களும், ம்ருகங்களும் அவர்கள் காலடிக்குப் பலியாயின.

புஷ்பங்களுடன் கூடிய நந்தவனங்கள், உபவனங்கள், தோட்டங்கள், நதிகள், ஓடைகள், குளம், குட்டைகள், கிணறுகள், நகரம், கிராமம், முனிவர்களின் இருப்பிடம், மலைக்குகைகள், வனம் இம்மாதிரி இன்னும் அனேக இடங்களிலும் குதிரையைத் தேடி ஓடி வந்தார்கள். இதே மாதிரி இவர்கள் குதிரையைத் தேடித்தேடிப்

பலனில்லாமல் ராஜாவிடம் வந்து, வணங்கி; ''மஹா ராஜா! எங்களுக்குக் குதிரை எங்குத் தேடியும் கிடைக்க வில்லை. எல்லா இடமும் தேடியாகி விட்டது'' என் றார்கள். அதைக் கேட்ட அரசர்; ''நீங்கள் போய்க் கைகளால் பூமியைத் தோண்டுங்கள்'' என்றார். உடனே மிக்க பலசாலியான அந்தப் புத்திரர்கள் கிழக்குத் திசை யாகச் சென்று, தங்களது வஜ்ரம் போன்ற; இரும்பைப் போன்ற கடினமான கைகளால், பூமியை ஒரு யோஜனை தூரம் தோண்டினார்கள். இம்மாதிரி தினம் தினம் பூமி தோண்டுவதில் ஈடுபட்டார்கள்.

இவர்களுடைய அதீத பலத்தைக் கண்டு தேவர்கள் நடுங்கினார்கள். அப்பொழுது ப்ரம்மன்; ''நீங்கள் பயப்பட வேண்டாம். சீக்கிரமே இந்த ஸகர புத்திரர் கள் அழியப் போகிறார்கள்'' என்றார். பூமியைத் தோண்டியபடி அவர்கள் பாதாளம் வந்தார்கள். அங்கு ஒரு திசை யானையைக் கண்டு தலை வணங்கினார்கள். அந்த யானையை அவர்கள் கேட்டதில் யானை, எல் லாக் கதைகளையும் கூறியது.

அந்த யானையின் மூலம் எல்லாக் கதைகளையும் அறிந்த அவர்கள் பின்னும் தெற்குத் திசையாக வந்தார் கள் அங்கு மற்றுமொரு யானை ரொம்பவும் உயரமாக வும், ப்ரகாசமாகவும், அழகாகவும் இருப்பதைக் கண் டார்கள். பிறகு அவர்கள் அந்தக் கஜத்திற்குப் பலவித மரியாதை ப்ரணாமங்கள் செய்து பின்னும் பூமியைத் தோண் டிக் கொண்டே மேற்குப் பக்கம் வந்தார்கள். அங்கு மேலும்; ஒரு கஜத்தைக் கண்டு அதிசயித்துப் பின் வடக் குப் பக்கம் வந்தார்கள். அங்கும் தேடினார்கள். அங்கு ஒரு வெள்ளை நிற திக்கஜத்தைக் கண்ட அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். அங்குக் கபிலமுனி இருப் பதைக் கண்டு அவரிடம் வந்தார்கள். பூமியைத் தோண் டியது இன்னும் முடியவில்லை. அதற்குள் அங்கு ஓர் அழகான சூழ்நிலையைக் கண்டார்கள். எல்லாப் பக்கங் களிலும் ஸமுத்திரம் மிக அழகாக இருந்ததைக் கண் டார்கள். அவர்கள் அங்கு, கபில முனி ஆச்ரமத்தில் கபில முனிவர் அருகில் தங்கள் குதிரை கட்டி இருப் பதைக் கண்டார்கள். பின்பு அவர்கள் அழிவு நிச்சயம் என்பது தெரியாமல்; இம்மாதிரி அதிகக் கோபத்துடன் கபிலரை நோக்கிக் கத்தினார்கள்.

வருணிக்க இயலாத அளவில் ஓர் அழகான மேடையை அமைக்கச் செய்தார். யஜ்ஞும் ஆரம்பித்த பின் ஓர் அற்புதமான குதிரையை ஓட விட்டார்கள். அந்தக் குதிரையானது ஸர்ப்பத்தைப் போல் வெகு வேகமாக ஓடியது. இந்த்ரன் இந்தச் செயலைக் கேள்விப்பட்டுப் பயந்து ஒருவரும் அறியா வண்ணம் குதிரையைத் தன்வசமாக்கிக் கொண்டான். குதிரையை யார் திருடினார்கள் என்பது கூடத் தெரியாத வண்ணம் இந்த்ரன் அந்தக் குதிரையை ஒருவரும் அறியா வண்ணம் முனிவர் கபிலரின் ஆச்ரமத்தில் விட்டு விட்டுப் போய் விட்டான். குதிரையைப் பாதுகாக்க நான்கு வீரர்கள் இருந்தும் யாருமே குதிரை திருட்டுப் போனதை அறியவில்லை. யார் குதிரையை எடுத்தார்கள் என்று ஒருவருக்கொருவர் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்கள் யாரும் ராஜாவிடம் வந்து; ஹே அரசே! நாங்கள் கூறவே பயப்படுகிறோம். யாரோ ஒருவன் நமக்கும் அறியாமல் குதிரையைத் திருடிப் போய் விட்டான். நாங்கள் என்ன செய்ய் வேண்டும் என்று தாங்கள் கட்டளையிட வேண்டும் என்று வினயத்துடன் கேட்டார்கள்.

இந்த வசனத்தைக் கேட்ட அரசன் ஆச்சர்யத்தில் ஆழ்ந்தார். உடனே தனது பிள்ளைகளைக் கூப்பிட்டு; ''நீங்கள் யாவரும் போய்க் குதிரையைத் தேடுங்கள்'' என்றார். அவர்களும் ராஜாவின் ஆஜ்ஞைப்படி காலில் விழுந்து வணங்கிக் கிளம்பினார்கள். எல்லா வீரர்களும் இந்த்ரனைப் போல் மிகவும் பராக்கிரமசாலிகளாக இருந்தார்கள். யுத்தத்தில் பயப்படாமல் வீரத்துடன் யுத்தம் செய்யும் மஹா பலிஷ்டர்களாக இருந்தார்கள். அவர்கள் நடக்கும்பொழுதே பூமி கலக்க மடைந்தது. பலவிதமான ஜந்துக்களும், ம்ருகங்களும் அவர்கள் காலடிக்குப் பலியாயின.

புஷ்பங்களுடன் கூடிய நந்தவனங்கள், உபவனங்கள், தோட்டங்கள், நதிகள், ஓடைகள், குளம், குட்டைகள், கிணறுகள், நகரம், கிராமம், முனிவர்களின் இருப்பிடம், மலைக்குகைகள், வனம் இம்மாதிரி இன்னும் அனேக இடங்களிலும் குதிரையைத் தேடி ஓடி வந்தார்கள். இதே மாதிரி இவர்கள் குதிரையைத் தேடித்தேடிப்

பலனில்லாமல் ராஜாவிடம் வந்து, வணங்கி; ''மஹா ராஜா! எங்களுக்குக் குதிரை எங்குத் தேடியும் கிடைக்க வில்லை. எல்லா இடமும் தேடியாகி விட்டது'' என் றார்கள். அதைக் கேட்ட அரசர்; ''நீங்கள் போய்க் கைகளால் பூமியைத் தோண்டுங்கள்'' என்றார். உடனே மிக்க பலசாலியான அந்தப் புத்திரர்கள் கிழக்குத் திசை யாகச் சென்று, தங்களது வஜ்ரம் போன்ற; இரும்பைப் போன்ற கடினமான கைகளால், பூமியை ஒரு யோஜனை தூரம் தோண்டினார்கள். இம்மாதிரி தினம் தினம் பூமி தோண்டுவதில் ஈடுபட்டார்கள்.

இவர்களுடைய அதீத பலத்தைக் கண்டு தேவர்கள் நடுங்கினார்கள். அப்பொழுது ப்ரம்மன்; ''நீங்கள் பயப்பட வேண்டாம். சீக்கிரமே இந்த ஸகர புத்திரர் கள் அழியப் போகிறார்கள்'' என்றார். பூமியைத் தோண்டியபடி அவர்கள் பாதாளம் வந்தார்கள். அங்கு ஒரு திசை யானையைக் கண்டு தலை வணங்கினார்கள். அந்த யானையை அவர்கள் கேட்டதில் யானை, எல் லாக் கதைகளையும் கூறியது.

அந்த யானையின் மூலம் எல்லாக் கதைகளையும் அறிந்த அவர்கள் பின்னும் தெற்குத் திசையாக வந்தார் கள் அங்கு மற்றுமொரு யானை ரொம்பவும் உயரமாக வும், ப்ரகாசமாகவும், அழகாகவும் இருப்பதைக் கண் டார்கள். பிறகு அவர்கள் அந்தக் கஜத்திற்குப் பலவித மரியாதை ப்ரணாமங்கள் செய்து பின்னும் பூமியைத் தோண் டிக் கொண்டே மேற்குப் பக்கம் வந்தார்கள். அங்கு மேலும்; ஒரு கஜத்தைக் கண்டு அதிசயித்துப் பின் வடக் குப் பக்கம் வந்தார்கள். அங்கும் தேடினார்கள். அங்கு ஒரு வெள்ளை நிற திக்கஜத்தைக் கண்ட அவர்கள் பெரிதும் மகிழ்ந்தார்கள். அங்குக் கபிலமுனி இருப் பதைக் கண்டு அவரிடம் வந்தார்கள். பூமியைத் தோண் டியது இன்னும் முடியவில்லை. அதற்குள் அங்கு ஓர் அழகான சூழ்நிலையைக் கண்டார்கள். எல்லாப் பக்கங் களிலும் ஸமுத்திரம் மிக அழகாக இருந்ததைக் கண் டார்கள். அவர்கள் அங்கு, கபில முனி ஆச்ரமத்தில் கபில முனிவர் அருகில் தங்கள் குதிரை கட்டி இருப் பதைக் கண்டார்கள். பின்பு அவர்கள் அழிவு நிச்சயம் என்பது தெரியாமல்; இம்மாதிரி அதிகக் கோபத்துடன் கபிலரை நோக்கிக் கத்தினார்கள்.

''ஏ துஷ்டா! நாங்கள் பூமியை நாலாபுறமும் தோண்டி வந்தோம். திருடன் நிறைய நாம் கண்டிருக் கிறோம். ஆனால், இம்மாதிரி வஞ்சகமான திருடனை நாம் கண்டதில்லை'' என்று அவர்கள் முனிவர் கபி லரை நோக்கி இரைந்தார்கள்.

அவர்கள் பின்னும்; ''பிறருடைய சொத்தை அப கரித்துக் கொண்டு இங்குப் பாதாள நகரம் வந்திருக் கிறான் இவன். முனிவர் வேடம் தாங்கிய திருடன் இவன்'' என்றான் ஒருவன். இன்னொருவன்; ''இவர் முனிவர் இல்லை. இவர் லக்ஷணத்தைப் பார்த்து மன தில் இவர் முனிவரே இல்லை'' என்று எண்ணிக் கொள் என்றான்.

மற்றும் ஒருவன்; ''இவ்வூர் இந்தத் துஷ்டன்! போலி முனிவர் வேடம் பூண்டு நமது குதிரையைக் கொண்டு வந்து விட்டுப் பெரிய தபஸ்வியைப் போல் உட்கார்ந் திருக்கிறான் என்றான்.

இம்மாதிரி இவர்கள் கூறும் வசனங்களைக் கேட்ட மஹாமுனி கபிலர் கண்களைத் திறந்து பார்த்தார். அதே நேரம் அந்த ஸகர புத்திரர்கள் யாவரும் எரிந்து பஸ்மமாகி விட்டார்கள்.

பிறகு சிவனார்; ஹே பார்வதி! எந்த வசனமானது தெரிந்து கொண்டும் சொல்ல வேண்டாமோ! அது அத்தருணம் அம்ருதம் போல் இருந்தாலும் விஷமாகும். அதே போல் பனிக்கட்டியானது கசப்பாகி விடும். எவன் ஒருவன் தெரிந்தும் அக்னியை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டால், எத்தனைதான் பராக்கிரமசாலி யானாலும் அவன் கை எரிந்து போகும்! என்றார். எவர் ஒருவர் விஷமென்று அறிந்தும் அதைக் குடிக் கிறார்களோ; அவருக்கு ஏன் மரணம் சம்பவிக்காது. ஹே ராமா! கொஞ்சமும் யோஜனையின்றி ஸகர புத் திரர்கள் முனிவரை ஏசினார்கள்; கோபமூட்டினார்கள் அதனால் உடனே எரிந்து சாம்பலானார்கள். அரசர் தனது மூத்த மகன் அம்ஸுமானை அழைத்தார். பிறகு அவனிடம்; மகனே! நம் புத்திரர்கள் யாவரும் இன்னும் வரக்காணோமே! நீ சற்றுப் போய்த் தேடிப் பார்த்து வா! என்றார்.

ராஜா திரும்பத் திரும்ப ஆசீர்வாதமும் அளித்துத் தனது புத்திரனை நோக்கி; அம்ஸுமான்! நீ போய்க் குதிரையையும் எனது உயிருக்கு ஆதாரமான மற்ற புத் திரர்களையும் சீக்கிரம் தேடி அழைத்து வா. இல்லை யேல் என் உயிர்க்குயிரான பிள்ளையே குதிரையை அழைத்துக் கொண்டு உடனே திரும்பி வா என்றார். குமாரன் ராஜாவின் காலில் வீழ்ந்து வணங்கிப் புறப் பட்டான். அவன் விஷ்ணு பக்தன்; குல விளக்கு. எங்கெங்கு முனிவர்களின் ஆச்ரமம் தென்பட்டதோ; அங்கெல்லாம் தலைவணங்கி விஷயங்கள் அறிந்து சென்றான்.

சேஷனிடமிருந்து ஆசி பெற்றான்; திக்கஜங்களுக் கும் தலைவணங்கி விட்டு மார்க்கத்தில் தேடிக் கொண்டே சென்றான். அம்ஸுமான். அத்தருணம் ஸுமதியின் ஸஹோதரனும், அம்ஸுமானின் தாய்மாமனுமான கருடன் வழியில் தென்பட்டார்.

சரணத்தில் விழுந்து வணங்கிய அம்ஸுமானைக் கையில் எடுத்து ஆசி கூறிக் கருடன் எல்லா விருத்தாந் தங்களையும்; அதாவது; ஸகர புத்திரர் எல்லோரும் எரிந்து சாம்பலான கதையைக் கூறினார். இதைக் கேட்டு அம்ஸுமான் வருந்தினான். மீண்டும் குளித்துச் சுத்தம் செய்து கொள்ள ஒரு குளத்தைகர்ட்டினார். அம்ஸுமான் அக் குளத்தில் குளித்துத் தனது ப்ராதாக் களுக்காக ஜலாஞ்சலியைச் செய்தான். அப்பொழுது கருடன்; ''மகனே! நான் ஒரு வழி கூறுகிறேன்; அதன் படிச் செய்வாயாக'' என்றார்.

மகனே! நான் கூறிய உபாயத்தின்படிக் கங்கை பூமியில் வர வேண்டும். கங்கையின் புனித தரிசனத் தினால் மக்களின் பாபம் விலகும். பின்னும் அதில் ஸ்னானம் செய்தால் பரம சுகம் உண்டாகும் என்பது தான். மேலும்; இந்த அறுபதாயிரம் குமாரர்களுக்கும் நல்ல கதி கிடைக்கும். அதாவது; பரம பவித்ரமான கங்கை பூமியில் வந்தால்; அவள் ஜலத்தைக் கொண்டு இவர்களுக்கு ஜலாஞ்ஜலி செய்தால்; இவர்கள் பாபம் விலகிப் புண்ணியலோகம் அடைவார்கள் என்ற கரு டனின் இவ்வார்த்தையைக் கேட்ட அம்ஸுமான் மன தில் மிக மகிழ்ச்சி அடைந்து கருடனுடன் முனி ச்ரேஷ் டரான கபில தேவரின் ஆச்ரமம் வந்தடைந்தான்.

கருடன் கபிலமுனிவரின் கால்களில் தலை வணங்கி முன்பு நடந்த எல்லாக் கதைகளையும் கூறினான். ஆஜ்ஞை பெற்ற முனிவர் குதிரையை அம்ஸுமானிடம் கொடுத்தார். தனது குதிரையை அடையாளம் கண்டு கொண்ட அம்ஸுமான் பரமானந்தமடைந்தான்.

ஹே ராமா! நகரத்தின் அருகில்வரை அம்ஸுமானையும், குதிரையையும் விட்டு விட்டுக் கருடன் தன் இருப்பிடம் ஏகினார். பிறகு அம்ஸுமான் தனது தந்தை எதிரில் வணங்கி அறுபதாயிரம் ஸஹோதரர்கள் எப்படி எரிந்து பஸ்மமானார்கள். அவர்கள் செய்த தவறு என்ன? பின்னால் குதிரை தனக்கு எப்படிக் கிடைத்தது போன்ற ஸகல விருத்தாந்தங்களையும் கூறினான்.

ராஜா ஸகரர் ஆச்சர்யமும், துக்கமும் ஒருங்கே கொண்டார். புத்திரர்களின் மரணம் அவனை மிகவும் வாட்டியது. யஜ்ஞும் செய்து பல விதமான தான தருமங்களைச் செய்தார்.

அதன் பின் பல வருடம் ராஜா ராஜ்யத்தை ஆண்டார். ப்ரஜைகளும் ஸுகித்து இருந்தார்கள். பிறகு ராஜா ஸகரர் தனது புத்திரன் அம்ஸுமானிடம் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு ஸந்தோஷத்துடன் ஹரிடதத்தை நாடித் தவம் செய்ய வனம் ஏகினார். அவர் மனதில் பெரும் அன்பு நிறைந்திருந்தது.

அம்ஸுமானுக்குப் பிள்ளையாகத் திலீபன் தோன்றினான். வயது வந்த பின் திலீபனிடம் அரசை ஒப்படைத்து விட்டு அம்ஸுமான் தான் தவம் செய்ய வடதிசை நோக்கிச் சென்றான்.

ராஜா அம்ஸுமான் கடினமான தபஸ் செய்தான். பிறகு சிறிது காலத்தில் தனது சரீரத்தைத் தியாகம் செய்தான்.

ராஜா திலீபனுடைய பெருமையை எவ்விதம் வருணிப்பது? அவன் காலடியில் எல்லா அரசர்களும் வந்து வணங்கிப் பணிவிடை செய்து வந்தார்கள்.

இந்திரனும் ராஜா திலீபனின் ஆட்சியை எப்போதும் கண்டு வந்தான். அந்த ராஜா திலீபனின் பெருமையை எந்தக் கவிகளாலும் வர்ணிக்கவே முடியாது. அந்தத் திலீபனின் மகனாகப் பகீரதன் தோன்றினான். தந்தையைப் போலவே மிகவும் அன்பானவனாகவும், தயவு உள்ளவனாகவும் விளங்கினான். அவனிடம் ராஜா திலீபன் ராஜ்யத்தை அளித்து விட்டுத் தவம் செய்ய வனம் ஏகினான். ராஜா தான் செல்லுகையில் ''நான் கங்கையைக் கட்டாயம் பூமிக்குக் கொண்டு வருவேன். இல்லையெனில்; ப்ராணனை விடுவேன்.'' என்று சொல்லி எப்படி என் தந்தை மனம், சரீரம் எல்லாவற்றையும் இதற்காக அர்ப்பணித்தாரோ; அதே போல் நானும் செய்வேன்; கங்கையைக் கட்டாயம் கொண்டு வருவேன். இல்லையெனில்; நகரத்தின் பக்கம் வர மாட்டேன் என்று பகீரதன் தபஸ் செய்ய வேண்டி ப்ரதிஜ்ஞையுடன் சென்றான்.

சரீரத்தைத் துச்சமாக எண்ணி வெகுகாலம்வரை அவன் உக்ரமான தபஸ்செய்தான். சரீரத்தை த்யாகம் செய்த பின்னும் அவன் தவத்தின் வேகம் குறைய வில்லை; ஒருவிதப் பலனும் தென்படவில்லை.

அந்தோ! அந்தப் புண்ணிய நதி கங்கை கிடைக்காமல் சூர்யவம்ச ராஜாக்கள் ப்ராணனை விட்டார்களோ? கங்கையிருக்கும்பொழுது யாரேனும் மூடத்தனமாகக் கிணற்று நீரைக் குடிப்பார்களோ! தந்தை இன்னும் வரவேயில்லை. வெகுகாலமும் ஆகிவிட்டது என்பதை மனதில் எண்ணிய பகீரதன் நானும் தபஸுக்குக் கிளம்புகிறேன், என்று நிச்சயித்தான்.

பகீரதனுக்குக் காகுத்ஸ்தன் என்ற ஒரு மகன் உண்டு. அவனுக்கு ராஜா பகீரதன் ராஜநீதிகளையெல்லாம் கற்றுக் கொடுத்து விட்டு, ஆசீர்வாதம் செய்தான். கங்கையைப் பூமியில் எப்படி வரவழைப்பது என்பதைப் பற்றியும் மகனிடம் பேசிவிட்டுத் தபஸ் செய்யக் கிளம்பினான்.

அவன் நகரத்தை விட்டு வனம் கிளம்பும்பொழுது அனேக வித நற்சகுனங்கள் உண்டாயின. ராஜா மிகவும் மரம் செடி கொடிகள் அடர்ந்த வனம் வந்தடைந்தான். வனத்தைக் கண்டு ஸந்தோஷமடைந்தான். பிறகு

பகீரதன் கங்கையைக் கொண்டு வரும் நோக்கத்தில் திடமாகத் தபஸில் ஆழ்ந்தான்.

அவன் ஒரே காலில் நின்று, இரண்டு புஜங்களை யும் மேலே உயர்த்தித் தூக்கி, சூரியன் எதிரில் பார்த்த படி மனத்தை ஈடுபடுத்தி, இரவு, பகல் என்பது கூடத் தெரியாமல் கடும் தபஸில் ஆழ்ந்திருந்தான். இம்மாதிரி ஆயிரம் வருடங்கள் கழிந்தன.

பகீரதனுடைய கடுமையான தவம் கண்டு மகிழ்ந்து ப்ரம்மன் தோன்றினான். ராஜா பகீரதனைப் பார்த்து; ''ஹே ராஜன்! எந்த வரம் வேண்டுமானாலும் கேள்'' என்றதும்; ராஜா மிகவும் கெட்டிக்காரன் ஆனதால் அவன் அவரை வணங்கி, ஸ்வாமி! நான் என்ன விரும் பிக் கேட்கப் போகிறேனோ; அதைத் தாங்களே அறிவீர் கள். பின்னும் என்னைச் சோதிக்கவா என்ன வேண் டுமோ அதைக் கேள் என்கிறீர்கள்? இது சரியா? இருந் தாலும் ''ஹே பிரபுவே! எல்லாப் ப்ரஜைகளும் வளர்ச்சி அடைய வேண்டும். இதுவே நான் கேட்கும் முதல் வரம். அடுத்ததாக ''கங்கைத் தாய் ஸித்தியைக் கொடுப் பவளாக இந்தப் பூமிக்கு வரவேண்டும்'' என்றான்.

அதற்கு ப்ரம்மன்; ''நீ கேட்டவரனைக் கொடுக் கிறேன். கேள்; கங்கையை அளிக்கிறேன். ஆனால்; அதை யார் தாங்குவார்? அரசனே! அந்தக் கங்கை வெளிப்பட்டவுடன் நேராகப் பாதாளம் போய் விடு வாள். பிறகு அவள் பூமிக்கு வரவேமாட்டாள். அரசே! இதனால் ஒரு விஷயத்தை உமக்குச் சொல்ல விரும்பு கிறேன். சிவபிரான் மிகவும் தயாள குணமுள்ளவர். அந்தச் சிவனார் இந்தக் கங்கையைத் தாங்க முடியும். அவரை ஜபித்தால் உங்கள் காரியமும் கைகூடும்'' என்று கூறி ப்ரம்மன் அந்தர்த்தானம் ஆகி விட்டார். அதன் பின்பு சிவனார் அருகில் சென்று, பகீரதன் சிவனாரிடம் வரம் வேண்டி, தேவதைகளின் வருடக் கணக்குப்படி கால்கட்டை விரல்களினாலேயே நின்று, திரும்பத் திரும்பச் சிவனாரின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தார்.

அத்தருணம் பரமதயாளுவான சிவன் தோன்றினார். ராஜா பகீரதன் கைகளைக் கூப்பி வணங்கி வேண்டி

னான். அதன்படிச் சிவன் ''கங்கையை நான் தாங்கிக் கொள்கிறேன். கவலை வேண்டாம்'' என்றார். ரமா பதியான பகவானைத் தியானம் செய்தான்.

அதற்குள் அங்கே ப்ரம்ம லோகத்தில் உள்ள கங்கை யானவள் சிவனாரின் வசனங்களைக் கேட்டு அதிகக் கோபமுற்ற அவள்; சிவனையும் சேர்த்து நான் பாதா ளத்தில் போய் விழுகிறேன் பார். நான் நேரம் கடத் தாமல் இப்போதே புறப்படுகிறேன் என்று ஆரம்பித்தாள்.

எங்கும் நிறைந்திருக்கும் சிவன் கங்கையின் போக்கை அறிந்து தனது சிரத்தில் கங்கை செல்ல முடியாத அள வுக்கு ஜடையை வகுத்துக் கொண்டார். அப்பொழுது பகீரதன் பகவானைத் துதி செய்தான். அந்தக் கோமள வாணியைக் கேட்ட ப்ரம்மன் மெதுவாகக் கங்கையை கீழே போக விட்டார்.

தேவ உலகிலிருந்து விடுபட்டுக் கங்கை பூமிக்கு வரும்பொழுது ஜகம் முழுவதும் ஒரே அமர்க்களமாக இருந்தது. சேஷன், தேவதைகள் எல்லோருமே நடுங் கினார்கள்; திக்கஜங்களும் பயந்து நடுங்கின. கங்கை யைப் பின்னர் சிவனார் தனது சிரத்தில் ஜடையில் ஏற்றுக் கொண்டார். அதாவது; தனது பத்தினி பவானி யைப் போலக் கங்கையையும் ஏற்றுக் கொண்டார். அவள் இப்படியாக ஓராண்டுகாலம் வரை ஜடையி லேயே தங்கியிருந்தாள். இம்மாதிரி ஆனந்தமயமான சூழ்நிலையைக் கண்டதும் தேவதைகள் ஸந்தோஷத் தினால் ஆர்ப்பரித்தார்கள். எல்லோரும் ஜயஜய என்று கோஷம் செய்து புஷ்பமாரி பெய்தார்கள். பின்னர் பகீ ரதன் சிவனாரை வணங்கி ப்ரார்த்தனை செய்தான். அப்பொழுது சிவன் தனது ஜடையிலிருந்து கங்கையின் ஒரு துளியை மட்டும் பகீரதனுக்காக விடுவித்தார். அந் தக் கங்கையின் ஒரு துளியிலிருந்து மூன்று தாரைகள் வெளிப்பட்டன. ஒன்று ஆகாயத்திலும், மற்றொன்று பாதாளத்திலும், மற்றுமொன்று பாபத்தைப் போக்க வல்லதாகப் பூமியிலும் பெருகியது. ஆகாயத்தில் பெரு கிய தேவதைகள் அந்தத் தாரைக்குப் பெயர் 'மந்தா கினி' என்று பெயர் வைத்தார்கள்.

எப்போது இரண்டாவது தாரை, அதாவது; துக்கத் தைத் தீர்க்க வல்லதாகிப் பாதாளம் சென்றது அதன்

பெயர் 'ப்ரபாவதி' எனப்பட்டது. மூன்றாவது 'கங்கை என்ற பெயருடன் எல்லோருடைய துயர் தீர்த்து ஸுகம் அளிக்கவல்லதாகிப் பூமியில் வந்தது. பூர்ண சந்த்ரனைக் கண்டு கடல் மகிழ்வடைவது போல ஜலத்தினுடைய ப்ரவாஹத்தைக் கண்ட ராஜா பகீரதன் மிகவும் மனம் மகிழ்ந்தான்.

பகீரதன் தலைவணங்கிக் கங்கையின் எதிரில் நின்றான். அப்பொழுது கங்கை ஸுந்தரமான மொழியில்; ''ஹே ராஜன்! நீர்வேகமாகச் செல்லக் கூடிய, அழகிய குதிரைகள் பூட்டிய ரதம் கொண்டு வரவும், அது சூர்யனைப் போல் ப்ரகாசமிருக்கட்டும். அதன் வேகமும் சிறப்பாக இருக்கட்டும்!

இம்மாதிரியான அந்த ரதத்தில் நீர் முன்னே செல்லச் செல்ல நான் உமது பின்னால் வருகிறேன்'', என்று கூறியவுடன்; ராஜா பகீரதன் அழகிய குதிரைகள் பூட்டிய ரதம் கொண்டு வந்து, பகவானை த்யானித்து, வணங்கி, ரதத்தை ஓட்டினான்.

ராஜாவை முன்னால் விட்டுக் கங்கை பின்னால் சென்றாள். தேவதைகள் ஸந்தோஷமடைந்து பூமாரி பொழிந்தார்கள். போகும் வழியில் கங்கை சென்ற வேகத்தை வர்ணிக்க இயலாது. பர்வதங்கள், வ்ருக்ஷங்கள், மலைச் சிகரங்கள், எல்லாமே தவிடு பொடியாகிக் கங்கையின் பிரவாஹத்தில் கலந்தன.

பலவிதமான ஆமைகளும், முதலைகளும், மீன்களும், பாம்புகளும் மற்றும் ஜலத்தில் வாழும் ஜீவன்களும் ஸந்தோஷத்தினால் கோலாஹலமாகத் துள்ளின அந்தக் கங்கையில் வந்து தேவதைகள் ஸ்நானம் செய்தார்கள். அந்தக் கங்கையின் மஹிமை சொல்லில் அடங்காதது. அதனுடைய பெரும் மஹிமையைக் கண்ட முனிவர்களும், ஸித்தர்களும் அந்தக் கங்கையின் கரையிலேயே ஆச்ரமம் அமைத்துக் கொண்டார்கள்.

அந்தக் கங்கையில் மனம் விரும்பித் தர்ப்பணம் செய்கிறவர்களின் மனம் மகிழ்வடைகிறது. அந்தக் கங்கையைத் தரிசித்த மாத்திரத்தில் பாபங்கள் விலகி ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை பெறுகிறார்கள் என்கிறார்கள் முனிவர்கள்.

ஸந்தோஷமடைந்த தேவர்களும், ப்ரம்மாவும், ஸன காதி முனிவர்களும் அந்தக் கங்கையில்தான் ஸ்நானம் செய்கிறார்கள். அதன் ஜலத்தைக் குடித்தாலே நமது பாபங்கள் தூர விலகும் என்பதாகப் பல பேருடைய ஐதீக எண்ணம்.

யார் இந்த நதியில் ச்ரத்தை வைத்து ஸ்நானம் செய் கிறார்களோ; அவர்களுடைய மஹிமையைச் சொல்லத் தரமில்லை. ரதத்தில் அமர்ந்து செல்லும் ஒரு ராஜா எத்தனை அழகுடன் விளங்குகிறாரோ; எப்படி ஒளியி னால் ப்ரகாசமாகச் சூரியன் விளங்குகிறாரோ; அம் மாதிரி சோபையைக் கொடுக்கிறது.

பெரிய பெரிய மலைகளையும், சிகரங்களையும், அழகு நகரங்களையும் தாண்டிக் கொண்டு ராஜா முன்னால் போகக் கங்கை பின்னால் சென்றாள். வழி யில் ஹரித்வார் என்னும் நகரம், தீர்த்தஸ்தலம் வந்தது. ஹரித்வாரைக் கண்டதும் கங்கை மனதைப் பரிகொடுத் தாள். அந்தத் தீர்த்த ஸ்தானத்தைக் கண்டு மகிழ்ந்தாள். பின்னர் பாபத்தைத் தீர்க்கும் ப்ரயாகை சென்றாள். அங்கு ஸ்நானம் செய்பவர்களின் பாபம் தொலையும். பின்னர் அங்கிருந்து பரம பவித்திரமான காசி க்ஷேத் திரம் வந்தடைந்தாள்.

காசி சிவனாரின் முக்கிய ஸ்த்தலமாகும்; ஸுகத் தைக் கொடுக்கும் நகரமாகும். அதன் அழகை வர்ணிக்க இயலாது. இவை தவிர, எங்கு எங்கு புண்ணிய ஸ்த் தலமோ, அங்கெல்லாம் கங்கை ப்ரவாகம் எடுத்து ஓடினாள். இதை வர்ணனை செய்ய முடியாது.

ஹே ரகுநாதனான ராமசந்த்ரனே! இவ்விதம் வழி யில் உள்ள மக்கள் பலருக்கும் நன்மை செய்து கொண்டு கங்கை இவ்விதம் பெருகிக் கொண்டே சென்றாள். பிறகு கங்கை ஸமுத்திரத்தில் போய்க் கலந்தாள். பின் னர் ஸமுத்திரம் மனத்தில் அன்பு கொண்டு பகீரதனை நோக்கி; ''ராஜன்! உம்மைப் போல் பெருமை வாய்ந் தவர் உலகில் யாரும் இருக்கவே முடியாது. உமக்கு மங்களமுண்டாகட்டும் என்று கூறினாள்.

(எங்கு இரண்டு நதிகளும் சேருகின்றனவோ; அந்த ஸங்கமத்திற்கு ப்ரயாகை என்று பெயர் இடப்பட்டது. இந்த ப்ராயக க்ஷேத்திரத்தில் எவர் ஸ்நானம் செய்து எழுகிறாரோ; அங்கு ப்ராண த்யாகம் செய்கிறாரோ; அவருக்கு ஸ்வர்க்கம் கிடைக்கிறது என்பது ஐதீஹம்.)

ராஜன்! நீர் இம்மாதிரிக் காரியம் செய்தீர். இது போல வேறு எவராலும் செய்ய முடியாது. இதுவே தவத்தின் மஹிமை. இதனால் ஸகரராஜனின் புத்திரர் கள் அறுபதாயிரம் பேர்களுக்கும் முக்தி கிடைத்து விட் டது.'' என்றாள். அப்பொழுது ராஜா பகீரதன் பர மானந்தமடைந்தான்.

மேலும்; ''இந்தச் சூரிய வம்சத்தில் உம் மாதிரி ராஜா இதுவரை உதித்ததில்லை. உலகம் வியக்கும்படி நிரந்தரமாக உனது கீர்த்தி நிலை நிற்கும்; யுகம் யுகம் வரை நிலைத்திருக்கும். இந்த உன் செயலினால் மற்றும் பலரின் பாவமும் துடைக்கப்பட்டு விட்டது. அதாவது; உம் குலத்தில் பிறந்து இறந்த பலருக்கும் இந்தக் கங்கை நதியின் சிறப்பால் புண்ணிய லோகம் கிடைத்தது'' என்றாள் கங்கை.

அங்கு எல்லாத் தேவர்களுடனும் ப்ரம்மா வந்தார். ராஜாவைப் பார்த்து; ''உனக்கு மங்களம் உண்டாகட் டும். பகீரதனே! உலகில் பெரும் கீர்த்தியடைந்தாய். உன் மாதிரி ராஜா யாருமே இதுவரை தோன்றிய தில்லை. உன்னுடைய இந்த ப்ரதிஜ்ஞை உண்மை யானது. வேதத்தை நினைத்து வாழும் மக்களுக்கு ஸுகத்தைக் கொடுத்தாய். இந்த இடத்தை இனி யாரும் ''கங்கா ஸாகரம்'' என்பார்கள். பாபரூபமான ஆந்தை கள் சூரியனைப் போன்ற இந்தக் கங்கா ஸாகரத்தைக் கண்டு பயப்படும்.

மேலும்; இந்த இடத்தில் உள்ள கங்கையின் பெயர் இனிப் 'பகீரதீ' என்றழைக்கப்படும். இதைக் கேட்ட தேவதைகள், ஸித்தர்கள், நாகர்கள், யாவரும் கீர்த்தி யடைவார்கள்'' என இவ்விதம் சொல்லி ப்ரம்மன் தன் இருப்பிடம் ஏகினார். ராஜா பகீரதன் பரம ஸுக மடைந்தான்.

வழியில் வரும்போது கங்கையானவள் ஜஹ்னு மஹரிஷியின் யஜ்ஞ ஸாமக்ரியைகளை நீரினால் எடுத்துக் கொண்டு போய் விட்டாள். அதனால் ரிஷி மிகக் கோபம் கொண்டு அந்தக் கங்கையைக் குடித்து விட்டார். ஆனால்; துதி செய்து பலவிதமாக ப்ரார்த்தனை செய்ததால் மனம் இரங்கி அவளைத் தன் தொடைகள் மூலம் மீண்டும் வெளியே வரவிட்டார். இதனால் கங்கைக்கு 'ஜாஹ்னவி' என்னும் பெயரும் ப்ரஸித்தமாயிற்று.

இப்பொழுது பகீரதன் பரம ஸுகமடைந்தான். ச்ரத்தையுடன் கங்கையைப் பூஜித்தான். கங்கையும் மகிழ்ந்து அவனுக்குப் பலவித ஆசீர்வாதங்களைக் கொடுத்தாள். பிறகு பகீரதன் தன் அரண்மனை வந்தடைந்தான்.

இம்மாதிரியான கங்கையின் கதையைக் கேட்ட ஸ்ரீராமன் விச்வாமித்ர முனிவரின் கால்களில் வீழ்ந்து வணங்கினார். லக்ஷ்மணனும் கீழே விழுந்து வணங்கினார். அப்பொழுது முனிவர் விச்வாமித்ரரும் மனம் நிறைந்த ஆசீர்வாதத்தைச் செய்தார்.

கங்கையின் கதை நிறைவுற்றது.